
கலைஞரின்
கடிதங்கள்



38

31.10.2004 - முதல்
14.09.2005 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 38

31.10.2004 - 14.09.2005

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2245
கி.89A-816
கி.குறை.38

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வு நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:


“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,



(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

3102. ஆட்சிக் கலைப்பு கோருவது அன்றும் இன்றும் என்றுமில்லை!	31-10-2004	23
3103. "தலை வீக்கம்" அதிகமாகிவிட்டது!	1-11-2004	29
3104. "இந்தியா டுடே" எழுத்தாளருக்கு!	5-11-2004	35
3105. முருங்கைமரம் ஏறும் இந்துத்துவா வேதாளம்!	9-11-2004	38
3106. சங்கரமடக் கப்பல் - மாலுமியை மாற்றுக!	14-11-2004	43
3107. தவறான தகவல் - முதல்வர் தகுதிக்கு அழகல்ல!	19-11-2004	47
3108. விளக்கம் என்ற பெயரில் வீண் ஆரவாரமா?	25-11-2004	57
3109. நாடிடுவோம் மக்கள் பிரச்சினைகளை!	5-12-2004	65
3110. டிசம்பர் 10 - டிசம்பர் 19 முக்கிய நாட்கள்!	8-12-2004	68
3111. உமாவின் பேட்டி உணர்த்துகின்ற உண்மை!	9-12-2004	72
3112. மலேசியத் தமிழ்ப் படைப்பாளிகளை மனமகிழ வரவேற்கிறேன்!	11-12-2004	77

3113. எந்த வகை நாகரீகம்; என்ன நாணயம்?	16-12-2004	84
3114. கதையும், காதில் விழுந்த “கிசுகிசு”வும்!	17-12-2004	88
3115. சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பு இருக்குமா?	18-12-2004	93
3116. ‘மனிதம்’ ஆற்றிட வேண்டிய மகத்தான பணி!	14-1-2005	98
3117. வெல்வோம்! வீழ்த்துவோம் வீணர்களை!	18-1- 2005	102
3118. பத்துக் கைகள் மாறிய பனிக்கட்டி ஆகாமல்...	21-1-2005	108
3119. திண்டுக்கல் - தி.மு.க. இலட்சிய வைரக்கல்!	6-3-2005	112
3120. உவகை பூத்திட, உற்சாகம் பிறந்திட, ஓடிவருக திண்டுக்கல்!	9-3-2005	116
3121. ஆமைபோல் அடக்கம்; அரிமாபோல் சீற்றம்!	18-3-2005	120
3122. தஞ்சை அழைக்கிறது! தயாராகுக உடன்பிறப்பே!	22-3-2005	126
3123. வெறிக்கூத்தைச் சுற்றி நின்று எதிர்ப்போம்! வெற்றி கண்டு தமிழ் மக்களைக் காப்போம்!	30-3-2005	134
3124. தொடர் ஓட்டத்தில் சுடர்விளக்கு ஏந்திட வருக!	05-04-2005	138
3125. வான்புகழ் கொண்ட வள்ளுவம் (68) வான்புகழ் கொண்ட வள்ளுவம் (69) (கலைஞர் கவிதை)	13-04-2005	145

3126. புதுப்புனலைக் காண்போம் - பூரிப்பு மிகக் கொள்வோம்!	14-04-2005	148
3127. நெஞ்சையள்ளிய தஞ்சை; நிகரிலா மாநாடு!	20-04-2005	155
3128. கொட்டுக முரசு; எட்டுக முழக்கம் எங்கணுமே!	21-04-2005	160
3129. மக்களைத் திரட்டுவோம்; வெற்றிகள் குவிப்போம்!	22-4-2005	165
3130. காஞ்சி, கும்மிடிப்பூண்டி; கடும் பயண வெற்றிக்கு!	23-4-2005	170
3131. தோழமையின் துணையுடன் தொடருவோம் பயணம்!	24-4-2005	176
3132. வரட்டும் வழக்கு; வண்டவாளம் தண்டவாளம் ஏறிட!	25-4-2005	180
3133. எல்.ஜி. எனக்கு அமைத்துள்ள இதயபீடம்!	26-4-2005	185
3134. அரசியலும் - அழுக்கின் ஆதிக்கமும்; ஓர் ஆய்வு!	24-4-2005	190
3135. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்!	29-4-2005	195
3136. குறுகலாகச் சிந்திப்போரின் குட்டை மனப்பான்மை!	2-5-2005	199
3137. வெற்றி காண்போம் - அதிகார வெறியை வீழ்த்துவோம்!	5-5-2005	205

3138. தொடர்ந்திடும் நமது தூய பணிகள்!	18-5-2005	210
3139. எது நம்மை இணைக்கிறது என்பதைக் கண்டறிவோம்!	21-5-2005	214
3140. சிந்தையெலாம் சிலிர்க்க வைக்கும் சேது சமுத்திரத் திட்டம்!	22-5-2005	218
3141. இருப்பது ஒரே வாரம்தான்! கேட்பது ஒரே வரம்தான்!	23-5-2005	223
3142. பொங்கலூர் அழைக்கிறார்; புறப்பட்டு வா!	24-5-2005	228
3143. கம்பன் கண்ட காயம் - வள்ளுவன் வழங்கும் மருந்து!	26-5-2005	232
3144. குலக்கொழுந்தே; கோவை வருக!	27-5-2005	237
3145. "வாக்குகள் நீக்கினாய்; போ! போ! போ! வழக்குகள் தொடுப்பாய்; வா! வா! வா!"	28-5-2005	241
3146. ஜனநாயகத்தின் வேர்களையே வெட்டும் சர்வாதிகார ஆட்சியின் விஷமத்தனம்!	7-6-2005	246
3147. ஜனநாயகத்தை சாகடிக்க; நீதிதேவனிடம் அனுமதியா?	11-6-2005	253
3148. தேர்தல் ஆணையமும் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பும்!	14-6-2005	258
3149. கழகத்துக்குப் பிறகே நமக்கு எல்லாம்!	17-6-2005	267
3150. குடுகுடுப்பைகள் எங்கே?	24-6-2005	272

3151. இதுவா அரிஸ்டாட்டில் அவதாரம்?	25-6-2005	275
3152. விலை உயர்வை நியாயப்படுத்துகிறேனா?	27-6-2005	280
3153. சேது திட்டம்; சில்லறைக் கூச்சல்களுக்கு சில விளக்கங்கள்!	28-6-2005	284
3154. பேராசிரியர் தொடர்ந்த வழக்கும்; இடையில் பெங்களூர் தீர்ப்பும்!	29-6-2005	294
3155. தன் நெஞ்சே தன்னைச் சுட்டுத் தடையாணை கோருகிறதா?	30-6-2005	301
3156. வெள்ளி முளைக்கிறது; துள்ளி எழுக நீவிர்!	10-7-2005	306
3157. விஜயனுடன் பேசியது; விழிப்புற்று, விடியல் காணவே!	11-7-2005	310
3158. இரும்பனைய தோளும்; எஃகுபோல் உறுதியும்!	13-7-2005	315
3159. அடக்கம் காத்திடுக; ஆடம்பரம் தவிர்த்திடுக!	17-7-2005	319
3160. கண்ணியமான காவல் துறை அதிகாரி; பராக்! பராக்!	20-7-2005	327
3161. அன்றும் இன்றும் என்றும் கழகமே நம் குடும்பம்!	24-7-2005	332
3162. தீமைகள், தீப்பட்ட அரக்கு மாளிகையாகிட!	3-8-2005	340
3163. மண்டல மாநாடு, மாநில மாநாட்டுக்கு ஒத்திகை!	06-08-2005	344
3164. சல்லடைக் கண்களாகும் சட்டம் ஒழுங்கு!	10-08-2005	353
3165. சுதந்திரப் பிதற்றல்! -	16-8-2005	358

3166. வெற்றி முழக்கமிட; வேலூர் அழைக்கிறது!	22-8-2005	361
3167. வெண்ணெய் திரளும் வேளை, தாழி உடையாமல் தடுக்க!	23-8-2005	368
3168. வியூகம் வகுப்போம்; விரைந்து வருக; வேலூர்!	27-8-2005	371
3169. மாநகர் சென்னையில் மகளிர் பேரணி! அழைக்கின்றேன் வாரீர்! அணி அணியாக!	31-8-2005	375
3170. பெரியாரின் மாணவன் அண்ணாவினால் முழுமனிதன் ஆனவன்!	1-9-2005	380
3171. செப்டம்பர் 15 சென்னை; 17 நெல்லை!	02-09-2005	385
3172. தமிழகமும், தலைநகர் டெல்லியும்!	09-09-2005	390
3173. மணிகளுக்கிடையே ஒரு மாமணி!	14-09-2005	398

3102. ஆட்சிக் கலைப்பு கோருவது அன்றும் இன்றும் என்றுமில்லை!

உடன்பிறப்பே,

தமிழக கவர்னர் திரு. ராம மோகன் ராவ் நேற்றையதினம் (29-10-2004) தனது பதவியை ராஜினாமா செய்து குடியரசுத் தலைவருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார். கவர்னர் பதவியிலிருந்து ராஜினாமா செய்திருக்கும் ராம மோகன் ராவ் அவர்கள், தான் ஏன் அந்தப் பதவியிலிருந்து விலகிட நேர்ந்தது என்பது குறித்து நீண்ட அறிக்கை ஒன்றினை அனைத்து ஏடுகளுக்கும் தந்துள்ளார். அந்த அறிக்கையிலே அவருக்கும், மத்திய அரசுக்கும் இடையிலே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றியெல்லாம் விரிவாக வெளியிட்டுள்ளார்.

மத்திய அரசுக்கும், அவருக்கும் இடையே கருத்து பரிமாற்றம் நடைபெற்ற பிறகுதான் அவர் மாற்றப்பட்டுள்ளார் என்பதை அவருடைய அறிக்கையிலிருந்தும், அவரை வேறு மாநிலங்களிலே பணியாற்ற விருப்பமா என்று கேட்டார்கள் என்று அவர் சொல்லியிருப்பதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். எனவே, அவருக்குத் தெரியாமல் இந்தக் காரியம் நடைபெறவில்லை.

அடுத்து மாநில அரசுக்குத் தெரியாமல் இந்தக் காரியம் நடைபெறவில்லை என்பதற்கு, தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் திருமதி லட்சுமி பிரனேஷ், உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவிலேயே, மத்திய அரசின் உள்துறை அமைச்சர் அவர்களே தமிழக அரசின் முதல் அமைச்சரிடம் தொலைபேசி வாயிலாக பேசியுள்ளார் என்பது ஒன்றே போதுமான சாட்சியமாக உள்ளது. ஆனால் மத்திய அரசின் உள்துறை அமைச்சர், தமிழக முதலமைச்சரோடு தொலைபேசியில் பேசியது டேப் ரிகார்டரில் பதிவு செய்யப்பட்டு, அந்தப் பேச்சுவார்த்தைகள் எப்படியோ முதலமைச்சரால் தலைமைச் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, அது உச்ச நீதிமன்றத்திற்குத் தாக்கல் செய்த மனுவிலே

இணைக்கப்பட்டது என்பது அரசியல் மரபுக்கு உகந்ததுதானா? மத்திய அமைச்சர் ஒருவர் முதலமைச்சரிடம் பேசுவதை டேப் ரிகார்டரில் பதிவு செய்யலாமா? அதனை தலைமைச் செயலாளர் உச்ச நீதி மன்றத்திலே இடம்பெறச் செய்யலாமா என்பதைப் பற்றியெல்லாம் நீதி மன்றமும், தார்மீக உணர்வு கொண்டவர்களும், சட்ட வல்லுநர்களும்தான் முடிவெடுத்து அறிவிக்க வேண்டும்.

நீண்ட விளக்க அறிக்கையினை வெளியிட்டுள்ள ராம மோகன் ராவ், எதிர்க்கட்சிகள் எழுப்பிய கோரிக்கைகளுக்கெல்லாம் பதில் அளிப்பது அரசியல் சட்டத்துக்கு விரோதமாக இருக்காது என்று அவரே தெரிவித்துக் கொண்டு பதில் கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது பற்றி ஆளுங்கட்சியே எந்தவிதமான விளக்கமும் அளிக்க முன்வராத நிலையில், ஆளுங்கட்சிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு ராம மோகன் ராவ் அளித்துள்ள விளக்கத்தில் அரசியல் கட்சிகளின் விமர்சனத்தைத் தவிர, பத்திரிகைகள் உட்பட எங்கும், எந்த விமர்சனமும் ஒருபோதும் செய்யப்படவில்லை என்று கூறியிருக்கிறார்.

தமிழக நாளேடுகளில் அன்றாடம் தமிழகத்தில் நடைபெறும் கொலைகள், கொள்ளைகள் பற்றிய பிரச்சினைகள், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு எதிர்க்கட்சிகள் மீது அவதூறு வழக்குகள், பொடா சட்டத்தின் கீழ் தனக்குப் பிடிக்காத வைகோ, நெடுமாறன், நக்கீரன் கோபால் உள்ளிட்டவர்களைக் கைது செய்து சிறையிலே அடைத்த கொடுமை, தமிழகக் காவல் துறையிலே உள்ள அதிகாரிகள் தனிப்பட்ட ஒரு பெண்ணிடம் நடத்திய சல்லாப லீலைகள், காவல் துறை அதிகாரிகளே முத்திரைத் தாள் மோசடி ஊழலில் சிக்கியது, என்கவுண்ட்டர் என்ற பெயரால் கொலை செய்த நடவடிக்கைகள் போன்றவைகள் எல்லாம் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்ததற்கானச் சான்றுகளாக அவருக்குத் தெரியவில்லையா?

தமிழகத்திலே அரசு அலுவலர்கள் மீது 2003ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அக்கிரமங்கள் எல்லாம் நியாயமானவை என்று வாதிடுகிறாரா ராம மோகன் ராவ்? உயர் நீதிமன்ற, உச்ச நீதி மன்ற நீதிபதிகள் அளித்த தீர்ப்புகள் எல்லாம் மதிக்கப்படாமல்

போனதையெல்லாம் மறந்துவிட்டாரா? அல்லது மறைக்கப் பார்க்கிறாரா?

சென்னை மாநகரத்தில் நடத்தப்பட்ட 7வது வட்ட இடைத் தேர்தல் தொடர்பாக, அவரிடம் எதிர்க்கட்சிகள் சார்பில் தரப்பட்ட மனுவினை விசாரிக்கவில்லை என்று கூறுவது முற்றிலும் திசை திருப்புகின்ற காரியம் என்று ராம மோகன் ராவ் நேற்று அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார். இந்த மாநிலத்திலே நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் விருப்பு வெறுப்பற்ற நிலையில், நியாயப் பூர்வமாக ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையேயிருந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்குரியவர்தான் கவர்னர். மூன்று மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட மிகவும் குறைந்த நிலையில், இன்னும் சொல்லப் போனால் செல்லாத வாக்குகளைவிட குறைவாக திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி இடைத் தேர்தலில் பெறுகிறது என்றால் எத்தகைய மோசடிகள், முறைகேடுகள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் அங்கே நடைபெற்றிருக்க வேண்டும்? அதற்கு வேறு ஏதாவது ஆதாரங்கள் காட்டப்பட வேண்டுமா? அதைக் குறித்து தமிழக அரசிடம் ஆளுநராகப் பொறுப்பேற்றிருப்பவர் விளக்கம் கேட்க வேண்டாமா? பொறுப்பிலே உள்ளவர்களை அழைத்து விசாரித்திருக்க வேண்டாமா?

பதவியை ராஜினாமா செய்துவிட்டுச் செல்லும் ஒருவரைப் பற்றி எதுவும் சொல்லவேண்டுமென்ற எண்ணம் எனக்கு இல்லாதபோதிலும், அவர் அரசியல்வாதியைப்போல நீண்ட அறிக்கை ஒன்றினை வெளியிட்ட காரணத்தினால் இதனைச் சொல்ல நேர்ந்தது.

கவர்னரைப் போலவே தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பொறுப்பிலே இருப்பவரும் அரசியல்வாதியைப் போல நடந்து கொண்டுள்ளார். தலைமைச் செயலாளர் என்பவர் இந்திய நிர்வாகப் பணியின்கீழ் அகில இந்திய சர்விசில் பணியாற்றுபவர். அவர் நிர்வாக ரீதியாக பணிகளில் ஈடுபட வேண்டியவரே தவிர, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை எடுக்க முடியாது. அப்படிப்பட்ட பதவியிலே இருப்பவர், கவர்னரை நியமிக்கின்ற, மாற்றுகின்ற அதிகாரத்தைப் பெற்ற குடியரசுத் தலைவரின் பணியிலே குறுக்கிட்டு, உச்ச நீதி மன்றத்திலே மனு தாக்கல்

செய்திருப்பது என்பது அவருக்குள்ள உரிமைகளை மீறிய செயலாகும்.

உச்ச நீதி மன்ற நீதிபதிகளே தெரிவித்திருப்பதைப் போல தமிழக அரசாங்கம் கவர்னர் மாற்றம் குறித்த வழக்கினை மிக அவசரமாக விசாரிக்க வேண்டுமென்று ஞாயிற்றுக்கிழமை அன்று நீதி மன்றத்திற்கு விரைந்து வந்துள்ளது (The State Government had rushed to the Court on a Sunday for expeditious hearing of the suit expressing an apprehension that the Governor would be transferred) என்ற வார்த்தைகளே தமிழக அரசும், அதன் சார்பில் தலைமைச் செயலாளரும் எந்த அளவிற்கு இதிலே அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவு படுத்துகிறது.

மேலும் தலைமைச் செயலாளர் உச்ச நீதிமன்றத்தில் கடந்த 24-10-2004 அன்று தாக்கல் செய்த மனுவில், மத்திய அரசில் பங்கேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், தன் சொற்படி கேட்கக் கூடிய ஒரு கவர்னர் வேண்டுமென்று விரும்புகிறது என்றும், அரசியல் சட்டத்தின் 356வது பிரிவின்படி, சட்டப் பேரவையைக் கலைத்திட வேண்டுமென்று அறிக்கையைக் கொடுக்க கவர்னரை வலியுறுத்தி, தற்போதைய அரசினை மாற்றிட வேண்டுமென்று தி.மு.க. விரும்புகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறாரென்றால் இவர் ஒரு அரசு அதிகாரியா? அல்லது ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் அமைப்புச் செயலாளரா? என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

தலைமைச் செயலாளர் உச்ச நீதிமன்றத்தில் கொடுத்த மனுவில், தி.மு.கழகத் தலைவரான கருணாநிதி அக்டோபர் 23ந்தேதி பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்திக்க மறுத்ததற்குக் காரணமே, கவர்னரை மாற்றவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதற்காகத்தான் என்றும், தனக்கு தலையாட்டுகின்றவராக இல்லாத கவர்னரை மாற்றிவிட்டு, அரசினை மாற்றிடக் கூடிய ஒருவரை அந்த இடத்திலே அமர்த்த வேண்டுமென்பதுதான் தி.மு.க.வின் முயற்சி என்றும் குறிப்பிட்டிருக்கிறாரென்றால், அரசின் நிர்வாகப் பொறுப்பிலே உள்ள அதிகாரியான தலைமைச் செயலாளர், நான் பிரதமரைச் சந்திக்க மறுத்தேன் என்பதற்கு என்ன ஆதாரத்தை வைத்திருக்கிறார். நான் பிரதமரைச் சந்தித்திருந்தால், அப்போதும் இதே தலைமைச் செயலாளர் கவர்னரை மாற்றவேண்டுமென்று கோரிக்கை வைப்பதற்காகத்தான் அவசர அவசரமாகக்

கொடைக்கானலிலிருந்து வந்ததாக கூறமாட்டாரா? தி.மு.கழகம் கவர்னரை மாற்ற வேண்டுமென்று நிர்ப்பந்திக்கின்றது என்றும், தனக்குப் பிடித்தமானவரை அந்தப் பதவிக்குக் கொண்டுவர விரும்புகிறதென்றும் ஒரு அரசு அதிகாரி கூறுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? இதைவிட உள்நோக்கம் கொண்ட செயல் வேறு என்ன இருக்க முடியும்? இந்த அளவிற்கு ஆளுங்கட்சியின் ஒரு அடிப்படை உறுப்பினரைப் போலச் செயல்படும் இவர் தலைமைச் செயலாளராக மேலும் நீடிக்கலாமா?

அ.தி.மு.க. சார்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த பிறகு, அரசின் சார்பிலேயும் தலைமைச் செயலாளர் அவர்களால் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் கவர்னரை மாற்ற தடை விதிக்க முடியாது என்று உச்ச நீதி மன்றம் 25-10-2004 அன்று கூறிய பிறகு, 26-ந்தேதி முதலமைச்சர் ஜெயலலிதா, கவர்னர் மாளிகைக்குச் சென்று அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்திருக்கிறார். அதன் பிறகுதான் மீண்டும் தமிழக அரசின் தலைமைச் செயலாளரும், வழக்கறிஞர்களும் சென்று உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் முறையீடு செய்திருக்கிறார்கள். கவர்னரும், முதல் அமைச்சரும் 26ந்தேதி சந்தித்த போது உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற மனுவிலே உள்ள விஷயங்கள் குறித்து, ஒருவருக்கொருவர் கலந்து பேசியிருக்க மாட்டார்கள் என்றால் அது நம்புகின்ற காரியமா?

தலைமைச் செயலாளர் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தி.மு.க. 356வது பிரிவைப் பயன்படுத்த விரும்புகிறது என்று கற்பனையாக குறிப்பிட்டிருப்பதை நம்பிக்கொண்டுதான் "குமுதம்" போன்ற சில பத்திரிகைகள் "கலைஞர் - கவிழ்க்காததால் கத்தி எடுத்தவர்" என்று இந்த வார இதழிலே கூட எழுதியுள்ளன. சொல்லப் போனால், 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா பதவியேற்று, என்னைக் கைது செய்து சிறையிலடைத்து, விடுதலையானவுடன் அண்ணா அறிவாலயத்தில் 4-7-2001 அன்று நான் அளித்த நீண்ட பேட்டியில், செய்தியாளர்கள் பலமுறை என்னிடம் 356வது பிரிவினை பயன்படுத்த வேண்டுமென்று சொல்வீர்களா எனத் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். ஆனால் 356வது விதியே கூடாது என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதுதான் தி.மு.க.வின் நிலை. இதை பலமுறை செய்தியாளர்கள் மூலமாக

நான் தெளிவாக்கியிருக்கிறேன். எனினும், தொடர்ந்து தி.மு.கழகம் ஏதோ இந்த ஆட்சியை அகற்ற விரும்புகிறது என்பதைப் போலவும், அதற்காக 356வது பிரிவினைப் பயன்படுத்தத் துடிக்கிறது என்பதைப் போலவும் தொடர்ந்து வேண்டுமென்றே குற்றஞ்சாட்டி வருகின்ற இவர்களை கற்பனை செய்வதில் "மெத்த புத்திசாலிகள்" என்று கூறுவதா? அல்லது அறிஞர் அண்ணா அடிக்கடி பயன்படுத்தும் 'மதோன்மத்தர்கள்' என்ற பட்டத்துக்குரியவர்கள் எனப் பகருவதா?

அன்புள்ள,

மு.க.

31-10-2004

3103. "தலை வீக்கம்" அதிகமாகிவிட்டது!

உடன்பிறப்பே,

"வெற்றி என்றால் வெறி பிடித்து அலைவதும், தோல்வி என்றால் மூலையில் படுத்துக் கொண்டு ஒப்பாரி வைப்பதும் கூடாது" என்பார்கள். அதிரடிப் படை வீரர்களுக்கு பரிசு, பதக்கம் அரசின் சார்பில் வழங்குவதற்காக நடத்தப்பட்ட விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பேச்சு வெற்றி என்றால் வெறி பிடித்துக் கூச்சலிட்டது போலத்தான் தோன்றுகின்றது.

1978ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து தமிழகத்திலும், கர்நாடகத்திலும் இருந்து வந்த பிரச்சினைக்கு தற்போது ஒரு முடிவு காணப்பட்டுள்ளது என்பதற்காக இந்தப் பணியிலே ஈடுபட்ட அதிரடிப் படையினரையும், அதன் தலைவரையும் தமிழகத்திலே உள்ள அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள். நானும் பாராட்டியிருக்கிறேன். அரசின் சார்பில் அதற்கானப் பாராட்டு விழாவும் நடத்தப்பட்டுள்ளது. அதுவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் அந்த விழாவையும் விட்டு விடாமல், அரசு விழா மக்கள் பணத்தில் நடத்தப்படுகிறது என்பதை மறந்து விட்டு தமிழக முதல் அமைச்சர் தனக்கே உரிய பண்பாட்டோடு(?) எதிர்க்கட்சிகளை, குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை வசைபாடத் தவறவில்லை. அரசு விழாக்களில் எதிர்க்கட்சிகளைத் தாக்கக் கூடாது என்ற மரபையே தூக்கி வீசி விட்டு, எந்த அரசு விழாவாக இருந்தாலும் எதிர்க் கட்சிகளையும், முன்பு பொறுப்பிலே இருந்த தி.மு.கழகத்தையும் தாக்குவதையே ஜெயலலிதா வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். அதே முறையில் நேற்று (30-10-2004) நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பேச்சில் ஒரு பகுதி வருமாறு :-

"ஐந்தாண்டு காலம் எனக்கு முன் ஆட்சி நடத்தியவர்கள் என்ன செய்தார்கள்? வீரப்பனோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள். குப்பை மீது கோழி பிடிக்கப் போனவர்கள் - கோழிப் பிடிப்பதாகப் பாவலா காட்டிக்

கொண்டிருந்தவர்கள் - கோழியே! கோழியே! நீ முட்டை கொடுத்தால் போதும், நிச்சயம் உன்னைப் பிடிக்க மாட்டோம்! என்று திருட்டுக் கோழியிடம் திரை மறைவு ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் - தூதர்கள் என்று அழைக்கப்பட்டவர்களின் துணையோடு பேரம் பேசியவர்கள் - கடத்தப்பட்டவர்களை மீட்கும் நாடகத்துக்குக் கதை வசனம் எழுதியவர்கள் - அதில் காசு பார்த்தவர்கள் - இவர்கள் எல்லாம் யார் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள், நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்".

அரசு விழாவில் அதிரடிப்படையினரைப் பாராட்ட வேண்டிய நேரத்தில், இந்தப் பேச்சு தேவைதானா? அரசு அதிகாரிகளையெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சியின் மீது இந்தக் குற்றச்சாட்டு தேவைதானா? இது உண்மையான குற்றச்சாட்டா? கடந்த கால தி.மு.கழக ஆட்சியிலே இதே அதிரடிப்படையில் பணியாற்றிய அதிகாரிகளும், அதிரடிப் படை வீரர்களும் முதலமைச்சரின் இந்தப் பேச்சைக் கேட்டு தங்களுக்குத் தாங்களே எள்ளி நகையாடியிருக்க மாட்டார்களா? பிரியாணி விருந்து பரிமாறப்பட்ட நேரத்தில், இலையில் சாணத்தை வைப்பதைப் போல ஜெயலலிதாவின் இந்தப் பேச்சு முறைதானா?

வீரப்பன் குழுவினர், 14-7-1987 அன்று சத்திய மங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்தார்கள். அப்போது தி.மு.கழக ஆட்சி கிடையாது. எம்.ஜி.ஆர். தான் அப்போது முதல் அமைச்சராக இருந்தார்.

தி.மு.கழக ஆட்சியில் 7-8-1989 அன்று பர்கூர் காவல் எல்லையில் வனக் காவலர் பழனிச்சாமி, வாச்சர் சுப்பிரமணியம் மற்றும் மஸ்தி ஆகிய மூவரையும் வீரப்பனுடைய கும்பல் கொலை செய்தது.

1991ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பெண்ணாகரத்தில் இருக்கின்ற இந்தியன் வங்கியைக் கொள்ளையடிக்க வீரப்பன் தலைமையில் சென்ற குழு ஒரு காவலரைச் சுட்டுக் கொன்று விட்டு, துப்பாக்கி ஒன்றையும் திருடிக் கொண்டு சென்றனர். ஆயுதம் தாங்கிய காவலர்கள் நேருக்கு நேர் சந்தித்தும், வீரப்பன் தப்பிச் சென்று விட்டான்.

1993இல் வீரப்பன் குழுவினரால் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் வெடித்ததில், சுரைக்காய்மடுவு என்ற இடத்தில் ஐந்து காவலர்கள் உட்பட 22 பேர் மாண்டார்கள். இதில் காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.பி. கோபாலகிருஷ்ணன் படுகாயமடைந்தார். இது வீராதி வீரி, சூராதி சூரி, ஜெயலலிதா ஆட்சியிலே நடைபெற்ற சம்பவம் என்ற காரணத்தினால், அப்போது இவர் குப்பை மீது ஏறி கோழி பிடித்துக் கொண்டிருந்தார் என்று சொல்லலாமா? அல்லது கோழியே, கோழியே நீ எனக்கு முட்டை கொடுத்தால் போதும் என்று முட்டையை வாங்கிக் கொண்டு திருடனை விட்டு விட்டார் என்று கூறலாமா?

மேலும் ஜெயலலிதா ஆட்சி நடத்திய நேரத்தில், 3-12-1994 அன்று வீரப்பன் காவல்துறை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்றபோது, அவர்களை விடுவிப்பதற்காக அரசின் சார்பில் எத்தனை நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன தெரியுமா?

(1) அந்தப் பகுதியிலிருந்தே அதிரடிப் போலீசை வாபஸ் பெற வேண்டும்.

(2) வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்.

(3) வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும்.

(4) வீரப்பன் சரண் அடைந்தால் அவன் மீது வழக்குப் போடவே கூடாது.

ஆகிய இந்த நிபந்தனைகளையெல்லாம் ஜெயலலிதா அரசு ஏற்றுக் கொண்டது என்றால் பெறவேண்டியதைப் பெற்றுக் கொண்டுதான் இதையெல்லாம் ஜெயலலிதா செய்தார் என்று சொல்லலாமா?

எதிர்க்கட்சியின் மீது குற்றச்சாட்டைக் கூறும்போது, தன் ஆட்சியில் நடந்ததையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக் கொள்வதா? ஜெயலலிதா அரசின் சார்பில் 4-12-1994 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்த அறிக்கையில் வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கிறவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவது தான் முக்கியம், எனவே வீரப்பனைத் தேடும் பணி,

வீரப்பனுடைய நிபந்தனைகளின்படி நிறுத்தப்பட்டு விட்டது என்று தெரிவித்தாரென்றால், அதற்குப் பெயர் பேரம் என்று கூறமுடியுமா? அந்த நிபந்தனையில் பேரம் பேசி காசு பார்த்தது யார் என்று ஜெயலலிதா பாணியில் கேள்வி எழுப்ப எவ்வளவு நேரமாகும்? தமிழக அரசின் சார்பில் அப்போது இருந்த தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர் அவர்களே விசேஷ அதிரடிப்படையினரின் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டன என்று கூறினாரே, யாருடைய உத்தரவின் பேரில் அப்படி ஆணை பிறப்பித்தார்? மேலும் தலைமைச் செயலாளர், வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியும் என்றும், ஆனாலும் மூன்று பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்துகிறது என்றும் அறிக்கை விடுத்தார் என்றால், அதற்குப் பெயர் கண்ணாமூச்சி ஆட்டம் என்று ஜெயலலிதாவின் வார்த்தைகளிலேயே கூறலாம் அல்லவா?

கழக ஆட்சியில் வீரப்பனுக்கு எதிராக எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப் போலவும், அ.தி.மு.க. ஆட்சியிலேதான் நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதைப் போலவும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். 1990 ஆகஸ்ட் முதல் 1996 மே திங்களில் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்கும் வரையில், தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் 63 பேர். 1996இல் தி.மு.கழக ஆட்சி அமைந்த பிறகு ஜூன் முதல் 13-11-2000 வரை மூன்று பேர் மட்டுந்தான் வீரப்பன் குழுவினால் கொலை செய்யப்பட்டார்கள்.

1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையில், ஜெயலலிதா ஆட்சியில் வீரப்பனுக்கு உதவியவர்கள், ஆதரவாளர்கள் என்ற வகையில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 121 பேர். 1996 ஜூன் முதல் 13-11-2000 வரை தி.மு.க. ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் 135 பேர். இதிலிருந்தே தி.மு.கழக ஆட்சியில் வீரப்பன் குழுவினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இல்லை என்பதை புரிந்துகொள்ள முடியும். ஜெயலலிதாவின் புளுகு மூட்டையில் புழு நெளிவதும் தெரியும்.

காவல்துறையினர் அனைவரும் அரசுப் பணியாளர்கள். அவர்களிலே கூட நேற்று விருது வழங்கும்போது, தி.மு.கழக ஆட்சியில் அதிரடிப்படைப் பிரிவிலே பணியாற்றியவர்களுக்கு முதலமைச்சர் தன் கையால் விருது வழங்காமல் உள்துறை செயலாளர் மூலமாக வழங்கப்பட்டதாகக் கூறினார்கள். விருது

அரசின் சார்பில் வழங்கப்படும் போது இப்படிப்பட்ட பாகுபாடு தேவையா?

அந்த விழாவில் ஒரு சில அதிகாரிகளை முதலமைச்சர் வெகுவாகப் பாராட்டி, விருதுகளையும் வீட்டு மனைகளையும் வழங்கியிருக்கிறார். குறிப்பாக, அதிரடிப்படையின் முன்னாள் தலைவர் தேவாரம் அவர்களை ஜெயலலிதா பாராட்டியதைப் படித்தபோது, காவல்துறையின் முன்னாள் தலைவராக இருந்த திரு. வைகுந்த் அவர்கள் எழுதிய ஒரு புத்தகத்தில், தேவாரம் அவர்களைப் பற்றி ஜெயலலிதா குறிப்பிட்ட சில வரிகளைக் குறிப்பிட்டிருந்ததுதான் எனக்கு நினைவுக்கு வந்தது. இதே தேவாரம் அவர்களைப் பற்றி அப்போது ஜெயலலிதா உதிர்த்த வாசகங்கள் என்று அந்தப் புத்தகத்திலே உள்ள வரிகள், "தேவாரம் அவர்களே, வீரப்பனைப் பிடிப்பது பற்றித்தான் நீங்கள் பல கற்பனைக் கதைகளைக் கூறி வந்திருக்கிறீர்கள். இந்த இமாம் அலியையாவது பிடிக்கப் பாருங்கள்" என்பதாகும்.

தேவாரம் அவர்களுக்கு, நேற்றைய விழாவில் ஜெயலலிதா, ஒரு கோடியே 25 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மனையையும், அதிகாரி விஜய குமார் அவர்களுக்கு, 81 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மனையையும், அதிகாரி ஆர். நடராஜ் அவர்களுக்கு, 81 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மனையையும், அதிகாரிகள் செந்தாமரைக் கண்ணனுக்கும், கே. சண்முக வேலுவிற்கும் 73 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மனைகளையும் வழங்கியுள்ளார். இந்த மனைகள் கூட வீட்டு வசதி வாரியத்தினால் பள்ளிகள் போன்ற பொது மக்களின் நலன்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தவை. அவசரம் அவசரமாக மாற்றப்பட்டு இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

"அடுத்த ஆத்து நெய்யே என் பெண்டாட்டி கையே" என்ற பழமொழிக்கொப்ப இந்தப் பரிசுகள், பணமுடிப்புகள், விருதுகள் வழங்குகிற விழா நடந்து விட்டது என்பது ஒரு புறமிருந்தாலும், அந்த விழாவில் ஜெயலலிதா பேசியிருப்பது அவரது தலை மிகவும் வீங்கிவிட்டது என்பதைத்தான் காட்டுகிறது.

வீரப்பன் கதை விஜயகுமார் போன்றவர்களால் ஒரு முடிவுக்கு வந்து விட்டது என்பதில் நிம்மதி என்றாலும், அந்தக் கதை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது எப்படி என்பதையெல்லாம்

கிளறாமல் - காட்டில் நடந்த காட்சிகளையெல்லாம் விளக்கிட முன் வராமல் இருப்பவர்களை, உசுப்பிவிடும் விதமாக ஜெயலலிதா பேசிக் கொண்டிருந்தால் அது அவருக்கும் நல்லதல்ல - அவரிடம் பாராட்டும், பரிசும் பெற்று தோள் தட்டிக் கொள்பவர்களுக்கும் நல்லதல்ல!

எனவே பழைய விஷயங்களைக் கிளறுகிற நிலையை, பழைய திரைப்பட நடிகை உருவாக்கிடாமல் இருப்பதே அம்மணிக்கும் - அதிரடிப் படைத் தளபதிகளுக்கும் நல்லது!

அன்புள்ள,

மு.க.

1-11-2004

3104. "இந்தியா டுடே" எழுத்தாளருக்கு!

உடன்பிறப்பே,

"இந்தியா டுடே" என்ற பத்திரிகையில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வுபெற்ற பிறகு, "சிந்திக்க ஒரு நொடி" என்ற தலைப்பில் எழுதி வருகிற ஒரு பெண்மணி, சிந்திப்பதற்கு ஒரு நொடி எடுத்துக் கொள்கிறாரோ, இல்லையோ- திராவிட முன்னேற்றக் கழகத்தையும், குறிப்பாக என்னையும், நிந்திப்பதற்கு ஏராளமான நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

யாருடைய தவறினை அவர் சுட்டிக்காட்டி எழுதினாலும், அவற்றுடன் தி.மு.க.வையும் இணைத்துக் கொண்டு எழுதாவிட்டால் அவருக்குத் தூக்கமே வராது போலும்.

ஒரு விமரிசன எழுத்தாளர் என்பவர், ஒரு விஷயம் பற்றிக் கருத்தாய்வு செய்து எழுதுகையில், இரு சார்பிலும் சொல்லப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட கருத்துகளை முழுமையாகப் படித்திருந்தால்தான் அவரால் விருப்பு வெறுப்பின்றி நடு நிலையாக விமர்சனம் செய்ய முடியும்.

ஆனால் இந்த அம்மையாருக்கு, தி.மு.க. மீது ஓர் "அலர்ஜி" மனப்பான்மை பிறப்பிலேயே இருக்கும் போலும்! அதனால்தான் எதைப் பற்றி அல்லது யாரைப் பற்றி அவர் எழுத்துச் சித்திரம் தீட்டினாலும், தி.மு.க.வையும் ஒரு பிடி பிடித்துத் தன் கோபத்தைக் காட்டாவிட்டால் அவருக்கு நிம்மதி இருப்பதில்லை!

வீரப்பனைச் சுட்டுக் கொன்றதில், ஜெயலலிதா அரசுக்குக் கிடைத்துள்ள புகழைக் கெடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் நடந்து கொள்வதாக அந்தப் பெண்மணி 'இந்தியா டுடே' ஏட்டில் எழுதியுள்ளார்.

வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்த அடுத்த கணமே, தி.மு.க. சார்பில் நான் கொடைக் கானலில் இருந்தவாறே விடுத்த அறிக்கையையும் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள்

விடுத்த அறிக்கைகளையும் அந்தப் பெண்மணி படித்திருந்தால் இவ்வளவு வாய் நீளம் காட்டி விமர்சனம் செய்திருக்க மாட்டார். அரசு சார்பில், 30.10.2004 ஆம் தேதியன்று நடைபெற்ற பாராட்டு விழாவினைக்கூட அது வரவேற்கத்தக்கதுதான் என்று நான் வெளியிட்ட அறிக்கையிலே எழுதியிருந்ததைக் கூட, அந்த அம்மையார் படிக்கத் தவறிவிட்டார் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களுமே வீரப்பனின் முடிவினால், இருபதாண்டு காலப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதை வரவேற்று, இரு மாநில அதிரடிப்படையினருக்கும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சுமுகமானதும், நாகரிகமானதுமான ஒரு சூழல் அமைந்ததைக் கெடுத்து, எதிர்க்கட்சிகள் மீது தேவையில்லாமல் பாய்ந்து பிராண்டி, எதிர்க்கட்சித் தலைவர்களை, குறிப்பாக தி.மு.க. ஆட்சியை கேலி செய்ததும், முதலில் அறிக்கை வெளியிட்டதும், மேடையில் பேசியதும்- பாராட்டு விழாவிலே பேசும்போதுகூட கடந்த கால ஆட்சியிலே வீரப்பனைப் பிடிக்கத் தவறி விட்டார்கள் என்றும், பேரம் பேசப்பட்டது என்றும் வாய் ஜாலம் காட்டிப் பேசியது- "இந்தியா டுடே" சிறப்பு எழுத்தாளரான இந்தப் பெண்மணியின் பிரியத்துக்குரிய ஜெயலலிதாதான் என்பதை தேதிவாரியாக பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தால் எல்லோருமே புரிந்து கொள்ள முடியும்.

கடந்த கால ஆட்சி என்றுகூட ஜெயலலிதா கூறவில்லை, பாராட்டு விழாவில் என் பெயரைக் குறிப்பிட்டே பேசிய பேச்சை "இந்தியா டுடே"யின் "நொடி" எழுத்தாளர், படிக்கவில்லையா? அல்லது படித்தும் மறந்து விட்டாரா?

எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது எச்சில் உமிழ்ந்து வேண்டுமென்றே வம்புக்கு இழுத்தது ஜெயலலிதா என்ற உண்மை உலகிற்கே தெரிகிறபோது, அவரை இந்த எழுத்தாளர், உச்சியிலே வைத்துக் கொண்டாடுவதற்கு என்னதான் காரணம்? இனப்பற்று என்பதைத் தவிர என்றுதானே எண்ணிக் கொள்ளத் தூண்டுகின்றது.

வீரப்பன் பற்றி பத்திரிகைகளில் பல்வேறு செய்திகள் வருகின்றன என்பதற்காக, அந்தப் பெண்மணி பாய்ந்து விழுகிறார்-

அதற்கு எதிர்க் கட்சித் தலைவர்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்? எந்தப் பத்திரிகையில் வந்த, எந்தச் செய்தி இட்டுக் கட்டப்பட்ட செய்தி என்பதைத் துணிவிருந்தால் அந்தப் பெண்மணி எடுத்துக்காட்டி கண்டிக்கட்டும்! அதை விடுத்து அரசியல் விவகாரங்களில் கிணற்றுத் தவளையாக இருந்து கொண்டு, இதுபோல தி.மு.க.வுக்கு அறைகூவல்கள் விட்டுக் கொண்டிருப்பாரேயானால்- "ஒரே மேடையில் விவாதிப்போம்! வா சந்திக்கு!" என்று யாராவது ஒரு கட்சிக்காரன் இவரைச் சவாலுக்கு அழைத்தால் அதற்கு இவர் தயாராக இருக்கிறாரா?

எப்போதுமே எதிர்க்கட்சிகள்தான் இதுபோன்ற பிரச்சினைகளில் குரல் கொடுக்கும்- அதற்கு ஆளுங்கட்சி பதில் அளிக்கும்.

ஆனால் வீரப்பன் பிரச்சினையில், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமுகமாக வரவேற்று முடிந்த நிலையில், ஆளுங்கட்சி முதலமைச்சர்தான் வீண் வம்பு இழுத்து- அதற்குரிய விளக்கங்களையும், கடந்த கால நிகழ்ச்சிகளையும் தி.மு.க. போன்ற எதிர்க்கட்சிகள் விவரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை "இந்தியா டுடே" சிறப்பு எழுத்தாளர் ஒரு பத்து நாள் பத்திரிகைகளை (தி.மு.க. ஏடு உட்பட) எடுத்துப் படித்துப் பார்த்தால் உண்மையை உணர்ந்து திருந்துவார் என்று எதிர்பார்க்கிறோம்.

அதை விடுத்து "வெறும் வாயை மெல்ல வேண்டாம்" என்றும் வினயமாகக் கூறுகிறோம்.

அன்புள்ள,

மு.க.

5-11-2004

3105. முருங்கைமரம் ஏறும் இந்துத்துவா வேதாளம்!

உடன்பிறப்பே,

"திரும்பிப்பார்" என்று உன்னையும், உண்மையிலேயே இந்திய ஒருமைப்பாடு - இந்தியர்களின் ஒற்றுமை - மதச்சார்பற்ற நிலை - சகோதர மனப்பான்மை - என்பனவற்றில் ஆழ்ந்த அக்கறை யுள்ளவர்களையும் கேட்டுக் கொள்வதில் பெரும் அச்சமும், அதனால் விளையும் நடுக்கமும் உள்ளத்தில் பூகம்ப உருவெடுத்து உடலையே அதிர வைக்கிறது என்று சொன்னால், அந்த இரத்தத்தை உறைய வைக்கும் நிகழ்ச்சி, இந்தியாவில் 1992ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள் 6ஆம் நாள் அயோத்தியில் இராமர் கோயில் நிர்மாணிக்க, பாபர் மசூதியை நிர்மூலம் செய்கிறோம் என்று பா.ஜ.க. வினரும், அவர்களின் பக்கத் துணைப் பட்டாளங்களும் கரங்களில் கத்தி, கபடா, கட்டாரி, கதாயுதங்கள், கோடரி, மண்வெட்டிகள், கடப்பாரைகள் ஏந்தி களம் கண்டனரே! கண்ட களத்தில் வெற்றியும் பெற்று, வரலாற்றுச் சின்னமாக விளங்கிய பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கிச் சிரித்து மகிழ்ந்தனரே - அந்த நிகழ்ச்சியை நாட்டில் ஒற்றுமையையும், அமைதியையும், மத பேதமற்ற நல்வாழ்வையும் விரும்புகிற எவரேனும் தாங்கிக் கொள்ள முடியுமா?

மதவாத இயக்கங்களின் தலைமைப் பொறுப்புகளில் இருந்தவர்களே - இன்னமும் இருப்பவர்களே, வரலாற்றுக் களங்கம் விளைக்கும் இந்த அநியாயச் சேட்டைக்கு வழிநடத்தும் பெருந்துணைகளாக இருந்ததை யார்தான் மறக்க முடியும்? மறுக்க முடியும்?

டெல்லியில் கூடிய ஒரு கூட்டத்தில், அன்றைக்கு (23-11-1992) முதலமைச்சர் என்ற நிலையில் கலந்து கொண்டு கரசேவைக்கும், இராமர் கோயிலை அயோத்தியில் கட்டுவதற்கும் ஆதரவு தந்து பேசி, "பா.ஜ.க. வின் ஊதுகுழலாகி விட்டார்

ஜெயலலிதா" என்று காங்கிரஸ் தலைவர்களால் கண்டனம் செய்யப்பட்டதும், சரித்திரத்தில் அழியாத இடம்பெற்ற செய்திக் குறிப்புகளில் ஒன்றாகும்.

முதல்வராக இருந்த ஜெயலலிதா, 23-11-1992 அன்று, டெல்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு மன்றத்தில் பேசியது வருமாறு:-

"நமது நாட்டில் இந்துக்கள் பெரும் பான்மையானவர்கள் என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. அவர்கள் தங்கள் மத விருப்பங்களை அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இல்லாமல் நிறைவேற்றிக் கொள்ள விரும்பினால், அதைச் செய்ய அவர்களுக்கு அனுமதி தர வேண்டும்.....

உத்தரப் பிரதேச அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை தொடங்குவதற்கானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இந்த ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் பாரதிய ஜனதா தனிமைப்பட்டிருக்கலாம். ஆனால், வெளியே மக்கள் மத்தியில், அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படவேண்டும் என்று விருப்பம் கொண்டுள்ள பெரும்பான்மையான மக்களின் கருத்தை மறுத்து ஒதுக்கிவிட முடியாது, ஒதுக்கிவிடக் கூடாது"

இவ்வாறு ஜெயலலிதாவினாலும், பா.ஜ.க.வினராலும் அவர்தம் பரிவாரங்களாலும் அழுத்தம் திருத்தமாக எழுப்பப் பெற்ற இந்துத்துவா கோஷமும் - அயோத்தி இராமர் கோயிலைக் கட்டியே தீருவோம் என்ற வீர கர்ச்சனையும் எப்போது அடங்கத் தொடங்கின?

அடக்கி வாசித்தால்தான் ஆட்சிக்கு வரவும் முடியும் - வந்தாலும் நிலைத்திடவும் முடியும் என்றுணர்ந்த பா.ஜ.க. தலைவர்கள், இந்துத்துவா கோஷம் - அயோத்தி பிரச்சினை - இரண்டையும் கைவிட்டதுபோல நடிப்புக் காட்டித்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணியைக் கட்டியிருக்கிறார்கள் என்பதை நம்மால்கூடப் பின்னால்தான் புரிந்து கொள்ள முடிந்தது.

டெல்லியில் வாஜ்பய் ஆட்சி, ஜெயலலிதாவின் சாகசத்தினால் கவிழ்க்கப்பட்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணி

அமைக்கப்பட்டபோது - அந்தக் கூட்டணியின் குறைந்தபட்சத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது, இந்துக்களும், முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்வோம் என்று தொடங்கி - இந்துத்துவா போன்ற முழக்கங்களுக்கும் - அயோத்தி இராமர் கோயில் போன்ற சர்ச்சைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தது போன்ற நிலையில் மதச்சார்பற்ற அரசு அமைப்பதில் நாட்டமுடையவர்கள்போல நடித்துக் காட்டியுள்ளனர் என்பதை, இவர்களை நம்பி ஏமாந்த நம்மைப் போன்றவர்களால் உணர முடிந்தது.

இவர்களின் குறைந்தபட்சத் திட்டம் திறந்த மனதோடு வெளியிடப்பட்டதில்லை என்பதை, குஜராத் சம்பவங்களும் - அங்கே கும்பல் கும்பலாகக் கொன்று குவிக்கப்பட்ட சிறுபான்மையோர் சடலங்களும் சாட்சிகளாக விளங்கி, நம்மையும், நாட்டையும் மனங் கலங்கிடச் செய்தன.

இவர்கள் எப்படி நாடகமாடுகிறார்கள் - அந்த நாடகங்களில் எத்தகைய அற்புதமான நடிப்பினைக் காட்டுகிறார்கள் என்பதற்கு தேர்தல்கள்தான் உரைகற்களாக விளங்குகின்றன.

குஜராத் இடைத் தேர்தலாகட்டும் அல்லது இவர்களது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இடைத் தேர்தல்களாகட்டும் அப்போதெல்லாம் நம்மையே வியக்க வைக்குமளவுக்கு திரு. அத்வானி போன்றவர்கள் ஆற்றிய உரை எத்தகையது?

> "இந்தியா என்பது இந்துக்களின் நாடல்ல! இந்தியர்களின் நாடு - அதை மதக் கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடாது"

இப்படி குஜராத் தேர்தலின்போது அத்வானி அவர்கள் பேசியதை மறந்துவிட முடியுமா?

ஆனால் இப்போது? நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்து, நாடாளும் வாய்ப்பை இழந்துள்ள நிலையில் பா.ஜ.க. தலைவராகப் பொறுப்பேற்றுள்ள அத்வானி அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து வருமாறு :-

> "இந்துத்துவாவை அமல்படுத்துவதில் பாரதிய ஜனதா இனி முனைப்புடன் செயல்படும். இந்துத்துவா விஷயத்தில் கட்சி ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது.

ராமர் கோவில் கட்டும் விஷயத்தில் மெத்தனம் காட்டியதும் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற மக்கள் இயக்கம்தான் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட மிகப் பெரிய மக்கள் இயக்கம் ஆகும். அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது காலத்தின் கட்டாயம். அங்கே தற்போது கூடார கோவில் இருக்கும் அதே இடத்தில் பிரமாண்டமான ராமர் கோவிலைக் கட்ட வேண்டும். இந்தியாவில் உள்ள பல கோடி மக்களின் எண்ணம் இதுதான். பா.ஜ. கட்சியும் இதைத்தான் பிரதிபலிக்கிறது. தே.ஜ. கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அயோத்தியில் பிரச்சினைக்குரிய இடத்தில் உடனடியாக ராமர் கோவிலைக் கட்டுவோம். ராமர் கோவில் கட்டும் கொள்கையை பா.ஜ. கைவிட்டுவிட்டது என்று யாரும் எண்ண வேண்டாம்."

உடன்பிறப்பே, தேர்தல் வெற்றி தோல்விகளைப் பொறுத்தே இவர்களது இலட்சியங்கள் உருமாறவும் - பின்னர் அதே உருவினைக் கொள்ளவுமான நிலை ஏற்படுகிறது என்பதற்கு, இந்தக் கருத்து வெளிப்பாடுகளில் காணப்படும் முரண்பாடுகளே எடுத்துக்காட்டுகளாகும்.

அண்மையில் ஆகஸ்ட் முதல் வாரத்தில், கோவாவில் பா.ஜ.க. மாநாடு, திரு. வெங்கய்யா நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, "இந்துத்துவாவைக் கை கழுவுகிறது பா.ஜ.க." என்று ஏடுகள் தலைப்புச் செய்தி வெளியிட்டன.

எனவே மாதம் ஒருமுறை மனமாற்றம் கொண்டு, தமது பேச்சிலே, கருத்திலே தடுமாற்றமும், முரண்பாடும் வெளிப்படையாகத் தெரிகிறதே என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், எப்படியோ மதச்சார்பற்ற தன்மைக்கு விரோதமாகச் செயல்படுவது - நாட்டு ஒற்றுமைக்கும், மத நல்லிணக்கத்துக்கும் வேட்டு வைக்கும் வண்ணம் செயல்படுவது - என்பதில் மட்டும் உறுதியாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

தேர்தல் முடிவுகளின் விளைவுகளுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொண்டு மக்களை ஏமாற்றும் ஜெயலலிதாவுக்கும் -

பா.ஜ.க.வுக்கும் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை என்பது, நிகழ்காலமும் கடந்த காலமும் நினைவூட்டும் உண்மையாகும்.

இந்த நிலையில் இதோ, 29-9-2004 அன்று நமது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் கூடி எடுத்துள்ள முடிவையும் நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

"மத, மொழிச் சிறுபான்மைச் சமூகங்களில் சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு, அரசு வேலை வாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் இட ஒதுக்கீட்டுச் சலுகைகளை வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய, தேசியக் கமிஷன் ஒன்றை நியமிக்கலாம்.

இட ஒதுக்கீட்டுச் சலுகைகள் மட்டுமின்றி இப்பிரிவினரை முன்னேற்ற வேறு என்னென்ன நடவடிக்கைகள் தேவை என்பதையும் இந்தக் கமிஷன் பரிந்துரைக்கும்.

மத, மொழிச் சிறுபான்மை சமூகத்தவரில் சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கி யவர்களை அடையாளம் காண்பதற்கான மதிப்பீடு களையும் இந்தக் கமிஷன் தெரிவிக்கும்.

அந்தப் பரிந்துரைகள் அரசியல் சட்டப்படியும், நிர்வாக ரீதியாகவும் எப்படி அமல் செய்வது என்ற வழிமுறைகளைக் கூறுமாறும் இந்தக் கமிஷன் கேட்டுக் கொள்ளப்படும்.

31-3-2005 ஆம் தேதிக்குள் இந்தக் கமிஷன் தனது பரிந்துரைகளை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும்."

நாம் எப்படி? அவர்கள் எப்படி? என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டுத்தானே!

மீண்டும் முருங்கைமரம் ஏறிட இந்துத்துவா வேதாளம் முனைகிறது! அனுமதிப்பது ஆபத்து!

அன்புள்ள,

மு.க.

9-11-2004

3106. சங்கரமடக் கப்பல் - மாலுமியை மாற்றுக!

உடன்பிறப்பே,

திருக்குறள் துறவறவியலில் வரும் தலைப்புகளில் துறவு எனும் தலைப்பில்,

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு"

அதாவது, ஐம்புலன்களையும் அடக்கி வெல்வதும், அப்புலன்கள் விரும்புகின்றவற்றை யெல்லாம் விட்டு விடுவதும் துறவுக்கு இலக்கணமாகும் எனக் குறிப்பிடப்படுகிறது.

அந்த இலக்கணத்தை வழுவற உணர்ந்து, வாய்மையுடன் கடைப்பிடித்தவர்களே நம் வணக்கத்திற்குரிய துறவிகளாவார்கள்.

பல்வேறு சமயங்களைத் தோற்றுவித்த சான்றோர்கள், ஞானிகள், அந்த இலக்கணத்திற்குரியவர்களாக இருந்து இவ்வுலகில் புகழை நட்டு மறைந்திருக்கிறார்கள். அந்த வகையில் ஆதி சங்கரர் முதற்கொண்டு அண்மையில் சமாதி நிலையடைந்த சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் வரையில், பொதுவான சமுதாயக் கொள்கையில், மொழி, இலக்கியம் போன்றவற்றில் மாறுபாடான கருத்துக் கொண்டவர்களாயினும், அவர்தம் தனிப்பட்ட வாழ்க்கை தாங்கள் ஏற்றுக் கொண்டிருந்த பொறுப்புக்கு எள் முனையளவும் இழிவு சேர்ப்பதாக என்றைக்குமே அமைந்திடவில்லை.

அக்காரணம் பற்றியே, அவர்களிடம் நமக்கிருந்த கருத்து வேறுபாடுகளுக்கிடையிலேயும் ஒரு கண்ணியமிக்க அன்பும், மதிப்பும் அவர்களிடம் நமக்குத் தொடர்ந்து இருந்து வந்தது.

ஆனால், இன்றையதினம் பிரச்சினைக் குரியவராகிவிட்ட ஜெயேந்திரர் அவர்களிடம், சந்திரசேகரேந்திரரிடம் கண்ட சாந்த குணத்தையோ - சற்குணச் செயல்களையோ நம்மால் காண

முடியாமலே போய் விட்டது. ஆயிரங்காலத்துப் பயிர் என்பதுபோல ஆதி சங்கரர் அவர்களின் அருளாசியால், இந்தப் பெரும் நிறுவனம் பற்றிய சர்ச்சைகளும், உரிமைக் குரல்களும் ஒருபுறமிருந்தாலும், மகத்தான வளர்ச்சி காண்பதற்குத் தங்கு தடையில்லாத நிலை உறுதிப்பட்டிருந்ததை உணர முடிந்தது.

சமத்துவ நிலை - சமதர்மக் கொள்கை - சாதிமத பேதமற்ற சன்மார்க்க நோக்கம் - இவை புக முடியாத அளவுக்கு சங்கர மடங்களின் நெடிய மதிற் சுவர்கள் இருந்தபோதிலும் கூட, களங்கம் எனும் கறையும் எட்டிப் பார்க்க முடியாத பாதுகாப்புப் பண்பாடுடன் கூடியதாக அந்த உயர்ந்த சுவர்கள் விளங்கின.

எல்லாம் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் காலம் வரையில்தான், அந்தக் கட்டுக்கோப்பு கடைப்பிடிக்கப்பட்டது.

இன்னும் சொல்லப்போனால், அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே, 1987 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23 ஆம் நாள், தண்டத்தை மடத்திலேயே போட்டு விட்டு ஜெயேந்திரர் துறவிக் கோலம் துறந்து, கர்நாடக மாநிலத்துக்குச் சென்று தலைக்காவிரி அருகே சென்று விடவும் - பெரிய சங்கராச்சாரியார் வேதனையுற்று ஜெயேந்திரருக்குப் பதிலாக விஜயேந்திரரை நியமிக்கவுமான குழப்பங்கள் தோன்றி, அன்றைய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அவர்களே தலையிட்டு சமரசம் செய்து வைக்க வேண்டிய சங்கடமான நிகழ்வுகள் உருவானதை எண்ணிப் பார்க்கும்போது, ஜெயேந்திரர் அவர்கள் துறவிக்குரிய இலக்கணமான "சினம் தவிர்த்தல்" என்பதைத் தழுவி நடக்காதவர் அல்லது நடக்க முடியாதவர் என்பதை நன்கு தெளியலாம்.

ஒருமுறை தமிழ் மொழி பற்றி அவர் குறை கூறிப் பேசியதை நான் மறுத்திட வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அவ்வாறு மறுத்தபோது - அவர் என் மீது காட்டிய கோபத்திற்கு ஓர் உதாரணம் :- அதன் பிறகு ஒரு மாதம் கழித்து நான் உடல் நலிவுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அப்போது ஜெயேந்திரர் என்ன சொன்னார் தெரியுமா?

> "கருணாநிதியைத் தண்டிக்க நான்தான் ஆண்டவனிடம் வேண்டினேன். ஆண்டவன் என் கோரிக்கையை ஏற்று கருணாநிதியைப் படுக்க வைத்து விட்டார்"

என்று கிண்டலாகவும், கோபமாகவும் சொன்னார். உள்ளபடியே இவர் துறவியென்றால் என்ன செய்திருக்க வேண்டும்?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற குறளுக்கேற்ப, என் உடல் நிலை தேறுவதற்கல்லவா அவர் ஆண்டவனிடம் வேண்டியிருக்க வேண்டும். அப்போதுதானே அவர் ஞானியாவார்! துறவு இலக்கணம் உணர்ந்த வராவார்!

மாறாக, அவர் மனித நேய இயல்புக்கு விரோதமான மனநிலைப் படைத்தவர் என்பதால்தான் - இன்று அவரால் காஞ்சி சங்கர மடமே களங்கமுற்றது என்று, மக்கள் பேசுகிற கவலைக்கிடமான சூழல் தோன்றியிருக்கிறது.

வழக்கு - கொடிய வழக்கு - கொலை வழக்கு ஒன்று இருப்பதால், நான் அதன் விபரங்களுக்குள் சென்றிட விரும்பவில்லை.

மக்களிடத்தில் எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதிலே நம் கொள்கையுடன் ஒத்துப்போகிற நிறுவனங்கள் - ஸ்தாபனங்கள் மட்டுமல்ல, அவற்றுக்கென வேறு வேறு கண்ணோட்டங்கள், கருத்தோட்டங்கள் இருப்பினும், அந்த நிறுவனங்களோ, ஸ்தாபனங்களோ, மக்கள் கூட்டத்தில் பல பகுதியினர்க்கு - அந்தப் பகுதியில் ஏழை எளியோராய் இருப்பவர்க்கு - சாதிப் பிரிவால் சங்கடப்படுவோருக்கு - சகாயம் செய்திட முனையும் போது அப்படி முனையும் ஸ்தாபனம், நமதியக்க ஸ்தாபனமாகத்தானிருக்க வேண்டுமென்றில்லாமல் - நலிந்தோர்க்கு துணை நிற்கும் நாணயமான ஸ்தாபனங்களாக இருந்திடல் வேண்டும்.

அத்தகைய நிறுவனங்கள் நேர்மையாக வளர்க்கப்பட வேண்டும் - வலுப்பெற வேண்டும் - மாறாக, காஞ்சி சங்கர மடத்தில் இப்போது எழுந்துள்ள புயலால் அந்த நிறுவனம் அறவே அழிந்து விடக் கூடாது.

மாலுமி சரியில்லையென்றால் கப்பலைக் கவிழ்த்துவிட முடியாது - கப்பலைச் சரியாக செலுத்தக் கூடிய புதிய மாலுமியைத்தான் தேடவேண்டும். கப்பலையும், காலத்திற்கேற்ப சரி செய்து அமைத்துக் கொள்ள வேண்டும்.

முடிவாக - ஒரு பெரிய நிறுவனம் அழிந்து போகாமல் காத்திட அரசும், இந்து அறநிலையத் துறை வாரியமும் ஆவன செய்திட ஆலோசனை நடத்த வேண்டும். அந்த நிறுவனம் எதிர்காலத்தில் ஏழை பாழைகளுக்கும், எல்லா பிரிவிலுமுள்ள நலிந்த மக்களுக்கும் பாதுகாப்பு அரண்களில் ஒன்றாகத் திகழ வேண்டும்.

பழைய நிறுவனமொன்றைப் பாதுகாப்பதற்கும், அந்த நிறுவனத்தின் சார்பிலான அடிப்படை நோக்கங்களை மாசற்ற முறையில் நிறைவேற்றுவதற்கும், அக்கறையுடைய பொறுப்பாளர்கள் முன்வருவார்களா?

அன்புள்ள,

மு.க.

14-11-2004

3107. தவறான தகவல் - முதல்வர் தகுதிக்கு அழகல்ல!

உடன்பிறப்பே,

தமிழக அரசின் சார்பில் எது நடைபெற்றாலும், அதை அவர்தான் செய்தார் என்று பெருமைப்பட புகழ்ந்து கொள்வதில் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு தனி மகிழ்ச்சி. அவருடைய அறிக்கையையோ அல்லது பேச்சையோ எதையெடுத்துக் கொண்டாலும், "நான்தான் செய்தேன்" என்று நொடிக்கு நூறு தடவை புகழ்ந்து கொள்வார். ஓர் அரசின் சார்பில் அவ்வளவு காரியங்களையும் இவரேதான் செய்தாரென்றால், பிறகு எதற்காக மற்ற அமைச்சர்களும், அதிகாரிகளும் இருக்கிறார்கள்? சாதாரண ஒரு சிறிய அணையிலிருந்தோ அல்லது ஏரியிலிருந்தோ தண்ணீர் திறந்து விடுவதாக இருந்தால்கூட, அதை ஜெயலலிதாதான் திறந்துவிட உத்தரவிட்டார் என்று தவறாமல் அறிக்கை வரும். பின்னர் பொதுப்பணித் துறை அமைச்சர் எதற்காக? 40 சதவிகிதத்தை முறையாகப் பெற்றுத் தருவதற்காக மட்டுந்தான் இவர்போலும்!

இந்த வரிசையில், நேற்று (17-11-2004) தமிழகச் சட்டப்பேரவையில், கேள்வி ஒன்றுக்கு தொழிலமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கும் போதே, முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு, ஹூண்டாய் கார் தொழிற்சாலையை அவர்தான் கொண்டு வந்ததாகவும், 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சியில் எந்தப் புதிய தொழிற்சாலையும் தொடங்கப்படவில்லை என்றும், குறிப்பாக அந்நிய முதலீட்டில், எந்தத் தொழிற்சாலையும் தொடங்கப்பட வில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். இந்த வாதத்தை இவர் கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து கூறுவதும், அதற்குக் கழகத்தின் சார்பில் ஆதாரத்தோடு தரப்படும் பதிலை இவர் படித்து உண்மையைத் தெரிந்து கொள்ளாமல், தொடர்ந்து

தான் சொல்வதையே கிளிப்பிள்ளை போலச் சொல்லிக்கொண்டே இருப்பதும் வழக்கமாகவே ஆகிவிட்டது.

முதலமைச்சரே சொல்கிறாரே என்ற அய்யப்பாட்டுடன் அவரது குற்றச்சாட்டைப் படிப்பவர்களுக்கு, உண்மையை விளக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற வகையில் எப்படிப்பட்டவர் (உண்மை விளம்பி) தமிழகத்திற்கு முதல்வராகக் கிடைத்திருக்கிறார் என்பதைத் தெளிவாக்க வேண்டி அவரது கூற்றுக்கு ஆதாரபூர்வமான மறுப்பு விளக்கமளிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

அந்நிய முதலீட்டில் 1996 முதல் 2001 வரை, எந்தத் தொழிற்சாலையும் தொடங்கப்படவில்லை என்பது முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் சாட்டியுள்ள குற்றச்சாட்டு. இதற்கு நான் பதில் கூறுவதைவிட, 22-5-2000 அன்று "இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம்" (C.M.I.E. - Centre for Monitoring Indian Economy) என்ற மத்திய அரசின் அதிகாரபூர்வமான நிறுவனம் வெளியிட்ட அறிக்கையிலே,

> "ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்றுத் தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது"

என்று எழுதியிருந்தது. இதைவிட வேறு சான்று முதலமைச்சருக்கு தேவையிருக்காது எனக் கருதுகிறேன்.

21-7-2000 அன்று, அதே மையம், இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்ட அறிக்கைபடி, தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்னும் நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

சட்டப் பேரவையில், முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று கூறும்போது, தி.மு.க. ஆட்சியில் எந்தத் தொழிற்சாலையும் வரவில்லை என்று ஒரு குற்றச் சாட்டைக் கூறியிருக்கிறார். கேள்வி நேரத்தின் போது முந்தைய ஆட்சி மீதோ அல்லது வேறு யார் மீதோ குற்றச்சாட்டாக எதுவும் கூறக்கூடாது என்பது அவை விதி, மரபு. ஆனால், தி.மு.க. ஆட்சி மீது முதலமைச்சர் இதுபோன்ற குற்றச்சாட்டைக் கேள்வி நேரத்தில் கூறும்போதெல்லாம், பேரவைத் தலைவர் அதற்கு அனுமதியளித்துவிடுகிறார்.

ஜெயலலிதாவின் இந்தக் குற்றச்சாட்டாவது உண்மையானதா? 1996க்குப் பின், தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளின் பட்டியல் இதோ :-

● வி.எஸ்.என்.எல். எர்த் ஸ்டேஷன், 110 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, பி-டிஷ் பிரிவு 1998 ஜூன் மாதத்திலும், ஏ-டிஷ் பிரிவு 1999 ஜூன் மாதத்திலும் செயல்படத் தொடங்கியுள்ளன.

● ஜி.எம்.ஆர்.வாசவி தனியார் மின் உற்பத்தித் திட்டம் 825 கோடி ரூபாய் முதலீட்டில், சென்னை பேசின் பிரிட்ஜில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது.

● தாப்பர் டூபான்ட் லிமிடெட், தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

● விஸ்டன் பவர்ட்ரைன் சிஸ்டம் இந்தியா லிமிடெட் கம்பெனி 275 கோடி ரூபாய் முதலீட்டில், 1999ல் இயங்கத் தொடங்கியது.

● விஸ்டன் ஆட்டோமோடிவ் சிஸ்டம் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை, 325 கோடி ரூபாய் முதலீட்டில், 1999ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

● மஹிந்த்ரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் தொழிற்சாலை, சென்னைக்கு அருகில் சிங்கப் பெருமாள் கோவிலில் 210 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1999 செப்டம்பரில் செயல்படத் தொடங்கியுள்ளது.

● மட்சுசிட்டா ஏர் கண்டிஷனர் ப்ராஜக்ட் தொழிற்சாலை, அறைகளுக்கு வைக்கக் கூடிய ஏர்கண்டிஷன் இயந்திரங்களைத் தயாரிக்கும் இத்தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டையில் 59.54 கோடி ரூபாய் முதலீட்டில், 1999ல் செயல்படத் தொடங்கியது.

● மேண்டோ ப்ரேக் சிஸ்டம் இந்தியா நிறுவனத்தின் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 30 கோடி ரூபாய் முதலீட்டில், இருங்காட்டுக் கோட்டையில் 1999ல் செயல்படத் தொடங்கியது.

● எஸ்.கே.எம். எக் புராடக்ட்ஸ் தொழிற்சாலை - 100 விழுக்காடு ஏற்றுமதி பொருள்களைத் தயாரித்திடும் இத்தொழிற்சாலை, 35 கோடி ரூபாய் முதலீட்டில், ஈரோடு

மாவட்டம், சோளங்கபாளையத்தில் 12.7.1997 அன்று தொடங்கப்பட்டது.

● ஜே.பி.எம். சங்வூ லிமிடெட் தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது.

● இல்ஜின் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை, 40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் 1998ல் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

● உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் டோங்கி விஷன் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை, 43 கோடி ரூபாய் செலவில், இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது.

● ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்ம சூடிகல்ஸ் தொழிற்சாலை, சென்னைக்கருகில் ஆலந்தூரில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1998 நவம்பரில் செயல்படத் தொடங்கியது.

● சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமொபைல் பவுண்ட்ரி தொழிற்சாலை, ஓசூரில் 1998 டிசம்பரில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

● சாம் க்ரீவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ட்ராக்டர் மற்றும் அசெம்ப்ளிங் பிரிவு, ராணிப்பேட்டையில் 44 கோடி ரூபாய் முதலீட்டில், 1998 டிசம்பரில் திறக்கப்பட்டது.

● அம்பிகா சர்க்கரை ஆலை, 40 கோடி ரூபாய் முதலீட்டில், கோவையில் 1999 மார்ச்சில் தொடங்கி வைக்கப்பட்டது.

● சேலம் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலை, 500 கோடி ரூபாய் முதலீட்டில், 31.3.99 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

● எபாக்சி ரெசின் புராஜக்ட்-பெட்ரோ அரால்டைட் கம்பெனி, மணலியில் 50 கோடி ரூபாய் முதலீட்டில், 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது.

● அசோசியேட்டட் சிமெண்ட் கம்பெனியின் மதுக்கரை சிமெண்ட் புராஜக்ட் தொழிற்சாலை, 33 கோடி ரூபாய் செலவில், 1999 மார்ச் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கியது.

● லட்சுமி ஆட்டோ காம்பொனன்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 43 கோடி ரூபாய் முதலீட்டில், ஓசூரில் 1999 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது.

● தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் சார்பில் துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம், 202 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 நவம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது.

● ரினால்ட்ஸ் பால் பென் காம்பொனன்ட்ஸ் தொழிற்சாலை, இருங்காட்டுக்கோட்டையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில், 2000 ஆண்டு மார்ச் மாதம் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

● சிங்கப்பூரைச் சேர்ந்த செம்பவாங் ஸ்ரீராம் பொருள் விநியோகத் தொழிற்சாலை, 33 கோடி ரூபாய் செலவில், புழல் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது.

● மார்க்யூப் இந்தியா காகித அட்டை தயாரிக்க உதவும் எந்திர உற்பத்தித் தொழிற்சாலை, 50 கோடி ரூபாய் செலவில், இருங்காட்டுக் கோட்டையில் 2000 மார்ச்சில் உற்பத்தியை தொடங்கியுள்ளது.

● கோவேமா வுட் பிளாஸ்ட் பி.வி.சி. தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை, 44 கோடி ரூபாய் செலவில், இருங்காட்டுக் கோட்டையில் 2000 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

● ஆப்டிக் பைபர் கேபிள் தொழிற்சாலை, தமிழ்நாடு அரசு நிறுவனமான டிட்கோ, மத்திய அரசு நிறுவனமான டி.சி.ஐ.எல். (Tele communications Consultants India Limited) மற்றும் ஜப்பான் நாட்டின் ஃப்யூஜிகூரா நிறுவனம் ஆகியவை இணைந்து மிக நவீனமான ஆப்டிக் பைபர் டெலிகாம் கேபிள்ஸ் (Optic Fibre Telecom Cables) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை 28.50 கோடி ரூபாய் செலவில், 26.5.2000 அன்று நிறுவியுள்ளது.

● ப்ராக்ஸ் ஏர் இந்தியா பிரைவேட் லிமிடெட் (PRAX AIR INDIA PRIVATE LIMITED) தொழிற்சாலை, 60 கோடி ரூபாய் முதலீட்டில், திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு, அதனை நான் 21.8.2000 அன்று திறந்து வைத்துள்ளேன். இது தொழிற்சாலைகளுக்கான வாயுக்களை (Industrial Gases) தயாரித்து வழங்குகிறது. ப்ராக்ஸ் ஏர் நிறுவனம்

மொத்தம் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு தொழில் பிரிவுகளை அமைத்துள்ளது.

● செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை, இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் பிரெஞ்சு நாட்டுத் தொழில்நுட்பத்துடன், 525 கோடி ரூபாய் செலவில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு, 27.9.2000 அன்று தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு நூறு கோடி ரூபாய் அளவுக்கு அன்னியச் செலாவணி கிடைக்கச் செய்யும்.

● 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென் பொருள் பூங்கா, சென்னை தரமணியில் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டு 4-7-2000 அன்று பிரதமராக இருந்த வாஜ்பய் அவர்களைக் கொண்டு திறந்துவைக்கப்பட்டது. உலகப் புகழ்பெற்ற பல்வேறு வெளிநாடுகளுடன் இணைந்து, 34 மென்பொருள் நிறுவனங்கள் டைடல் பூங்காவில் தங்கள் தொழில் நிறுவனங்களைத் தொடங்கின.

(முப்பது கோடி ரூபாய்க்குக் குறைவான முதலீட்டில் தொடங்கப்பட்ட 25 தொழிற்சாலைகளின் பெயர்கள் இடப்பற்றாக்குறை காரணமாக சேர்க்கப்படவில்லை)

● 1996-க்குப் பின், தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட 118 தொழிற்சாலைகளின் மூலம் நேரடியாக 19 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். 1991 முதல் 1995 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஜெயலலிதாவின் ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில், 22 தொழிற் சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டு அவற்றின் மூலம் 4,230 பேர் மட்டுமே வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

இந்தத் தொழில் வளம் 1996 முதல் 2001 வரையில் பெருகிய விபரமாகும். 1996க்கு முன்பு தி.மு. கழக ஆட்சியில் 1969 - 1971, 1971-1976, 1989-1991 ஆகிய காலகட்டங்களில்தான் ஓசூர் தொழிற்பேட்டையும், ராணிப்பேட்டை தொழிற் பூங்காவும், தூத்துக்குடியில் உரத்தொழிற்சாலையும் இன்னபிற நூற்றுக் கணக்கான தொழில் வளமும் உருவாக்கப் பெற்றன என்பதையும், அந்தப் பட்டியலும் தேவைப்படின் தயாராகவே உள்ளன என்பதையும், அவைகளையெல்லாம் இணைத்துக் கூறிட ஏட்டிலே இடமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1996இல் நான்காவது முறையாக கழக அரசு அமைந்தபின்தான் திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, கும்முடிப்பூண்டி ஆகிய இடங்களில் சிப்காட் நிறுவனத்தால் புதிய தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டன. 2800 ஏக்கர் பரப்பளவில்,110 கோடி ரூபாய் செலவில், பெருந்துறை வளர்ச்சி மையம் ஏற்படுத்தப்பட்டு, 1-7-2000 அன்று கழக ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது.

கார் தொழிற்சாலைகளை எல்லாம் அவர்தான் கொண்டு வந்தார் என்று ஜெயலலிதா இன்று கூறுவதை, 29-4-1999 அன்று சட்டப் பேரவையிலேயே அவருடைய கட்சி உறுப்பினர் சற்று மாற்றி, போர்டு தொழிற்சாலையை நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று சொன்னபோதே, பேரவையிலேயே நான் போர்டு தொழிற்சாலைக்கு உங்கள் ஆட்சியில் எம்.ஓ.யூ., போட்டதோடு நின்று விட்டது. அதற்குப்பிறகு 1996இல் கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான், அதற்கான நிலம் வாங்கி, ஒப்படைத்தது உட்பட எல்லா பணிகளையும் மேற்கொண்டு, அதன் திறப்பு விழா வரை நடைபெற்று, தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியதுவரை அனைத்தும் நடைபெற்றது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் என்று நான் பதில் கூறி, அது அவை நடவடிக்கை குறிப்பிலும் இடம் பெற்றுள்ளது. எனவே திரும்பத் திரும்ப, அந்த ஒரே பல்லவியையே தொடர்ந்து பாடிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் ஏற்படாது.

ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை, 19.3.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதற்கு ஆதாரமாக அந்தத் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் இந்தப் பக்கத்திலேயே அச்சிடப்பட்டுள்ளது. இதையும் பார்த்துவிட்டு, ஜெயலலிதா சட்டப் பேரவையிலேயே ஃபோர்டு தொழிற்சாலையை அவர்தான் திறந்து வைத்ததாகப் பேசி, அது அனைத்து ஏடுகளிலும் இன்று வெளிவந்திருப்பதையும் படித்துவிட்டு, முதலமைச்சரைப் பற்றி மக்கள் புரிந்து கொள்ளட்டும்.

ஹூண்டாய் கார் தொழிற்சாலையையும் அவர்தான் கொண்டுவந்ததாக ஜெயலலிதா பேரவையில் முழங்கியிருக்கிறார். இந்தத் தொழிற்சாலையின் உற்பத்தி எப்போது தொடங்கியது தெரியுமா? 1998ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சோதனை

அளவிலும், அக்டோபர் திங்களில் வணிக முறையிலும் கார் உற்பத்தி தொடங்கியது. அப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது தி.மு.கழகம்தான். இதற்கான ஒப்பந்தத்தையாவது அ.தி.மு.க. ஆட்சியில் கையெழுத்திட்டார்களா என்றால், அதுவும் கிடையாது. 18-7-1996 அன்று ஹூண்டாய் நிறுவனத்தோடு சிப்காட் நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஆனால் ஜெயலலிதா சட்டப் பேரவையிலே ஹூண்டாய் கார் தொழிற்சாலையை அவர்தான் கொண்டு வந்ததாகக் கூறுகிறார்.

முதல்வர் ஜெயலலிதா பேரவையில் செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை தொடங்குவதற்கான பூர்வாங்க வேலையைக் கூட தனது ஆட்சியிலே செய்ததாகக் கூறியிருக்கிறார். அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் 6-1-1997 அன்றுதான் போடப்பட்டது.

கழக ஆட்சியில் அன்னிய முதலீடுகளே கிடையாது என்று பேரவையில் ஜெயலலிதா கூறுகிறார். நாங்குனேரியில் உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா ஒன்றை அமைக்க அமெரிக்காவைச் சேர்ந்த இன்ஃபேக் இந்தியா குரூப் மற்றும் ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் என்ற நிறுவனங்களுடன் சேர்ந்து, இணைத் துறையில் டிட்கோ மூலமாக கழக ஆட்சியில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் முயற்சியுடன் அடிக்கல் நாட்டப் பட்டதே! அந்தத் திட்டத்தின் மீது இந்த மூன்றாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன? இந்தத் தொழிற்பூங்காவில் அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் தொழில் தொடங்குவதற்கு இதற்குள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால், 8000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் கிடைத்திருக்கும்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன், 31.3.2000 அன்று அறிவித்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கையில் (EXIM POLICY) நாங்குனேரி உயர்தொழில் நுட்பத் தொழிற்பூங்காவைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக (SPECIAL ECONOMIC ZONE) அறிவித்தார் என்பதும் மனதில் கொள்ளத்தக்கது.

லண்டனில் இருந்து வெளிவரும் "பைனான்சியல் டைம்ஸ்" என்ற பத்திரிகை, 1997, ஏப்ரல் மாதத்தில் "சென்னை-இந்தியாவின் டெட்ராய்ட்" என்று வர்ணித்தது.

மார்க் நிக்கல்சன் என்கிற தலைசிறந்த பத்திரிகையாள, லண்டனில் இருந்து வெளிவரும் "பைனான்சியல் டைம்ஸ்" என்கிற பத்திரிகையில், 10.4.1997 அன்று "Tamil Nadu raise upto achieve car ambitions" எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர், "Tamil Nadu's car industry is perhaps the most spectacular result of the race between States to attract foreign investment and develop new industries." அதாவது, "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது" என்று குறிப்பிட் டுள்ளார்.

"இன்டஸ்ட்ரியல் ஹெரால்ட்" (ஏப்ரல் 2000) என்ற ஆங்கில நாளிதழ், வாகன உற்பத்தி, வாகன உதிரி பாகங்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்திடும் சென்னை மாநகரம், இந்தியாவின் டெட்ராய்ட் எனக் குறிப்பிட்டு பாராட்டியுள்ளது.

7.2.2000 நாளிட்ட "எகனாமிக் டைம்ஸ்" நாளிதழில், "இந்தியாவில் பெரிதும் தொழில்மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப்பெரிதாகும்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்தச் செய்திகள் எல்லாம், தி.மு.கழக ஆட்சிக்கு, ஆங்கில ஏடுகள் தந்த சான்றிதழ்கள். அதே நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சிக்கு கொடுத்த சான்றிதழ் என்ன தெரியுமா?

"பிசினஸ் இந்தியா" என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் 1994ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு கட்டுரையிலே,

"சென்னையைச் சார்ந்த தொழில் அதிபர் சொல்வது எனக் குறிப்பிட்டு குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மூல விக்கிரகத்தை, ஜெயலலிதாவை தாஜா செய்துவிட்டாலேபோதும், உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும். அதிலிருந்து தவறிவிட்டாலோ உங்களுடைய வாழ்க்கை முழுவதுமேகூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் நிர்மூலமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வரவிடாமலேயே செய்துவிட்டன" என்று

அந்த ஆட்சியின் தொழில் துறை அலங்கோலத்தை விமர்சித்து விளக்கியுள்ளது.

இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டு, ஜெயலலிதா, சட்டப் பேரவையிலே நின்று கொண்டு நான்தான், நான்தான் என்று முழங்குகிறார். இதுமாத்திரமல்ல;

ஜெயலலிதா ஆட்சி நடந்த 1995ஆம் ஆண்டு நவம்பரில் பொருளாதார நுண்ணறிவு அமைப்பு, (Economics Intelligence Unit), "தெற்கே உள்ள வாய்ப்புகள்" (Seeking opportunities in the South) என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில், "If there is any State with a reputation for corruption, it is Tamil Nadu", அதாவது, "ஏதாவது ஒரு மாநிலம் ஊழலிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்லவேண்டுமானால், அந்த சிறப்புள்ள மாநிலம் தமிழ்நாடுதான்" என்றும், "The going rate for backhanders in the form of commission is said to be about 10 to 15 percent of even the project cost", அதாவது, "ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டிலே 10 முதல் 15 சதவீதம் வரையில் இடைத்தரகர்களுக்கு கமிஷன் கொடுக்கவேண்டும்" என்றும், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிலவிய அவமானகரமான நிலையைத் தோலுரித்துக் காட்டியது.

அந்த 15 சதவிகிதம் இப்போது மேலும் ஒரு மடங்கு உயர்ந்துவிட்டது என்பதை நாடறியும்! இந்த அழகில், தவறான தகவல்களை அள்ளிக் கொட்டித் தன் தகுதியைக் குறைத்துக் கொள்கிறார் முதலமைச்சர்!

அன்புள்ள,

மு.க.

19-11-2004

3108. விளக்கம் என்ற பெயரில் வீண் ஆரவாரமா?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா இன்று (24-11-2004) ஏடுகளில் வெளியிட்டுள்ள "ஜெயேந்திரர் கைதும், எனது கருத்தும்" பற்றிய 'அந்தர் பல்டி' அறிக்கை குறித்து நாளை பதில் தருகிறேன். இன்று அவருடையதும், அவருடைய ஆணைக்கிணங்க அறிவிக்கப் பட்டதுமான அமைச்சர் ஒருவரின் "சிறுபிள்ளைத்தனம்" என்ற வீண் ஆரவார விளக்கத்திற்கு விடையளிக்க விரும்புகிறேன். அதுவே இன்றைய கடிதம்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழகச் சட்டப் பேரவையில், தொழில்கள் பற்றிய கேள்வி ஒன்றுக்கு 17-11-2004 அன்று பதிலளிக்கும்போது, தேவையில்லாமல் கழக ஆட்சியைக் குறை கூறிப் பேசிய காரணத்தால், மறுநாளே நான் நீண்ட அறிக்கை ஒன்றினை ஆதாரப்பூர்வமாக அளித்திருந்தேன். அது 19ஆம் தேதிய ஏடுகளில் வெளி வந்திருந்தது. அதற்கு அந்தத் துறையின் அமைச்சர் நான்கு நாட்கள் கழித்து பதில் எழுதி, 23ஆம் தேதியன்று சட்டமன்றத்திலே படித்திருக்கிறார். அது அமைச்சரின் அறிக்கையாக இருந்த போதிலும், அதனை அரசு கருத்தாக எடுத்துக் கொண்டு விளக்கமளிக்கின்றேன்.

அமைச்சரின் அறிக்கையின் தொடக்கத்தில், "மற்ற அமைச்சர்கள் எவருமே பணியாற்றுவதில்லை" என்று நான் எனது அறிக்கையிலே குற்றம் சுமத்தியதாகத் தெரிவித்து, அது சிறுபிள்ளைத்தனமான செயல் என்று முதிர்ந்த (?) தன்மையோடு கூறியிருக்கிறார். நான் எனது அறிக்கையிலே, "மற்ற அமைச்சர்கள் எவருமே பணியாற்றுவதில்லை" என்று கூறவே இல்லை. எனது அறிக்கையில், அரசின் சார்பில் வரக்கூடிய அறிவிப்புகள் அனைத்தும் முதல் அமைச்சரே செய்ததாக வெளிவருவதாகவும், சிறிய ஏரியிலிருந்தோ, அணையிலிருந்தோ தண்ணீர் திறந்து விடுவது

கூட முதல் அமைச்சரே அறிவித்தார் என்று செய்தி வருகிறதே, பிறகு எதற்காக அந்தந்த துறை அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறேனே தவிர, அமைச்சர்கள் பணியாற்றவில்லை என்று எனது அறிக்கையில் எந்த வார்த்தைகளும் இல்லை. எனவே நுனிப்புல் மேய்ந்து விட்டு, யாரோ தயாரித்த அறிக்கையை அந்தத் துறையின் அமைச்சர் பேரவையில் வெளியிட்டிருக்கிறார். இது ஒன்றிலிருந்தே 'சிறுபிள்ளைத்தனம்' யாருக்கு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அமைச்சரின் அறிக்கையில் ஆத்திரமும், தடித்த வார்த்தைகளும், முதல் அமைச்சருக்குப் புகழாரங்களும்தான் நிறைந்துள்ளன. "கருணாநிதிக்கே உரித்தான அழிவுக் கொள்கையைப் பின்பற்றுவது ஒருபோதும் நமக்கு வழக்கம் இல்லை" என்று அமைச்சர் தெரிவிக்கிறார். தமிழகம் முழுவதும் அனைத்துப் பிரிவினரும் ஓரிடத்திலே வாழ வேண்டும் என்பதற்காக பெரியார் பெயரில் சமத்துவபுரங்களையும், விவசாயிகளுக்காக உழவர் சந்தைகளையும், அண்ணா பெயரில் மறுமலர்ச்சித் திட்டத்தையும், ஏழைப் பெண்களின் வாழ்வுக்காக பத்தாயிரம் ரூபாய் வீதம் திருமண நிதி உதவித் திட்டத்தையும், நமக்கு நாமே திட்டத்தையும் தொடங்கி கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டதே! அதையெல்லாம் கருணாநிதிக்கே உரிய அழிவுக் கொள்கை என்று அமைச்சர் கூறுகிறார் போலும்! இந்தத் திட்டங்களுக்கெல்லாம் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் வராததுமாய் மூடு விழா நடத்தினாரே, அதுதான் ஆக்கபூர்வக் கொள்கை போலும்!

அமைச்சரின் அறிக்கையில், 1992ஆம் ஆண்டு முதலமைச்சர் ஜெயலலிதா புதிய தொழில் கொள்கை ஒன்றை அறிவித்தார் என்றும், அந்தக் கொள்கையைத்தான் தி.மு.க. அரசு 1996-2001இல் பின்பற்றியது என்றும் கூறியிருக்கிறார். இதுவும் தவறான தகவல். 1996 மே திங்களில் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், தொழில் முன்னேற்றத்திற்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளித்திட முடிவு செய்து, இந்தியாவில் தொழில்மயமான மாநிலம் என்ற பெருமையை அடைவதற்கும், இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாகத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்கும், தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்துவதற்கும், தொழில்

முதலீடுகளை ஊக்குவிக்க, விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்குவதற்கும் ஏற்றவாறு புதிய தொழில் கொள்கை ஒன்றை வகுத்து, அமல்படுத்தியதன் காரணமாகத்தான் முதலீடு செய்வதற்கு சிறந்த இடமாகத் தமிழ்நாடு கருதப்பட்டது.

அதனால்தான் 28-4-1999 தேதிய "எகனாமிக் டைம்ஸ்" என்ற ஆங்கில நாளிதழ் "தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், தொழில் நிறுவனங்களை நிறுவுவதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது" என்று எழுதியது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி ஜெயலலிதா ஆட்சியில், 1994-95இல் 8.7 சதவிகித அளவிற்கு இருந்தது. தி.மு.கழக அரசு எடுத்த தொடர்ச்சியான தொழில் முனைவோர் நேயமிக்க நடவடிக்கைகளின் காரணமாக, 1999-2000ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சி 15.02 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்ந்தது.

தி.மு.கழக ஆட்சியில் எந்த அளவிற்கு முதலீடுகள் உயர்ந்துள்ளன என்ற புள்ளிவிவரத்தை, மத்திய அரசின் நிறுவனமான சி.எம்.ஐ.ஈ., வெளியிட்டதை நான் எடுத்துக்காட்டி, என் அறிக்கையிலே தெரிவித்திருந்தேன். அதற்கு தமிழக அமைச்சர் கொடுத்துள்ள பதிலில், ஜெயலலிதா ஆட்சியிலே மேற்கொண்ட உழைப்பின் பலனைத்தான் தி.மு.க. அறுவடை செய்துள்ளது என்று கூறியிருக்கிறார். அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியது என்றால், தற்போது ஜெயலலிதா ஆட்சியிலே செய்யப்படும் சாதனைகள் எல்லாம் 1996-2001இல் தி.மு.கழக அரசு மேற்கொண்ட உழைப்பின் பலன்தான் என்று நினைக்கத் தோன்றாதா?

அமைச்சர் மேலும் தனது அறிக்கையில், போர்டு மோட்டார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (M.O.U.) அ.தி.மு.க. ஆட்சியிலேயே கையெழுத்தானது என்பதை என்னால் மறுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார். நான் இதை மறுக்கவில்லையே? என்னுடைய 19-11-2004 தேதிய அறிக்கையை அமைச்சர் படித்தாரா? படிக்கவில்லையா? என்னுடைய அந்த அறிக்கையில் "போர்டு தொழிற்சாலைக்கு உங்கள் ஆட்சியில் எம்.ஓ.யு. போட்டதோடு நின்று விட்டது. அதற்குப் பிறகு 1996இல் தி.மு.கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அதற்கான நிலம் வாங்கி ஒப்படைத்தது உட்பட, எல்லா பணிகளையும் மேற்கொண்டு அதன்

திறப்பு விழா வரை நடை பெற்று, தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியது வரை அனைத்தும் முழுமை பெற்றது" என்று பேரவையிலே நான் பேசியதையே எடுத்துக்காட்டி விளக்கியிருக் கிறேன்.

போர்டு கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா அ.தி.மு.க. ஆட்சியிலே நடத்தப்பட்டதால், அந்தத் தொழிற்சாலை அமைந்ததற்கு தாங்கள்தான் காரணம் என்கிறார் அமைச்சர். நாங்குனேரி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டியது தி.மு.கழக ஆட்சியிலே என்ற காரணத்தால், அதனை அப்படியே கிடப்பில் போட்டு வைத்திருக்கிறீர்களே, அதைப் போல போர்டு கார் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழாவிற்குப் பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்திருந்தால், இப்போது அந்தத் தொழிற்சாலை செயல்படுவதற்குத் தாங்கள்தான் காரணம் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? அடிக்கல் நாட்டப்பட்ட எத்தனை திட்டங்கள் அந்தக் கல்லுடனேயே பல ஆண்டுகளாக காட்சி அளித்துக் கொண்டுள்ளன! ஆனால் அமைச்சரோ அடிக்கல் நாட்டியதையே தங்கள் ஆட்சியின் சாதனை என்று தம்பட்டம் அடிக்கிறார்!

அடிக்கல் நாட்டியவர்களுக்கும், ஒப்பந்தம் தீட்டியவர்கள், யோசனை தெரிவித்தவர்களுக்கும்தான் பெருமை என்றால் வீராணம் திட்டத்திற்காகப் புகழ் மாலை சூட்டிக் கொள்கிறீர்களே, அத்திட்டத்தை ஜெயலலிதாதான் முதலில் கூறியவரா? பேரறிஞர் அண்ணா காலத்திலேயே அடிக்கல் நாட்டப்பட்ட ஒன்றுதானே இது? வீராணம் திட்டத்திற்கு மட்டும் திறப்பு விழா செய்தவர்களுக்கு மகுடம் சூட்ட வேண்டும். போர்டு தொழிற்சாலைக்கு மட்டும் அத் திட்டம் பற்றி யோசித்தவர்களுக்கும், அடிக்கல் நாட்டி யவர்களுக்கும் மகுடம் சூட்டப்பட வேண்டுமென்பதுதான் அமைச்சரின் கருத்தா? அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டாலே அது தொழிற்சாலை துவக்கப்பட்டு விட்டதாகப் பொருளாகிவிடும் என்று புதிய வியாக்யானம் பேசுகிறார் அமைச்சர். அப்படி யென்றால் வீராணம் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத்தானே வீராணம் திட்டத்திற்கான புகழ் சேரும். ஆனால், இவர்கள்தானே அதற்குப் பெருமை கொண்டாடிக் கொள்கிறார்கள்! போர்டு மோட்டார் தொழிற்சாலையின் உற்பத்தி தொடங்கியது தி.மு.கழகம் நான்காவது முறையாகப் பொறுப்பேற்ற

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 19-3-1999 அன்றுதான். அந்த விழா நடைபெற்றதற்கான புகைப்படத்தையே ஆதாரபூர்வமாக வெளியிட்டிருந்தேன்.

பேரவைக்கு வர வேண்டும் என்ற அக்கறையே இல்லாத கருணாநிதி பேரவையின் மரபுகளைப் பற்றி பேசுகிறார் என்கிறார் அ.தி.மு.க. அமைச்சர். அருமை நண்பர் எம்.ஜி.ஆரும், ஏன் ஜெயலலிதாவும் சட்டப் பேரவைக்கு வெற்றி பெற்ற பிறகு எத்தனை மாதங்கள் வராமல் இருந்தார்கள் என்பது அந்த மந்திரிக்குத் தெரியுமா, தெரியாதா?

தி.மு.கழக ஆட்சியில் 118 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன என்று நான் எழுதியதில், இரண்டொரு திட்டங்களை மட்டும் அமைச்சர் குறிப்பிட்டு அவைகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியிலே 1995ஆம் ஆண்டு ஜனவரியிலேயே ஒப்பந்தம் தீட்டப்பட்டதாகக் கூறுகிறார்.

95ஆம் ஆண்டு ஜனவரியில் ஒப்பந்தம் தீட்டப்பட்டது என்றால், அதற்குப் பிறகு ஒன்றரை ஆண்டுகள் ஆட்சியிலே இருந்தீர்களே, ஏன் அவைகளைத் தொடங்குவதற்கு எதுவும் செய்யவில்லை? நீங்கள் கேட்டது கிடைக்கவில்லை என்பதால்தானே? அந்தத் திட்டங்கள் எல்லாம் தி.மு.கழக ஆட்சியில் துவக்கப்பட்டன என்றால், நாங்கள் எதுவும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்காமல், தொழிற்சாலை தொடங்கப் பட்டால் போதும் என்று ஊக்கமளித்ததால் மட்டுமே என்பது இப்போதாவது அமைச்சருக்குப் புரிகிறதா?

அதைப் போலவே எஸ்.கே.எம். முட்டை உற்பத்திப் பொருள் தொழிற்சாலைக்கான ஒப்பந்தமும் 5-9-1994 இல் கையெழுத்தானதாக அமைச்சர் கூறுகிறார். அப்படியென்றால், அதற்குப் பிறகு இரண்டாண்டு காலம் ஆட்சியிலே இருந்தபோது, ஏன் அதன் திறப்பு விழாவை நடத்தவில்லை?

தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்குத் தகவல் தொழில் நுட்பம் முக்கியம் என்பதைப் புரிந்து கொண்ட தி.மு.கழக அரசு, தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறையையே ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில்,

5-10-1998 அன்று உருவாக்கியது. இதுவும் அம்மையார் ஆட்சிக் காலத்தில் உருவானது என்று அமைச்சர் கூறுவாரா?

தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடைய, பணி முனைப்புக் குழு ஒன்று தி.மு.கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டது. அதுவும் ஜெயலலிதா ஆட்சியில் அவருடைய சிந்தையிலே உருவானதுதானா? அமைச்சர் விளக்குவாரா?

அரசுத் துறையை கணினி மயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில் நுட்பத்தை இணைக்கவும் அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தராக இருந்த டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் தலைமையில், துணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டதே, அதுவும் ஜெயலலிதாவின் சீரிய ஆராய்ச்சியின் முடிவென்பாரா அமைச்சர்?

தகவல் தொழில் நுட்பத்திற்கென்று தனியே கொள்கை ஒன்றை உருவாக்கி அறிவித்துள்ள முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்று கூறத்தக்க அளவிற்கு, தி.மு.கழக ஆட்சியிலே செய்தோமே, அதற்கும் ஜெயலலிதாதான் ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டாரா?

340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென் பொருள் பூங்கா சென்னையில் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறதே, அதற்கும் ஜெயலலிதாதான் அடிக்கல் நாட்டினார் என்று அமைச்சர் கூறுகிறாரா?

உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன் பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் ஒன்று தி.மு.கழக ஆட்சியில் அமைக்கப்பட்டதே, அதுவும் அம்மாவின் ஆலோசனையின் பேரில்தானா? அமைச்சரே, பதில் எப்போது?

தகவல் தொழில் நுட்பக் கல்வியை மேம்படுத்த 'டானிடெக்' என்னும் தகவல் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை 1998இல் தி.மு.கழக அரசு ஏற்படுத்தியதே, அந்தக் கருத்து எப்போது உதயமாயிற்று? உங்கள் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்திலா?

உயிரியல் தொழில் நுட்பத்திற்கு தனிக் கொள்கை வகுத்தது யார் ஆட்சியிலே? தி.மு.கழக ஆட்சியிலே அல்லவா?

தமிழ்நாடு உயிரியல் தொழில் நுட்ப வாரியம் ஒன்று பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலே அமைக்கப்பட்டதே, யாருடைய ஆட்சிக் காலத்தில்? 22-11-2000 அன்று நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியிலேதானே?

மகளிர், மகளிர் என்று வாய் அளவிலே முழங்குகிறீர்களே! மகளிர்க்கான முதல் உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா எப்போது தொடங்கப்பட்டது? 24-11-2000 அன்று தி.மு.கழக ஆட்சியிலேதானே? அமைச்சரே, மறுக்கத் தயாரா?

என்னுடைய அறிக்கையிலே நான் சில ஆங்கில நாளிதழ்கள், ஜெயலலிதா ஆட்சி பற்றி அவருடைய ஆட்சிக் காலத்திலேயே வெளியிட்ட கருத்துகளையெல்லாம் தெரிவித்திருந்தேன். அந்தக் கருத்துகளுக்கு அமைச்சர் அறிக்கையில் ஏன் பதில் கூற வில்லை? அந்தக் கருத்துகளை உண்மை என்று அமைச்சர் ஒப்புக் கொள்கிறாரா?

1. "பிசினஸ் இந்தியா" என்ற ஆங்கில நாளேடு 1994ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு கட்டுரையில், ஜெயலலிதாவை தாஜா செய்துவிட்டாலே போதும், தொழிலதிபர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்றும், ஜெயலலிதாவின் நிர்மூலமான குணாம் சங்கள் பல பெரிய தொழிலகங்களை வர விடாமலேயே செய்துவிட்டன என்றும் எழுதி யதைக் குறிப்பிட்டுக் காட்டியிருந்தேனே, அதற்கு அமைச்சரின் பதில் என்ன?

2. 1995ஆம் ஆண்டு நவம்பரில் பொருளாதார நுண்ணறிவு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ஏதாவது ஒரு மாநிலம் ஊழலிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்லவேண்டுமேயானால், அந்த மாநிலம் தமிழ்நாடுதான் என்று எழுதியதற்குப் பதில் என்ன என்று கேட்டிருந்தேனே, அதற்கு அமைச்சரின் பதில் என்ன?

3. அதே அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டிலே 10 முதல் 15 சதவிகிதம் வரையில் இடைத் தரகர்களுக்கு கமிஷன் கொடுக்க வேண்டும் என்று

எழுதியிருந்ததைக் குறிப்பிட்டிருந்தேனே, அதற்கு அமைச்சர் ஏன் பதில் தரவில்லை?

இதற்குப் பிறகாவது, உடனடியாக இந்தக் கேள்விகளுக்கு அமைச்சர் பதில் எழுதி வாங்கி வெளியிடத் தயாரா? அதை விடுத்து விளக்கம் என்ற பெயரில் வீண் ஆரவாரம்தான் இந்த அரசில் மிஞ்சுமா?

அன்புள்ள,

மு.க.

25-11-2004

3109. நாடிடுவோம் மக்கள் பிரச்சினைகளை!

உடன்பிறப்பே,

காய்ந்து கருகிக் கசந்துபோன மதவாத அரசியலை, காஞ்சி சங்கரராமன் கொலை வழக்குக் குற்றவாளியாக ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதையொட்டித் தோண்டித் தூர்வாரிப் புது வெள்ளம் பாய்ச்சிட பாரதிய ஜனதா பரிவாரங்கள் முனைவதைத் தடுத்து நிறுத்தி, அந்த விஷ வாய்க்காலின் நீரையருந்தி மக்கள் மதக் கலவரங்களில் ஈடுபடவோ, நாட்டங் கொள்ளவோ கூடாதென எச்சரிக்கும் மனித நேய அடிப்படையிலான தீர்மானம் ஒன்றை முதல் தீர்மானமாக 3-12-2004 அன்று சென்னையில் கூடிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் வடித்தெடுத்துள்ளனர்.

பெரியார்-அண்ணா பூமியில் திராவிடத் தென்றல் வீசிடுமேயல்லாமல், அடிப்படையை ஆட்டிச் சாய்க்கும் ஆரியப் புயல் அடிப்பதற்கான கால நிலைக் கணிப்பெல்லாம் இனி கவைக்குதவாதவைகள் என நாம் கருதினாலும் - தமிழகம் திறந்த இல்லமாகத் தீயோர்க்கு ஆகிவிடாமல், காவலில் சிறந்த இல்லமாகத் திகழச் செய்வது நம் இடையறாக் கடமையாகும். இதனை மக்களுக்கு விளக்கும் செயலாகவும்,

மற்றும் சேது சமுத்திரத் திட்டத்தை வரவொட்டாமல் தடுப்பதற்கு மறைந்திருந்து மாய்மாலங்களில் ஈடுபடும், மாநிலத்தை ஆளுகின்ற கட்சியினரின் மனப்போக்கைச் சுட்டிக்காட்டிப் பணியாற்றிடவும்,

மூன்றாண்டு வறட்சி, நான்காம் ஆண்டு வெள்ளம் என்ற இரு நிலைகளாலும் அவதியுறும் விவசாயப் பெருங்குடி மக்கள் கடன்பட்டு தவிக்கும் கஷ்ட நிலைக்கு நிவாரணம் தேட மத்திய அரசு உதவி புரிந்தும்கூட, அதனைச் சரிவரப் பயன்படுத்தாத மாநில அரசின் மந்த நிலையைச் சுட்டிக் காட்டவும்,

பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு, பெரும் இழப்புக்கு ஆளானோர்க்கு இழப்பீட்டுத் தொகையும், இன்னபிற உரம் போன்ற உதவிகளும் வழங்கிட வலியுறுத்தியும்,

சமூக நீதிக் கொள்கைக்கு விரோதமாக, சுய நிதிக் கல்லூரி நிர்வாக இட ஒதுக்கீடுகளில் சமூக நீதியை நிர்மூலமாக்கிட இரு நிலை எடுத்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பெரும் பாதகம் புரிந்துள்ள தமிழக அரசின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தும்,

சாலைப் பணியாளர்களும், மக்கள் நலப் பணியாளர்களும் வேலை பறிக்கப்பட்டு விதியே என்று வீதியிலே நடமாடும் பரதேசிகளாகத் திரியும் நிலையைச் சுட்டிக்காட்டி, அவர்களின் வயிற்றுப் பசிக்கு வழி தேடவும்,

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் அன்று கழக ஆட்சியிலே பெற்றிருந்த சலுகைகள், உரிமைகளை, சாக்குபோக்கு சொல்லி பறித்துக் கொண்டதை முழுமையாக மீண்டும் வழங்கிட வலியுறுத்தியும்,

தமிழகத்தில் மற்ற பகுதிகளில் பெய்த பெருமழைக்குப் பிறகும், சேலம், வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் மழை பெய்யாத நிலையில், சிறிதளவு நீருமின்றி சிந்திடும் கண்ணீரோடு சேய்கள் புடைசூழ தாய்கள் வரிசையிலே நின்று வாடுவதைச் சுட்டிக் காட்டியும்,

அவர்தம் துயர் துடைத்திட வலியுறுத்தியும்,

போக்குவரத்து வசதிகளுக்குக் கூட கிராம மக்கள் போக்கற்றுப் போனார்கள் என்ற நிலையை உருவாக்கிய அரசின் அவலத்தைப் போக்கிட ஆவன செய்வீரென வலியுறுத்தியும்,

மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்களின் கல்விக் கட்டணம் பல மடங்கு உயர்த்தியிருப்பதைக் குறைத்திட வேண்டு மென்று கொடி உயர்த்தியும்,

கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட நுகர்பொருள் வாணிபக் கழகத்தை மூடுகின்ற முயற்சியில் ஈடுபடாதீர் என எச்சரித்தும்,

ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட பேச்சுரிமை, எழுத்துரிமை, ஊர்வலம் செல்லும் உரிமை ஆகியவற்றை காவல்துறையினர்

கட்டுப்படுத்துதல் என்ற பெயரால் ஆளுங்கட்சிக்கு அனுசரணையாகவும், எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி மறுத்தும் நடந்து கொள்கின்ற சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தும்,

வருகிற 10ஆம் தேதி காலை 10 மணிக்கு, மாவட்டத் தலைநகரங்களில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய முன்னணியினரும், செயல் வீரர்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ளும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெறவிருக்கின்றன.

அவை எங்கு நடைபெறும் என்பது அந்தந்த மாவட்டங்களில் உள்ள இந்த அணியின் அமைப்பின் மூலமாக வெளியிடப்படும்.

கூட்டணிக் கட்சியினரின் முன்னணியினர் எந்தெந்த மாவட்டங்களில் யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்கின்ற விவரங்களும் தொடர்ந்து வெளியிடப்படவிருக்கின்றன.

மடங்களின் பிரச்சினைகள், மதவாதப் பிரச்சினைகள் இவற்றுக்கு மேலாக, மக்கள் பிரச்சினையில் நாட்டம் செலுத்த வழிவகுக்கும் நாள்தான் டிசம்பர் 10. கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள், முன்னணியினர் தத்தம் கட்சிகளின் கொடிகளோடு, பதாகைகளோடு ஆர்ப்பாட்டப் பேரணியில் ஒலிக்க வேண்டிய முழக்கங்களின் விவரக் குறிப்புகளோடு,

நாடிடுவோம் மக்கள் பிரச்சினைகளை, அவற்றைத் தீர்க்க தேடிடுவோம் உரிய வழியினை என்ற உறுதியோடு கூடிடுவோம் வாரீர் என அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

5-12-2004

3110. டிசம்பர் 10 - டிசம்பர் 19
முக்கிய நாட்கள்!

உடன்பிறப்பே,

டிசம்பர் 10 - டிசம்பர் 19 இந்த இரு நாட்களையும் குறிப்பிட்டு நான் இக்கடிதத்தை தொடங்குவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

டிசம்பர் 10 - அந்த ஒரு நாள் நமது கூட்டணிக் கட்சிகளின் முன்னணியினர் மற்றும் செயல்வீரர்கள் தமிழக மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காக அணிவகுத்து எழுச்சிக் கோலம் காட்டுகிற நாள் -

டிசம்பர் 19 - அந்த ஒரு நாள் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூடியிருந்து தமிழக மக்களின் மகிழ்ச்சியை ஒருமுகப்படுத்தி நமது பேராசிரியருக்கு 83வது பிறந்த நாள் வாழ்த்துக் கூறும் நாள் -

அவரது மணி விழா அறுபதாம் ஆண்டு நிறைவு நாள் 19-12-1982 அன்று மலர்ந்தபோது அவரை வாழ்த்தி நான் எழுதிய கவிதை இதோ :-

“உடன்பிறப்பே,
உனக்கு மணிவிழா!
நமது குடும்பத்தின் திருவிழா - உன்
நாக்குத் தமிழ் மணத்தால்
கழக நந்தவனம் சிறக்கும் - உன்
வாக்குத் திறத்தாலே
வஞ்சகப் பகையனைத்தும் பறக்கும் - உன்
ஆக்கப்பணி கழகத்தைக் காத்து - நெடுந்
தூக்கத் தமிழரை எழுப்பும்!
நீயோர் ஒளிமணி;
ஓயாமல் ஒலிக்கின்ற தமிழ்மணி!

பள்ளந்தான் தமிழர் வாழ்வில்
விழலாமோ என்று,
உள்ளந்தான் கொதித் தெழுந்தாய் - புது
வெள்ளந்தான் உன்றன் பேச்சு!
வீரம் செய்கின்ற இனத்தின் மூச்சு!
வெற்றி விளைக்கின்ற வாளின் வீச்சு!
அகமென்றும் புறமென்றும் அடுக்கிடும்
அருந்தமிழ் இலக்கியங்கள் தேன் வடித்திடும்!
புலவர் கூட்டமோ,
அதனை உன்பால் பருகத் துடித்திடும்!
யாரோ சிறியர் நரியர்
சூதோ வாதோ செய்திடத் துணிவரேல்
பேராசிரியக் கூர்வேல் பிளக்கும்!
தீராப் பிணியும் தீர்ந்து தமிழ் இனம் பிழைக்கும்!
பெரியாரின் பிள்ளைகள் நாம்
பேரறிஞர் தம்பிகள் நாம் - என்றும்
பிரியாத இருவண்ணக் கொடியே நாம் - இந்தப்
பெருங்குடும்பம் பெருமகிழ்வுக் கடலில் துள்ள
அருமருந்தே! அன்பழக உடன்பிறப்பே!
அறுபது நிறை மணிவிழா போல் - இன்னும்
அடுக்கடுக்காய்ப் பலவிழா காண நீ
பல்லாண்டு வாழியவே!"

இந்த என் வாஞ்சைமிகு வாழ்த்தும், வற்றாத ஆசையும் வீண் போகாமல் - அவரது 83வது பிறந்த நாள் விழாவையும் கொண்டாடுகின்ற பேற்றினைப் பெற்றுளோம்.

அவர் எத்தகைய எஃகு உள்ளம் வாய்ந்தவர் - எதிர்ப்புகளைத் துச்சமென மதிப்பவர் - இலட்சியத்தை உயிரைவிட மேலாகக் கருதுபவர் என்பதை, என் தன்னலம் என்ற நோக்கில் கூற வேண்டுமேயானால், என்பால் எவ்வளவு அன்பும், பாசமும் - இடையறா நேசமும் கொண்டவர் என்பதை இந்த விழா நாள் ஒரு நாளில் மட்டுமல்ல, எல்லா நாட்களிலுமே நெஞ்சில் பதிய வைத்து, நினைத்து நினைத்து மகிழ்பவன் நான்.

என் தலைமையில் இருக்கும் இக்கழகம் 1977ல் ஒரு பொதுத் தேர்தலில் தோல்வியுற்றபோது, இயக்கத்தின் தூண் போல் நான் கருதியிருந்த ஒருவர் கழகத்தை விட்டு விலகி, "இவரா?" என்று இலட்சோப இலட்சம் தொண்டர்கள் இடிந்துபோய் நிற்க - வேறொரு மேடையில் ஏறிப் பேசும்போது, "கலைஞருக்கு எல்லா ஆற்றலும் உண்டு - நட்புக்கு இலக்கணமானவர் - எழுதுவதில் திறமைசாலி - பேசுவதில் திறமையாளர் - நாடக ஆசிரியர் - நல்ல திரைக்கதை வசனகர்த்தா - இலக்கியங்கள் படைத்தவர் - இனிய நூல்கள் வெளியிட்டவர் - இப்படிப் பல்துறை வித்தகர் எனினும் - அவர் தலைமையில் உள்ள கட்சி வெற்றி பெற முடிய வில்லை! அதனால் அவரை விட்டு விலகுகிறேன்" என்று தனது விலகலுக்குக் காரணம் கூறினார்.

யார் அவர்? இன்றைக்கும் நான் "நாவலர்" என்று நா மணக்க, அழைக்கின்ற நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கிய என் இனிய நண்பர், மறைந்த மாணிக்கம் நெடுஞ்செழியன்! கழகப் பொதுச் செயலாளராக இருந்தவரே இப்படியொரு புதிரானார் கழகத்திற்கு! அவருடன் இணைந்தே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து இயக்கத்திற்கு வந்த அன்பழகனார் அவர்கள், தோல்விகள் சில இந்த இயக்கத்தைத் தழுவியபோதும் துவண்டு விழாதவர் - மாறாக என் தோளொடு தோள் நின்று என் துணையாக விளங்கிடும் தூய்மையாளர் - தோல்விகளையும் வெற்றிக்கான படிக்கட்டுகளாக்கி முன்னேறுக என்றுரைத்த அறிஞர் அண்ணாவின் கருத்தைக் கணமேனும் மறவாதவர்.

டிசம்பர் 10 - தமிழக மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காகவும், மத நல்லிணக்கம் நிலைத்திட வேண்டி - மதப் பூசலுக்கான பிரச்சாரங்களைத் தடுத்து நிறுத்திட முனைந்து - மக்களின் பிரச்சினைகளை மாநில அரசு அலட்சியப்படுத்தும் போக்கினைச் சுட்டிக்காட்டிட - நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் வசதியும் வாய்ப்பும் உள்ள இடங்களில் பேரணிகள் நடத்துகிறோம் - அந்தப் பேரணிகளில் தலைமை வகிப்போர் யார் யார் என்ற பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது;

"என் பெயரை விட்டு விடாதீர்கள் -
நான் சென்னைப் பேரணிக்குத்
தலைமை வகிக்கிறேன்"

என்று ஆணையிடுவது போலத் தன் ஆவலை வெளியிட்டார் அன்பழகப் பேராசிரியர் என்கிறபோதும் - அகவை 83லும் அவர், சற்று ஒதுங்கித்தான் இருப்போமேயென்ற விரக்தி ஆட்கொள்ளாமல் தானும் கலந்து கொள்வேன் என்ற விறுவிறுப்பு மிகுந்திருப்பதை உணர்ந்த - உடல் நிலை காரணமாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிற எனக்கே உற்சாகம் கரை புரள்கிறது என்றால், உன் போன்ற உடன்பிறப்புகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

அவரது 83வது பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் நடத்துவதை சென்னையில் மாவட்டக் கழகங்களுக்கு மட்டும் விடுத்திட நான் விரும்பவில்லை.

தலைமைக் கழகத்தின் சார்பாகவே அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில், டிசம்பர் 19 அன்று நாள் முழுதும் இசையரங்கம், கவியரங்கம் நடத்தி - மாலையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் பாராட்டு விழா வாழ்த்தரங்கம் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்விழாவில், விலையுயர்ந்த அரிய நூல்கள் 83ஐப் பேராசிரியர் அவர்களிடம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விழாக் குழுத் தலைவனாக நானும் - விழாக்குழு செயல் உறுப்பினர்களாக ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், மு.க. ஸ்டாலின், பலராமன், ஜெ. அன்பழகன் ஆகியோரும் இருப்போம்.

டிசம்பர் 10ஆம் நாள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான கூட்டணிக் கட்சிகளின் ஆர்ப்பாட்டப் பேரணி - மாவட்டங்களின் தலைநகர்களில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் தேர்தல் உடன்பாடு கொண்ட கட்சிகளேயன்னியில், இந்தக் கூட்டணி யுடன் தோழமை பூண்டுள்ள வேறு பல கட்சிகளும் (குறிப்பாக த்திராவிடர் கழகம்) ஆதரவு தந்து கலந்து கொள்கின்றன என்பது வரவேற்கத்தக்க மகிழ்ச்சியான செய்தியாகும்.

டிசம்பர் 10 எழுச்சியும், மகிழ்ச்சியும் இரட்டிப்பாகிடத்தான் டிசம்பர் 19 பேராசிரியர் பெருந்தகைக்குப் பிறந்த நாள் விழா கொண்டாடுகிறது தலைமைக் கழகம்.

அன்புள்ள,

மு.க.

8-12-2004

3111. உமாவின் பேட்டி உணர்த்துகின்ற உண்மை!

உடன்பிறப்பே,

மத்தியபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் உமாபாரதியின் பேட்டி பற்றி இன்றைய (8-12-2004) "இந்து" நாளிதழ் "Uma Bharti sees conspiracy behind Sonia's silence" - என்ற தலைப்பில், "The former Madhya Pradesh Chief Minister, Uma Bharti, today alleged that there was a 'conspiracy' behind the silence of the United Progressive Alliance chairperson and Congress President, Sonia Gandhi, on the arrest of the Kanchi Sankaracharya, Sri Jayendra Saraswathi, in a murder case" என்று செய்தி வெளியிட்டுள்ளது.

("சோனியாவின் மௌனத்தின் பின்னால் சதி இருப்பதாக உமாபாரதி கண்டுபிடிப்பு" என்ற தலைப்பில் "காஞ்சி சங்கராச்சாரி திரு ஜெயேந்திர சரஸ்வதி அவர்கள், ஒரு கொலைக் குற்றத்திலே கைது செய்யப்பட்டிருப்பது பற்றி காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான சோனியா காந்தியின் மௌனத்தின் பின்னால் ஒரு 'சதி' இருப்பதாக மத்திய பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சர் உமாபாரதி, இன்று குற்றஞ்சாட்டியுள்ளார்")

இதே செய்தியினை அனைத்து ஏடுகளும் வெளியிட்டுள்ளன. உமாபாரதி என்ற பெண்மணியிடம் எப்போதுமே நமக்கு ஒரு பரிவு உண்டு. மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். 'உயர்ந்தோர்' எனப்படுவோர் மட்டுமே உயர்த்தப்படுவர் என்று உரைக்கப்படும் பா.ஜ.க. எனும் உப்பரிகையின் உச்சத்திற்குக் கூடச் சென்று உட்கார முடியும் என்பதைத் தனது விடாமுயற்சியால் சாதித்துக் காட்டியவர் என்பதால், அவரது பல்வேறு விதமான

உளறல்களை மதித்து அவருக்கு மறுப்பு சொல்லும் வேலையில் நாம் ஈடுபட்டதில்லை.

பா.ஜ.க. தலைவர்களால்கூட அவரது கோணங்கிக் கோமாளித் தனங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் - இப்போதைக்கு "விஸ்வ இந்து பரிட்சத்" கூடையில் கிடக்கட்டுமென்று தூக்கிப் போட்டு வைத்திருக்கிறார்கள்.

அந்தப் பெண்மணி வேலூர் சிறையில் இருக்கும் ஜெயேந்திரரையும், காஞ்சி மடத்தில் உள்ள விஜயேந்திரரையும் சந்திக்க "தமிழக விஜயம்" மேற்கொண்டுள்ளார். இருவரையும் சந்தித்த பிறகு "மதவெறி முத்திரை" குத்திய பேட்டியொன்றை ஏடுகளுக்குத் தந்திருக்கிறார்.

அவர் வேலூர் சிறையில் ஜெயேந்திரரைச் சந்திக்கத் தமிழக அரசு சிறப்பு அனுமதி தந்திருப்பதாக பத்திரிகையாளர்களிடம் கூறியிருக்கிறார். அதற்கு நன்றியும் தெரிவித்திருக்கிறார். அது என்ன சிறப்பு அனுமதியோ! என்ன நன்றியோ! தமிழக அரசும், அவரும்தான் விளக்க வேண்டும்.

சிறப்பு அனுமதி பெற்று, ஜெயேந்திரரை சிறையில் சந்தித்து உரையாடி விட்டு வந்த காரணத்தினால்தான், ஜெயேந்திரர் சிறைப்பட்டதற்கு திருமதி சோனியா காந்திதான் காரணம் என்பதுபோல அவர் கதைத்திருக்கிறார். சங்கராச்சாரியார் சிறையில் இருப்பதைப் பற்றி சோனியா காந்தி கவலைப்பட வில்லை என்று உமாபாரதி கூறியது மட்டுமல்ல! சிறையில் இருக்கும் சங்கராச்சாரியார்கூட திருமதி சோனியா காந்தி மௌனம் குறித்து ஆச்சரியப்பட்டதாக இந்த அம்மையார் ஒரு கதையும் அளந்திருக்கிறார்.

என்ன வேடிக்கை பார்த்தாயா? ஜெயேந்திரரைக் கைது செய்தது ஜெயலலிதாதான் என்பதை ஜெயலலிதாவே டெல்லி வரை சென்று சொல்லி விட்டு வந்திருக்கிறார் - சட்டப் பேரவையிலும் சங்கநாதம் செய்திருக்கிறார் - ஆனால் 'உமாபாரதிகள்' இதிலும் மதவாத அரசியல் நடத்தவே முனைகிறார்கள், தேவையில்லாமல் இந்து மதத்தை இழுத்து, உசுப்பிவிட்டு மத்திய அரசின் சதி என்கிறார்கள்!

ஆரம்பத்தில் இந்தப் பிரச்சினையை அனைத்திந்திய அளவில் மதவாதக் கண்ணோட்டத்துடன் அணுகி, மத்திய

அரசு மீது பழி போட்டு அரசியல் நடத்திட முனைந்த பா.ஜ.க. வினரும், அவர்களைச் சார்ந்த பரிவாரங்களும், இப்போது தங்கள் குற்றச்சாட்டுக்கு வேறு வர்ணம் பூசியுள்ளனர்.

> "நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்து மக்கள் நம்பிக்கையை இழந்த அ.தி.மு.க. ஆட்சியினர், மக்கள் செல்வாக்கை மீண்டும் பெறுவதற்காக ஜெயேந் திரரைக் கைது செய்த நடவடிக்கையை ஜெயலலிதா எடுத்துள்ளார்...."

இது பா.ஜ.க.வின் தமிழகப் பொறுப்பாளரான தத்தாத்ரேயா அவர்கள், நேற்றையதினம் நிருபர்களிடம் கூறிய கருத்தாகும்.

இந்தக் கருத்துக்கு நேர் எதிரிடையாக உமாபாரதி,

> "ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் சோனியா காந்தி எவ்வித கருத்தும் கூறாமல் இருப்பது, இந்தியாவின் பாரம்பர்ய கலாச்சாரத்தின்மீது அவருக்கு மதிப்பில்லை என்பதையே காட்டுகிறது...."

என்று கோபம் பொங்கிடக் குறிப்பிட்டிருக்கிறார். அய்யோ பாவம்! உமாபாரதிகள் இந்தியாவின் பாரம்பர்ய கலாச்சாரத்தைப் பற்றிப் பேசுவதுதான் அறிவு தெளிந்தவர்கள் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு ரசிக்க வேண்டிய விஷயமாகும்.

"ஐவருக்கும் தேவியாக, அழியாத பத்தினியாக மட்டுமல்ல! ஆறாவதாக அவைக் களத்தில் கர்ணனின் கட்டழகிலும் கவர்ச்சி கண்டு காதலாகினேன்" என்று கசிந்துருகினாளே பாஞ்சாலி என்பாள் பாரதத்தில் - அதையன்றோ பழம்பெரும் கலாச்சாரம் என்று பாராட்டிக் கொண்டிருக்கின்றன பரிவாரங்கள்!

அந்தப் பரிவாரங்கள் பக்கத் துணையிருக்கத்தானே உமாபாரதி தமிழகம் வந்து, பழம்பெரும் கலாச்சாரத்துக்கு வக்காலத்து வாங்கும் சாக்கில், திருமதி சோனியா காந்தி, சங்கராச்சாரியார் பிரச்சினையில் பாராமுகமாக இருந்து விட்டார் என்று கண்டித்திருக்கிறார்.

சோனியா காந்தி என்ன செய்திருக்க வேண்டுமென்கிறார் உமாபாரதி?

உமாபாரதியின் இந்த விமர்சனத்தில் உள்நோக்கம் இருக்கிறதா? இல்லையா?

நிச்சயமாக இருக்கிறது என்று குற்றஞ்சாட்டக் காரணம் உண்டு!

சங்கராச்சாரியாரைக் கைது செய்த ஆட்சி ஜெயலலிதா ஆட்சி என்பதையே உமாபாரதி ஓரங்கட்டிவிட்டு, திசை திருப்பும் வேலையாக சோனியா காந்தி மீது பாய்ச்சல் நடத்துவது ஏன்?

கொலையுண்ட சங்கராமனுக்காகவும் உமாபாரதி கவலைப்படவில்லை!

கொலைக் குற்றம் சாட்டப் பெற்று கைதாகியுள்ள சங்கராச்சாரியாருக்காகவும் உமாபாரதி கவலைப்பட வில்லை!

சோனியா காந்திக்கு நமது பாரம்பர்யக் கலாச்சாரத்தின் மீது மதிப்பு இல்லையே என்பதற்காகத்தான் உமா மிகவும் கவலைப்பட்டிருக்கிறார்.

மத்திய ஆட்சியின் பிரதமராக இருக்கும் மன்மோகன்சிங் அவர்கள், ஜெயேந்திரரை கௌரவமாக நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நேரடிக் கடிதமே எழுதியுள்ளாரே! அதற்குமேல் திருமதி சோனியா அவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென உமா கருதுகிறார்?

உமாவின் இந்தக் குற்றச்சாட்டு ஜெயேந்திரரைக் கைது செய்து அடைத்துள்ள ஜெயலலிதா மீது சாட்டப் பெறாமல், சோனியா காந்தி மீது சாட்டப் பெறுவதற்கு என்ன காரணம்?

பா.ஜ.க. தலைவர்களும் மற்றும் அதன் பரிவாரங்களின் தலைவர்களும் கூடிப் பேசி, சங்கராச்சாரியார் மீது தொடரப்பட்டுள்ள இந்த வழக்கையும் - அதையொட்டி தொடரும் நடவடிக்கைகளையும் - மதவாதத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு - தங்களின் மதவெறி அரசியலுக்கு வெற்றி தேடும் சூழ்ச்சியாகவே ஆக்கிக் கொண்டு அலை மோதுகின்றனர் என்பது எளிதாகப் புரிகிறது.

அதற்காகவே உமாவின் குரல் ஓங்கி ஒலித்திருக்கிறது! உடன்பிறப்பே! கூட்டிக் கழித்துப் பார்த்தால் "உமாபாரதியின் தமிழக வருகை" சங்கராச்சாரியாருக்கு ஆறுதல் கூறிட அல்ல! மதமாச்சரியத்துக்கு நெருப்பு மூட்டி, அந்தத் தீயின் வெளிச்சத்தில் தங்கள் அரசியலுக்கு ஒளியூட்டிக் கொள்ள விரிக்கப்பட்ட வஞ்சக வலை என்பதில் துளியும் சந்தேகமேயில்லை.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணி ஆயிற்றே என்று பரிவுகாட்டி ஏமாறக் கூடாது. இவர் அசல் பிற்போக்காளர் கூட்டத்துப் பிரதிநிதி என்பதை உமாவின் பேட்டி நமக்கு உறுதிப்படுத்துகிறது.

"சங்கராச்சாரியார் கைது, ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கும், தேசத்துக்கும் சாபக் கேடாக அமையும்" என்பதுதான் உமாபாரதி பேட்டியில் முத்தாய்ப்பாக அமைந்த வாசகம் என்கிறபோது, இந்தக் கடிதத்தில் நான் குறிப்பிடும் மையக் கருத்தில் ஏதாவது தவறு காண முடியுமா?

அன்புள்ள,

மு.க.

9-12-2004

3112. மலேசியத் தமிழ்ப் படைப்பாளிகளை மனமகிழ வரவேற்கிறேன்!

உடன்பிறப்பே,

மலேசியத் தமிழ்ப் பெருமக்கள் - அங்கு வாழும் தமிழ் எழுத்தாளர்கள் - கவிஞர்கள் முப்பதுக்கு மேற்பட்டோர் இன்று தமிழகம் வருகை தந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். கவிப்பேரரசு தம்பி வைரமுத்து முன்னின்று அவர்களின் வருகை சிறப்புற, தமிழரின் விருந்தோம்பலுக்கும், வெளிநாடு வாழ்கின்ற நமதின மக்களின் அன்பு நெஞ்சங்களுடன் தோய்வதற்குமான தக்க ஏற்பாடுகளையும், நிகழ்ச்சிகளையும் வகுத்திருக்கிறார்.

அவர்களின் நிகழ்ச்சிகளுக்கிடையே, இன்று 11-12-2004 மாலை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கிற்கு வருகை தந்து, நாம் அளிக்கும் தேநீர் விருந்தை கௌரவிப்பதற்கும் அந்தப் பெருமக்கள் இசைந்துள்ளனர்.

மலேயாவாழ் தமிழர்களிடம் அன்பும், பரிவும் கொண்டு அவர்களுக்காக இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாகக் குரல் எழுப்பி வருகிறோம். தமிழ் உணர்வின் அடிப்படையில் அவர்தம் வாழ்விலும், தாழ்விலும் நமக்குப் பங்கு உண்டு என்பதை, அது நீண்டகாலமாக உண்டு என்பதை-

1949ஆம் ஆண்டு, என் 25வது வயதில் மலேயாவில் கணபதி தூக்கு கயிற்றில் தொங்கவிடப்பட்டபோது உடனடியாக நான் எழுதி, நண்பர் நமசிவாயம் என்பார், அறிவுப் பண்ணையின் வாயிலாக வெளியிட்ட

“கயிற்றில் தொங்கிய கணபதி”

என்ற இந்தச் சிறிய நூலின் ஒரு பகுதி விளக்கும். வாய்ப்பு வாய்த்ததை எண்ணி, அதனைப் பயன்படுத்தி இதனை முரசொலி மூலம் மீண்டும் வெளியிடுகிறேன்.

அப்போது நான் சென்னையில் நடைபெற்ற தி.மு.கழக விழா ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு சேலத்திற்கு செல்வதற்காகச் சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்திலே அமர்ந்துகொண்டிருந்த வேளையில் நமசிவாயம் அவர்கள், என்னிடம் வந்து கணபதியை தூக்கிலிட்ட செய்தியினை குறிப்பிட்டு, அதுபற்றி நான் எழுதி புத்தகமாக வெளியிட வேண்டுமென்று தெரிவித்ததிற்கிணங்க, அவரையும் அந்த புகை வண்டியிலே ஏற்றிக்கொண்டு அரக்கோணம் செல்வதற்குள் புகைவண்டியிலேயே இந்த நூலினை எழுதி, அதனை அவர் பெற்றுச் சென்று சிறு நூலாக்கினார் என்பதும் பழைய வரலாறு.

அன்புள்ள,
மு.க.
11-12-2004

கயிற்றில் தொங்கிய கணபதி

"பகவத் சிங்கை தூக்குமேடையிலே ஊஞ்சலாட்டி, உவகை கொண்ட ஏகாதிபத்தியம் - திருப்பூர்க் குமரனை தடி கொண்டு தாக்கித் தெருவெல்லாம் குருதியோடச் செய்து, அதை நக்கிக் குடித்து எக்காளமிட்ட ஏகாதிபத்தியம் இதோ, இன்று மலேயா சர்க்கார் என்ற உருவிலே தன் சொரசொரப்பான ரத்த நாக்குகளால் கணபதியையும் ருசித்துப் பார்த்து விட்டது.

தூக்குமேடை, எத்தனையோ மனிதர்களைத் தனக்கு உணவாக்கிக் கொண்டு உல்லாசம் பாடியபடிதான் இருக்கிறது. அதன் கோரப் பற்களுக்கிடையே சிக்கிச் சீரழிந்த மனித உருவங்கள் கணக்கிலடங்கா.

குற்றவாளிகளின் குரல்வளையை நெரிப்பது மட்டுமல்ல, நிரபராதிகளின் வாழ்வை அரை நொடியில் தீர்த்துக் கட்டி, தன் வயிற்றைப் புடைக்க வைத்துக் கொண்டிருக்கிறது தூக்குமேடை! தூக்குமேடையிலே உறைந்திருக்கும் ரத்தத்திலே, எத்தனை உத்தமர்களின் வரலாறு எழுதப் பட்டிருக்கிறது தெரியுமா? அங்கே அறுத்தெறியப் பட்ட நரம்புகள் ஒவ்வொன்றும், ஒடித்தெறியப்பட்ட எலும்புகள் ஒவ்வொன்றும் பேச ஆரம்பித்தால், எத்தனை நீதிபதிகளின் 'நோ்மை' அம்பலத்திற்கு வரும்!

குற்றவாளிக் கூண்டிலே மரண தண்டனை பெற்ற நிரபராதி. அவன்மேல் அபாண்டங்களைச் சுமத்தி, அவனை அழித்த ஆனந்தத்தில், வக்கீலோடு கைகுலுக்கும் வறண்ட நெஞ்சத்தினன்! தூக்கிலே தொங்க வேண்டியவன் தோகை மயிலாளின் மடியிலே! எதிர்க்கத் தெரியாத ஏழை, சுருக்குக் கயிற்றின் அணைப்பிலே! .....இப்படியெல்லாம் பேசத் துவங்கும், அந்த நிரபராதிப் பிணங்கள்.

அவன் சீமான்.

அடுத்த வீட்டுக்காரனும் சீமான்தான்.

ஒருவன் லட்சாதிபதி.

மற்றவன் கோடீஸ்வரன்.

கோடீஸ்வரன் நினைக்கிறான், "லட்சாதிபதி கோடீஸ்வரனாய் வளர்ந்து விட்டால் என் செய்வது? தன் பெருமை போய் விடுமே" என்று!

அல்லது லட்சாதிபதிக்கு கோடீஸ்வரனிடத்தில் பொறாமை. இந்த எண்ணம் வளருகிறது. முடிவு கொலையில் முடிகிறது. இருவரில் ஒருவன் தூக்குமேடைக்கு நடக்கிறான். கொலைச் செய்தி பத்திரிகையில் வந்ததும் "கொடும்பாதகா" என்று திட்டியவர்கள், கொலையாளி தூக்கில் தொங்கி விட்டான் என்ற செய்தி கேட்டதும் சிறிது வருந்தத்தான் செய்கிறார்கள். ஏன்? முஸோலினி அழிய மாட்டானா? அக்கிரமக்காரன்! என்றெல்லாம் 'சாபம்' தந்தவர்கள், அவன் கொல்லப்பட்டதும்,

'அட பாவமே' என்று சோகக் குரல் எழுப்பவில்லையா?

குற்றவாளிகளுக்கேற்ற தண்டனைகள் நிறைவேறுகிற நேரத்திலேயே இந்த நிலை மக்களுக்கு என்றால், குற்றமற்றவன் -கொடுமையை நினைத்தும் பாராதவன் - கொஞ்சு மொழியினன் - நல் நெஞ்சினன், அநியாயமாகச் சாகப் போகிறான் என்று கேட்டால், அச்செய்தி காதிலே ஆயிரமாயிரம் மேகங்கள் சேர்ந்து முழக்கும் இடியொலியாகத்தானே விழும்?

'கணபதி தூக்கிலிடப்படுவார்' இச்செய்தி திராவிடத்தை ஏன், உலகத்தையே எட்டிய நேரத்தில் திராவிடம் சோர்ந்து வீழ்ந்தது. அதே வேளையில் ஆறுதல் சிறிது தலைநீட்டியது, 'சுதந்திர பூமியில்' சுதந்திர வீரர்களாய் சுதந்திரத் தலைவர்களைப் பெற்றிருக்கிற நமக்கு ஏன் அச்சம்? நமக்கு ஏன் வீண் சஞ்சலம்?

நமது சர்க்கார், நமது நாட்டு கணபதியை அநாதையாக மலேயாவில் மாளவிடாது என மனத்தைத் திடப்படுத்திக் கொண்டோம். அது மட்டுமல்ல! 'காமன் வெல்த்'தோடு ஏற்படும் உறவு, கணபதியைக் காப்பாற்றும் என நம்பி கண்ணீரைத் துடைத்துக் கொண்டோம். துடைத்த கையை எடுக்கவில்லை. தூக்குமேடை கணபதியைத் தின்று ஏப்பமிட்ட சப்தம் நமக்கு கேட்டுவிட்டது.

"அய்யோ கணபதீ! அருமைத் தமிழகத்தின் அன்புச் செல்வா! எப்படியடா உன் உயிர் நீங்கிற்று! உன்னைப் பெற்ற வயிறு பற்றி எரிகிறதடா! ....ஆபத்து உன்னை அணுகிய நேரத்திலும், நம் அரசாங்கம் காப்பாற்றும் என நம்பியிருந்தேனடா!..... உன்னைக் காலில் மிதிபட்டு நசுங்கும் ஒரு எறும்பாக எண்ணி விடுவரென்று தெரியாதேடா!....."

- தமிழ்த் தாய் கதறுகிறாள் இங்கே!.....அவளைப் பார்த்து தூக்குமேடை சிரிக்கிறது.

"பார்த்தாயா, தமிழ்த்தாயே!....பாராள பாரத புத்ரர் வந்தால், யாராலும் எம்மைத் தொட முடியா தென்றாயே..... வெள்ளைக்காரன் வெளியேறினால் நல்ல காலம் பிறக்குமென்றாயே.... இதோ பார்! ..... உன் மகனின் சதைகளை, நான் பிய்த்துச் சாப்பிடுகிறேன். வெள்ளைக்காரன் தந்த தீனி இது! வெகு இனிப்பு!"

- சிரிக்கிறது தூக்குமேடை. கை கொட்டிச் சிரிக்கிறது! கலகலவெனச் சிரிக்கிறது, பக்கத்திலே பிணம் சிரிக்கிறது.

உலகில் எத்தனையோ பேர் தினம் தினம் சாகிறார்கள். எல்லாவற்றுக்குமா எல்லோரும் கவலைப்படுகிறோம்? அதுபோலவே, எத்தனையோ பேர் தூக்கிலிடப்படுகிறார்கள்..... ஆனால், கணபதியின் தண்டனை தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கணபதியே ஒரு பாடமாகி விடுகிறார், தமிழ்நாட்டுக்கு! அவர் வாழ்வே தமிழர்க்கு ஒரு அரசியல் வகுப்பு. அவர் இறுதிக் கடிதம் தமிழர் பட்டாளத்துக்கு ஒரு போர்ப் பிரசங்கம்.

"மலர் மலரும்..... மணம் வீசும்..... கருகி மடியும்" - பூ மலர்வதும், கருகி மடிவதும், "காயமே இது பொய்யடா" எனக் கழறுபவர் பயன்படுத்திக் கொள்ளும் உதாரணங்கள். ஆனால் மலர்ந்த பூ, மணம் வீசுகிறதே, அதைத்தான் அறிவியக்கம் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறது. "மனிதன் பிறக்கிறான்,

சாகிறான். வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போவதே மனிதனின் லட்சணம்" என, வாழ்வை வெறுத்தவர் பேசுவர். மலர் மலர்வதும், கருகி உதிர்வதும்தான் அவர்கள் கண்களில் படுமே தவிர, மலர் தரும் இன்பவாசம் அவர்கள் உணர்வைத் தொடுவதில்லை. தொட்டாலும் அதை உரைக்க மறுக்கின்றனர். மடியப் போகிறோமே என்று மலர் மணம் தராமல் இருக்கிறதா?..... அப்படியிருக்கும் மலரைத்தான் மக்கள் விரும்புவரா? வயது நீண்ட வாடா மல்லிகையை வரவேற்பவர் யார்? சாகப் போகிறோமே என்பதற்காக, சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்யாமலிருப்பதா? மலர் மணம் தர மறுப்பதா?..... மணம் தரும் மலராகத்தானிருந்தார் கணபதி. 'முடிசார்ந்த மன்னரெலாம் வெந்து பிடி சாம்பலாயினர்' என்று பாடி, முனிவர் ஆஸ்ரமம் அமைத்துக் கொள்ளவில்லை.... தூக்குமேடையிலே இந்த முகாரியைப் பாடவுமில்லை, அந்த வீரர்! "நான் மணம் தரும் மலர்....கசக்கி எறியப்படுகிறேன்" என்ற இதய ஒலியை அவர் கடிதமாக்கினார். அவர் கடிதம் 'அந்த லோக' ஆசைக்காரருக்கு ஒரு சவுக்கு!.....

"மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து தாழ்ந்துபோன ஒரு குடும்பத்தை உருவாக்காது எதற்கோ உழைக்கிறானாம், என்று பலர் என்னைப் பார்த்துப் பேசியதுண்டு! அதுபற்றி நான் கவலைப்படவில்லை."

ஊருக்குழைத்த உத்தமர், தோழர் சற்குணத்திற்கு எழுதிய கடைசி கடிதத்தில் இதையும் குறிப்பிடுகிறார்.

எத்தனையோ பேர் பண பலத்தினால்.... குடும்பத்துக்குள்ள செல்வாக்கினால், நாட்டுக்குத் தலைவன் நான் என வருவர். நாட்டிலிருந்து வீட்டுக்கு மூட்டை கட்டுவர். அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், வீடு, வாசல், இவைகளே அவர்கள் கனவாயிருக்கும். உறவினருக்கு வேலை தேடிக் கொடுத்தல் - தனக்காக உழைத்தவர்கள், தன்னை தலைவனாக்கியவர்கள், சிறு உரிமை கொண்டாடினாலும் எட்டி உதைத்தல் இது சில உயர் குடும்பத்து தலைவருக்குப் பிறவிக் குணமாகவே இருக்கும். ஆனால் தாழ்ந்துபோன குடும்பத்தைக் கூட கவனிக்க நேரமில்லை கணபதிக்கு!....

உழைக்கச் சென்ற இடத்திலும் மக்களுக்காக உயிர்விட்டார். உயிர் பிரியும் நேரத்திலும் 'வாழ்க வையம்' என உற்சாகப் பண்பாடினார்.

கடிதத்தில் நம்மையெல்லாம் வேல்கொண்டு குத்தும் பகுதிதான் பின் வருவது, ஆம்! அது நம் பிரசாரத்திலே ஒரு அங்கம்கூட!

"நமது குடும்பம் நசித்துப்போன பின், நான் எப்படி இங்கு வந்தேன் என்பதை நீ அறிவாய். அப்பம் விற்றுக் கொண்டும், இராணி வீட்டில் மங்கு கழுவிக் கொண்டும் ஆங்கிலம் படித்தேன்".

தஞ்சை மாவட்டத்திலே.... தங்க நிற நெல் விளையும் சோழவள நாட்டினிலே.... தம்பிக்கோட்டையிலே பிறந்த கணபதி, ஒரு சாண் வயிற்றுக்காக இளமையிலே மலேயாவுக்கு ஓடினார். தில்லை நடராசனுக்குத் தங்க வீடு.... திருப்பதி வெங்கடேசனுக்கு வைரக் குல்லாய்.... ஏன், ஆற்றங்கரை கருங்கல் கணபதிக்குக்கூட, அதிரசமும், அக்கார வடிசலும்!..... ஆனால்.... தம்பிக்கோட்டை கணபதிக்கு தாங்காத பசி. மலேயாவில் வயிற்றுப் பிழைப்பு. தமிழகம் தானியக் களஞ்சியமாயிற்றே! தங்கம் தோண்டுமிடமாயிற்றே! முத்துக் குலுங்கும் கடல்களுண்டே! கணபதி ஏன் மலேயாவுக்கு ஓட வேண்டும்? ஒரு கணபதியா? எத்தனை கணபதிகளை....ஏ! தாழ்ந்த தமிழகமே! நீ....மலேயாவுக்கும், இலங்கைக்கும் அனுப்பியிருக்கிறாய். செப்புச் சிலைகளுக்குத் தேரும் திருவிழாவும்!.... செல்வச் சீமான்களுக்கு சீரும் சிறப்பும்! கணபதிகள் காலந்தள்ள, இலங்கையும், மலேயாவும்! இது அடுக்குமா, தமிழகமே!..... அன்பு மகன் செத்தான் என்று அழுகிறாயே..... ஆத்திரப்படுகிறாயே....அலறித் துடிக்கிறாயே.... அவனை நீதானே விரட்டி அடித்தாய். அவனுக்குச் சோறில்லை என்று சொன்னது நீதானே!.... அவன் நல்ல வீட்டில் வாழக் கூடாது என்று கூறியது நீதானே!..... அவன் பொன்னையும், முத்தையும் தீண்டக் கூடாது எனத் தடை போட்டது நீதானே!....

இப்போது அழு! நன்றாக அழு! கண் இமைகள் கனத்துப் போகும் வரையில் அழு! விழிகளில் ரத்தம் வழிய ஆரம்பிக்கும் வரையில் அழு!

இதைத்தான் கணபதியின் உரத்த குரல், உத்வேகத்தோடு ஒலிக்கின்றது. இல்லையென்று கூற முடியுமா?

ஆங்கிலேயராட்சியிலே மலேயா சென்ற கணபதி, இங்கு "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" என்ற பாட்டு பழசான பிறகு,

அதே ஆங்கிலேய சர்க்காரால் சவமாக சாய்க்கப்பட்டார். பிறந்த நாட்டிலே 'சுதந்திரதேவி'யின் சங்க நாதம்! அந்த நாதம், கணபதி பிழைக்கப் போன நாட்டிலே கேட்கவில்லை. கேட்கும் அளவுக்கு ஊதப்படவில்லை. ஏன்? சங்கு ஓட்டையா? அல்லது ஊதுபவர் குரலிலே உரமில்லையா?"

(உடன்பிறப்பே! முழுக் கட்டுரையையும் வெளியிடவில்லை! இடமில்லை, அதனால்!)

★

3113. எந்த வகை நாகரீகம்; என்ன நாணயம்?

உடன்பிறப்பே,

'தினமலர்' பத்திரிகை மீது எனக்கோ அல்லது நமது கழகத்திற்கோ, தனிப்பட்ட முறையில் எந்த விரோதமும் கிடையாது. அந்த ஏடு தொடங்கிய காலத்தில் ஒரு நடுநிலை ஏடாகப் போக்கு காட்டி, பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், அதன் தலைவர்கள், முன்னணியினர் பற்றியும் இல்லாத அவதூறுகளை வெளியிடுவது தான் தனது பத்திரிகா தர்மம் என்று முடிவு செய்து கொண்டு அதற்கேற்பச் செய்திகளை திசை திருப்பியும், திரித்தும், இரு சாராரிடையே மோதலை உருவாக்கும் திட்டத்துடன் - பொது மக்களைக் குழப்பியும் - வியாபார ரீதியாகக் கூட இல்லாமல் விஷமத்துடனும், விஷத்தன்மையுடனும் வெளியிடப்படுகிற ஏடாக அது மாறியது கண்டு வியப்படைந்து அந்தத் தகாப் போக்கைப் பலமுறை சுட்டிக்காட்டியும்கூட, அந்த ஏடு தன்னைத் திருத்திக் கொள்ளாத காரணத்தினால் அதை வாங்கிப் படிப்பதையே பலரும் தவிர்த்துவிட்டதை நீயும் அறிவாய், நாடும் அறியும், அந்த ஏடு நடத்துவோரும் அறிவர்.

தினமலர் ஆசிரியர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் - படித்தவர் - பத்திரிகை அனுபவம் மிக்கவர் - பழைய காலத்து நாணயங்களைத் தேடிக் கண்டுபிடித்து ஆய்வுக் கட்டுரைகள் தீட்டியவர். நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போது என்னையே அழைத்து அவர் எழுதிய நூலையும், கண்டுபிடித்த பழங்கால நாணயங்கள் பற்றிய குறிப்பேட்டையும் வெளியிடுகிற விழா நடத்தியவர். அப்போது அவரை நான் மாசற்ற மனத்துடன் பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன், மறக்க முடியாது அதை அவராலேயே!

கழகக் கொள்கைகளில் அவருக்கிருக்கிற கருத்து வேறுபாடுகளை எடுத்துச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. கழகச் செயல் திட்டங்களில் குறை இருப்பின் - முறை தவறின்

ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் கண்டிக்கவும், விமர்சிக்கவும் அவருக்குள்ள உரிமையில் நான் தலையிடத் தயாராக இல்லை.

ஆனால், செய்தி சூடாக இருக்க வேண்டுமென்பதற்காக "செய்தி"யை "செய்தீ" ஆக்கி விடுகின்ற அவரது பத்திரிகையின் போக்கைத் தான் என்னால் மட்டுமல்ல, எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

உதாரணமாகக் கூற வேண்டுமானால், காஞ்சி சங்கரராமன் கொலை வழக்கில் - காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டு, காது பொத்திக் கொள்ள வேண்டிய செய்திகள் ஒலித்தபோதும் - கண்ணை மூடிக் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏடுகளில் வெளி வந்தபோதும் -

"சங்கர மடக் கப்பல் - மாலுமியை மாற்றுக!" என்று நான் எழுதினேன் - என் தமிழைப் புரிந்து கொள்ள முடியாமல் தறிகெட்டு நெறிகெட்டுப் போன சிலர், சங்கரமடத்தையே நான் இடித்துத் தூளாக்க வேண்டுமென்று கூறுவதாகக் கொக்கரித்தனர்.

'கல்கி' போன்ற கண்ணியமான ஏடுகளில் கூட, என் கருத்து தவறாகப் பிரசுரிக்கப்பட்டது. அதற்கு உடனே நான் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி முரசொலி 25-11-2004 தேதிய இதழிலும், மற்ற இதழ்களிலும் வெளிவந்திருப்பதை அப்படியே இங்கே மீண்டும் குறிப்பிடுகிறேன்.

செய்தியாளர் :- சங்கர மடத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்து பற்றி?

கலைஞர் :- சங்கர மடத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொன்னேன் என்று கல்கி இதழில் எழுதியிருக்கிறார்கள். கல்கி போன்ற பழம் பெரும் பத்திரிகைகள் இப்படிப்பட்ட தவறான பிரச்சாரங்களைச் செய்யக் கூடாது. சங்கர மடத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொன்னதாக கல்கியில் எழுதப்பட்டிருப்பது வேண்டுமென்றே இட்டுக் கட்டப்பட்ட செய்தி.

செய்தியாளர் :- தாங்கள் எழுதியிருப்பதில் அரசாங்கம், அந்த மடம் ஒழுங்காக நடைபெற ஒத்துழைத்திட வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அரசாங்கம்

அவ்வாறு தலையிட முடியாது என்று ஆர்.எம். வீரப்பன் சொல்லியிருக்கிறாரே?

கலைஞர் :- அரசாங்கம் நினைத்தால் ஆன்மீகவாதிகளை அழைத்துப் பேசி முடிவு செய்யலாம் அல்லவா? எனக் குள்ள கவலையெல்லாம் நான் எழுதியிருப்பதெல்லாம் அந்த நிறுவனம் ஒழுங்காக நடைபெற வேண்டும், அந்த நிறுவனத்தின் கொள்கை, குறிக்கோளில் எனக்கு மாறுபாடான கருத்து உண்டு, அது வேறு விஷயம். அடிப்படையில் நாங்கள் வேறு, அவர்கள் வேறு. ஆனால் ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு, மாணவர்களுக்கு ஒரு நிறுவனத்தின் சார்பாக உதவிகளைச் செய்யக் கூடிய நிலை ஏற்படுமேயானால், அதைத் தொடருவதற்கான முயற்சிகளில் அந்த நிறுவனத்தை அழித்து விடாமல் பாதுகாப்பதில் அரசும், அறநிலையத் துறையும் மற்றும் ஆன்மீக ஆன்றோர்களும் ஒன்றுகூடி யோசித்து ஆவன செய்யலாம். இதைத்தான் நான் சொன்னேன். இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்.

இதுமாத்திரமல்ல! இதற்கு முன்பே 4-11-2004 தேதிய முரசொலியில் "மாலுமியை மாற்றுக" என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரையின் சுருக்கம் வருமாறு :-

"ஒரு பெரிய நிறுவனம் அழிந்து போகாமல் காத்திட, அரசும், இந்து அறநிலையத் துறை வாரியமும் ஆவன செய்திட ஆலோசனை நடத்த வேண்டும். அந்த நிறுவனம் எதிர்காலத்தில் ஏழைபாழைகளுக்கும், எல்லா பிரிவிலுமுள்ள நலிந்த மக்களுக்கும் பாதுகாப்பு அரண்களில் ஒன்றாகத் திகழ வேண்டும்"

இவ்வளவு விளக்கத்திற்கும் பிறகு, இன்றைக்கு (15-12-2004) "தினமலர்" இதழில் விலாசமில்லாத ஒரு போர்வழி - போலிப் பெயரில் புகுந்து கொண்டு,

"காஞ்சி மடத்தை அரசு ஏற்க வேண்டுமென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறுவது உள்நோக்கம் கொண்டது"

என்று எழுதியிருப்பதாக ஒரு கற்பனைக் கடிதம் வெளிவந்துள்ளது. என் பெயரால் திருத்தி வெளியிடப்பட்ட

திசை திருப்பும் செய்திக்கு நான் பலமுறை மறுப்பும், விளக்கமும் அளித்த பிறகும், முதலில் அவர்கள் தவறாக வேண்டுமென்றே வெளியிட்ட பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்வது, எந்த வகைப் பண்பாடு? எந்த வகை நாகரிகம்? இது என்ன நாணயம்?

பழைய நாணயங்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நண்பர் கிருஷ்ணமூர்த்திதான் இந்த "தினமலர்" நாணயம் பற்றியும் விளக்க வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

16-12-2004

3114. கதையும், காதில் விழுந்த "கிசுகிசு"வும்!

உடன்பிறப்பே,

"அகோ! வாரும் பிள்ளாய்! பூதலம் காக்கும் போஜ மகாராஜனே, விக்கிரமாதித்தனுடைய சிம்மாசனத்தில் ஒவ்வொரு படியிலும், ஒவ்வொரு பதுமை இருந்து சொன்ன கதைகளைக் கேளாய்!" என்று விக்கிரமாதித்தன் சிம்மாசனப் படிக்கட்டுகள் ஒவ்வொன்றிலுமிருந்த பதுமைகள் கதை சொன்னதாக கதை சொல்வார்களே, அது போல அரசு விழாக்களில் கதை சொல்லி வந்த முதலமைச்சர் ஜெயலலிதா, இடையில் நிறுத்தப்பட்டிருந்த அந்தக் கதைக் காண்டத்தை மீண்டும் கிருஷ்ணகிரியிலே தொடங்கிவிட்டார்.

அந்தக் கதை, தினத்தந்தியில், ஒரு பெட்டிக்குள் கட்டம் கட்டி பிரதானமான இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதோ அம்மையார் சொன்ன அந்தக் கதை!

"பாவம் செய்த ஒருவன் நரகத்துக்கு அனுப்பப்பட்டான். நரகப் பள்ளத்தாக்கில் இருந்து வந்த அவன் நடந்து கொண்டிருந்தபோது, பாதையில் ஒரு சிலந்திப் பூச்சி இருந்ததைப் பார்த்து, அதை மிதிக்காமல் கவனமாகச் சென்றான். பிற உயிரைக் கொல்லாமல் இருந்ததற்காக அவன் கணக்கில் கொஞ்சம் புண்ணியம் சேர்ந்தது. உடனே அந்தப் புண்ணியத்திற்கான பயனும் கிடைத்தது. நரகத்தில் இருந்து மேலே வருமாறு அவனை மேலே இருந்து அழைத்தார்கள். எப்படி மேலே ஏறி வருவது என்று அவன் கேட்டான். இதோ, தொங்குகிறது பார் சிலந்தி இழை, இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா என்று சொன்னார்கள். அவனுக்கோ அவநம்பிக்கை! இவ்வளவு மெல்லிசாக இருக்கும் இந்தச் சிலந்தி

இழை நம்மைத் தாங்குமா? கையால் தொட்டதும் அறுந்துபோகுமே, இதை நம்பி எப்படி மேலே ஏறிச் செல்வது என்று யோசிக்கத் தொடங்கினான். அவனது தயக்கத்தைப் பார்த்து மேலே இருந்தவர்கள் தைரியமாக வா, இழை அறுந்து விடாது என்று சொன்னார்கள். அவனும் சிலந்தி இழையைப் பிடித்து மேலே பாதி வரை ஏறி வந்து விட்டான். அப்போது திடீரென்று கீழே பார்த்தான். அவனைப் போலவே பல பேர் சிலந்தி இழையைப் பிடித்து மேலே வந்து கொண்டிருந்தார்கள். அவனுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. புண்ணியம் செய்தது நான், பலனைப் பெற வேண்டியது நான், இவர்கள் எல்லோரும் மேலே வரப் பார்க்கிறார்களே, என்று கோபித்து கீழே இருந்தவர்களைக் காலால் எட்டி உதைத்தான். எல்லோரும் கீழே விழுந்தார்கள். அவனும் கூட திரும்பவும் நரகத்துக்குள் விழுந்து விட்டான். என்ன காரணம்? எப்போது அவன் பொறாமைப்பட்டானோ, எப்போது சுயநலத்தால் மற்றவர்களை எட்டி உதைத்துக் கீழே தள்ளினானோ, அப்போது சிலந்தி இழையும் அறுந்து விழுந்தது. அந்தச் சுயநலக்காரனும் கீழே விழுந்தான். சுயநலக்காரர்களுக்குப் பொறாமை எப்போதும் அதிகம், அப்படிப்பட்ட சுயநலக்காரர்களுக்குத் தமிழ்நாட்டில் பஞ்சமே இல்லை, அவர்களிடம் பொறாமைக்கும் பஞ்சம் இல்லை. அப்படிப்பட்ட பொறாமைக்காரர்களின் வஞ்சகங்களை எல்லாம் பொருட்படுத்தாமல் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் மாவட்டம் தோறும் பயணம் செய்து அந்தந்தப் பகுதிகளின் சிறப்புத்தன்மைகளுக்கு ஏற்பத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறேன்”

உடன்பிறப்பே,

கதையை முழுமையாக வரிக்கு வரி படித்து விட்டாயா? இப்போது நான் கதையில் சில சந்தேகங்களை எழுப்பி வினாக்கணைகளை விடுக்க விரும்புகிறேன்.

பாவம் செய்த ஒருவன் நரகத்திற்கு அனுப்பப்பட்டான் என்று ஜெயலலிதா சொல்கிறாரே! அவன் அங்கே ஒரு சிலந்திப் பூச்சியைப் பார்த்து அதை மிதிக்காமல் கவனமாகச் சென்றான் என்றால், ஏற்கெனவே பாவம் செய்து நரகத்திற்குப் போனவனுக்கு,

சிலந்திப் பூச்சியை மிதித்துக் கொன்றுவிடக் கூடாது என்கிற ஜீவகாருண்ய எண்ணம் எப்படி ஏற்பட்டது?

சிலந்தியை மிதிக்காத காரணத்தால், அவன் கணக்கில் கொஞ்சம் புண்ணியம் சேர்ந்தது என்கிறார். நரக லோகத்தில் புண்ணியம் என்ற பொருளை எந்த தனி பீரோவில் வைத்துப் பூட்டி அதைப் பாவம் செய்தவர்கள் கணக்கில் வரவு வைத்துக் கழிக்கிறார்கள்?

"இதோ தொங்குகிறது பார் சிலந்தி இழை! இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா" என்று சொன்னார்கள் என்று ஜெயலலிதா கதை கூறியிருக்கிறாரே! அப்படி மேலேயிருந்து சொன்னவர்கள் நரக லோகத்தில் இருந்தவர்களா? அல்லது சொர்க்க லோகத்தில் இருந்தவர்களா?

இவ்வளவு மெல்லிசாக இருக்கும் சிலந்தி இழை நம்மைத் தாங்குமா, கையால் தொட்டதும் அறுந்து போகுமே என்று அவன் யோசிக்கத் தொடங்கினான் என்கிறார். பாவம், அவன் ஏன் யோசிக்க வேண்டும்? நெருப்பாற்றில் உரோமத்தால் பாலம் கட்டி, அதிலே நடந்து போகக் கூடிய கதைகள் எல்லாம் புராணத்தில் வரும்போது, சிலந்தி இழையைப் பிடித்துக் கொண்டு ஏறுவதற்கு அவன் ஏன் பயப்பட வேண்டும்?

சிலந்தி இழையைப் பிடித்து மேலே ஏறியவன், பாதி வரை வந்து விட்ட பிறகு கீழே பார்த்தான், அவனைப் போலவே பல பேர் சிலந்தி இழையைப் பிடித்துக் கொண்டு மேலே வந்துகொண்டிருந்தார்கள் என்கிறாரே ஜெயலலிதா, அவர்கள் எல்லாம் கொஞ்சம் புண்ணியத்தை அவர்கள் கணக்கில் எப்படி சேர்த்துக் கொண்டார்கள்? ஒருவேளை இந்தக் கதாநாயகனைப் போல அவர்களும் சிலந்திப் பூச்சியை மிதிக்காமல் கவனமாகச் சென்று அவர்கள் கணக்கில் புண்ணியத்தைச் சேர்த்துக் கொண்டார்களா?

சிலந்தி இழையைப் பிடித்துக்கொண்டு தங்களைப் போலவே மேலே ஏறி வந்தவர்களைப் பார்த்து ஆத்திரம் கொண்டவன், புண்ணியம் செய்தது நான், பலனைப் பெற வேண்டியது நான், அப்படியிருக்க எல்லோரும் என்னோடு வரப் பார்க்கிறீர்களே என்று அவன் கோபித்துக் கொண்டான் என்றால் அது எப்படியிருக்கிறது தெரியுமா?

வீரப்பனைப் பிடித்தது நான்!

புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தது நான்!

தொலைநோக்குத் திட்டங்களைப் போடுவது நான்!

ஜெயேந்திரரைக் கைது செய்தது நான்!

இதை மற்றவர்கள் கொண்டாடுவதற்கோ, விளம்பரம் தேடிக் கொள்வதற்கோ என்ன நியாயம் இருக்கிறது?

- என்று அம்மையார் கேட்பதைப் போலத்தான் சிலந்தி இழையைப் பிடித்துக் கொண்டு ஏறிய அந்த மனிதனும் எண்ணியிருக்கிறான்.

பாவம்! அப்படி எண்ணியதால் அவன் திரும்பவும் நரகத்திற்குள் விழுந்து விட்டான் என்று முதலமைச்சர்தான் கதையை முடித்திருக்கிறார்.

இந்தக் கதையில் இன்னொரு சந்தேகம்!

முதலில் சிலந்தி இழையைப் பிடித்துக் கொண்டு மேலே வந்தவன் தான், "புண்ணியம் செய்தவன் நான், இதை மற்றவர்கள் அனுபவிப்பதா?" என்று கோபித்து காலால் எட்டி உதைத்தான். சிலந்தி இழை அறுந்து அவன் விழுந்தான். அவன் பொறாமைப்பட்டதால், கால்களால் எட்டி உதைத்ததால் அவன் விழுந்தான் என்பது சரி! ஆனால், அவன் பின்னால் சிலந்தி இழையைப் பிடித்துக் கொண்டு வந்தவர்கள் எல்லோரும் கீழே விழுந்தார்கள் என்று அம்மையார் கதை சொல்லியிருக்கிறாரே, அவர்கள் யாரைக் காலால் எட்டி உதைத்தார்கள்? அவர்கள் யார் மீது பொறாமைப்பட்டார்கள்?

புண்ணியம் செய்தது நான்தான், பலனைப் பெற வேண்டியது நான்தான் என்று எண்ணிய சுயநலக்காரன் கீழே விழுவான் என்று கூறிவிட்டு, அப்படி சுயநலமாக எண்ணாமலே, எதுவும் அப்படிச் சொல்லாமலே பல பேர் சிலந்தி இழையைப் பிடித்து, மேலே வந்து கொண்டிருந்தார்கள் என்று கதை போகிறதே, அவர்கள் எல்லாம் சேர்ந்து மீண்டும் நரகத்தில் விழவேண்டியதற்கு என்ன காரணம்?

அந்தக் காரணத்தைக் கதையில் கண்டுபிடிக்க முடியவில்லையே?

"சுயநலக்காரர்களுக்குப் பொறாமை எப்போதும் அதிகம். அப்படிப்பட்ட சுயநலக்காரர்களுக்கு தமிழ் நாட்டில் பஞ்சமே இல்லை. அவர்களிடம் பொறாமைக்கும் பஞ்சம் இல்லை." இப்படி தமிழ்நாட்டிற்குச் சிறப்பு முதன்மைத் தகுதியை, ஜெயலலிதா, தன் கதை மூலமாக வழங்கியிருக்கிறார்.

எனவே ஜெயலலிதா கூற்றுப்படி, அவரால் முதன்மை மாநிலம் என்று அறிவிக்கப்படும் தமிழ் நாட்டில், சுயநலக்காரர்கள், பொறாமைக்காரர்கள் நிறைந்திருக்கிறார்கள். அதற்குப் பஞ்சமே இல்லை.

இப்படி ஜெயலலிதா கிருஷ்ணகிரியில் முழங்கியது, பாரதியார் உயிரோடு இருந்து அவர் காதில் மட்டும் விழுந்திருக்குமேயானால், "செந்தமிழ் நாடெனும் போதினிலே துன்பத் தேள் வந்து கொட்டுது காதினிலே" என்றல்லவா கண்கலங்க கவிதை இயற்றியிருப்பார்.

இது ஜெயலலிதா ஆட்சியின் விளைவா? அல்லது அவரது கட்சியின் விளைவா? அய்யோ! பாவம்! தமிழ்நாட்டை சுயநலக்காரர்களும், பொறாமைக்காரர்களும் நிறைந்த, முதன்மை மாநிலமாக்குவதற்காகவா இவரை முதலமைச்சராகக் கண்டு களிக்கிறோம் என்று இந்தக் கதையைக் கேட்ட கிருஷ்ணகிரி மக்கள், அங்கே காவலுக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்கள் காதில் விழாமல் கிசுகிசுத்துக் கொண்டுபோனது, நமது காதில் விழுந்துவிட்டதே, என் செய்ய!

அன்புள்ள,

மு.க.

17-12-2004

3115. சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பு இருக்குமா?

உடன்பிறப்பே,

மதம், கடவுள் எனும் மறைவுகளுக்குள் ஒளிந்து கொண்டு மகான்கள், முனிவர்கள், ஆச்சாரியார்கள் என்ற பட்டங்களுடன் மக்களை ஏமாற்றும் போர்வழிகளை என்றைக்குமே ஏற்றுக் கொள்ளாமல், அவர்தம் எத்து வேலைகளை அகிலமறிய எடுத்துரைத்து வரும் அறிவியக்கவாதிகள் பாராட்டுகிற வகையில், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி காஞ்சி ஜெயேந்திரரை ஒரு கொலை வழக்கில் கைது செய்த போது, "சட்டத்தின் முன்னால் சகலரும் சமம்" என்றும், "சாமான்யனுக்கு ஒரு நீதி, சங்கராச்சாரியாருக்கு ஒரு நீதி என்று எனது சர்க்கார் பேதம் பார்க்காது" என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தபோது இரட்டை மகிழ்ச்சி நமக்கு!

சங்கராச்சாரியார் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறார் - அதுவும் கொலைக் குற்றம் சாட்டப்பெற்று! நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்து நாடு காத்துக் கொண்டிருக்கிறது!

"சட்டத்தின்முன் எல்லோரும் சமம்" என்ற உறுதிப்பாடு,சங்கராச்சாரியார் விஷயத்தில் செயல்படும் என்று கூறியதற்காக நாம் ஜெயலலிதாவைப் பாராட்டுகிற அதே நேரத்தில் - அவர், கடந்த காலத்தில் அந்த உறுதிப்பாட்டுடன் நீதியையோ - சட்டத்தையோ மதித்து நடந்திருக்கிறாரா என்பதையும் எண்ணிப் பார்த்திட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எடுத்துக்காட்டாகச் சிலவற்றை மட்டும் சீர்தூக்கிப் பார்ப்போம்.

அரசுக்குச் சொந்தமான 'டான்சி' நிலத்தை முதலமைச்சராகத் திகழ்ந்த ஜெயலலிதா வாங்கியதும் - வாங்கியதில் ஏற்பட்ட குழப்பங்களும் - வழக்காக உருவெடுத்து, இறுதியாக உச்ச நீதி

மன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பு என்ன? உச்ச நீதி மன்ற நீதிபதி எழுதிய அந்தத் தீர்ப்பு வாசகங்கள், ஜெயலலிதா குற்றமற்றவர் என்று தீர்க்கமாகக் கூறுவதற்கு மாறாக - அவர் செய்த குற்றங்களைச் சுட்டிக்காட்டி விட்டுத்தான் அவரை விடுதலை செய்திருக்கிறது என்பதை, எவராயினும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

"அரசின் நடத்தை விதிகளுக்குச் சட்ட அங்கீகாரம் இல்லாத போதிலும், முதல்வர் போன்று உயர் பதவியில் இருப்போர், அந்த விதிகளை மதித்து நடக்க வேண்டியது அவசியம். சாதாரண அரசு ஊழியர் ஒருவர், எப்படி அரசு சொத்துகளை வாங்க முடியாதோ, அதே போல, முதல்வர் பதவியில் இருக்கும் ஒருவரும் அரசு நிறுவனத்தின் சொத்துகளை வாங்க முயற்சிப்பது தவறு. சட்டம் என்பது சாதாரண அரசு ஊழியருக்கும், உயர் பதவியில் இருப்பவருக்கும் ஒன்றுதான். எனவே, நடத்தை விதிகள் தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும், நடத்தை விதிகளின்படி, அமைச்சர்கள் அரசு சொத்துக்களை வாங்கக் கூடாது என்று உள்ள போதிலும், தான் வாங்கியது தவறு இல்லை என்ற வாதத்தை ஏற்க முடியாது. எனவே, தனது தவறுக்கு வருந்தி, வாங்கிய நிலத்தை டான்சி நிறுவனத்துக்கே திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

முதல் குற்றவாளியான ஜெயலலிதா, தான் இந்த வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, டான்சி நிலப் பத்திரத்திலே உள்ள, அவருடைய ஆடிட்டரும், அரசு அதிகாரிகளும் ஏற்றுக் கொண்ட அவருடைய கையெழுத்தையே இல்லை என்று மறுக்கக்கூடிய அளவிற்குச் சென்றிருக்கிறார்.

நிபந்தனையில்லாமல் சொத்துகளைத் திரும்ப ஒப்படைப்பதோடு, நாங்கள் என்ன கூறியிருக்கிறோம் என்பதன் அடிப்படையில், அவர் தன்னுடைய மனச்சாட்சிக்கே பதிலளிக்க முன் வர வேண்டும்."

இத்தகைய கருத்துகள் பதிவு செய்யப்பட்ட நிலையிலேதான் அவர் உச்ச நீதிமன்றத்தில் விடுதலையாகிறார். தன்மீது அந்த மன்றம் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப் பிறகும், அவர் பதவியில்

தொடர்ந்தது "விடுதலை" என்ற அறிவிப்பால் மட்டுந்தானே தவிர, தார்மீக நெறியின்பாற்பட்டு அல்ல என்பதை அவரது மனச்சாட்சியே சொல்லும்.

சட்டம், நீதி ஆகியவற்றை ஜெயலலிதா அரசு எப்படி மதித்தது என்பதற்கு, தர்மபுரியில் மூன்று கல்லூரி மாணவிகள் அ.தி.மு.க.வினரால் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கை எப்படித் திசை திருப்பி ஆளுங் கட்சியினரை விடுவிக்க முனைந்தனர் என்பதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். அதுகுறித்து, 20-9-2003 அன்று உயர்நீதி மன்ற நீதிபதி கனகராஜ் அளித்த தீர்ப்பில் முக்கிய பகுதி வருமாறு :-

> "வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவ் வழக்கை அனாதைக் குழந்தையைப் போல போலீஸ் அதிகாரிகள் நடத்தியுள்ளனர். போலீஸ் மீதான நம்பிக்கை, நன்மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்துள்ளனர். இந்த இமாலயத் தவறுக்காக உள்துறைச் செயலாளர் மற்றும் சி.பி. சி.ஐ.டி. கூடுதல் எஸ்.பி. ஆகியோரை இந்த நீதிமன்றம் கண்டிக்கின்றது. அரசு தரப்பு சாட்சியங்களைக் கலைப்பதற்கு அனுமதி அளித்த குற்றத்துக்காக, சி.பி. சி.ஐ.டி., கூடுதல் எஸ்.பி. மீது, அதன் ஐ.ஜி. ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தின் வலிமையையும், கம்பீரத்தையும் நிலை நாட்டவும், இவ்வழக்கில் நியாயமான, சுதந்திரமான விசாரணை நடைபெறவும், இவ்வழக்கு தர்மபுரி மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் இருந்து சேலம் மாவட்டக் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறது.
>
> தவறான சாட்சியம் அளித்தது, பொய்யான அறிக்கையில் கையெழுத்திட்டது, வழக்கில் சம்பந்தப்பட்ட ஆதாரங்களை அழிக்கக் காரணமாக இருந்தது, குற்றவாளிகள் சட்டப் பூர்வ நடவடிக்கையில் இருந்து தப்பிக்கக் காரணமாக இருந்தது போன்ற குற்றங் களுக்காக, விருப்பாட்சிபுரம் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு அலுவலர்கள் மீதான நம்பிக்கையைக் குலைக்கும் வகையில்

அவர்கள் நடந்து கொண்டது, கீழ்த் தரமானது, வெட்கப் படக்கூடியது.”

உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜ் அவர்கள், கூறியுள்ள இந்தக் குற்றச்சாட்டுகள் சாதாரணமானவைகளா? சட்டம் எப்படியெல்லாம் வளைக்கப்பட்டுள்ளது என்பதைச் சான்றுகளுடன் காட்டியவை கள் அல்லவா? சமநீதி வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிக் கொடுத்த சாட்டையடிகள் அல்லவா? இந்த அளவிற்கு உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்து நீதிமன்றத்தையே மாற்றிய போதிலும், சேலம் நீதி மன்றத்திலும் கடந்த ஓராண்டு காலமாக இந்த வழக்கில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று சிலநாட்களுக்கு முன்பு செய்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. உயர்நீதிமன்ற உத்தரவிற்கிணங்க, இந்த வழக்கை நடத்த அரசுத் தரப்பு வழக்கறிஞரே கூட இன்னும் நியமிக்கப்படவில்லை.

இதோ! விழுப்புரத்தில் ஒரு நகராட்சி மன்றம் தி.மு.க. தலைவரைப் பெற்றிருக்கிறது என்பதற்காக, குழப்பம் விளைவித்து - அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆணையரைக் கொண்டு நகராட்சி கூட்ட அலுவலகத்தையே இரண்டு ஆண்டுகளாகப் பூட்டிவிட்டு, ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்திருப்பதை - நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரித்தறிந்து எத்தகைய கருத்துகள் வழங்கப்பட்டுள்ளன?

“மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நகர்மன்றக் கூட்ட அரங்கைப் பூட்டி சீல் வைத்தது சட்ட விரோதம் ஆகும். அரசுக்குப் பரந்த அதி காரம் இருந்தாலும், தனது எல்லைக்குள் செயல்பட வேண்டும். எல்லை மீறிச் செயல்படக் கூடாது. அரசு எந்தக் கொள்கை முடிவு வேண்டுமானாலும் எடுக்கலாம், அதில் கோர்ட்டு குறுக்கிடாது. ஆனால், அதில் எல்லை மீறிச் செயல்பட்டு இருந்தால் அதில் தலையிட நீதித்துறை தயங்காது. முதலமைச்சர், பிரதமர் யாராக இருந்தாலும், சட்டத்திற்கு உட்பட்டு எல்லையை மீறாமல் செயல்பட்டால் கோர்ட்டு சட்டத் தைக் காப்பாற்றத் தன் கடமையைச் செய்யும். மக்கள் மன்றத்தைப் பூட்டி சீல் வைக்க, ஆணையருக்கு என்ன அதிகாரம் உள்ளது? எப்படி இரண்டரை ஆண்டு காலம் அந்த நகர்மன்றக் கூட்ட அரங்கை பூட்டி சீல்

வைக்கப்பட்ட நிலையில் இருக்கலாம்? உடனடியாக அந்த சீல் அகற்றப்பட வேண்டும். நகர் மன்றக் கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால், ஆணையர் மீது கோர்ட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது வரும். ஆணையர் உத்தரவை உடனே வாபஸ் பெற வேண்டும். அவர் வாபஸ் பெறா விட்டால், நாங்கள் உத்தரவு பிறப்பிக்க நேரிடும். இதை எச்சரிக்கையாக விடுக்கிறேன். தமிழகத்தில் தலைமைச் செயலாளர் யார்? லட்சுமி பிரானேஷ்தானோ? முதல்வருக்கு நல்ல ஆலோசனை வழங்கவேண்டும் என்று தலைமைச் செயலாளரிடம் கூறுங்கள். கூட்டத்தில் கூச்சல், குழப்பம் இருந்தால் அதை சட்டப்படி அடக்க வேண்டுமே தவிர, மன்றத்தைப் பூட்டி வைக்கக் கூடாது, அது சட்ட விரோதமானது".

இவ்வாறு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே கருத்து தெரிவித்துள்ளார்.

உடன்பிறப்பே, அது மட்டுமல்ல! பத்தாயிரம் சாலைப் பணியாளர்களை மீண்டும் பணியிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, மனிதாபிமானமற்ற முறையிலே உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்து கொண்ட அரசு அல்லவா இது? இது சட்டம், நீதி இவற்றையெல்லாம் மனித நேயத்தோடு சரி சமமாக மதிக்கிறது என்று நாம் நம்ப வேண்டுமா?

"ஊருக்குத்தான் உபதேசம், உனக்கும் எனக்கும் அல்ல" என்பது போல, பல பிரச்சினைகளில் இந்த அரசு சமநிலையில் செயல் படவில்லை என்பது கடந்த கால வரலாறு என்றாலும், காஞ்சி சங்கர மட விவகாரத்திலாவது சொல்லுக்கும், செயலுக்கும் வேறுபாடில்லாது நடந்து கொள்ள வேண்டுமென்று நம் போன்றோர் விரும்புவது இயற்கையேயாகும்.

அன்புள்ள,

மு.க.

18-12-2004

3116. 'மனிதம்' ஆற்றிட வேண்டிய மகத்தான பணி!

உடன்பிறப்பே,

வதந்திகளால் உயிர் துறந்து, உன் போன்றார் வாஞ்சைமிகு வாழ்த்துக்களால் பிழைத்தெழுந்துள்ள உன் அண்ணன், திராவிடர்தம் மரபு வழித் திருநாளாம் இப்பொங்கல் நாளில் பொங்கிடும் விழி நீரை விரல்களால் வழித்தெறிந்தவாறு, இந்த மங்கல வாழ்த்து மடலை எழுதுகின்றேன். எண்ணற்றத் தமிழர் இல்லங்களில் - நம் இனத்தார் மட்டுமன்றி, பொதுவில் மனித இனத்தாரின் மூச்சு பொட்டென நிறுத்தப்பட்டு விட்டது, 'சுனாமி'யெனும் சுருக்குக் கயிறால் என்பது, கடந்த டிசம்பர் 26ந்தேதியின் அவலச் செய்தியாக வெடித்தபோது, 'அப்பல்லோ' மருத்துவமனைக்கு நானும் தூக்கிச் செல்லப்படுகிறேன்! உடலில் தாக்கிய வலி, வேதனை, திடீர் நோயை விட, என் உள்ளத்தில் தாக்கி உணர்விழக்கச் செய்த 'சுனாமி' விளைவு படைத்திட்ட விபரீதம்! கடல் அலைகளின் மீதெல்லாம் உயிரற்ற உடல்கள் - கட்டிடங்களின் இடிபாடுகள் - கப்பல்கள் கவிழ்ந்ததென்ன! ஓடங்கள் மிதந்ததென்ன! தோணிகள் தொலைந்ததென்ன! தொகை தொகையாய் மனித உயிர்களை அலை அலையாய் வந்து இயற்கை விழுங்கிய கொடுமைதான் என்னே! என்னே!!

மகிழ்ச்சிகரமான பொங்கல் திருநாளில் -
திராவிடப் பண்பாடு போற்றும் இந்த
மங்கலத் திருநாளில் -
மங்கையர், மழலையர் மட்டுமன்றி,
மாடுகளும், ஆடுகளும்
மாலை சூடிக் கூத்தாடும் இனிய நாளில்!

"நடந்தவைகள், நடந்தவைகளாயிருக்கட்டும், இனி நடப்பவைகள், நல்லவைகளாயிருக்கட்டும்" என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு, பணி செய்து கிடக்கும் நம் கடனை

ஆற்றலாமென்று "மகான்"கள் வழியில் மனத்தைத் தேற்றிக் கொள்ளலாமென்றால், அம்"மகான்"களில் பலரும் தங்கள் ஒளிமிகுப் புனித உடைகளைப் பறிகொடுத்துவிட்டு, சராசரி மனிதரிலும் கீழாகச் சாம்பல் மேடுகளில் சயனித்துக் கிடக்கும் காட்சி, அவர்களை இத்தனை காலம் கும்பிட்டுத் தொழுது நமஸ்கரித்துக் கிடந்தவர்களின் நம்பிக்கையை நாசமாக்கிவிட்டதின் அடையாளத் தழும்புகளாகப் புடைத்து நிற்பதை சாட்சியாக்கிக் கொண்டிருக்கிறது!

இன்றைக்கல்ல, என்றைக்குமே நாம் - வாய்மைக்கும், வற்றாத அன்புக்கும், மனச் சாட்சிக்கும், மனிதநேயத்துக்கும் மட்டுமே மதிப்பளித்துக் கடமையாற்றுவோர் என்பதால், அந்த "மனிதம்" ஆற்றிட வேண்டிய மகத்தான பணியாக, இயற்கையின் கூத்துக்கு இரையானோர் போக எஞ்சியிருப்போர்க்குத் துணையிருக்கும் தூயத் தொண்டினை ஆற்றினோம் என்ற மன நிறைவு கொள்ளாமல், தொடர்ந்து அத்தொண்டில் நம்மையும் இடையறாது இணைத்துக் கொள்வோம்.

மத்திய, மாநில அரசுகளில் நல்ல உள்ளம் படைத்த பொறுப்புணர்ந்த அதிகாரிகள், மகத்தான பணியில் ஈடுபட்டனர் எனினும் - அவர்களுக்கு நிகராகப் பல்வேறு அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்களும், செயல்வீரர்களும், தொண்டு நிறுவனத்தினர் பலரும் ஆற்றிய தொண்டுகளுக்குச் சற்றும் தாழ்வின்றி என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளாம் உன் போன்றோர் ஆற்றிய பணிகளும் - இன்னமும் ஆற்றி வரும் பணிகளும் - மருந்தாகப் பயன்பட்டு என் மனத் தெம்பை அதிகரித்தவண்ணமிருக்கின்றன.

பொல்லாச் சுனாமியில் போனவர்கள், திரும்ப வர மாட்டார்கள் - இனியொருமுறை இயற்கையின் விஷமத்திற்கு இம்மியளவு நிலமும், ஓர் உயிரும், இரையாகாமல் தடுப்பதற்கு இந்திய அரசு, ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற செய்திதான் - கசப்பு மிகுந்த இந்தப் பொங்கல் நேரத்தில் நம் இதழ்களில் இனிப்பு தேக்குவதாகும்!

மாநில அரசு, மத்திய அரசுக்குத் தமிழகத்தின் 'சுனாமி' சேதார விபரங்களைத் தந்திருக்கிறது. அது நம் கவனத்திற்கு வருகிறபோது, தலை சுற்றுகிறது.

- 'சுனாமி'யினால் தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் பதின்மூன்று!
- கிராமங்களும், குப்பங்களும் அறவே அழிவுற்றவை - 373.
- சீரழிந்த குடும்பங்கள் - மூன்று இலட்சம் குடும்பங்கள்.
- நாசமுற்ற வீடுகளும், குடிசைகளும் - ஒரு இலட்சத்து 50 ஆயிரம்.
- பயிர்கள் அழிவு - 2,589 ஹெக்டேர்.
- மனித உயிர்கள் அழிவு - 7,885 பேர்.
- கால்நடைகள் இழப்பு - 5,477
- காயம்பட்டோர் - 3,324 பேர்.
- வெளியேற்றப்பட்டோர் - 4 இலட்சத்து, 73 ஆயிரத்து, 962 பேர்.
- திறக்கப்பட்ட நிவாரண முகாம்கள் - 402
- முகாம்களில் இருப்போர் - 3 இலட்சத்து 7 ஆயிரத்து 939 பேர்.
- பாழான கட்டுமரங்கள் - 24 ஆயிரத்து 55.
- வீணான வள்ளங்கள் - 8 ஆயிரத்து 879
- சீரழிந்த இயந்திரப் படகுகள் - 4 ஆயிரம்
- வலைகள் - 1 இலட்சத்து 55 ஆயிரம்.

உடன்பிறப்பே,

உயிரிழந்தோர் உலகை விட்டுப் போய் விட்டனர் - எந்த மன உளைச்சலுமின்றி! உடைமைகளையிழந்து உயிரோடிருப்போர் வாழ்விழந்து போயினரே என அவர்கள் வடிக்கும் கண்ணீரை மிஞ்சுகின்ற வகையில் இந்த வையம் வடிக்கின்றது, கண்ணீர்!

அந்தக் கண்ணீர்த் துளிகள்தான் துயர் துடைக்கும் நிதியாக மத்திய மாநில அரசுகளிடம் குவிகிறது!

தி.மு.க. அறக்கட்டளை பேராசிரியர் அன்பழகன் செல்வம் அறிவாலயம்

நிதி குவிந்தால் மட்டும் போதாது! அத்தனை ஆக்க பூர்வமானப் பணிகளுக்கு உரிய முறையில் ஈடுபடுத்த அரசுகள் முன்வரவேண்டும் - அந்த அரசு, எந்த அரசாக இருப்பினும்; அந்த அரசின் அதிகார வர்க்கத்தின் கால்கள் நொண்டியாகவோ, முடமாகவோ இருத்தல் கூடாது.

குறிப்பிட்ட ஒரு காலத்தை வரையறை செய்து கொண்டு, அதற்குள் இந்தப் பூமியும், கடலும் இணைந்து நடத்திய இயற்கைச் சதியின் கொடுமைக்கு உள்ளானவர்களுக்குப் "புது வாழ்வு" வழங்கி முடித்துவிட்டோம் என்று அறிவிப்பதே இந்தப் பொங்கல் நாளில், உமியளவு பூரிப்பை நம் உதடுகளின் இடுக்கில் உதயமாகச் செய்திடும்.

அந்த நமது எதிர்பார்ப்புடன், ஏழையாகிவிட்ட என்னரும் மீனவச் சகோதரர்கள், எளிய உழவர் பெருமக்கள் - அனைவரையும் நோக்கி, "கவலையற்க! கைவிட மாட்டோம்" என்ற ஆறுதல் மொழியுடன் நம்பிக்கையூட்டி,

கண்ணீர் துடைக்கும் கைகளுடன் இந்தக் கையும் என்றும் இணைந்திருக்குமென உலகமிசை உணர்வெழுப்பி உதித்திடும் உதய சூரியனை வாழ்த்தி, உழைப்போர்க்கு வணக்கம் தெரிவித்து, கவலைக் கருமேகத்துக்கிடையே களிப்பு மழைத் துளியாக உன் அண்ணனின் இந்தப் பொங்கல் வாழ்த்தினைக் கருதிடுக என வேண்டுகின்றேன்.

அன்புள்ள,

மு.க.

14-1-2005

42245

கச 894-8116

கருணா.38

3117. வெல்வோம்! வீழ்த்துவோம் வீணர்களை!

உடன்பிறப்பே,

போர் முனையில் நாடு நிற்க நேரிட்டாலும் - புயல், மழை, வெள்ளம், பூகம்பம், கடற்கோள் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுவோர்க்குப் பரிவு காட்டி, நிவாரண உதவிகள் அளித்திட அணி வகுத்திட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் - அப்போதெல்லாம் நாடாளுகின்ற அரசினர் எக்கட்சியைச் சார்ந்தோர் என்பது குறித்தெல்லாம் ஆராய்ச்சி செய்துதான் ஒத்துழைப்பது அல்லது ஒதுங்கியிருப்பது என்று எண்ணிடாமல் இதயபூர்வமாகப் பாதுகாப்புப் படை வரிசையில் தி.மு. கழகம் தன்னையும் ஒரு வீரனாகப் பதிவு செய்து கொண்டு பணியாற்றுவது என்பது நீண்டகால வரலாறு.

தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் ஆட்சி நடைபெற்றபோது, இயற்கையின் சீற்றத்தால் விளைந்த சீரழிவுகளுக்கு அவர் நிவாரணம் தேடிட பணி மேற்கொண்டபோதும், பெரியவர் பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில், புயல் நிவாரணப் பணி நடைபெற்றபோதும், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியின்போது, வெள்ள நிவாரணத்திற்கான வேலைகள் நடைபெற்றபோதும் - வெளியிலே இருந்து மட்டுமல்ல, சிறையிலே தண்டனைக் கைதிகளாக இருந்த நிலையிலும், அந்தப் பொதுநலத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அரசுடன் ஒத்துழைத்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும், நல்லோர் நடத்திடும் ஏடுகள் அறியும்.

அதே வழியில், துயர இருளில் மூழ்கிக் கிடக்கும் மக்களின் துன்பம் துடைக்கும் பணியில், இப்போதும் தி.மு. கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் தங்களால் இயன்ற அளவுக்கும், அதற்கு மேலும்கூட, தேசிய அளவில் நடத்தப்படும் நிவாரண உதவி களிலும், மாநில அளவில் நடத்தப்படும் நிவாரணப் பணிகளிலும்

தங்களை இணைத்துக் கொண்டு இடையறாது தொண்டாற்றி வருகின்றன.

கண்ணீர் துடைக்கும் பணியில் கட்சிச் சாயம் தேவையில்லை, அறவே கூடாது என்று உறுதி மேற்கொண்டு உழைத்து வரும் கட்சிகளின் வரிசையில் நமது தி.மு. கழகத்திற்கும் முக்கிய இடம் உண்டு என்பதை, மனச்சாட்சியுடையோர் எவராலும் மறுத்திட இயலாது.

தீயை அணைத்திடத் திரண்டனர் மக்கள் அனைவரும் - தெருவே கூடிவிட்டது என்று புதிய வலிவுடன் அந்தப் பொதுத் தொண்டினை ஒரே மனத்தினராய் அனைவரும் ஆற்றிடும்போது, அந்தத் தெரு நாட்டாண்மையாக அமர்த்தப்பட்டவர் மட்டும், எல்லோரும் உதவிக்கு வந்து மக்களின் அன்பையும், ஆதரவையும் எங்கே பங்கு போட்டுக்கொண்டு விடுவார்களோ எனப் பயந்து நடுங்கி - அதைக் கெடுக்கும் கெட்ட நோக்குடன், துணை புரியத் தோள் கொடுப்பவர்களின் இதயம் புண்ணாகுமாறு காழ்ப்புணர்வுடன் கண்டபடி இழிமொழிகளைக் கூறிக் கூத்தாடுவார்களேயானால், கடற்கோளால் சீரழிந்ததைவிட மேலும் அதிகமாகத்தானே பொது நலன் சீரழிய நேரிடும் என்பதை, அந்த நலனில் அக்கறையுடையோர் சிந்தித்துப் பார்த்திட வேண்டியது, இந்த நேரத்தில் இன்றியமையாத ஒன்றல்லவா?

கூடிப் பணியாற்றி, கொடிய பாதிப்புகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுவோம் என அணிவகுத்திடும் போது, குறைகளைக் கண்டு அதனைப் பொறுப்புடையோர் செவிகளுக்கும், விழிகளுக்கும் கொண்டு செல்வது என்பது பெருங்குற்றமல்ல!

ஆளுங்கட்சிக்கு ஆலவட்டம் சுற்றிக் கொண்டேயிருங்கள் என்று எதிர்க்கட்சிகளுக்கு அரசினர் ஆணையிடவும் - அதற்கு அடங்கி நடப்போம் என எதிர்க்கட்சிகள் மண்டியிடவும் - ஒரு நிலை இருக்கவேண்டுமென்றால், அங்கே மக்களாட்சித் தத்துவமும் நிலைக்காது - மக்களும் உரிய நற்பயன்களை உய்த்திட இயலாது!

இயற்கைச் சீற்றத்தால் மக்களுக்கு விளைந்த இழப்புகளை எண்ணி, அவர்களின் மறுவாழ்வுக்கு ஆவன செய்திட அண்மையில் தமிழகத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பாகவும் - அடுத்து அ.தி.மு.க. அரசின் சார்பாகவும் கூட்டப்பெற்றக் கூட்டங்களில் கூட "அரசியல் மாச்சரியங்கள்" தலை

காட்டாமல் இருக்க வேண்டுமென்று உபதேசித்தும் - அப்படித் தலைகாட்டாமல் பார்த்துக் கொண்டும் - தலைகாட்டாததைப் பாராட்டியும் - எழுதிய தலைவர்களை, பேசிய தலைவர்களை நானறிவேன்.

அதற்காக நிவாரணப் பணிகளில் ஏற்படும் குறைகளைச் சுட்டிக் காட்டக்கூடாது என்று தடை விதிப்பது, நிவாரணப் பணிகளில் அக்கறையின்மையைத்தான் காட்டும் என்பதை மறந்து விடாமல் கட்சிகளின் பல தலைவர்கள், அவற்றை அரசுக்குச் சுட்டிக் காட்டிடத் தவறவில்லை.

அதற்கு உதாரணமாக, மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்களிடம், "குங்குமம்" என்ற வார இதழின் நிருபர், ஒரு பேட்டியில் எழுப்பிய வினாவும், அதற்கு அவர் அளித்த விளக்கமும் வருமாறு :-

நிருபர்:- 'சுனாமி' நிவாரணப் பணியில் தமிழக அரசின் செயல்பாடு உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா?

சங்கரய்யா:- இல்லை - அழுகிய உடல்களை சரிவர அப்புறப்படுத்தாததால் கிராமங்கள் முழுதும் துர்நாற்றம் - மலைபோல் ஆங்காங்கே குவிந்து கிடக்கும் படகுகள் அப்புறப்படுத்தப்படாமை - முகாம்களில் இருப்போருக்குச் சரியான கழிப்பிட வசதி இல்லாதது - பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கப்படாமை - என்கிற தமிழக அரசின் மோசமான செயல்பாட்டினால் தொற்று நோய் ஏற்படும் ஆபத்து உள்ளது.

இவ்வாறு மார்க்சிஸ்ட் தலைவர் சொன்னது மட்டுமல்ல! டெல்லி போன்ற பெருநகரங்களிலிருந்து ஒளிபரப்பாகிற "என்.டி.டி.வி" போன்ற தொலைக்காட்சிகளும், யு.என்.ஐ. போன்ற செய்தி நிறுவனங்களும் தமிழ்நாட்டில் "சுனாமி" பாதிப்பு நிவாரணப் பணி, தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் அளவுக்குக்கூட அரசாங்கத்தினால் நடத்தப்படவில்லையென்று நேற்றைய தேதி வரையில் அறிவித்துள்ளதை இங்குள்ள முதலமைச்சர் ஜெயலலிதா அலட்சியப்படுத்தாமல் சிந்தித்துப் பார்த்து செய்வதைச் செம்மைப்படுத்த வேண்டுமே தவிர, எம்.ஜி.ஆர். பிறந்த நாள் என்ற பெயரால், தி.மு.கழகத்தின் மீது

சீறி விழுந்து, "எங்கள் பகை என்றும் மறையாதென்று சங்கே முழங்கு" என முழங்குவதால் அவர் காணும் "அரசியல் ஆதாயம்" எனும் கனவு பலித்துவிடாது!

"சன் டி.வி."யை குடும்ப டி.வி. என்று வர்ணித்து வசைபாடியுள்ளார் - "

பாவம்! குடும்பம் என்பது குறைவான - இழிவான சொல் அல்ல! அதற்கு எதிரான சொல்தான் இழிவுடைய சொல் ஆகும்.

"ஆபத்துக் காலத்தில் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் - அரசியல் மாறுபாடுகளை இத்தகைய நேரங்களில் அணுவளவும் காட்டலாகாது" என அறிவுரை வழங்கும் அன்புடைய தலைவர்களுக்கு - இத்தகைய நேரத்தில் இம்மாநில முதலமைச்சர் விடுத்துள்ள அறிக்கையின், ஆம், எம்.ஜி.ஆர். பிறந்த நாளுக்கான அறிக்கையின் - ஒரு பகுதியை மட்டும் கவனப்படுத்துகிறேன்.

"1987ல் தங்கத் தலைவர் எம்.ஜி.ஆர். மறைந்தார். அரசியல் வல்லூறுகள் அவர் தொடங்கிய இயக்கத்தை அழித்துவிட முயன்றபோது, அவரது அரசியல் வாரிசாக நான் தலைமை ஏற்றேன்....."

உடன்பிறப்பே,

இன்று தமிழ் மக்களை ஏமாற்ற, எம்.ஜி.ஆர். அவர்களைத் தங்கத் தலைவர் என்கிறார். இவரே தான் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலிவுற்று அமெரிக்க மருத்துவ மனையிலிருந்து திரும்பிய பிறகு, அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தன் கைப்பட எழுதிய கடிதத்தில், "என் செல்வாக்கு வளர்வதைக் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார்" என்று குறிப்பிட்டிருந்தார் என்பதையும் மறந்து விட முடியாது.

நேற்றைய அறிக்கை மேலும் நீளுகிறது....

"புயல் வேகத்தில் சென்று மீட்புப் பணிகளைப் பார்வையிட்டேன். உடனடியாக உதவிகள் வழங்கிட ஆணையிட்டேன். சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிற நாடுகளில் மீட்புப் பணியும், புனரமைப்புப் பணியும் தொடங்கப்படுவதற்கு முன்னரேயே, மிக விரைந்து செயல்பட்ட இந்த அரசை காழ்ப்புணர்ச்சியால் விமர்சித்த குடும்பத்

தொலைக்காட்சியின் கோயபல்ஸ் பிரச்சாரத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், புனரமைப்புப் பணிகளை மின்னல் வேகத்தில் நிறைவேற்ற ஆணையிட்டேன்"

ஜெயலலிதாவின் இந்த அறிக்கையில் காணப்படும் "குடும்பத் தொலைக்காட்சி" என்பது ஒருவேளை, அவர் குடும்பத்தினர் நடத்துகின்ற தொலைக்காட்சியாக இருக்குமா? அல்லது "குடும்பம்" என்ற பெயரை, உண்மையான குடும்பஸ்தர்களுக்கு வழங்கிவிட்டு, தனது தொலைக்காட்சியுடன் குடும்பம் என்ற சொல் இணையாது என்று மறைமுகமாக வெளிப்படுத்துகிறாரோ, என்னவோ!

எல்லாக் கட்சிகளும் ஓரணியில் நின்று, பொல்லாத சுனாமியின் தாக்குதலுக்கு ஆளானவர்களைத் தாங்கிப் பிடிக்கும் இந்தச் சோதனையான நேரத்தில் - குறைகளைச் சுட்டிக்காட்டி நிறைவாக நிவாரணப் பணி நடைபெறவேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது, திடீரென தி.மு. கழகத்தின்மீது தீப்பந்தம் கொண்டு அறிக்கை யொன்று தீட்டுவானேன்! அப்படியென்ன நம்மீது அவருக்கு ஆத்திரம்? பா.ஜ.க. போன்ற கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு தமிழக அரசைக் கலைக்க வேண்டுமென்று சொன்னோமா? சொல்வோமா? அல்லது சொல்லக் கூடியவர்களா?

நள்ளிரவில் எந்த ஆதாரமுமின்றி என்னைக் கைது செய்து நையப் புடைத்து - தம்பி பாலுவை பதைக்கப் பதைக்கத் தாக்கி - தம்பி மாறனுக்கு மரண காய வடுவைப் பதித்து அவர் மல்லாந்து வீழுமளவுக்குத் தூக்கி எறிந்து, கொடுமை புரிந்து - நாச நர்த்தனம் ஆடினார்களே! அப்போதுகூட சிறை மீண்ட என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "மாநில அரசைக் கலைத்தல் ஆகாது" என்றுதானே சொன்னேன். ஆனால் பெருந்தன்மை தனக்கில்லை! அது 'ஒரு வழிப் பாதை' மட்டுமே என உரைத்திடுவதுபோல - உறைவிட்டெழுந்த வாள், எழுந்தது, எழுந்தது தான் - மீண்டும் உறை புகாது, 'பெரியவாள்', 'சின்னவாள்' பிரச்சினைகளையும் தாண்டி, கடற்கோளால் கண்ணீரில் மிதக்கும் கதியற்ற மக்களின் புனர் வாழ்வு பற்றிய சிந்தனையையும் தாண்டி, திராவிடர் தம் வாழ்வில் ஒளியேற்றும் அகல் விளக்காம் அண்ணாவின் தி.மு.கழகத்தை வீழ்த்திடவே

தமது வாள் பயன்படுத்தப்படும் என்று உரைப்பரேல், நாமும் உறுதி ஏற்போம்!

கடமை

கண்ணியம்

கட்டுப்பாடு

எனும் கணைகள் எம்மிடம் இருப்பவை! வெறும் காட்சிப் பொருள்கள் அல்ல, அய்யா பெரியாரும், அறிஞர் பெருந்தகை அண்ணாவும் வழங்கிய கொள்கை உறுதியைக் கேடயமாய்க் கொண்டு இயக்கமெனும் அரண் காத்திடும் வண்ணம் இலட்சியப் போர்க்களத்தில் நேர்கொண்ட பார்வையுடன் போர் புரியத் தயாராயிருப்போம். வெல்வோம்! வீழ்த்துவோம்; வீணர்களை!

அன்புள்ள,

மு.க.

18-1-2005

3118. பத்துக் கைகள் மாறிய பனிக்கட்டி ஆகாமல்...

உடன்பிறப்பே,

2004ஆம் ஆண்டு மே திங்களில், நமது திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மத்தியிலே அமைந்த பிறகு, அந்தக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் ஆக்கபூர்வப் பரிந்துரைகளைப் பரிசீலித்து, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் முயற்சியினால் பல்வேறு நன்மைகள் நாட்டு மக்களுக்கு செய்யப்பட்டு வருகின்றன. அதிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில், சென்வாட் வரி ரத்து, சேது சமுத்திரத் திட்டம், கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம், தமிழ் மொழிக்குச் செம்மொழி தகுதி போன்றவை முக்கியமானவைகளாகும்.

இந்த நிலையில், 26-12-2004 அன்று காலையில், இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் தோன்றிய கடற்கோளின் தொடர்ச்சியாகத் தமிழகம் உட்பட உலகின் பல பகுதிகளைத் தாக்கி, சுமார் ஒன்றரை இலட்சம் பேரை விழுங்கிய "சுனாமி" இந்தியாவில் மட்டும் 10,749 பேரையும், அதில் தமிழகத்தில் மட்டும் 7,983 பேரையும் பலிகொண்டது. இது தவிர, ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனவர்கள் பட்டியலிலே இடம் பெற்றனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் வீடு வாசல் இழந்த நிலையில் அகதிகளாக்கப்பட்டனர்.

இந்த அசம்பாவிதம் ஏற்பட்ட நேரத்தில், சென்னை அப்பல்லோ மருத்துவமனையிலே இருந்த நான் உடனடியாக நிவாரணப் பணிகளிலே ஈடுபட வேண்டுமென்று கழக உடன்பிறப்புகளை கேட்டுக் கொண்ட தோடு, தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்க வேண்டுமென்று பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தேன். மருத்துவமனையில் என் உடல் நலம் கேட்க வந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி

சோனியா காந்தி அவர்களிடம், தி.மு.கழக அறக்கட்டளையின் சார்பில், ஒரு கோடி ரூபாய் நிதியினை அளித்தேன். பின்னர், என்னைக் காண என் இல்லம் வந்த பிரதமர் அவர்களிடம், கழகத்தின் சார்பில் வசூலிக்கப்பட்ட நிதி இருபது லட்சத்தினை வழங்கினேன். அதன் பின்னர் நான் அண்மையில் திரைக்கதை, வசனம் எழுதிய இரண்டு திரைப்படங்களுக்கான ஊதியம் 21 இலட்சம் ரூபாயை தமிழக முதல் அமைச்சரிடம் மு.க.ஸ்டாலின் மூலம் அளிக்கச் செய்தேன். மேலும், தமிழகத்திலே உள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, மத்திய - மாநில அரசுகளுக்கு நிவாரணப் பணிகளை விரைந்து நிறைவேற்றிட வேண்டுமென்றும், அந்தப் பணிகளை மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும், ஏன் அந்தந்த ஊர் அளவிலும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், அந்தந்த ஊர்களிலே உள்ள உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும், தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட குழுக்களை அமைத்து, அவர்கள் மூலமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்.

அதற்குப் பிறகு, தமிழக அரசின் சார்பில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்ட கட்சிகளின் தலைவர்கள், அத்தகைய குழுக்களை உடனடியாக நியமித்து அவர்கள் மூலமாகத்தான் நிவாரணப் பணிகள் நடைபெற வேண்டுமென்றும், இல்லாவிட்டால் இதிலே முறை கேடுகள் நடைபெறுமென்றும் எச்சரித்துப் பேசியும்கூட, இதுவரை அத்தகைய குழுக்களை அமைத்திட தமிழக அரசு முன்வரவில்லை.

இதற்கிடையே மத்திய அரசின் சார்பில், கடந்த 4ந்தேதி அனுப்பப்பட்ட மத்திய குழுவினர், பாதிக்கப்பட்ட பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்துச் செய்துள்ள பரிந்துரை அடிப்படையில், மத்திய அமைச்சரவை கூடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக முதற்கட்டமாக 2,731 கோடி ரூபாய் நிதியளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் தொகையில் தமிழகத்திற்கு மட்டும் 1,612 கோடி ரூபாய் ஒதுக்கியிருக் கின்றார்கள். இந்தத் தொகை, நிவாரணம், தற்காலிக மறுவாழ்வு, மீன் பிடி துறைமுகங்களைப் பழுது பார்த்தல் ஆகிய பணிகளுக்காக மட்டும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, சேதமடைந்த வீடுகளைக் கட்டித் தருவதற்குத் தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பெரிதும் பாதிக்கப்பட்ட மீனவர்களின் புனர்வாழ்வுக்காக மட்டும், 1,117 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. அதில் 454 கோடி ரூபாய் மானியமாகவும், 639 கோடி ரூபாய் கடனாகவும் கொடுக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

கட்டு மரம் மற்றும் வலைகளை இழந்த மீனவர்களுக்கு அரசின் சார்பில், 32 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். மேலும், 73 ஆயிரம் ரூபாய் வங்கிகள் மூலமாகக் கடனாகத் தரப்படும். அதற்கு ஒன்றரை ஆண்டு காலத்திற்கு வட்டி வசூலிக்கப்பட மாட்டாது. 7 சதவிகித வட்டி மட்டுமே கடன் தொகைக்கு செலுத்த வேண்டும். இந்தக் கடனை ஏழு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தினால் போதுமானது. பிளாஸ்டிக் படகு வைத்திருந்து அதனை இழந்தவர்களுக்கு, ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இதில் 35 சதவிகிதத் தொகை மானியமாகவும், 65 சதவிகிதத் தொகை வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.

இயந்திரப் படகை இழந்தவர்களுக்கு, ஐந்து இலட்சம் ரூபாய் மானியமாக தரப்படும். மீதத் தொகையான 15 இலட்சம் வங்கிக் கடன் மூலம் பெறலாம். இயந்திரப் படகு வைத்திருந்து அது பழுதுபட்டிருக்குமேயானால், அதனைச் சரி செய்ய அதிகபட்சம் 3 இலட்சம் ரூபாய் வரை மானிய உதவி கொடுக்கப்படும்.

ஏற்பட்ட "சுனாமி" காரணமாக, ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 500 வீடுகள் சேதமடைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக மத்திய அரசு, 752 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்தத் தொகை முழுவதுமே மத்திய அரசின் மானியத் தொகையாகக் கருதப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில், இவ்வளவு விரைவில் முடிவெடுத்து, இந்த அளவிற்கு பெருந்தொகையினை ஒதுக்கியிருப்பதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில், ஒதுக்கப்பட்ட நிதி முறையாக, ஒழுங்காகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேர்ந்திட வேண்டுமே என்ற எண்ணமும் நமக்கு ஏற்படுகின்றது.

வெளி மாநிலங்களிலிருந்து வழங்கப்படும் நிவாரணப் பொருட்களையே முறையாக விநியோகம் செய்யாமல், அதிலே

பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதாக அன்றாடம் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. இன்று கூட பஞ்சாப் மாநிலத்திலிருந்து, நிவாரணத்திற்காக வந்த உருளைக் கிழங்கு, வெங்காயம் போன்றவைகளைச் சரியாகப் பாதுகாத்து விநியோகிக்காத காரணத்தால், அவைகள் புழுக்களாக மாறி விட்டன என்று புகைப்படத்துடன் செய்தி வந்துள்ளது.

அதுபோலவே, அளிக்கப்படும் நிவாரண நிதித் தொகையை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிட்டு தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பதும், மற்றவர்களைப் புறக்கணிப்பதுமான நிலை இருப்பதாகக்கூறி, பாதிக்கப்பட்டவர்கள் ஆங்காங்கு மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபடுவதாகச் செய்திகளும் வரத் தவறவில்லை.

இப்படிப்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படக்கூடும் என்பதற்காகத்தான், அனைத்துக் கட்சிகள் சார்பில் தமிழக அரசிடம் முறையாகக் குழுக்களை அமைத்து, நிவாரணப் பணிகளை ஆற்றிட வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இந்த அரசும், முதல் அமைச்சரும் அந்தக் கோரிக்கை குறித்துக் கேளாக்காதினராக இருந்து விட்டனர். எனவே, மத்திய அரசின் சார்பில் பெருந் தொகை ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிலையிலாவது உடனடியாக குழுக்களை அமைத்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கம்போல் இந்த நமது கோரிக்கை, தமிழக அரசினால் அலட்சியப்படுத்தப்படுமேயானால், ஆங்காங்கு நமது கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள், முன்னணியினர், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்களாகவே முன் வந்து இந்த நிவாரணப் பணிகளில் நேர்மையும், நெறி பிறழாத் தன்மையும் துளியும் கெடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையேல், பத்துப் பேர் கைக்கு மாறிய பனிக்கட்டிக் கதையாக சுனாமி நிவாரண நிதி பயனற்றுப் போய்விடும்.

அன்புள்ள,

மு.க.

21-1-2005

3119. திண்டுக்கல் - தி.மு.க.
இலட்சிய வைரக்கல்!

உடன்பிறப்பே,

டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி என மூன்று மாதங்கள் - உன்னைக் காண வெளியூர்களுக்கு வராமலும், சென்னைக்கு வரும் உன்னைச் சந்தித்து அளவளாவிட இயலாமலும் - உடல் நலிவும், அதையொட்டி ஓய்வு எடுக்க வேண்டிய கட்டாயமும் எனக்கு ஏற்பட்டு, அதன் காரணமாக நான் அடைந்த கவலையை நீ அறிந்திருக்கமாட்டாய். அதற்குள் எத்தனை வகையான செய்திகள் உன்னையும், உன் குடும்பத்தாரையும் கவலையில் ஆழ்த்தி, கண் கலங்கச் செய்தன என்பதை நான் நன்கறிவேன். ஏன் இப்படியொரு பற்று, பாசம் நம் தலைவன் மீது கொண்டுள்ளோம் என்று உன் போன்ற உடன்பிறப்புகளும், உடன்பிறப்புகள் மீது உயிரையே வைத்திருக்கிறோமே, இந்த உறவுக்கு இவ்வளவு மகிமையும், மகத்துவமும் ஏற்பட என்னதான் காரணம் என்று நானும் அறிந்திடத் துடிப்பது, உடன்பிறப்புகளாகிய நம் உள்ளங்களுக்கிடையே தொடர்ந்து எழுந்து கொண்டிருக்கும் கேள்விகள் அல்லவா?

அவற்றைக் கேள்வி என்று கூறுவதைவிட, நம் உயிர்த் துடிப்பு என்று கூறுவதுதானே பொருத்தமாகும்.

எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து கொண்டு பெரியவர் பக்தவத்சலனார் ஆட்சியிலே மன்றத்திலேயே வள்ளுவர் படத்தை திறக்கக் கோரிக்கை வைத்து, அது செயல்படுத்தப்பட்டு - கழக ஆட்சியில் போக்குவரத்துத் துறையிலும், பொதுப்பணித் துறையிலும், தொடர்ந்து எல்லாத் துறைகளிலும் வள்ளுவருக்குத் தனிச் சிறப்பு வழங்கி வள்ளுவரின் உருவப்படம் லட்சக்கணக்கில் அச்சியற்றி, அரசாங்க அலுவலகங்களில், சுற்றுலா விடுதிகளில் அப்படங்களை இடம் பெறச் செய்து, வள்ளுவர் சிலைகளை அமைத்து, வள்ளுவர் கோட்டமே எழுப்பி, வள்ளுவருக்கு வானுயர

சிலையும், குமரி முனையில் நிறுவி - குறளுக்கு ஓவியமாகக் குறளோவியம் தீட்டி, 1330 குறட்பாக்களுக்கும் உரை எழுதி வெளியிட்டு, இப்போது தம்பி வைகோவின் வலியுறுத்தலை வாழ்த்தி வரவேற்று, நாள்தோறும் முரசொலியில், 'வான்புகழ் கொண்ட வள்ளுவம்' எனும் தலைப்பில் குறளாரின் வைரக் கருத்துகளின் சிறப்பினைத் தொடர்ந்து எழுதி வரும் நிலையில், இன்றைக்கு நான் எழுத வேண்டியது 77வது அதிகாரம் "படைமாட்சி" என்ற அதிகாரமாகும். படை மாட்சியைத்தான் அடுத்த வாரம் திண்டுக்கல் மண்டல தி.மு.க. மாநாட்டில் காண இருக்கிறோமே என்ற களிப்போடு, அந்தக் காட்சி காணவும், அந்த மாட்சியை உருவாக்கவும் "வருக" என்று வாஞ்சையுடன் உனக்கு இந்த அழைப்புக் கடிதம் அனுப்புகிறேன்.

திண்டுக்கல் மாநாடு எந்தச் சூழ்நிலையில் நடைபெறுகிறது என்று புரிகிறதா?

இதற்கு முன், சேலம் மாநாடு - செயல்புரிவதில் சிங்கமெனச் சிறப்பு பெற்ற தம்பி வீரபாண்டி ஆறுமுகம் முன் நின்று நடத்திய சேலம் மாநாடு - இதற்கடுத்து, தஞ்சையில் நடைபெறுகிற மாநாட்டை முன் நின்று நடத்த இருப்பவர் தஞ்சைத் தங்கமெனத் தகுதி பெற்ற தம்பி கோ.சி. மணி! இந்த இரு பெரும் வீரர்கள் முன் நின்று நடத்திய சேலம் மாநாட்டுக்கும் - நடத்த இருக்கிற தஞ்சை மாநாட்டுக்குமிடையே தம்பி ஐ. பெரியசாமி முன் நின்று நடத்த இருக்கிறார், திண்டுக்கல் மாநாட்டை!

இப்போதே மாநாட்டுப் பணிகளைப் போய்ப் பார்த்து வருகிற நமது கழகத்தின் முன்னணித் தளகர்த்தர்கள்! "அடடா, திண்டுக்கல் மாநாட்டு சிறப்பு - மிக அற்புதம் - அருமை - அரிய பணி - அழகுப் பணி - அயராப் பணி" என ஆச்சரியத்துடன் அகல விழிகளைத் திறக்கின்றனர்.

மார்ச் 12, 13 நாட்களில்தான் அங்கேயே சென்று பார்த்து மகிழப் போகிறோமே - அதற்குள் உன் ஆவலை அதிகமாகத் தூண்டிடவும் - என் ஆவலை, மேலும் பெருக்கிக் கொள்ளவும் நான் விரும்ப வில்லை.

நமது மாநாடுகள் நடைபெறும் பகுதிகள் அண்ணா நகர் ஆகிவிடுவதுண்டு - அதற்கு திண்டுக்கல் மாநாட்டு மைதானமும்

விதிவிலக்கல்ல! ஆம்! அந்த அண்ணா நகரில் அகல நீளம் என்பது இதுவரை நடந்த மாநாடுகளுக்கு மேலாகவே அமைந்து அந்த நகரில் பட்டிவீரன்பட்டியின் பகுத்தறிவுச் சீயம் - பழைய சுயமரியாதைத் தோன்றல் - மீனாட்சி சுந்தரம் பெயரால் பந்தல் - தென் மாவட்டங்களுக்குச் செல்லும் போதெல்லாம் தேன் மணக்கப் பேசி வரவேற்று மகிழும் திராவிடத் தமிழ்க் கிழவி சிங்காரத்தம்மாள் பெயரால் மாநாட்டு அரங்கம் - தீரன் திராவிடக் காளையென திக்கெட்டும் புகழ் நாட்டிய திண்டுக்கல் விக்கிரமாதித்தராசன் பெயரால் முகப்பு - சின்னாளப்பட்டி சீர்திருத்தச் செம்மல் நாச்சியப்பன் பெயரால் மேடை - இறுதி மூச்சும் இயக்க நலனுக்கே என வாழ்ந்து மறைந்த அரிமா அதியமான் பெயரால் நுழைவு வாயில் - மதுரை மாவீரர்களில் ஒருவராம் மங்காப் புகழ் மதுரை தாவூத் பெயரால் கொடி மேடை - மற்றும் இரத்தத் துளிகளாலும், வியர்வைத் துளிகளாலும் இயக்கம் வளர்த்த புலிப் போத்துகள் நினைவு போற்றும் தோரண வாயில்கள் கொண்ட திண்டுக்கல் மாநாட்டுக்குத் தலைமை ஏற்பவர் சுயமரியாதைச் சுடரும், சோதனைகளை வென்றவரும் - சோர்வறியா தொண்டுள்ளம் கொண்டவருமான தம்பி கோ.சி. மணி, - மாநாட்டுத் திறப்பாளர் தம்பி இரகுமான்கான் - சுனாமிப் பேரலைகள் கொண்டு இந்த இயக்கத்தை வீழ்த்த நினைப்போரையும் எதிர்கொள்ளும் வீரர்களில் ஒருவர், - கழகக் கொடியேற்று விழா நடத்தி வைக்க இருப்பவர் - பெண்ணைப் பெருமைப்படுத்தும் இந்த இயக்கத்தைக் கண்ணைப் போலக் காத்திட அழைப்பு விடுத்திடும் வண்ணை தேவகி.

உடன்பிறப்பே, இந்த மாநாட்டில் இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சியில் நமது இதயம் நிறைந்த தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள், கருத்துரை வழங்குகிறார்கள். இது கண்டு கயவர்கள் கலங்குவார்கள்.

மாநாட்டின் முதல் நாள் இரவு, நடிகர் தம்பி வாகை சந்திரசேகர், "பேனா ஒரு போர் வாள்" எனும் நாடகத்தை வழங்கி, நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்த இருக்கிறார். அந்த நாடக ஒத்திகையை நானும், பேராசிரியரும், கழக முன்னணியினரும் பார்த்த போது, நாடகக் காட்சிகள் பலவற்றில் நானே நேரில் தோன்றுவது போலிருந்தது. அவ்வளவு தத்ரூபமாக

தயாரிக்கப்பட்டுள்ள அந்த நாடகத்தை நீ திண்டுக்கல்லில் காணத்தானே போகிறாய்!

கழகக் கலைஞர்கள் தம்பி சரத்குமார், எம்.பி., தம்பி நெப்போலியன் எம்.எல்.ஏ., தம்பி தியாகு, தம்பி குமரிமுத்து ஆகியோர் வழங்கும் இலட்சிய உரைகள் கேட்க இருக்கிறாய்.

இசைமுரசு நாகூர் அனீபாவின் முழக்கத்துடனும், மயிலை தேவன் குழுவினரின் இசை நிகழ்ச்சியுடனும் மாநாடு - தனித்தனி தலைப்புகளில் நமது தமிழ் மறவர்கள் ஒலித்திட இருக்கும் கொள்கை முரசம்.

திண்டுக்கல்; தம்பிகள், ஐ. பெரியசாமி - எல். மூக்கையா, பி. மூர்த்தி ஆகியோரின் உழைப்புக்கும், உரிய முயற்சிக்கும் கிடைக்க இருக்கும் - இலட்சிய வைரக்கல்! வா, வா, வந்து பார், அதன் ஒளியை! பட்டை தீட்டப்பட்ட ஒளி - பகுத்தறிவு ஒளி! நமது கழகப் படையின் களங்கமற்ற ஒளி!

அன்புள்ள,

மு.க.

6-3-2005

3120. உவகை பூத்திட, உற்சாகம் பிறந்திட, ஓடிவருக திண்டுக்கல்!

உடன்பிறப்பே,

இன்னும் இடையில் மூன்று நாட்கள் மட்டுமே இருக்கும் திண்டுக்கல் மாநாட்டுக்கான பணிகளில், நமது திராவிடத் தீரர்கள் இடைவிடாது ஓய்வின்றி ஈடுபட்டிருக்கும் காட்சி என் மனக்கண்ணுக்குத் தெரிகிறது.

அதோ! ஐ. பெரியசாமி - மாவட்டக் கழகத்தின் செயலாளர் - முன்னாள் அமைச்சர் - அவர் வகித்திருந்த அந்தப் பதவியைவிட இன்று ஒரு மண்டல மாநாட்டுக்கு வரவேற்புக் குழுத் தலைவராக இருக்கிறாரே! அந்த வாய்ப்பைத்தான் அவர் "வரப் பிரசாத"மாகக் கருதக் கூடியவர்.

"என்ன பெரியசாமி! எப்படி மாநாட்டு வேலைகள் நடக்கின்றன?" என்று நாம் வேகமாகக் கேட்டால், அந்த விறுவிறுப்பான கேள்விக்கு, ஆவல் நிறைந்த கேள்விக்கு அவரிடமிருந்து அதே வேகத்தில் பதில் வராது - நிதானமான - மெல்லிய குரலில் - தெளிந்த நீரோடை, கீழ் ஸ்தாயியில் ஒலித்திடும் சங்கீத ஒலி போல - ஆர்ப்பாட்டமின்றி பதில் வரும் - அப்படியொரு இயல்பு படைத்த அருமைத் தம்பி அவர் - அவருடன் இணைந்து பணியாற்றும் மாநாட்டுச் செயலாளர்கள் தம்பிகள் மூக்கையா, பி. மூர்த்தி இருவரும் - வரவேற்புக் குழுத் தலைவருக்கேற்ற வாகான செயல்வீரர்கள். உடல் வடிவில் மட்டுமல்ல! உள்ள உறுதியில் - உழைப்பில் - ஒப்பற்றத் தளகர்த்தர்கள் - மூக்கையாவுக்கு மூக்கின் மேல் கோபம் வரும். அது முன் கோபம் என்பதால், பின் கோபமாக நீடித்து நிற்பதில்லை - அப்படித்தான் மூர்த்தியும் - அத்துடன் முன்னோடும் பிள்ளையாகவும் விளங்கிக் குறையில்லா நிறையுழைப்பைத் தரக் கூடியவர் அவர்!

'கற்கண்டு சொற்கொண்டல்' தம்பி கம்பம் செல்வேந்திரன் பிரச்சாரக் குழுத் தலைவராகவும், தம்பி சக்கரபாணி, எம்.எல்.ஏ., நிதிக்

குழுத் தலைவராகவும், தம்பி ஆ. நாகராசன் மாநாட்டு அலுவலகப் பொறுப்புக் குழுத் தலைவராகவும், தம்பி. வெ. ராஜசேகரன் பந்தல் குழு தலைவராகவும், தம்பி க. விஜயன் உபசரிப்புக் குழுத் தலைவராகவும், தம்பி மு. முருகேசன் மேடைக் குழுத் தலைவராகவும், தம்பி ப.கா. சிவகுருசாமி தீர்மானக் குழுத் தலைவராகவும், தம்பி சுப. பெருமாள் சாமி அலங்காரக் குழுத் தலைவராகவும், தம்பி க. குமாரசாமி விளம்பரக் குழுத் தலைவராகவும், தம்பி அ.சா. முத்துசாமி மலர்க்குழுத் தலைவராகவும், தொண்டர் அணியிலே தம்பிகள் எஸ். கணேசன், செட்டியபட்டி முருகன், ஆத்தூர் செல்வம், எம். ரவிச்சந்திரன், இரா. வேலு, வி. பழனிச்சாமி, ஆர்.வி. சண்முகம் ஆகியோரும், சகோதரி திருமதி மார்கிரேட் மேரி, மகளிர் அணித் தலைவராகவும், சகோதரி திருமதி இந்திரா ரவிச்சந்திரன் மகளிர் தொண்டர் அணித் தலைவராகவும் மற்றும் இந்தக் குழுக்களில் செயலாளர்களாகவும், உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுள்ள அருமை உடன்பிறப்புகளின் அயரா உழைப்பிலும் திண்டுக்கல் மாநாடு திக்கெட்டும் புகழும் மாநாடுகளில் ஒன்றாகத் திகழத் தான் போகிறது.

என் அன்பு உடன்பிறப்புகள் பல்வேறு நகரங்களிலிருந்தும், சிற்றூர் பேரூர்களிலிருந்தும் மாநாட்டுக்கான பயண ஏற்பாடுகளில் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அங்கு என்னைப் பார்த்து "என்ன அண்ணே, நலமாக இருக்கிறாயா" என நீ கேட்டாலே அதுவே அதியமானுக்கு ஔவை தந்த நெல்லிக்கனி போலாகுமே!

பயண வேலையில் என் கடிதத்தைப் படிக்கக் கூட நேரமிருக்காது உனக்கு - கழகத்தின் முழு நேரத் தொண்டர் முரசொலி படிக்காமல் இருக்க முடியாதே! காரணம் அது பொழுதுபோக்கு ஏடல்லவே!

எனவே, திரும்பத் திரும்ப கழகத்தின் ஒவ்வொரு விழாவுக்கும், நிகழ்ச்சிக்கும், மாநாடுகளுக்கும் வருகின்ற உடன்பிறப்புகள், தங்கள் பயணத்தில் அதிகக் கவனமும், எச்சரிக்கையும் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

புகைவண்டியிலோ, பேருந்திலோ, வேனிலோ, காரிலோ, ஈருருளியிலோ எந்த வாகனத்தில் வருவதாயினும், ஏன்? நடந்தே வருவதாயினும் போதிய நிதானம் கடைப்பிடிக்க வேண்டுமென, எனக்கிளையவர்களாயினும் உங்களின் வயதைக் கணக்கிடாமல் -

இந்த வைர நெஞ்சங்கள் வருங்காலத் திராவிட வரலாறு தீட்டிடத் தேவையாயிற்றே என்ற கவலையுடன் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

வரும் செப்டம்பருக்குள்ளாக நமது இயக்கத்தின் மாநாடுகள், மாபெரும் விழாக்கள் நடைபெற இருக்கின்றன. அடிக்கடி நாம் சந்தித்து அளவளாவிக் கொள்ளக் கூடிய அருமையான நிகழ்ச்சிகளாக அவை அமைய இருக்கின்றன.

விழுப்புரத்தில் தொடங்கி, விருதுநகர், சேலம் என விறுவிறுப்பும், வேகமும், எழுச்சியும் நிறைந்த மாநாடுகளை நடத்தி முடித்திருக்கிறோம். அரசியல் முடிவுகளை எடுத்திருக்கிறோம். அறவழிப் போராட்டங்களை நடத்தி அடக்குமுறை ஏற்றிருக்கிறோம். நாடாளுமன்றத் தேர்தலில் நானிலமே வியக்கும் வெற்றியைப் பெற்றிருக்கிறோம்.

இதோ தம்பி கோ.சி. மணி தலைமையில் - தம்பி இரகுமான்கான் திறந்து வைக்க - வண்ணை தேவகி கொடி உயர்த்தும் திண்டுக்கல் மாநாடு.

இதற்கடுத்து ஏற்கனவே முடிவு செய்துள்ளவாறு, தஞ்சை, கோவை, வேலூர் மாநாடுகளும், புதுக்கோட்டையில் இளைஞர் அணி வெள்ளி விழாவுடன் இணைந்து தி.மு.க. முப்பெரும் விழாவும் நடைபெற இருக்கின்றன, எல்லாமே செப்டம்பருக்குள்!

அடுத்து ஏப்ரலில் நடைபெறும் தஞ்சை மாநாட்டுக்கு தம்பி துரைமுருகன் தலைமை வகிக்கிறார்; தம்பி பரிதி இளம்வழுதி திறப்பாளர் கவிஞர் நிர்மலா சுரேஷ் கொடி உயர்த்துகிறார்.

அதற்கடுத்து, கோவை மாநாடு - அந்த மாநாட்டுக்குக் கழகப் பொருளாளர் ஆற்காடு வீராசாமி தலைமை ஏற்கிறார், நெல்லை ஆவுடையப்பன், பி.ஏ.,பி.எல்., திறந்து வைத்திடுகிறார்; கொடி உயர்த்துபவர் திருமதி ஜோன்ஸ் ரூசோ.

அதற்கடுத்து வேலூர் மாநாடு - தம்பி வீரபாண்டி ஆறுமுகம் தலைமையில் - தம்பி பொன்முடி திறந்து வைத்திட - கொடி உயர்த்துபவர் திருமதி சற்குணப் பாண்டியன்.

அநேகமாக செப்டம்பரில், புதுக்கோட்டையில் இளைஞர் அணி வெள்ளி விழா மாநாட்டையும் - கடந்த ஆண்டு நான் அறிவித்தவாறு வெளி மாவட்டமான புதுக்கோட்டையிலேயே

கழக முப்பெரும் விழாவையும் இணைத்து நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நானும் தூங்கப் போவதில்லை, உன்னையும் தூங்க விடப் போவதில்லை. தமிழர்கள் விழிப்போடு இருந்திட நாம் தூங்காமல்தானே இருக்க வேண்டும்!

நடக்க இருக்கும் மாநாடுகள் எல்லாம் அந்தந்த மாவட்டங்கள் இணைந்த மண்டல மாநாடுகள்தான் - மாநில மாநாடு திருச்சியில் நடத்துவதாக உத்தேசம் - இதற்கிடையே புதுக்கோட்டையில் இளைஞர் படை திரளுகிறது - கழக முப்பெரும் விழாவும் நடைபெறுகிறது.

கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் மாநாடுகள், விழாக்கள் மட்டும் என எண்ணிடாதே! இடைக்காலத்தில் இந்த இனத்துக்கு ஏற்பட்டுள்ள புண்ணுக்கும் மருந்து தயாரிக்கும் நிகழ்ச்சிகள் என்பதையும் மறந்துவிடாதே!

அதற்குத்தான் உன்னையும், உலக முழுதும் பரவிக் கிடக்கும் தமிழின மக்களையும் ஒன்று திரட்டி - சகலமானவர்களையும் ஜனநாயகக் குடையின் கீழ் கொண்டுவர நான் கற்ற சகல கலைகளையும் பயன்படுத்திப் பாடுபடுகிறேன் - எனக்காக அல்ல! உனக்காகவும், உன்னையும் என்னையும் உடன் பிறப்பு களாய் உலவ விட்டு மகிழும் நம் தமிழ் இன உறவினர்களின் உயர்வுக்காகவும்!

இந்த உண்மையை நீ உணர்ந்தாலே போதும் - உணர்ந்து உழைத்தாலே போதும் - உலகத் தமிழ் இனம், உவகை பூக்கும்! உற்சாகம் பிறக்கும்! ஊக்கம், தமிழ் வானில் இறக்கை கட்டிப் பறக்கும்! ஓடி வா; திண்டுக்கல்!

அன்புள்ள,

மு.க.

9-3-2005

3121. ஆமைபோல் அடக்கம்; அரிமாபோல் சீற்றம்!

உடன்பிறப்பே,

இரண்டு நாட்கள் - 48 மணி நேரம் வழக்கம் போல் தான் கடந்து சென்றது. ஆனால் திண்டுக்கல் மண்டல எழுச்சி மாநாட்டில் அந்த மணித் துளிகள் 'ஜெட்' விமான வேகத்தில் அல்லவா பறந்து சென்று விட்டது போலத் தோன்றியது.

குழுக்களில் ஏதோ ஒரு காரணத்தால் இடம் பெறாதவர்கள் கூட, இடம் பெற்றவர்களுக்கு நிகராக மாநாட்டு வெற்றிக்காக ஆற்றிய பணிகளை நேரிலே கண்டும், கேள்வியுற்றும் நானடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஆமை, தன் ஓட்டுக்குள் உடல் முழுவதையும் அடக்கி வைத்துக் கொண்டு, தேவைப்படும்போது மட்டும் வெளிக்காட்டுவதைப் போலவும் - ஆண் சிங்கம், அடக்கமாகக் காட்சி தந்து, பிடரி சிலிர்த்துக் கிளம்பும் போது விசுவரூபம் எடுப்பது போலவும் தம்பி இ. பெரியசாமியும், அவர் தலைமையில் மண்டல மாநாட்டுப் பணி புரிந்த செயல்வீரர் கூட்டமும் தன் ஆற்றலை வெளிப்படுத்தியது என்றே கூறலாம் - அதற்கான வெற்றி விளைவைத்தான் திண்டுக் கல்லில் காண முடிந்தது, களிப்பு பெற முடிந்தது.

நாட்டுப் பிரச்சினைகளை உள்ளடக்கியதும் - மக்கள் துயர் துடைக்கும் பணிகளில் கழகம் இடையறாது ஈடுபடுவதை மெய்ப்பிக்கும் வண்ணமும் - 41 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது மட்டுமல்ல! கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களும், பல்வேறு தலைப்புகளில் சீரிய கருத்துகள் பலவற்றை முத்தாரமாகக் கோத்து, திண்டுக்கல்லில் முழங்கியிருக்கிறார்கள்.

இரண்டாம்நாள் மாநாட்டில் விரிவுரையாற்ற இருந்த பொருளாளர் அருமை நண்பர் வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன் ஆகியோர் நேரமில்லாத காரணத்தினாலும் - மழை வேறு குறுக்கிட்டதாலும் மாநாட்டுக்கு வந்தவர்களில் பெருங்கூட்டத்தினர் ஏமாற்றமடையும் நிலையில் பேசுவதற்கு இயலாமற் போய் விட்டதும், சிறப்புத் தலைப்பில் பேச வேண்டிய தம்பி செ.குப்புசாமி, எம்.பி., தம்பி கருப்பசாமி பாண்டியன் போன்றோர் பேச இயலாமற் போய் விட்டதும் உள்ளபடியே வருந்துவதற்குரியவை எனினும், மாநாடு பெற்ற மகத்தான வெற்றியில் அவர்களுடன் சேர்ந்து நாமும் இக்குறையை மறந்து விடுகிறோம். இனி அடுத்து வரும் மாநாடுகளில் இக்குறை நேரா வண்ணம் மாநாடு நடத்தும் நிர்வாகிகளும், தலைமைக் கழகத்தினரும் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்ய வேண்டும், செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

மாநாடு நடத்தியோர் ஆற்றலுக்கு, ஒரே ஒரு சான்று - திண்டுக்கல்லைச் சுற்றி பல கல் தொலைவுக்குப் படர்ந்திருந்த கொடிக்காடு என்றால், அந்தக் கழகக் கொடிக்காட்டினைக் காண கண்கள் கோடி வேண்டும் என்று இசைக்கத் தோன்றுகிறது; இப்போது கூட!

உடன்பிறப்பே, நமது மாநாடுகள் என்றால் மடை திறந்த வெள்ளம் போல் மக்கள் கூடுகிறார்கள் என்பது மட்டுமல்ல! பிரம்மாண்டமாக அமைக்கப்படும் பந்தல்களில் தேனடை போலத் திரள்கிறதே கூட்டம்! அந்தக் கூட்டம் அண்ணா காலத்திலிருந்து இன்று வரையில், நுழைவு நன்கொடை வழங்கி விட்டுத்தான் உள்ளே வருகிறது - அப்படி வந்ததின் மூலம் இந்த மாநாட்டில் சுமார் இருபது லட்சம் ரூபாய் - அஃதன்னியில் நிதி வசூல் வாயிலாகக் கிடைத்த தொகையில் மாநாட்டுச் செலவுகள் போக, தலைமைக் கழக நிதியாக அளிக்கப்பட்ட தொகை நுழைவு நன்கொடையையும் சேர்த்து 49 லட்சம் ரூபாய் என்பது தம்பி பெரியசாமியின் தலைமையில் இயங்கிய மாநாட்டு வரவேற்புக் குழுவில் உள்ள தம்பிமார்களின் திறமைக்கும், அக்கறைக்கும் எடுத்துக்காட்டு என்பேன்.

இந்தியத் திருநாட்டிலேயே நமது கழகத்தினால் நடத்தப்படுகிற சிறப்புக் கூட்டங்கள், பட்டிமன்றங்கள்,

கவியரங்குகள், மாநாடுகளில் மட்டுமே நுழைவுக் கட்டணம் செலுத்தி, சொற்பொழிவு கேட்டிட பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் ஆரம்ப காலத்திலிருந்து திரளுகிறார்கள். அந்த மக்கள் நுழைவு நன்கொடையாகப் பெருந்தொகை தந்து அது நிதியாகத் தலைமைக் கழகத்தில் சேர்க்கப்படுகிறது.

நான் பல சிறப்புக் கூட்டங்களில் தலைப்புகளில் உரையாற்றியிருக்கிறேன். இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்கு - கழக உடன்பிறப்புகள் மீது ஆட்சியாளர்கள் தொடுத்த வழக்குகளை சந்திக்கும் பொருட்டுத் தேவைப்படும் நிதிக்கு - கழகத் தேர்தல் நிதிக்கு - பொதுப் பிரச்சினைக்கென புயல் நிவாரண நிதி, வெள்ள நிவாரண நிதி, போர் நிதி ஆகியவற்றுக்கு நுழைவு நன்கொடை வழங்கும் சிறப்புக் கூட்டங்களில் அண்ணா அவர்களும், நானும், கழக முன்னணியினரும் கலந்து கொண்டு சிறப்புத் தலைப்புகளில் உரையாற்றிக் கடமையாற்றிய அந்தக் கால நிகழ்வுகள் இன்னமும் நெஞ்சில் நிழலாடுகின்றன.

குறளோவியம்

புதிய புறநானூறு

சங்க காலத் தமிழன்

திராவிடத்தின் உலகத் தொடர்புகள்

இந்திய ஜனநாயகம்

சர்வாதிகாரிகளின் வீழ்ச்சி

இப்படிப் பல தலைப்புகளில் சிறப்புக் கூட்டங்களில் பேசியிருக்கிறேன் - தலைப்புகளில் பேசுவதாக ஒப்புக் கொண்டு - பேச்சினிடையே பேச்சுத் தலைப்பை நாலைந்து முறை கூறிவிட்டு, பேச்சை முடிக்கின்ற பேச்சாளர்களைப்போல் அல்லாமல், அறிவிக்கப்பட்ட தலைப்புகளில் இருந்து தடம் மாறாமல் பேசும், கருத்தாழமிக்க பேச்சுக்களைத்தான் மக்களும் விரும்புவார்கள். அந்தப் பேச்சுக்களால்தான் பயனும் உண்டு.

திண்டுக்கல் மாநாட்டு அனுபவத்தின் காரணமாகக் கழகப் பேச்சாளர்களுக்கு ஒன்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனை வேண்டுகோளாகவும் கொள்ளலாம் அல்லது விட்டும் விடலாம். அண்ணா காலத்தில் நடைபெற்ற மாநாடுகள் அல்லது பொதுக்

கூட்டங்களில் நானோ, பேராசிரியரோ கலந்து கொண்டால் "இன்னும் கொஞ்சம் பேசு" என்று சொல்லுகிற அளவுக்கு, குறைவான நேரத்தில் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் முடித்து விடுவோம்.

உதாரணமாக, அரக்கோணத்தில் கழகப் பொதுக்குழு-மாலையில் பொதுக் குழு விளக்கப் பொதுக் கூட்டம். அண்ணாவுக்கு முன்னால் நான் பேசினேன். கால் மணி நேரம் பேசிவிட்டு, "அடுத்து நமது தலைவர் அண்ணா பேச இருப்பதால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு அமர்ந்து விட்டேன்.

அடுத்துப் பேச எழுந்த அண்ணா அவர்கள் ஒலிபெருக்கி முன்னால் வந்து நின்று; "கருணாநிதி இன்னும் அரை மணி நேரம் பேசுவார்" என்று சொல்லிவிட்டு அமர்ந்து விட்டார். அவர் ஆணையேற்று அதன் பிறகு நான் அரை மணி நேரம் அதிகமாகப் பேசினேன்.

எனவே ஒரு மாநாட்டையோ அல்லது கூட்ட நிகழ்ச்சியையோ - அதில் கலந்து கொள்வோர் பொறுப்புணர்வுடன் தரும் ஒத்துழைப்போடுதான் வெற்றிகரமாக ஆக்க முடியும்.

ஆகவே, அடுத்து வரும் மாநாடுகளில், சிறப்புச் சொற்பொழிவாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர், எவ்வளவு நேரம் பேசினார் என்ற சிறப்பை விட, "இன்னும் கொஞ்சம் பேசியிருக்கக் கூடாதா" என்ற ஆவலைத்தான் தங்களுக்குக் கிடைக்கும் 'பாராட்டு' என்று கருதிட வேண்டும்.

கழகப் பேச்சாளர்கள் என்ற பட்டியலில் இருப்போர் - (கழக முன்னணியினர் அல்லது அணிச் செயலாளர்கள் - தவிர்த்து) எல்லோருமே திண்டுக்கல்லைப் போல ஒரே மாநாட்டில் அல்லது நிகழ்ச்சியில் கலந்து கொள்வதால், ஏற்படுகிற தவிர்க்க முடியாத நேரப் பிரச்சினை எனும் சிக்கலை உணர்ந்து, மாநாட்டு நிர்வாகிகளுடன் ஒத்துழைத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மாநாட்டு மேடையில் ஒவ்வொரு மாநாட்டிலும் அமர்ந்திடுவோர் அன்னியில், மேடைக்கு எதிரே மாநாட்டுப் பந்தலில் அமர்ந்திட போதுமான இடம் ஒதுக்கப்படுகிறது. அந்த இடத்தில் அமர்வதற்குக் கழக நிர்வாகிகள் பழகிக் கொள்வது

நல்லது. மேடையிலிருக்கும் தலைவர்களின் பார்வையில் அவர்கள் படுவதற்கும் வசதி வாய்ப்பு உண்டு.

நமது மாநாடுகளில், கூட்டங்களில் அரசினர், காவல் துறையினரைப் போதுமான அளவுக்கு அனுமதிப்பதில்லை. அக்குறையை நிறைவு செய்ய, நமது கழகத் தொண்டரணியாவது போதுமானதா என்றால், அதுவுமில்லை!

எனவே தொண்டரணிப் படையை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் விரிவுபடுத்தவும், முறைப்படுத்தவும் நானும், பொதுச் செயலாளரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். விரைவில் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படவும் இருக்கிறது.

மேலும், கழகத்தின் எல்லா அணிகளுமே எழுச்சி அணிகளாக ஏற்றம் பெற்றிட, அந்த அணிகள் தம் வளர்ச்சியைத் திரும்பிப் பார்த்துக் கொள்ளவும், எத்தகைய அமைப்பு முறையால் வியத்தகு வலிமை பெறலாம் என்பதைக் கணக்கிடவும், மற்ற அணிகளோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளக்கூடிய ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட இருப்பதை - திண்டுக்கல் மாநாட்டில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக எடுத்துக்கூற வேண்டிய அவசியத்தையும் தலைமைக் கழகம் அலட்சியப்படுத்துவதற்கில்லையென்பேன்.

திண்டுக்கல் மாநாட்டையொட்டி, இக்கடிதத்தில் நான் திரட்டித் தந்துள்ள பல்வேறு கருத்துகளுக்கும் அப்பாற்பட்டு, கழகம் மக்கள் இயக்கமாக வளர்ந்துள்ளதையும் - மற்றும் நமது தோழமை இயக்கங்களின் மகத்தான மக்கள் சக்தியும் ஒன்று திரட்டப்பட்டு;

தமிழகத்தைச் சூழ்ந்துள்ள மாயை அகற்றப்படுவதற்கு ஓரணியில் நிற்போம்.

சர்வாதிகாரத்தைத் தகர்ப்போம்.

ஜனநாயகம் காத்து - மத நல்லிணக்க சமுதாயத்தையும் - மதச்சார்பற்ற மக்கள் அரசையும் மக்களுக்காக, மக்கள் துணையுடன் அமைப்போம்.

அந்த நல்ல விளைவுக்கு முன் நின்று, நமது கழகம், எல்லா வகையிலும் அயராத் தொண்டு புரியும் என்ற உறுதியை அளிக்கும்வண்ணம் திண்டுக்கல் மாநாடு அமைந்தது என்ற மன

நிறைவுடன் மாநாடு நடத்திய மாவீரர்களுக்கும், குறிப்பாக, தம்பி பெரியசாமிக்கும், மாநாட்டு நிர்வாகிகளுக்கும் - மாநாட்டைச் சிறப்பித்த தோழமைக் கட்சிகளின் தலைவர்களுக்கும், அனைத்துக் கட்சிகளின் தொண்டர்களுக்கும் இதய நன்றியை இக்கடிதa வாயிலாகவும் தெரிவித்துக் கொள்வதுடன், திண்டுக்கல் மாநாடு திக்கெட்டும் புகழும் மாநாடு என்பதற்கு, மாநாட்டிற்குப் பிறகும் நமது மாற்றார் கக்கிடும் அவதூறுகளும், விடுத்திடும் மிரட்டல்களும், அவிழ்த்து விடும் அடக்குமுறை பூச்சாண்டிகளுமே தக்கச் சான்றுகளாக அமைந்துள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது வலிவும், பொலிவும் நமக்குத் தெரிகிறது; புரிகிறது. அதனால்தான், ஆர்ப்பாட்டக்காரர்களின் அவதூறு பிரச்சாரத்திற்குச் செவிசாய்த்து நேரத்தை வீணாக்காமல், இவர்கள் ஆடுகிற வரையில் ஆடட்டும். நமக்கு ஆமை போல அடங்கவும் தெரியும். அரிமாபோலச் சீற்றம் கொள்ளவும் தெரியும் என்பதை நிரூபிக்கத்தான் போகிறோம் என்பதற்கு, திண்டுக்கல் மாநாடு ஒரு மகத்தான அறிகுறி.

அன்புள்ள,

மு.க.

18-3-2005

3122. தஞ்சை அழைக்கிறது!
தயாராகுக உடன்பிறப்பே!

உடன்பிறப்பே,

தஞ்சை மண்டலத் தி.மு. கழக மாநாட்டுக்கானப் பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. அவசர அவசரமாக 20-3-2005 ஞாயிறு காலை சென்னை, அண்ணா அறிவாலயம் வந்து தம்பி கோ.சி. மணி, மாநாடு நடைபெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள இடம், இதுவரை நடைபெற்றுள்ள மண்டல மாநாட்டுக்கான இடங்களைவிடப் பெரியது என்பதைப் பெருமிதத்துடன், வரைபடங்களுடன் என்னிடத்திலே காட்டி விளக்கிப் புன்னகை சிந்தியதிலேயே, அவர் அந்த மாநாட்டில் பெற இருக்கிற வெற்றிச் செய்தி கொடி கட்டிப் பறந்தது என்று சொல்லலாம்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக அவர் ஆற்ற இருக்கிற பணி, "மணி"யாகத்தானிருக்கு மென்பதில் நமக்கு ஐயப்பாடு எள் முனையளவு கூடத் தேவையில்லை. அதே போல, அவருடனிருந்து மாநாட்டுக்கான முதன்மையான உழைப்பை நல்கி, போட்டி போட்டுக் கொண்டு பாடுபட தம்பிகள் எஸ். எஸ். பழனிமாணிக்கம், எஸ். இரகுபதி, ஏ.கே.எஸ். விஜயன், பூண்டி கலைச் செல்வன், பெரியண்ணன் அரசு ஆகியோர் மாநாட்டுச் செயலாளர்கள் என்கிறபோது, நமது எதிர்பார்ப்பு அதிகமாகிறது. மாநாட்டுக் கட்டுமானப் பணிகளின் புகைப்படங்களை, மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவரான தம்பி பழனிமாணிக்கம் இன்று கொண்டுவந்தார். எழுச்சி இப்போதே கண்ணுக்குத் தெரிகிறது. அந்த நம்பிக்கை வீண் போகாமல், வெற்றிகரமான மாநாடு என்ற செய்தியினை உருவாக்கிடும் காரண கர்த்தாக்களாக வரவேற்புக் குழுவினர் விளங்குவார்கள்.

வரவேற்புக் குழு உறுப்பினர்களாக தம்பிமார்கள் அ. அப்துல்சமது, கு. சுல்தான், சி.இறைவன், அ. அம்பலவாணன், கோ. மோகனதாசன், மா. மீனாட்சிசுந்தரம், கு. பால கிருஷ்ணன்,

ந.உ.சிவசாமி, அ. அசோகன், எம்.எல்.ஏ., அறந்தாங்கி இராசன், சி. அம்பிகாபதி, த.சந்திரசேகரன் ஆகியோரும்,

நிதிக் குழுத் தலைவராக அமைதியே உருவான தம்பி உபயதுல்லாவும், செயலாளராக தம்பி கல்யாண சுந்தரமும் குழு உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றிட இருக்கிறார்கள்.

நிதிக்குழு உறுப்பினர்களாக தம்பிமார்கள், எஸ். சந்திரசேகர மேத்தா, துரை. சந்திரசேகர், எஸ்.கே. வேதரெத்தினம், எம்.எல்.ஏ., எஸ்.கே.ஜி. திருமலைச்சாமி, எஸ்.என். சேகர், கே. இராமச்சந்திரன், வீரா. கணேசன், ஆர்.பி. சுப்பிரமணியன், க. சிதம்பரம், எம்.ஜாபர் அலி, க. காந்திநாதன் ஆகியோரும்,

மாநாட்டு அலுவலகப் பொறுப்புக்குழுத் தலைவராகத் தம்பி டி.எஸ். கல்யாணசுந்தரம், செயலாளராகத் தம்பி கோ. இரவிச்சந்திரன், உறுப்பினர்களாகத் தம்பிமார்கள் டி. புண்ணிய மூர்த்தி, ஆர். ஜெயபால், சு.ப. தமிழழகன், நாஞ்சில் சேகர், எஸ்.என். மணிமாறன், அ. குப்புசாமி, அய்யா. தமிழரசன், ப. கோவிந்தராஜன், முத்து. இராஜேந்திரன், கோ. பாவாடைச்சாமி, எஸ்.பி. தங்கையா, கே. கணபதி, க. மதியழகன், க. சத்திய மூர்த்தி, ஆர். மகாராஜன், பழ. முத்துக்குமார் ஆகியோரும்,

தீர்மானக் குழுத் தலைவராகத் தம்பி செ. இராம லிங்கம், செயலாளராகத் தம்பி பி. உடையப்பன், உறுப்பினர்களாகத் தம்பிமார்கள் கோட்டூர் அ. இராஜசேகரன், பொன். கலியமூர்த்தி, க. தங்க வேலு, என். இந்திரஜித், எஸ். சுகுமார், சி. சிவ கணேசன், சீர்காழி மு. பன்னீர்செல்வம், கி.சத்திய சீலன், பி. இராசமாணிக்கம், உ. மதிவாணன், மா. மணிமாறன், சி. இராமநாதன், எஸ். திருஞான சம்பந்தம் ஆகியோரும்,

பந்தல்குழுத் தலைவராக தம்பி து. செல்வம், செயலாளராகத் தம்பி சி. முத்துசாமி, உறுப்பினர்களாகத் தம்பிமார்கள் தங்கராஜ், தியாக. சுரேஷ், டி. இராஜேந்திரன், வே. அருணாச்சலம், தஞ்சை. ஆறுமுகம், டி. அருளானந்த சாமி, எஸ்.டி. முகமது ஜக்கிரியா, டி.என். கோகுல், ஆர்.கே. மோகன கண்ணன், பேராவூரணி என். செல்வராஜ், திருமருகல்செல்வம், எஸ்.என். ஜி. அன்பு, சாகுல் ஹமீது (எ) ராஜா, ஆர். எஸ். பாண்டியன், எஸ். ஜோதிராமன், ஆர். ராஜசேகரன், கோ. இராஜேந்திரன், இராம. தமிழ் அரசன், க. ரெங்கராசு, இராம. கருப்பையா ஆகியோரும்,

மேடைக் குழுத் தலைவராகத் தம்பி இரா. துரை, செயலாளர் தம்பி இல. மேகநாதன், உறுப்பினர்களாகத் தம்பிமார்கள் ஏனாதி. பாலசுப்பிரமணியன், கல்லணை காத்தான் (எ) சாமியய்யா, வி. கோவிந்தராஜ், சி. நேதாஜி, ஏ. ராசாங்கம், ஆர்.கே. நாகராசன், எல். ஆரோக்கியசாமி, பி. வீரையன், வி. நமச்சிவாயம், வி. மனோகரன், இரா. மதுசூதனன், நிவேதா. எம். முருகன், வை.ஞானசேகரன், எஸ்.பி. சேசுராஜன், இரா. சங்கர், தாழை மு. அறிவழகன், கே.எஸ். சந்திரன், பொன். இராமலிங்கம், எஸ்.எம். சீனியார், அ. அய்யாவு, செ.அ. சூசைராஜ் ஆகியோரும்,

உபசரிப்புக் குழுத் தலைவராகத் தம்பி க. அன்பழகன், செயலாளராக தம்பி டி.கே.ஜி. நீலமேகம், உறுப்பினர்களாகத் தம்பிமார்கள் எஸ். ராஜரெத்தினம் (எ) ஜித்து, கோ.சி. இளங்கோவன், என். கலியமூர்த்தி ரெட்டியார், எம்.கே. அபுதாகீர், மு. நடராஜன், பி. மோகன், என். சண்முகநாதன், தலையாமங்கலம் ஜி. பாலு, வரத.கோ. ஆனந்த், வி.எஸ்.எம். அகமது மைதீன், இ.ஜி.பாலு, அப்துல் அஜீஸ், சேது ரவிக்குமார், பி. அன்பழகன், இராம. துரை மாணிக்கம், கே.பி.கே. தங்கவேலு, வை.கோ. ராஜன், பே. மாரி அய்யா எல்.எஸ். மாறன் ஆகியோரும்,

பிரச்சாரக் குழுத் தலைவச் சகோதரி த. காரல் மார்க்ஸ், உறுப்பினர்களாகப் புதுக்கோட்டை விஜயா, ஆர். மதியழகன், வீ.அன்பரசன், சோம. செந்தமிழ்ச்செல்வன், மு. காந்தி, கி. முத்து மாணிக்கம், அ. அரங்கராஜன், சி. முருகப்பா, கோ. கலைச்செல்வன், த. காமராஜ், வீரக்கனல் மாரி முத்து, துரை. ஜெயக்குமார், வி.எஸ். ஆர். தேவதாஸ், இரா. கிருஷ்ணமூர்த்தி, கோ. வில்வளவன், எஸ்.பி.டி. சார்லஸ், எஸ்.பி. சரவணகுமார், ச. குமரவேல் ஆகியோரும்,

அலங்காரக் குழுத் தலைவராகத் தம்பி எம். இராமச்சந்திரன், செயலாளராக போலீஸ் அ. பன்னீர் செல்வம், உறுப்பினர்களாகத் தம்பிமார்கள் டி. இராமகிருஷ்ணன், கா. அண்ணாதுரை, என். தர்மராஜ், கு. செல்வராஜ், சுப. சேகர், ப. கண்ணன், டி.ஜி. ஆர். அனந்தபத்மநாபன், ஏ. லாரன்ஸ், பி. மதிவாணன், கோ.சி. மதியழகன் இரா. பொன்முடி, பி. வீரமணி, எம்.எஸ். கார்த்தி, வீ. ரகுநாதன், கே. விஸ்வநாதன், அரு. வீரமணி, மு. கலியமூர்த்தி, கே.கே. அன்புசெல்வன், கே.எம். ஹபீப் முகமது தம்பி, சித. ஆவுடையப்பன் ஆகியோரும்,

விளம்பரக் குழுத் தலைவராக தம்பி குத்தாலம் பி. கல்யாணம், செயலாளராகத் தம்பி செ. ஜெயராமன், உறுப்பினர்களாகத் தம்பிமார்களான டி.எம். தைலப்பன், சீனி. அண்ணாதுரை, இரா. இராஜ ரெத்தினம், வீ. கணேசன், என். தங்கவேலு, எம். பொன்னுசாமி, கே. மகாலிங்கம், மு. ஞானவேலன், மா.மி. புகழேந்தி, கே. பாண்டியன், முகில். ராஜேந்திரன், ஏ.கே. சுந்தர், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், ஆ. செந்தில், மா. தங்கசிங்கம், எம். பெருமாள், இரா. சுந்தர்ராஜன் ஆகியோரும்,

மலர்க் குழுத் தலைவராகத் தம்பி என். பூபதி, செயலாளராகத் தம்பி டி. மணிவண்ணன், உறுப்பினர்களாகத் தம்பிகள் கோ. இளங்கோவன், டி.பி.டி. துளசி அய்யா, கே.கே.என்.எம். சுந்தர பாண்டியன், புலவர் கி. ஞானசுந்தரம், அ. அரங்கராஜன், ஆர். முருகானந்தம், கே. மதிவாணன், ஜி. செல்வராஜ், எஸ். பாலசுப்பிரமணியன், டி.எஸ்.டி. முத்துவேல், பி. பக்கிரிசாமி, பி. செல்வம், க. இராஜேந்திரன், ஜே. இறை எழில், வளர்மதி முருகையன், கே.கே. செல்ல பாண்டியன், எம்.இராஜேந்திரதுரை, எம்.இராஜேந்திரன், சிவ.வி. மெய்யநாதன், ப. விஜயன் ஆகியோரும்,

தொண்டர் அணித் தலைவராகத் தம்பி சா. கணேசன், செயலாளராகத் தம்பி பி. பாவானந்தம், உறுப்பினர்களாக எஸ். மணிவண்ணன், பொ. கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஆர். பாலையன், த. கைலாஷ்குமார், கே. கோவிந்தராசு, டி.எஸ். கார்த்திகேயன், எஸ். முருகேசன், ஏ. விஜய குமார், டி. சுப்ரமணியன், மணிவண்ணன், எஸ்.கே. காதர் உசேன், வீர.பாஸ்கரன், சி.ஆர்.வி. அன்பழகன், டி.ஆர். குமார், எம். லியாகத் அலி, சி. சந்திரசேகர், தி. முத்து, எஸ். சதீஸ் ஆகியோரும்,

மகளிர் அணித் தலைவராகச் சகோதரி பி. இராஜேஸ்வரி, செயலாளராகச் சகோதரி ஜி. விஜய குமாரி, உறுப்பினர்களாகச் சகோதரிகள் கு. சின்னபொன்னு, மதுரம் பத்மநாபன், இரா. மணிமேகலை, தங்க. கலைமணி, த. பானு மதி, பி. மகாதேவி, ஆர். விஜயலெட்சுமி, எம்.பானுமதி, வி. மாணிக்கவல்லி, எம். உஷா, ராணி முருகையன், சுமதி தர்மராஜ், அ.வளர்மதி, வீ. வீரம்மாள், ஆர். கோகிலா, எஸ். சீதா லெட்சுமி, நவமணி, ஆர். ராஜாமணி, வி. அமுதா, ஞான. சுகுணாபாய், ஜோ. கௌரி, த. மாரியம்மாள், வளர்மதி இராமச்சந்திரன், கலாவதி சந்திரா பானு, இரா. உஷாராணி,

செ. கமலா, அ. சகாய ராணி, சுகந்தம் விசுவநாதன், காளீஸ்வரி ரமேஷ், சுலோச்சனா அம்மாள், சௌமா முத்துலெட்சுமி, என். இராச லெட்சுமி, ஆர். சரோஜாதேவி, ஆர். மகேஸ்வரி ஆகியோரும்,

மகளிர் தொண்டர் அணித் தலைவராகச் சகோதரி திருமதி பி. உஷா ராணி, செயலாளராகச் சகோதரி எஸ்.கே.எம். தமிழரசி, உறுப்பினர்களாகச் சகோதரிகள் ஆர். கமலா, ஜி.சுகந்தா, க. ராணி, ஆலத்தூர் மணிமேகலை, இராணி ராமசாமி, கண்ணகி அன்பழகன், அன்பரசி இராஜேந்திரன், ராணி சேகர், ஆர். ராஜேஸ்வரி, கிளாரா மேரி, க. தையல்நாயகி, எஸ்.செல்லக் குமாரி, கமலா பாண்டியன் ஆகியோரும் பொறுப்பேற்று, அக்குழுக்கள் துளியளவும் சுணக்கமின்றி செயலாற்றிடத் தமக்கு விடப்படும் அறைகூவலை யேற்று அரும்பணியாற்றிடக் கிளம்பி விட்டன.

அறிஞர் அண்ணா நகரில் - தஞ்சை தன்மானத் தளபதி மன்னை நாராயணசாமி அவர்களின் பெயரால் மாபெரும் பந்தல் - முரசொலி மாறன் மேடை - தஞ்சை நடராசன் அரங்கம் - தாழை மு.கருணாநிதி வெளி முகப்பு - புதுக்கோட்டை பெரியண்ணன் உள் முகப்பு - கொள்ளிடம் மகாலிங்கம் நுழைவு வாயில் - நன்னிலம் நடராஜன் கொடி மேடை.

இவற்றுடன், இவர்களோடு இணைந்து சோழ மண்டலத்தில் இந்த இலட்சிய இயக்கத்தைக் காத்து வளர்த்த கழகத்தின் தீரர்கள், தஞ்சை ஏ.வி.பதி, தஞ்சை பெத்தண்ணன், தஞ்சை டி.கே. கோவிந்தன், பேராவூரணி மு. கிருஷ்ணமூர்த்தி, தஞ்சை பி.எஸ். தங்கமுத்து, குடந்தை சு. பத்மநாபன், வலங்கைமான் சாமிநாதன், அம்மாப்பேட்டை சிவசாமி, கஞ்சனூர் கண்ணையன், பட்டுக்கோட்டை சீனிவாசன், பட்டுக்கோட்டை சீனி. பன்னீர்செல்வம், விளநகர் கணேசன், குத்தாலம் ராஜமாணிக்கம், கொள்ளிடம் செல்ல சேதுராமன், பூண்டி கிருஷ்ணன், சிக்கல் கணபதி, நாகை ஈஸ்வரி, நன்னிலம் வரத. கோபால கிருஷ்ணன், முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம், தம்பி தேவேந்திரன், புதுக்கோட்டை பா. செழியன், நாடியம் ராமையா, திருவையாறு பாலையா ஆகிய திராவிடத் தீரர்கள் பெயரால் மாநாட்டு வளாகத்தில் தோரண வாயில்கள் அமைய இருக்கின்றன.

ஏப்ரல் 9, 10 ஆகிய நாட்களுக்கு வெகு தொலைவு இல்லை. எண்ணி இருபது நாட்களுக்குள்ளேதான் -

இப்போதுதான் திண்டுக்கல் மாநாடு சென்று வந்தோம் என்று எல்லா உடன்பிறப்புகளும் சொல்லிக் கொள்ள முடியாது - அவ்வாறு திண்டுக்கல் சென்று வந்த களைப்பு இன்னும் தீரவில்லை! அதற்குள் அடுத்த மாநாடா என்று உடன்பிறப்பே! உன்னைப் போன்றோர் கூற முடியாது - அந்தக் களைப்பும், அலுப்பும் நலிவுற்று இருந்து அண்மையில்தான் நலம் பெற்றுள்ள என் போன்றோருக்குத்தான் இருந்திட முடியும்.

அப்படியே இருப்பினும், அக்களைப்பு போக்குகிற மாமருந்தாக அன்றோ மாநாடுகள் அமைகின்றன - அதுவும் நமது தம்பி மணி போன்றோர் நடத்தும் மாநாடு மட்டும் அல்ல; அது ஒரு பொதுக் கூட்டமாக இருப்பினும், அதன் நேர்த்திக்கு அவர் ஒவ்வொரு நிமிடமும் பாடுபடுபவரல்லவா?

சீறிப் பாயும் இளம் வயதில், மிகச் சிறு கிராமமான மேக்கிரி மங்கலத்தில் தம்பி மணி தலைமையேற்று, சில நாட்கள் பாடுபட்டு குடி நீருக்கான ஒரு குளத்தையே தானே முன்னின்று ஊரார் ஒத்துழைப்புடன் வெட்டி உருவாக்கினாரே! அதே மணி தான்! இப்போது சற்று வயதான தோற்றம் எனினும், இன்னமும் வாலிப மிடுக்கோடு கழகப் பணி யாயினும் - பொதுப்பணியாயினும் அங்கெல்லாம் "விசுவரூபம்" எடுத்து வியாபித்து விடுகிறார்.

"நமக்கு நாமே" என்று கழக ஆட்சியில் நாம் அறிவித்த ஒரு திட்டம் போல - அப்படி அறிவிக்காமலே அவரது கிராமத்தில் மேக்கிரிமங்கலத்தில் அந்த ஆக்கப் பணியை அற்புதமாக செய்து முடித்த மணியை, நான் அப்போதே நேரில் சென்று பாராட்டி வாழ்த்தியிருக்கிறேன். அதுபற்றி 'முரசொலி' வார இதழில் கட்டுரை எழுதியிருக்கிறேன்.

ஒரு குளம் வெட்டியதற்கே அப்படி ஓடிப் போய் வாழ்த்தினேன் என்றால் - நமது தமிழ்க் குலம் காக்கும் இந்த இயக்கத்தின் வெற்றிகள் அடுக்கடுக்காக ஒன்றின் மேல் ஒன்று வந்து குவிவதற்கு, தம்பி மணி போன்றவர்கள் ஆற்றிடும் அயராத் தொண்டுதான் காரணம் என்பேன்.

அவரது ஆற்றலும், அவரால் பயிற்றுவிக்கப்படும் இந்தப் படையின் பல்வேறு தளகர்த்தர்களும் - வீரர்களும், தஞ்சை

மண்டல மாநாட்டை தமிழனைத் தலை நிமிர வைத்த மாநாடு என பறைசாற்றத்தான் போகிறார்கள்.

மாநாட்டுத் தலைவர் தம்பி துரைமுருகன் - ஓராண்டுக் காலம் 'மிசாக்' கைதியாக இருந்தவர். தனது வாலிப வயதிலேயே வளைய வளைய தமிழகத்தைச் சுற்றி வரத் தொடங்கி, பாமரர், படித்தோர், பல்துறை வித்தகர், பாட்டாளிகள், இலக்கியவாதிகள் எனப் பல பிரிவினர் மத்தியில் கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களை பதிய வைத்தவர். நவரசம் ததும்பிட, நகைச்சுவை பொங்கிட நாடு வாழ - நலிவு தீர - நமதியக்கக் கருத்துகளை எடுத்து வைப்பவர். அடக்குமுறைகள் அடுக்கி வரினும், அஞ்சிடா நெஞ்சு கொண்ட எனக்குயிரான தம்பிகளில் ஒருவர்!

மாநாட்டுத் திறப்பாளர் தம்பி பரிதி இளம்வழுதி - என்னுடன் இணைந்து இயக்கப் பணி புரிந்த நண்பர் இளம்பரிதியின் மகன். அரசின் கழுகுக் கண்களுக்கு இலக்காகி, அதன் முரட்டுக் கால் நகங்களுக்கும், கொடிய மூக்கின் கூர்மைக்கும் ஈடு கொடுத்து இலட்சியப் பயணத்தை அண்ணா வழியில் அயராது நடத்தும் அரிமா நெஞ்சினன். அவர் உரை, தீயோர் முகத்திரை கிழிக்கும்! சமத்துவப் பகைவர்களைப் பழிக்கும்! சர்வாதிகார வெறியை அழிக்கும்!

கொடியேற்றுபவர் நிர்மலா சுரேஷ் - கழக வானின் கவி நிலவு - இவர் போன்ற குலக்கொடிகள் பல பேர், நம் கொள்கை முரசம் ஒலிக்கத் தொடங்கிவிட்டால், அவர்கள் எண்ணிக்கை பெருகிவிட்டால், இருட்டுக் குகையில் இருக்கும் பெண்ணினம் ஒளி வானில் பிரகாசிக்கும் நிலை பிறக்கும் - நீதி சிறக்கும் - மகளிர்க்கு இந்தச் சமுதாயத்தில் மறுமலர்ச்சி உதயமாகும்! வளமான கவிதை வரிகளால் தாயகம் நலமாக வாழ்வதற்கு நிர்மலா சுரேஷ் ஏற்றி வைக்கும் சுடர் விளக்காகும்; அவர் கொடியேற்று விழாவுரை!

இத்தனை சிறப்புகளைச் சுட்டிக்காட்டி உன்னைத் தஞ்சை மண்டல மாநாட்டுக்கு அழைக்கின்றேன் - தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவனாயிற்றே! தாமதமாக அழைப்பது தகாது என்றுதான் இன்றே பயணத்திற்குத் தயாராகுக எனக் கூறி அழைக்கின்றேன். 'தலைவன்' என்றாலும் தன்னுடைய

மாவட்டம் என்ற பற்று விடவில்லையே என்று கேலி செய்கிற தம்பிகள், என் மனக்கண்ணுக்கு முன்னே புன்னகை புரிவது தெரிகிறது எனக்கு!

என் செய்வது! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனப்பாடிய 'கணியன்' எனும் புலவருக்கே, 'பூங்குன்றம்' எனும் தன் ஊரின் மீது கொண்ட பற்று தானே அவரைக் "கணியன் பூங்குன்றன்" என ஆக்கியது! தமிழர்களின் தங்கக் காலமாம், சங்க காலத்திலேயே!

அன்புள்ள,

மு.க.

22-3-2005

3123. வெறிக்கூத்தைச் சுற்றி நின்று எதிர்ப்போம்! வெற்றி கண்டு தமிழ் மக்களைக் காப்போம்!

உடன்பிறப்பே,

அண்மைக் காலமாக ஒவ்வொரு நாளும் சட்டப் பேரவையில், ஜனநாயகம் படுகாயத்திற்குள்ளாக்கப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க் கட்சியினர் ஒன்று கூடிப் பேசி, அந்தக் கொடுமையைக் கண்டிக்கும் வகையில், இந்த வாரம் முழுவதும் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் கண்டனத்தைத் தெரிவிப்பதென்றும், வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெறும் அனைத்துக் கட்சிப் பொதுக் கூட்டத்தில், சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதாவினாலும் - அவரது தூண்டுதலின்படி அமைச்சர்களாலும் - ஆளுங்கட்சி உறுப்பினர்களாலும் - அனைத்துக்கும் உச்சகட்டமாக நடுநிலை தவறி நடந்து கொள்கிற அவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்களாலும் - எப்படியெல்லாம் சர்வாதிகாரம் நடை பழகுகிறது என்கிற விரிவான விளக்கங்களை மக்களுக்குத் தெரிவிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகள், திடுதிப்பென்று இந்த முடிவை எடுத்துவிடவில்லை. 28-3-2005 மாலையில் கலந்துரையாடல் நடத்தி இந்த முடிவை எடுத்து வெளியிடுகிறார்கள் என்றால், அதற்கு முன்பே அதே நாள் காலையில், காங்கிரஸ், பா.ம.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிகளின் உறுப்பினர்கள் சட்டப்பேரவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 24-3-2005 அன்று பேரவையில் அமைச்சர் ஒருவர் அனைத்து எதிர்க்கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் சகட்டு மேனிக்கு 'சகதி' நடையில் தாக்கிப் பேசியதைச் சுட்டிக்காட்டி, அந்த நாராசச் சொற்களை அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றுமாறு கேட்டிருக்கிறார்கள். எவ்வளவு மென்மையாகவும் உறுதியாகவும் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களும்,

அவருடன் அவைக்குச் சென்றிருந்த பா.ம.க., மார்க்சிஸ்டு, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்களும் வேண்டுகோள் வைத்து வாதாடினார்கள் என்பது நாடறிந்த ஒன்றாகும். அவர்களின் வேண்டுகோளை மறுத்தது மட்டுமல்லாமல், மேலும் சுடு சொற்களை வீசியதோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் முதலமைச்சரின் உத்தரவுப்படியும், அவைத் தலைவரின் ஆணைப்படியும் வெளியேற்றியும் இருக்கிறார்கள்.

"முந்தா நாள் பெய்த மழைக்கு இப்போது குடை பிடிக்கக் கூடாது" என்ற அறிவுரையையும் அவைத் தலைவர் காளிமுத்து வழங்கியிருக்கிறார். முந்தா நாள் பெய்த மழை "இது மழைக்காலம்" என்று உணர்த்துவதால், எதற்கும் "எச்சரிக்கையாகக் குடை எடுத்துப் போகலாம்" என்று எண்ணிடுவது எப்படித் தவறாகும் என்றுதான் புரியவில்லை. கூறத் தகாத வார்த்தைகளால், முதல்வர் ஜெயலலிதாவும், ஏனைய அமைச்சர்களும் மற்றும் நிதி அமைச்சராக வந்து வாய்த்துள்ளவரும் நடத்துகின்ற அர்ச்சனைகள் பொறுத்துக் கொள்ளக் கூடியவைகளா?

ஜெயலலிதாவே திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களைப் பார்த்து, "காலி டப்பா" என்று கேலி பேசுகிறார். நான் பிறந்த சமுதாயத்தைப் பற்றி ஓர் அமைச்சர் ஏளனம் செய்கிறார். பா.ம.க. என்ன? பத்து தலை ராவணனா! என்று பரிகசிக்கிறார். "அவர்கள் தமிழ் வளர்க்கிறார்களாம்! தமிழ் என்ன, தாடியா? மீசையா? வளர்ப்பதற்கு!" என்று தடித்த வார்த்தைகளால் தாக்கிப் பேசியிருக்கிறார். "யாரோ ஆட்சி அமைப்பார்கள் - இவர்கள் ஒட்டுண்ணிகளாய் இருந்து அதிகாரம் செலுத்துவார்கள்" என்று அதே அமைச்சர், கம்யூனிஸ்டு கட்சிகளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார். மார்க்சிஸ்டு தலைவருக்கு எந்த மந்திரியும் பதில் சொல்லாதீர்கள் என்று, மடமை தாண்டவமாடும் மமதையான கட்டளையொன்றை மன்றத்திலேயே பிறப்பிக்கிறார் ஜெயலலிதா!

இத்தனையும் பேசிவிட்டு, அதற்கு எதிர்த்தரப்பிலிருந்து விளக்கம் கேட்கப்பட்டாலோ, அல்லது விடையளிக்கப்பட்டாலோ அவற்றை அவைக் குறிப்பில் ஏற்றக் கூடாது என்று அவைத் தலைவர் காளிமுத்து ஆணை பிறப்பித்து விடுகிறார். ஒரே சொல் அல்லது சொற்றொடர் அல்லது கருத்து, அதனை ஆளுந்தரப்பினர் அவையில் கூறலாம் - அதே சொல்லையோ, சொற்றொடரையோ, கருத்தையோ எதிர்க்கட்சியினர் யாரும் பேசக் கூடாது. பேசினால்

அது அவைக் குறிப்பில் ஏறாது. வலியுறுத்தினால் கட்டாய வெளியேற்றம்!

இப்போது அவைத் தலைவர், ஜெயலலிதா, அமைச்சர்கள் ஆகியோர் ஒன்று கூறக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசியது, கேலி செய்தது, தாக்கிக் கூறியது, இவற்றில் எதுவுமே யாரையும் குறிப்பிட்டுச் சொன்னது அல்லவாம் -

அப்படியானால், "உடன் கட்டையேறும் உத்தமிகள்" என்று உரைத்து விட்டு, யாராவது குறுக்கிட்டு மறுப்பு வெளியிட்டால் - அவரைப் பார்த்து "அவையில் நான் உம்மைக் குறிப்பிட்டு சொல்லவில்லை" என்று மழுப்பிச் சமாளித்து விடலாம் அல்லவா!

சரி! "வித்வான்" என்றது - "ஊதுவது" என்றது - என்னைக் குறிப்பிட்டுச் சொன்னதல்ல என்று அவைத் தலைவரும், அமைச்சர்களும், முதல்வர் ஜெயலலிதாவும் சாதிக்கிறார்களே! சுனாமியென்றதும், மருத்துவமனையில் போய்ப் படுத்துக் கொண்டார் என்றும் - கொளுத்தும் வெயிலில் கோட்டை வாசலுக்கு வந்தார் என்றும் - வாரிசுக்குப் பட்டம் சூட்ட திண்டுக்கல் சென்றார் என்றும் - சொன்னதெல்லாம்கூட யாரையும் குறிப்பிடாமல், யாரையோ குறிப்பிட்டவையென்று சத்திய சீலரான (?) சபாநாயகரும், ஏனைய இந்தச் சரித்திரக் கதாநாயகர்களும், நாயகிகளும் சப்பைக் கட்டு, கட்டப் போகிறார்களா?

என்ன செய்வது? எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவருக்கு, உடல் நலிவு ஏற்பட்டாலோ, அவர் மருத்துவமனையில் அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றாலோ - நோயே வராத இவர்களுக்குக் கேலியாகவும், கிண்டலாகவும் தெரிகிறது - மருத்துவமனையில் போய்ப் படுத்துக் கொண்டான் என்று ஏளனம் புரிய, இவர்களின் "இரும்பு இதயம்" இடம் கொடுக்கிறது.

"சில பேருக்கு உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் இருக்கிறது தம்பீ" என்று அறிஞர் அண்ணா எழுதுவாரே, பேசுவாரே! அந்தச் சில பேர் இவர்கள்தானோ! என ஐயுற வேண்டியுள்ளது. அவையிலும் இவர்கள் இடம் பெற்றுள்ளது கண்டு ஆச்சரியமும் மேலிடுகிறது! இரக்கமிலா அரக்கர் என்று கம்பர், தவறுதலாக இராவணாதியர்களைப் பற்றியல்லவா சொல்லி விட்டார்! நெஞ்சிலே வஞ்சம் நிறைந்த இவர்களைப்

பார்த்தல்லவா சொல்லியிருக்க வேண்டும்! இவர்கள் மட்டுமென்ன, மருத்துவமனைக்கே என்றைக்கும் செல்லாத ஆரோக்கிய சிகாமணிகளா? ஆஞ்ச நேயரைப் போன்ற சிரஞ்சீவிகளா? மார்க்கண்டேயரைப் பூஜித்ததால் மார்க்கண்டேயர்களாகி விட்டவர்களா?

உடன்பிறப்பே - அரசியல் நாகரிகமும், மனித நேய உணர்வும் எந்த அளவுக்குத் தாழ்ந்துபோய்க் கொண்டிருக்கிறது என்பதற்கும் - இன்னமும் சாதி வெறியும், அதை உசுப்பி விடும் விஷமப் புத்தியும் - இவற்றைத் தடுத்திட தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றவர்களால் எழுப்பப் பெற்றத் தடைகளையும் தகர்த்து தலை தூக்கிட முனையும் கொடுமையையும் - அந்தக் கொடுமை கண்டு துடித்திட வேண்டியவர்கள், துடித்திடாது யாருக்கோ வந்த துன்பம் என்று ஒதுங்கியிருப்பதையும் நினைக்கும்போது மனம் புண்படத்தான் செய்கிறது.

அந்த வலியையும் தாங்கிக் கொண்டு நம் வலிவை மேலும் பெருக்கி, "இன்பச் சோலையின் இடையே ஏற்பட்ட கணவாயின் வழியாக வந்து புகுந்த வஞ்சகர் கூட்டம்" என்று மனோகரா படத்தில் ஒரு வசனம் வருமே! அந்த வஞ்சகர் கூட்டம் வீழ்ந்துபட வரிந்து கட்டிக் கொண்டு, மக்களாட்சி மாண்பினைக் கட்டிக் காப்போம் எனச் சூளுரைப்போம் - அறப்போர் வாள் எடுப்போம் - அநீதியைத் தடுப்போம்! அதற்கெனச் சென்னையில் ஏப்ரல் 3 ஞாயிறன்று நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அலைகடலென ஆர்ப்பரிப்போம் - வாரீர், வாரீர் என அழைக்கிறேன்.

வாய் திறந்தால் பொய்யும் புரட்டும் என,

வாய்மைக்கே இடமில்லாது வட்டமிடும் சர்வாதிகாரக் கழுகுகளின் ஆதிக்கத்தை,

வாய் பிளந்து நிற்கும் ஓநாய்களின் வெறிக் கூத்தை,

வளைத்து விட்ட சாதீய மலைப் பாம்புகளின் கூட்டத்தைச் சுற்றி நின்று எதிர்ப்போம்!

வெற்றி கண்டு தமிழ் மக்களைக் காப்போம்!

அன்புள்ள,

மு.க.

30-3-2005

3124. தொடர் ஓட்டத்தில் சுடர்விளக்கு ஏந்திட வருக!

உடன்பிறப்பே,

தஞ்சைத் தரணியில் நடைபெற்ற கழக மாநாடுகள் பற்றிய விபரம் ஒன்று 'முரசொலி'யில் பெட்டிச் செய்தியாக வெளியிடப்பட்டிருப்பது கண்டேன். நீயும் பார்த்திருப்பாய் - அந்தச் செய்தி விபரத்தில் 1958ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட தி.மு.க. 3வது மாநாடு கலைஞர் அவர்கள் முன்னின்று நடத்தியது; திருவாரூரில் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆம்; அந்த ஒரு வரிச் செய்தியைப் படித்தவுடன் என் நினைவுகள் 47 ஆண்டுகளுக்கு முன்னால் நெஞ்சில் நிழலாடத் தொடங்கி விட்டன. அந்த மாநாடு நடந்தபோது தஞ்சை மாவட்ட தி.மு.க. செயலாளராக, அதிராம்பட்டினம், நண்பர் என்.எஸ். இளங்கோ இருந்தார் - மன்னை என்று ஊரின் பெயராலேயே அழைக்கப்படும் அருமைத் தோழர் மன்னை நாராயணசாமி அவர்கள் மாவட்ட தி.மு.க. வின் துணைச் செயலாளர் - மாநாட்டுப் பணிகளையாற்றிடும் பொறுப்பேற்று நான் திருவாரூரிலேயே ஒரு மாத காலம் தங்கியிருந்தேன். கழக வரலாற்றில் ஒரு மாவட்ட மாநாட்டில் அந்த மாநாட்டின் வரவு செலவு கணக்கு அறிவிக்கப்பட்டு, செலவுகள் போக தலைமைக் கழக நிதியாக இருபதாயிரம் ரூபாய் (20,000) முதன் முதலாக அண்ணா அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டது அந்த திருவாரூர் மாநாட்டிலேதான்.

அந்த நிதியைப் பெற்றுக் கொண்டு மாநாட்டில் நிறைவுப் பேருரை நிகழ்த்திய அண்ணா அவர்கள் "தம்பி! உன் கரம் பேனா பிடித்து அதனால் லட்சம் லட்சமாக சம்பாதிக்கிறவர்கள் பலர் உண்டு; அதனால் அதைப் பார்க்கும்போது இப்போது நீ வழங்கியுள்ள தொகை குறைவானதுதான் - கழகம் உன்னிடம்

இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறது" என்று மகிழ்ந்து பாராட்டியது என் மனத்தை விட்டு அகன்றிடவில்லை.

மாநாட்டை சிறப்புற நடத்துவதற்காகவே தஞ்சை மாவட்டத்திலேயுள்ள கழக நண்பர்களை மட்டுமல்லாமல், வெளிமாவட்டங்களிலேயிருந்த கழக நண்பர்களையும் என்னுடன் திருவாரூரிலேயே தங்க வைத்து, அவர்களின் அரும்பணியையும் - அயராப் பணியையும் - மாநாட்டு வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொண்டேன்.

மாநாட்டுச் செலவுகளுக்காக - மாவட்டம் முழுதும் ஒவ்வொரு நாளும் கூட்டங்களுக்குச் சென்றேன் - ஒரு கூட்டத்திற்கு குறைந்தது இரு நூறு முதல் ஐநூறு ரூபாய் வரை கூட்டம் நடத்துவோர் மாநாட்டுச் செலவு நிதியாகத் தரவேண்டுமென்று கேட்டு; அதுபோலவே கொடியேற்று விழாக்களுக்கும் கேட்டுப் பெற்று; அவ்வாறே கூட்டங்களில் வழங்கப்பட்ட நிதியை ஒவ்வொரு நாளும் வைகறைப் பொழுது வரையில் கூட்டங்கள் பேசி; அன்று கிடைக்கும் தொகையை கணக்கிட்டு, மாவட்ட நிர்வாகிகளிடம் அளிப்பேன்.

ஒருநாள் நள்ளிரவுக்குப் பின்னர் 3 மணி அளவில் நானும், அன்பில் தர்மலிங்கமும், கவிஞர் கருணானந்தமும், பொன்மலை பராங்குசமும், மன்னையும், தென்னனும், மற்றும் திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன், முல்லை சத்தி, வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை ராஜகோபால், கோமல் வெங்கட்ராமன், செம்பனார்கோவில் கணேசன், திருச்சி எம்.எஸ். மணி, மாயூரம் காந்தி - ஏ, அப்பா, எவ்வளவு பெரிய நண்பர்கள் பட்டாளம் - கழகத்தால் மட்டுமே என்னுடன் கட்டுண்ட பட்டாளம் - அத்தனை பேரையும் இணைத்துக் கொண்டு, கூட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு திருவாரூருக்கு திரும்பி வந்தவர்கள் நேரே மாநாட்டுக்காகத் தயாராகும் பந்தலுக்கே சென்றுவிட்டோம். அங்கே பந்தலில் தொண்டர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக் கிறார்கள். சில முக்கிய நிர்வாகிகள் தயாராகிக் கொண்டிருக்கும் மேடையில் படுத்து குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காட்சியைக் கண்டதும் சற்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் மாநாடு - இவர்கள் கொடிகள், தோரணங்களைக்கூட ஒட்டவோ, கட்டவோ செய்யாமல் உறங்கிக் கொண்டிருக்கிறார்களே என்று நினைத்தவாறே - நானும்

என்னுடன் வந்த நண்பர்களுமாகச் சேர்ந்து அங்கு குவிந்து கிடந்த கொடி மற்றும் தோரணங்களை - பசை தடவி கயிறுகளில் ஒட்டிக் கட்டிக் கொண்டிருந்தபோது; அந்த ஒலி கேட்டு உறங்கிய தொண்டர்களும், நிர்வாகிகளும் திடுக்கிட்டு விழித்து அவர்களும் எங்களோடு இணைந்து கொடிகள் தோரணங்கள் கட்டவும் ஒட்டவுமான வேலையில் இறங்கிவிட்டார்கள். இதையேன் இப்போது நினைவூட்டுகிறேன் என்றால்; நாமும் தொண்டு செய்ய வேண்டும் என்ற நினைப்பு முன்னணியில் இருப்பவர்களுக்கு முதலில் வந்தால்தான்; அவர்களை முன்னணிக்குக் கொண்டுவரப் பின்னணியில் உழைக்கின்ற செயல்வீரர்களாம் தொண்டர் களுக்கும் அந்த நினைப்பும், செயலாற்றும் ஆர்வமும், அதற்கான துடிப்பும் வரும்.

இல்லையேல்; மாநாட்டுக்கான சுவரொட்டிகளை வண்ண வண்ணமாய் அச்சியற்றி அனுப்பினாலும் - சுவர்களில் மாநாட்டு விளம்பரங்களை எழுதுவதற்கு வண்ணங்களை அடுக்கடுக்காய் வழங்கினாலும் - இயல்பாகவே தொண்டுள்ளம் கொண்ட வர்கள்தான் அந்தப் பணியிலே ஈடுபடுவார்கள். அதற்குத் தூண்டுகோலாகவும், வழிகாட்டிகளாகவும் முன்னணியினர் இருந்திடல் வேண்டும். சென்னையில் நடைபெற்ற முதல் தி.மு.க. மாநாட்டில் அண்ணா அதற்கு வழிகாட்டினார்; திருவாரூரில் நடைபெற்ற மாநாட்டில் நாங்கள் அந்த வழியைப் பின்பற்றி நடந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தோம்.

அந்த வழிகாட்டும் தொண்டும் அதற்கெனத் தந்திட்ட உழைப்பும் வீண் போகவில்லை; இன்னமும் தொடர்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற விழுப்புரம், விருது நகர், சேலம், திண்டுக்கல் மாநாடுகள் விளங்கியதையும்; எங்கோ விழுப்புரத்திலோ, விருது நகரிலோ, சேலத்திலோ, திண்டுக்கல்லிலோ நடை பெறுகிற மாநாட்டுக்கு நமது ஊர் சுவர்களில் கொட்டை கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் எழுத வேண்டுமா என்று கேள்வி கேட்டுக் கொண்டு பொழுதைப் போக்குவதால் பயனேதுமில்லையெனக் கண்டு, அந்த மாவட்டங்களில், பட்டி தொட்டி முதல் பட்டினக்கரை வரையுள்ள சுவர்கள் அனைத்திலும் அனுமதி முறைப்படி பெற்று வண்ண எழுத்துக்களால் எண்ணங்களை வடித்திட வாரீர் வாரீர்! என மாநாட்டுக்கு

அழைத்து, அங்கு காண இருக்கும் இன எழுச்சியின் சிறப்பையும் உரைத்து எங்கெங்கு நோக்கினும் எழில்மிகு வாசகங்கள் - இதயம் தொடும் இலட்சிய முழக்கங்கள்! இத்தனையும் இங்கிருந்தவாறே நான் ஒரு கனவாய்க் கண்டு, இளைஞரணி, தொண்டரணி முதலிய எல்லா அணிகளின் செயல்வீரர்கள் தமிழகத்தின் சிற்றூர், பேரூர், நகர்களிலுமிருந்து தஞ்சை செல்லும் பாதைகள் அனைத்திலும் முற்றுகையிட்டு முத்து முத்தான எழுத்துக்களால் மாநாட்டுக்கான விளம்பரங்களையும் - மாநாட்டில் பெற்றிட வேண்டியதும் மனத்தில் பதிய வைத்துப் போற்ற வேண்டியதுமான கருத்துக்களையும் வரைவது போன்ற காட்சியை உணருகிறேன். அந்த உணர்வில் என் வயது எண்பதைத் தாண்டிவிட்டது என்றபோதிலும் - அன்றைக்கு திருவாரூரில் ஓர் இளைஞனைப் போலவே 34வது வயதில்; அதுவும் குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினரான புதிதில் - வண்ணக் கலயமேந்தி வகை வகையாக மாநாட்டுக்கான விளம்பரங்கள் எழுதிய கையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொள்கிறேன். உன் போன்ற ஆருயிர் உடன்பிறப்புகள் அனுமதித்தால் அந்தப் பணியை இன்றைக்கும் கூடச் செய்வேன். “தொண்டு செய்து பழுத்த பழம்” என்று நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தந்தை பெரியாரைப் பற்றி எழுதிய கவிதையில் இந்த ஒரு வரியாவது எனக்குப் பொருந்தினால்; நான் எவ்வளவு பேறு பெற்றவனாவேன். என் பணியையும் சேர்த்து நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் செய்கிற காரணத்தினால்தான் இடையிடையே ஓய்வு எடுத்துக் கொள்ளேன் என்று உன்னால் எனக்கு உத்திரவிட முடிகிறது. என் இனிய தம்பிகாள், அன்புத் தங்கைகாள், தியாகராயர், நாயர், நடேசனார் காலத்திலிருந்து நாம் நடத்திக் கொண்டிருப்பது; ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திட வேண்டி அல்லும் பகலும் விடாமல் ஓடிக் கொண்டிருக்கிற ஒரு தொடர் ஓட்டம்! இந்த ஓட்டத்திற்குக் காலம் கனிந்தது 1912ஆம் ஆண்டு என்றால்; அவ்வாறு கனிந்த பழத்தின் பயனை அனுபவிக்கும் பயிற்சியைப் பெறுவதற்கும் - அளிப்பதற்கும், பார்ப்பனரல்லாத திராவிட மக்களைத் தயார் செய்திடவும் - அதற்கான பிரகடனத்தை வெளியிடவும் 1916 வரையில் தலைவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. “சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷன்” - தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயருடன் அதன் தலைவர்கள் அப்போது வெளியிட்ட அறிக்கையின் விரிவாக்கம்தான் இன்றைய தி.மு. கழகத்தின்

"ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்" என்ற ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான தொடர் முழக்கம்.

"அனைவருக்கும் சம நீதி வழங்கப்பட வேண்டும் - மக்கள் தொகை அடிப்படையில் அதிகாரங்கள், பதவிகள் விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டும்" என்று அந்த முன்னோடிகள் தியாகராயர், நாயர், நடேசனார் தயாரித்த கோரிக்கையின் மூலாதார விதைதானே முளைத்துத் தளிர்விட்டு, இலை விட்டு, கிளை படர்ந்து, விரிவான குடை நிழலை, விழுதுவிட்ட ஆல மரமாக நின்று வழங்கிக் கொண்டிருக்கிறது. முன்னோடிகள் மூவர் தொடங்கிய தொடர் ஓட்டத்தில் - அவர்கள் ஏந்தி வந்த அந்த ஒளிச் சுடர்தான் - இடையில் ஆட்சிப் பீடமும் ஏறி - பின்னர் தந்தை பெரியாரின் கைக்கு மாறி; திராவிடர் கழகமெனும் திரு விளக்காக; ஏழை எளியோர், ஒளிமிக்க உரிமைகளைப் பெறக் களம் புகும் போர்க் குணத்தைக் கற்பித்தது - அதன் வாயிலாக நாம் கண்ட களங்கள் - சந்தித்த அடக்குமுறைகள் - எத்தனை எத்தனையோ ஆயினும் - நமது தொடர் ஓட்டப் பாதை மாறவில்லை . அது மாறாமலும்; கரடுமுரடான - மேடு பள்ளம் நிரம்பிய பாதையாக இருந்தாலும் - அதிலும் பயணம் செய்யக் கூடிய பழக்கம் உருவாக்க; சேலம் தீர்மானத்தின் மூலம் அறிஞர் அண்ணா செப்பனிட்டுக் கொடுத்த தீபச் சுடர் இன்று செழுஞ்சுடராக பெரியார், அண்ணா இருவரின் பிரியத்துக்குரிய மாணவர்களின் கைகளில் அமர்ந்து தொடர் ஓட்டப் பாதையை இனத்தின் மானம் காத்திடும் சுயமரியாதைப் பாதையாகவும்- மாநில சுயாட்சிக்கான களம் நோக்கிப் பயணம் நடத்தி உரிமைக்குரல் கொடுக்கும் வண்ணம் ஒப்பற்ற பாதையாகவும் உருவாக்கிய பெருமைக்குரியவர்களாக நாம் இருக்கிறோமென்றால் -

நாம் கடந்து வந்துள்ள இந்தத் தொடர் ஓட்டப் பாதையில் நாம் பட்ட தொல்லைகள் - சந்தித்த துன்பங்கள் - நாம் விரக்தியடைந்து ஓடுவதற்காகவே ஏவி விடப்பட்ட சோதனைகள் - வேதனைகள் - அடக்குமுறைகள் - சிறைச்சாலைகள் - நம்மீது தூவப்பட்ட அவதூறுகள் -

அம்மவோ; சொல்லி மாளாது! அத்தனையும் கடந்துதான் இன்னும் எத்தனை வேதனை சோதனைகளைக் கடக்கவும் தயார் எனத் தடந்தோள் தட்டுகிற அளவுக்கு; பெரியார், அண்ணா பாசறையில் தயாரிக்கப்பட்ட உடன்பிறப்புகளாகிய நாம்;

நமது பயிற்சியின் வளர்ச்சியை அவ்வப்போது கணக்கிட்டுக் கொள்வதற்கும்; மேலும் தேவைப்படும் ஊக்கத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும், நமது அறப்போர்ப் பட்டாளத்தின் வலிவை இன்னும் விரிவாக்கிக் கொள்வதற்கும், இத்தகைய மாநாடுகளில் கூடுகிறோமேயல்லாது - உடன்பிறப்புகள் ஒரு சிலரை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக அல்ல! திண்டுக்கல் மண்டல மாநாட்டு விளம்பரங்களை உன் போன்றோர் உன்னிப்பாகக் கவனித்திருந்தால்; உள் வட்டம் - வெளி வட்டம் - ஒன்றியம் - மாவட்ட மெனக் கழக நிர்வாகிகள் அனைவரின் பெயர்களையும் உருவப் படங்களையும் கண்டு மகிழக் கூடிய வாய்ப்பு; எல்லா இடங்களிலும் எனக்கும் உனக்கும் கிடைத்ததை எப்படி மறந்துவிட முடிகிறது? என்னால்தான் எல்லாம் என்று இறுமாப்புடன் மார் தட்டிக் கொண்டவனா நான்? இல்லை! இல்லவே இல்லை! உன்னால்தான் நானே - என்று உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொண்டு - உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் திருமுகத்தையும் நெஞ்சில் பதித்துக் கொண்டு பிஞ்சுப் பருவ முதல் தொடர் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறேன். அந்தப் பயணக் களைப்பு தீர்வதற்காகத்தான் மாநாடுகளில் உன்னைச் சந்திக்கும் ஏற்பாடு - இந்த ஏற்பாடுகள் எழுச்சிமயமாகத் திகழ்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக மாநாடுகள்!

வா, வா, அங்கே சந்திப்போம் - சாதிப்போம் என்று நாம் உறுதியளித்தவைகளில் இன்னும் பல பாக்கியிருக்கிறது -

அதற்கு இந்தச் சந்திப்புகள் பயன்படட்டும். அஞ்சா நெஞ்சனே; அறிவொளி தந்த பகுத்தறிவுப் பகலவனாம் பெரியாரின் பேரனே! அரசியல் நாகரிகம் கற்றுத் தந்த இன எழுச்சிக் காவலர் அண்ணாவின் தம்பியே! இப்படிப் பல கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளத்தான்; தஞ்சை அழைக்கிறது; என் நெஞ்சு குளிர; வா வா விரைந்து! குடும்பமாம் கழகம் அழைக்கிறது; கொள்கை காத்திடக் குலக்கொடியுடன் வா! மதுரையிலிருந்து திருவாரூருக்கு சென்றிருந்த என் மகன் மு.க. அழகிரியும், என் மகள் செல்வியும்; மதுரை தொட்டு திருவாரூர் செல்லும் வரையில் வழி நெடுக நமது கழக வாலிப ரத்தினங்கள் வழிந்தோடும் வியர்வைக்கிடையிலே வண்ணச் சுவரொட்டிகளை ஒட்டுவதிலும் - மாநாட்டு விளம்பரங் களை சுவர்களில் "பூதாகாரமாக" எழுதுவதிலும் ஈடுபட்டிருந்த கண்கொள்ளாக் காட்சியை அங் கிருந்தே தொலைபேசி வாயிலாக

எனக்குத் தெரிவித்து, பூரித்துப் போனார்கள். நான் அதை கோ.சி. மணிக்கும், தஞ்சை மாநாட்டு நிர்வாகிகளுக்கும் தெரிவித்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளச் சொன்னேன். தம்பி கோ.சி. மணியின் தலைமையில் மாநாட்டு வரவேற்புக் குழுவினர், அரும்பாடுபட்டு தஞ்சை மாநாடு என்றென்றும் நம் நெஞ்சில் இடம் பெறுமாறு செய்திட; இடையறாது பணியாற்றுகின்றனர் - இலட்சியப் பணி, இயக்கப் பணி, இனமானம் காத்திடும் எழுச்சிப் பணி - என்றுமே திராவிடர் வரலாற்றில் அழியாத பணி - அழிக்க முடியாத பணி - அரும்பணி - பெரும் பணி - அதுதான் கோ.சி. மணி தலைமையில் என் உடன்பிறப்புகள் அனைவரும் ஆற்றுகின்ற மகத்தான பணி; தஞ்சை மாநாட்டுப் பணி!

அன்புள்ள,

மு.க.

05-04-2005

3125. வான்புகழ் கொண்ட வள்ளுவம் (68)

வான்புகழ் கொண்ட வள்ளுவம் (69)

(கலைஞர் கவிதை)

உண்டென்பதையும் இல்லை யென்பதையும்
நடந்ததையும் நடக்கப் போவதையும்

வெட்டு ஒன்று துண்டு இரண்டாக
வெடுக்கென்று கூறி;

உண்மையை ஒளி வெள்ளத்தின் முன் நிறுத்துகின்ற
உளம் படைத்த பேராசிரியர் அன்பழகனாருடன்;

'வள்ளுவம்' பற்றி நடந்த விவாதத்தின் போழ்து
"வறுமை காரணமாக இரந்து கேட்பது பெருமையுடையதே"
என்றார் அவர்!

"ஏற்பது இகழ்ச்சியன்றோ ?" என ஒரு வினா
எழுந்த போது;

"இல்லாதார் யாராயினும் அவர்கள்; இல்லையென்று
சொல்லாதாரிடத்தில்;

இரத்தலும் "ஈதல்'' போன்றதே யென்று
'இரவு'க்குற்ற பழியை வள்ளுவர் துடைக்கிறார்" என்றார்.

ஆம்;

உள்ளதை ஒளிக்காத உள்ளமும் - அதில்
ஓங்கி நிற்கும் கடமையுணர்வும் கொண்டோரிடம்,

வறுமை காரணமாக இரந்து கேட்பது
பெருமையுடையது மட்டுமல்ல; கேட்பவரை

வள்ளலாகவும் ஆக்க வல்லது என
தெள்ளு தமிழ்த் திருக்குறள்

அள்ளித் தெளிக்கும் கருத்தை
அமிழ்த மென்போம் -

அன்பின் வெளிப்பாடு எனவும்
அய்யன் வள்ளுவரைப் போற்றி மகிழ்வோம்!

“இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு”

(இருக்கும்போது இல்லையென்று கை விரிப்பதைக்
கனவிலும் நினைக்காதவரிடத்தில், இல்லாதார்
இரந்து கேட்பது பிறருக்கு ஈவது போன்ற பெருமை
உடையதாகும்)

இரவு = யாசிப்பது
கரத்தல் = மறைத்து வைத்து இல்லையெனல்
தேற்றாதார் = அறியாதவர்

அதிகாரம் 106 இரவு குறள் 1054

* * *

‘வைகறை மேகங்’களை வானத்தில் பரப்பி
வையத்தில் கவிதைக் குரல் கணீரென ஒலித்திடும்

வைரமுத்துக் கவிப் பேரரசு என் தம்பி, நாள் தோறும்
வைகறையில் தொலைபேசித் தொடர்பு கொள்ளாவிடில்

மன நிறைவு ஏற்படாது எம் இருவருக்கும்!
“இன்று படித்தேன் எழுதியதை” எனத் தொடங்கி,

நாளை எழுதுவதற்கும் வாளைக் கூர் தீட்டித் தருவது போல்
தாளை நான் கறுப்பாக்கிட “ஊக்க மை’’ வழங்கிடுவார்.

“எழுபது ஆண்டுகளாய் எழுதுகிறீர் – எழுச்சியும் வீச்சும்
இப்போதும் அப்படியே இருப்பதற்கு என்னதான் காரணம்?’’
என்று, இன்று கூடக் கேட்டார் – என்றுமே கேட்பார்
எழுதுகின்ற கால நேரம் மனநிலை குறித்துக் கேட்டபோது
சொன்னேன்;

அய்யன் வள்ளுவர் ‘’குடிசெயல் வகை” அதிகாரத்தில்
அத்தனை குறட் பாக்களிலும் என்ன எழுதியுள்ளார் ?

தன் மீது நடத்தப்படும் இழிவான தாக்குதலால்
மனோ நிலை பாதிக்கப்பட்டுக் கலக்கமுறுவதாலும்,

தம்மின மக்களின் நலன் காக்க உரிய காலத்தை விடுத்து
பணியாற்றிடப் பருவகாலம் பார்த்துக் கொண்டிருப்பதாலும்

பழியுரைப்போர் கண்டு சோர்வடைவதாலும்
மொழியும் இனமும் முன்னேறும் காலம்தான் தள்ளிப் போகும்

வாழ்க்கையில் போராட்டங்களை வரவேற்று மட்டுமல்ல;
போராட்டங்களையே வாழ்க்கையென வரித்துக் கொண்டு

அனைத்தையும் தாங்கிப் படை நடத்தும் அரிய பொறுப்பினை
அஞ்சாமல் ஏற்றுக் கொள்ளும் ஆற்றலும் வேண்டுமென

அய்யன், அந்த அதிகாரத்தில் அறிவுறுத்துவதை
அடியேன் மறக்காமலிருப்பதை அருமைக் கவிஞரும்

அடிக்கடி நினைவூட்டி மகிழ்ந்திடுவார்; நானும்
அக்கருத்தைப் பகிர்ந்து கொள்கிறேன் உம்மோடு!

★

“குடிசெய்வார்க்கு இல்லை பருவம் ; மடிசெய்து
மானம் கருதக் கெடும்”

(தன்மீது நடத்தப்படும் இழிவான தாக்குதலைக் கண்டு கலங்கினாலோ, பணியாற்றக் காலம் வரட்டும் என்று சோர்வுடன் தயக்கம் காட்டினாலோ குடிமக்களின் நலன் சீர்குலைந்து விடும்)

“அமர்அகத்து வன்கண்ணர் போலத் தமர்அகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை”

(போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கிப் படை நடத்தும் பொறுப்பு அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான் குடி மக்களைக் காப்பாற்றி உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு)

அமர் = போர் வன்கண்ணர் = வீரர்

அதிகாரம் 103 குடிசெயல்வகை குறள் 1028, 1027

* * *

(அறத்துப்பால், பொருட்பால் ஆய்வுரை, அழகுரை நிறைவுறுகிறது)

அன்புள்ள,
மு.க.
13-04-2005

3126. புதுப்புனலைக் காண்போம் - பூரிப்பு மிகக் கொள்வோம்!

உடன்பிறப்பே,

தஞ்சைத் தரணியில் தி.மு. கழகத்தின் மண்டல மாநாடு - நெஞ்சையள்ளும் வகையில் நடைபெறுவதற்கான, முறையான ஏற்பாடுகள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டுள்ளன என்ற செய்திகளை மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி கோ.சி. மணி நாள்தோறும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

மாநாட்டுச் செயலாளர்களாகப் பொறுப்பேற்றுள்ள தம்பிகள் பழனி மாணிக்கம், ரகுபதி ஆகியோரும் தம்பி பம்பப்படையூர் கல்யாணசுந்தரமும், தம்பி குற்றாலம் கல்யாணமும் சென்னைக்கு நேரிலே வந்து சந்தித்து மாநாட்டிலும் மண்டலம் முழுவதும் எழில் குலுங்கிடவும் எழுச்சி நிரம்பிடவுமான ஆக்கப் பணிகளைக் கழக அடலேறுகள் ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறியது எனக்குச் செந்தேனாக வன்றோ இனிக்கிறது.

என் உயிரனைய உடன்பிறப்புகள் மாநாடு நடை பெறவிருக்கிற அந்த மாபெரும் திடலிலே மட்டுமல்ல; அந்த மண்டலத்தில் இணைந்துள்ள மாவட்டங்கள், அவற்றை ஒட்டியுள்ள பகுதிகள் - அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நமது இரு வண்ண இலட்சியக் கொடிகளை வானை மறைக்குமளவுக்குத் தோரணங்களாகப் பரப்பிடவும் - இலட்சிய முழக்கங்களை எழுதிடவும் - இடமில்லாமல் இங்குமங்கும் அலைகின்ற காட்சிகளையும், மாநாட்டுப் பணிகளையும் கண்டு வரும் கழக முன்னோடிகள் என்னிடம் விளக்கும்போது; அந்தப் பகுதிகளின் பெயர்களையும், சிற்றூர், பேரூர்களின் விபரங் களையும் குறிப்பிடுகிறார்கள். அப்போது என் நினைவு; தஞ்சை மண்டலத்தில் இந்தப் பட்டிதொட்டிகளில் எல்லாம் பாலப் பருவத்திலேயே அலைந்து திரிந்து காலை முதல் நள்ளிரவு வரையில் எத்தனை கூட்டங்களில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் கலந்து கொண்டோம் - அந்தப் பிரச்சாரங்களுக்கு எத்தனை

எத்தனை எதிர்ப்பு - தடை - குக்கிராமங்களில் கூட விடிய விடியக் கூட்டம் பேசியிருக்கிறோமே - திராவிடர் கழகக் கூட்டமொன்று 'திருமதிக்குன்னம்' என்ற கிராமத்திலே நடத்தப் போய்; கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே கூட்டம் நடத்திய அந்த ஊர் திராவிடர் கழகச் செயலாளரின் உறவினர்கள்; சற்று முரடர்கள் - நமதியக்கத்தை நசுக்கிடும் 'நல்ல'(?) எண்ணம் உடையோர் - அவர்கள்; கூட்டத்திற்கு வெளிச்சம் தந்து கொண்டிருந்த "பெட்ரோமாக்ஸ்'' விளக்குகளைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். பிறகென்ன; இருட்டில் என்ன செய்ய முடியும்? இருட்டை அகற்றத் தானே பிரச்சாரம். கூட்டம் ஏற்பாடு செய்த தி.க. செயலாளரை ஒரு பெரிய மண் சட்டி கொண்டு வரச் சொல்லி அதிலே தீப்பந்தம் போட்டு எண்ணெய் ஊற்றி, மேஜை மீது கப்பறை போல வைத்து அந்த ஒளியில் நான் பேசினேன். கூட்டம் நடந்து முடிந்தது.

இப்படியெல்லாம் சிரமப்பட்டு மக்களைச் சந்தித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பட்டபாடுகளையும் - இன்று அத்தகைய பகுதிகளிலிருந்தெல்லாம் விழிப்புணர்வு பெற்றவர்கள் மேலும் விளக்கங்கள் பெறவும் - வீறு கொண்டெழுந்து; நாடும் சமுதாயமும் முன்னேறுவதற்கு ஓயாது உழைத்திடவும் - பயிற்சி பெற்றிடும் மாபெரும் பாசறையாகத்தான் இந்த மண்டல மாநாடு அமையவிருக்கிறது.

மாநாடு என்று அழைத்தோம், வந்தீர்கள், மாநாடு முடிந்தது, சென்றீர்கள் என்றில்லாமல் -

மக்கள் பிரச்சினைகளை

சமுதாயப் பிரச்சினைகளை

விவசாயிகள்

தொழிலாளர் பிரச்சினைகளை

மத்தியிலும்

மாநிலத்திலும்

நடைபெறுகிற

ஆட்சிகளைப் பற்றிய

பிரச்சினைகளை

அங்கும் இங்கும்

ஆட்சியாளர்களின்

அணுகுமுறையின் வேறுபாடுகளை

சர்வாதிகாரப் புயலுக்கும்

ஜனநாயகத் தென்றலுக்கும்

இடையேயுள்ள

மாறுபாடுகளை

உணரவும் -

எல்லாப் பிரிவு

மக்களுக்கும் உணர்த்தவும்

கழகத்தில் கடும் பணி புரிந்திடக் கூடிய பல்வேறு அணிகள் இருக்கின்றன. அந்த அணிகள் நாடு முழுதும் பணியாற்றிடப் பக்குவம் பெற்றிடவும் - அதற்கான அறப்போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் பயிற்சியினைக் கற்றிடவும் - இந்த மண்டல மாநாடு பெரிதும் பயன்படுமென்பதால் பயன்படுத்திக் கொள்ள உடன்பிறப்புகள் ஒருவரையொருவர் முந்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இளமைக் கால முதல் அரசியல் தெளிவும் - பகுத்தறிவுச் சமுதாயம் மலர வேண்டுமென்ற உணர்வும் - மாணவப் பருவத்திலேயே தமிழ் இயக்க ஆர்வமும் -

தன்மான இயக்கத்தின் சூடு தணியாக் குருதி யோட்டமும் கொண்டு அடக்குமுறைகளுக்குப் பல முறை ஆளானவரும் - மிசாக் கொடுமையும் அனுபவித்துத் தியாக முத்திரை பெற்றவருமான என்னருந் தம்பி துரைமுருகன் இந்த மாநாட்டுக்குத் தலைமை யேற்பது ஒரு சிறப்பு - பெரு மகிழ்ச்சி - அதுவும் இந்த அண்ணனுக்கு தனி மகிழ்ச்சி!

மற்றொரு சிறப்பாகத்தான் அன்புத் தம்பி பரிதி இளம்வழுதி மாநாட்டுத் திறப்பாளராக அமைந்து, வீரர் உரையாற்ற இருக்கிறார். என் பழைய நண்பர் மறையாத மாணிக்கம் இளம்பரிதியின் மகன் - ஆம், எனக்கும் மகன் முறைதான்!

இனிய உரையாகவும், கவர்ந்திழுக்கும் கவிதை உரையாகவும், கழகக் கொடியேற்றுகிற கவி நிலவு திருமதி நிர்மலா சுரேஷ்; அறிஞர் அண்ணாவின் ஆருயிர் நண்பர் திருச்சி பேராசிரியர் இருதயராஜின் திருப்புதல்வி; அறிவுச் செல்வியாக விளங்கும் அன்புச் செல்வி!

முதல் நாள் சனிக்கிழமை காலையிலேயே கோ.சி. மணியின் வரவேற்புரை, தியாகத் தழும்புகளின் திருவாசகமாகவே திகழும்.

இசை முரசு நாகூர் அனிபாவின் இடியொலிக் குரலில் "அழைக்கின்றார் அண்ணா" காதில் முழங்கியவாறு காலை நிகழ்ச்சி தொடங்கும்.

மாநாட்டுத் தலைவர் - திறப்பாளர் - கொடியேற்றியவர்;

மூவரும் அடுக்கடுக்காக எடுத்து வைக்கும் அரசியல் ஆய்வுத் தீர்வுகள் -

சமுதாய மறுமலர்ச்சிக்கான சான்றுகள் தொகுத்து வழங்கிடும் சரித்திரக் கண்ணோட்டம் - வாழ்வதற்கான வகையை வஞ்சக ஆட்சியில் தொலைத்துவிட்டு துயருற்று அலையும் தமிழ்க் குடி மக்கள் பற்றிய படப்பிடிப்பு - இத்தனையும் காணவும் கேட்கவும் கண்டுணரவும் - கேட்டுணரவும் உன் போன்றோர்க்குப் பெரும் வாய்ப்பல்லவா!

"நல்ல சமயமிது; இதை

நழுவ விடுவாயோ'' எனப் பாடல் ஒன்றுண்டு - அதை நானும் பாடலாமா; உன்னைப் போன்ற உடன்பிறப்புகளைப் பார்த்து?

தஞ்சை மாநாட்டுத் தீர்மானங்கள் மாநாட்டின் முதல் நாளே நிறைவேற இருக்கின்றன.

- மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி
- மத்திய ஆட்சி மொழியாக மாநில ஆட்சி மொழிகள்
- தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயத் தமிழ்
- திருக்குறளை தேசிய நூலாக்குதல்
- திருமதி சோனியா காந்தி அவர்களின் தலைமையில் உருவாக்கப் பெற்று அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சப் பொதுச் செயல் திட்டம்

- சமூக நீதி
- மத நல்லிணக்கமும், மதச் சார்பற்ற ஆட்சியும்
- நதிகள் இணைப்பு
- பொதுத் துறை நிறுவனங்கள்
- பத்திரிகைத் துறையில் அன்னிய முதலீடு
- பத்திரிகைகளும் ஜனநாயகக் கடமையும்
- காவிரி நடுவர் மன்றம்
- வேலை நிறுத்த உரிமை
- விவசாயிகள் நெசவாளர் வேதனை
- பணியாளர்களைப் பழிவாங்கும் அரசு
- சட்டமன்ற மரபுகள் - உரிமைகள் மீறல்
- சுனாமி நிவாரண ஊழல்
- சிறுபான்மையோர் இட ஒதுக்கீடு
- அ.தி.மு.க. ஊழல்களும் நிர்வாகச் சீர்கேடுகளும்

இவை போன்றவற்றை வெறும் தீர்மானங்களாக மட்டுமல்ல; இந்தத் தீர்மானங்களை உள்ளடக்கிய விளக்க உரையாகவே; மாநாட்டில் சொற்பொழிவாளர்களாகக் கலந்து கொள்வோரின் கருத்துக்கள் அமையும்.

உடன்பிறப்பே, சில கட்சிகளின் மாநாடுகளிலே கண்டிருக்கிறோம்; தீர்மானங்களுக்காக ஒதுக்கப்படும் நேரம் தான், அந்த மாநாடுகளில் இடை வேளை, நேரமாகக் கொள்ளப்படும். தேநீர், காபி அருந்திடத் திரண்டிடுவர் அந்த விடுதிகளில்!

நமது மாநாட்டில் கண்ணும் கருத்துமாக இருந்து தயாரிக்கப்பட்டுள்ள; அரசியல், சமுதாய, பல்வேறு பிரிவு மக்களின் பிரச்சினைகளை உள்ளடக்கிய தீர்மானங்கள் ஒவ்வொன்றும் உயிரானவை! எல்லாப் பிரிவு மக்களையும் பிணைப்பதால் அவை உயர்வானவையும் கூட!

உயிரானவை - உயர்வானவை என்று கருதுகிற மாநாட்டுத் தீர்மானங்களையும், அவற்றில் இடம் பெறாது எஞ்சியுள்ள,

முக்கியமான பல்வேறு மக்கள் பிரச்சினைகளையும் உள்ளடக்கி முப்பதுக்கு மேற்பட்ட தனித் தலைப்புகளில் நமது கழகத்தின் வீறு கொண்ட விரிவுரையாளர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவிருக்கிறார்கள்.

- பெண்ணுரிமை பேசும் திருநாட்டில்? மொழிப் போராட்டங்களில் கண்ட களங்கள்
- பெரியார் வழங்கிய சுயமரியாதை உணர்வும் மனித உரிமைகளும்
- அண்ணா வழியில் அயராது உழைப்போம்

போன்ற தலைப்புகளில் கொள்கை முரசுகள் ஒலிக்க இருக்கின்றன.

கொள்கைப் பிரச்சாரத்துக்காகவும், இயக்கத்தின் எழுச்சி மேலும் வலிவு பெறுவதற்காகவும் - தி.மு.க. எனும் இந்த ஜீவநதியில் பல துணை நதிகள்; அதாவது திராவிட இயக்கத்துக்குப் புது ரத்தமாக - புதிய வரவுகளாக - ஏராளமான இளைஞர்கள் வந்திணைந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் புதியவர்கள் கடந்த மாநாடுகளில் மேடையேறி ஒலி பெருக்கி முன்னால் நின்று கர்ச்சனை புரிந்ததையும் - கழகக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதில் தெளிவு மிகக் கொண்டிருந்ததையும் பாராட்டி வரவேற்று - அனுபவச் சுரங்கமாகத் திகழும் பழம்பெரும் எழுத்தாள நண்பர் திரு. சோலை அவர்கள் "ரிப்போர்ட்டர்" வார ஏட்டில் கட்டுரை தீட்டியிருந்ததை மறந்திருக்க மாட்டாய். அத்தகைய பாராட்டுக்களை மேலும் பெறுகிற வண்ணம் தஞ்சை மாநாட்டில் புதுப் புனலைக் காண்போம் - பூரிப்பு மிகக் கொள்வோம்.

உடன்பிறப்பே, என் அழைப்பையும், மாநாட்டு வரவேற்புக் குழுவினர் அழைப்பையும் ஏற்று - நீயும் உடனே தஞ்சை நோக்கிப் புறப்படுவாய் - உன் தாய், தந்தை, மனைவி மக்களையும், உற்ற நண்பர்களையும், கழக உடன்பிறப்புகளையும் அழைத்துக் கொண்டு வரத்தான் போகிறாய் - ஆனால் ஒன்று; நான் அடிக்கடி அன்போடும் பாசத்தோடும் விடுத்திடும் வேண்டுகோளை தயவு செய்து யாரும் அலட்சியப்படுத்த வேண்டாம் - எந்த வாகனத்தில் வந்தாலும்; மந்த வேகத்தில் வந்தாலே போதுமானது;

அண்ணன் அழைத்தேன்; தம்பிகளும் தங்கைகளும் தட்டாமல் தயங்காமல் வந்தீர்கள் - தஞ்சை மாநாடு முடிந்து சொந்த ஊர் நலமாகத் திரும்பினீர்கள் என்ற நற்செய்திக்காகத் தான் நான் காத்திருப்பேன் என்பதை நன்கறிவீர்கள். என் நம்பிக்கை வீண் போகாமல் வாருங்கள். திரும்பிய பிறகும் என் செவி குளிர நற்செய்தி தாருங்கள்.

அன்புள்ள,

மு.க.

14-04-2005

3127. நெஞ்சையள்ளிய தஞ்சை; நிகரிலா மாநாடு!

உடன்பிறப்பே,

நெஞ்சையள்ளும் தஞ்சை என்று நான் புகழ்ந்துரைத்தது; தம்பி கோ.சி.மணி முன்னின்று நடத்திய மண்டல மாநாட்டைப் பற்றியென்றாலும்; உண்மையிலேயே இந்த மாநாடு நம் உள்ளம் கவர்ந்த மாநாடாகவே அமைந்தது - உள்ளங்கவர் கள்வன் என்று ஒரு காதலி உருகுவதைப் போலவும் - மனங்கவர் மைந்தன் என்று தாய் ஆனந்தக் கண்ணீர் பெருக்குவது போலவும் - நேசம் பொங்கும் நண்பன் என்று ஒரு தோழன் பாசம் பொழிவது போலவும் - மணாளனாக, மைந்தனாக, தோளுக்குத் துணையான தோழனாக; அன்றும் - இன்றும் - என்றும் நம் நெஞ்சை அள்ளிக் கொண்டும் துள்ளிக் கொண்டும் இருக்கக்கூடிய எழுச்சியும் எழிலும் வாய்ந்த மாநாடல்லவா அது?

படித்தேன் ஏடுகளில், மழை கொட்டுகிறது என்று! துடித்தேன்; மாநாடு என்ன ஆகுமோ என்று! ஆனால் இன்று? நினைத்தாலே படித் தேனாக இனிக்கிறது..... "நெஞ்சையள்ளும் தஞ்சை"யென்று இதழ்கள் தானாகவே துடிக்கின்றன.

இத்துணை சிறப்பாக மாநாடு நடத்தியவர்களை - ஊக்கம் கொடுத்தவர்களை - ஆக்கம் அளித்தவர்களை - ஓயாது உழைத்தவர்களை - ஓடியாடிப் பாடுபட்டவர்களை - கண்ணுறங்காமல் கருமமே கண்ணாக அலைந்து திரிந்தவர்களை - ஒவ்வொருவரையும் பெயர் கூறி அவர்கட்கு என் கைகளால் விருது வழங்கிட இயலாவிடினும்; பெயர் கூறி அவர்களைப் பெருமைப்படுத்தியும் - அதனால் நான் பெருமைப்பட்டுக் கொள்ளவும் போதிய நேரம் எனக்குக் கிடைக்காமற்போயிடினும்; அந்தப் பொன்னி நதி தீரத்துப் புதல்வர்களை என் உயிரினும் மேலான உழைக்கும் உடன்பிறப்புகளை உள்ள மெனும் சுவரில் அல்லவா கண்ணாடி போட்டு மாட்டிவைத்திருக்கிறேன்.

நேரம் மட்டும் அவர்களையெல்லாம் என்னுரையில் தொட்டுக் காட்டிப் புகழ்ந்துரைத்திடக் கிடைத்திரு தால்; பெரும் பேறு பெற்றவனாகியிருப்பேன். தஞ்சையில் மட்டுமல்ல; அண்மையில் மாநாடுகள் நடைபெற்ற விழுப்புரமாயினும், விருதுநகராயினும், சேலமாயினும், திண்டுக்கல்லாயினும், இப்போது தஞ்சையிலாயினும் எனக்கு நிறைவுரையாற்றிடப் போதுமான நேரம் எனும் வாய்ப்புத்தான் வாய்க்காது போயிற்று! அந்த வாய்ப்பை இழந்தமைக்காக என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் இந்தக் கடிதத்தில் அவர்களைப் பொதுவில் பாராட்டும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கிறேன். ஒரு சில மாநாட்டு நிர்வாகிகளின் பெயர்களை மட்டுமே குறிப்பிட முடிகிறது; மாநாட்டுக்கு முன்பே அத்தனைக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்களின் பெயர்கள் விளம்பரங்களாக வந்துவிடுகிற காரணத்தால்; எனக்கோர் ஆறுதல்!

என் செய்வது; விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு நிறைவாகத்தானே பரிமாறவேண்டும் - அதைச் செவ்வனே செய்து முடிக்கும் தாய், தன் பிள்ளைகளுக்கும் பசியாறப் பண்டம் வழங்கினால் தானே அவளுக்கும் மனமகிழ்ச்சி! பிள்ளைகளுக்கும் பெருமகிழ்ச்சி!

இதயமார எல்லாம் வழங்கியது போக எஞ்சியதை தாய் அருந்தி ஆனந்தங்கொள்வதைப் போலவே - நானும் ஆனந்தமடைகிறேன்.

விழாவுக்கு வா; மாநாட்டுக்கு வா; அறப்போருக்கு வா- என்றெல்லாம் உடன்பிறப்பே; உன்னை அழைத்து விட்டு - உன்னை உட்காரவைத்து உரைத்திட வேண்டியதை மட்டும் குறைத்துக் கொள்வதால் கோபமடைவாயோ என்ற நினைப்பினால்தான்; இத்தனையும் எழுதுகிறேனோ என நீ எண்ணிட மாட்டாய்!

நிலைமையை உணர்ந்து கொள்ளவும் - நிலைமைக்கேற்ப நடந்து கொள்ளவும் தெரிந்தவன் நீ - அதிலும் அன்று தஞ்சை மாநாட்டில் நான் நிறைவுரையாற்றும்போது என் நிலைமை என்ன தெரியுமா உனக்கு?

மாநாட்டுக்குப் புறப்படுவதற்கு முதல் நாளே எனக்குக் கடுமையான பல் வலி! பல் மருத்துவர் தம்பி வெற்றிவேந்தன்தான் நீண்ட நேர சிகிச்சையளித்து சென்னையில் நான் ரயிலேறிட

அனுப்பி வைத்தார். ரயிலில் வந்த அலைக் கழிப்பு-மாநாட்டில் இரு நாட்கள் பங்கேற்ற களைப்பு - எல்லாம் சேர்ந்து நான் உரையாற்றுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு மீண்டும் அதே கடுமையான பல் வலி - "பல் வலி"யினால் "சொல் வலி" அற்றுப்போய்விடக் கூடாதேயென்று என்னுடன் வந்திருந்த மருத்துவர் கோபால் உதவியுடன், வெற்றிவேந்தனைத் தொடர்பு கொண்டு தொடர் சிகிச்சை பெற்ற வண்ணம் - மாநாட்டு மேடைக்குப் பேச வந்து விட்டேன்.

அட்டடா; அந்த ஒன்றே கால்மணி நேரம் பல்லுக்கும் என் சொல்லுக்கும் கடுமையான மோதல்தான். அதனால் பாதிக்கப்பட்டது பல்லுமல்ல; என் சொல்லுமல்ல! என் சொல்லுக்கு என்றைக்குமே பாதிப்பு நேராது! உடல் நலம்தான் பெரிதும் பாதித்து ஊர் திரும்பினேன். வழியில் மாநாட்டுக்கு வந்த என் தம்பிமார்கள் இரண்டொருவர் விபத்தில் உயிரிழந்து என் விழிகளை சோக அருவிகளாக்கி விட்டனர்; புராணீகர் பழமைவாதிகள் கூறுவார்களே - அதைப் போல "திருஷ்டி பரிகாரம்" அதில் எனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் - நமது நம்பிக்கைக்குரிய உடன்பிறப்புகள் அல்லவா அந்த இருவரும்! அவர்களில் இரண்டு நாட்களும் என்னுடன் இருந்த தம்பிகள் ராமச்சந்திரன் - செந்தில் இருவரும் பலியாயினர் அன்றிரவு நடந்த விபத்தில். தம்பி எ.வ. வேலுவின் பணியாளர்களாகப் பொறுப்பிலிருந்தவர்கள் - நேசமும் பாசமும் கொண்ட இந்த இயக்கத்தின் வேர்கள்!

மேலும் ஓரிரு விபத்துகள் - இழப்புகள் வேலும் ஈட்டியும் சேர்த்து நுழைந்ததுபோல என் இதயத்தில் நுழைந்து விட்டன. அந்தக் கழகக் கண்மணிகளின் குடும்பத்துக்கு கழகம் துணை நிற்கும் என்றாலும்; ஒவ்வொரு கடிதத்திலும் எவ்வளவு எச்சரிக்கை செய்கிறேன். வேண்டுகோள்கள் விடுக்கிறேன். இரவுப் பயணம் வேண்டாம் - பகல் எனினும் விரைவுப் பயணம் வேண்டாமென்று! எனது அன்பு வேண்டுகோளை ஏற்காத காரணத்தால் நானல்லவா துன்பத்தில் துவளுகிறேன்.

இந்தப் படையில் ஒரு வீரன் குறைவதும் நல்ல உடையிலோர் கிழிசல் வந்ததுபோல எனக் கருதிக் கண் கலங்குவனல்லவா; உடன்பிறப்பே உன் தலைவன்? அதையேன் உடன்பிறப்புகள் மறந்துவிடுகிறார்களோ தெரியவில்லையே! என் உள்ளம் இதுபோன்ற அதிர்ச்சிகளைத் தாங்க முடியாமல் தவிப்பதையும்

தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்களே; என்பது எவ்வளவு பெரும் வேதனை!

இத்துணை வேதனைகளையும் விழி நீர் பெருக்கும் நிகழ்ச்சிகளையும் தாண்டிக் கொண்டுதான் - தமிழகம் விழித்தெழ வேண்டுமென்று தஞ்சை மாநாடுகள் போன்ற தன்மானப்பாசறைகளில் கூடுகிற ஏற்பாடுகளைக் காணுகிறோம்.

உழைப்புக்கு வெற்றி கிட்டுமென உறுதி பூணுகிறோம்.

நம் உறுதிக்கு வலுவூட்டும் வண்ணம் எல்லா வகையிலும் மிகப் பெரியதோர் மாநாட்டை வண்ண மிகு வனப்பு எனினும் - வரவேற்பு உபசாரம் - வசதி வாய்ப்புகள் எனினும் - கட்டிக் காத்த கட்டுப்பாடு எனினும் - ஒழுங்குமுறை எனினும் - மேடை எனினும் - முகப்பு எனினும் - எல்லாமே சீரோடும் சிறப்போடும்; வழங்கிய நிதியும் மனநிறைவாக அமைந்த அரியதோர் மாநாட்டை நடத்திக் காட்டிட உழைத்திட்ட ஒவ்வொரு உடன்பிறப்புக்கும்; ஓராயிரம் நன்றி!

குறிப்பாக என் நிறைவுரையில் "பொன்னியின் செல்வன்" என நான் புகழ்ந்துரைத்த தம்பி கோ.சி. மணி தலைமையில் கழகப் பட்டாளத்தின் கட்டாணி முத்துக்களாம் வரவேற்புக்குழு செயலாளர்கள் தம்பிகள் பழனிமாணிக்கம், ரகுபதி, ஏ.கே.எஸ். விஜயன், பூண்டி கே.கலைச்செல்வன், பெரியண்ணன் அரசு - உறுப்பினர்கள் அ. அப்துல்சமது, கு. சுல்தான், சி. இறைவன், அ. அம்பலவாணன், கோ. மோகன தாசன், மா. மீனாட்சிசுந்தரம், கு.பாலகிருஷ்ணன், ந.உ. சிவசாமி, அ.அசோகன், எம்.எல்.ஏ., அறந்தாங்கி இராசன், சி. அம்பிகாபதி, த. சந்திரசேகரன் - குழுக்கள் பலவற்றின் தலைவர்களான, நிதிக்குழுத் தலைவர் எஸ்.என்.எம். உபயதுல்லா, எம்.எல்.ஏ., செயலாளர் சு. கல்யாணசுந்தரம் - மாநாட்டு அலுவலகப் பொறுப்புக் குழுத் தலைவர் டி.எஸ். கல்யாணசுந்தரம், செயலாளர் கோ. இரவிச்சந்திரன் - தீர்மானக் குழுத் தலைவர் செ. இராமலிங்கம், செயலாளர் பி. உடையப்பன் - பந்தல் குழுத் தலைவர் து. செல்வம், செயலாளர் சி. முத்துசாமி - மேடைக் குழுத் தலைவர் இரா. துரை, செயலாளர் இல. மேக நாதன் - உபசரிப்புக் குழுத் தலைவர் க. அன்பழகன், செயலாளர் டி.கே.ஜி. நீலமேகம் - பிரச்சாரக்குழுத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், செயலாளர் த. காரல்மார்க்ஸ் - அலங்காரக் குழுத் தலைவர் எம். இராமச்சந்திரன்,

செயலாளர் போலீஸ் அ. பன்னீர் செல்வம் - விளம்பரக் குழுத் தலைவர் குத்தாலம் பி. கல்யாணம், செயலாளர் செ. ஜெயராமன் - மலர்க் குழுத் தலைவர் என். பூபதி, செயலாளர் டி. மணி வண்ணன் - தொண்டர் அணித் தலைவர் சா. கணே சன், செயலாளர் பி.பாவானந்தம் - மகளிர் அணித் தலைவர் பி. இராஜேஸ்வரி, செயலாளர் ஜி. விஜய குமாரி - மகளிர் தொண்டர் அணித் தலைவர் திருமதி பி. உஷாராணி, செயலாளர் எஸ்.கே.எம். தமிழரசி மற்றும் பெயர் விளம்பரம் பற்றிக் கவலைப்படாமல் பேருழைப்பை நல்கிய பிரியமுள்ள உடன்பிறப்புகள் - மாநாட்டுக்கு வருகை தந்து; மாநாட்டில் செயலாற்றியவர்களுடன் ஒத்துழைத்த கழகத்தின் லட்சோப லட்சம் உடன்பிறப்புகள் - தமிழ் மக்கள் அனைவருமே தஞ்சையை நெஞ்சையள்ளும் தஞ்சையாக்கி விட்டனர் என்பதே உறுதி குலையாத உண்மையாகும்.

அன்புள்ள,

மு.க.

20-04-2005

3128. கொட்டுக முரசு; எட்டுக முழக்கம் எங்கணுமே!

உடன்பிறப்பே,

இது என்ன நாடா?
அல்லது இட்லர் என்று
தன்னை நினைத்துக் கொண்டு
இழிபிறவிகளும்
கழிசடைகளும்
சர்வாதிகார ஒத்திகை நடத்தும்
காடா?

கேலிச் சிரிப்புடனும், கோபக் கனலுடனும், இந்தக் கேள்வி; தமிழ்நாட்டுப் பொதுமக்கள் உள்ளத்திலே பொங்கியெழுந்து; அந்தக் கொந்தளிப்பும் குமுறலும் சுமத்திரா தீவினைத் தாக்கிய "சுனாமி"யைப்போல் - இங்கேயுள்ள அ.தி.மு.க. ஆட்சியைத் தாக்கித் தகர்க்கும் தருணம் வெகு விரைவில் வந்து கொண்டிருக்கிறது.

சூழ்ச்சியின் சுழற்சியில் சிக்கிக் கொண்டு இந்த ஆட்சியுடன் சேர்ந்து சுற்றுகிறவர்கள் - அல்லது சுற்றித்தான் தீரவேண்டும் என்பதால் பாதம் பற்றிக் கொண்டு பதைப்பவர்கள் - அல்லது பணம், பதவி, பவிசுகளுக்காக பல் இளிப்பவர்கள் என; இப்படிச் சரிந்து கொண்டிருக்கிறது இந்த சாம்ராஜ்யம் - இனி அதிக நாள் தாங்காது என்பதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன.

ஊராட்சியமைப்புகளின் இடைத்தேர்தலில்கூட ஜனநாயகத்தை நொண்டியாக்காமல், முடமாக்காமல், நடமாட அனுமதிக்க இந்த ஆட்சியாளரின் மனம் இடம் தரவில்லையென்கிறபோது; இந்தக் கொடுமையைக் கண்ணெதிரே கண்டுள்ள மக்களுக்கு; இவர்கள் ஆட்சி மன்றப் பேரவையிலும் இப்படித்தான் ஆடியிருப்பார்கள் என்ற உண்மையை அப்பட்டமாக அறிந்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்புத்தான் இந்த ஏப்ரல்

19ஆம் நாள் சென்னையிலும், மதுரை மேலூரிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்றே கூறலாம்.

சென்னை - மாநிலத்தின் தலைநகரம்! மேலூர் ஒரு மாவட்டத்தின் தலைநகருக்கு அருகில் உள்ள நெருக்கமான பகுதி! இந்த இரண்டு இடங்களிலும் - இன்னும் பல சிற்றூர் பேரூர்களிலும் உள்ளாட்சிகளின் இடைத் தேர்தல்கள் என்ற பெயரால் பதவி நீடிப்பு பெற்ற பாழும் குடிலக் குணமுடைய சில அதி காரிகளின் குள்ளநரிச் செயல் மூலம் மக்களாட்சித் தத்துவத்தின் மண்டையையே பிளந்திருக்கிறார்கள். ஆம்; அந்த முக்கிய நகர்ப் பகுதிகளில்கூட பாதுகாப்புக்கோ, அமைதியை நிலைநாட்டுவதற்கோ, கடமையாற்றக் கூடிய காவல்துறையினரைக் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் காண முடியவில்லை !

அவர்கள் காணாமலே போய்விட்டார்களா? என்றாலோ - அல்லது கடற்கோளில் காவல் துறையும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது என்றாலோ-நம்மாலும் அதைப் புரிந்து கொண்டிருந்திருக்க முடியும்! பொறுத்துக் கொண்டும் இருந்திருக்க முடியும்!

இருக்கிறது அந்தத் துறை; உயிரோடு! உடையோடு! படையோடு!

இருந்தாலும் இந்த ஆட்சியில் பணிந்து; குனிந்து; தரையோடு தரையாகவன்றோ தெண்டனிட்டுக் கிடக்கிறது! குப்புற வீழ்ந்து கிடக்கிறது!

கஞ்சா வழக்குப் போடுவதற்கும் - அஞ்சாமல் சட்டத்தையும் நீதியையும் வளைத்து அரசியல் விரோதிகள் மீது அவதூறு வழக்கு - கிரிமினல் வழக்கு என்று அடுக்கடுக்காக வழக்குகள் தொடர் வதற்கும் - அதற்காகவே ஆலோசனை மண்டபம் கூட்டுவதற்கும் அதிலெடுத்த அநியாய முடிவுகளை அரங்கேற்றுவதற்கும்- அதன் வாயிலாகத் தனிப்பட்ட ஆதாயங்களை ஈட்டுவதற்கும், அதற்கேற்ப காவல் துறையினரும் கனகச்சிதமாக சுருதி மீட்டுவதற்கும் - இந்த நாலாண்டுக் காலமாக நாடாள்வோர் நாட்களை நகர்த்தியதல்லாமல்; வேறென்ன நற்காரியங்களை மக்களுக்காக சாதித்தனர்? அல்லது சாதிக்கத்தான் முற்பட்டனர்?

“வளர்ப்பு’’ மகன் மீது போட்டு வாட்டிய கஞ்சா வழக்கின் முடிவு என்ன? வளர்வதற்கும் அது தளர்வதற்கும் காரணம்

என்ன? "வச்சிருந்த" ஒரு பெண் மணி மீதும் தொடரப்பட்டது கஞ்சா வழக்குத் தானே? அந்த வழக்கு இப்போது நடக்கிறதா? அல்லது உழக்கிற்குள் புகுந்துவிட்டதா? இன்னும் பேரம் முடியாத காரணத்தால் மட்டுமே ஓரிரு வழக்குகள் "காஞ்சி" போகாமல் ஈரமாகவே மிரட்டிக் கொண்டிருக்கின்றன என்பதுதானே நாடறிந்த உண்மை!

பழிவாங்கவும், தன்னாதாயத்தை குவித்துக் கொள்ளவும் மட்டுமே தன் கைக்குள் காவல்துறை இருக்க வேண்டுமென்று கருதிச் செயல்படுகிற ஓர் ஆட்சியில்; அந்தத் துறையில் பெரிய பதவிகளில் இருக்கிற கனவான்களிடமே நீதி நியாயத்தை எதிர் பார்க்க முடியவில்லையென்கிறபோது, அத்துறையின் சாதாரண அதிகாரிகளிடமோ - சாமான்ய உத்தியோகஸ்தர்களிடமோ என்ன "வெங்காய" தர்மத்தை எதிர்பார்க்க முடியும்?

அமளிகளை விரும்பாத அறவழியாளர்கள், அமைதியை நிலைநாட்டப் பாடுபடும் பண்பாளர்கள்; அரசியல் என்பது அடிதடிகளால் நிர்ணயிக்கப்படுவதல்ல; என்றே நினைத்து செயல்படுவார்கள். அவ்வழியே அண்ணா அவர்கள் நமக்குக் காட்டிய நல்வழி!

"நல்வழி தேவையில்லை; நாங்கள் கடைப்பிடிக்கும் அல்வழிக்கே நீயும் வா" என்று கயவர்கள் சிலர் கூறும் போது வியப்பு ஏற்படவில்லை. காவல்துறையே அவர்களுக்குக் கட்டியம் கூறி அவர்களும் சேர்ந்து கச்சை கட்டிக் கொண்டு களத்தில் இறங்கும்போது தானே வியப்பு மேலிடுவது மட்டுமல்ல; வீழ்த்தப்பட வேண்டும்; இந்த விஷமத்தனம் - விஷச்செயல் என்றும் சபதமேற்க வேண்டுமென்று இதயம் துடிக்கிறது!

பாதிக்கப்பட்ட கழக வேட்பாளர்களும் - அந்த வேட்பாளர்களுக்காக தேர்தல் களத்தில் நின்ற செயல்வீரர்களும் - அதற்கு நிவாரணம் வேண்டி, அறவழியில் செயல்பட்டால்; அமைச்சர்களுக்கு வாக்குச் சாவடிகளிலோ அல்லது அந்தச் சாவடிகள் இருக்கும் நடுச்சாலைகளிலோ என்ன வேலை? திருடியவனே "போலீஸ்! போலீஸ்!" என்று கத்திக் கொண்டு திருவிழா கூட்டத்தில் ஓடியது போல சாலை மறியல் செய்கிறார்களாம்; அமைச்சர்கள்! அவர்களைக் காவல்துறையினர் கைது செய்கிறார்களாம் - சபாஷ்! சரியான ஒத்திகை!

அந்த "அரிச்சந்திர" அமைச்சர்கள் நிருபர்களைப் பார்த்து;

"தெரியுமா சேதி? வீராசாமியும் ஸ்டாலினும், உசேனும், பரிதியும், ஜெ. அன்பழகனும் மற்றும் சில தி.மு.க.வினரும் பெண்களின் சேலைகளை உருவினார்கள், பெண்களிடம் கலாட்டா செய்தார்கள்'' என்றெல்லாம் கதைகள் வேறு கட்டியிருக்கிறார்கள்.

1991ல் ஜெயலலிதா ஆட்சி நடந்தபோது; எந்தப் பெண்கள் தங்கள் சேலைகளைப் பற்றிக் கவலைப்படாமல் நீதிமன்ற வாசலிலேயே நண்பர் சுப்பிரமணியம் சாமிக்கு வரலாற்றுப் புகழ்மிக்க வசீகர வரவேற்பு வழங்கினார்களோ, அவர்கள்தான் இப்போது இந்த அவதூறும் நம் கழகக் கண்மணிகள் மீது கூறித் தங்களின் "கலாச்சாரப்புனித''த்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே, இவ்வாறு பொய்களின் துணையுடன் போக்கிரித்தனமான செயல்களில் இந்தப் பொல்லாதவர்கள், தொடர்ந்து ஈடுபட்டால் தமிழ்நாடே போர்க்களமாகும் என்பதை அடையாளபூர்வமாக உணர்த்துகிற வகையிலேதான் -

சென்னையில் போலீசார் நடத்திய அராஜகம் - மு.க.ஸ்டாலின், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி மற்றும் கழக முன்னணியினர் கைதுப் படலம் ஆகியவற்றுக்கான எதிரொலியாக தமிழ் மாநிலம் முழுவதும், புதுவையிலும், அடலேறுகளான கழக முன்னணியினரும் தோழமைக் கட்சியினரும் ஆர்த்தெழுந்து சிறைப்பட்டுள்ளனர் - சிறைகள் நிரம்பி வழிவதை ஒரு நாள் கூட தாங்க முடியாத இந்த "ஒதியமிலார் ஆட்சி" அதே நாளில் பல்லாயிரக் கணக்கில் சிறை புகுந்தவர்களை விடுதலை செய்ய வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த அழகில் அமைச்சர்கள் வேறு கைதானதாக விளம்பரம் - தகவல் - செய்திக்குவியல். இந்த வேதனையிலும் இதுகேட்டு விலாநோகச் சிரிக்கத்தான் வேண்டியிருக்கிறது!

உள்ளாட்சி இடைத்தேர்தல்; ஒரு சில இடங்களில்தான்! நாடு முழுதுமல்ல - வெறும் இடைத்தேர்தல்களேதான் - இதற்கே இவ்வளவு ரகளை அதுவும் ஆளுங்கட்சியினர் அரங்கேற்றியது - ஆம்; சிறுபொறி, பெருந்தீயாக உருவெடுத்திட நடைபெற்ற நாசகாரச் செயல்கள்!

இதற்கு மூலாதாரக் காரணமே நாடாளுமன்றத் தேர்தலில் மூக்குடைபட்டிருக்கும் "மூதேவி" ஆட்சிதான்!

இனி "மூதேவிகள்'' நிரந்தரமாக மூலையில் கிடக்க வேண்டியவர்களேயென்பதை; அவர்களும், அவர்களுக்கு முட்டுக் கொடுப்பவர்களான சில கனவான்களும், காவல்துறையினரும், சில அதிகாரிகளும் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது; தெரிந்து தெளிவடையவும் வேண்டும்!

அந்தத் 'தெளிவு'; ஒளிவிடக் கொட்டப்படும் முரசம்! எட்டட்டும் அதன் முழக்கம்; எல்லாத்திசையும்!

அன்புள்ள,

மு.க.

21-04-2005

3129. மக்களைத் திரட்டுவோம்; வெற்றிகள் குவிப்போம்!

உடன்பிறப்பே,

மாநகர் சென்னையில் இரண்டு வார்டுகளிலும்-

மதுரை மேலூர் நகராட்சித் தலைவர் தேர்தலிலும் கட்டுக்கடங்காத கலவரத்தில் அ.தி.மு.க.வினர் ஈடுபட்டதாலும்;

அதற்குக் காவல்துறையினர் பகிரங்கமாகவே துணை நின்றதாலும் இரு இடங்களிலுமே தி.மு.க. தோழமைக் கட்சியினர் தேர்தலைப் புறக்கணித்து விட்ட நிலையில், "ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை" என்ற பழமொழிக்கேற்ப "கேலிக்குரிய வெற்றி"யை நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்று கொண்டு, "ஜே" போட்டுக் கொண்டாடியிருக்கிறது ஆளுங்கட்சி! ஆம்! நாணம் சிறிது மில்லாமல் "நானே ராஜா!" என்று "உலக்கை"யைத் தூக்கிக் காட்டி "இதுதான் வென்றெடுத்த செங்கோல்" என்று முழங்குவது போல!

மாநகர் சென்னையில் ஆளுங்கட்சியினரே அதிகாரிகள் உதவியுடன் குத்திப்போட்ட வாக்குகளை, அதே ஆளுங்கட்சியினர் அதே போன்ற அதிகாரிகளின் துணையுடன் எண்ணி முடித்து, வெற்றி முழக்கமிட்ட வேடிக்கை நிகழ்ச்சிக்கு இடையே, உயர்நீதிமன்றத்தின் உருக்கமிகு வேதனை, சொற்களாக வெளிப்பட்டிருப்பதை ஆங்கில, தமிழ் ஏடுகள் அப்படியே பிரசுரித்திருப்பதை நடுநிலையாளர் ஒருவர் படித்துப் பார்த்தாலே, அ.தி.மு.க. நடத்தும் அராஜக ஆட்சியின் அவலமும், அநீதித் தாண்டவமும், உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரியவரும்.

கண்டனம்

எனப் பெருந்தலைப்பிட்டு, சென்னை "தினமலர்" முதல் பக்கத்துக் கொட்டை எழுத்துச் செய்தியாக;

- **தமிழக மந்திரிகளுக்குச் சென்னை ஐகோர்ட் கண்டனம்**

● **ரோடு மறியல் செய்து அமைதியைக் குலைப்பதா?**

என்ற கேள்வியை இணைத்து வெளியிட்டிருக்கிறது!

"அமைச்சர்கள் மறியலில் ஈடுபடலாமா?

உயர்நீதிமன்றம் வியப்பு"

என்று தலைப்பிட்டு "தினமணி" முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆங்கில ஏடான "இந்து" முதல் பக்கத்தில்,

"அதிகாரப் பொறுப்பு வகிப்போர் சட்டம் ஒழுங்கைக் குலைப்பது கூடாது!"

"Persons in authority should not provoke a Law and Order problem"

எனத் தலைப்பிட்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில் கூறப்பட்ட கருத்தை வெளியிட்டதுடன்,

"We are not happy about the way people in power conducted themselves"

(அதிகாரத்தில் இருப்போர் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைய வில்லை)

என்று நீதிபதிகள் மாண்புமிகு கற்பகவிநாயகம் அவர்களும், மாண்புமிகு நாகப்பன் அவர்களும் கூறிவிட்டு,

"இந்த நிலைமை தொடர்ந்தால் ஒரு நாள் போலீஸ் கமிஷனரே கூட தர்ணா செய்ய முன்வரலாம்"

(If the trend continued one day even a Commissioner of Police could stage a dharna)

என்றும் கருத்தறிவித்திருக்கிறார்கள், என்பதையும் 'இந்து' ஏடு தவறாமல் பிரசுரித்துள்ளது.

"தி.மு.க. வினரை அடித்து விரட்டும் போலீசார்" என்ற குறிப்புடன் புகைப்படத்தை வெளியிட்டுள்ள "தினமலர்" நாளேடு, கட்டம் கட்டி "கள்ள ஓட்டு போட கூலி ரூ. 150" என்ற தலைப்புடன் பிரசுரித்துள்ள செய்தியில்

“ஆயிரம் விளக்கு 110வது வார்டு இடைத் தேர்தலில், வெற்றி பெற வேண்டும் என்று மத்திய சென்னை மாவட்ட அ.தி.மு.க.வினர், முழுமூச்சாக பணியாற்றினர். தேர்தல் நடக்கும் வார்டு ஸ்டாலினின் தொகுதியில் அடங்கியுள்ளதுதான் அதற்குக் காரணம். இந்த வார்டில் ஆளுங் கட்சியினர் தனிக்கவனம் செலுத்தினர். இதனால் கள்ள ஓட்டுப் போடுவதற்கு வடசென்னை மாவட்டத்திலிருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டனர். கோபாலபுரம், எம்.டபிள்யூ.சி., மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் ஓட்டுச் சாவடியின் பின்னால் உள்ள தெருக்களில் அ.தி.மு.க. வினர் கும்பல் கும்பலாக முகாமிட்டிருந்தனர். கள்ள ஓட்டுப் போட வந்த அவர்களுக்குக் காலையில் இட்லி வடையும், மதியம் சிக்கன் பிரியாணியும் கூலிப் பணமாக 150 ரூபாயும் வழங்கப்பட்டன. ஒருவர் ஒரு ஓட்டுக்கு மேல் பத்து ஓட்டுக்கள் போட்டிருந்தாலும், அதே பணம்தான் கூலியாக வழங்கப்பட்டதாக துறைமுகம் அ.தி.மு.க.வினர் தெரிவித்தனர்”

இந்தச் செய்தி தினகரன், முரசொலி போன்ற நாளேடுகளில் வெளி வந்ததல்ல. “தினமலர்” வெளியிட்ட செய்தியாகும்.

எனவே அமைச்சர்கள் கூடிக் கொண்டு, நடத்திய சாலை மறியல் - ஆர்ப்பாட்டம் - வாக்குச் சாவடி வன்முறை எனப்படும் “சேஷ்டை”களை பொது மக்கள் அறிந்திருப்பதுடன் உயர்நீதி மன்றமும் ஓர் எல்லைக்குட்பட்டுக் கண்டனம் செய்து சுட்டிக்காட்டியிருப்பதும், நீதி நெறியும், ஜனநாயகமும் மீண்டும் உயிர்த்தெழுவதற்காகச் செய்யப்படும் முயற்சி வீண் போகாது என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது.

உயர்நீதிமன்றத்தில் அரசாங்கத்தின் பெரிய வக்கீல் சொல்லியிருக்கிறார்! சென்னை மாநகர் இரண்டு வார்டு தேர்தலும் அமைதியாக நடந்தது என்று!

அப்போது அந்த மன்றத்தில் இருந்த நீதி தேவதை சிலையின் முகத்தில் ஓர் ஏளனப் புன்னகை அரும்பியிருந்தால், அதில் ஆச்சர்யமில்லை அல்லவா?

நீதிபதிகளின் கருத்துரைகளை வெளியிட்டு விட்ட ஏடுகளுக்கு, இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற்றது என்று தலைப்பு கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தை நான் அறியாமல் இல்லை. ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே "சமநிலை" என்ற கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதின் சங்கடத்தைத் தவிர, வேறு காரணமில்லை.

அந்த ஏடுகள் வெளியிட்டுள்ள "அதிக இடங்கள்" எனும் செய்தியில், சென்னையின் இரு வார்டு தேர்தல் முடிவுகளும், மதுரை மேலூர் நகராட்சித் தலைவர் தேர்தல் முடிவும் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை மறந்து விடக் கூடாது. அந்த மூன்று இடங்களிலும் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வாக்களிப்பதைத் தவிர்த்துத் தேர்தலையே புறக்கணித்து விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைகளில் வந்துள்ள தேர்தல் முடிவுகளைக் கணக்கிட்டாலே, நூலிழை அளவுக்கான வித்தியாசம்தான்; ஆளுங்கட்சி பெற்றுள்ள இடங்களுக்கும் - எதிர்க்கட்சிகள் பெற்றுள்ள இடங்களுக்கும் இடையே இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

சென்னையில் 131வது வார்டில் அ.தி.மு.க. வேட்பாளர் 10,153 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது - ஒரு வார்டு தேர்தலில் சட்டமன்றத் தேர்தலைப் போல பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் என்றால், அந்தத் தேர்தலைத் தி.மு.க. கூட்டணியினர் புறக் கணித்து விட்டதால், அவர்கள் இஷ்டத்துக்குக் குத்திப் போட்டு, இஷ்டத்துக்கு எண்ணிக் கொண்டதால் அல்லவா, இப்படியொரு நிலைமை என்பது பாமர மக்களுக்கும் பளிச்செனப் புரியுமே!

உடன்பிறப்பே,

"இடைத் தேர்தல்கள் என்றால் இப்படித்தான் நடத்துவோம்!

ஜனநாயகவாதிகளின் கண்டனங்களையோ -

நீதிபதிகளின் வேதனைமிகு விமர்சனங்களையோ -

தேர்தல் ஆணையத்தின் எச்சரிக்கைகளையோ -

என்றைக்குமே நாங்கள் பொருட்படுத்தியதில்லை!

இனிப் பொருட்படுத்தப் போவதுமில்லை" என்று ஆணவக் குரல் ஒலித்துக் கொண்டு ஆட்டம் போடும் ஆளுங்கட்சியாம் அ.தி.மு.க.வுக்கு,

இந்த அராஜக வழி என்பது நிரந்தரமானதல்ல!

நீண்டு கொண்டேயிருக்கப் போகிற வழியுமல்ல!

எங்கோ ஓரிடத்தில் தடுக்கப்படப் போகிற வழி தான்!

சம பலத்தால் தடுக்கப்படப் போகிற வழியென்று சொல்ல மாட்டேன்.

ஜனசக்தியின் பலத்தால் தடுக்கப்படும் -

ஜனநாயக சக்தி என்று இதற்குப் பொருள் கொள்க!

சரியான தமிழில், மக்களாட்சியின் மாண்பு எனலாம்!

"மக்கள் குரலே மகேசன் குரல்" என்று நமது தலைவர் அண்ணா அவர்கள், அடிக்கடி நினைவூட்டியது மறந்து போகுமா?

மக்களைத் திரட்டுவோம் - அந்த

மக்கள் வாழ்ந்திட வெற்றிகளைக் குவிப்போம்!

அன்புள்ள,

மு.க.

22-4-2005

3130. காஞ்சி, கும்மிடிப்பூண்டி; கடும் பயண வெற்றிக்கு!

உடன்பிறப்பே,

2004ஆம் ஆண்டு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல், இந்தியத் திருநாட்டில் எந்த ஆட்சியை வழியனுப்பி வைப்பது - எந்த ஆட்சிக்கு வரவேற்பளிப்பது என்ற வினாக்களுக்கு விடையளித்திட நடைபெற்றதாகும்.

"இந்தியா ஒளிர்கிறது" என்று, இமயமலை முகட்டில் தொடங்கி, குமரி முனைக் கடலோரம் வரையில், வகைவகையான சுவரொட்டிகள், வானொலி, வாயைத் திறந்தால் - தொலைக்காட்சிப் பெட்டிகள், கண்ணைச் சிமிட்டினால் - திரைப்படக் கொட்டகைகள், ரயிலடிகள், பேருந்துக் கூடங்கள், ரிக்ஷா நிறுத்துமிடங்கள், சுருக்கமாகச் சொன்னால் - மனித மூச்சு எங்கெங்கே காற்றொடு கைகோத்துக் கொள்ளுமோ அங்கெல்லாம் - "இந்தியா ஒளிர்கிறது" எனும் வண்ணமிகு விளம்பர வார்த்தைகள் தான்!

ஆனால், 'எண்ணெய்ச் செலவுதான் மிச்சம், பிள்ளை பிழைக்கவில்லை' என்ற பழமொழி பலித்து விட்ட கதையாக அந்தத் தேர்தல் முடிவு, பாரதிய ஜனதா கட்சிக்குப் பாதகமாகவே முடிந்தது.

இந்தியா முழுதும் - குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழகம் அடியெடுத்துக் கொடுத்தது எனப் பாராட்டும் விதமாக புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதிகளும் நமது அணியினர் வசமாகி, இடது சாரிக் கட்சிகளான இரு கம்யூனிஸ்டுகளின் 'வெளியிலிருந்து ஆட்சியை ஆதரிப்பது' என்ற ஒத்துழைப்பையும் பெற்று, மதச்சார்பற்றதும் மத நல்லிணக்கத்தை உருவாக்குவதுமான மத்திய ஆட்சியை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைத்து ஏறத்தாழ ஓராண்டு நிறைவுறுகிறது.

திருமதி சோனியா காந்தி அவர்கள்தான் பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று உலகமே எதிர்பார்த்திருந்த வேளையில்,

அவரை முறைப்படி பதவியில் அமர்த்திட குடியரசுத் தலைவர் அவர்களும் நாள் குறித்திருந்த நிலையில், அவரே தனக்குப் பிரதமர் பதவி தேவையில்லையென்று பிரகடனம் செய்து, அதன் பிறகு மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் அமைச்சரவை பொறுப்பேற்று, ஏமாற்றமடைந்த எதிர்தரப்பினரின் எரிச்சல் கணைகள் அனைத்துக்கும் ஈடுகொடுத்து நல்லாட்சி நடைபெற்று வருகிறது. கெடுப்பார் இலாமலே கெடுவதற்கு இது ஒன்றும் இடிப்பார் இல்லாத ஏமரா மன்னன் ஆட்சியல்ல என்பதை மெய்ப்பித்து - மிகுந்த எச்சரிக்கையுடனும் - எதிர்க்கட்சிகளின் குரலுக்கு மதிப்பளித்தும் - கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சிகளின் குரலுக்குச் செவி சாய்த்து மக்கள் தேவைகளை நிறைவு செய்தும் - பெருந் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டியும்; - குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நமது தமிழகத்தில் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்த சேதுக்கால்வாய்த் திட்டம் செயலாக்கம் பெற்றிடவும் - செம்மொழிச் சிறப்பு, தமிழ் மொழிக்குக் கிடைத்திடவும் - 'சென்வாட்' வரி ரத்து செய்யப்படவும் - கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் நடத்தப்படவும் - செம்மொழித் தமிழ் மொழிக்கு முதன்முதலாகக் கணினியில் மென்பொருள் தயாரிக்கப்படவும் - சாலைத் திட்டங்கள், மேம்பாலங்கள் நிறைவேற்றப்படவும் - இப்படிப் பல வளர்ச்சிக்கு வழிவகுக்கும் காரியங்கள் நடைபெற்றுமிருக்கின்றன, நடைபெறத் தொடங்கியுமிருக்கின்றன.

தமிழக மட்டுமன்றி, இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் மக்களின் மன நிறைவுக்குகந்த வகையில், மத்திய அரசின் பரிபாலனம் நடக்கிறது என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. இன்னும் குறைந்தபட்சப் பொது வேலைத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திடும் உத்வேகத்தையும், மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற கட்சிகளும், ஆதரவு வழங்குகிற கட்சிகளும் எதிர்பார்க்கின்றன! ஏமாற்றத்துக்கு இடமின்றி அவற்றையும் மத்திய அரசு நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசில் இடம் பெற்றுள்ள கட்சிகளால் அந்தந்த மாநிலங்கள் பெற்றிடும் பயன்களைப் போலவே, தமிழ் மாநிலமும் பெற்றிடுகின்றது என்றாலும், இங்குள்ள மாநில ஆட்சியாளர்கள் சற்றொப்ப குஜராத் மாநில ஆட்சியாளர்களைப்

போலவே குறுகிய மனப்பான்மையும் - குரூரத் தன்மையும் வாய்ந்தவர்களாயிருப்பதால், நாடாளுமன்றத் தேர்தலில் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்ந்த பிறகும்கூட விவேகம் பெற்றவர்களாக விளங்கிடவில்லை.

அதற்கு மாறாக, அடுத்து வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களை ஏமாற்றும் சலுகை அறிவிப்புகளைத் தவிர, சர்க்காரை எப்படி ஜனநாயகத்திற்கு விரோதமாக நடத்துவது என்பதற்கு இட்லரிடம் பாடம் கேட்பவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

சட்டப் பேரவையை எந்த அளவுக்குச் சர்வாதிகாரமாக இயக்கி, எதிர்க்கட்சித் தலைவர்களைச் சகட்டு மேனிக்கு ஏசினார்கள் என்பதும், "நடுநிலை" என்பது சாக்கடையில் விழுந்துவிட்ட - அல்லது வீசப்பட்ட பூங்கொத்து போலவே ஆகிவிட்டது என்பதும் நல்லறிவாளர்கள் - நடுநிலையாளர்கள் கண்டறிந்த பேருண்மையன்றோ?

அந்தத் துர்வாடையின் தாக்கம் குறைவதற்கு முன்பே, உள்ளாட்சி இடைத் தேர்தல்களில் இந்த ஆட்சியாளர்கள் ஆடிய ஆட்டமென்ன! பாடிய பாட்டுத்தான் என்ன? "நீதிதேவதை"யே நெஞ்செரிந்து போய்விட்டாளே!

இதையெல்லாம் ஆழமாகச் சிந்தித்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிற தமிழக மக்கள், அந்த மூச்சையே புயல் காற்றாக்கி - அடுத்து வரும் சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் இந்தச் சர்வாதிகார ஆட்சியெனும் ஒதிய மரத்தை ஒடித்துச் சாய்ப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உள்ளாட்சி இடைத் தேர்தலில், நூல் இழையினும் நுண்ணிய அளவிலான கூடுதல் இடங்களைப் பெறுவதற்கு, பாவம் - அமைச்சர் பெருமக்களே, கோட்டையை விட்டு வெளியே வந்து, சாலைகளிலும் - வாக்குச் சாவடிகளிலும் - வன்முறைக் கலவர மறியலில் ஈடுபட வேண்டியிருந்தது என்பதைப் பார்க்கும்போதும், அதுபற்றி நீதி தேவதையே கண்ணீர் வடித்திருக்கும் போதும்,

அடுத்து,

வருகிற மே மாதம் நடக்க இருக்கிற காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தல்களில் எத்தகைய

வன்முறைகளில் அமைச்சர்களும், அதிகாரிகளும், அ.தி.மு.க. வினரும் ஈடுபடுவார்களோ என எதிர்பார்ப்பதிலும் - அவற்றை எதிர்கொள்வதற்கான அறவழி ஆயத்தங்களில் ஈடுபடுவதிலும் எந்தத் தவறுமில்லை அல்லவா?

இந்த இடைத்தேர்தல், அடுத்த ஆட்சி எது என்பதை நிர்ணயிக்கிற தேர்தல் அல்ல!

ஆனாலும், இதில் நமது அணிக்குக் கிடைக்கிற வெற்றி; பொதுத் தேர்தலுக்கு நம்மை மேலும் ஊக்கப்படுத்துவதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை!

இடைத் தேர்தலைக் காஞ்சியிலும், கும்மிடிப் பூண்டியிலும் - உள்ளாட்சி இடைத் தேர்தல் பாணியிலேயே நடத்துவார்களேயானால், அதனால் ஆட்சியாளர்கள் ஒருவேளை வெற்றி பெற்று நாம் அந்த வாய்ப்பைப் பெற முடியாத நிலை ஏற்படுமேயானால், அப்போது ஆட்சியாளர் அடையும் மகிழ்ச்சி சொற்ப நேரங்கூட சோபிக்க முடியாத மகிழ்ச்சியாகத் தானிருக்கும். முன்மாதிரியாக எடுத்துக்காட்டு வேண்டுமேயானால் 1967க்கு முன்பு மிகப்பெரும் மொழிப் புரட்சி காரணமாக - நூற்றுக்கணக்கான பிணங்கள் துப்பாக்கிச் சூட்டில் விழுந்த பிறகும்கூட, தர்மபுரியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தி.மு. கழக வேட்பாளர் வெற்றி பெற இயலவில்லை - அதை வைத்து பொதுத் தேர்தலும் அப்படித்தான் ஆகுமோ எனக் கணக்கிட்டோர் உண்டு.

ஆனால், தர்மபுரி இடைத் தேர்தலுக்குப் பிறகு, தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தி.மு.க., அண்ணா தலைமையில் ஆட்சி அமைக்கிற அளவுக்குப் பெரு வெற்றி பெற்றதை வரலாறு கூறிக் கொண்டுதானிருக்கிறது.

இந்த உதாரணத்தைச் சொல்வதால், தர்மபுரியே போனாலும் தமிழ்நாடு வந்தது என்பதுபோல, "காஞ்சியோ, கும்மிடிப்பூண்டியோ போனாலும் கவலையில்லை" என்று உன் போன்ற உடன்பிறப்புகள் அலட்சியமாக இருந்து விடக் கூடாது! நீ தரும் உழைப்பும், காட்டும் உறுதியும் வெற்றிக் கனியைப் பெற்றுத் தரும் என்பது நிச்சயம்!

எந்த நிலைமையிலும் நமது கடமையையும், பணியையும் மறந்து விடக் கூடாது!

1967க்கு முன்பு தர்மபுரி இடைத் தேர்தல் நடந்த நேரத்தில், பாளையங்கோட்டைச் சிறையில் இருந்த என்னைச் சந்திக்க அண்ணா வந்தார். கண் கலங்கினார்.

திரும்பிச் சென்று 'தம்பிக்கு' கடிதம் எழுதினார். பாளையில் அன்றிரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் பேசினார்.

"பாளைச் சிறையில் தம்பி கருணாநிதியைச் சந்தித்த போது, அவர் தனது வீட்டார் நலத்தையோ - என் வீட்டார் நலத்தையோ கேட்கவில்லை.

தர்மபுரி இடைத் தேர்தல் எப்படியிருக்கிறது? கழகம் வெற்றி பெற்று விடுமா? என்றுதான் ஆவல் ததும்பக் கேட்டார். கவலையுடன் கேட்டார்"

என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். நான் அதை இந்தக் கடிதத்தில் இப்போது குறிப்பிடக் காரணம், உன் போன்ற உடன்பிறப்புகள் எந்த நிலையில் இருந்தாலும் - காஞ்சி, கும்மிடிப்பூண்டியில் நமது கழக அணியினர், தோழமைக் கட்சிகளின் துணையுடன் வென்றிடுவதற்கு ஆற்றிட வேண்டிய கடமையைப் பற்றி எண்ணிச் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான்!

நாளை கழகச் சார்பில் இரு தொகுதிகளிலும் - தோழமைக் கட்சிகளின் துணையுடன் போட்டியிடப் போகிற வேட்பாளர்களின் பெயர்களைத் தலைமைக் கழகம் அறிவித்து விடும்.

சுமார் எட்டு அல்லது ஒன்பது மாத காலம் மட்டுமே வகிக்கப் போகிற பதவிக்கான வாய்ப்புத்தான் இது!

இதில் வெற்றி பெறுவது என்பது "பத்தோடு பதினொன்று" என்று கணிக்கப்படுவது அல்ல! அதாவது சட்டமன்றப் பொதுத் தேர்தல் அல்ல!

பல்வேறு சூழ்நிலைகளை - பொது மக்களின் கருத்தினை - இரு தொகுதிகளிலும் வழங்கப்பட வேண்டிய சமூகப் பிரதிநிதித்துவத்தை - தோழமைக் கட்சிகளின் துணை வலிமையை - இப்படி எல்லாவற்றையும் எடை போட்டுப் பார்த்து "எண்ணித் துணிக கருமம்" எனும் மூதுரைக்கேற்பத்தான் முடிவு எடுத்திருக்கிறது தலைமைக் கழகம்!

"போனால் வராது" எனப்படும் பதவி வாய்ப்பல்ல! பொறுத்திருந்தால் இதை விட நல்வாய்ப்பு கூட நம்மை நாடி

வரும் என்ற நம்பிக்கையுடன், தலைமைக்கு விண்ணப்பித்த கழக உடன்பிறப்புகள், யார் பெயர் அறிவிக்கப்பட்டிருந்தாலும், தாங்களே நிற்பது போல - தலைமை அறிவித்த பெயர்களே தங்களால் வெற்றிக்குரிய பெயர்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் உழைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

உடன்பிறப்பே! இந்த இடைத் தேர்தல் அல்ல, அடுத்து வர இருக்கிற சட்டமன்றப் பொதுத் தேர்தல்தான் தமிழ் மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகிற தேர்தல்!

ஆட்சி மன்றமெனும் பூங்காவுக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதை, இந்த இடைத் தேர்தல்!

பாதையே பல மலர்களின் கூட்டமெனும் பூங்காவாக முடியாது!

அதற்காகப் பாதையென்பது தேவையில்லை என அலட்சியப்படுத்தவும் கூடாது!

பாதையைப் பண்படுத்தி,
அதில் பயணம் செய்வோம்,
மக்களுக்கு வாழ்வளித்து
ஜனநாயகத்தை நிலைநாட்ட,
ஆட்சி மன்றம்
அதோ, தெரிகிறது!
காஞ்சி வழி,
கும்மிடிப் பூண்டி வழியில்
கடும் பயணமாயினும்
அதனை மேற்கொள்வோம்!
வெற்றி பெறுவோம்.

அன்புள்ள,
மு.க.
23-4-2005

3131. தோழமையின் துணையுடன் தொடருவோம் பயணம்!

உடன்பிறப்பே,

காஞ்சி, கும்மிடிப்பூண்டி இரண்டு தொகுதிகளிலும் இடைத் தேர்தலில், "இப்படித்தான் வெற்றி பெற வேண்டும்" என்ற ஜனநாயக நியதிகளை ஆழக்குழி தோண்டிப் புதைத்து விட்டு, "எப்படியும் வெற்றி பெற்றே தீர வேண்டும்" அல்லது "வெற்றி பெற்று விட்டதாக அறிவித்துக் கொள்ள வேண்டும்" எனும் வெறியுணர்வோடு ஜெயலலிதா கட்சியினர் வேலைகளைத் தொடங்கிவிட்டனர். இருக்கவே இருக்கிறது! காவல்துறை கை கட்டிச் சேவகம் செய்திட! கழக வேட்பாளர்களின் வெற்றியைத் தடுத்திடும் சதித் திட்டமாக, இப்போதே நமது அணியினர் தேர்தல் பணியில் ஈடுபடுவதற்கு குந்தகம் விளைவித்திட, பொய் வழக்குகள் பூதாகாரமாக சோடிக்கப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் செயலாளர் - அதிர்ந்து பேசக் கூட அறியாத அமைதியின் உருவம் - அண்ணா வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திடும் பண்பினன் - அன்பரசு எனும் அருமை உடன்பிறப்பு - அவர் வழிகாட்டுதலுடன் எறும்புகளென சுறுசுறுப்புக் காட்டிக் கழகத்தினரும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் திரண்டு, தேர்தலில் ஜனநாயகம் காத்திடுவதற்கு ஓயாப் பணியாற்றுவதைத் தடுத்திடத் திட்டமிட்டுப் பொய் வழக்கில் ஈடுபடுத்திட, நள்ளிரவில் அவர் வீடு புகுந்து வீட்டிலிருந்தோரையும் தம்பி அன்பரசையும் ஏக வசனத்தில் குறிப்பிட்டு ஏசிப் பேசி அடாவடி நடத்தித் திரும்பியுள்ளனர்.

அன்பரசின் தந்தை மோகலிங்கம் காலமெல்லாம் கழகப் பணியிலும், பொதுப்பணியிலும் ஈடுபட்டு முதிர்ந்துள்ளவர் - அறிஞர் அண்ணாவின் அன்புக்குப் பாத்திரமானவர் - திராவிட இயக்கத்தின் பழம் பெரும் தூண்களில் ஒருவர் - அவர் மனம் புண்படப்பேசி "உன் மகன் எங்கே?" என்று

உரத்த குரலில் அதட்டிக் கேட்டு, அவரையும், வீட்டில் உள்ளவர்களையும் அவமானப்படுத்திவிட்ட அற்பத் திருப்தியுடன் சென்றிருக்கிறார்கள்.

தம்பி ஸ்டாலின் தலைமையில் சிலர், அ.தி.மு.க. மகளிர் அணியினரிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாக ஒரு பொய்க்கதையை ஏடுகள் மூலம் வெளியிட்டு, அதற்காக வழக்கு தயார் என்றும் - கைது செய்யப்படுவார்கள் என்றும் - மிரட்டல் செய்திகளைப் பரப்பி வருகிறார்கள்.

இருபத்தி நான்கு அமைச்சர்கள், தங்கள் ரத கஜ துரக பதாதிகளுடன் - பண மூட்டைகளுடன் - இரு தொகுதிகளிலும் முகாமிட்டு "ஜெயலலிதா பாணி" - ஜனநாயகத்தை (?) நிலைநாட்டிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்தல் நேரங்களில் கடைப்பிடிக்க வேண்டுமென அறிவிக்கப்படும் விதிமுறைகளை மீறுவதே தமது வழக்கமென நாட்டுக்குத் தெரிவித்து,

அப்படிச் செய்வதில் நாணமோ, வெட்கமோ கிஞ்சிற்றும் கொள்ளாமல் - எதேச்சாதிகார நடை போடுகிற இந்த அரசு, காஞ்சி, கும்மிடிப்பூண்டி தொகுதிகளிலும் தனது சுயரூபத்தைக் காட்டத்தான் போகிறது. அதனைத் தடுத்து நிறுத்தி அறவழியில் ஜனநாயகம் காத்திட, தன்னையே அர்ப்பணிக்கும் திட உள்ளத்தைப் பெற்றுள்ள திராவிடத் தீரர்களால் நிச்சயம் முடியும். தோழமைக் கட்சிகளின் துணையுடன், இந்த அணிக்குத் தலைமைப் பொறுப்பேற்றுள்ள தி.மு. கழகம் ஆளுங்கட்சியின் அநாகரிக, அராஜக எதிர்ப்பும், தாக்குதலும், அடக்குமுறையும் எப்பக்கமிருந்து வரினும், எந்த ரூபத்தில் வரினும் அவற்றை எதிர்கொள்ளத் தயங்காது! தயங்கவே தயங்காது!

எனினும், ஓர் இடைத் தேர்தலில் ஈடுபடுவதற்காக - ஈடுபட்டு ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்காக - இந்த ஜெயலலிதா ஆட்சியில் தந்திட வேண்டிய விலையை எண்ணிப் பார்த்து முதலில் நான்கூ,ட தோழமைக் கட்சித் தலைவர்களிடம் என் தனிப்பட்ட கருத்தாக, "இந்தக் கொடுமையான அராஜகப் போலீஸ் ராஜ்ய ஆட்சி நீடிக்கும் வரையில், இடைத் தேர்தல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கலாமே" என்று கூறினேன். நடந்து முடிந்த உள்ளாட்சி இடைத் தேர்தல் அராஜகங்களையும், சுதந்திரமாக

நடுநிலைக் கருத்துக் கூற வேண்டிய ஏடுகள்கூட, எமக்கென்ன வென்று இருந்துவிட்ட நிலையையும் நினைவு படுத்தினேன்.

சென்னையில் 131வது வட்டத்தில், அதாவது ஒரு வார்டு தேர்தலில், சட்டமன்றத் தேர்தல் போல 10,000 (பத்தாயிரம்) வாக்கு வித்தியாசம் எப்படி வந்தது? எல்லாம் ஆளுங்கட்சிக்காரர்களே போட்டுக் கொண்ட ஓட்டுத்தானே - என்று நியாயமான கேள்வி எழுப்பிடக் கூடிய பத்திரிகாதர்மத்தின் பேனா முள் கூட இக்கொடுமை கண்டு அசையவில்லையே! அதனால், இந்த ஆட்சி ஒழியும் வரையில் காத்திருப்போம் - அதன் பிறகே இடைத் தேர்தல்களைப் பற்றி சிந்திப்போம் என்று வாதிட்டேன்.

ஆனால் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள், அன்று (19-4-2005) அண்ணா அறிவாலயத்தில் கூடிப் பேசியபோது; "தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியிடட்டும் - எல்லாவிதமான எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுக்கும்விதமாக இந்த அணி செயல்படும் - எதையும் தாங்கும் அணி இது - எனவே தி.மு.க. வேட்பாளர் நிற்கட்டும்" என்று ஒருமனதாகக் கூறினர்.

அதன் பிறகுதான் காஞ்சி, கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தலில், கழக வேட்பாளரைத் தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடச் செய்வது என்று முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இடைத் தேர்தலில் இந்த இரு தொகுதிகளிலும் போட்டியிடுகிற கழகத்திற்குள்ள அதே பொறுப்பு அணுவளவும் குறையாமல், அத்தனை தோழமைக் கட்சிகளுக்கும் உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

தேர்தல் நாளன்று ஆற்றிட வேண்டிய பணிகளுக்காக மட்டுமல்ல! இன்று தொடங்கி ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு மணி நேரமும் - ஏன்? ஒவ்வொரு நிமிடமும் ஜெயலலிதா கட்சிக்காரர்களின் அராஜகச் செயல்களையும் - அடக்குமுறைப் பேயாட்டங்களையும் - சந்தித்துச் சமாளிக்கும் பொறுப்பினைத் தோளில் போட்டுக் கொண்டு தொடர வேண்டிய நிலை நமது தோழமைக் கட்சிகளின் அணிக்கு இருப்பதை மறந்து விடாமல்தான் களம் இறங்கியுள்ளோம் என்பதை நாமும், நமது தோழமைக் கட்சித் தலைவர்களும் நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டுதான் நடமாடுகிறோம்.

நம்மை எளிதாக எண்ணிப் படமெடுக்கும் நாகப் பாம்புகள், தற்காலிகமாக ஆட்சி கையில் இருக்கிறது என்ற மமதையில், "எப்படியும் வெற்றி பெற" எனும் தத்துவத்தில் நம்பிக்கை வைக்கலாம் - ஆனால், தவிடுபொடியாகி விடும் அவர்களின் நம்பிக்கையென்பதை நமது உறுதியின் வாயிலாகவும் - ஒற்றுமையைக் கட்டிக் காப்பதின் வாயிலாகவும் - மெய்ப்பித்துக் காட்டுவோம்.

அதற்குரிய நமது திண்மையை இந்த இடைத் தேர்தல், திட்டவட்டமாக நாட்டுக்குத் தெரிவிக்கட்டும்.

அன்புள்ள,

மு.க.

24-4-2005

3132. வரட்டும் வழக்கு; வண்டவாளம் தண்டவாளம் ஏறிட!

உடன்பிறப்பே,

“தேர்தல் தகராறு, ஸ்டாலின் உட்பட 60 பேர் மீது வழக்கு”

என்று தலைப்பிட்டு, 24-4-2005 “தினமணி” இதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தியின் விரிவாக்கமாக,

“சென்னை 110வது வார்டு இடைத் தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. அப்போது ஆயிரம்விளக்குப் பகுதியில் வாக்குச் சாவடி அருகே தகராறு ஏற்பட்டது. அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஆறு பெண்கள் காயமடைந்தனர். இது தொடர்பாக, அவர்கள் போலீசில் புகார் செய்தனர். இது குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின், மு.க. தமிழரசு, பரிதி இளம் வழுதி, சுரேஷ்குமார் உள்ளிட்ட 60 பேர் மீது கொலை மிரட்டல் உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மயிலாப்பூர் துணை கமிஷனர் சண்முகராஜேஸ்வரன் மேற்பார்வையில் ராயப்பேட்டை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்”

என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி ஏதாவது ஒரு வழக்கு தொடர வேண்டுமென்று பல அதிகாரிகளை வலியுறுத்தியும், வற்புறுத்தியும் பார்த்துவிட்டு, கடைசியாக சட்டப்பேரவையிலேயே ஸ்டாலின்மீது மிரட்டல்களை விடுத்து, இரண்டு ஆண்டு சிறை வாசம் என்றெல்லாம் எச்சரித்து, அதற்கு ஏவுகணையாகப் பயன்படுத்த ஒரு அதிகாரியைப் பல முனைகளில் முயற்சித்தும்கூட, அந்த அதிகாரி அநியாயத்துக்குத் துணை போக இணங்காத காரணத்தால், அவரைத் தனிப்பட்ட முறையில் பழி வாங்கியதோடு, அந்த முயற்சியை விடுத்து, இப்போது புதிய வழக்காக இதனை அரங்கேற்ற ஜெயலலிதா முன் வந்திருக்கிறார்.

வழக்குப் பதிவாகிவிட்டது - புலன் விசாரணை நடைபெறுகிறது - அடுத்து அடக்குமுறை நடவடிக்கைகள் மூலம்; இடைத்தேர்தலில் ஈடுபடுவோர் கவனத்தைத் திசை திருப்பலாமா என்ற சதி நாடகத்தின் திரை தூக்கப்படும்.

பெண்கள் சிலரிடம் ஆடைகளை இழுத்துத் தகராறு விளைத்ததாக அறுபது பேர் மீது வழக்காம் - ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.க.ஸ்டாலின், அவர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலைக் காண வருவது குற்றமாம் - ஆனால் அதே 110வது வார்டுக்கு, வடசென்னையிலிருந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் படையெடுத்து, வாக்குச்சாவடி வரையில் நுழையலாமாம்; வன்முறையில் ஈடுபடலாமாம்; அவர்களை வரவேற்று மகிழ்ந்து அந்த வார்டில் அவர்கள் விருப்பப்படி எதையும் நடத்திக்கொள்ள காவல்துறை அதிகாரிகள் அவர்களுக்கு அனுமதியும் வழங்கி, ஒத்துழைப்பும் அளிப்பார்களாம்.

உடன்பிறப்பே! சென்னை, கோபாலபுரத்தில் அந்த 110வது வார்டுக்குரிய வாக்குச் சாவடிகளில் ஒன்று, என் வீட்டிலிருந்து ஏழெட்டு வீடுகள் தாண்டினால் போதும்; அவ்வளவு அருகில் உள்ளது. நான் வழக்கமாகத் தேர்தல்களில் காலை ஒன்பது மணிக்குள், காரிலோ அல்லது நடந்து சென்றோ வாக்களிப்பேன் - ஆனால் அன்று அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தலைமையில் அ.தி.மு.க. வன்முறையாளர்கள் போலீசாரின் துணையுடன் நடத்திய கலவரத்துக்கிடையே, கல் வீச்சுக்கிடையே, நான் செல்வது உகந்ததல்ல என்பதால். வாக்களிக்காமலே இருந்து விட்டேன் என்றால் - அங்கே கலவரத்தையும், தகராறையும் நடத்தியவர்கள் யார் என்ற உண்மை கூடவா காவல்துறையினருக்குத் தெரியாமல் அவர்களின் கண்களை மறைத்துவிட்டது?

என் செய்வது! "சமீபத்தில் சென்னை மாநகராட்சி வார்டு இடைத்தேர்தலின்போது நடந்த வன்முறையில், தமிழகம் அதிர்ந்தது" என 'தினமணி' ஏட்டில் திரு. சுகதேவ் அவர்கள் தனது மனச்சாட்சியைப் பேசச் செய்துவிட்டு,

அந்த வாக்கியத்தின் தொடர்ச்சியாக -

"அத்தகைய அதிர்வுகள் எதுவுமின்றி, அ.தி.மு.க.வும்,
தி.மு.க.வும் (சட்டமன்ற இடைத் தேர்தல்களில்)
தங்கள் சவாலை எதிர்கொள்ளவேண்டும்"

என்று அறிவுறுத்துவதின் வாயிலாக; ஏதோ வார்டு தேர்தலில் நடந்த வன்முறைக்கு தி.மு.க.வும் காரணம் என்பதுபோல எழுதியிருப்பதுதான் வேடிக்கை! அதுவும் வேதனையான வேடிக்கை!

வார்டு 110இல் வாக்குச்சாவடி திறந்து, சில வாக்காளர்கள் வாக்களித்திருந்த நிலையிலேயே வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றி, தி.மு.க. ஏஜெண்டுகளைப் போலீசார் துணையுடன் தாக்கித் துரத்தி விட்டு,

எஞ்சிய நேரம் முழுவதும், எல்லா வாக்குகளையும் தாங்களே போட்டுக் கொண்டதும் - அந்த வாக்குகளை மறுநாள் எண்ணிடுவது போல "பாவலா" காட்டி "ஜெயா பேரிகை" கொட்டியதும் தினமணிக் கட்டுரையாளருக்குத் தெரியாதா?

ஒரு சாதாரண, எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய சான்று - மாநகர் வார்டு தேர்தலில் ஜனநாயகத்தின் குரல்வளையை ஜெயலலிதாவின் போலீஸ் எப்படிக் கழுத்தை அமுக்கிக் கொன்றது என்பதற்குச் சாட்சி!

அதே நாள் நடந்த 131வது வார்டு தேர்தலில் அ.தி.மு.க. பத்தாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் எப்படி ஜெயித்தது? பழனிசாமிக்குத்தான் வெளிச்சம் -'தினமணி' கட்டுரையாளர் சிந்தனை வளம் பெற்றவர்! அவருக்குக் கூடவா இதுகுறித்துத் தெளிவு இல்லாமல் போய்விட்டது?

கடந்தமுறை சென்னை மாநகராட்சி மன்றப் பொதுத் தேர்தல் நடந்தபோது, இதே 131வது வார்டில் மேயர் பதவிக்கு போட்டியிட்ட தி.மு.கழக வேட்பாளர் மு.க. ஸ்டாலின் பெற்ற வாக்குகள் 6278. அப்போது அ.தி.மு.க. வேட்பாளர் பெற்ற வாக்குகள் 5069. வித்தியாசம் 1209 வாக்குகள். அப்போது அந்த வார்டில் பதிவான வாக்குகள் 12643.

ஆனால் இந்த இடைத்தேர்தலில் அதே 131வது வார்டில் பதிவான வாக்குகள் எவ்வளவு தெரியுமா? 27,584 வாக்குகள். கடந்த மேயர் தேர்தலில், இதே வார்டில் அ.தி.மு.க. வெறும் 5069 வாக்குகள் மட்டுமே பெற்றதற்கு மாறாக, இந்த இடைத்தேர்தலில் 17,656 வாக்குகள் பெற்றுள்ளதாம்.

ஏன்? கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கூட, இந்த 131வது வார்டில் தி.மு.க. பெற்ற வாக்குகள் 9,736. அ.தி.மு.க. பெற்ற வாக்குகள் 6,758. பதிவான வாக்குகள் 17,392. அதாவது கடந்த ஆண்டு அதே வார்டில், தி.மு.க. 2,978 வாக்குகள் அதிகமாகப் பெற்றதற்கு மாறாக, ஓராண்டிற்குப் பிறகு தற்போது நடைபெற்ற தேர்தலில் அதே வார்டில், அ.தி.மு.க. வை விட பத்தாயிரம் வாக்குகள் குறைந்து வாங்கியிருக்கிறதாம்! "பொய் சொன்னாலும், பொருந்தச் சொல்லுங்கடா, போக்கத்த பசங்களா?" என்று உடுமலை நாராயணக் கவிராயர் எழுதிய பாட்டுத்தான் நினைவுக்கு வருகிறது.

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வித்தியாசம் பத்தாயிரம் அல்லது ஐயாயிரம் என்று இருக்கும். இப்போதுகூட கோவை மாவட்டம், குறிச்சியில் நகராட்சித் தலைவர் நேரடித் தேர்தலில் திரு. பிரபாகரன் (தி.மு.க. வேட்பாளர்) ஆறாயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

சென்னை 131வது வார்டில் நடைபெற்றது சட்டமன்றத் தேர்தலுமல்ல! குறிச்சியில் நடந்தது போன்ற நகராட்சித் தலைவர் தேர்தலுமல்ல! சாதாரண வார்டு தேர்தலில் பத்தாயிரம் வாக்கு வித்தியாசம் என்றால், அது அ.தி.மு.க. வினரும், அதிகாரிகளும், போலீசாரும் கூட்டணி வைத்து நடத்திய குடிகெடுக்கும் வேலைதானே!

அத்தகைய ஜனநாயகக் கொலை வெறியர்களுடன் தி.மு.க.வையும், தோழமைக் கட்சிகளையும் சேர்த்து இரு சாராரும் வன்முறையில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுவது என்ன நியாயம்?

இரு சாராரும் கலவரத்தில் ஈடுபட்டது போன்ற -
வன்முறை விளைத்தது போன்ற -
ஒரு தோற்றத்தை உருவாக்குவதில்,
சில ஏடுகளுக்கு என்ன ஆதாயம்?
என்ன அப்படி ஒரு அற்ப திருப்தி?

யார் இத்தகைய அராஜகத்திற்கு வித்திட்டவர் என்ற உண்மை தெரிந்தும், அதனை ஒளித்தும், மறைத்தும் பேசுவது ஏன்?

திராவிட இயக்கத்துக்கு இதுபோன்ற தீங்குகள் இழைக்கப்பட்டால், இங்குள்ள ஏடுகளின் திருப்பார்வைக்குப்

படுவதில்லை - இமயமலையில் பனிச் சரிவு ஏற்பட்டால் மட்டுமே இவர்களுக்குத் தெரியும், நம் இமையை நோக்கி ஏவப்படும் ஈட்டி முனை தெரிவதில்லை. இதுதானே காலம் காலமாகத் திராவிட இனத்துக்கும், அந்த இனத்துக்குப் பாடுபடும் உண்மையான இயக்கங்களுக்கும் இருக்கின்ற சோதனையாகும்.

இந்த வழக்குகள் கிடக்கட்டும்! நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்குக் கிடைத்த வெற்றியை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடரப் போகிறேன். அதில் வெற்றி பெறப் போகிறேன் என்று ஜெயலலிதா சட்டப் பேரவையில் அறைகூவல் விடுத்தாரே, அந்த அறைகூவல் இன்னும் அம்பலத்திற்கு வராமல் அறையிலேயே தூங்குவது ஏன்?

நீதிமன்றத்து வாசலிலே "நிர்வாண நடனம்" ஆடிய வரலாற்றுப் புகழ்பெற்ற வனிதாமணிகள் யார் என்பதைக் கடந்த காலம் கண்டு வியந்ததே! மறந்து விட்டதா?

ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி முகத்தில் திராவகம் ஊற்றி, அலங்கோலப்படுத்தியவர்களா, பெண்களுக்காகப் பரிந்து பேசிப் நிரபராதிகள் மீது வழக்கு தொடர்வது?

தர்மபுரியில் மூன்று மாணவிகளைத் தீயில் பொசுக்கிக் கொன்ற அ.தி.மு.க.வினர் மீது வழக்கே இல்லாமல் செய்திட வஞ்சகம் புரிந்தவர்களின் ராஜ்யத்திலா; வார்டு தேர்தலில் பெண்களிடம் தகராறு செய்ததாக மு.க.ஸ்டாலின், மு.க. தமிழரசு, பரிதி இளம்வழுதி, ஜெ.அன்பழகன், எஸ்.ஏ.எம். உசேன், சுரேஷ்குமார் உள்ளிட்ட அறுபது கழகக் கண்மணிகள் மீது வழக்கு?

வரட்டுமே வழக்கு!
வண்டவாளங்களைத்
தண்டவாளத்தில் ஏற்றிட ஒரு வாய்ப்பு!
வரட்டும்; வரவேற்போம்; வழக்காம் வழக்கு!

அன்புள்ள,
மு.க.
25-4-2005

3133. எல்.ஜி. எனக்கு அமைத்துள்ள இதயபீடம்!

உடன்பிறப்பே,

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின்
அவைத் தலைவரும் -
மொழிப் போரில் மாணவரணிக்கான
தளகர்த்தராக விளங்கியவரும் -
எங்கிருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும்
எனக்கோர் நிரந்தரமான இடத்தைத்

தன் இதயத்தில் முதன்மை பீடம் போட்டு அமைத்துக் கொண்டிருப்பவருமான -

தம்பி எல். கணேசன் அவர்களுக்கு எழுபதாம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு, அவர் பிறந்த ஊரான கண்ணந்தங்குடியிலும், தஞ்சையிலும் விழாக்கள் 24-4-2005 அன்றையதினம் வெகு சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளன.

அந்த நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொள்ள வேண்டுமென்று தம்பி வைகோ அவர்கள் கேட்டு, நானும் ஒப்புதல் தந்து, உடல்நிலை காரணமாக இயலாது போய், நமது இனமானப் பேராசிரியர் அவர்களும், தம்பி கோ.சி. மணி, மத்திய அமைச்சர் தம்பி பழனிமாணிக்கம், சட்டப் பேரவை உறுப்பினர் தம்பி உபயதுல்லா ஆகியோரும் கழகத்தின் சார்பில் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

நமது தோழமைக் கட்சிகளின் அன்புக்குரிய தலைவர்களும் இரு விழாக்களிலும் கலந்துகொண்டு, தம்பி எல்.ஜி., அவர்களின் சிறப்புகளையும், ஆற்றி வரும் அரும்பணியினையும் பாராட்டிப் புகழ்ந்துரைத்துள்ளனர்.

இந்த இனிய விழாவையொட்டி, வெளியிடப்பட்டுள்ள மலருக்கு நான் எழுதி அனுப்பி, அந்த மலரில் வெளிவந்துள்ள

வாழ்த்துக் கட்டுரையை, தஞ்சை விழாவில் தம்பி பழனிமாணிக்கம் படித்து வாழ்த்தியுள்ளார் எனக் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்தேன். என் மகிழ்ச்சியை நீயும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று, அந்த மலரில் இணைந்துள்ள என் வாழ்த்து இதழை இன்றைய கடிதத்தில் சேர்த்துள்ளேன். அது வருமாறு :-

"உயரமான உருவம்! நேர் கொண்ட பார்வை! வாய் சிவக்க சிவக்க வெற்றிலைப் பாக்கு! கையிலே ஒரு புத்தகம், பல நேரங்களில் ஆங்கிலப் புத்தகம்! அனைவரையும் உரிமையோடு அழைத்துப் பேசும் சுபாவம்! உலகத்தையே அலட்சியமாகப் பார்க்கும் நிதானம்! எதையும் எதிர் பார்க்காத தன்னம்பிக்கை! ஆங்கிலத்திலும், தமிழிலும் எந்தப் பொருளைப் பற்றியும் நீண்ட நேரம் பேசக்கூடிய ஆற்றல்! இது தான் தம்பி எல். கணேசன். அவருக்கு எழுபதாவது பிறந்த நாள் விழாவாம்! அதைப்பற்றி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப் போவதாகத் தெரிவித்து, எல்.ஜி.யைப் பற்றி நான் வாழ்த்துச் செய்தி அனுப்ப வேண்டுமென்று அருமைத்தம்பி வைகோ மடல் தீட்டியிருக்கிறார்.

1965ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போர், கனல் விட்டு எரிந்து கொண்டிருந்த போது, தம்பி எல். கணேசன் எனக்குப் பெரிதும் துணையாக இருந்து ஆற்றிய பணிதான் தமிழக அரசியலுக்கு, குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எண்ணற்ற இளைஞர் பட்டாளத்தைத் திரட்டி தந்தது என்று சொன்னால் அது வரலாற்று உண்மையாகும்.

1974ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் "மாநில சுயாட்சி" தீர்மானத்தை நான் முன்மொழிந்தபோது, அதை தி.மு.கழகத்தின் சார்பில் வழிமொழிந்து பேசியவர்களில் தம்பி எல். கணேசன் அவர்களின் பேச்சு, என் நெஞ்சில் எப்போதும் இடம் பெற்ற ஒரு பேச்சாகும். இளம் வயதிலேயே ஆங்கில நூல்கள் பலவற்றைப் படித்து, அந்தக் காலத்திலேயே ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடிய திறமையைப் பெற்று, அண்ணாவின் பாராட்டுக்களைப் பெற்றவர் என் தம்பி எல். கணேசன். "Relevance of Reservation" என்று ஆங்கிலத்தில் ஒரு

நூலும், "இருபதாம் நூற்றாண்டில் திராவிட இயக்கச் சாதனைகள்" என்று ஒரு நூலும் தம்பி எல். கணேசனால் எழுதப்பட்டவை, தமிழர்கள் அனைவரும் படித்துத் தீரவேண்டிய நூல்களாகும். இன்னும் சொல்லப்போனால் அவர் எழுதிய ஆங்கில நூலினைக்கூட எனக்குத்தான் காணிக்கையாக்கி வெளியிட்டிருந்தார்.

நான் தஞ்சைப் பகுதிக்குச் சென்றால், அவரது இல்லத்திலிருந்து உணவு எடுத்துக் கொண்டு வந்து அவரே பக்கத்திலிருந்து பரிமாறி மகிழ்ச்சியடைவார். தம்பி எல். கணேசனால் தயாரிக்கப்பட்ட பல பேர், மத்தியிலும், மாநிலத்திலும் அமைச்சர் பதவிகளிலே இடம் பெற்றபோதிலும், அந்தப் பதவியில் பெரிதும் ஆர்வம் காட்டாதவர். எனினும், 1989ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில், தி.மு. கழகம் மிகப் பெரிய வெற்றியினைப் பெற்று, அமைச்சரவை அறிவிக்கப்பட்டு பதவிப் பிரமாணத்திற்குப் பிறகு, காட்டூருக்கு அன்னை நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திடச் சென்றிருந்தேன். தஞ்சை மாவட்டக் கழக முன்னணி தலைவர்கள் எல்லாம் அங்கே வந்திருந்தார்கள். ஒருவர் மட்டும் வரவில்லை. ஆம், எல். கணேசனைத்தான் அங்கே காணவில்லை. அவர்கூட தனக்கு பதவி கிடைக்கவில்லையே என்பதற்காக அங்கே வராமல் இருந்திடவில்லை. ஆனாலும் என் மனதிற்குள் ஒரு அதிர்ச்சி. எனவே அங்கிருந்தே தலைமைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு, எல். கணேசன் அவர்களை முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளராக நியமித்து ஆணை பிறப்பிக்கச் செய்தேன். அவரை அழைத்துக் கொண்டு தம்பி பழனி மாணிக்கம், ஒன்றியச் செயலாளர் ராஜமாணிக்கம் போன்றவர்கள் பொறுப்பேற்க வந்தபோது, ராஜமாணிக்கம் அவருக்கு என்ன பொறுப்புகள் தரப்படும் என்று என்னிடம் கேட்டபோது, எனக்கு என்னென்ன பொறுப்புகள் உண்டோ அத்தனையும் தம்பி எல். கணேசனுக்கு உண்டு என்று நான் கூறினேன். அவரும் அந்தப் பொறுப்பினையேற்றுச் சட்டமன்றத்தில் என் துறை சம்பந்தப்பட்ட மசோதாக்கள், கேள்விகளுக்கெல்லாம் அவரே திறமையாகப் பதிலளிப்பார். சில ஆண்டுகளுக்கு

முன்பு, ஒரு பெரிய வழக்கில் அவரைச் சிக்கவைத்திட பெரு முயற்சி நடைபெற்று, அதன் காரணமாக அதிகத் தொல்லைகளை அனுபவிக்க நேரிட்ட போதிலும், அதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அந்த வழக்கினைச் சந்தித்தவர் தம்பி எல். கணேசன். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட வேண்டுமென்று தி.மு.கழகத்தின் சார்பில் சில தம்பிமார்கள் பிடிவாதமாக வலியுறுத்தியபோது, ம.தி.மு.க. வேட்பாளராக தம்பி எல்.கணேசன் அந்தத் தொகுதியிலே நிற்கப் போகிறார் என்று தெரிந்ததும், கழகத் தம்பிமார்களை யெல்லாம் சமாதானப்படுத்திவிட்டு, அந்தத் தொகுதியில் எல். கணேசன் நின்று வெற்றி பெற வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருந்தேன் என்பதை அவரே நன்கறிவார்.

தம்பி எல்.ஜி. அவர்களின் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மைக்கு ஓர் உதாரணம் கூறலாம். 1979ஆம் ஆண்டு தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல். அந்தத் தொகுதியில் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆதரவோடு, இந்திரா காந்தி அம்மையாரே போட்டியிடக்கூடும் என்ற பேச்சு பத்திரிகை களிலே வெளிவந்து கொண்டிருந்தது. பரவலாகவும் பேசப்பட்டது. அப்போது, இந்திரா காந்தி அம்மையார் அ.தி.மு.க. ஆதரவோடு நின்றால், கழகத்தின் சார்பில் யார் போட்டியிடுவதென்ற கேள்வி பெரிதாக எழுந்தது. அந்த மாவட்டத்தில் கழகத்தின் மூத்தத் தளகர்த்தராக இருந்த மன்னை அவர்கள், மாவட்டப் பற்றோடு தம்பி. எல். கணேசனைத்தான் நிறுத்த வேண்டு மென்பதில் பிடிவாதமாக இருந்தார். தஞ்சை நகரக் கழகச் செயலாளராக இருந்த நடராஜன், அப்போது மாவட்ட விவசாய அணிச் செயலாளராக இருந்த கோ.சி. மணி, மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த தாழை கருணாநிதி ஆகியோர் காங்கிரசும், அ.தி.மு.க.வும் இணைந்து போட்டியிடுகின்ற காரணத்தால் அன்பில் தர்மலிங்கம் அவர்களை நிறுத்தலாம் என்று கூறினார்கள். இரண்டு கருத்துகளுமே முக்கியமானவை என்பதால், என்ன முடிவெடுப்பது என்று தீர்மானிக்க முடியாத ஒரு இக்கட்டானச் சூழ்நிலை

ஏற்பட்டது. அதுபற்றி முடிவெடுக்க முக்கியமானவர்கள் எல்லாம் கூடி விவாதித்தபோது, எல். கணேசன் தானாகவே எழுந்து, இது கழகத்திற்கு ஒரு சோதனையான நேரம். கழகத்தின் மானப் பிரச்சினை. இந்த நேரத்தில், கழகத்திலே இரண்டு கருத்துகள் என்ற நிலை கூடாது. கழகத்தில் மூத்தவரான அன்பில் அவர்கள் போட்டியிடுவதுதான் சிறப்பாக இருக்குமென்று கூறி, அந்தத் தேர்தலில் அன்பில் அவர்களை நிற்கப் பெரிதும் காரணமாக இருந்ததோடு, தேர்தல் பணியிலே சக்கரம் போல் 24 மணி நேரமும் சுழன்று பணியாற்றினார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தம்பி வைகோ, தன் இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் தம்பி எல். கணேசனின் எழுபதாவது பிறந்த நாள் விழாவினைக் கொண்டாட விருப்பது பாராட்டத்தக்கதாகும். விழா சிறப்பாக நடைபெறவும், அதனை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் நல்ல பல கருத்துகளைத் தாங்கி வெளிவரவும் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

70 வயதாகும் தம்பியை 81 வயது உரிமையின்பேரில் கேலி செய்வது தவறல்ல! கேலியாக ஓர் உண்மை உரைக்கிறேன். “எல்.ஜி. பெருங்காயம்” காரம், மணம் நிறைந்தது. பெருங்காயமிருந்த பாண்டமே மணக்கும் என்கிற போது, இந்தப் “பெருங்காயம்” என்றைக்குமே என் உள்ளத்தில் மணக்கும்!

குறிப்பு :-

உடன்பிறப்பே! இதுதான் மலரில் நான்
எழுதியுள்ள அந்த வாழ்த்துக் கட்டுரை -
விழாவுக்கு நான் செல்ல முடியாத
வருத்தத்தை, இக்கடிதம், எல்.ஜி.க்கு ஓரளவு
நீக்கிடும் என்று நம்புகிறேன். ஆனால் என்
நெஞ்சிலிருந்து அந்த வருத்தம் நீங்கவில்லை.

அன்புள்ள,
மு.க.
26-4-2005

3134. அரசியலும் - அழுக்கின் ஆதிக்கமும்; ஓர் ஆய்வு!

உடன்பிறப்பே,

அரசியல் என்றாலே நச்சுத்தன்மை வாய்ந்தது என்பதைப் போலவும் - அரசியல்வாதி என்றாலே அத்தன்மையினன்தான் என்று அனுமானித்துக் கொண்டும் - எழுதுவது, பேசுவது என்பது இன்றைய நிலையாகிவிட்டிருக்கிறது. அப்படியொரு நிலை யெடுப்பது அடிப்படையிலேயே பெருந்தவறுடைய தாகும் என்பது என் கருத்து. ஒரு சில அல்லது பல என்றே தோராயமாகக் கணக்கிடப்படும் அரசியல்வாதிகளின் அறிவு, ஆற்றல், தொண்டு, சிந்தனை, செயல், எழுத்து, பேச்சு, உறுதி, ஒழுக்கம், தியாகம் ஆகியவற்றைக் கொண்டே ஒரு முடிவுக்கு வர வேண்டுமேயல்லாமல், பொதுவாகவே அரசியல் என்பதே பொல்லாங்கான ஒன்று என அவசரத் தீர்ப்பு வழங்கிவிடக் கூடாது.

திருக்குறளில் பொருட்பால் முழுமையும் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என வகுக்கப்பெற்று - இந்த ஏழு இயல்களிலும் இறைமாட்சி, கல்வி, கல்லாமை போன்ற 70 அதிகாரங்களும் இடம் பெற்று, அரசியல் எனும் பகுதி மட்டுமே 25 அதிகாரங்களைக் கொண்டதாக அமைந்து, அதனைத் தொடர்ந்து அடுத்து வருபவைகளும், 'அமைச்சியல்' எனத் தொடங்கி, 'குடியியல்' ஈறாக அரசியல் தொடர்புடைய அதிகாரங்களாகவே இருப்பதையும் நோக்குமிடத்து, 'அரசியல்' என்பது நமது பண்புக்கு உகந்த ஒன்றல்ல என்றோ, பண்பாட்டுக்குரியதல்ல என்றோ அவசர முடிவுக்கு, எவராயினும் தம்மை ஆட்படுத்திக் கொள்வது அறிவுடைமையாகாது.

'காதல்' கைகூடாத காரணத்தினாலோ - அல்லது காதலில் ஏற்பட்ட ஏமாற்றத்தினாலோ - 'காதல்' என்பதே தீதான ஒன்று என வள்ளுவரும் வசை பாடவில்லை.

மாறாக, 'காலையரும்பிப் பகலெலாம் போதாகி மாலை மலரும் நோய்' என்றே செல்லமாகக் கடிந்து கொண்டு,

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல' எனக் காதலுக்கு அங்கீகாரமே வழங்குகிறார்.

"காதல்! காதல்! காதல் போயிற் சாதல்! சாதல்!" எனப் பாரதி முழங்குகிறார்.

"காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்" என்கிறார் பாரதிதாசன்.

காதலில் ஈடுபடுவோர் உறுதியற்றவராகவோ - ஊசலாடும் மனம் படைத்தவராகவோ - அதனை கிளைக்குக் கிளை தாவும் வேடிக்கை விளையாட்டாகக் கருதுகிறவராகவோ இருக்கலாம். அவர்களைக் கண்டுவிட்டு, காதல் என்பதே வெறுப்பதற்குரிய ஒன்று என எண்ணிவிடக் கூடாது அல்லவா?

அப்படித்தான் காதலைப் போலவே, அரசியலையும், அதனைக் கையாள்வோர் செயலைக் கருதிக் குறைத்து மதிப்பிட்டு, வெறுத்து விடக் கூடாது.

காதலித்து ஏமாற்றும் பேர்வழியைப்போல - அரசியல் வாதிகளில் சில பேர் அல்லது பல பேர் கூட இருக்கலாம். காதலித்து ஏமாற்றுபவர்கள் - ஏமாற்றுவதற்காகவே காதலிப்பவர்கள், இதெல்லாம் காதலின் குற்றமா? காதலித்து கை விட்டுத் துரோகம் செய்த காதலனை அல்லது காதலியைத்தான் வெறுக்கலாம்.

அதற்காக, 'காதல்' என்பதையே வெறுப்புக்குரியதாகக் கருதிட முடியாதல்லவா? அது போலவே அரசியலும், சில அயோக்கியர்களின் புகலிடமாகி விடுகிறது என்பதற்காக - அத்தகைய ஆட்களை வெளியேற்ற வேண்டுமே தவிர, அரசியல் மீது வெறுப்புக் கொள்வதில் என்ன பயன் இருக்க முடியும்?

காதலுக்கு நேர்மாறான 'துறவு'ம் அப்படித்தான் - தூய்மையானது துறவு! நான் சொல்வது புறந் தூய்மையை அல்ல! அது வேடமாகக் கூடப் பயன்படலாம்! அகந்தூய்மை தான் துறவுக்கு இலக்கணம் - இதையும் அரசியலுக்கு இலக்கணம் எழுதிய அய்யன் வள்ளுவர்தான் கூறுகிறார்.

* *"புறந்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை வாய்மையால் காணப் படும்"*

* *"நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்"*

* *"மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம் பழித்தது ஒழித்து விடின்"*

துறவி போல வேடமிட்டு வஞ்சனை செய்வோரைவிட இரக்கமற்றவர் எவருமில்லையென்கிறார்!

துறவு என்று கூறிக் கொண்டு, துன்மார்க்கத்தில் ஈடுபடுவது போலவே அரசியல் அரங்கினையும் அநாகரிகக் கூடமாக - அராஜகக் களமாக ஆக்கிக் கொள்வோர் இருந்தனர் - இருக்கின்றனர் - எதிர்காலத்திலும் இருக்கக் கூடும்.

அதற்காக 'அரசியல்' என்பது சாக்கடை என்றும் - வியாபாரம் என்றும் - பொதுவில் கூறிவிட முடியாது! கூறவும் கூடாது!

சந்தனமாயினும் - புனுகு, சவ்வாது ஆயினும் - பூசிக் கொள்கிற அளவைப் பொறுத்து, பூசிக் கொள்கிறவர்களைப் பொறுத்துத் தானே இருக்கிறது!

இதுபோலச் சிந்தனை செய்யாமல், அரசியல் என்றாலே நிந்தனை செய்ய வேண்டிய ஒன்று எனும் முடிவுக்கு வந்து விடுபவர்களைப் பற்றி என்னதான் கூற முடியும்?

இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் சில மாநிலங்களை ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு, 'அரசியல்' மீது அருவெறுப்பு தோன்றுவதில் வியப்பில்லைதான்.

நாட்டின் பாராளுமன்றமே ஒவ்வொரு நாளும் ஒத்தி வைப்பதற்காகவே கூடுகிறது.

நமது மாநிலத்தின் சட்டமன்றமோ, ஒவ்வொரு நாளும் எதிர்க்கட்சியினரை வெளியேற்றுவதற்காகவே கூடுகிறது.

இங்கே சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி மட்டுமே பேச முடிகிறது. எதிர்க்கட்சிகள் தம்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லக் கூட வாய் திறக்க முடியவில்லை.

அங்கே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் ஆவேசத் தாண்டவம் - ஆளுங்கட்சி ஊமையாக்கப்படுகிறது, ஒத்திவைப்பில் முடிகிறது.

மக்கள் பிரச்சினைகளையோ, முக்கிய மசோதாக்களையோ - ஏறெடுத்துப் பார்த்திட எதிர்க்கட்சியினர் எவருமில்லை.

இப்படி அரசியல், அழுக்குப்பட்டுக் கிடக்கிறது என்பதற்காக, அழுக்கான ஆடைதானே என்று கிழித்துவிட முடியுமா? 'ஜனநாயக'த்தில் தூய்மையாக்கிப் பயன்படுத்திட சலவை செய்யத்தானே வேண்டியிருக்கிறது!

'ஜனநாயகம்' என்பது நாட்டின் சகல மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிற சாசனம் அல்லவா?

ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் சர்வ ரோக நிவாரணியாக இருப்பது அரசியல் என்பதை மறுக்க இயலுமா? அதற்காக மருந்தை விஷமென்று வெறுத்து விட்டோ, விஷத்தை மருந்தென்று வேறுபாடு தெரியாமல் பயன்படுத்தி விட்டால் விளையும் ஆபத்து, எவ்வளவு வேதனை தரும் என்பதையும் விவேகிகள் சிந்திக்காமல் இருக்க முடியுமா?

மக்களாட்சி என்பது மாடி வீட்டுக்கு - மாளிகைக்கு - மந்தகாச வாழ்வினருக்கு மட்டுமே - எழுதி வைக்கப்பட்ட உயில் அல்ல! உரிமை ஆவணமுமல்ல! அது மாடு மேய்க்கும் மாயாண்டியும் - மண் குடிசை வாழ் மன்னாரும் - உரிமை கொண்டாடக் கூடிய சமத்துவப் பிரகடனம்!

உரிமையுடையது என்பதற்காக நமக்காகப் பயன்படும் தண்ணீர்ப் பானையைத் தள்ளி விட்டு உடைத்து விட முடியுமா?

அல்லது அந்தப் பானை ஒருவர்க்கு மட்டுமே உரியது என்று அதன் அருகே நின்று அரிவாளைத் தூக்கிக் கொண்டு ஆட்டம் போடத்தான் முடியுமா?

எனவே, 'காதல்' - 'துறவு' - 'அரசியல்' - எல்லாமே பரிசுத்தமானவைதான்!

அந்தப் பரிசுத்தம், அவற்றை அணிபவர்களைப் பொறுத்துத்தான் நீடிக்கும்! அழுக்கின் ஆதிக்கத்திற்கேற்ப ஆடையின் தூய்மை அமையும்!

ஜனநாயகம் எனும் மக்களாட்சி மாண்பு வேர் இறங்கித் தழைத்து விளைந்திட,

நிலம் செழிக்க ஏர் உழுதல், எரு இடுதல், நீர் பாய்ச்சுதல் போல, களை நீக்குதல், காவல் காத்தல் தேவை என்கிறதே குறள்! அவற்றில் எல்லாவற்றையும் விட, களை நீக்கும் ஏற்பாடு மிக முக்கியமாகும்.

ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும் களைகளாக இருக்கும் இயக்கங்களையோ, நடக்கும் ஆட்சிகளையோ பயிரோடு இணைந்து வளர்வதற்கு இடம் தந்தால், ஏர் உழுதென்ன - எரு இட்டு என்ன - நீர் பாய்ச்சி என்ன பயன் ஏற்பட்டு விடும் - களைதான் வளரும்; நல்ல கதிர் வளராது!

அரசியல், நிலம் போன்றது! அது ஜனநாயகப் பயிர் வளர்க்கப் பயன்பட வேண்டும் - அந்தப் பயிர் மட்டுமே வளர்ந்தால் மனித வளம் - மதச்சார்பற்ற - மத நல்லிணக்க வளம் செழித்துக் குலுங்கும்!

அரசியல் நிலத்தில் தன்னலம் வளர்க்க
களைகளாய்த் தோன்றுவோர்,
களையப்பட வேண்டியோரேயாவர்!
அப்படிக் களைந்து விட்டால்; அரசியல் தூய்மையாகும்!
'அறநெறி தானிய விளைச்சல்' அமோகமாகப் பெருகும்!

குளத்தில் படர்ந்துள்ள பாசியை அகற்றாமல், குளத்தைப் பழிப்பது, பழிப்போரின் குற்றம்தானே?

பாசியைக் கண்டுகொள்ள, முதலில் நம் கண்ணில் விழுந்துள்ள தூசியை அகற்றிக் கொள்வோம்.

அன்புள்ள,
மு.க.
24-4-2005

3135. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்!

உடன்பிறப்பே,

ஜெயக்குமார் என்ற இளைஞன், அண்ணா அறிவாலயத்திற்கு வந்து என்னைப் பார்த்தான். எழுதியிருப்பதைப் படித்துப் பார் என்று ஒரு தாளைக் கொடுத்தான்.

இடையிடையே பிழைகள் சில தலை நீட்டிடும் வண்ணம் வாக்கியங்கள் அமைந்திருந்தாலும், ஏதோ ஒரு கருத்தை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் அந்த இளைஞனுக்கு இருப்பது புரிந்தது.

“தலைவரே ஓயாமல் உழைக்கிறீர் –
உழைத்துக் கொண்டே இருக்கிறீர் –
உறங்காமல் உழைக்கிறீர் –
நானும் உழைக்கிறேன் –
ஆனால் உறங்காமல் இல்லை.
உறங்குகிறேன்.
உறங்கினால்தானே,
நமது குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின்
அறிவுரையின்படி
இளைஞர்கள் கனவு காண முடியும்”

பக்கத்தில் இருந்த பேராசிரியர் அவர்கள், அதைப் படித்துவிட்டுப் பாராட்டிப் புன்னகை புரிந்தவாறு அந்தத் தாளை என்னிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அண்ணா அறிவாலயத்திலிருந்து வீடு வந்து சேரும் வரையில், காரில் என் கவனம் அந்தத் தாளின் மீதே இருந்தது.

திரைப்படக் காட்சிகளில் தெரிவது போல அந்த இளைஞனின் முகமும் தாளில் நிழலாடியது.

வியப்பு! வியப்பு! அதுவும் விரிவடைந்த வண்ணம்! அடடே! குடியரசுத் தலைவர் அறிவுரைப்படி நடப்பதற்காக அவன் உறங்குவது மட்டுமல்ல! என்னையு மல்லவா உறங்கச் சொல்லி மறைமுகமாக உபதேசம் செய்கிறான்.

உறங்காமல் நான் உழைக்கிறேன் என்பது பெரும்பாலும் எழுதுகிற பணி - மக்களைச் சந்திக்கப் பயணம் செய்கிற பணி - இவைபோன்ற பணிகளை யாற்றும்போதுதானே!

ஊரும், உலகமும் உறங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் அண்ணா உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அப்படியே பழகிக் கொண்டு மிருக்கிறேன். வைகறை தலைகாட்டி, "வை பேனாவை கீழே" என்று வாங்கி வைக்கிற வரையில் எழுதுவதிலே இருக்கிற நிம்மதி - உற்சாகம் - வேறு எப்போதும் இருப்பதில்லை. இளங்காற்று தவழ்ந்து வரும் அந்த மெல்லிய ஒலியைத் தவிர, வேறு எந்த ஓசையுமற்ற இயற்கையான அமைதி, எழுதுவதற்கு எவ்வளவு பெரிய ஊக்குவிப்பு தெரியுமா?

அண்ணா வாயிலாக அதையும் பழகியிருக்கிறேன் - அமளி துமளி, சாலையில் வாகனங்கள் போகும் பேரொலி - அச்சகத்தில் அங்குமிங்கும் ஆள் நடமாட்டம் - பார்வையாளர்கள் கூட்டம் - அவற்றுக்கிடையே அய்யா பெரியார் அமர்ந்து, அசைவின்றி எழுதிக் குவிப்பாரே! அப்படியும் பழகியிருக்கிறேன் - அதையும் அருகிலிருந்து பகலிலும், இரவிலும் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் பார்த்துப் பார்த்து!

வேறுபாடான இந்த இரண்டும் தெளிவாக்குவது என்ன? பூங்கா வழிப் பயணத்துக்கு மட்டுமல்ல, புதர் மண்டி புயல் வீசும் காட்டுப் பயணத்துக்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதுதான்!

மாண்புமிகு அப்துல் கலாம், "இளைஞர்கள் கனவு காண வேண்டும்" என்று சொன்னதை, இந்தச் சின்னத் தம்பி அப்படியே நேரடியாகப் பொருள் கொண்டு விட்டான்!

"திட்டினாயே, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்" என்றால், அந்தச் சொற்களைக் கையால் எடுத்து, திட்டு வாங்கியவர்

கையிலே கொடுத்து, திட்டியவர் அவர் கையால் அவற்றைப் பெற்றுக் கொள்வது என்று பொருள் அல்ல - திரும்பப் பெற்றுக் கொள்வதாக வாய்மொழியாகத் தெரிவித்தாலே இவ்வளவு காரியங்களும் நடைபெற்றதாகத்தான் கருதிட வேண்டும்.

'விழி! எழு! உணர்வு கொள்!' என்றால் தூங்கிக் கொண்டு இருப்பவரைத் தட்டி எழுப்பிச் சொல்லும் வார்த்தைகள் என்று யாரும் கருதுவதில்லை. சமுதாயத்தில் விழிப்புணர்வையும், வீரத்தையும் ஊட்டி, அடிமை விலங்கொடிக்க ஆர்த்தெழச் செய்திடும் ஆணையாகவே கருதப்படுகிறது.

அதேபோலத்தான், அப்துல் கலாம் அவர்கள், "இளைஞர்களே! தாலாட்டுப் பாடுகிறேன்! உறங்குக! பின்னர் என் தாலாட்டு கேட்டு உறங்கும்போது எதிர்காலம் பற்றிக் கனவு காண்க!"

என்று சொல்லவில்லை.

"கனவு காண்க என்பதற்குவ் சிந்தனை செய்க - சிந்தித்துச் செயல்படுக!" என்பன போன்ற பொருள்களே பொருந்துவனவாகும்.

இளைஞர்கள் காணும் கனவுகள் வித்தியாசமாக இருக்கும் - அப்படித்தான் இருக்க வேண்டும் - அப்போதுதான் பலவிதத் தேவைகள் உள்ள இந்தத் தேசத்துக்கு அந்தக் கனவுகளின் பலன்கள் பரிபூரணமாகும்.

இளைஞர்கள் அறிவுலக மேதைகளாகக் கனவு காணலாம் -

அற்புதமான பொறியாளராக -

ஆரோக்கியமிக்க சமுதாயத்தை உருவாக்கும்
மருத்துவராக -

வரலாறு படைப்பவராக -

வரம்பிலா வானத்தை, வற்றாத கடலை ஆராய்பவராக -

சாதி மத பேதங்களற்ற சமத்துவ சீலராக -

கவிஞராக -

ஓவியராக -

கல்லில் சிலை வடிப்பவராக -

ஆக்கப்பூர்வப் பணிகளில் அக்கறை கொண்ட
அரசியல்வாதியாக -

புலவராக -

புரவலராக -

ஒளிர வேண்டுமெனக் கனவு காணலாம்.

முதல் கனவு, இளமையில் நான் காண விரும்பாத கனவு - கல்லூரி வரையில் படிக்க வேண்டும் - அது கலைந்த கனவாகவே ஆகிவிட்டது - என் மொழி இனம், நாடு, மக்கள் இவற்றின் ஏற்றமே எப்போதும் என் கலையாத கனவாகி விட்டது - இப்படிக் கனவு காண்போர் சமுதாயத்தில் விதி விலக்குகளாகத்தான் "ஏற்பு முத்திரை" குத்திக் கொள்ள முடியும்.

நன்கு கற்றுத் தெளிந்து, தேர்ந்து, நாம் ஈடுபாடு கொண்ட துறையில் நடு நின்ற நாயகமாய் நாடு போற்றத் திகழ்வோம்! என்பதே ஒவ்வொரு இளைஞனும் காண வேண்டிய கனவு - அந்தக் கனவு காண்பதற்காக உறங்க வேண்டிய அவசியமில்லை - மாறாக, அந்தக் கனவு கண்டிட விழித்தெழுக! விழித்தெழுந்தால் மட்டுமே, கனவுகள் நிறைவேறும் - எதைப் பற்றியும் கனவு காண்பது எளிது! அந்தக் கனவு, கடின உழைப்பின்றி நிறைவேறும் என்பது அரிது!

எனக்கு மிகவும் பிடித்த
பொன்மொழிகளில் ஒன்று;

"நீண்ட தூரம் ஓடினால்தான்
அதிக உயரம் தாண்ட முடியும்" என்பதாகும்.

அன்புள்ள,
மு.க.
29-4-2005

3136. குறுகலாகச் சிந்திப்போரின் குட்டை மனப்பான்மை!

உடன்பிறப்பே,

தமிழகம், புதுவை உள்ளிட்ட அளவில் 12 அமைச்சர்கள் மத்தியில் இருக்கிறார்களே! 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆயிற்றே, இத்தனை பேர் பதவியில் இருந்தும், இந்த மாநிலத்துக்கு என்ன செய்தார்கள் என்று யாராவது ஓர் அமைச்சர் இங்கே வாய் திறந்தால் போதும்! உடனே அதை வரி பிசகாமல் தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து "டாம் டாம்" கொட்டுகிறவர்கள், இந்தக் கூட்டணியினர், அமைச்சர்களாக இருந்தும் - நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களாக இருந்தும் மத்திய அரசின் வாயிலாக ஆற்றியுள்ள ஆக்கபூர்வமானச் சாதனை களை அணுவின் வடிவில் கூட வெளியிடக் கூடாது என்பதிலே உறுதியாகப் பல்லைக் கடித்துக் கொண்டு இருப்பார்கள். அந்தப் பத்திராதிபர்களையோ, அவர்கள் பத்திரிகா தர்மத்தின்மீது கொண்டுள்ள பக்தி விசுவாசத்தையோ நான் குறைத்து மதிப்பிடு பவனல்லன்.

அவர்களில் சிலர், நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது என்னைச் சந்தித்த நேரத்தில்கூட, "அய்யா! என்னைத் திருப்திபடுத்துவதாக எண்ணிக் கொண்டு, எதிர்க்கட்சிச் செய்திகளையோ, அவர்களின் பேச்சுக்களையோ இருட்டடிப்பு செய்து விடாதீர்கள். ஆளுங்கட்சியின் செய்திகளை வெளியிடும் அளவுக்கு, எதிர்க்கட்சிகளின் செய்திகளையும் வெளியிடுங்கள்" என்று கேட்டுக் கொண்டுதானிருப்பேனே தவிர, எப்படி அந்தச் செய்திகளைப் பிரசுரிக்கலாம் எனக் கேட்டு, உறுமி, அவர்களை அடிமை நிலையிலே வைத்து, நான் ஆண்டான் அவதாரம் எடுத்துக் காட்டியதில்லை. இந்த உண்மையை அவர்களது மனச்சாட்சி நன்கு உணரும்!

இன்றைய நிலை என்ன? நாம் எதிர்க்கட்சி வரிசையில்! - ஆனால் அதே பத்திராதிபர்கள், ஒரு காலத்தில் "அச்சமில்லை! அச்சமில்லை!" என்று சுதந்திரச் சங்கு ஒலித்தவர்கள்! இன்று நெருக்கடி கால அவசர நிலைப் பிரகடனத்துக்கு ஆளாகி விட்டவர்களைப் போல, நாஜிச, பாசிச கூட்டுத் தர்பார் எனும் காட்டுத் தர்பாரில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கிற காட்சியைத்தான் காண முடிகிறது.

அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தின் காரணமாக - தமிழ்நாட்டுக்கு நிரம்பப் பயன் விளைப்பதும், பொதுவானதும் பிரம்மாண்டமானதுமான ஒரு முக்கிய திட்டத்தைப் பற்றி செய்தி வெளியிட்டவர்கள், அந்தத் திட்டம் முழுமைக்கும் ஏதோ ஜெயலலிதாதான் காரணகர்த்தா என்பதுபோல வெளி யிட்டிருக்கிறார்கள். அதை அப்படியே மறுத்துக் கூட அல்ல, அந்தச் செய்தியை ஒட்டித்தான், அந்தத் திட்டம் வருவதில் - தமிழகக் கூட்டணியின் அமைச்சர்களுக்கும், கடந்த கால தி.மு.க. ஆட்சிக்கும் பங்கு உண்டு என்றும், நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் முயற்சியும் உண்டு என்றும் விவரித்து, அந்த விமான நிலைய விரிவாக்கத் திட்டத்துக்கு, தமிழக "ஜெயலலிதா அரசு" நிலம் வழங்க ஒப்புதல் தந்ததற்காக மகிழ்ச்சியும் தெரிவித்து ஓர் அறிக்கை அனுப்பினால், அதை அப்படியே அந்தச் சில ஏடுகள் இருட்டடிப்பு செய்துவிட்டது என்ன நியாயம் என்றுதான் தெரியவில்லை!

அந்த இருட்டடிப்பைக் கிழித்துக் கொண்டு வெளிவரும் கதிரொளியைப்போல - இதோ கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளை நினைவுபடுத்துகிறேன். ஆதாரபூர்வமாக!

பிரச்சினை, சென்னை சர்வதேச விமான நிலையத்தை உலகத் தரத்துக்கு உயர்த்த வேண்டும் என்பதாகும்.

40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வு பெற்ற பிறகு, நமது முயற்சியின் தொடர்ச்சியால் நெசவாளர்களுக்கான சென்வாட் வரி நீக்கம் - செம்மொழியாகத் தமிழ் - சேதுக் கால்வாய்த் திட்டமெனும் தமிழகத்தில் வளம் கொழிக்கத் தொடங்கியுள்ள திட்டம் - கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் - சாலைகள், மேம்பாலங் கள் திட்டம் - இப்படிப் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிற நமது கூட்டணியினர், சென்னை சர்வதேச விமான நிலையத்தை

உலகத் தரத்துக்கு உயர்த்திட எடுத்த நடவடிக்கைகளை, இதோ வரிசைப்படுத்திக் குறிப்பிடுகிறேன்.

என் உடன்பிறப்புகள்; பொதுக்கூட்ட மேடைகளில் இதனைப் பயன்படுத்தினாலே போதும்! ஏடுகள் சிலவற்றின் இருட்டடிப்பு நம்மை மக்கள் மன்றத்திலிருந்து விரட்டி விடாது - மாறாக, குட்டை மனம் படைத்தவர்கள் யார் என்பதை அடையாளம் காட்டி விடும்.

சென்னை விமான நிலையத்தினை உலகத் தரத்திற்கு விரிவாக்க வேண்டுமென்ற கருத்து, மறைந்த தம்பி முரசொலி மாறனால் தெரிவிக்கப்பட்டு, அதை வலியுறுத்தி அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டு, 1998 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றபோது, 26-9-1998 அன்று அப்போது பிரதமராக இருந்த வாஜ்பய் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

> "விமானத் துறையில் வளர்ந்து வரும் தேவைகளை உத்தேசித்தும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களை எண்ணியும், தமிழக அரசு ஒரு புதிய நவீன உலகத் தரம் வாய்ந்த விமான நிலையம் சென்னையிலே அமைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. சிங்கப்பூர், ஆம்ஸ்டர்டாம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ளது போன்ற விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும். தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் அதற்கான சாத்ய கூறுகள் பற்றித் திட்டமிட்டு வருகிறது. இதுகுறித்து, மார்ச் 1998லேயே மத்திய அரசின் விமானத் துறையிடம் இதற்காக ஒரு குழுவினை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம். அவர்கள் விரும்பியவாறு எங்கள் தரப்பிலிருந்து இரண்டு பேரையும் அதற்காக நியமித்துள்ளோம். மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள குழு, இந்தப் பிரச்சினை குறித்து விரைவிலே ஆய்வினை மேற் கொண்டிட வேண்டும். தமிழக அரசின் இந்த முயற்சியை விரைவுபடுத்தும் வகையில், தாங்கள், மத்திய அரசின் விமானத் துறைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கிட வேண்டுகிறேன்."

இந்தக் கடிதத்தைத் தொடர்ந்து, 27-10-1998 அன்றும் பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு, மேலும் ஒரு கடிதம் எழுதி,

திட்டத்தை விரைவுபடுத்திட உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அத்துடன் நில்லாமல், 1999ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் தேதி, பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு, மீண்டும் ஒரு கடிதம் எழுதி, அவர் உடனடியாகத் தலையிட்டு இந்தத் திட்டத்தை விரைவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். பின்னர், 28-10-2000 தேதியிட்டு, நான் பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் வெளிநாடுகளிலிருந்து நேரடி முதலீட்டினை ஈர்ப்பதில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருவதாகக் குறிப்பிட்டு, அதற்கு, மேலும் ஊக்கம் தந்திடும் வகையில், சென்னை விமான நிலையத்தினைத் தரம் உயர்த்திட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும், கொள்கை அளவிலான ஒப்புதலை உடனடியாக வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

அதைத் தொடர்ந்தும் 21-12-2000 அன்று பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், மத்திய அரசு பெங்களூரிலும், ஐதராபாத்திலும் புதிய விமான நிலையங்களை ஏற்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. எங்கள் கோரிக்கை ஏற்கப் படாவிட்டால், தமிழ்நாட்டிற்கு விரோதமாக மத்திய அரசு நடைபெறுகிறதோ என்று நாங்கள் அச்சப்பட நேரிடும். அன்னிய நேரடி முதலீடுகளை ஈர்க்கின்ற வகையில், தற்போதுள்ள போட்டி சூழ்நிலையில், சென்னையில் உலகத் தரத்திற்கேற்ற விமான நிலையம் அமைக்கப்படவேண்டிய அத்தியாவசியத்தை உணர்ந்து, தாங்கள், உடனடியாக இந்தப் பிரச்சினையிலே தலையிட்டுக் கொள்கை அளவிலான மத்திய அரசின் ஒப்புதலை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்தக் கடிதத்தைத் தொடர்ந்துதான் மத்திய அமைச்சர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராஜா உள்ளிட்ட தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று 22-12-2000 அன்று பிரதமர் வாஜ்பய் அவர்களையும், விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சரத் யாதவ் அவர்களையும் தமிழக அரசின் அதிகாரிகளைக் கொண்ட குழுவினரோடு சந்தித்து நிலைமைகளை விளக்கினார்கள்.

அதற்குப் பிறகும் 8-2-2001 தேதியிட்டு, திட்டத்திற்கு விரைவான ஒப்புதல் அளிக்கக் கேட்டு விமானத் துறை

அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி மாறியது.

தேர்தலுக்குப் பிறகு, தி.மு.கழகம் தமிழகத்திலே எதிர்க்கட்சியாக ஆன நிலையிலும், இந்தக் கோரிக்கையை விட்டு விடாமல், மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததோடு, 2004ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலும் இந்தத் திட்டத்தையும் சேர்த்து தீர்மானம் நிறைவேற்றி, அதுவும் பிரதமரிடமும், சோனியா காந்தி அவர்களிட மும் அளிக்கப்பட்டதோடு, தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடமும் இதுகுறித்து நேரில் சந்தித்து பேசியிருக்கிறார்கள். தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் நான் பிரதமரிடம் இதுகுறித்து பேசினேன்.

இதன் தொடர்ச்சியாகத்தான் சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்கான கொள்கை அளவிலான ஒப்புதல், பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் கடந்த மார்ச் திங்களிலேயே வழங்கப்பட்டது.

அந்தச் செய்தி அப்போதே ஏடுகளில் வெளிவந்தது. குறிப்பாக "இந்து" நாளிதழ் 11-3-2005இல் "Chennai airport to be expanded" என்ற தலைப்பில் "In a press release, the office of the Communications Minister, Dayanidhi Maran, tonight said the Prime Minister accorded "in principle" approval to the Civil Aviation Ministry to initiate modernisation of the Chennai airport on a par with the Delhi and Mumbai airports and expansion of the Madurai, Tiruchi and Coimbatore airports" என்று வெளியிட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து இப்போது முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டுள்ள ஒரு தமிழ் நாளேடு, தனது 11-3-2005 தேதிய இதழில், "எட்டாவது" பக்கத்தில் வெளியிட்ட செய்தியில், "சென்னை விமான நிலையத்தை நவீனப்படுத்த பிரதமர் அனுமதி - தயாநிதி மாறனின் கோரிக் கையை ஏற்றார்" என்று தலைப்பிட்டு, "சென்னை விமான நிலையத்தை நவீனப்படுத்தவும், மதுரை, திருச்சி, கோவை விமான நிலையங்களை விரிவுபடுத்தவும், மத்திய மந்திரி தயாநிதி மாறன் விடுத்த கோரிக்கையை ஏற்று பிரதமர் அனுமதி அளித்துள்ளார் என்ற செய்தியை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

எனவே, சென்னை விமான நிலையத்தை நவீனப் படுத்துவதற்கான கொள்கை அளவிலான ஒப்புதல் ஏற்கனவே பிரதமரால் வழங்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்திற்கும் ஆணை, கடந்த மார்ச் திங்கள் 10ஆம் தேதியன்றே பிறப்பிக்கப்பட்டு, அதன் தொடர் நடவடிக்கையாகத்தான் மத்திய அரசின் விமானத் துறை அமைச்சர் அதற்கான நிலத்தினை வழங்கக் கோரி தமிழக முதல்வருக்கு 21-4-2005 தேதியிட்ட தனது கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

உண்மைகள் இவ்வாறு இருக்க, ஜெயலலிதா மட்டுமே இதற்கான கோரிக்கை வைத்ததைப் போலவும், அந்த முயற்சியில் அவர் வெற்றி பெற்று விட்டார் என்பதைப் போலவும் பத்திரிகா தர்மத்தை வாயளவில் பேசும் சில ஏடுகளில் செய்தி வெளி யிட்டிருக்கிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்த 12 அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்று யாராவது கேட்டால், அதை பிரதானமாக வெளியிட மட்டும் தயாராக இருக்கிற சில ஏடுகளுக்கு, இந்த உண்மையை வெளியிட மட்டும் ஏன் கசக்கிறதோ தெரியவில்லை.

நான் வெளியிட்ட அறிக்கையில், இதனை எதிர்க் கட்சிகளுக்கும், ஆளுங்கட்சிக்கும் கூட்டு முயற்சியால் ஏற்பட்ட வெற்றி என்றே குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் குறுகலாகவே சிந்திப்பவர்களுக்கு, "குட்டை மனப்பான்மை" இன்னும் போகவில்லை.

"காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?"

என்ற பாவேந்தரின் கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

அன்புள்ள,

மு.க.

2-5-2005

3137. வெற்றி காண்போம் - அதிகார வெறியை வீழ்த்துவோம்!

உடன்பிறப்பே,

காஞ்சி, கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தலில் இடைவிடாது பணியாற்றிக் கொண்டிருக்கும் உன்னை, ஏதோ "உபதேசம்" செய்வதற்காக இடையே தடுத்து நிறுத்திவிட்டேன் என்று கோபித்துக் கொள்ளாதே - எப்போது பார்த்தாலும் அறிவுரைதானா? என்றும் சலித்துக் கொள்ளாதே!

ஆசையுள்ள தம்பி என்று நீ இருப்பதாலும், உன் அன்புக்குரிய அண்ணனாக நான் இருப்பதாலும் நீ தவழும்போதே, தவறி விழுந்து விடக் கூடாதே யென்று தாங்கிப் பிடித்திட தயாராகக் கரங்களை நீட்டிக் கொண்டிருந்த அந்தக் காலந்தொட்டு இந்தக் காலம் வரையில், இந்தத் தமையன், தன்மானச் சிங்கங்களாம் என் தம்பிகளின் வழியில் எதுவும் குறுக்கே தடுக்கி விடக் கூடாதே என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவன்தானே! அந்தக் கடமை யுணர்வும் - கழகம் கட்டிக் காத்து வரும் கட்டுப்பாட்டு உணர்வும் - கழகம் போற்றி வளர்த்திடும் கண்ணியப் பண்பாடும்தானே நமது கவசமெனக் கொண்டு, கையாளும் கணைகள் மீது செலுத்தும் கவனத்தைவிட அதிகக் கவனத்தை இந்தக் கவசத்தைக் காப்பதில், பயன்படுத்துவதில், நாம் செலுத்தி வருகிறோம்.

இவற்றில் மேலும் அதிக கவனம் - அக்கறை - இந்த இடைத் தேர்தலில் நீ செலுத்த வேண்டும், செலுத்துவாய் என்று எனக்குத் தெரியும்.

குளத்துப் படிக்கட்டில் இறங்குபவர் எச்சரிக்கையுடன் இறங்குவார் என்றாலும், படித்துறையின் மேலே நிற்பவர், "பார்த்து! பார்த்து! பாசி பிடித்த படிகள் ஜாக்ரதையாக இறங்கு!" என்று எச்சரிப்பது இயல்பான ஒன்று அல்லவா?

அந்த இயல்பும், இரத்த பாச இன உணர்வும்தானே - இந்த இயக்கத்துக்குச் சோதனையாக வாய்த்த சூறாவளிச் சுழற்சிகளையும், புயல் தாக்குதல், பூகம்ப இடிபாடு ஆகியவற்றையும் எதிர்கொண்டு தாங்கி நின்று, தந்தை பெரியார் நிலைநாட்டிய தன்மான இயக்கமாம் அடி பீடத்தையும், அந்தப் பீடத்தில் பேரறிஞர் அண்ணா அமைத்திட்ட இனமானம் எனும் எழுச்சிமிகு சிலையையும் பாதுகாத்து வருகின்றன.

அந்த மான உணர்வின் பெயரால்தான், உடன்பிறப்பே, உன்னைப் பார்த்து தாயின் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்! அன்றொரு நாள் மயிலைப் பொதுக் கூட்டத்தில், நமது மனங்கவர் தலைவர் அண்ணா அவர்கள் கூறினாரே! "நாம் அனைவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்திட, அந்தத் தாயின் வயிறு இடம் தராது என்பதால் தனித்தனி தாயின் வயிறுகளில் தோன்றி, இந்த இயக்கத்தில் சகோதரர்களாகக் காட்சி தருகிறோம்" என்று! - அந்த வாசகம் என்ன சாமான்யமானதா? பக்தர்களுக்கு மாணிக்க வாசகரின் திருவாசகம்! அதை விட ஆயிரம் மடங்கு அன்பினைத் தேக்கி வழங்கிடும் அற்புத 'அருள்' வாசகமல்லவா, அண்ணாவின் அந்தப் பாசம் பொழியும் பண்பார்ந்த வாசகம்!

அண்ணன் அன்று குறிப்பிட்ட அந்த உடன்பிறப்புகளில் ஒருவர்தான் காஞ்சியிலும் - அதேபோலக் கும்மிடிப்பூண்டியிலும் கழக வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். எப்போதுமே! இன்று நேற்றல்ல!

அண்ணா காலத்திலிருந்தே, ஆட்சி மன்றங்களின் தேர்தல்களில் போட்டியிடுவதென்று திருச்சி மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றிய காலந்தொட்டே நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதித் தேர்தல்களில் அது பொதுத் தேர்தலாயிருப்பினும் அல்லது இடைத் தேர்தலாயிருப்பினும் கழக வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்குத் தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பிக்கிறவர்கள் ஒரு தொகுதிக்கு ஏழு அல்லது எட்டு பேருக்கும் குறையாத எண்ணிக்கையினராகவே இருந்திடுகின்றனர்.

அந்த ஏழெட்டு பேரில், ஒரு தடவைக்கு ஒரு தொகுதியில் போட்டியிட ஒருவரைத்தான் தலைமைக் கழகம் அறிவிக்க முடியும். ஏழெட்டு பேரையும் அறிவித்திட தேர்தல் விதிமுறை இடம் தராது. அறிவிக்கப்படாதவர்கள் அடுத்த வாய்ப்புக்குக்

காத்திருக்க வேண்டியவர்கள் என்பதே கழகம் கடைப் பிடித்து வரும் நடைமுறையாகும்.

> “பீரோவில் அடுக்கியிருப்பது இருபது பட்டுப் புடவை எனில், அவற்றில் ஒன்றைத்தான் - விழாவுக்குப் போகிற பெருமாட்டி எடுத்துக் கட்டிக் கொள்வாள். அதற்காக மற்ற புடவைகளை அவள் வெறுத்து விட்டாள் என்று பொருள் அல்ல! இன்னொரு விழாவுக்கு அவள் செல்ல வேண்டிய வாய்ப்பு வரும்போது, வேறொரு புடவையை அவள் உடுத்திக் கொள்வாள் என்பது எப்படி உறுதி யானதோ, அதைப்போல, அடுத்தடுத்த வாய்ப்புகள் என் தம்பிமார்களுக்கு வந்தே தீரும்.”

இது அண்ணா அவர்கள் தி.மு.க. தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவை எடுத்த பிறகு ஒரு மாநாட்டில் வெளியிட்ட கருத்து - ஆம்! நடைமுறை உண்மையுங்கூட!

இப்போது ஏதோ, இந்த இடைத் தேர்தலில் காஞ்சியிலோ, கும்மிடிப்பூண்டியிலோ வாய்ப்பு கிடைக்காதவர்களிடையே கசப்புணர்வு என்று சில பத்திரிகைக்காரர்கள் கதை கட்டுகிறார்களே! அதற்காக இதை எழுதுகிறேன் என்று யாரும் எண்ணிடமாட்டீர்கள்.

அப்படியொரு கசப்போ, துவர்ப்போ, கடுகளவும் இல்லை என்பது எனக்கும் தெரியும் - என் அன்பு உடன்பிறப்பான உனக்கும் தெரியும். எனினும், எப்படியும் வெற்றி பெற்று விட வேண்டுமென்று வெறி கொண்டலையும் ஆதிக்க வர்க்கத்தினர், அதிகாரிகள், காவல்துறையினர், மற்றுமுள்ள ஆதிக்கபுரியின் ரத, கஜ, துரக, பதாதிகளுடன் இந்தத் தேர்தலில் பணத்தை வாரியிறைத்து அதில் பலிக் கடாக்கள் ஆவோர் யார் எனப் பட்டியலிட்டு, அவர்தம் துணையுடன் சகல விதமான ஜாலங்களையும் செய்து பார்த்திடத் துணிந்து அச்செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

இத்தகைய “கோயபல்ஸ்” பிரச்சாரத்துக்குக் காது கொடுக்காமல், கர்மமே கண்ணாக உழைத்திட என் உடன்பிறப்புகள் முன்வர வேண்டும்.

வாக்காளர்களை வீடு வீடாகச் சென்று சந்தித்து, வாக்கு கேட்பது என்பது மட்டுமல்ல! அந்த வாக்காளர்களின் பெயர்கள்,

வாக்குப் பட்டியலில் ஒழுங்காக இடம் பெற்றிருக்கிறதா என்று பார்ப்பதும் - அதில் தவறு விளைந்திருப்பின், முறைப்படி அதனைத் திருத்தும் பணியில் ஈடுபடுவதும்கூட மிக முக்கியமான தேர்தல் பணிதான்!

தேர்தல் நாளன்று, ஏற்கனவே செத்து மடிந்த சில பேர், சீராளன் சிறுத் தொண்டர் புராணத்தில் எழுந்து வந்தது போல் வருவர். அதையும் எச்சரிக்கையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.

வாக்குச் சீட்டில் பெயர் இடம் பெறாதவர்கள், அங்கீகாரம் பெற்ற வேறு வித அடையாளங்களுடன் விதிமுறைகளையும், நமது தேர்தல் ஏஜண்டுகளையும் ஏமாற்றி விடலாமெனக் கருதி, அத்தகைய மோசடி முயற்சிகளில் ஈடுபடுவர் - இப்போதே ஈடுபட்டுக் கொண்டுதானிருக்கின்றனர். அவர்களின் முகமூடியைக் கிழிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஆக்கபூர்வ நடவடிக்கைகளை, அச்சத்துக்கு இடமின்றி எடுத்திட வேண்டும்.

வாக்குச்சாவடியிலேயே அநியாயம், அக்கிரமம், அத்துமீறல் தலைகாட்டுவதை உடனுக்குடன் தடுத்திட வேண்டும்.

ஓட்டுக்கு வேட்டி - சேலை - பணம் கொடுக்கிறார்கள் என்று பேசினால் போதாது! அப்படிக் கொடுப்பவர் அதற்கான பயனைப் பெறாமல், ஜன நாயகக் குழந்தை விலை போகாமல் பாதுகாத்திடும் படை முகத்துப் பெருவீரர்களாக, என் பாசமிகு உடன்பிறப்புகள் பணியாற்றிட வேண்டும். அமளி விளைவித்து அறுவடையான தானியத்தைக் களத்து மேட்டிலேயே வாரி இறைத்து விட, வஞ்சகர் திட்டம் தீட்டியிருப்பர்.

அந்தத் திட்டம் நிறைவேறாமல் தடுத்திட, நாம் பயன்படுத்த வேண்டியது அமைதி எனும் ஆயுதம்தான் - கட்டுப்பாடு, கண்ணியம் எனும் கவசங்கள்தான்.

இவற்றைக் கடைப்பிடித்துக் கழகப் பாசறையில் பெற்ற கண்ணியமெனும் பயிற்சியைக் கடமையாற்றிடப் பெற்றிருக்கிற நாம், இந்த இடைத் தேர்தல் களத்தில் ஈட்டிட இருக்கும் வெற்றியின் அளவைப் பெருக்கிடும் வகையில் பாடுபடுவோம்! வாரீர் உடன்பிறப்புக்காள் என அழைக்கிறேன்.

"வஞ்சகர் வந்தவர் நம்மால் செழித்தார் -
வாழ்வினில் உயர்ந்த பின் நம்மையே பழித்தார்"

எனும் கூற்றுக்கு அடையாளமாக - வடிவெடுத்துள்ள வஞ்சகம் நம்மை வளைத்து விடாமல், அதனைத் துளைத்துத் துரத்திடத் தொகை தொகையாகப் பகை வரினும் துவளாமல், வெற்றி காண்போம் - அதிகார வெறியை வீழ்த்துவோம்!

அன்புள்ள,

மு.க.

5-5-2005

3138. தொடர்ந்திடும் நமது தூய பணிகள்!

உடன்பிறப்பே,

உழைத்த களைப்பில் உனக்கு மூச்சிரைக்கும் ஒலி என் காதில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. அதனைக் கேட்டவாறு நான் உனக்கு இதனை எழுதிக் கொண்டிருக்கிறேன். என் மூச்சிருக்கும் வரையில், எழுதிக் கொண்டும், உன்னைப்போல் உழைத்துக் கொண்டும் இருப்பேன். நம் உழைப்புக்குச் சில நேரங்களில் முழுமையான வெற்றியும் கிடைப்பது உண்டு. சில நேரங்களில் முக்கால் பங்கு தொலைவு சென்று முயல், ஆமையிடம் வெற்றியினை வழங்கிய கதையாக முடிவதும் உண்டு. அப்படி முடிந்ததுதான் காஞ்சி, கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல் முடிவு என்றாலும், ஏற்கனவே தங்களிடம் இருந்த தொகுதிகளை ஆளுங்கட்சியினர் தக்க வைத்துக்கொள்ள எத்தனை கோடி ரூபாய்களை செலவழிக்க நேர்ந்தது என்பதையும், எந்த அளவுக்குத் தேர்தல் விதிமுறைகளை மீறி அரசு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்பதையும், வெற்றி பெற்ற வேட்பாளர்களும் அறிவார்கள் - அந்த வெற்றிக்கு ஆகாத வழிகளில் எல்லாம் துணை நின்ற அதிகார வர்க்கத்தினரும் அறிவார்கள் - எல்லாவற்றையும் விட, அவர்கள் வெற்றி பெறுவதற்கு வாக்களித்த பெருமக்களும் மிக மிக நன்றாகவே அறிவார்கள்.

இரு தொகுதிகளிலும் என் உடன்பிறப்பாம் நீயும் - நம் உற்ற தோழர்களாம் கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்களும் - ஒருங்கிணைந்து வழங்கிய உழைப்பையும் - வடித்த வியர்வையையும் கண்டு நான் பெருமிதம் கொள்ளுகிறேன். அதற்கு நான் தலை வணங்குகிறேன். இப்படி உழைத்தும் பயனில்லாமல் போயிற்றே யென்று நீ வருந்துவது எனக்குப் புரிகிறது. என் செய்வது! கதிர் முற்றி அறுவடைக்கு தயாராகும் வரையில் தொடக்கத்திலிருந்து பாடுபட்ட உழவன், உள்ளம் நொந்திடும் அளவுக்குத் திடீரெனப் பெருமழையும், வெள்ளமும் சூழ்ந்து கழனி பாழாகி விடுவதில்லையா - அதற்காக அந்த உழவர்

பெருமகன், பயிர்த் தொழிலையே விட்டுவிட்டு மக்களைப் பட்டினிபோடத் துணிந்து விடுவானா? அப்படித்தான் நாம், அவன் நிலையில்தான் இருக்கின்றோம் - இருக்கவேண்டும் என்பதை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு, நிமிர்ந்து நில்! நடந்திடு செம்மாந்து! என அழைக்கின்றேன்! அன்பு ததும்ப உன்னை! உம்மை!

உனக்கு நினைவிருக்கும்! இந்த இடைத் தேர்தலையொட்டி நான் எழுதிய ஒரு கடிதம்! முரசொலியில் ஏப்ரல் 23 அன்று வெளிவந்த கடிதம். அதில் நான் குறிப்பிட்டிருந்தது, வருமாறு:-

> "காஞ்சி, கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தல், அடுத்த ஆட்சி எது என்பதை நிர்ணயிக்கிற தேர்தல் அல்ல!
>
> ஆனாலும், இதில் நமது அணிக்கு கிடைக்கிற வெற்றி, பொதுத் தேர்தலுக்கு நம்மை மேலும் ஊக்கப்படுத்து வதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை!
>
> இடைத் தேர்தலைக் காஞ்சியிலும், கும்மிடிப்பூண்டியிலும் - உள்ளாட்சி இடைத் தேர்தல் பாணியிலேயே நடத்துவார்களேயானால், அதனால் ஆட்சியாளர்கள் ஒருவேளை வெற்றி பெற்று நாம் அந்த வாய்ப்பைப் பெற முடியாத நிலை ஏற்படுமேயானால், அப்போது ஆட்சியாளர் அடையும் மகிழ்ச்சி சொற்ப நேரங்கூட சோபிக்க முடியாத மகிழ்ச்சியாகத்தானிருக்கும். முன்மாதிரியாக எடுத்துக்காட்டு வேண்டுமேயானால், 1967க்கு முன்பு மிகப்பெரும் மொழிப்புரட்சி காரணமாக - நூற்றுக்கணக்கான பிணங்கள் துப்பாக்கிச் சூட்டில் விழுந்த பிறகும் கூட, தர்மபுரியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தி.மு.கழக வேட்பாளர் வெற்றிபெற இயலவில்லை - அதை வைத்து பொதுத் தேர்தலும் அப்படித்தான் ஆகுமோ எனக் கணக்கிட்டோர் உண்டு.
>
> ஆனால், தர்மபுரி இடைத் தேர்தலுக்குப் பிறகு, தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தி.மு.க, அண்ணா தலைமையில் ஆட்சி அமைக்கிற அளவுக்குப் பெரும் வெற்றி பெற்றதை வரலாறு கூறிக் கொண்டுதானிருக்கிறது."

வெற்றி பெற்றவர்கள் வீராவேசமாகப் பேசுவார்கள் - பேசுகிறார்கள் - அவர்கள் இயல்பு அது! சட்டப்பேரவையிலேயே

நாவடக்கம் காட்டாதவர்கள், நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளை இழந்துவிட்ட நிலையில், இப்போது இரண்டு தேன் சொட்டுகள் நாவில் விழுந்திருக்கும்போது நாகாக்கும் பெருந்தன்மையை நாடிச் செல்வார்களா என்ன? அறிக்கைகளில் பேட்டிகளில் ஆணவம் கொடிகட்டிப் பறக்கிறது. ஏழு கட்சிக் கூட்டணியென்று ஏளனம் செய்கிறார் - எட்டாவதாகவும் ஒரு கட்சியென்று மர்மக் கதை புனைகிறார். அப்படியெல்லாம் மறைத்து மர்மமாகச் செயல்படுவது நமது பண்பாடுமல்ல! பழக்கமும் அல்ல!

நமது தோழமைக் கட்சிகள் எவை எவை? என அறிவித்து, அந்தக் கட்சிகளின் தலைவர்களை, நமது மாநாடுகளுக்கும் - அனைத்துக் கட்சிக் கூட்டங்களுக்கும் அழைத்துச் சிறப்பிப்பதும், அதனால் நாம் சிறப்புப் பெறுவதும் நமது பண்பாடு!

ஜெயலலிதாவின் வெற்றியைப் புகழ்ந்து, பல தலைவர்கள் தங்கள் கட்சிப் பெயர்களுடன் ஏடுகளில் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். அக்கட்சிகளாவன:- திராவிடர் கழகம், தமிழ் மாநில முஸ்லிம் லீக், விவசாயத் தொழிலாளர் கட்சி, சமூகநீதி கட்சி, உழவர் உழைப்பாளர் கட்சி, முத்தரையர் சங்கம், இந்திய தேசிய லீக், ஐக்கிய ஜனதாதளம், அம்பேத்கர் மக்கள் கட்சி ஆகிய ஒன்பது கட்சிகள்! ஆனால் பாவம்! அவர்கள் யாரையும் அம்மையார் சுட்டிக்காட்டாமல், அந்தக் கட்சிகளைக் கண்டுகொள்ளாமல் தான் மட்டும் தனித்து நின்று வெற்றிபெற்றதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்.

உடன்பிறப்பே! இதோ, அடுத்த கடமை நம்மை அழைக்கிறது, இடைத்தேர்தல் முடிவு வெளிவந்த நேற்றைய தினமே, கோவை மாவட்டத்திலிருந்து தம்பி கோவை இராமநாதனும், தம்பி பொங்கலூர் பழனிசாமியும் அண்ணா அறிவாலயத்துக்கு வந்து விட்டார்கள் - இந்த மே திங்கள் 28, 29ஆம் நாட்களில் நடைபெற இருக்கிற கோவை மண்டலத்தி.மு.க. மாநாட்டுக்கு தலைவர், திறப்பாளர், கொடியேற்றுபவர் பெயர்களையும் - அழைக்கப் பட வேண்டிய தோழமைக் கட்சிகளின் பெயர்களையும், பந்தல் மற்றும் அரங்கம், மேடை, இவற்றுக்கான நெஞ்சில் நிழலாடும் தலைவர்களின் பெயர்களையும் - அதேபோலத் தோரணவாயில்களுக்கு சூட்டப்பட வேண்டிய பெயர்களையும் பற்றி என்னோடும், பொதுச் செயலாளரோடும் மண்டல சார்பாகக் கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், கலந்து பேசி முடிவு

செய்து, "முரசொலி", "தினகரன்" ஏடுகளில் அறிவிக்குமாறு செய்துள்ளார்கள்.

நாம் நடத்த வேண்டிய மண்டல மாநாடுகள் இன்னும் இரண்டு இருக்கின்றன - அவை, கோவையும் வேலூரும்!

தொடர்ந்து செப்டம்பரில் முப்பெரும் விழாவும் - இளைஞர் அணி மாநில மாநாடும் புதுக் கோட்டையில்!

அதைத் தொடர்ந்து திருச்சியில் தி.மு.க. மாநில மாநாடு -

இடையில் ஜூன் முதல் வாரம் கழகத்தின் செயற்குழு சென்னையில் கூடுகிறது-

நமது தூய பணிகள், தொடர்ச்சி கெடாமல், நடந்து கொண்டேயிருக்கும்!

அறப்போர் வாளின் கூர் மழுங்காமல் நமது கவனமும் இருந்து கொண்டேயிருக்கும்!

அன்புள்ள

மு.க.

18-5-2005

3139. எது நம்மை இணைக்கிறது என்பதைக் கண்டறிவோம்!

உடன்பிறப்பே,

நான் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து முரசொலிக்குக் கடிதம் எழுதி, அதில் உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்தோ அல்லது நீ தெரிந்து கொள்ள வேண்டியவைகளைத் தெரிவித்தோ, அது அச்சியற்றப்பட்டு, மறுநாள் காலை 'முரசொலி' - 'தினகரன்' ஏடுகளில் வெளி வந்து நீ அதைப் பார்த்திருப்பாய் என்ற மகிழ்ச்சியுடன் மற்ற பணிகளில் ஈடுபடுவது வாடிக்கை. நீ படிக்கிறாயோ இல்லையோ அது வேறு விஷயம்!

அப்படித்தான் மே 2 ந் தேதி காலையில், நான் முரசொலிக்காக எழுதிய, "சிந்தனையும் செயலும் (4)" என்ற தொடர் கட்டுரை "குருகுலப் பயிற்சி" எனும் தலைப்புடன், மே 3 ந்தேதியன்று சென்னையிலும் வெளியூர்களிலும் வெளிவந்தது.

அதில் ஈரோடு நகரில் பெரியாரின் குருகுல வாசம் பற்றிக் குறிப்பிட்டதோடு, அந்தக் குருகுலப் பயிற்சி அறிஞர் அண்ணா அவர்களுக்கும் உண்டு என்பதையும் - அடுத்து என்னுடன் இணைந்து நண்பர்கள் தவமணிராசன், கருணானந்தம், சனார்த்தனம் ஆகியோரும் ஈரோடு குருகுலவாசிகள்தான் என்று எழுதிவிட்டு,

> "அன்பு இளவல் வீரமணி அவர்களும் குருகுலப் பயிற்சி பெற்று, குருவின் பீடத்திற்கே உரிய தகுதியும், வாய்ப்பும் பெற்றவர்தான்"

என்று பூரிப்பு பொங்கிடக் குறிப்பிட்டிருந்தேன் -

உடன்பிறப்பே, இந்த என் எழுத்துகளைத் தாங்கிய முரசொலி, மே 3 ந் தேதியன்று உன் போன்றோர் கைக்கு கிடைத்திருக்கும். ஆனால் மே 2 ந் தேதி மாலையிலேயே சென்னையிலே வெளிவந்த

(வீரமணி அவர்களை ஆசிரியராகக் கொண்ட) விடுதலை இதழில், காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி தொகுதிகளில், அ.தி.மு.க. வேட்பாளர்களையே திராவிடர் கழகம் ஆதரிக்கும் என்று தி.க.தலைமைச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக செய்தி - அதுவும் கொட்டை எழுத்துத் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது.

அதற்கு விளக்கமாக, சங்கராச்சாரியாரை ஜெயலலிதா கைது செய்ததையும் பாராட்டியிருந்தனர் - அந்த விளக்கத்துடன் நிற்காமல், அ.தி.மு.க.வை தோற்கடிக்க சங்கரமடம் மறைமுகமாக வேலை செய்கிறது - பண உதவி செய்கிறது என்று குறிப்பிட்டிருந்ததானது, தேர்தல் களத்தில் கூட்டணி தோழமைக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்டுக் களத்தில் நின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை மறைமுகமாகப் புண்படுத்துகிற செயலாக இருந்த காரணத்தால், அருமை நண்பர் சின்னக்குத்தூசி அவர்கள் அதற்கு மறுப்பளித்து முரசொலியில் எழுதினார். "காஞ்சியில் அ.தி.மு.கவை ஆதரிக்கிறீர்கள் - கும்மிடிப்பூண்டியிலாவது தி.மு.கவை ஆதரித்திருக்கலாமே? 1989-ல் செய்ததுபோல" என்ற ஆதங்கத்தை அவர் அந்தக் கட்டுரையில் வெளிப்படுத்தியிருந்தார்.

> "சங்கராச்சாரியார் பணம் கொடுத்து அதைப் பெற்றுக் கொண்டு தி.மு.கவோ, அதன் தோழமைக் கட்சிகளோ களத்தில் ஜெயலலிதாவை வீழ்த்திட வியூகம் வகுக்கவில்லை. அப்படிப்பட்ட ஈனத்தனமான புத்தி எங்களில் யாருக்கும், எந்தக் காலத்திலும் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை - இதை தமிழர் தலைவர் வீரமணி தலைமையிலான திராவிடர் கழகம் புரிந்து கொள்ளுமென்று நம்புகிறோம்"

என்று ஒரு பெட்டிச் செய்தியும் "வல்லநாடன்" எழுதி முரசொலியில் வெளிவந்தது.

இந்த இடைத் தேர்தலில் திராவிடர் கழகம் எடுத்த நிலை குறித்து, நான் அவர்களை எதிர்த்து எழுதி விமர்சித்தோ அல்லது காஞ்சி, கும்மிடிப்பூண்டி பிரச்சாரக் கூட்டங்களில் பேசும்போதோ குறிப்பிடவே இல்லை.

ஆனால், அதற்கு மாறாக திரு. வீரமணி அவர்கள், அ.தி.மு.கவை ஆதரிக்கும் தேர்தல் பிரச்சார தி.க. கூட்டங்களில்

கலந்து கொண்டு, என்னையும் தி.மு.க.வையும் கடுமையாகவும், கிண்டல் கேலி ததும்பவும் விமர்சித்தும் பேசியது "விடுதலை" ஏட்டிலேயே பக்கம் பக்கமாக வெளிவந்தது. அதைப் படித்துவிட்டு நான் பதற்றமடையவில்லை. குருகுலப் பயிற்சியில் பாக்கியிருந்தது இப்போது தரப்படுகிறது போலும்! என்று எண்ணிக் கொண்டேன். நான் அண்ணாவிடமும் பயின்றவனல்லவா? அதனால்!

தேர்தல் முடிந்து, 'ஆரியமாயை' வென்ற பிறகும்கூட, அந்த மாயை சும்மா இருக்காமல், தி.மு.கவுடன் கூட்டணி ஏழு கட்சியல்ல! எட்டாவதாக ஒரு கட்சியும் உண்டு என்று சங்கர மடத்தை ஜாடை காட்டிக் கண் சிமிட்டியது.

ஒன்பது கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட்டு, அவற்றில் ஒரு கட்சிக்குக்கூட வெளிப்படையாக நன்றி சொல்ல முன்வராத அந்த "மாயை"யின் "எட்டாவது கட்சி" என்ற கற்பனைக் கண்டுபிடிப்பை, பெட்டிச் செய்தியாக "விடுதலை" வெளியிட்டு பெருமகிழ்ச்சி கொண்டதைக் கண்டு, முரசொலியும் அதை மறுத்து பெட்டிச் செய்தி வெளியிட்டதை, நான் டெல்லியில் படித்துவிட்டு உடனே தொலைபேசி வாயிலாக துணை ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு - இந்த

"தேவையற்றப் போராட்டத்தை நிறுத்துக" என்று கண்டிப்பாக கூறி வேண்டிக் கொண்டேன். "இன்னும் சில முக்கிய எழுத்தாளர்களின் கட்டுரைகள் வந்துள்ளன. என்ன செய்ய?" என்றனர். எதையும் வெளியிட வேண்டாம் என்று அழுத்தம் திருத்தமாக வேண்டிக் கொண்டு, தடுத்தும் விட்டேன்.

நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, இடதுசாரி இயக்கங்களான சி.பி.எம் - சி.பி.ஐ - போன்று கொள்கை அடிப்படையிலான ஒற்றுமை உணர்வுடன் உண்மையான திராவிட இயக்கங்கள் செயல்படுவோம் என்று கூட்டங்களில் அழைப்பு விடுத்தேன். முரசொலியில் கடிதங்களும் எழுதினேன். அப்போது என் குரலுக்கு ஏற்ப தம்பி வைகோவும் குரல் கொடுத்ததை நாடறியும் -

சாதி மத பேத வெறியாட்டங்களை வீழ்த்தி, சமத்துவ சமுதாயம் அமைப்பதிலும் - இழிவுகளைத் துடைத்து இனமானம் காப்பதிலும் - மொழியுணர்வு பெற்று, மூடநம்பிக்கைகளை அகற்றி, "வைதீகம் முன்னேற்றத்தின் வைரி" என அறிவித்து

முற்போக்குப் பாதை காண்பதிலும், மதநல்லிணக்கம் தழைத்திடவும் - மதச்சார்பற்ற அரசு நிலைத்திடவும் - பகுத்தறிவு பரவிட மனத்தூய்மையுடன் பணியாற்றிடவும் - ஏழையின் சிரிப்பில்தான் இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை உணர்த்திச் செயல்படுத்திடவும் - ஆதீன மடங்கள் பெயரால் - ஆலயங்கள் பெயரால் - ஆண்டவன் பெயரால் - யாககுண்ட, ஓமகுண்டங்களின் பெயரால், யானை காணிக்கைகளின் பெயரால் நடைபெறும் அலங்கோலங்களை அறவே ஒழித்துக் கட்டவும் - அண்ணா வழியில் அயராதுழைத்திடப் பெரியாரின் துணிவையும் பெற்றுக் கொண்டு இலட்சிய தாகத்துடன் இயங்குவதுதான் உண்மையான திராவிட இயக்கமாகும் -

இந்த இயக்கமெனும் பேரொளி வீசும் கலங்கரை விளக்கினை ஆழிப்பேரலைகளே அணைத்திடத் தாவினாலும், அது முடியாது முடியவே முடியாது! - இந்த உறுதி உண்மையான திராவிட இயக்கங்களுக்கு இருக்குமேயானால்,

இளவல் வீரமணி அவர்கள், பெரியார் பொன் மொழியிலிருந்து எடுத்துக்காட்டியுள்ள,

> "எது நம்மை இணைக்கிறது என்று கண்டறிந்து அதனை விரிவுபடுத்த முயற்சிப்போம்"

என்ற அய்யா அவர்களின் அறிவுரைக்கான உண்மைப் பொருளை செயல்படுத்துவது எளிதேயாகும்.

அன்புள்ள,

மு.க.

21-5-2005

3140. சிந்தையெலாம் சிலிர்க்க வைக்கும் சேது சமுத்திரத் திட்டம்!

உடன்பிறப்பே,

1860ஆம் ஆண்டு அதாவது 145 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியக் கடற்படையின் கமாண்டர் டெய்லர் என்பவரின் மூளையில் உதித்து முன்மொழியப்பட்டு, தொடர்ந்து முயற்சிகள் பலமுறை மேற்கொள்ளப்பட்டும், ஆய்வு நடத்தவும், ஆக்கப் பணிகளை வகுத்திடவும் பல்வேறு நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான பரிசீலனைகள் நடத்தப்பட்டதுமான நிலைமையிலே இருந்து, இடைக் காலத்தில் கிடப்பிலே போடப்பட்டுவிட்டது என்றாகி, அறிவிப்புடன் நின்றுவிட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் ஒன்றான சேது சமுத்திர திட்டம், மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று இதோ நம் கண்முன்னால் இந்தியப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படும் என்றும், ஜூன் மூன்றாவது வாரம் ஆரம்பமாகி, மூன்றரை ஆண்டுக்காலத்தில் முடிவடைய இருக்கிறது என்றும் செய்தியைக் கேட்கும்போதும், படிக்கும்போதும், இந்திய நாட்டு மக்கள் - குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் - மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் ஆழ்ந்திருப்பதை, நாமும் அந்த வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தாலும் உணர முடிகிறது.

பல முயற்சிகள், பலரது முயற்சிகள், அவற்றைப் போலவே பல்வேறு கருத்துகள் இத்திட்டத்திற்காக முன் வைக்கப்பட்டன எனினும், பூங்காவில் பூத்த மலர்களைத் தேர்ந்தெடுத்து மாலையாகக் கட்டி, மக்களின் கழுத்திலே அணிவிப்பதுபோல், இத் திட்டத்தின் பலகூறுகளையும் ஆய்ந்து தெளிந்தும் - திட்டச் செலவை மதிப்பிட்டும் - ஆகும் செலவுக்குத் தேவைப்படும் பொருளாதார வசதிக்கான வழிவகைகளை வரிசைப்படுத்தியும் - 2427 கோடி ரூபாய்க்கானத் திட்டத்தை முறையாக வகுத்தும் - இப்போது, பணி தொடக்கத்தையே அறிவித்துவிட்ட பெருமையும்,

சிறப்பும் இன்று மத்தியிலே இடதுசாரி இயக்கங்களின் ஆதரவுடன், ஆட்சி நடத்துகிற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு உண்டு என்பதை மகிழ்ச்சி பொங்கிடக் குறிப்பிடுவதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை.

1967ம் ஆண்டு முதலமைச்சராக இருந்த நிலையிலும், தமிழ்நாட்டுக்குக் தேவையான சேலம் இரும்புத் தொழிற்சாலை, சேது சமுத்திர திட்டம், நெய்வேலி இரண்டாம் சுரங்கம் போன்ற பெருந் திட்டங்களுக்காக, மத்திய அரசை வலியுறுத்தி எழுச்சி நாள் நடத்திய அண்ணா அவர்கள் இப்போதிருந்தால் - தனது தம்பிமார்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்களும் அவற்றை நிறைவேற்றியுள்ள நேர்த்தி கண்டு, எத்துணை மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

ஆம்! பிரதமர் மன்மோகன்சிங் அவர்களின் தலைமையில் உள்ள 'அமைச்சரவைப் பொருளாதார விவகாரக்குழு', ரூபாய் 2427 கோடி முதலீட்டிலான சேது சமுத்திரத் திட்டத்துக்கு அனுமதி வழங்கியது என்பதை ஏடுகளில் கண்டபொழுது, அக்குழுவில் இருக்கும் அமைச்சர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளும் ஆவல் எனக்கு ஏற்பட்டு அதனை அறிந்து கொண்டேன்.

பிரதமர் அவர்களைத் தலைவராகக் கொண்ட அக்குழுவில், பிரணாப் முகர்ஜி - ப. சிதம்பரம் - சரத் பவார் - லல்லுபிரசாத் - டி.ஆர்.பாலு - தயாநிதி மாறன் - கமல்நாத் - மணிசங்கர் ஆகியோர் இருக்கிறார்கள்.

தமிழகத்தைச் சேர்ந்த நமது மத்திய அமைச்சர்கள் நால்வரும், இந்த மாநிலத்தைப் பொருளாதார வளங்கொழிக்கச் செய்திடக் கனவு கண்ட முன்னாள் முதலமைச்சர்களான கர்மவீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் எண்ணங்களைச் செயல் படுத்திட, நாடாளுமன்றம் சென்றுள்ள நாற்பது பேர்களின் அணியில் இருப்பவர்களன்றோ - அதனால்தான், இங்கிருந்து சென்றவர்கள் அங்கென்ன செய்திருக்கிறார்கள் என்று ஒலிக்கின்ற 'சந்துமுனை சிந்து'களுக்குப் பதில் பாட்டுப் பாடிக் கொண்டிருக் காமல் இத்தகைய செயல்கள் வாயிலாக விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நெசவாளர்களை வாட்டி வதைத்த சென்வாட் வரியை ரத்து செய்ததற்கும் - செம்மொழியாகத் தமிழ்மொழியையும்

அறிவித்ததற்கும் - 'பொடா' சட்டத்தை தூக்கி எறியச் செய்ததற்கும் - புது இந்தியா உருவாக்கிட "பாரத் நிர்மாண்" திட்டத்துக்காக 1 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டு கிராமப்புறப் பொருளாதார வசதி வாய்ப்புகளைப் பெருக்கும் திட்டம் - மத மற்றும் சிறுபான்மை பிரிவினரில், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பின்தங்கியவர்களின் நலத்திற்காகத் தேசிய ஆணையம் - ஆபத்தான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறார் தொழிலாளர்களின் மறுவாழ்விற்கான மேம்பாட்டுத் திட்டம் - மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, குறிப்பிட்ட பயனீட்டாளர்களுக்கு கிடைக்க வசதி - வேலைக்கு உணவு தேசிய திட்டம் அறிமுகம் - விவசாயிகளுக்கானத் தேசிய ஆணையம் சீரமைப்பு - அடுத்து ஐந்தாண்டுகளில் அனைத்து இல்லங்களுக்கும் மின் இணைப்பை வழங்க வகை செய்யும் தேசிய மின்சார கொள்கை - மத்திய சுகாதாரத் துறையின்கீழ் பார்வை இழப்பைத் தடுப்பதற்கு, ரூபாய் 445 கோடி ஒதுக்கீட்டில் தேசிய திட்டம் - பிரதமர் தலைமையில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் - பெண்களைப்பணியில் அமர்த்துவதில் எளிதான விதிமுறைகளுக்கு உதவும் சட்டத்திருத்த மசோதா மற்றும் பல அருஞ்செயல்களை ஓராண்டு காலத்தில் ஆற்றுவதற்கு, மத்திய அரசினை வலியுறுத்தி வாதாடி வெற்றி பெற்றுள்ள அணிதான் நமது கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட அணியென்பது, மனப்பிணி ஏதுமில்லாத வர்கள் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தும், வலியுறுத்தியும் - வாதாடியும் - விவாதித்தும் - நாம் புரிந்துள்ள சாதனைகளில் ஒன்றுதான் இந்த சேது சமுத்திரத் திட்டமாகும் - இதற்கென எல்லா கட்சிகளின் சார்பிலும் தமிழ்நாட்டுப் பொருளாதார வளத்தை மனதில் வைத்து, மாநிலங்களவையிலும், மக்களவையிலும் குரல்கள் ஒலித்திருக்கின்றன. அவற்றில் ஓங்கி ஒலித்த குரல்களாக தம்பி முரசொலி மாறனின் குரலும், தம்பி வைகோவின் குரலும் விளங்கியதை நாடறியும், நாமறிவோம்.

செம்மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதில் என் மகிழ்ச்சி எல்லை கடந்தது எனினும், ஒரு மொழிக்குரிய தொன்மையின் எல்லையென்ன என்பதை நிர்ணயிப்பதிலும் - தமிழ்ச் செம்மொழி பெற்றிருக்க வேண்டிய உலகளாவிய தகுதிகளைப் பெறுவதிலும் காட்டப்படும் சுணக்கம் தவிர்க்கப்பட

வேண்டுமென்று, இன்றளவும் நான் வேண்டுகோள் விடுத்து வாதாடிக் கொண்டிருக்கிறேன். இங்குள்ள தமிழறிஞர்களும், மத்திய மொழிக்குழுவில் இடம் பெற்றுள்ள திரு. வ.செ.குழந்தைசாமி அவர்களும், திரு. த.சி.கண்ணன் அவர்களும் மனநிறைவு கொள்கிற அளவுக்கு இனிய முடிவு விரைந்து வாய்த்திட வேண்டுமேயென எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். நிறைவேற்றும் பொறுப்பை நமது அமைச்சர்களிடமும் குறிப்பாக, தம்பி தயாநிதிமாறனிடம் ஒப்படைத்திருக்கின்றேன். பிரதமரிடமும், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் சோனியா காந்தி அவர்களிடமும், மற்றும் தொடர்புடைய துறைகளின் அமைச்சர்களிடமும் தொடர்ந்து பேசி, "செம்மொழி" அறிவிப்புக்கு தூண்டுதலாயிருந்த தயாநிதி,இதையும் சாதிப்பார், நிறைவேற்றிடுவார் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன். ஒரேயடியாக இல்லாவிடினும், படிப்படியாக நிறைவேற்றினாலும் பரவாயில்லை அல்லவா!

இதற்காகவும், டெல்லியில் 18ந்தேதி நடைபெற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் நான் எடுத்துரைத்த கருத்துகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் - டெல்லியில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான் கலந்துரையாடிக் கொண்டிருக்கும்போதுதான் மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலு, சேது சமுத்திரத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதலும் கிடைத்துவிட்ட செய்தியுடன் ஓடோடி வந்தார் - பதவியேற்ற நாள் முதல் அந்த திட்டத்தை நிறைவேற்றவும், அதற்கான ஆரம்பம் செய்யவும் - முறைப்படி நடத்தப்பட வேண்டிய காரியங்களில் ஈடுபடவும் என்றுமில்லாத அளவுக்கு சுறுசுறுப்புடன் செயல்பட்ட தம்பி பாலுவுக்கு அவரது துறை சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல் - தமிழக வளம் சம்பந்தப்பட்ட திட்டமாகவும் - இது அமைந்துவிட்டதால், பாலு எல்லோருடைய பாராட்டுக்குரியவராகி விட்டார் என்று நானும் பாசமுடன் பாராட்டுகிறேன்.

அரசியலில், பொருளாதாரத்தில், மொழி உரிமையில் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகி விடக் கூடாது என்று 1964க்குப் பிறகு, மூதறிஞர் ராஜாஜி போர்க்குரலே கொடுத்தார்.

அக்குரலுக்கு முதல்குரலாக 1938லேயே, பெரியார் குரல் கொடுத்தார் - அது மெல்லமெல்ல, ஆனால், உறுதியாக வளர்ந்து 1965-ல் மொழிப் புரட்சிக் குரலாகவே அறிஞர் அண்ணா

அவர்களின் போர்க்களக் குரலாக ஒலித்தது. அதுவே மொத்தத் தமிழ்க் குடிமக்களின் ஏகோபித்த மொழிப்போர் ஒலி முழக்கமாகவும் ஆயிற்று.

அந்த ஒலிதான், இன்றைக்குச் செம்மொழி அளவுக்குச் சிறப்பு பெற்று - மத்திய ஆட்சிமொழிகளில் மாநில ஆட்சிமொழிகளும் அவற்றில் ஒன்றாகத் தமிழ்மொழியும் ஆக்கப்பட வேண்டுமென உயர்ந்து முழங்கிக் கொண்டிருக்கிறது.

ஏழை எளிய பாட்டாளி மக்களின் வாழ்வு செழித்திடவும் - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ்மக்கள், சிறுபான்மையோர் உரிமைகள் பெற்றிடவும் - விவசாயிகள், நெசவாளிகள், தொழிலாளர்கள், வணிகர்கள், அரசு அலுவலர் மற்றும் நடுத்தர மக்கள், ஆடவர், மகளிர் அத்தனைபேர் நலனும் காத்திடவும், உரிமைகள் பெற்றுத் திகழ்ந்திடவும் - மத்திய அரசிடம் இன்னும் பல மகத்தானத் திட்டங்களை வலியுறுத்திப் பெறுவதற்கும் - அவற்றைத் தருவதற்கு நமக்குத் துணையாக பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களும் இருந்திடுவர் என்ற நம்பிக்கையுடன்கூடிய நன்றியை சேது சமுத்திரத் திட்டத்துக்காக, அதற்கெனப் பாடுபட்ட அனைவரின் சார்பாக - அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பாக - ஆறு கோடி தமிழ் மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-5-2005

3141. இருப்பது ஒரே வாரம்தான்! கேட்பது ஒரே வரம்தான்!

உடன்பிறப்பே,

இருப்பது ஒரே "வாரம்"தான்! உன்னிடம் கேட்பதும் ஒரே "வரம்"தான்!

இமைகளை இதழ்களாகப் பாவித்து, விழிகளை, மூடிய மலர்களாக்கி உண்மைத் துறவிகள் தாங்கள் செய்திடும் தவத்திற்குப் பயனாக, நிலம், நீச்சு, தோட்டம், துரவு, பணம், பதவி, குழந்தை குட்டி என்று தன்னலம் கொழிக்க வரம் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

பொதுநலம் குறித்த 'கோரிக்கை' தான் அவர்களது தவத்தின் குறிக்கோளாக அமைந்திடும்.

நம்மைப் பொறுத்தவரையில், வியர்வைத் துளிகளுக்கு வெற்றி கிடைத்திட வேண்டும் - இனமான உணர்வு என்றுமே தாழ்ந்திடாது, உயர்ந்து உயர்ந்து உயர்ந்தே விளங்க வேண்டும் - மொழிப் பற்றில் விழிப்புற்றுத் திகழ வேண்டும் - பகுத்தறிவுச் சிந்தனையே வாழ்க்கை முறைக்குப் பாதுகாப்பாக இருந்திட வேண்டும் - இவற்றை உள்ளடக்கிய பொதுவாழ்வுப் பணியே நாம் செய்யும் தவமெனக் கொண்டால், அதில் நான் குறிப்பிடும் "வரம்" மிக முக்கியமானதாகும்!

இந்த வரம், தவம் புரிவோர் பெறுவதல்ல! அவர் களே தருவது என்ற பொருளில்தான், உன்னிடம் கேட்பதும் "ஒரே வரம்தான்" என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

பொதுவாழ்வில் நல்வழி நாடுவோர், அவர்களைப் பற்றிய நல்லெண்ண அடிப்படையிலான விமர்சனங்களை அறிவுரைகளென ஆய்ந்து தெளிந்து, அதன்படி நடப்பர் - விஷத்தன்மை கொண்ட விமர்சனமாயின், அதனை அலட்சியப்படுத்தி விலக்கி வைப்பர். விரோதம் பாராட்ட மாட்டார்!

வளர்ச்சிகளையும் - வீழ்ச்சிகளையும், வெற்றிகளையும் தோல்விகளையும் கொண்ட பொது வாழ்வில், இவற்றில் அனைத்து விளைவுகளையும் சமமாகப் பாவித்து, மேலும் மேலும் மேலும் பயணம் நடத்துவதற்கு, அஞ்சாமை நிறைந்ததும், அசைக்க முடியாததுமான பொறுமையெனப்படும் தாங்கும் சக்தி வேண்டும். "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்பது எங்கேயோ, எப்போதோ கேட்ட குரல் அல்ல! அது இங்கேயே, எப்போதும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்றுதான், அருமைத் தலைவர் அண்ணா, அப்படித் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டு அதை நமக்குச் சொல்லி வைத்து, நம் இதயத்திலும் பதித்து வைத்தார்.

அதனால்தான், அந்த ஒரே வரத்தை நான் உன்னிடம் கேட்கிறேன். ஆம்! இருப்பது ஒரே வாரம் தான்! நான் உன்னிடம் கேட்பதும் ஒரே வரம்தான்!

கழிவுப் பொருள்களைக் குவியல் குவியலாக எருவாக்கிக் கொண்டு, எழில் குலுங்க வளருகிறதே பூங்கொடி, அதைப்போலவும், சிரித்துக்கொண்டே மலருகிறதே சிவந்த ரோஜாச் செடி, அதைப்போலவும், அணி தேர்ப்புரவி ஆட்பெரும்படை தங்கிட நிழல் தருகிறதே ஆலமரம், அதைப்போலவும், எதிர் முகாம்களிலிருந்து வீசப்படுகிற ஏச்சுகளையும், இழிவான பேச்சுகளையும், எழுத்துகளையும் உரங்களாக ஆக்கிக் கொண்டு உறுதியுடன் உழைப்பேன் என்றும் - தன்மானம் தழைத்திடத் தலை கொடுக்கவும் தயார் என்றும் - பகுத்தறிவு பரப்புவதே என் பணியாக இருக்குமென்றும் - ஏணிப் படிகளாகத் தோல்விகளையும், சோதனைகளையும் ஆக்கிக் கொண்டு, வெற்றி முகடு நோக்கிச் செல்வேன் என்றும் - திராவிட இயக்கத்தின் அரசியல், சமுதாய, பொருளாதார, பகுத்தறிவுக் கொள்கைகள் அனைத்தையும் நமது பாசறையில் பெற்ற பயிற்சி மூலம் வெற்றிக் கொடிகளாக விண்முட்டப் பறக்கவிடும் வரையில், ஓயமாட்டேன்! உறங்கமாட்டேன்! என்றும் - உடன்பிறப்பே, அந்த ஒரு வரத்தை மட்டும் கொடு!

ஊசி கொண்டு சிலர் கண்ணில் குத்தலாம். அதிலோர் உற்சாகம் அவர்களுக்கு - புண்ணில் குத்துவதிலும் பூரிப்பு கொள்வர் - இந்த மண்ணில் புதையும் வரையில், மக்கள் பணியே மகேசன் பணி, என மனத்தில் உறுதி கொண்டு உழைக்கின்ற உடன்பிறப்புகளாம்

நமக்கு, ஊசிகொண்டு மட்டுமல்ல - உத்திரமே கொண்டு இடித்து உடைத்தாலும் இதயம் நடுங்கப் போவதில்லை. நமது பணியும் ஒடுங்கப் போவதில்லை.

என் உடன்பிறப்புகளின் உள்ளத்தில் இந்த வரத்தினை வழங்கிடும் வலிமையும், வற்றாத பாசமும் இருக்குமேயானால்; பிறகு நானும், நாடும், நமது மொழியும் எதற்காகக் கவலையுற வேண்டும்!

அத்தகு ஆற்றல்மிகு உடன்பிறப்புகளைக் காணவும் - அவர்களின் அன்பொழுகும் மொழியினைக் கேட்கவும் - அருகமர்ந்து அளவளாவிடவும் - அரியதோர் வாய்ப்பாக, கொள்கை முரசம் கோடையிடியென ஒலித்திட இருக்கும் கோவைக்கு வருகிறேன். உன் நெடுங்குன்றத் தோள்கள் கண்டிட! உன் குளிர் தென்றல் உரை கேட்டிட! உன் வீரநடையின் பாங்கு கண்டிட! அண்ணா பதிந்திருக்கும் உன் அகம் உணர்ந்திட! உறவாடும் உடன்பிறப்புகளின் முகம் பார்த்திட!

மே திங்கள் 28, 29 சனி, ஞாயிறு நாட்களில், கோவை அண்ணா நகரில் அறிவாலயமாக - அரசியல் பாடி வீடாக - சமுதாயப் புரட்சிப் பாசறையாக - மண்டல மாநாடு அமைந்திட ஆர்த்தெழுந்து அரும்பணியாற்றத் தொடங்கி விட்டனர் அன்புத் தம்பிமார்கள்! மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி பொங்கலூர் பழனிசாமி, எடுத்த செயல் எதுவாயினும் எழிலுற நிறைவேற்றக் கூடியவர். அந்தப் புன்னகை முகத்தினன், கழகத்திற்கு அணிவிக்கும் பொன்னகையாக இந்த மண்டல மாநாட்டின் மகிமை இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அவருடன், மாநாட்டுச் செயலாளர்களான வீராங்கனையாம் தங்கை சுப்புலட்சுமி ஜெகதீசனும், கோவை தந்த கொள்கைத் தங்கம் அடலேறனைய அன்புத் தம்பி இராமநாதனும், ஈரோடு என்.கே.கே.பியின் இனிய செல்வன் என்னருந்தம்பி ராஜாவும், கழக மாமணி நாமக்கல் தம்பி காந்திச்செல்வனும், நீலகிரியின் பசுமை நெஞ்சினன் தம்பி இராமச்சந்திரனும், வியர்வை பொழிந்து இயக்கம் வளர்க்கும் தம்பி வீரகோபாலும் ஆற்றிடும் பணியினால், கோவை மாநாடு அனைவரும் போற்றிடும் வண்ணம் புகழ்க் கொடி நாட்டும்.

மாநாட்டுக்குத் தலைமை வகிப்பவர் நமது பொருளாளர் - ஆர்க்காட்டார் - பொருளாளர் மட்டுமல்ல! கழகத் தொண்டர்க்கோர்

நலிவென்றால் ஓடிச் சென்று, தேவைப்படும் மருத்துவரை தேடிப் பிடித்து - ஆவன செய்து - ஆக்கப் பணிதனை - எனை ஊக்கும் பணிதனைத் தொடர்ந்து புரிந்திடும் "அருளாளர்" எனலாம், இந்தப் பொருளாளரை! அவர் தலைமையில் மாநாடு - அவர் அனுபவமே தலைமை உரையாகும்! அரசியல் நிலைமை விளக்கும் அரிய உரையாகும்!

திறப்பாளர் தம்பி இரா. ஆவுடையப்பன் - தென்மாவட்டத்தில் தி.மு.க.வின் வைரத் தூண்களில் ஒருவர் - வழக்கறிஞர் - வாய்மையாளர் - அவர் ஆற்ற இருக்கும் திறப்புரை; மூத்த குடிமக்களின் மூடிய கண்களைத் திறக்கும் சிறப்புரையாக அமையும்.

கொடியேற்றுபவர் கொள்கைச் சிங்கம் கொலையுண்டு மறைந்த தம்பியாம் ரூசோவின் அருமைத் துணைவி, அன்புச் செல்வி திருமதி ஜோன்ஸ் ரூசோ - என்னே இலட்சிய உறுதி! இயக்கப் பிடிப்பு - என வியக்கும் வண்ணம் பணியாற்றும் அந்தப் பெண்மணிதான் நமது இயக்கக் கொடியைப் பட்டொளி வீசப் பறக்கவிட இருக்கிறார்.

வீறுபாய்ச்சும் விரிவுரையாளர்கள், பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்துகிறார்கள்.

தலைமைக் கழகச் செயலாளர்களாம் முன்னணி தளகர்த்தர்கள் முழங்கிடுவர் -

நமது கூட்டணியின் தோழமைக் கட்சித் தலைவர்கள் திரு.ஜி.கே.வாசன், மருத்துவர் அய்யா திரு. ராமதாஸ், திரு. மு. கண்ணப்பன், திரு. என். வரதராஜன், திரு. தா. பாண்டியன், பேராசிரியர் திரு. கே.எம். காதர்மொய்தீன், திரு. ஆர்.எம். வீரப்பன், பேராசிரியர் திரு. எம்.எச்.ஜவாஹிருல்லாஹ், திரு. இராஜ கண்ணப்பன், டாக்டர் திரு. ந. சேதுராமன், திரு. திருப்பூர் அல்தாப், திரு. கு.செல்லமுத்து, பேராயர் திரு. எஸ்றா சற்குணம், திரு. பி.வி. கதிரவன், திரு. பூவை ஜெகன்மூர்த்தி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நாட்டுக்குரிய - மக்கள் பிரச்சினைகளை முன் வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு மாநாட்டிலும், கழகத்தில் புதுவெள்ளம் பாய்வதை எடுத்துக்காட்டும் வண்ணம், புதிய புதிய பேச்சாளர்கள் அறிமுகமாகி அவர்தம் அழகு தமிழ்ப் பேச்சினை சுவைத்தது போல, இந்த மாநாட்டிலும் அந்த வாய்ப்பு உண்டு!

நமது கழகக் கலைஞர்கள்,

தம்பி சரத்குமார், தம்பி நெப்போலியன், தம்பி வாகை சந்திரசேகர், தம்பி தியாகு, தம்பி குமரி முத்து ஆகியோர் வழங்கும் கரும்புநிகர் கருத்துரைகள்.

வழக்கம்போல் இனிய நண்பர் நாகூர் இசைமுரசு அனிபா இடியொலி முழக்க இருக்கிறார். அவருடன் முரசொலி முகிலனும் - கோவை இக்பாலும் - கோட்டை சத்தாரும் இசையரங்கு நடத்திடுவர்.

தோழமைக் கட்சித் தலைவர்களின் விரிவுரைகள் - விளக்க உரைகள் - பேராசிரியர் தெளிவுரை - இந்த மாநாட்டில் எனது நிறைவுரை, என் மனம் திறந்த உரையாக இருக்கும். வா, வா உடன்பிறப்பே! எச்சரிக்கையாகப் பயணம் மேற்கொள்க! எல்லாம் நேரில் பேசிக் கொள்வோம் வா!

அன்புள்ள,

மு.க.

23-5-2005

3142. பொங்கலூர் அழைக்கிறார்; புறப்பட்டு வா!

உடன்பிறப்பே,

ஏ, அப்பா! என்ன ஆட்டம்? என்ன ஆர்ப்பாட்டம்? சுனாமி அலைகளை விட உயரமாக எழும்பிக் குதிக்கிறார்கள்! சங்கநாதம் செய்கிறார்கள்! விண்ணதிருகிறது! இவர்கள் கொட்டும் வெற்றி முரசின் ஒலி முழக்கம் கேட்டு!

கோயில்களில் பூஜைகளாம், புனஸ்காரங்களாம், கும்மாளக் கோலாட்டங்களாம் - எதற்காக இந்த எக்காளப் பேரிரைச்சல்? என்ன அப்படிப் பெரிய வெற்றியைப் பெற்று விட்டார்கள்?

ஆமாம்! அடிபட்டு உடம்பெல்லாம் புண்பட்டுக் கிடந்த மலைப் பாம்பு, கொஞ்சம் உடலை வளைத்து அசைத்தது கண்டு, அடித்தவர்கள் மீண்டும் வந்து அடிக்க மாட்டார்கள் என்ற அதீத நம்பிக்கையுடன், பாம்பைச் சுற்றி நின்று கொண்டு பாட்டுப் பாடி ஆட்டம் ஆடி, ஆடு பாம்பே! சுழன்றாடு பாம்பே! ஆவி மீண்டும் வருமென்று தாவி ஆடு பாம்பே! தூவித் தூவி ஆடு பாம்பே! உன் விஷத்தைத் தூவித் தூவி, தாவித் தாவி ஆடு பாம்பே! என்று கும்மியடித்துக் குதூகலித்துக் கொக்கரித்துக் கூவிக் கூவி ஆடுகிறார்கள்!

அய்யோ பாவம்! நாடாளுமன்றத் தேர்தல் கடந்த ஆண்டு நடந்தபோது 39 x 6 = 234 சட்டமன்றத் தொகுதிகளையும், எம்.ஜி.ஆர். காலத்தில் வென்ற இரண்டு பாராளுமன்றத் தொகுதிகளைக்கூட இப்போது பெற முடியாமல், அவற்றையும் பறிகொடுத்து விட்டு, "மின் யந்திர ஓட்டு முறையால் தோற்று விட்டேன்! இதோ இப்போதே உச்ச நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு, மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் கொண்டு வருகிறேன் - பராக்! பராக்!" என்று பேரவையிலேயே ரௌத்திர தாண்டவமாடிய ஜெயலலிதா, தோல்விக்குக் காரணம்; தி.மு.க. ஆட்சியின் தொழிலாளர் நல, அலுவலர் நல, மக்கள் நல திட்டங்களையெல்லாம் தீர்த்துக் கட்டியது தான் என்பதை உணர்ந்து, தன் தலையில்

தானே "குட்டோ குட்டு" என்று குட்டிக்கொண்டு, ரத்து செய்த சலுகைகளைத் திரும்பக் கொடுக்கிறேன் என அறிவித்து சரணாகதி அடைந்த பிறகு, சரிவிலிருந்து சற்றே கை தூக்கி விட்டன காஞ்சி, கும்மிடிப்பூண்டி தொகுதிகள் என்பதைக்கூடத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல், ஆகா! வெற்றி வந்து சேர்ந்தது - இனி தொடர் வெற்றிதான் என்று அமெரிக்காவிலிருந்து கூலிப் படையினர் சிலர் பணம் செலவழித்துப் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கிறார்கள். இங்குள்ள சில பத்திரிகைகளிலும் படாடோப - டாம்பீக வாகை மாலைகள் - வர்ணனைக் கூத்துகள்! இவர்கள் எல்லாம் நாற்பது இடங்களிலும் கடந்த ஆண்டு அ.தி.மு.க. மண்ணைக் கவ்வியபோது எங்கே போயிருந்தார்கள்? விண்ணைக் கவ்வ விமானத்தில் போயிருந்தார்களா?

எதிர் தரப்பு விட்ட குத்தில் எகிறி விழுந்தது 234 பற்கள் என்றால், அதில் காஞ்சி, கும்மிடி என்ற இரண்டு பற்களை மட்டும் பொறுக்கி எடுத்துப் பொருத்திக் கொண்டு, அடுத்து வரும் தேர்தலில் அந்தப் பற்களால் கடித்துக் குதறி விடுவேன் என்று கர்ச்சிக்கிற கூட்டம்தான் காஞ்சிக்கே சென்று "கதக்களி" நடத்தி "கன்னா பின்னா" என்று உளறி முடித்திருக்கிறது, அது இன்னும் தொடரும் - தொடரட்டும் - நம்மையும் இடரட்டும் - நாம் சிரித்தே விரட்டுவோம், இந்த எரிச்சல்காரர்களை!

அதற்குரிய தெம்பும், திறனும், தெளிவும், ஒளிவு மறைவற்றத் தூய திட்டங்களும் - புதிய வலிவுடனும், பொலிவுடனும் அமைந்திடத்தான் மே 28, 29 நாட்களில் கோவையில் கூடுகிறோம்.

நேற்றைய கடிதத்தில் உனக்கு அழைப்பு விடுத்திருந்தேன் அதைப் படித்திருப்பாய்! அத்துடன் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான தம்பி மு.க. ஸ்டாலினும் மாநாட்டுப் பணிகளை நேரில் கண்டு வந்து தலைமைக் கழகத்தில் அறிவித்திட கோவைக்குச் சென்று விட்டுத் திரும்பி இருக்கிறார்.

மாநாட்டுப் பந்தலில் கழக மாமணிகளாம் உடன் பிறப்புகள் ஆற்றுகிற அரும்பணியினை ஸ்டாலின் விவரித்ததுடன் - பந்தலின் நீள அகலம் - பந்தல் நடுவில் அமைகிற அரங்கத்தின் அமைப்பு - மேடை எழில் - வருவோர் லட்சக்கணக்கில் இருப்பர் என்ப தால் அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் அத்தனையும் தயார் என்று அவர் சொன்னபோதும் - பந்தல் முகப்பின் அழகை வர்ணித்தபோதும் - அமைய இருக்கிற மாநாட்டு ஏற்பாடுகள்

அனைத்தும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் எனும் உண்மை தெளிவாகி விட்டது!

ஆண்டிப்பட்டியை அரசன்பட்டியாக்குவேன் என்று கூறி, அங்கே வெற்றியைத் திருடிக் கொண்ட பிறகும் - சாத்தான்குளத்தை சான்றோர் குளமாக்குகிறேன் என்று பறைசாற்றி, அங்கேயும் வெற்றியைப் பறித்துக் கொண்ட பிறகும்தான் -

இதே களேபார - அமர்க்கள ஆட்டங்களை அ.தி.மு.க. வினர் ஆடிக் களித்து - ஆகாயத்துக்கும் பூமிக்குமாக தலைகீழாகத் தாவிக் குதித்த பிறகும் தான் -

40க்கு 40 நாம் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றோம்-

அந்த உறுதியில் நேற்றைய கடிதத்தில் உன்னிடம் கேட்டேனே "ஒரு வரம் தருக" என்று! அந்த வரத்தை உன் வைர நெஞ்சில் வைத்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்.

காஞ்சி,
கும்மிடி

இரண்டுக்கும் ஏதோ தனித்தன்மையிருப்பதாக இரண்டிலும் வென்றோர்கூட எண்ணி ஏமாற்றமடையப் போகிறார்கள்!

சாத்தான்குளம்
ஆண்டிப்பட்டி

இரண்டையும் தொடர்ந்து, இப்போது காஞ்சி, கும்மிடி - இதில் கிடைத்த வெற்றியினால் "தாம் தோம்" எனத் தலை கால் புரியாத ஆட்டம்!

பொதுத் தேர்தல் வரும்போது அதைப் புரிய வைக்கப் போகும் - சிங்கக் கூட்டம் இதோ வந்து விட்டது! கேட்கிறதா அந்தக் கூட்டத்தின் கர்ச்சனை?

என்று கோவையிலிருந்து மணியோசை எழுப்பிட, மாவீரர் படையே வருக! வருக! என மாநாட்டு வரவேற்புக் குழு அழைக்கிறது!

கழகமெனும் இந்தப் பாசறையைக் கட்டி வளர்த்தோர், இதோ மாநாட்டுப் பந்தலாக - பந்தல் முகப்பாக - பந்தலின் அரங்கமாக - மேடையாக - கொடி மேடையாகப் பெயர் சூட்டிக் கொண்டு

இருக்கிற காட்சியைக் கண்டாலே நம் நெஞ்சம் நெகிழ்கிறது - அந்தத் தியாக மறவர்கள் சிந்திய வியர்வையும், கொட்டிய குருதியுமல்லவா இந்தக் கழகம் - இந்தக் கழகத்தின் மண்டல மாநாடல்லவா கோவையெனும் நமது கொள்கைத் திருநகரில்!

குலம் காத்திட வந்த கொழுந்தே -
குன்றென நிமிர்ந்து வருக -
கோல மயிலுடன் வருக -
உன் குடும்ப இயக்கம் அழைக்கிறது உன்னை!
உன் அண்ணன் இந்த அன்பு மடல் மூலம் அழைக்கிறேன்!
வா! வா!

எந்த மாநாடாயினும் - எத்தகைய பெருங் கூட்ட மாயினும் என் கண்ணுக்குத் தப்பியதில்லை நீ! ஆகவே கண்மணியே - அடுத்து வரும் நாட்கள் நமது நாட்கள்! அறப்போரிடப் போகும் வாட்கள் நம் கை வாட்கள்!

இந்த நம்பிக்கையை நானும் பெற்று, உனக்கும் தெரிவிக்கிறேன்.

நான் -
நீ -
நாம் -

இந்த மூன்றில் நாம் என்பதுதானே ஒட்டுறவை உணர்த்தும் சொல்!

அதனால் நாம் நடத்துகிற மாநாடு நாளை, இந்த நாட்டைச் சீர்படுத்த நமக்குத் தரப்படும் ஒப்புதல் ஏடு -

வெறும் வார்த்தையல்ல -
வெற்றி பெறும் நம்பிக்கை வார்த்தை -
வெற்றிக்கு வியர்வை சிந்திட -
அயர்வைப் போக்கி ஆகும் செயல் அனைத்தும் புரிந்திட -
அலை கடலாய் ஆர்த்தெழுவோம் - வா! வா!
பொங்கலூர் அழைக்கிறார் -
புதிய திருப்பம்காண புறப்பட்டு வா!

அன்புள்ள,
மு.க.
24-5-2005

3143. கம்பன் கண்ட காயம் - வள்ளுவன் வழங்கும் மருந்து!

உடன்பிறப்பே,

கம்ப இராமாயணத்தில், இராவணனை 'இரக்கமற்ற அரக்கன்' என்று குறிப்பிட்டிருப்பதை ஏற்றுக் கொள்ளாமல் - அந்தச் சொற்றொடர் கம்பனின் கவிநயத்திற்குள் ஒளிந்துகொண்டு தலை காட்டுகிறது என்றாலும்,

கம்பன், இராவணன் என்ற கதாபாத்திரத்தின் மீது கொண்ட காழ்ப்பை உணர்த்துகிறது எனக் கண்ட அண்ணா அவர்கள்,

"இரக்கமற்றவன்" என்று கம்பனால் தன் மீது ஏற்றப்பட்ட அந்தக் களங்கத்தைப் போக்கிக் கொள்வதற்காக, இராவணன், நீதி மன்றம் சென்று நீதி தேவனிடம் முறையிட்டு, "தான் இரக்கமற்ற வனல்லன் - இரக்கம் நிறைந்தவன்" என வாதம் செய்திடும் காட்சிகளை அமைத்து ஓர் இலக்கிய நாடகமே எழுதி,

அதற்கு "நீதி தேவன் மயக்கம்" என்று பெயர் சூட்டியதோடு, அந்த நாடகத்தில் இராவணன் கதாபாத்திரத்தையும் அவரே ஏற்று நடித்தார்.

கம்பரைப் பார்த்து இராவணன் கேட்பதாக, ஒரு காட்சி!

"கம்பரே! நீரே எழுதியிருக்கிறீர், நான் சீதா பிராட்டியைத் தொட்டுத் தூக்காமலே, அவளிருந்த பர்ண சாலையுடன் தூக்கி வந்தேன் என்று! - அதேபோல அவளை அசோக வனத்தில் வைத்திருந்தபோதுகூட, அந்த இராம இலக்குமணர் இருவரும் சேர்ந்து, என் தங்கை சூர்ப்பனகையின் மூக்கையும், மார்பையும் அறுத்து அலங்கோலப்படுத்தியதுபோல, சீதைக்கு அணுவளவு சேதாரமும் அவள் உடலில் யாம் ஏற்படுத்தவில்லை - ஆனால், கம்பரே! என் தங்கையை அவலட்சணத்துக்கு ஆளாக்கியவர்களை இரக்கமுள்ளவர்கள் என்றும் -

சீதையைச் சிறிதும் சேதாரமின்றி அசோக வனத்தில்
சிறை வைத்திருந்த என்னை இரக்கமற்ற அரக்கன்
என்றும் எப்படிக் கூற முடிந்தது உம்மால்?”

இராவணனின் இந்தக் கேள்விக்கு கம்பர் பதில் கூற முடியாமல் மழுப்புவார் - இது கம்பராமாயணத்து அசல் காட்சியல்ல! அண்ணாவின் கற்பனையில் நியாயமாக உதித்த கேள்விக்காக அவர் தீட்டிய காட்சி! இராவணனுக்கு “இரக்கமற்றவன்” என்று கம்பர் சூட்டிய இழிவை நீக்கிட அண்ணா படைத்த நாடகக் காட்சி!

அந்தக் காட்சி, என்றும்போல் இன்றும் என் நெஞ்சில் நிழலாடியபோது, கம்பர் எழுதிய களக் காட்சியொன்றும் நினைவுக்கு வந்தது.

அது இதோ :-

இராம இராவணப் போர் முடிவடைகிறது.

போர்க்களத்தில் காயம் பட்டோரையும், மாண்டு கிடப்போரையும் காண இராமன் சென்றிடும் - இராவணன் வதைப் படலத்தில்;

“.....தம்பியொடும்
படைத்தலைவர் பலரும் சுற்ற,
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
போர் வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப, ஒரு முற்றும்
திருவாளன் தெரியக் கண்டான்”

அதாவது, “தம்பியும், படைத் தலைவர்களும் புடை சூழச் செல்லும் இராமன், போரில் பகைவர்க்குப் புறங்கொடாத வீரனான இராவணன் வீழ்ந்து கிடப்பதைக் கண்டான்” எனப் பாடும் கம்பர்,

வீழ்ந்து கிடக்கும் இராவணனின் முதுகில் காயத்தினால்
ஏற்பட்ட தழும்பு இருப்பதையும் கண்டு விட்டு,
அந்தத் தழும்பு முன்பு நடந்த ஏதோ ஒரு போரில்
புறமுதுகிட்டதால்
இராவணனுக்கு ஏற்பட்டது எனத் தவறாக எண்ணி,
தன்னுடன் வந்த விபீஷணனைப் பார்த்து,

"பூண் தொழில் உடைய மார்பா! போர்ப்
புறங்கொடுத்தார்ப் போன்ற
ஆண்தொழிலோரின் பெற்ற வெற்றியும்
அவத் தம் என்றான்."

'போரில் புறமுதுகு காட்டியவனை நான் வெற்றி கண்டது பெரிய அபத்தம்' என இராமன் சொன்னான், எனவும் எழுதுகிறார்.

அப்போது இராமனின் அருகில் நின்ற விபீஷணன், என்னதான் அண்ணனைக் காட்டிக் கொடுத்து, எதிரியின் பக்கம் இணைந்தவன் என்றாலும், அண்ணன் புறமுதுகு காட்டியவன் என்ற அவப் பெயரைத் தாங்கிக் கொள்ள முடியாமல், இராமனைப் பார்த்து விளக்கமளிக்கிறான்.

"
.....
.....
பீடு உள குன்றம் போலும் பெருந் திசை எல்லை
யானைக்
கோடு உளதனையும் புக்குக் கொடும் புறத்து
அழுந்து புண்ணின்
பாடு உளது அன்றி, தெவ்வர் படைக்கலம் பட்டுஎன்
செய்யும்?"

"முன்பொருமுறை இராவணன் நடத்திய போரில், யானையின் தந்தங்கள் அவன் மார்பில் குத்தி அழுந்தி, அவை முதுகுப் புறம் சென்ற காயங்களின் தழும்புகளேயன்றி, பகைவரின் படைக்கலன்கள் என்ன செய்துவிட முடியும் அவனை?" என்றானாம் விபீஷணன்!

இராவணன் களத்தில் வீழ்ந்தான் எனினும், காயம் பட்டுத் தோல்வியுற்றான் எனினும்; மானங்காத்திட மார்பில் பகைவரின் கணைகளைத் தாங்கினானே தவிர, பகைவர் காலடியில் வீழ்ந்து, பயந்து நடுங்கிப் பதுங்கிடவில்லை என்றும், புறமுதுகிட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரவில்லை யென்றும் - நல்ல வேளை! கம்பர், இராவணன் முதுகுத் தழும்புகளை வைத்து அவன் வீரத்தைப் பற்றி இழிவான முறையில் கருத்தமைக்காமல், இராவணனின் 'இனமானம்' காப்பாற்றக் கவி புனைந்தாரே என நானும், நீயும் சிறிது ஆறுதல் பெறலாம் அல்லவா?

உடன்பிறப்பே! நடந்து முடிந்த காஞ்சி, கும்மிடி இடைத் தேர்தல் களத்தில் நமது உடலில் காணும் தழும்புகளும் - முதுகில் ஏற்பட்டவையல்ல! இராவணனுக்கு மார்பில் யானையின் தந்தங்கள் அழுந்தி, அவை முதுகுப் புறம் வந்தது போன்றவைதான்!

இந்தக் களக் காட்சியுடன் கம்பர் நிறுத்திக் கொண்டு, 'மான மரபு இது' என்று மகுடம் சூட்டியதோடு முடித்துவிட்டாலும், அய்யன் வள்ளுவர் அந்தக் குறையை நமக்கு வைக்கவில்லை. கம்பன் கண்ட காயத்துக்கு வள்ளுவன் மருந்து போடுகிற காட்சி காண்போம்.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (குறள்)

அதாவது, போரில் தனது கை வேலினை யானை மீது எறிந்திட, அந்த யானை, வேல் பட்டு ஓடித் தப்பித்துவிட - தொடர்ந்து போர் புரிய தன் கையில் வேல் இல்லையே என வருந்தும் வீரன், போரில் பகைவர் எறிந்து அவன் உடலில் தைத்திருக்கும் ஒரு வேலினைப் பறித்து எடுத்துக்கொண்டு, அவ்விதமாக ஒரு வேல் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறான் - போரினைத் தொடர்கிறான்.

வள்ளுவர் காட்டும் அந்த வீரன்தான் நாம்!
என எண்ணிக் கொள்வோம் -

நம் மீது தைத்துள்ள 'இடைத் தேர்தல் தோல்வி' எனும் இந்த வேலினை, நம் உடலிலிருந்து நாமே பறித்தெடுத்து, அதனை வீசிப் பகையை வெல்வோம் -

அந்தப் பயிற்சியும், ஊக்கமும் அளிக்கும் பாசறைதான் கோவையில் தி.மு.க. மண்டல மாநாடு என்பதை மறவாதே!

காஞ்சியிலும், கும்மிடியிலும் கைவேல் களிற்றொடு போக்கிவிட்டோமே என்று கவலையுறாதே -

அச்சரப்பாக்கத்திலும், சைதாப்பேட்டையிலும், வாணியம்பாடியிலும், ஆண்டிப்பட்டியிலும், சாத்தான் குளத்திலும் கூட அப்படித்தான் கைவேல் களிற்றொடு போக்கி விட்டு,

நம்மீது எறியப்பட்டு நமதுடலில் தைத்திருந்த "மெய்வேல்" பறித்தெடுத்து,

நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பதும் வென்று,

இடதுசாரி இயக்கங்களின் துணையுடன், இதோ மகத்தான சாதனைகள் புரிந்தவாறு, மதச்சார்பற்ற ஆட்சியை மத்தியில் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மறவாதே!

எனவே,

தோல்விக்குப் பிறகும் தொடரும் வெற்றிகள்
என்று தோள்தட்டிப் புறப்படுக!

"துணை மயிலுடன் வா தம்பி!" என்று அண்ணா அழைப்பாரே! அப்படி அழைக்கிறேன் - எச்சரிக்கையுடன் பயணம் செய்து என் நெஞ்சம் குளிர, வந்து திரும்புக! வா! உடன்பிறப்பே, வா!

அன்புள்ள,

மு.க.

26-5-2005

3144. குலக்கொழுந்தே; கோவை வருக!

உடன்பிறப்பே,

இன்னும் ஒரே ஒரு நாள்தான் இருக்கிறது கோவையில் நாம் சந்திப்பதற்கு!

நாளை இரவு புறப்பட்டு, நாளை மறுநாள் 28-5-2005 காலை கோவைக்கு வந்து சேருகிறேன்.

நீயும் என் அழைப்பையும், மாநாட்டு வரவேற்புக் குழுவினரின் அழைப்பையும் ஏற்று, பயணத்திற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருப்பாய் என நம்புகிறேன்.

மாநாட்டுப் பணிகள் விரைந்து நடைபெறுவது குறித்து, வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி பொங்கலூர் பழனிசாமியும் - தம்பி கோவை இராமநாதனும் - தொலைபேசி வாயிலாகத் தொடர்ந்து தொடர்பு கொண்டு என்னுடன் பேசிக் கொண்டிருக் கிறார்கள். நேற்றையதினம் அப்பணிகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ள தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகனும் மாநாட்டு ஏற்பாடுகள் எத்துணைச் சிறப்பாக அமைந்துள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் எடுத்துரைத்தார்.

மழையே கொட்டினாலும் தாங்கக் கூடிய அளவுக்கும், மாநாட்டுப் பந்தல், துத்தநாகத் தகடுகள் கொண்டு அமைக்கப்பட்டிருப்பது ஒரு புதிய முயற்சியாக இப்போதே அனைவராலும் போற்றப்படுகிறது. நீயும் அதனைக் கண்டு களிக்க வேண்டாமா? அப்படிக் களித்திடும் உன்னைப் பார்த்து நான் களித்திட வேண்டாமா?

அன்பு உடன்பிறப்பே, அண்ணன் அழைத்து விட்டானேயென்று, அவசரப் பயணமோ, அதி விரைவுப் பயணமோ மேற்கொள்ள வேண்டாம் - அண்மையில் கூட தஞ்சை மாநாட்டுக்கு வந்த உடன் பிறப்புகள், ஏறிவந்த வாகனம் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தவர், உடல் உறுப்புகள் இழந்தோர், காயமுற்றோர் எனக் கழகக் கண்மணிகள் பாதிக்கப்பட்டு, நேற்றையதினம் கூட அந்தக்

குடும்பங்களுக்குத் தலைமைக் கழகச் சார்பில் நிதி வழங்கிய செய்தியைப் படித்திருப்பாய் - நிதி வழங்குவதல்ல பெரிது! இந்த இயக்கத்துப் பட்டாளத்துச் சிப்பாய்கள் இப்படிப் பயண விபத்துக் களில் மரணமடைந்தால், அதனை ஈடுகட்ட எம்மால் முடியுமா? நம்மால் முடியுமா? வேறு யாரால்தான் முடியும் - நிதி வழங்குவதால் இழந்த உயிர் திரும்பக் கிடைக்குமா?

உன் போன்ற உடன்பிறப்புகள், இயக்கத்தின் இலட்சிய சேனையில் இருந்திடல் எனக்குப் புதியதோர் பலம்!

அந்தப் பலத்தில், அணுவளவும் குறைவதை என்னால் அனுமதிக்க முடியாது. அதனால்தான் உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், மாநாட்டுக்கு வருகிறேன் என்றோ, வந்து திரும்புகிறேன் என்றோ - வாகனங்களை விரைவுப் படுத்தாதே! இரவுப் பயணம் மேற்கொள்ளாதே - வந்தாய் - எனக்குக் காட்சி தந்தாய் - திரும்பச் சென்றாய் என்று நற்செய்தி வரும் வரையில் நான் காத்திருப்பேன்.

கோவை நகரத்திலிருந்து மாநாடு அமைந்துள்ள அண்ணா நகருக்கு வந்திட 15 அல்லது 20 கிலோ மீட்டர் தூரம் இருப்பதால், போக்குவரத்துக்குப் பேருந்து வசதிகளைப் பெருக்கிட இந்த அரசின் அதிகாரிகள், மாநாட்டு வரவேற்புக் குழுவினரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் - முறைப்படி வாகன வசதிகளைப் போதுமான அளவுக்குச் செய்துதர மாநாட்டு வரவேற்புக் குழுவினரே முன்வந்து, அதனைத் திறம்படச் செய்துள்ளனராம்!

விழாக் காலங்களில், மக்கள் அதிகமாகக் கூடும் நிகழ்ச்சிகளில் - பேருந்துகளின் எண்ணிக்கையைக் கூட்டி, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், வருவாயைப் பெருக்குவது நல்ல அரசுகளின் வழக்கமாக இருக்கக்கூடிய ஒன்றுதான் எனினும், இந்த அரசு அத்துணை பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுமா, என்ன?

எனக்குத் தகவல் வந்தது, தஞ்சையில் நமது தி.மு.க. மண்டல மாநாடு கடந்த மாதம் நடைபெற்ற போது, வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களின் போக்குவரத்துக்காகத் தஞ்சைப் போக்குவரத்து அரசு அதிகாரிகள், கூட்டத்தின் எல்லையற்ற நெருக்கடியைத் தவிர்க்கவும், வசூல் அதிகமாகிடுமென்றும் கணக்கிட்டு, சிறப்புப் பேருந்துகளை விட்டார்கள் என்றும்,

அவர்கள் போக்குவரத்துக் கழகத்தின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானார்கள் என்றும் சொல்லப்பட்டது.

விசாரித்துப் பார்த்தேன் - அது உண்மை என்று தெரியவந்தது.

அதற்காக, நமது உடன்பிறப்புகளாம் கோவைச் செயல் மறவர்கள் யாரும் சோர்ந்து போய் விடவில்லை - சளைத்திடவில்லை. 1993ஆம் ஆண்டு கயவர்கள் செயலால் தீப்பற்றி எரிந்து சுமார் 30 இலட்ச ரூபாய் இழப்புக்கு உள்ளாகி சேதமுற்ற மாநாட்டுப் பந்தலையே சீர்படுத்தி - எரிந்து கருகிய அடையாளமே தெரியாத அளவுக்கு சில மணி நேரத்தில், மாற்றி அமைத்து மாநாட்டை நடத்திய மாவீரர்கள் அன்றோ, கோவையில் இருக்கிறார்கள்.

அவர்களால், அதிகாரிகள் மறுத்துவிட்ட போதிலும், போக்குவரத்து வசதிக்கு மாற்று ஏற்பாடு கண்டு மாநாட்டை வெற்றிகரமாக நடத்த முடியாதா என்ன? சோதனைகளும், வேதனைகளும் சூழச் சூழ, இந்தக் கழகம், அப்போதுதான் சொக்கத் தங்கமாகச் சுடர் விடும் என்ற வரலாற்றை உணர மறுக்கிறவர்கள் நடத்துகிற ஆட்சியில், நமது மாநாட்டின் சிறப்பு குறைய வேண்டுமென்று இல்லாத சில்மிஷங்களெல்லாம் செய்யும் இந்த ஆட்சி!

"நடையை நிறுத்தாதே!" என்று நான் பத்தாண்டுகளுக்கு முன்னர் எழுதிய கவிதை நினைவிருக்கிறதா உடன்பிறப்பே!

"பாதையில் குறுக்கிடும் காட்டாறு!
பதறத் தேவையில்லை; உன்
பாட்டன் பூட்டன் தாய் தந்தையர் கடந்தது
எப்படி எனக் கணக்கிட்டுப்

பாலம் அமைத்தோ, தோள்பலம் காட்டி நீந்தியோ
பாதியில் பயணம் தடைபடாமல் ஏறுக கரையில்!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்க் குவிந்த
அழுக்குச் சிந்தனை, ஆதிக்கச் சுமைகள்
அகற்றிடவே உன் பயணம்; அதனை மறந்து
அகதியாய்த் தமிழனை விட்டு விடாதே!"

குலக்கொழுந்தே!
கொள்கை மறவனே!

குரல் உயர்த்தி இந்தக் கவிதை வரிகளை முழக்கிக் கொண்டே கோவைப் பயணத்தைத் தொடங்கு!

இது நம் கொள்கைப் பயணத்தில் ஒரு கட்டம்!
கூடிப் பணி புரிவோம் -
தேடிப் பகை வளர்ப்போர் திகைக்குமளவுக்கு!
திண்தோள்வீரர் கூட்டம் - இது! திக்கெட்டும்
திராவிடக் கொடி யேற்றும் -
திராவிட முரசம் ஒலிக்கும் -
திராவிட கீதம் இசைக்கும் -
அதில் பங்கேற்றிட வா வா வா! அன்பு உடன்பிறப்பே!

அன்புள்ள,
மு.க.
27-5-2005

3145. “வாக்குகள் நீக்கினாய்; போ! போ! போ!
வழக்குகள் தொடுப்பாய்; வா! வா! வா!”

உடன்பிறப்பே,

சூது
சூழ்ச்சி
பாபம்
பழி
துரோகம்
துன்மார்க்கம்
கொடுமை
குரூரம்
அநியாயம்
அக்ரமம்
ஆத்திரம்
அராஜகம்

இத்தனை செயல்பாடுகளையும், அவற்றால் விளையும் கேடுகளையும், கரும்பு தின்பது போல விரும்பிப் பிறர் மீது ஏவுகிறவர்கள், எப்படியோ தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளாமல் - சற்று நேரத்துக்கு முன்புதான் கபிலவாஸ்து மாளிகையில் கட்டிலில் இருந்து, மனைவி மக்களைப் பிரிந்து துறவு பூண்ட தூயவன் சித்தார்த்தனே, தாங்கள்தான் என்பது போல மாசற்றவர்கள் எனக் கூறிக்கொண்டு, மக்களை ஏமாற்றக் கற்றிருக்கிறார்கள். மக்களும் ஒரு பகுதியினர் ஏமாறுவதற்குப் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

செய்த தீவினைகள் எல்லாம் போன ஜென்மத்தில்
செய்தவை!
இந்த ஜென்மத்தில் எல்லாமே மறைந்து விட்டது என்று,

புதுப் பிறவி எடுத்தவர்களாகப் பொதுமக்களை ஏமாற்றுவது அவர்களுக்குக் கை வந்த கலையாக இருப்பதை, அவர்களுக்கு

அருகிலிருந்து இல்லையாயினும் தொலைவிலிருந்துகூட முற்றாக அறிந்திருக்கும் நம்மையுமா அவர்கள் ஏமாற்றிவிட முடியும்?

சிலரைச் சில நேரம் ஏமாற்ற முடியும் -
எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாற்றிவிட முடியாது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்.

நடைபெற்று முடிந்த இடைத் தேர்தலில் காஞ்சியிலும், கும்மிடியிலும் தங்கள் கையிருப்பு முழுவதையும் காட்டி, வாக்காளர்களையும் - தேர்தல் அதிகாரிகளையும் - ஏன்; நம்மிலேகூட சிலரையும் ஏமாற்றியவர்கள் அந்தக் கலையை அடுத்துவரும் தேர்தல்களிலும் - குறிப்பாக, சட்டமன்றப் பொதுத் தேர்த லிலும் கடைப்பிடித்து, வெற்றியைப் பறித்துவிடச் செய்துள்ள சூழ்ச்சியை நேற்றையதினம் தெரிந்து கொள்ள முடிந்தது.

கழகத்தில் விழிப்புடன் இருந்து பணியாற்றக் கூடியவரும் - விபரம் தெரிந்தவரும் - எல்லாவற்றையும்விட இயக்கத்தின்மீது தனி ஆர்வம் படைத்தவருமான - பொன்னேரி தொகுதியைச் சார்ந்த மீஞ்சூர் ஒன்றியக் கழகத்தின் செயலாளர் தம்பி பாஸ்கர சுந்தரம், எம்.ஏ., அவர்கள், பொன்னேரி தொகுதிக்கென தரப்பட்ட அதிகாரபூர்வமான வாக்காளர் பட்டியலை எடுத்துக் கொண்டு அண்ணா அறிவாலயத்திற்கு ஓடோடி வந்தார்.

வாக்காளர் பட்டியலை விளக்கிக்காட்டி, "எப்படிப்பட்ட திட்டமிட்ட சதி நடக்கிறது பாருங்கள்" என்று கண்கலங்கவும், துடிப்பு மிகவுமான நிலையில் எம்மிடம் விவரிக்கத் தொடங்கினார்.

உடன்பிறப்பே,

நடந்து முடிந்த இடைத் தேர்தலிலேயே திடீரெனவும், அதிர்ச்சியாகவும் வாக்காளர் பட்டியலில் 999 என்ற ஓர் எண் தோன்றி, அப்படிப் பல 999 இருக்கின்றனவே பட்டியலில் - இது என்ன என்று கேட்ட போது;

"ஆமாம், வாக்காளர் பெயர் இல்லாமல், அதற்குப் பதிலாக 999 என்று இருக்கிறது. அந்த உண்மையான வாக்காளர் வந்துவிட்டால், அவர்கள் தாங்களாகவே முன்வந்து 8-ஏ படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுத்து, அந்தப் பகுதியில் வசிப்பதற்கான அத்தாட்சிகளை நிரூபித்தால்தான்

வாக்காளர் பட்டியலில் இடம் பெறமுடியும். அப்போது அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை அளிப்போம்”

என்று தேர்தல் அதிகாரிகள் சொன்னார்கள். ஏதோ அப்படி பத்து அல்லது இருபது பேர்களுக்கு முன்னால் 999 என்ற எண் இடம் பெற்றால், அது நம்பக் கூடியதாகவும், வாக்களிக்க அனுமதிக்கக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் இதோ, நேற்றையதினம் மீஞ்சூர் ஒன்றியச் செயலாளர் தம்பி பாஸ்கர சுந்தரம் கொண்டு வந்து காட்டிய வாக்காளர் பட்டியலில், பொன்னேரி தொகுதியில் மட்டும், அந்த 999 எண்ணில் இருபதாயிரம் வாக்காளர்கள் விடு பட்டோ அல்லது விலக்கப்பட்டோ இருக்கிறார்கள் என்றால், அந்த மாய மந்திரம்தான் என்ன?

அதாவது, பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்கு பட்ட மீஞ்சூர் ஒன்றியத்தில், 10,200 வாக்காளர்கள் 999 என்கின்ற பட்டியலில் இடம் பெற்றும், அதே தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றியத்தில், 81 வாக்குச் சாவடிகளில் 9,851 வாக்காளர்கள் 999 என்கின்ற பட்டியலில் இடம் பெற்றும் வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர். குறிப்பாக, பொன்னேரி பேரூராட்சியில் 1330 வாக்காளர்களும், மீஞ்சூர் பேரூராட்சியில் 1736 வாக்காளர்களும் 999 பட்டியலில் இடம் பெற்று வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இது இப்போது நமது ஒன்றியக் கழகத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அதனால், கறாராகக் கேள்வி கேட்டு நடவடிக்கை எடுக்க முனைகிறோம். கண்டுபிடிக்கப்படாமலே எத்தனை தொகுதிகளில், எத்தனை “999” களோ? அந்த எண்களுக்கு மாற்றாக, எத்தனை வாக்குகளை வஞ்சகமாக சேர்ப்பார்களோ?

இந்த ஒரு தொகுதியில் 20,000 வாக்குகளை 999 என்ற பட்டியலில் சேர்த்து வாக்களிக்க இயலாமல் செய்தபோதிலும் - அந்த இருபதாயிரம் வாக்காளர்களும் கடந்த தேர்தலில், அதாவது பாராளுமன்றத் தேர்தலில் நமக்கு வாக்களித்தவர்கள் என்றும் - இப்போது அந்த வாக்காளர்கள் பெயர்கள் விலக்கப்பட்டு, 999 இல் வைக்கப்பட்டுள்ளது என்றும் - திட்ட வட்டமாகத் தெரிகிறது. இந்த உண்மையை ஆதாரபூர்வமாக விளக்கி, அதையேற்று தேர்தல் அதிகாரிகள் அந்தப் பெயர்களை சேர்த்தால்தான் உண்டு

- இல்லையேல் இருபதாயிரம் வாக்குகள் விலக்கப்பட்டது, விலக்கப்பட்டதேதான்!

இது, ஒரே ஒரு பொன்னேரி தொகுதியில் என்கிற போது, இன்னும் எத்தனை தொகுதிகளில் இந்தச் சதி வேலை நடந்திருக்கிறதோ என்று நமது கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் ஆங்காங்கு தொகுதி வாரியாகக் கூடிப் பேசி, உடனடியாக வாக்காளர் பட்டியல்களை "நாணயமான பட்டியல்களாக" வெளிவருவதற்கு ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். இல்லையேல், அவை 'நாணயங்களுக்கு விலை போவோர் பட்டியலாகி' விடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

காஞ்சி, கும்மிடி இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆளுங்கட்சியின் தலைவி ஜெயலலிதா, அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாடு மறந்து,

அடக்கமற்று வெற்றிக் கூச்சல் போட்டு, எதிர்க் கட்சிகளை ஏடாகூடமாக ஏசி, ஆணவமாகப் பேசி,

இருந்த தொகுதிகளைத்தான் பெரும்பாடுபட்டு -பெரும் பணம் செலவிட்டுத் தக்க வைத்துக் கொண்டார்கள் என்ற உண்மையை மறைத்து விட்டு;

"பொதுத் தேர்தலில் பொங்கிவரப் போகிறது வெற்றி" என்று புழுதி மாயம் செய்து கொண்டே,

அதிலும் சந்தேகம் தோன்றி, இத்தகைய சதி வேலைகளைப் பொன்னேரி தொகுதிப் பாணியில் தொடங்கியுள்ளார் போலும்!

அதனால்தானே; வேறொரு முனையில் மேம்பால வழக்கு, இல்லையென்று போனதை - ஆதாரம் ஏதும் கிடைக்காததை - அப்ரூவர் சிலரையாவது தயாரித்து நடத்திப் பார்ப்போம் -

கருணாநிதி, ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் கோ.சி. மணி, க. பொன்முடி ஆகியோர் மீது பொய் மாரி பொழிந்து பார்ப்போம் எனத் திட்டமிட்டு -

1991ல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, தனது சொத்து மதிப்பு ரூபாய் மூன்றரை கோடி மட்டுமே எனக் காட்டிவிட்டு, 1996க்குள் ஐந்தாண்டு கால ஆட்சிக் காலத்தில் 65 கோடி ரூபாய் ஆஸ்தி குவித்த வழக்கிற்கு ஒரு ஆறுதலாக -

அதுவும் போகாத ஊருக்குப் பாதை போட்டு, குறுக்கு மூலை பாய்ந்து -

போலீஸ் இலாகாவை போயஸ் இலாகாவாக மாற்றிக் கொண்டு-

கோவை மாநாட்டுச் சிறப்பைக் குலைத்து விடலாமென்று

குள்ள நரித் திட்டம் வகுத்துள்ளதை,

கழகத்தின் தூய உடன் பிறப்பாம் நீ தூசுக்குச் சமமாகக் கருதுவாய் என்று எனக்குத் தெரியும்.

அதனால்தான்,

"வாக்குகள் நீக்கினாய்; போ! போ! போ!
வழக்குகள் தொடுப்பாய்; வா! வா! வா!"

என்று ஆட்சியாளரைப் பார்த்துப் பாடிக் கொண்டே வரும்

உன் முகத்தில் நான் காணும் ஒளியும் -

உன் நடையின் கம்பீரமும் -

கழகப் படையின் மாட்சியாகும்
என்பதுணர்ந்து, கோவை மாநாட்டில்
இரு கையேந்தி உனை
வரவேற்று வாழ்த்துகிறேன்!

அன்புள்ள,

மு.க.

28-5-2005

3146. ஜனநாயகத்தின் வேர்களையே வெட்டும் சர்வாதிகார ஆட்சியின் விஷமத்தனம்!

உடன்பிறப்பே,

2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும், புதுவையில் ஒன்றுமாக, மொத்தம் நாற்பது தொகுதிகளிலும் அ.தி.மு.க.வுக்கு ஒரு தொகுதிகூட கிடைக்காமல், நமது தி.மு.க. தலைமையிலான முற்போக்குக் கூட்டணி தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்கள் நாற்பது இடங்களிலும் வெற்றி வாகை சூடிய பிறகு - தேர்தலுக்கு முன்போ - அல்லது தேர்தல் நடைபெற்றபோதோ - எதுவுமே சொல்லாமலிருந்த, அ.தி.மு.க. தலைவி, முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், அதன்பின் ஓரிரு மாதம் கழித்த பிறகு, மின் இயந்திரங்களில் வாக்குப் பதிவு நடைபெற்றதால் இப்படியொரு மோசடி நடைபெற்று விட்டதென்றும் - அதிகாரிகள் ஆளுங்கட்சிக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்றும், இனிமேல் அடுத்து வரும் தேர்தல்களில் மின் இயந்திரங்களை வாக்குப் பதிவுக்குப் பயன்படுத்தாமல், பழைய ஓட்டுச் சீட்டு முறை கடைப் பிடித்தால் தன் கட்சியின் வெற்றி நிச்சயமென்றும் அறைகூவல் விடுத்ததோடு, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பது பேர் கூட்டணிக் கட்சியினர் வெற்றி பெற்றது செல்லாது என்றும், மறு தேர்தல் வேண்டுமென்றும், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்போவதாச் சட்டப் பேரவையிலேயே சங்கநாதம் செய்து சவாலும் விட்டார்.

"சவால்" சவுத்துப்போய் இப்போது பல மாதங்களாகின்றன. அது வெறும் "சவுண்டிகளின் சவால்" என்றாகிவிட்டது.

தொடர்ந்து நடைபெற்ற காஞ்சி, கும்மிடி இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. வெற்றி பெற்றபோது, "இப்போது மின் இயந்திர ஓட்டுப் பதிவுதானே நடை பெற்றது? எப்படி நீங்கள் வெற்றி பெற முடிந்தது? நாடாளுமன்றத் தேர்தலுக்கு நீங்கள்

வைத்த வாதம் - சொன்ன காரணம் - அதெல்லாம் இப்போது எங்கே போயிற்று? என்று நிருபர்கள் கேட்டபோது, ஜெயலலிதா வாயை மூடிக் கொண்டு ஓடி ஒளிந்து கொண்டாரே தவிர,அதற்குப் பதிலளிக்க அவருக்கு வக்குமில்லை - வகையுமில்லை - தெம்புமில்லை - திராணியுமில்லை - சுருக்கமாகச் சொன்னால் தெளிவே இல்லை!

இப்போது, இனி வரும் தேர்தல்களில் "மின் இயந்திர வாக்குப் பதிவு" தான் என்று அறுதியிட்டு, தலைமைத் தேர்தல் ஆணையமே உறுதியாகக் கூறிய பிறகு, சரி அதற்குள் நம்மால் முடிந்த சதியைச் செய்வோம் என்று முடிவு செய்து, ஜனநாயகத்தின் வேரினை, அதாவது ஆணி வேர், சல்லி வேர், உள்ளிட்ட அடி மரம் வரையில் உள்ளதை வெட்டி விட்டால், மரத்தையே வீழ்த்தி வெற்றிக் கனிகளைப் பறித்துவிடலாமென்ற நப்பாசையில், அதிகாரிகள் சிலரை பதவிகளையும், பணப் பெட்டிகளையும் காட்டி வசீகரித்து வளைத்துப் போட்டுக்கொண்டு - தேர்தலில் மிகமிக முக்கியமான ஆவணமான வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களையே அ.தி.மு.க.வின் நிர்வாகிகள், அமைச்சர்கள், இஷ்டத்துக்குத் தயாரித்தும், இருப்பதை மாற்றி அமைத்தும் முழுப் பூசணியை இலைச் சோற்றில் மறைக்க முயற்சிப்பதுபோல ஜனநாயக விரோத சதிச் செயலை எல்லா மாவட்டங்களிலும் முடுக்கிவிடத் தொடங்கினார்கள்.

இந்தச் சூழ்ச்சி பற்றிய விபரங்கள், நடைபெறும் விஷமங்கள், கோவை மாநாட்டில் இருந்த என் காதுக்கு எட்டியதோடு, அதுபற்றிய தெளிவான விபரங்கள் - எப்படித் தில்லுமுல்லுகள் நடக்கின்றன என்ற செய்திகள் - குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் என்று ஆரம்பித்து ஒரே நாளில் லட்சக்கணக்கில் புதிய வாக்காளர் விண்ணப்பங்களின் மனுக்கள் அமைச்சர்களின் தலையீட்டுடன் - அதிகாரிகள் வற்புறுத்தப் பெற்று வழங்கப்பட்டு, பதிவாகியிருக்கின்றன என்ற செய்தியுடன் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் தம்பி பொன்முடி - என்னிடம் அதற்கான ஆதாரங்களைத் தருவதற்கு, நான் ஓய்வெடுப்பதற்காக இரு நாட்கள் தங்கலாமெனச் சென்றிருந்த கோத்தகிரிக்கு ஓடோடி வந்தார்.

உடன்பிறப்பே! பிறகு ஓய்வாவது, ஒண்ணாவது எனக்கு!

மே திங்கள் 28, 29 நாட்களில் கோவை மாநாடு முடிந்து, மே 30 அன்று கோத்தகிரி போய்ச் சேர்ந்த நான், அதே 30ந்தேதியன்று தலைமைத் தேர்தல் ஆணைய அதிகாரிக்கு அவசரக் கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில் - தமிழக ஆளுங்கட்சி சார்பில் முறைகேடாக வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்த்திட போலி விண்ணப்பங்களை ஒட்டுமொத்தமாகக் கொடுத்துள்ளது பற்றி தெரிவித்திருந்தேன்.

30-5-2005 தேதியன்று, நான் டெல்லியில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு எழுதிய கடிதத்திற்கு 1-6-2005 அன்று அவர்கள் பதில் எழுதினார்கள். அதற்கும் அன்றைய தினமே நான் விளக்கமாகத் தலைமைத் தேர்தல் அதிகாரிக்குக் கடிதம் எழுதிய போது, தமிழகத்தில் அதிகாரிகளின் துணையோடு ஆளுங்கட்சி செய்து வரும் தில்லுமுல்லுகளைத் தெரிந்து கொள்ளவும், நியாயமான முறையில் வாக்காளர் பட்டியல் தயாரித்திடவும் தேர்தல் ஆணைய அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றினை அனுப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

2-6-2005 அன்று, சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழகத் தலைமைச் செயற்குழு கூட்டத்தில், போலி வாக்காளர்களைச் சேர்க்க உதவிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், நடைபெற்றுள்ள ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராக தோழமைக் கட்சிகளுடன் கலந்துகொண்டு போராட்டம் நடத்துவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கு முதல் நாளே டெல்லியிலே உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியை மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலுவும் நேரில் சந்தித்து, நடைபெறும் முறைகேடுகளைப் பற்றி விளக்கினார்.

2ஆம் தேதியன்று, தமிழகத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா ஐ.ஏ.எஸ்., அவர்களை, மத்திய அமைச்சர் டி.ஆர். பாலுவும், முன்னாள் அமைச்சர் பொன்முடியும் சந்தித்து ஆளுங்கட்சியினரால் நடத்தப்படும் முறைகேடுகளையெல்லாம் விளக்கிடுமாறு அனுப்பி வைத்தேன்.

3ஆம் தேதியன்று, தமிழக ஆளுநர் பர்னாலா அவர்களுக்கு இந்த விவரங்கள் குறித்து நான் கடிதம் எழுதியிருந்தேன்.

4-6-2005 தேதிய இந்து இதழ் முதல் பக்கத்திலே வெளியிட்ட செய்தியில், வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக 16 லட்சத்து 63 ஆயிரம் மனுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதிலே 12 லட்சத்து 75 ஆயிரம் மனுக்கள் மே 30ந்தேதி அன்று மட்டும் பதிவாகியுள்ளதாகவும், தேர்தல் துறையிலே ஏற்பட்டுள்ள பீதிக்கு இதுதான் காரணம் என்றும் எழுதப்பட்டிருந்தது.

இவைகளின் தொடர்ச்சியாக, டெல்லி தலைமைத் தேர்தல் ஆணையம் இரண்டு பேர் கொண்ட குழு ஒன்றினை உடனடியாக தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது. அந்தக் குழுவில் டெல்லி தேர்தல் ஆணையத்தின் சட்ட ஆலோசகர் மேன்பிரீத்தா, டெல்லி தேர்தல் ஆணையச் செயலாளர் தபாஷ் குமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அந்தக் குழு சென்னை வந்ததும் 4-6-2005 அன்று, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அனைவரின் கருத்துகளையும் அறிந்தது. அந்தக் கூட்டத்தில் தி.மு.க., தோழமைக் கட்சிகள் சார்பாக எடுத்து வைக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில், அன்று மாலையிலே ஆய்வு செய்வதற்காக அந்தக் குழுவினர் விழுப்புரம் சென்றனர்.

அங்கு தொகுதி வாரியாக புதிதாகச் சேர்ப்பதற்காகக் கொடுக்கப் பட்ட வாக்காளர்களின் விண்ணப்பங்களை சரி பார்த்தபோது பெரும்பாலான விண்ணப்பங்கள் அ.தி.மு.க. நிர்வாகிகளால் அவர்கள் லெட்டர் பேடு மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆய்வுப் பணி முடிவுற்ற பிறகு, டெல்லி தேர்தல் ஆணையச் செயலாளர் தபாஷ்குமார் செய்தியாளர்களிடம் கூறும்போது.

"புதிய வாக்காளர் சேர்க்கையில் முறைகேடு நடந்துள்ளதாக வந்த புகார்களின் அடிப்படையில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கூறியவை கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டு அரசியல் கட்சி பிரமுகர்கள் தங்களது பொறுப்பில் அதிக விண்ணப்பங்களை மொத்தமாக வழங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விண்ணப்பங்களில் முறையான வயது, முகவரி குறித்த தகவல்கள் எதுவும் இல்லை. விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 1 லட்சத்து

20 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் கடைசி நாளான 30-5-2005 அன்று மட்டும் 65 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, விழுப்புரம், முகையூர், கண்டமங்கலம் ஆகிய தொகுதிகளில் மட்டும் மொத்தமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் கடைசி நாளில் மட்டும் விழுப்புரம் தொகுதியில் 6265 விண்ணப்பங்களும், கண்டமங்கலம் தொகுதியில் 7581 விண்ணப்பங்களும், முகையூர் தொகுதியில் 7130 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன. மொத்தமாக கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களின் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தவறு இருப்பின் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியினர் மீதும், அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று விளக்கிக் கூறியுள்ளார்.

மேலும், விழுப்புரத்தில் சி.ஆர்.பி. தெருவில் அதிகாரிகள், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை மேற்கொண்டபோது, அ.தி.மு.க. வைச் சேர்ந்த 33வது வட்டச் செயலாளர் பொன்ராஜ் என்பவர், தனது பொறுப்பில் வழங்கிய வாக்காளர் படிவங்கள் அப்பகுதியில் சரிபார்க்கப்பட்டது. வாக்குச்சாவடி எண். 86, வார்டு எண் 33இல் கதவு இலக்கம் 361இல் குடியிருக்கும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பரசுராமன் என்பவரின் வீட்டில் ரஞ்சித் குமார் பெயரில் வழங்கப்பட்ட படிவத்தை சரிபார்த்து அவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தியிருக்கிறார்கள். அப்போது அவர் அந்தப் படிவத்தை தான் வழங்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார். மேலும், அவரது தங்கை ரேவதி, கனிமொழி ஆகியோர் பெயரும் படிவத்தில் சேர்க்கப்பட்டது பற்றி விசாரிக்கப்பட்டுள்ளது. அப்போது அந்த இரண்டு பெண்களும் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதும், முறைகேடாக அவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஏகாம்பரம் என்பவரது வீட்டுக்குச் சென்று விசாரணை நடத்தினர். ஏகாம்பரத்தின் மகள் அஞ்சுலட்சுமி என்பவர், வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்க்க மனு செய்திருந்தார். ஆனால் அதிகாரிகள் விசாரித்ததில் அவருக்கு 18 வயது நிரம்பாதது தெரிய வந்தது.

அடுத்து ஆறுமுகம் என்பவரது வாக்காளர் பட்டியல் சரிபார்க்கப்பட்டபோது, எழுதப் படிக்கத் தெரியாத அவர் விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்து போட்டிருந்தது தெரியவந்தது. அதிகாரிகள் ஆறுமுகத்திடம் ஒரு தாளில் கையெழுத்திட்டு காண்பிக்குமாறு கூறினர். ஆனால், அவர் தனக்கு கையெழுத்திடத் தெரியாது என்றும், கைரேகை மட்டுமே போடுவதாகவும் தெரிவித்தார். வாக்காளர் பட்டியலில் இடம்பெற தகுதியற்ற அவரது மகள் சுபாஷினி பெயர் (குறைவான வயது கொண்டவர்) முறைகேடாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதனால் அந்தப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள புதிய வாக்காளர்கள் போலியானவை என்று அதிகாரிகள் முடிவு செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டனர். இந்த விவரங்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே உள்ள பெரும்பாலான ஏடுகளில் வேண்டுமென்றே வெளியிடப்படாமல் தடுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே, தமிழக ஆளுநர் திரு. பர்னாலா அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தின் தொடர்ச்சியாகத் தமிழகத் தேர்தல் அதிகாரியை ஆளுநர் நேரில் அழைத்து விபரம் அறிந்துள்ளார். 5-6-2005 அன்று மாலையில், பொருளாளர் ஆற்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின், விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொன்முடி ஆகியோர் ஆளுநரைச் சந்தித்து அனைத்தையும் விளக்கியிருக்கிறார்கள்.

வாக்காளப் பட்டியலில் உள்ள போலி வாக்காளர்கள் பற்றிய விபரங்களை அறிந்தும், ஆங்காங்கு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தியும், தவறுக்குக் காரணமானவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துவிட்டு, நடைபெற்றவை குறித்து ஓரிரு நாட்களில் டெல்லி சென்று 10ஆம் தேதியன்று அறிக்கை தாக்கல் செய்யப்போவதாகவும் தலைமைத் தேர்தல் ஆணையத்திலிருந்து தமிழகம் வந்து நேரடி விசாரணை நடத்தியுள்ள குழு தெரிவித்திருக்கின்றது. தலைமைத் தேர்தல் அலுவலக அதிகாரிகள் அளித்திடும் விபரங்கள் மீது தலைமைத் தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இதுபற்றியெல்லாம் 7-6-2005 அன்று நடை பெறும் தோழமைக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து பேசி

முடிவெடுப்போம். அந்த முடிவுகள் பற்றி, அன்று மாலையில் நடைபெறும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் விவாதித்து அதற்கேற்பச் செயல்படுவோம்.

மனச்சாட்சிக்கு மாறாக இந்த உண்மைகளை மறைப்பவர்கள், இருட்டடிப்புச் செய்பவர்கள், திரிப்பவர்கள் யாராயினும், அவர்கள் எதிர்காலத்தில் அதற்கான விலையைக் கொடுத்தே தீர வேண்டும்.

அன்புள்ள

மு.க.

7-6-2005

3147. ஜனநாயகத்தை சாகடிக்க; நீதிதேவனிடம் அனுமதியா?

உடன்பிறப்பே,

“நிர்வாகத்துறை, நீதித்துறை, வேறு எந்தத் துறையானாலும் இந்த ஆட்சியில் எல்லாத் துறைகளும் எங்கள் விருப்பம் போல் தான் தனித்த சர்வாதிகாரத்துடன் இயங்க வேண்டும். அப்படி இயங்குவதற்கு மட்டுமே அவற்றை அனுமதிப்போம் - இப்படி நாங்கள் ஒரு நிலை எடுத்து ஆட்சி நடத்துவதற்கு தலையாட்டி ‘ஆமாம்’ போடுவதற்கென்றே ஏற்கனவே அச்சாரம் கொடுத்து எடுபிடிகள் சிலரை எங்கள் தர்பாரில் அமர்த்தி வைத்துள்ளோம். எங்களுக்கு நல்ல எண்ணத்துடன் அறிவுரை கூறுவதற்குக்கூட அவர்கள் வாய் திறக்கக் கூடாது; வாய் திறக்கமாட்டார்கள்!

இப்போது நாங்கள் “ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனுஷனையே கடித்த கதையாக” என்று ஒரு பழமொழி உண்டே, அந்தப் பழமொழியை நிரூபித்துக்காட்டவே முன்வந்து விட்டோம். ஆம்!

யாருடைய தலையீடுமின்றி சுதந்திரமாகச் செயல்படும் அமைப்பு என்ற இலக்கணத்திற்குரிய தேர்தல் ஆணையத்துக்கு எதிராகவே நீதி மன்றத்துக்குச் சென்றுள்ளோம். நாங்கள் அந்தக் காலத்து தேர்தல் ஆணையர் சேஷனையே விமானத்திலிருந்து இறங்கவிடாமல் தடுத்து, அவர் தங்கியிருந்த ஓட்டலையே அடித்து நொறுக்கியவர்கள்!”

இப்படி இதே சொற்களையோ,

அல்லது இந்தச் சொற்கள் கொண்ட வாக்கியங்களையோ

உச்சரிக்காவிட்டாலும்,

இந்த எதேச்சாதிகாரக் குரலை எதிரொலிக்கும் வண்ணம்,

இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் தேர்தல் நடக்கும்போதும் சரி,

நடந்து முடிந்து அடுத்த தேர்தலுக்கான ஆயத்தங்களை தேர்தல் ஆணையம் செய்வதற்கு முற்பட்டாலும் சரி!

அவற்றில் எல்லாம் ஜனநாயகத்தின் கழுத்தை முறித்துக் கொலை புரிவதற்குத் துடியாய்த் துடித்து, சில நேரங்களில் செய்து முடித்து விட்டு,

எதிர் வரும் காலங்களிலும் அதே காட்டுமிராண்டி முறையைத் தொடர்வதற்குத் தோதாகத் தேர்தல் ஆணையமே,

அது தமிழக ஆணையமாக இருந்தாலும் சரி!

அல்லது தலைமை ஆணையமாக இருந்தாலும் சரி!

தங்களுக்குத் தண்டனிட்டுத் தாசர் வேலை பார்க்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

ஜனநாயகத்துக்கு விரோதமாக அநியாயம் செய்வதும்! ஓர் எல்லை கடந்து போய் விட்ட நிலையில், இவர்கள் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கருதிக் கொண்டிருந்தவர்கள்கூட! தர்ம நியாயம் பேசுவது கண்டு கோபாவேசத்துடன் அவர்களை வசைபாடிடவும், மிரட்டவும், மீறினால் என்ன செய்வோம் பார் என்று முண்டா தட்டிக் காட்டிடவும் முற்பட்டுள்ளனர் என்கிறபோது, இந்தத் தருணத்திலாவது தமிழ்நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற்றுத் தங்களையும், தங்களின் எதிர்காலத்தையும் கற்காலத்திற்குச் செல்லவிடாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? என்ற கவலை மிகுந்த கேள்வியுடன்தான், உடன்பிறப்பே, உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

எல்லோரும் அறிந்த ஒன்றுதான்! சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரித்து, சேர்ப்பவை சேர்த்து - நீக்குவன நீக்கி - இந்த இரு செயல்களிலும் எள் முனையளவு குறைபாடுமில்லாமல், வெளியிடுவதற்கு ஏற்ற வகையில், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும், தேர்தல் ஆணையத்தின் பிரதிநிதிகளும் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வாக்காளர் பட்டியல்களைத் தொகுதிவாரியாக வெளியிடுவதென்று அறிவிக்கப்பட்டது. அதற்காக மேற்கண்ட அனைத்துத் தரப்பினர் கலந்து கொண்ட கூட்டங்களும் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், "சுனாமி" பாதித்த மாவட்டங்கள் தவிர்த்து எனக் கணக்கெடுத்து, மொத்தம் 165 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வாக்காளர் பட்டியலை முழுமைப்படுத்துவது என ஆரம்பித்து அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே;

வாக்காளர் சேர்ப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளான மே 30-ந்தேதியன்று மட்டும் கணக்குப் பார்க்கும்போது, 13 லட்சம் வாக்காளர்களை 165 தொகுதிகளிலும் சேர்த்திருப்பது கண்டு, அது குறித்து ஆய்வு செய்த நிலையில் - அ.தி.மு.க.வினர், சில அதிகாரிகளின் துணையுடன் - அல்லது அதிகாரிகள் மிரட்டப்பட்டு அவர்கள் தந்த ஒத்துழைப்புடன் - வாக்காளர் பட்டியலையே 'சிசுக்கொலை' போலச் சிதைத்து விட்டனர் என்ற உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. இந்தச் செய்தி என் செவிக்கு எட்டியவுடன் கோவை மாநாடு மே 29 முடிந்து அன்றிரவு கோத்தகிரிக்குச் சென்ற நான் மறுநாள் மே 30-ந் தேதியே, தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு ஒரு அவசரக் கடிதம் எழுதினேன்.

தமிழ்நாட்டில் வாக்காளர் சேர்ப்பதிலும், நீக்குவதிலும், பட்டியல் தயாரிப்பதிலும் நடத்தப்படும் ஆளுங்கட்சியினரின் முறைகேடுகளை விசாரித்து நல்ல முடிவு காணுமாறு தி.மு.க. சார்பிலே மட்டுமல்ல, எல்லா எதிர்க்கட்சிகளின் சார்பிலும் கடித வாயிலாகவும், நேரில் நமது தோழமைக் கட்சிகள் அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தலைமைத் தேர்தல் ஆணையப் பிரதிநிதிகள் சென்னைக்கே வந்து, ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட கூட்டத்தைக் கூட்டி, வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் குறைபாடுகள் இருந்தால் அவற்றை நீக்குவதற்கும்,

மொத்தமாக வாக்காளர்கள் பெயர்களைப் பட்டியலிட்டு தருவதில் மோசடி நடத்தப்பட்டிருந்தால், அதற்குப் பொறுப்பான அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் தேர்தல் ஆணையம் தயங்காது எனவும் அறிவிக்கப்பட்டு, அச்செய்தி ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையப் பிரதிநிதிகள், தமிழ்நாட்டில் சில பகுதிகளில் விசாரணையை மேற்கொண்டனர். தொகுதி வாரியாகச் சென்று விசாரணை நடத்தினர். அதிகாரிகள்

ஆங்கிலத்தில் கேட்ட கேள்விகளைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லவும், வாக்காளர் எனப்படுவோர் சொன்ன பதில்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அதிகாரிகளுக்கு விளக்கவும், தமிழகத் தேர்தல் ஆணையத்தைச் சேர்ந்த இணைச் செயலாளர் தகுதியில் உள்ள அதிகாரியும், அரசு அலுவலருமான ஒரு அம்மையார் அந்த நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கலந்து கொண்டிருந்தார் என்பதும், கண்ணுடையார் காதுடையார் அனைவருக்கும் தெரியும். ஆனால் ஒரு அமைச்சர் அறிக்கை விடுகிறார்! அதிகாரிகள் ஆங்கிலத்தில் கேட்டது, கிராமப்புறத்து தமிழ் மக்களுக்குப் புரியவில்லையென்று!

அத்துடன் விட்டார்களா? அடுத்தகட்டமாக, அரசியல் கட்சிகள் முறைகேடு நடத்தியிருந்தால், அதன் மீது தேர்தல் ஆணையம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக்கூடாது - அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும்,

உயர்நீதிமன்றத்தில் தடை ஆணை கோரி வழக்கும் தொடர்ந்தார்கள். ஆனால் உயர்நீதிமன்றம், அப்படியொரு தடை ஆணை வழங்கிட முடியாது என்று மறுத்துவிட்டது.

அந்த மறுப்புச் செய்திகூட, நமது மாநிலத்து ஏடுகள் சிலவற்றில் எவ்வளவு "மந்தகதி"யில் வெளி வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நெஞ்சு நெருப்பாகத்தான் தகிக்கிறது. என் செய்வது! பொறுமை கடலினும் பெரிது என்பது முதுமொழி ஆயிற்றே! அந்தக் கடலிலும் "சுனாமி" தோன்றினால்? இந்தக் கேள்விக்குப் பதில்தான் ஏது? நிவாரணம்கூட எளிதில் கிடைக்குமா?

"திருடர்களைப் பிடிக்க நடவடிக்கை எடுப்போம் - சட்டப்படித் தண்டிப்போம்" என்று காவல்துறை அதிகாரி (ஆம்! ஒரு கண்யமான கடமை வீரர்) கடுமையாக முழங்குவதைக் கேட்டு,

"அந்த முழக்கத்தை மறுப்பது மட்டுமல்லாமல், அப்படியெல்லாம் யார் மீதும் நடவடிக்கை எடுக்கக் கூடாது, அதற்கு இப்போதே தடை ஆணை விதிக்க வேண்டும்" என ஒருவன் நீதிமன்றத்தை நாடினால்,

அந்த மனிதனைப் பற்றிய சந்தேகம், மக்களுக்கு நீங்கி, "ஓ; அவன்தான் இவன்!" என்று அந்த மக்கள் நிச்சயப்படுத்திக் கொண்டு தெளிவடைந்து விடுவார்கள் அல்லவா?

"தேர்தல் ஆணையம் தனித்தன்மை பெற்ற அமைப்பு - நாங்கள் யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் அடி பணியமாட்டோம். வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி முடிந்த பிறகு, எங்களின் நோ்மையை அறிந்து கொள்ளமுடியும்"

இவ்வாறு தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. நரேஷ் குப்தா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் நேற்றைய தினம்கூட ஒரு பேட்டியில் கூறியிருப்பதை நினைவிற்கொண்டால்,

தமிழகத்தின் இன்றைய ஆட்சியினர் ஜனநாயகத்தைச் சாகடிக்கத் துடித்து, அதற்கு நீதி தேவதையின் அனுமதியையே கோருவது எவ்வளவு கொடுமை என்பது புரிகிறதல்லவா?

அன்புள்ள,

மு.க.

11-6-2005

3148. தேர்தல் ஆணையமும் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பும்!

உடன்பிறப்பே,

இந்தியாவின் சுதந்திரத் தன்மைக்கோ,

இந்தியாவின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புக்கோ,

இந்தியாவின் ஜனநாயகத்திற்கோ

எந்த ஊறும் ஏற்பட அனுமதிப்பது, மாநில சுயாட்சிக் கோரிக்கையின் விளைவாக அமையக் கூடாது என்பதில் தி.முக. வுக்கு அழுத்தமான நம்பிக்கையுண்டு.

1974ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில், முதல் அமைச்சராக இருந்த என்னால் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மான விவாதத்தின் மீது பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்கள், மாநில சுயாட்சி, தி.மு.க. கேட்கிற காரணத்தால் அந்தக் கொள்கையை ஆதரித்திட முடியாது என்று குறிப்பிட்டது சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்தில் பதிவாகியிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், மாநில சுயாட்சிக் கொள்கையில் தி.முக. தொடர்ந்து உறுதியாக இருப்பதற்குத் தலையாய சான்று ஒன்றை மட்டும் கூறினால் போதுமென்று கருதுகிறேன்.

2001 ஜூன் திங்களில், அ.தி.மு.க. மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில நாட்களில், நள்ளிரவில் என் படுக்கையறையில் நுழைந்து, என் குடும்பத்தாரை அவமானப்படுத்தி, என்னைக் கைது செய்தபோது அதுபற்றிக் கேட்க வந்த மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், டி.ஆர். பாலு இருவரும் போலீசாரால் தாக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். நானும் போலீசாரின் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு, சிறையில் பூட்டப்பட்டேன். ஐந்து

நாட்களுக்குப் பிறகு, நான் விடுவிக்கப்பட்ட போது பெரியதோர் பத்திரிகையாளர் கூட்டத்தில் (4-7-2001) என்னைக் கேட்டார்கள்.

இவ்வளவு கொடுமையான நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, இந்த மாநில அரசைக் கலைத்திட, 356வது பிரிவை பயன்படுத்த வேண்டுமென்று - மத்திய அரசை வலியுறுத்துவீர்களா என்பது கேள்வி.

எந்தச் சூழ்நிலையிலும் மாநில அரசைக் கலைக்க, அரசியல் சட்ட 356வது பிரிவைப் பயன்படுத்துமாறு வலியுறுத்த மாட்டோம் - 356ஐப் பயன்படுத்தி மாநில அரசுகளைக் கலைக்கக் கூடாது என்பது தி.மு.க. வின் கொள்கை! இதுதான் நான் அளித்த பதில்.

சொல்லப் போனால், அப்போது தி.மு.க.வும் அங்கம் வகித்த மத்திய அரசுதான் திரு. வாஜ்பய் அவர்கள் தலைமையில் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பிரிவு 356ஐ வலியுறுத்தச் சொல்லி எனக்கு எவ்வளவோ பரிந்துரைகள் வந்தும்கூட, அவற்றை நான் ஏற்கவில்லை.

அந்தக் கொள்கைப் பின்னணியிலிருந்து எப்போதும் வெளிவந்து விடாமல் இருக்கும் தி.மு.க. தலைவனாகிய நான், இப்போது அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெறும் ஜனநாயக விரோதச் செயல்களைக் கண்டு கொதிப்படையாமல் இருக்க முடியவில்லை.

கண்ணுக்குத் தெரிந்து நடைபெறும் அநியாயங்கள், யார் எங்களைக் கேட்பது என்ற ஆணவத்தால் விளைவிக்கப்படும் அக்கிரமங்கள், சட்டத்துக்கு விரோதமாக, ஜனநாயகத்திற்கு விரோதமாக எதையும் செய்வோம் என்ற எதேச்சாதிகார மூர்க்கத்தனம், வரப்போகிற பொதுத் தேர்தலுக்காக வாக்காளர்களை வசப்படுத்த மாய்மாலங்கள் செய்தாலும் - இவற்றையெல்லாம் மக்கள், கோரிக்கைகளாக வைத்த போது அவர்கள்மீது ஏவப்பட்ட அடக்குமுறை - இவற்றை இப்போது மக்கள் மறந்து விடுவார்கள் என்ற குருட்டு நம்பிக்கை, இன்றைய ஆட்சியாளர்க்கு ஒருபுறமிருந்தாலும், எதற்கும் பாதுகாப்பாக ஜனநாயகத்தின் அடிவேர்களை முதலிலேயே அறுத்து விடுவது என்று திட்டமிட்டு,அந்தச் சதி வேலைக்குத் தோதாக அமைச்சர்களை ஏவியும் - ஒத்துழைக்கச் சம்மதித்த அதிகாரிகளைப் பயன்படுத்தியும் - பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலிலேயே புழுதி மாயம் செய்யத் தொடங்கினர்!

சுனாமி பாதிப்புக்கு உள்ளான பகுதிகளைத் தவிர்த்து, எஞ்சிய 165 சட்டமன்ற தொகுதிகளில் மட்டும் அ.தி.மு.க. அமைச்சர்கள், அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கையெழுத்திட்டு வாக்காளர் பட்டியலை அதிகாரிகளிடம் ஒட்டுமொத்தமாகக் கொடுத்த வகையில், ஒரே நாளில் 13 லட்சம் வாக்காளர்களுக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்ட தகவல் அறிந்து, அந்த மோசடியைச் சுட்டிக் காட்டிப் பரிகாரம் தேட, நான் விடுத்த வேண்டுகோள் அறிக்கையைத் தொடர்ந்து, அ.தி.மு.க. அல்லாத அனைத்துக் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் முறையிடவே - தேர்தல் ஆணையம் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, ஆளுங்கட்சி சார்பாக ஏராளமான போலி வாக்காளர்களின் விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டுள்ள விபரீதம் வெளிச்சத் துக்கு வந்துவிட்டது.

எனவே, தேர்தல் ஆணையம் முதலில் அறிவித்த எச்சரிக்கையின்படி, குற்றமிழைத்தவர்கள் யாராயினும் அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தயாரானது.

இது குறித்து இன்றைய சென்னை "தினமணி" (ஜூன் 13) தேதியிட்ட முதல் பக்கச் செய்தியில் வந்துள்ள சுருக்கமான விபரம் வருமாறு :-

> "சுனாமி பாதிக்காத 165 தொகுதிகளில் வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி நடந்தது. வாக்காளர் பட்டியலில் புதியவர்கள் பெயரைச் சேர்க்க கடந்த மாதம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. கடைசி நாளான மே 30ம் தேதி, சுமார் 13 லட்சம் பேர் கொண்ட விண்ணப்பம் அளித்தனர். இதில் சந்தேகம் இருப்பதாக எதிர்க் கட்சிகள் தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு புகார் அளித்தன. இப் புகாரை தேர்தல் ஆணைய அதிகாரிகள் விசாரித்தனர். அவர்கள் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தனர். விண்ணப்பங்கள் போலியானவை என்று தெரியவந்தால், அந்த விண்ணப்பத்தை அளித்த அரசியல் கட்சி நிர்வாகிமீது போலீசில் புகார் செய்யப்படும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. கட்சி நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும், விண்ணப்பதாரர் மீதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறி அ.தி.மு.க.

தேர்தல் குழு செயலாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான ஓ. பன்னீர்செல்வம் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். இது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு உயர்நீதி மன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்நிலையில், இப்பிரச்சினை குறித்து ஆராய, ஏழு மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைத் தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா திங்கள்கிழமை கூட்டியுள்ளார்."

இந்த நரேஷ் குப்தா, ஐ.ஏ.எஸ்., அவர்கள், தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி ஆவார்.

ஒரு மாநிலத் தேர்தல் அதிகாரி எப்படி நியமிக்கப்படுகிறார்?

மாநில அரசு, இரண்டு மூன்று அதிகாரிகள் பெயர்கள் கொண்ட ஒரு பட்டியலை டெல்லியில் உள்ள தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கும். தலைமை ஆணையம் அந்தப் பெயர்ப் பட்டியலில் இருந்து ஓர் அதிகாரியை நியமிக்கும். அப்படித் தமிழக அரசால் அனுப்பப்பட்ட பட்டியலில் இருந்துதான் தலைமை ஆணையம், திரு. நரேஷ் குப்தாவைத் தமிழகத் தேர்தல் அதிகாரியாக நியமித்துள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது.

அந்தத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா இரண்டு நாளைக்கு முன்பு அளித்த ஒரு பேட்டியில் -

> "தேர்தல் ஆணையம் தனித்தன்மை பெற்ற அமைப்பு - நாங்கள் யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் அடி பணியமாட்டோம். வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி முடிந்த பிறகு, எங்களின் நோ்மையை அறிந்து கொள்ள முடியும்"

என்று திட்டவட்டமாகவும், தெளிவாகவும் கூறியுள்ளார்.

ஆம்! இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தேர்தல் ஆணையம் அமைப்பு, அதன் அதிகார எல்லைகள் பற்றி, பகுதி 15இல் (ஓஏ) குறிக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களை ஒட்டிய பல்வேறு அதிகாரங்கள் 324, 325, 326, 327, 328, 329 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 324வது பிரிவில் குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர் - நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்கள்

> தேர்தலை ஒட்டிய, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, மேற்பார்வை, மற்றும் தேர்தலை ஒழுங்குப்படுத்தும் அனைத்து அதிகாரங்களும் தேர்தல் ஆணையத்திற்கு உள்ளது. தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்துவதற்குத் தேவையான அரசு அலுவலர்களைத் தரும் பொறுப்பும், கடமையும் மத்திய மாநில அரசுகளுக்கு உள்ளது என்பது பிரிவு 324 துணைப் பிரிவு 6இல் சுட்டப்பட்டுள்ளது. சுருக்கமாக தேர்தல் ஆணையம், தனித்தன்மை வாய்ந்த அமைப்பாகவும், யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் அடிபணியாத அமைப்பாகவும் செயல்படக் கூடியது. செயல்பட வேண்டியது.

ஆனால் இங்கே 'அம்மா' ஆட்சியில் அரசியல் சட்டமாவது, "வெங்காய"மாவது! எல்லாம் "சும்மா" என்று ஆகிவிட்ட பிறகு, அநீதிக்குத் துணை போய் அதற்கான நடவடிக்கைக்கு ஆளான பிறகுகூட, "அம்மா" ஆணையிட்டால் அவமானகரமான தண்டனைகளைக்கூட, தூசி தட்டுவது போலத் தட்டி விடலாம் என்ற துணிச்சல், தவறு செய்யும் அதிகாரிகளுக்கு அல்லது தவறுக்குத் துணை போகும் அதிகாரிகளுக்கு வந்து விட்டால், பின்னர் நீதி, நிர்வாகம், ஜனநாயகம் எல்லாமே பாழ்! பாழ்! பாழாய்த்தானே போகும்!

உதாரணம் தேவையானால், ஒன்றா இரண்டா? எத்தனையோ உண்டு!

> சாத்தான்குளத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராகவும் - அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாகவும் வெளிப்படையாகவே செயல்பட்ட ஒரு மாவட்டப் போலீஸ் அதிகாரி, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டார்.
>
> ஆனால் அவரை 'அம்மா' ஆட்சி, என்ன செய்தது? காஞ்சிபுரம், விழுப்புரம் என்று மாவட்டங்களில் காவல் துறைக் கண்காணிப்பாளராகப் பணியில் அமர்த்தியது.
>
> அதேபோல, சென்னை மாநகரில் சைதாப் பேட்டை இடைத் தேர்தலில், டெபுடி கமிஷனர் நிலையில்

உள்ள போலீஸ் அதிகாரிமீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வேறு பகுதிக்கு மாற்றியது - "அம்மா"வுக்கு தேர்தல் ஆணையத்தின்மீது ஏற்பட்ட கோபத்தில், அந்த அதிகாரியை மீண்டும் பழைய இடத்திலேயே பணியில் அமர்த்தி விட்டார்.

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் கிழக்குப் பகுதி கடலோர பாதுகாப்புப் படையில் போலீஸ் சூப்பிரெண்டாகப் பணியாற்றிய ஒரு அதிகாரி, அவருடைய சொந்த மாவட்டமான திருநெல்வேலிக்குச் சென்று தேர்தல் பணியாற்றினார் என்பதற்காக, தேர்தல் ஆணையம் உடனடியாக விசாரணை நடத்தி அவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்தது.

ஆனால் தேர்தல் முடிவுக்குப் பிறகு, அந்த அதிகாரி மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளராக முக்கியமான இடங்களில் பணி நியமனம் ஜெயலலிதா ஆட்சியினால் செய்யப்பட்டார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்றிய ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தேர்தல் நேரத்தில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக நடந்து கொண்டார் என்பதற்காக இட மாற்றம் செய்யப்பட்டார். ஆனால் தேர்தல் முடிந்த பிறகு, அதே அதிகாரி மீண்டும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராக ஜெயலலிதாவினால் நியமிக்கப்பட்டார்.

அது போலவே தேர்தல், நேரத்தில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயல்பட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றியவரும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அங்கிருந்து மாற்றப்பட்டார். ஆனால் ஜெயலலிதா அரசில் தேர்தலுக்குப் பிறகு, அதைவிட நல்ல பணியிலே அந்த அதிகாரி நியமிக்கப்பட்டார்.

சென்னையில் மயிலைப் பகுதி காவல் துறைத் துணை ஆணையரும், மயிலைப் பகுதி உதவி

ஆணையரும் தேர்தல் நேரத்தில் ஆளுங்கட்சிக்கு மிகவும் அனுசரணையாக நடந்து கொண்டார்கள். (நான் கைது செய்யப்பட்ட போது என்னை முரட்டுத்தனமாக நடத்திய முக்கிய அதிகாரிகளில் இவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு) இவர்களும் தேர்தல் ஆணையத்தினால் அந்த இடத்திலிருந்து மாற்றப்பட்டார்கள். ஆனால் தேர்தலுக்குப் பிறகு, இவர்கள் இருவரும் தாங்கள் இருந்த பழைய இடத்திற்கே ஜெயலலிதாவினால் நியமிக்கப்பட்டார்கள்.

இப்படித் தனது நிர்வாகத்திற்கு மேலானதாகவோ - அல்லது நிகரானதாகவோ - எந்தவொரு சுதந்திரமான தன்னாட்சி அமைப்பாக இருந்தாலும் - அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அதன் தலையிலேறி மிதிப்பதில் "அம்மா" வுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி!

அந்தத் தொடர்கதையின் அடுத்த காண்டமாகத்தான் இப்போதும் தமிழக ஆளுங்கட்சியான "அம்மா தி.மு.க." வுக்கும் தேர்தல் ஆணையத்துக்கு மிடையே தகராறு மூண்டு, நீதிமன்றக் காண்டமும் - இடையே யுத்த காண்டமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பத்து வயது பாப்பாக்களையும்,

வீட்டு விலாசமே இல்லாதவர்களையும்,

பெற்றோர், கணவர் பெயர் குறிப்பிடாதவர்களையும் -

வாக்காளர்கள் என்று கூறி, மொத்தமாக விண்ணப்ப மோசடி செய்த அதிகாரிகள் சிலர் மீதும் - அதற்குத் துணை புரிந்த மாவட்ட அ.தி.மு.க. செயலாளர்கள் போன்ற ஒரு சில கலெக்டர்கள் மீதும் - அமைச்சர்கள் மீதும், அ.தி.மு.க. நிர்வாகிகள் மீதும் விளக்கம் கேட்டு, விசாரித்து நடவடிக்கை எடுக்கத் தலைமைத் தேர்தல் ஆணையமோ, தமிழகத் தேர்தல் அதிகாரியோ முற்பட்டால், அந்த விசாரணைக்கு ஒத்துழைக்க அந்த அதிகாரிகள் மறுக்கிறார்கள் என்றால் அது யாருடைய தைரியத்தில்? அல்லது யாருடைய தூண்டுதலில்?

தேர்தல் ஆணையத்தினால் தண்டிக்கப்பட்டோ, அல்லது இட மாற்றம் செய்யப்பட்டோ நடவடிக்கைக்கு உள்ளானால்

மீண்டும் இந்த ஆட்சியினரால் தாங்கள் காப்பாற்றப்பட்டு விடுவோம் என்கின்ற தைரியம் தானே அந்த அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தை மதிக்காத தன்மையில் செயல்படக் காரணம்!

தேர்தலுக்கு முன்பே வாக்காளர் சேர்ப்பதிலேயே இந்த நிலை என்றால், நாளைக்கு தேர்தல் நடைபெறும்போது, தேர்தல் ஆணையத்து பிரதிநிதிகளோ, அல்லது அதிகாரிகளோ - போலீசாருக்கு இடும் உத்திரவுகள் அல்லது தாக்கீதுகள் நிறைவேற்றப்படும் என்பதற்கு என்ன நிச்சயம் இருக்கிறது.

"போய்யா! போ! அம்மாவை விட நீ பெரிய ஆளா?" என்று கூறிவிட்டு, ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு அதிகாரிகளோ, போலீசாரோ - ஒத்துழைப்புக் கொடுத்தால்; அதை எதிர்த்து ஆணையம் நடவடிக்கை எடுத்தால் - அதை ஏற்கவோ, கேட்கவோ அவர்கள் மறுத்தால் - அப்போது தேர்தல் ஆணையங்களின் "சுதந்திரம்" கேலிக்குரியதாகத்தானே ஆகும்!

எனவே தேர்தல் ஆணையமும் செயல்பட முடியாமல், சோளக் கொல்லைப் பொம்மையின் காவல் போல 'அம்மா'வின் ஆட்சியில் ஆக்கப்படுமேயானால், அந்தப் பொம்மையின் மீதே ஏறிக் கொண்டு பறவைகள், பொம்மையுருவாகிடப் பயன்பட்ட புல்லை உருவி எறிவது போலத்தானே, இந்த ஆணையங்களுக்கும் அவல நிலை ஏற்படும்!

எனவே இந்த ஆட்சியை வைத்துக் கொண்டு -

நியாயமான -

நேர்மையான -

சுதந்திரமான -

ஜனநாயகம் பட்டுப் போகாத -

ஒரு பொதுத் தேர்தலை நடத்த முடியுமா?

என்ற சந்தேகம் மக்களாட்சிக் கொள்கையில் மதிப்பு வைத்துள்ள எல்லோருக்கும் ஏற்படவே செய்யும்.

அந்தச் சந்தேகத்தைப் போக்கும் வகையில், தலைமைத் தேர்தல் ஆணையம் தகுந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் இன்று ஆட்சி புரிவோர், கடந்த காலத்தில் தேர்தல்களை நடத்திய விதம் -

அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திய விதம் -

அதிகாரிகள் பலரை அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்களாக ஆக்கிக் கொண்டு புரிந்த சர்வாதிகார சேட்டை -

அனைத்தையும், மீண்டும் ஒரு முறை நினைவிற் கொண்டு புரட்டிப் பார்த்து - எச்சரிக்கையுடனும் - எஃகு போன்ற உறுதியுடனும் - செயல்படத் தேர்தல் ஆணையம் முன்வருமா?

இதுவே இன்றையதினம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு!

அன்புள்ள

மு.க.

14-6-2005

3149. கழகத்துக்குப் பிறகே நமக்கு எல்லாம்!

உடன்பிறப்பே,

உணர்ச்சி கொப்பளிக்கக் கூட்டங்களில் உரையாற்றக்கூடிய என் தம்பிகளில் ஒருவரான துரைமுருகன், எழுத்தோவியம் தீட்டினாலும் அது பாரீஸ் நகரத்து பாஸ்டில் (Bastille) சிறையுடைப்பு முழக்கத்தைப்போல ஆவேசமாகவே இருக்கும் என்பதையும், நமது விழிகளில் சோகப் பெரு மழையைக் கொட்ட வைக்கும் "சுனாமி"த் தாக்குதல் போலிருக்கும் என்பதையும் நான் அனுபவத்தால் உணர்ந்திருக்கிறேன். அதனை மெய்ப்பிப்பதற்குப் பிறிதோர் எடுத்துக்காட்டுதான் 16-6-2005 வெளிவந்துள்ள சென்னை முரசொலியில் "நெஞ்சில் குமுறல் - முகத்தில் சோகம் - ஆனாலும் அதற்கு ஆறுதல் கழகப் பணி" என்ற தலைப்பில் துரைமுருகன் தீட்டியுள்ள கட்டுரையாகும்.

உள்ளபடியே சொல்லுகிறேன்! உடைப்பெடுத்த இரண்டு குளங்களை விழிகளில் ஏந்திக் கொண்டு தான் அதைப் படித்து முடிக்க என்னால் முடிந்தது. என் மூத்த சகோதரி பெரியநாயகி அம்மாள், தனது அருமைச் செல்வன் இயக்குநர் அமிர்தம், பேரன் பேத்திகள், கொள்ளுப் பேத்திகள், மருமகள்களை யெல்லாம் விட்டுப் பிரிந்தது மட்டுமல்ல! குழந்தைப் பருவம் முதல் தூக்கி வளர்த்து என்னை ஆளாக்கி இந்தப் பெருங் குடும்பத்தைத் தழைக்க வைத்து விட்டு, 94 வயது வரை வாழ்ந்து தனது முழு வாழ்வை முடித்துக்கொண்டு போய்விட்டதை, "வயது முதிர்ந்து தானே போனார்" என்று ஆறுதலை வரவழைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு என்னை வாட்டுகிறது துயரம் என்றாலும் கூட, கொலையாளிகளின் கண்ணில்பட்டு விடாமலும், குரலைக் கேட்டு அவர்கள் தெரிந்து கொள்ளாமலுமிருக்க, அழும் குழந்தையின் வாயை இறுகப் பொத்திக் கொண்டு இருளில் ஒளிந்திருக்கும் தாயைப்போல, இந்தக் கழகத்தின் பணிகள் தொடர்ச்சி கெடாமலும், தொய்வு ஏற்படாமலும் நடப்பதற்காக

நானும் என் சோக வெள்ளத்துக்கு அணை போட்டுத் தடுத்துக் கொண்டிருக்கிறேன்.

அதைத்தான் தம்பி துரைமுருகன் அந்தக் கட்டுரையில் வேறு வார்த்தைகளில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :-

"நெஞ்சில் குமுறல் - முகத்தில் சோகம், ஆனாலும், அதற்கு ஆறுதல் கழகப் பணி என்று அண்ணா அறிவாலயத்தில் வந்து உடனடியாக உட்கார்ந்து விட்ட தலைவரைப் பார்த்து நான் வியப்பதா! புகழ்வதா! என்றே புரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. தலைவர் கலைஞரின் இந்தச் செயல்பாட்டுக்குப் பொருள் என்னவென்றால், என் வழியில் தொடருகின்ற உடன்பிறப்பே! கழகப் பணி ஆற்ற வந்திட்ட அனைவருக்கும் "இதுதான் கற்க வேண்டிய பாடம்" என்று அவர் சொல்லாமற் சொல்வது போலிருக்கிறது."

என் வாழ்க்கையில், எத்தனையோ வேதனைகள், சோகங்கள்! எனக்குத் தரு நிழலாகவும், தாய் போலவும் இருந்து என்னை வளர்த்து ஆளாக்கிய அந்தச் சகோதரியின் சவ அடக்கத்திற்கு 'சன் டி.வி. கேமரா' அனுப்பி வைக்கப்படாமல் எல்லா கேமராக்களுமே சென்னை, காஞ்சி, வேலூர் எனப் பல இடங்களுக்கு ஜூன் 15 அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அந்தப் பேரிழப்பை, அந்தப் பெருமாட்டிக்கு வழங்கப்பெற்ற பெருஞ்சிறப்பைப் பதிவு செய்யாமலே விடுபட்டு விட்டதே என்ற கவலை கூட எனக்குத் தூசாகத்தான் போய் விட்டது. காரணம், அந்தப் படப்பிடிப்புக் கருவிகள் கழகத்தின் சார்பில் நடைபெறும் ஒரு அறவழி ஆர்ப்பாட்டத்துக்குத்தானே பயன்பட்டுள்ளன என்பதால்!

இதைத்தான் தம்பி துரைமுருகன், முரசொலி கட்டுரையில்,

"துக்கத்தை மறப்பதற்குக்கூட எனக்கு மாமருந்து கழகம்தான் - என் குடும்பத்தில் ஏற்பட்ட நிகழ்வுக்காக கழகக் குடும்பத்தின் பணி பாதிக்கப்படக் கூடாது. என் வீடு - என் பிள்ளை - என் சுற்றம் அத்தனையும்விட கழகம் தான் எனக்குப் பெரிது எனக் கருதுவதே, நாம் கற்க வேண்டிய பாடம் என்று கலைஞர் சொல்லாமற் சொல்வதுபோல் இருக்கிறது."

என்று முடிவுரையாகக் கருத்துரை கூறியிருப்பதைப் படிக்கும்பொழுது, அன்றொரு நாள் அடக்குமுறைக்கு ஆளாகி, பாதுகாப்பு சட்டப்படி பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைபட்டிருந்த என்னைக் காண வந்த அறிஞர் அண்ணா அவர்கள், சிறையில் என்னைக் கண்ட பிறகு, அன்று மாலை நெல்லைத் திருநகரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியது வருமாறு:-

“நெஞ்சில் பூட்டி வைக்க முடியாத நிகழ்ச்சியொன்றை நினைவுபடுத்துகிறேன். நான் பாளையங்கோட்டை சிறையில் கருணாநிதியைப் பார்த்த போது, அவர் அண்ணா நலமா? அண்ணி சுகமா? வீட்டில் எல்லோரும் நலமா? கோபாலபுரம் போனீர்களா? குடும்பத்தைப் பார்த்தீர்களா? இல்லாளும் செல்வங்களும் நலமா? என்று கேட்பார் என்று எண்ணினேன். ஆனால், கருணாநிதி அதையெல்லாம் கேட்கவில்லை. அவர் கேட்ட முதல் கேள்வி, தர்மபுரி இடைத் தேர்தல் எப்படி இருக்கிறது? கழகம் வெற்றி பெற்று விடுமா என்பதுதான்!”

உடன்பிறப்பே,

கழகம்தான் எனக்குப் பெரிது! எல்லோருக்கும் கழகம் தான் அனைத்தையும் விடப் பெரிதாக இருக்க வேண்டும் என்ற நினைப்புடையவன் நான் என்பதற்கு இன்று துரைமுருகன் காட்டும் இந்த எடுத்துக்காட்டு எனக்குப் புதிதல்ல. என்னைப் பட்டை தீட்டி மெருகேற்றிய என் அண்ணன் அவர்களே மகிழ்ந்து புகழ்ந்து, பூரித்துப் புளகாங்கிதமடைந்து “என் தம்பி கருணாநிதி தனிமைச் சிறையில் அடைபட்டிருக்கும் பாளையங்கோட்டைதான் இனி எனக்கு யாத்திரை செய்ய வேண்டிய புனித பூமி!” என்று அதே நெல்லைக் கூட்டத்தில் கூறினாரே!

அதுதானே எனக்கு மட்டுமல்ல, என்னைப் பற்றி இன்று முரசொலியில் எழுதியுள்ள தம்பி துரைமுருகனைப் போன்று பொது வாழ்வில், குறிப்பாக கழகப் பாசறையில் இருப்போர் அனைவருக்கும் சூட்டப்படும் நிரந்தரமான மகுடமாகும்! அந்த மகுடத்தைச் சூட்டிக் கொள்ளும் தகுதி பெறுகிற அளவுக்குத்தானே என் உடன்பிறப்புகளின் மனம் பக்குவம் பெறவேண்டும்.

ஜூன் 15 சாலைப் பணியாளர்களின் துயரம் போக்கிடவும் -

வறட்சியால் வாடும் தமிழக மக்களின் வாட்டம் போக்கிட நியாய விலைக் கடை அரிசி கிலோ இரண்டு ரூபாய் விலைக்குக் கிடைத்திடவும் -

நமது தோழமைக் கட்சிகளின் கூட்டமைப்பின் அறவழி ஆர்ப்பாட்டம்.

அதற்கு முதல் நாள் (ஜூன் 14 மதியம்) பெரியக்காள் மறைந்து விட்டார்கள். பொருளாளர் வீராசாமி, தம்பி வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் என்னை இடையறாது வலியுறுத்தி, அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டத்தை ஓரிரு நாள் ஒத்தி வைக்கலாமென்று நெருக்கடி கொடுத்துப் பார்த்தார்கள். அதற்கு நான் இணங்கவில்லை.

ஜூன் 15 ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் எல்லா இடங் களிலும் நடைபெற வேண்டும் என்பதற்காகவே, கழக மாவட்டச் செயலாளர்கள் யாரும் ஜூன் 15 அன்று என் சகோதரியின் துக்கம் கேட்பதற்காகச் சென்னைக்கு வர வேண்டாமென்று தொலைபேசியில் கூறித் தடுத்தேன். அப்படியும் சிலர் 14ந்தேதி இரவே வந்து விட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

ஜூன் 15 அன்று காலையிலேயே சகோதரியாரின் எரியூட்டல் நிகழ்ச்சியை முடித்து விட்டு, தமிழகம் முழுதும் அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டங்கள் எப்படி நடைபெற்றன என்ற செய்தியை அண்ணா அறிவாலயத்திலிருந்தவாறு நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும், மற்ற முன்னணிச் செயல்வீரர்களும் சேகரித்துக் கொண்டிருந்தோம்.

சென்னையில் தம்பி மு.க. ஸ்டாலின் பெயர் ஆர்ப்பாட்டத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அவருக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்று பொருளாளர் என்னிடம் கூறினார். நான் என்ன சொல்வேன் என்பதை தெரிந்திருக்கும் ஸ்டாலின், அதுகுறித்து விவாதத்துக்கு இடமளிக்காமலே ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்ததைத் தொலைக்காட்சியிலும், பத்திரிகைப் புகைப்படங்களிலும் கண்டு உளம் பூரித்தேன்.

அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டத்தில் நமது தோழமைக் கட்சித் தலைவர்களும் - தொண்டர்களும் - முன்னணிச் செயல்வீரர்களும் - ஆங்காங்கு மாவட்டத் தலைநகர்களில் பல்லாயிரக்கணக்கில்

கலந்து கொண்டது கண்டு கவலைகளை மறந்தேன் - களிப்பு மிகக் கொண்டேன்.

கூட்டணியில், குழப்பத்தைக் கற்பனையாகவாவது உருவாக்கிடக் கனவு காணும் கயமைக் குணமுடையோரின் நினைப்பை நொறுக்கிடும் வண்ணம், அனைத்துக் கட்சிகளும் காட்டியுள்ள ஆர்வம் போற்றத்தக்கது - இன்னும் சொல்லப் போனால், கழகத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்திற்காகக் காட்டிய ஆர்வத்தைக் காட்டிலும் - அதிக ஆர்வம் காட்டினார்கள் தோழமைக் கட்சியினர் என்றால் அது மிகையாகாது!

கடுகளவு எனக்குக் குறையுண்டு! கழகச் செயல் வீரர்கள் கையில் இரு வண்ணக் கொடியேந்தி வருவது என்பது! அது என்ன அந்தக் கொடி, இரும்புத் தகடுபோல அவ்வளவு கனமா? இல்லையே!

இரும்பனைய உறுதியான உள்ளம் படைத்த என்னரும் உடன் பிறப்புகள், அதனை ஏந்திச் செல்வதால் கௌரவம் ஒன்றும் பாதிக்கப்பட்டு விடாதே! மேலும் உயரத்தானே செய்யும்.

இனியாவது அந்தக் கடுகளவு குறை நீக்கிட, கழக உடன்பிறப்புகளாகிய நீங்கள் அனைவரும் - திராவிட இனத்தின் கௌரவத்தை நிலை நாட்டிட - நம் கௌரவத்தைப் பின்னுக்குத் தள்ளி - கொடியேந்துவது சிறுமையல்ல என்பதுணர்ந்து செயல்பட முன் வருவோம்.

ஒன்று மறவாதீர் உடன்பிறப்புகளே!

கழகத்திற்குப் பிறகுதான்

நமக்கு எல்லாம்!

அன்புள்ள,

மு.க.

17-6-2005

3150. குடுகுடுப்பைகள் எங்கே?

உடன்பிறப்பே,

"குடு குடு குடு! நல்ல காலம் வரப்போகுது! வரப்போகுது! அம்மாவுக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது - அம்மாவுக்கு எதிராக அமைஞ்ச கூட்டணி, அய்யோன்னு போகப் போவுது! போகப் போவுது!"

குடுகுடுப்பை ஒலியுடன், குரலை உயர்த்தி பலன் சொல்லிக் கொண்டுபோன குடுகுடுப்பைக்காரனின் இந்த அரசியல் ஆரூடங்கள் அடுக்கடுக்காக அலை மோதிக் கொண்டிருந்தன.

ஏதோ உளறிக்கொண்டு போகிறான் என்று நினைத்து, தூங்கிக் கொண்டிருந்த 'நல்லவன்' கண் விழித்துப் பார்த்துவிட்டு, மீண்டும் கண்மூடித் தூங்கத் தொடங்கினான். அந்த நல்லவன் எப்போதுமே விடியற்காலையில் குடுகுடுப்பாண்டி கூறும் சோதிடங்களுக்கோ, எச்சரிக்கைகளுக்கோ, எதிர்காலம் பற்றிக் கூறும் பலன்களுக்கோ செவி சாய்ப்பதில்லை.

விடிவதற்கு முன்பு அவனை எழுப்பிவிட்டதற்கு குடுகுடுப்பாண்டி பயன்பட்டானே என்கிற அளவில் அவனைப் பாராட்டுவானே தவிர, அதை விடுத்து அவனை 'இந்திரன்', 'சந்திரன்' என்றோ, அவன் சொல்பவை அட்டியின்றி நடக்குமென்றோ அப்படியே நம்பிவிடுவதில்லை.

ஒருநாள் வைகறையில் குடுகுடுப்பைச் சப்தம் ஓயாமல் கேட்டதுடன், ஆரூட சோதிடங்களும் அளவுக்கு மீறியவைகளாக இருந்தபோது, அந்தக் குடுகுடுப்பைக்காரனை அவன் பலன் சொல்லும் பாட்டை நிறுத்திவிட்டு, பக்கத்துத் தெருவுக்கு போகுமாறு கூறலாமென எண்ணி, நல்லவன், வீட்டுக்கு வெளியே வந்தான்.

அப்படி அவன் வந்து பார்க்கும்போதுதான் அவன் குடுகுடுப்பாண்டி அல்ல! மூளை குழம்பிய ஒரு பைத்தியக்காரன் என்பது புரிந்தது.

இவன் ஏன் சம்பந்தமில்லாமல் குடுகுடுப்பை சோதிடத்தில் அரசியலைக் கலந்து, "கூட்டணி உடையப் போகிறது" என்று கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறான், என்பதில் கவனம் செலுத்தினான். **உண்மை வெளிப்பட்டது.**

நல்லவன் கொண்ட ஆர்வத்துக்கு ஆதரவாக - குடுகுடுப்பாண்டியின் சோதிடம், இணைந்து வராத காரணம், மிக முக்கியமானது - அந்த நல்லவன் பகுத்தறிவுவாதி என்பதுதான்!

ஆனால் எதிர்வீட்டில் வாழ்ந்த வல்லடி வல்லவனோ, அந்த ஊர் நாட்டாண்மை தன் கையிலிருக்கிறது என்ற தைரியத்தில் குடுகுடுப்பாண்டியை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி வந்தான்.

அந்த வல்லவனுக்கு நல்லவன் மீது கோபம்! குடுகுடுப்பாண்டி சொல்வதை, நம்பிட மறுக்கிறானே யென்று!

அவன் சொல்வது என்னவென்று பார்ப்பதற்காகவாவது, அவன் அசல் குடுகுடுப்பாண்டியாக இருந்தால் பரவாயில்லை என நினைத்து நல்லவன், அவனிடம் நெருங்குவதில்லையென்று முடிவு செய்து கொண்டு, தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால், நாட்டாண்மை புரியும் வல்லவனோ, நல்லவனை விடுவதாயில்லை. வீண் வம்புக்கு இழுத்துக் கொண்டிருந்தான். அவன் குறிக்கோள் கூட்டணியை உடைப்பதுதானே! அதற்காகப் பெரும் பாடுபட்டு குடுகுடுப்பாண்டிக்கு குவியல் குவியல்களாகத் துணிமணிகள் மற்றும் பணங்காசு கொடுத்து - தன் பகைவனைப் பற்றி அவனே சொல்லாமல், தனக்கு வேண்டியவரை விட்டுச் சொல்ல வைக்கும் 'வீராதி வீரனாக' விளங்கிக் கொண்டிருந்தான்.

உச்சகட்ட சோதிடம் என்ற அளவில், ஒருநாள் அதே பைத்தியக்கார குடுகுடுப்பாண்டியை விட்டு -

கூட்டணி உடைந்து விட்டது -

அய்யோன்னு போய்விட்டது -

என்று குடுகுடுப்பை அடிக்கச் சொன்னான். அந்தப் பைத்தியமும் அப்படியே குடுகுடுப்பை அடித்து ஆரூடமும் சொன்னது - ஆனால் என்ன ஆச்சரியம்! அன்றைக்கே தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை எல்லாவற்றிலும் வந்த செய்தி, கூட்டணி மேலும் மேலும் வலுப்பட்டு வருகிறது என்பதுதான் -

இந்தச் செய்தி செவியில் பாய்ந்து, சிந்தையில் கனிந்து, பத்திரிகையிலும் பழச்சுவைபோல் இனிப்பதை அதுவும் "மாம்பழச்" சுவையாக இனிப்பதை உணர்ந்தான் - அந்த நல்லவன் உவகை மிகக் கொண்டான் -

என்ன செய்தி அது?

22.6.2005 அன்று பாட்டாளி மக்கள் கட்சி பொதுக்குழு கூடியது - கோ.க. மணி அவர்களையே மீண்டும் மணியான தலைவராக தேர்ந்தெடுத்தது - அக்கட்சியின் நிறுவனத் தலைவர் அய்யா மருத்துவர் இராமதாசு அவர்கள் முன்னிலையில்,

தி.மு.க. கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்திடுவது, அ.தி.மு.க.வை வீழ்த்துவது, கூட்டணிக்குள் குழப்பம், விரிசல் என்று பரப்பப்படும் வதந்திகளுக்கு கண்டனம் தெரிவிப்பது;

என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

உடன்பிறப்பே!

குடுகுடுப்பைகளின் பைத்தியக்கார உளறல்கள் போன இடம் தெரியவில்லை. எப்படி இந்தச் சிறுகதை?

அன்புள்ள,

மு.க.

24-6-2005

3151. இதுவா அரிஸ்டாட்டில் அவதாரம்?

உடன்பிறப்பே,

திருநெல்வேலியில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வ.உ.சி. மணிமண்டபத்தை முதலமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்துள்ளார். அந்தச் சிலை திறப்புவிழா, அரசுவிழா என்ற போதிலும், அதிலும் ஜெயலலிதா வழக்கம்போல தன் வசை புராணத்தை நிறுத்தவில்லை. இந்த முறை அந்த வசை புராணத்தைக் குட்டிக் கதை ஒன்றின் மூலமாக கூறி, அதனை தமிழ்நாட்டின் ஏடுகள் எல்லாம் பெரிதாக வெளியிட்டு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றன.

அந்தக் கதையின் சுருக்கம், ஜெயலலிதா தன்னை கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலுடன் ஒப்பிட்டுக் கொண்டிருப்பதுதான். பெரியவர் ஒருவர் அரிஸ்டாட்டிலை நாடு கடத்த வேண்டுமென்று விரும்பியதாகவும், காரணம் கேட்டபோது, அரிஸ்டாட்டிலை அனைவரும் புகழ்கிறார்கள், அதனைக் கேட்கத் தனக்கு பொறாமையாக இருக்கிறது, ஆகவே அவரை நாடு கடத்த வேண்டும் என்று கூறியதாகவும் தெரிவித்து, அரிஸ்டாட்டிலை அனைவரும் புகழ்வதைப் பார்த்து அந்தப் பெரியவர் பொறாமைப்பட்டதைப்போல, தமிழ்நாட்டிலும் ஜெயலலிதாவை அனைவரும் புகழ்வதைக் கண்டு பொறாமைப்படும் மனிதர்கள் உள்ளனர் என்றும், அவர்கள் எல்லாம் அசூயையின் வடிவமாக விளங்கும் பொல்லாத மனிதர்கள் என்றும் ஜெயலலிதா சாடியிருக்கிறார்.

அரிஸ்டாட்டிலின் வாழ்க்கை குறிப்பினைப் படித்தால், அவர் கி.மு. 384இல் பிறந்து, அவர் இளமையாக இருந்தபோது அவரது தந்தை மறைந்து விட்டதால், அவரது தந்தைவழி உறவினர் பாதுகாப்பில் வளர்ந்து, கி.மு. 367இல் பிளேட்டோவின் அகாடமிக்கு அனுப்பப்பட்டு, அங்கே 17 ஆண்டுகள் பிளேட்டோவிடம் முக்கிய மாணவராக இருந்து பயின்றிருக்கிறார். ஆனால் இருவருக்கும்

இடையே கருத்துகளிலும், கொள்கைகளிலும் வேறுபாடுகள் உண்டு. பல நூற்றாண்டுகளாக மேனாடுகளில் பிளேட்டோவை விட, அவரது மாணவரான அரிஸ்டாட்டிலின் நூல்கள்தான் அதிகம் பிரபலமாயிருந்தன. பிளேட்டோ கற்பனையிற் சிறந்த மனித சுபாவத்திற்கு மேலான நடைமுறையில், ஒரு இலட்சிய அரசைப் பற்றி எழுதிப் போனார். அரிஸ்டாட்டில் மனிதர்களுடைய சக்திக்கேற்ற, நடைமுறையில் சாதிக்க முடியும் படியான ஒரு அரசைப் பற்றிப் பேசுகிறார். "அரசியல் நூலின் தந்தை" என்று இன்றும் அரிஸ்டாட்டில் அழைக்கப்படுகிறார். அரிஸ்டாட்டிலின் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட "அரசியல்" என்ற நூல் ஆங்கிலத்தில் "பாலிடிக்ஸ்" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கி.மு. 325இல் மாவீரன் அலெக்சாண்டர் இறந்த பிறகு, ஏதென்ஸில் 'மாசிடோனியன்' இனத்தவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி மூண்டது. அரிஸ்டாட்டில், மாசிடோனியன் உறவு முறையை வெகு காலமாக கொண்டிருந்ததினால், தனக்கெதிரான அபாயத்தை உணர்ந்து, ஏதென்ஸிலிருந்து வெளியேறி தனது தாயின் பண்ணைக்குச் சென்று அங்கே ஓராண்டு வாழ்ந்த பிறகு, தனது 62வது வயதில் வயிற்றுக் கோளாறு காரணமாக இறந்து விடுகிறார். அவர் ஏதென்ஸ் நகரத்தை விட்டு வெளியேறியபோது, "எத்தீனியர்கள் இரண்டாம் முறை ஒரே குற்றத்தைச் செய்யக் கூடாது என்பதற்காக நான் வெளியேறுகிறேன்" என்று அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. எத்தீனியர்கள் சாக்ரடீஸை கொன்றதை அவர் முதலாவது குற்றமாக கருதுகிறார்.

அரிஸ்டாட்டில், "மக்களைத் தண்டிப்பதற்காக மட்டும் அரசாங்கம் இருக்கக் கூடாது. அரசாங்கமும் சட்டத்துக்கு உட்பட்டது என்ற காரணத்தால், சட்டதிட்டங்களால் அமைக்கப்பட்ட அரசாங்கமே மன்னராட்சிக்கு மேலானது, எனவே அரசாங்கம் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

ஆனால், அரிஸ்டாட்டிலுடன் தன்னை ஒப்பிட்டுக் கொள்ளும் ஜெயலலிதா, சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கிறாரா? அதற்கு விடைகாண ஒரே ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

வாக்காளர்கள் சேர்ப்பில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. எப்படி நடந்து கொள்கிறது? சென்னை உயர்நீதிமன்றத்தில் அ.தி.மு.க.

சார்பில் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தொடுத்துள்ள வழக்கில், ஒட்டுமொத்த வாக்காளர்கள் சேர்ப்பில் தரப்பட்டுள்ள தவறான விவரங்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், தனிப்பட்ட அந்த வாக்காளர் மீதுதான் எடுக்கவேண்டுமே தவிர, அதனை சேர்த்துக் கொடுத்த தங்கள் கட்சியினர் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும், தேர்தல் ஆணையத்தின் சார்பில் தவறு செய்த கட்சியினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள ஆணைக்குத் தடையாணை பிறப்பிக்க வேண்டு மென்றும் கேட்டிருக்கிறார். அதாவது, சுதந்திரமான தேர்தல் ஆணையம் பிறப்பித்த ஆணையை எதிர்த்தே நீதி மன்றத்தில் மனு செய்திருக்கிறார். இதுதான் சட்டத்திற்கு உட்பட்டு நடந்துகொள்ளும் போக்கா? அரிஸ்டாட்டிலின் அவதார வழியா?

இந்த வழக்கில், நேற்றையதினம் சென்னை உயர்நீதி மன்றத்தில், தேர்தல் அதிகாரி ஆணையத்தின் சார்பில் தாக்கல் செய்துள்ள மனுவிலே என்ன கூறியிருக்கிறார்?

“ஒட்டுமொத்தமாக விண்ணப்பங்களோ, அல்லது ஆட்சேபணைகளோ சமர்ப்பிக்கப்பட்டால், அதை அனுப்புபவர்கள் அதோடு சேர்த்து ஒரு கடிதத்தையும் அனுப்ப வேண்டும். அதில் விண்ணப்பதாரர்கள் அளிக்கும் ஆதாரங்கள் பொய்யானதாக இருந்தால் மக்கள் பிரதி நிதித்துவ சட்டப் பிரிவு 31இன் கீழான நட வடிக்கை என்ன என்பது தனக்குத் தெரியும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.”

மேலும், எதிர்க்கட்சிகள் எழுப்பிய பிரச்சினைகளையும், வைத்த கோரிக்கைகளையும் பரிசீலித்து, தேர்தல் ஆணையத்தின் சார்பில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் பல மாவட்டங்களுக்குச் சென்று பரிசோதித்ததில் வாக்காளர் சேர்ப்பு பட்டியல்களில் விண்ணப்பதாரர் கையெழுத்தே இல்லை என்றும், சிலவற்றில் வேறொருவர் கையெழுத்திட்டிருக்கிறார் என்றும், பிறந்த தேதி, வயது குறிப்பிடவில்லை என்றும், முகவரி விவரங்கள் தரப்படவில்லை என்றும், 18 வயது ஆகாதவர்கள் எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், ஆட்சேபணை தெரிவிப்பவர் பெயர் இல்லையென்றும், அவரது கையெழுத்தும் இல்லை

என்று கண்டுபிடிக்கப்பட்டது என்றும், எனவே மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவின் கீழ், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள், நிர்வாகிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆரம்ப முகாந்திரம் உள்ளது என்றும், மொத்த விண்ணப்பங்களைச் சரிபார்க்கும்போது அந்த விண்ணப் பங்கள் போலியானவை என்று தெரிய வந்தால், அந்த விண்ணப்பங்களை அனுப்பிய அரசியல் கட்சியின் தலைவர், செயலர் ஆகியோர்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால், அரிஸ்டாட்டிலுடன் தன்னை ஒப்பிட்டுக் கொள்ளும் ஜெயலலிதாவின் கட்சியினர், அதுவும் அமைச்சர்களே சட்டத்தை மதிக்காமல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். சட்டத்தை மதித்து நடக்க வேண்டுமென்று கருதிய அரிஸ்டாட்டில் எங்கே? சட்டத்தை தன் காலில் போட்டு மிதிக்கும் ஜெயலலிதா எங்கே? நல்ல வேளை, அரிஸ்டாட்டில் முன்பே இறந்து விட்டார். அவர் மட்டும் தற்போது உயிரோடு இருந்திருந்தால் ஜெயலலிதாவின் பேச்சைப் படித்து விட்டு மீண்டும் ஒருமுறை தற்கொலை செய்துகொண்டு உயிரை விட்டிருப்பார்.

அரிஸ்டாட்டிலை உலகமே புகழ்ந்ததைக் கண்டு பெரியவர் ஒருவர் பொறாமைப்பட்டதைப்போல, ஜெயலலிதாவை அனைவரும் புகழ்வதைக் கண்டு அசூயை கொள்பவர் பலர் இருக்கிறார்களாம்!

ஜெயலலிதாவை அப்படி யார் யார் புகழ்கிறார்கள்?

ஜெயலலிதாவினால் வீட்டிற்கு அனுப்பப்பட்ட பத்தாயிரம் சாலைப் பணியாளர் குடும்பங்களும், பதிமூன்றாயிரம் மக்கள்நலப் பணியாளர் குடும்பங்களும், பாதிக்குமேல் போனஸ் கிடைக்கப் பெறாத தொழிலாளர்களும், திருமண உதவி கிடைக்கப்பெறாத ஏழைப் பெண்களும், உழவர் சந்தை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளும், நுகர்வோரும், 2003ஆம் ஆண்டு வேலை நிறுத்தம் காரணமாக படாத பாடு பட்ட அரசு அலுவலர்களும், "பொடா"வினாலும், போடப்பட்ட பொய் வழக்குகளாலும் பாதிக்கப்பட்டவர்களும், படிப்புக் கட்டணத்தை பல மடங்கு அதிகமாகச் செலுத்தி வரும் மாணவர்களும் புகழவா செய்வார்கள்?

கிணற்றுக்குள்ளிருந்து வெளியே வர முனையாமல், அதற்குள்ளேயே வாழும் தவளையை கிணற்றுத் தவளை என்பார்கள். அதைப்போலத்தான் ஜெயலலிதா, தன்னைத் தானே புகழ்ந்து கொண்டு, வெளியே அவரைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் பேசிக் கொண்டிருக்கிறார். அரிஸ்டாட்டிலின் மிக முக்கியமான போற்றத் தகுந்த குணமே தன்னைத் தானே புகழ்ந்து கொள்வதுமில்லை, தன்னைப் பற்றியே பேசிக் கொள்வதுமில்லை. ஆனால் இந்த அம்மையார் அப்படியா? ஐயோ பாவம்!

அன்புள்ள,

மு.க.

25-6-2005

3152. விலை உயர்வை நியாயப்படுத்துகிறேனா?

உடன்பிறப்பே,

20-6-2005 அன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை உயர்வை அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, அன்றைய தினமே விடுத்த அறிக்கையில், "ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என்று சொல்லிக்கொள்ளும் தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க. தலைமையிலான கூட்டணி இடம் பெற்றுள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, சற்றும் ஈவு இரக்கமோ, எந்தவித மன உறுத்தலோ இல்லாமல், திரும்பத் திரும்ப மக்கள் மீது சுமைகளை ஏற்றுவதிலேயே குறியாக இருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார். இந்தப் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்த வேண்டிய நெருக்கடியான நிலைக்கு உள்ளான மத்திய அரசு, அந்த முடிவு அறிவிப்பதைத் தொடர்ந்து ஒத்தி வைத்துக்கொண்டு வந்த நிலையை நான் அறிந்திருந்த காரணத்தினால், இறுதியாக அதுகுறித்து நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதுகூட ,கழக அமைச்சர்கள் மூலமாக எந்தக் காரணத்தை கொண்டும் மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்றவைகளுக்கானக் கட்டணத்தை உயர்த்த ஒப்புக்கொள்ளக்கூடாதென்று வலியுறுத்திச் சொல்லத் தவறவில்லை.

தவிர்க்க முடியாத நிலையில், மத்திய அரசு இதனைச் செய்திருக்கிறது என்றுதான் எனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறேனே தவிர, எந்த இடத்திலும் பெட்ரோல், டீசல் விலை உயர்வை நியாயப்படுத்தி நான் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், 2004 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலை உயர்வு செய்தபோது, 6-11-2004 அன்று நான் விடுத்த ஓர் அறிக்கையில், "பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின்

விலைகளை உயர்த்தியிருப்பது பொதுமக்களை, குறிப்பாக தாய்மார்களையும், விவசாயிகளையும் பெரிதும் பாதிக்கும். எனவே மத்திய அரசு, உடனடியாக இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். கூட்டணிக் கட்சிகளும், இடதுசாரிக் கட்சிகளும் இக்கருத்தை வெளியிட்டிருப்பதால், மத்திய அரசு, மத்திய தர வர்க்கத்தினரையும் விவசாயிகளையும் மனத்திற் கொண்டு ஆவன செய்யுமென்று நம்புகிறேன்" என்று தெரிவித்திருப்பதிலிருந்தே பெட்ரோல், டீசல் விலை உயர்வை நான் என்றைக்கும் நியாயப்படுத்துகிறவன் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இடதுசாரிக் கட்சிகள், மத்திய அரசின் நடவடிக்கைகளை எதிர்க்கிறார்களே என்று செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, நான் மத்திய அரசைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கவில்லை என்றும், இடது சாரியினர் தெரிவிக்கின்ற கருத்துகளுக்கு மதிப்பளித்து, அவர்களை அழைத்துப் பேசி அதன் பின்னரே, முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்தான் தெரிவித்திருக்கிறேனே தவிர, ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித்ததைப் போல எனது சொத்துகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நான் அப்படியே ஆதரிக்கிறேன் என்பது அவர் புனைந்திடும் பொய் உரையேயாகும். மேலும், ஜெயலலிதா அறிக்கையிலே கூறியிருப்பதுபோல, எனது சொத்துக்கள் என்று எதுவும் பெரிதாக கிடையாது. ஜெயலலிதாவைப்போல 65 கோடி ரூபாய்க்கு மேல் ஐந்தாண்டு கால ஆட்சியில் சொத்துக் குவித்துக் கொண்டும், இந்தியாவிலே போதாதென்று, வெளிநாடுகளிலும் சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டும், இரண்டு வழக்குகளையும் ஒன்றாக நடத்துவதா? தனியாக நடத்துவதா? என்றெல்லாம் பிரச்சினையெழுப்பி ஒவ்வொரு நீதி மன்றமாக ஏறிக் கொண்டிருப்பவனல்ல நான்! தனது அறிக்கையில் இரண்டு மூன்று இடங்களில் ஜெயலலிதா எனது சொத்துகளைப் பற்றி கூறியிருப்பதால்தான் நான் இதனை எழுத வேண்டியதாயிற்று.

நான் முதலில் வெளியிட்ட அறிக்கையின் நோக்கமெல்லாம், "உண்மையிலேயே இந்த விலை உயர்வு காரணமாக, மக்களின் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்று ஜெயலலிதா மனதாரக்

கருதுவாரேயானால், தமிழக அரசின் சார்பில் பெட்ரோல், டீசல்மீது மாநில அரசால் விதிக்கப்பட்டுள்ள 27 சதவிகித வரியை மாநில அரசே முன்வந்து கணிசமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்" என்பதுதானே தவிர, மத்திய அரசின் விலை உயர்வை நியாயப் படுத்துவதல்ல. எனவே, என்னுடைய இந்த கோரிக்கைக்கு நேரடியான பதிலை அளிக்காமல், ஜெயலலிதா நான் ஏதோ மத்திய அரசு அறிவித்துள்ள விலை உயர்வை நியாயப்படுத்துவதாகக் கூறி திசை திருப்பிடப் பார்க்கிறார்.

"விலை உயர்வை நியாயப்படுத்தியிருப்பதன் மூலம், மாநிலங்களின் உரிமைகளுக்கு போராடுவதற்கான கருணாநிதியின் முகமூடி தற்போது முற்றிலும் கிழிந்துபோய் விட்டது" என்பது ஜெயலலிதாவின் அறிக்கையிலே காணப்படும் நாகரிகமான வாசகம். மாநில உரிமைகளுக்கும், மத்திய அரசின் விலை உயர்வுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. அறிக்கை எழுதிக் கொடுத்தவருக்குத்தான் இது வெளிச்சம்! அல்லது ஒரு காலத்தில் "மாநில சுயாட்சி" என்பதையே எதிர்த்த அ.தி.மு.க. மேதைகளுக்குத்தான் வெளிச்சம்!

"விலையை உயர்த்தியிருப்பதைத் தொடர்ந்து விற்பனை வரி வசூல் அதிகரித்து, அதன் மூலம் தமிழக அரசுக்கு நிகர ஆதாயம் கிடைக்கும் என்று கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். இது அபத்தமானது" என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவிக்கிறார். நான் படித்தவர்களைக் கேட்கிறேன், ஏன் நிதித் துறை செயலாளரையே கேட்கிறேன். விலை உயர்வு மூலம் அதிகப் பணம் கொடுத்து பெட்ரோலையோ, டீசலையோ வாங்குவதால், அதற்கான விற்பனை வரி சதவிகிதக் கணக்குப்படி செலுத்துகின்ற நேரத்தில் அரசுக்கு ஏற்கனவே கிடைத்த வருவாயைவிட, அதிகமாக கிடைக்குமா? கிடைக்காதா? இதனை எப்படி ஜெயலலிதா அபத்தம் என்று கூறுகிறார். அவர் அறிக்கையிலே எழுதியிருப்பதுதான் மிகப் பெரிய அபத்தம் என்பது தெளிவாகிறதா? இல்லையா?

"மாநில அரசுகள் தங்களுக்குக் கிடைக்கும் வருவாயை இழக்க வேண்டும் என்ற கருணாநிதியின் நிலைப்பாட்டை எவராவது ஆதரிக்க முடியுமா?" என்பது ஜெயலலிதாவின் கேள்வி. "விலை உயர்வினால் பொது மக்களைப் பாதுகாக்கும் கேடயமாக நான் இருக்கிறேன்" என்று ஜெயலலிதா கூறிக் கொண்டதால்தான்,

உண்மையிலேயே பொதுமக்கள் மீது அனுதாபம் இருக்குமானால், அவர் வடிப்பது முதலைக் கண்ணீர் இல்லை என்பது நிரூபிக்கப்பட வேண்டுமேயானால், ஜெயலலிதா மாநிலத்தின் சார்பில் விதிக்கப்படும் விற்பனை வரியைக் குறைத்துக் கொள்ளலாம் அல்லவா என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், மணி சங்கர அய்யர் போன்றோர் முன்னர் கூறி வந்த விற்பனை வரி மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்ற வாதத்தை, தற்போது நான் இரவல் வாங்கியிருப்பதாக கூறுகிறார் ஜெயலலிதா. விற்பனை வரி மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்ற வாதம் இரவல் கேட்டுப் பெற வேண்டிய ஒன்றல்ல. சிறு பிள்ளைகளுக்குக்கூட தெரிந்த விளக்கம்தான்.

ஜெயலலிதா, தனது அறிக்கையின் இறுதியிலே நலிந்த பிரிவினரின் குரலுக்கு நான் செவிமடுக்க மறுக்கிறேன் என்றும், மக்கள் விரோதப் போக்கு கொண்டவன் என்றும், ஆணவக்காரன் என்றும், அடுத்த சட்டமன்றத் தேர்தலின்போது மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றும் வார்த்தைகளை அள்ளிக் கொட்டியிருக்கிறார். நீதிமன்றங்களே சாலைப் பணியாளர்களுக்கு வேலை கொடுக்கவும், இடைக் கால ஊதியம் கொடுக்கவும் பரிந்துரை செய்த பிறகும், அதைச் செவி மடுக்க விரும்பாத ஆணவம் பிடித்தவர் யார் என்பதும், அரசு அதிகாரிகளை யெல்லாம் சாட்டையால் அடித்து வேலை வாங்குகிறேன் என்று அவையிலேயே அகம்பாவமாகக் கூறியது யார் என்பதும், தொடர்ந்து மக்கள் விரோதப் போக்கைக் கையாண்டு, அதன் காரணமாக, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உட்பட நாற்பது இடங்களிலே ஓர் இடத்தைக் கூடப் பெறாத அகந்தை கொண்டவர் யார் என்பதும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

அன்புள்ள,

மு.க.

27-6-2005

3153. சேது திட்டம்; சில்லறைக் கூச்சல்களுக்கு சில விளக்கங்கள்!

உடன்பிறப்பே,

"ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அரசு செலவில் நடத்தப்படுகின்ற விழாக்கள் எதுவாக இருந்தாலும் அவற்றில் எல்லாம் தன்னை முன்னிலைப்படுத்திக் காட்டிக்கொள்ள விரும்பும் தி.மு.க. 'குடும்ப ஆட்சித் தலைவர்' திரு. மு. கருணாநிதியின் கட்டளையின் பேரில், 2-7-2005 அன்று நடத்தப்பட உள்ள சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தின் தொடக்க விழா பெரிய அளவிலான அரசியல் கண்காட்சியாக அரங்கேற இருப்பதாக பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிய வருகிறது."

சேது சமுத்திரத் திட்ட விழாவில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்பதை, உலகத்திற்கு அறிவிக்க வந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிக்கையின் தொடக்கம்தான் இந்த வாசகங்கள்.

அரசு சார்பில் நடத்தப்படுகின்ற விழாக்கள் எதுவாக இருந்தாலும், நான் என்னை முன்னிலைப்படுத்திக் கொள்கிறேனாம். கடந்த நான்காண்டு காலத்தில், தமிழகத்திலே நான், அப்படி எத்தனை அரசு விழாக்களில் கலந்து கொண்டு விட்டேன்? மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு, ஏற்பாடு செய்த மூன்று நான்கு நிகழ்ச்சிகளில், நான் பலமுறை மறுத்தும்கூட அவரது பிடிவாதம் காரணமாக, சென்னையிலே கலந்து கொண்டது உண்மைதான். அதிலே எந்த அளவிற்கு ஜெயலலிதா வயிற்றெரிச்சல் அடைந்திருக்கிறார் என்பதைத்தான் மேற்கண்ட அவரது வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

நேற்றையதினம், கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மத்திய அரசின் ஒரு பெரும் விழாவிற்குக்கூட, மத்திய அமைச்சர் டி.ஆர்.

பாலு, என்னைக் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைத்த போதிலுங்கூட, வர இயலாமையைத்தான் தெரிவித்துள்ளேன். அரசு செலவில் நடத்தப்படுகின்ற எந்த விழாவாக இருந்தாலும், அவற்றில் எல்லாம் என்னை நான் முன்னிலைப்படுத்திக் கொள்கிறேன் என்கிறார் ஜெயலலிதா. இரண்டு நாட்களுக்கு முன்பு 23ஆம் தேதியன்று, திருநெல்வேலியில் நடைபெற்ற வ.உ.சி. மணி மண்டபத் திறப்பு விழாவிலே யார் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டார்கள் என்பதை மக்கள் நன்கறிவார்கள். நெல்லைத் தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரைக் கூட விழாவிலே பேசவிடாமல் அவமதித்தவர்தான் இந்த ஜெயலலிதா.

ஜெயலலிதா, மேலும் தனது அறிக்கையில், இரண்டு மூன்று இடங்களில் என்னைப் பற்றி கிண்டலாக, "குடும்ப ஆட்சித் தலைவர்" என்று விமர்சனம் செய்திருக்கிறார். அவரது அகராதிப்படி "குடும்பம்" நடத்துவதென்பது பெரிய தவறா என்ன? ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துவதுதான் குடும்பம்! அது என்ன குற்றமா?

எம்.ஜி.ஆர். அவர்களின் வேண்டுகோளின் பேரிலும், ஜெயலலிதா விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலும்தான் சேதுக் கால்வாய் திட்டம் வந்திருப்பதைப்போல தனது அறிக்கையின் மூலம் நிலைநாட்ட, ஜெயலலிதா படாதபாடு பட்டுள்ளார். ஆனால் உண்மை அதுதானா?

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகச் சட்டமன்றத்தில் நீண்டதோர் உரையினை 9-10-1960 அன்று ஆற்றினார். அதிலே சேது சமுத்திரத் திட்டம் பற்றி பேசியதாவது :-

"நாம் திட்டவட்டமாக மத்திய அரசிடம் கேட்க வேண்டியது - மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு என்னென்ன திட்டங்களை, திட்டவட்டமாக நிறைவேற்றப் போகிறீர்கள்? சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா இல்லையா? என்று திட்டவட்டமாகக் கேட்க வேண்டும். இந்த நேரத்தில் நான் அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய திறமையைப்

பற்றி நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இதில் நீங்கள் வெற்றி பெறுவதிலிருந்துதான், இனிமேல் உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். இதைப்பற்றி விசாரித்து அறிக்கை கொடுப்பதற்காக, இந்திய சர்க்கார், நமது ராஜ்யத்தின் தலைசிறந்த அறிவாளி திரு. ஏ.ராமசாமி முதலியார் அவர்களை நியமித்தார்கள். அவர்கள் ஆராய்ச்சி செய்து கொடுத்த அறிக்கையை வைத்துக் கொண்டு அதில் ஏற்படுகின்ற சில்லறைத் தகராறை வைத்துக் கொண்டு, பத்து கோடியா, பதினைந்து கோடியா என்கின்ற புள்ளி விவரங்களால் ஏற்படும் தகராறை வைத்துக் கொண்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியுமோ என்னவோ தெரியவில்லை. நான் மீண்டும் இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா? அல்லது நாங்கள் இதை விட்டு விலகவா? என்று மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் துணிந்து கேட்க வேண்டும்”

1960ஆம் ஆண்டில் அதாவது 45 ஆண்டுகளுக்கு முன்பே, அண்ணா அவர்கள், சட்டப் பேரவையில் சேது சமுத்திரத் திட்டம் பற்றி இப்படிப் பேசியுள்ளார். 1961ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்திலும், 1966ஆம் ஆண்டு விருகம்பாக்கத்திலும் நடைபெற்ற மாநாடுகளில், சேது சமுத்திரத் திட்டம் தீர்மானமாக வலியுறுத்தப்பட்டது. 1967ஆம் ஆண்டு, தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகும், “எழுச்சி நாள்” கொண்டாடி, அதில் சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுகம் பற்றி அண்ணா அவர்கள் வலியுறுத்தியதோடு, அதைத் தொடர்ந்து நடந்த சட்டமன்றத் தொடரிலும் இவை பற்றி வலியுறுத்திப் பேசினார்.

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுக வேலைகள் சுணக்கமுற்று, மீன் பிடித் துறைமுகமாக மாற்ற முயற்சி நடந்தபோது, 1967ஆம் ஆண்டு, சென்னை வந்த மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு. வி.கே.ஆர்.வி. ராவ் அவர்களை, அவர் தங்கியிருந்த இண்டியா சிமெண்ட் விருந்தினர் விடுதிக்கே முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள், தேடிச் சென்று சந்தித்தார். அப்போது முன்னாள் முதல்வராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களையும், முன்னாள் தொழில் அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன்

அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்று, துறைமுகம் நஷ்டத்தில் இயங்கும் நிலை வந்தால், அந்த நஷ்டத்தை மாநில அரசே ஏற்கும் என்ற உறுதியையும் தந்து, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் வருவதற்கு அண்ணா அவர்கள் பாடுபட்டார்கள்.

1972ஆம் ஆண்டு, தூத்துக்குடித் துறைமுக நுழைவு வாயிலில் வ.உ.சி. சிலையை திருமதி இந்திராகாந்தி அம்மையார், முதல்வராக இருந்த என் தலைமையில் திறந்து வைத்தார். அப்போதும் நான் தூத்துக்குடித் துறைமுகத்தின் பயன் மேலும் வளர, சேதுக் கால்வாய் திட்டம் மிக மிக அவசியம் என்று பேசினேன்.

ஆனால் இத்தனையையும் மறைத்துவிட்டு, ஜெயலலிதா, விடுத்த நீண்ட அறிக்கையில், தன்னால் தான் இத்திட்டமே வந்ததைப்போல முரசு கொட்டிக் கொள்கிறார். மேலும் அவர் தனது அறிக்கையில்,

> “என்னுடைய வற்புறுத்தலின்பேரில்தான், 1998ஆம் ஆண்டில், இத்திட்டம் ஒரு முன்னுரிமைத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு, தொடக்கச் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வுப் பணி, தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திடம் 1998ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஒப்படைக்கப்பட்டது. இந் நிறுவனத்தின் அறிக்கையும், 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அளிக்கப்பட்டது. இவ்வாறாக, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நனவாவதை உறுதிப்படுத்துவதற்கு நான் முக்கியக் காரணமாக இருந்திருக்கிறேன்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

1998ஆம் ஆண்டுதான் இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டது என்கிறபோது, அந்த ஆண்டில் தமிழகத்தில் ஆட்சியிலே இருந்தது யார்? எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தது? தி.மு.கழகம் அல்லவா? முதல் அமைச்சராக நான் அல்லவா இருந்தேன்! அப்படியிருக்கிறபோது, 98ஆம் ஆண்டு இவைகள் எல்லாம் நடைபெற்றன என்று கூறும் ஜெயலலிதா, அவர்தான் முக்கிய காரணமென்றும் சொல்கிறாரே! அது எப்படி உண்மையாகும்? அறிக்கை எழுதிக் கொடுக்கும் நபர் இதற்கு என்ன பதிலை எழுதிக் கொடுக்கப் போகிறார்? தமிழகத்தில் எதிர்க்கட்சியாக இருந்து ஜெயலலிதா பாடுபடுவது தவறா என்று

பதில் வருமேயானால், அதே பதில் நான் பாடுபடுவதற்கும் பொருந்துமல்லவா?

1998ஆம் ஆண்டிற்கு முன்பு, இவர் வைத்த கோரிக்கைகளின் விளைவாகத்தான் இவைகள் எல்லாம் நடைபெற்றன என்று கூறிக் கொள்கிறாரே? அப்படியானால், 1960ஆம் ஆண்டிலிருந்து அண்ணாவும், நாங்களும், தமிழகத்திலே உள்ள மற்ற கட்சிகளும், குறிப்பாக, தம்பி வைகோ போன்றவர்களும் நாடாளுமன்றத்திலே சேது சமுத்திரத் திட்டத்திற்காக எடுத்து வைத்த கோரிக்கைகள் எல்லாம் கணக்கில் வராதா என்ன?

ஜெயலலிதா, சேது கால்வாய்த் திட்டத்தினால் சில பிரச்சினைகள் எழக்கூடும் என்றும், மீனவர்கள் பிரச்சினை எழுப்புவார்கள் என்றும் வெளிப்படையாக தற்போதுதான் தனது அறிக்கையிலே தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியபோதும் சிலர் இத்திட்டத்திற்கான எதிர்ப்புக் கருத்துகளைத் தெரிவித்தார்கள். தற்போது கூட மீனவர்கள் என்ற பெயரால், ஏடுகளிலே இத்திட்டத்திற்கு எதிராக சில செய்திகள் வருகின்றன என்றால், அதற்கெல்லாம் மூல காரணம் ஜெயலலிதா தான் என்பதை நிரூபிப்பது போல, அவரே "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பதுபோல காட்டிக் கொண்டுவிட்டார். அடடே! என்னே நல்ல எண்ணம்?

1860ஆம் ஆண்டு, அதாவது 145 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியக் கடற்படையின் கமாண்டர் டெய்லர் என்பவரின் மூளையில் உதித்து முன்மொழியப்பட்டு, தொடர்ந்து முயற்சிகள் பல முறை மேற்கொள்ளப்பட்டும், ஆய்வு நடத்தவும், ஆக்கப் பணிகளை வகுத்திடவும் பல்வேறு நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான பரிசீலனைகள் நடத்தப்பட்டதுமான நிலைமையிலே இருந்து, இடைக் காலத்தில் கிடப்பிலே போடப்பட்டுவிட்டது என்றாகி, அறிவிப்புடன் நின்றுவிட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் ஒன்றான சேது சமுத்திரத் திட்டம், மத்திய சுற்றுச் சூழல் துறையின் ஒப்புதலும் பெறப்பட்டு - மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று ஜூலை 2ந்தேதியன்று இந்தியப் பிரதமரும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வழிகாட்டித் தலைவருமான சோனியா காந்தியும் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டுகிறார்கள் என்பதறிந்ததும், பொறுப்பான முதலமைச்சராக இருந்திருந்தால்,

அதைப் பாராட்டி, வரவேற்று தமிழகத்திற்கு 2427 கோடி ரூபாயில் ஒரு திட்டம் கிடைத்திருக்கிறதே என்று அதனை வாழ்த்தி வரவேற்காவிட்டாலும், பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிய "அய்யோ, அய்யோ" என்று அலறுகிறாரென்றால், தமிழக மக்கள்தான் இதிலே உள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்திட்டத்திற்கு எதிராக, ஜெயலலிதா, விடுத்துள்ள ஐந்து பக்க அறிக்கையில், அவர் திரும்பத் திரும்பச் சொல்லியிருப்பதெல்லாம் சுற்றுப்புறச் சூழல் பற்றித்தான். எனவே சுற்றுப்புற சூழல் பற்றி அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் யாருக்காவது எழுந்திருக்குமேயானால், அவற்றையும் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும்.

ஜெயலலிதா தற்போது எழுப்பியிருக்கும் இதே பிரச்சினை, ஏற்கனவே ஜெயலலிதாவிற்கு வேண்டிய சில பத்திரிகையாளர்களால் ஏடுகளிலே எழுதப்பட்டு, அதைக் கண்டவுடன் பிரதமர் அலுவலகம் அது பற்றிய விவரங்களைத் தெரிவிக்குமாறு தூத்துக்குடித் துறைமுகக் கழகத்திடம் கேட்டு, அந்த விவரங்கள் அனைத்தும் உடனடியாக அனுப்பப்பட்டுள்ளது. துறைமுகக் கழகம் அனுப்பிய பதிலை பிரதமர் அலுவலகம் சுற்றுச் சூழல் துறை அமைச்சகத்திற்கு அனுப்பி விளக்கம் கேட்டுள்ளது. சுற்றுச் சூழல் அமைச்சகத்திலே உள்ள நிபுணர் குழு, எழுப்பப்பட்ட பிரச்சினைகளையும், அதற்கு துறைமுகக் கழகம் அனுப்பிய பதில்களையும் நுட்பமாக ஆய்வு செய்த பிறகுதான், எல்லா கேள்விகளுக்கும் சரியான தீர்வுகள் காணப்பட்டன என்ற முடிவுக்கே வந்திருக்கிறார்கள். எனவே மத்திய சுற்றுச் சூழல் துறை அவசர அவசரமாக அறிக்கை கொடுத்துவிட்டதாக ஜெயலலிதா கூறியிருப்பது தவறான தகவலாகும்.

1998ஆம் ஆண்டு, தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் நிறுவனத்திடம், ஜெயலலிதாவின் வலியுறுத்தல் காரணமாக அறிக்கை பெறப்பட்டதாக, ஜெயலலிதா தனது அறிக்கையிலே கூறியுள்ளார். அதற்குப் பிறகு நடந்ததை அவர் அறியவில்லை போலும். அப்போது தரப்பட்ட அறிக்கை போதுமானதாக இல்லை என்பதற்காக, மீண்டும் ஒருமுறை அதே நிறுவனத்திடம் விவரமான அறிக்கையைத் தருமாறு தூத்துக்குடித் துறைமுகக்

கழகம் கேட்டுக் கொண்டு, அவ்வாறே ஒரு விளக்கமான அறிக்கை அந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது.

கடந்த 2004ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் இத்திட்டம் குறித்து, "சிலரின்" தூண்டுதலின்பேரில் வழக்கு ஒன்று வந்தபோது, தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் நிறுவனத்திடம் அவர்கள் அளித்த அறிக்கை விவரமான ஒன்றா என்று கேட்டபோது, அந்த நிறுவனம் திட்டவட்டமாக தாங்கள் முழுமையாக ஆய்வு நடத்திய பிறகுதான், அந்த விவரமான அறிக்கையைத் தாக்கல் செய்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விவரத்திலிருந்தும், இத் திட்டம் நன்றாக ஆய்வு நடத்தப்படாமல் நிறைவேற்ற முன்வந்து விட்டதாக ஜெயலலிதா கூறும் கூற்று எவ்வளவு பொறாமைத் தன்மை கொண்டது என்பது தெளிவாகிறது!

"மத்திய சுற்றுச் சூழல் - வனத்துறை அமைச்சகம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி, மாநில அரசிடமிருந்து அவ்வமைச்சகம் தடையின்மைச் சான்றிதழ் பெறவேண்டியது சட்டப்படி அவசியம் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட, தமிழக அரசின் தடையின்மைச் சான்றிதழுக்காக காத்திருக்காமல், இத்திட்டத்திற்கானச் சுற்றுச் சூழல் சார்ந்த அனுமதியை மத்திய சுற்றுச்சூழல் வனத் துறை அமைச்சகம் தடாலடியாக வழங்கிவிட்டது" என்று ஜெயலலிதா தனது நீண்ட அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்.

இது உண்மையா?

"N.O.C. from the State Government or Tamilnadu Pollution Control Board is not a statutory requirement for consideration of environmental clearance for a project for which such clearance is to be accorded by the Central Government as per the Environmental Impact Assessment Notification dated 27-1-1994. Neither the notification, which has the force of law, nor Schedule IV which is appended to it and lays down the procedure for public hearing stipulates such No Objection Certificate"

(27-1-1994ஆம் தேதியன்று சுற்றுச்சூழல் துறை வகுத்துள்ள விதிமுறைப்படி, மத்திய அரசினால் அனுமதி

வழங்கப்பட வேண்டிய எந்த ஒரு திட்டத்திற்கும், மாநில சுற்றுச் சூழல் வாரியத்தின் தடையில்லா சான்றிதழ் தேவை என்பது சட்டப்பூர்வமான ஒன்றல்ல. சட்டப் பூர்வமாக ஏற்கப்படும் அந்த விதிமுறைப்படியோ அல்லது அத்துடன் இணைக்கப்பட்ட ஷெட்யூல் நான்கின்படியோ மக்கள் கருத்தாய்வினைப் பெறும்போது தடையில்லா சான்றிதழ் தேவை யென்று சொல்லப்படவில்லை.)

மாநில அரசின் தடையில்லா சான்றிதழ், சட்டப்படி தேவையில்லை என்றபோதிலும், சேது சமுத்திரத் திட்டத்தினைச் செயல்படுத்தும் தூத்துக்குடித் துறைமுகக் கழகம், இத்திட்டத்திலே சம்பந்தப்பட்ட ஆறு மாவட்டங்களிலே பொதுமக்களிடம் கருத்தாய்வு நடத்தி, அதுபற்றிய விவரங்களை மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்திற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விரைவில் அனுப்பிடக் கோரி கேட்டுக் கொண்டது.

2004ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில், மாவட்டங்களில் இந்தக் கருத்தாய்வு கூட்டம் நடத்தியபோது, முதலில் நடைபெற்ற கூட்டம் சுமுகமாக முடிந்துங்கூட, அதற்கான நடவடிக்கைக் குறிப்பினை மத்திய அரசுக்கு அனுப்பவில்லை. மாறாக, தொடர்ந்து நவம்பர் திங்களில் நடைபெற்ற கூட்டங்களில், வேண்டுமென்றே ஆளுங்கட்சியின் தூண்டுதல் பேரில், இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட காரணத்தால் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்படவில்லை. அதன் காரணமாக, இத்திட்டம் அமலுக்கு வருவது தள்ளிப் போனது. எனவே, தூத்துக்குடித் துறைமுகக் கழகம் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. அதே நேரத்தில், ஆளுங்கட்சியின் தூண்டுதல் பேரில், தனி நபர் ஒருவர் இத்திட்டத்தையே நிறைவேற்றக் கூடாது என்று மனு தாக்கல் செய்தார். இரு மனுக்களையும் விசாரித்த தலைமை நீதிபதி அடங்கிய பெஞ்ச், தனி நபர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டு, தூத்துக்குடி துறைமுகக் கழகம் தாக்கல் செய்த மனுவினையேற்று, இத்திட்டம் கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்றும், இந்தியாவை தொழில் வளம் மிக்க நாடாக மாற்றக் கூடிய திட்டம் என்றும், நாட்டினை வளப்படுத்தும் ஒரு திட்டத்திற்குச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்ற பெயரால் தடை போடுவது சரியல்ல என்றும் கூறியதோடு, மத்திய அமைச்சகத்திற்கு, மக்கள் கருத்தறிந்த கூட்டத்தின் நடவடிக்கைக்

குறிப்புகளை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. நீதிபதி அவர்கள் கூட தனது தீர்ப்பில் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளை அனுப்பிடக் கூறியிருக்கிறாரே தவிர, தடையில்லா சான்றிதழை அனுப்பி வைக்க வேண்டுமென்று கூறவில்லை என்பதிலிருந்தே அது தேவையில்லாத ஒன்று என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

கருத்தாய்வு கூட்டங்கள் 2-2-2005க்குள் முடிவுற்ற பிறகும்கூட, உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியிட்ட உத்தரவின்படி, கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை மத்திய அரசுக்கு மாநில அரசினர் அனுப்பினார்களா என்றால், இல்லை. பிப்ரவரி 7ஆம் தேதியன்றும், 18ஆம் தேதியன்றும் கடிதங்கள் மூலமாகவும், 10ஆம் தேதியன்று நேரடியாகவும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரியிடம் வலியுறுத்தியும் கூட இதனை அனுப்பவில்லை. எனவே, தூத்துக்குடித் துறைமுகக் கழகம் மத்திய அரசுக்கு இதுகுறித்து தகவல் தெரிவிக்கவே, மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் 2-3-2005 அன்று ஏழு நாட்களுக்குள் மக்கள் கருத்தாய்வு கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை அனுப்பி வைக்க வேண்டுமென்று ஒரு ஆணையைப் பிறப்பித்தது. சென்னை உயர்நீதி மன்றம் ஏற்கனவே பிறப்பித்த ஆணை நிறைவேற்றப்படவில்லை என்று கூறி, தூத்துக்குடித் துறைமுகக் கழகத்தின் சார்பிலும் உயர்நீதி மன்றத்திலே நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதுபற்றிய விவரம் ஏடுகளில் வெளிவந்த பிறகுதான், 4-3-2005 அன்று மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்திற்கு அந்த அறிக்கையினை ஜெயலலிதா அரசு அனுப்பி வைத்தது.

அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான், மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம், இதற்கான ஒப்புதலை வழங்கியதே தவிர, ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித்திருப்பதைப்போல, அந்த அமைச்சகம் தடாலடியாக ஒப்புதலை வழங்கவில்லை என்பதை நான் திரட்டி எழுதியுள்ள இந்த ஆதாரங்களிலிருந்து நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில், வல்லுநர் குழு ஒன்றினை டாக்டர் எம். ரவீந்திரன் தலைமையில், ஜெயலலிதா அரசு அமைத்ததாகவும், அந்தக் குழு இப்போது தான் அறிக்கை கொடுத்திருப்பதாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே

தெரிவித்திருக்கிறார். நீதிமன்றத்திலே இந்த விசாரணை நடைபெற்றபோதோ, அதன் பிறகோ எந்த ஒரு கட்டத்திலும் இப்படியொரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக எந்தவிதமான செய்தியாவது வந்திருக்கிறதா என்றால் கிடையாது. மேலும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றப்போகின்ற தூத்துக்குடித் துறைமுகக் கழகத்திலே உள்ளவர்கள் யாரிடமிருந்தாவது இந்தக் குழு ஏதாவது விசாரணை நடத்தியிருக்கிறதா என்றால், அதுவும் கிடையாது. திடீரென்று ஜெயலலிதாவின் மூளையில் உதித்த இந்தக் குழு, தனது அறிக்கையிலே சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருப்பதாக அந்த விழா தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பாகத்தான் தெரிவிக்கின்றார். உலகப் புகழ் பெற்ற தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆய்வு நிறுவனம், இரண்டு முறை ஆய்வுகளை நடத்தி திட்டவட்டமாக உறுதியாக இத்திட்டம் பற்றி அறிக்கைகளைக் கொடுத்த பிறகு, ஜெயலலிதா தற்போது அதிலே குறை கண்டு, தான் நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளாததற்கு அதுதான் காரணம் என்கிறார் என்றால், குந்திக்கு குழந்தை பிறக்கப் போகிறது என்ற வயிற்றெரிச்சலில் குழவிக் கல்லை எடுத்து தன் வயிற்றில் குத்திக் கொண்ட காந்தாரியின் நினைவுதானே நமக்கு வருகிறது!

எனவே, தமிழக மக்கள், தமிழ்நாட்டுக்கு வளம் பெருகிட வரவிருக்கும் இந்த மாபெரும் திட்டத் தொடக்க விழா, மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் தம்பி டி.ஆர். பாலுவின் தலைமையில், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், திருமதி சோனியா காந்தி அவர்கள், ஆளுநர் திரு. பர்னாலா அவர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் வாழ்த்துக்களோடு, உங்கள் வாழ்த்தினையும் இணைத்திட ஜூலை 2ஆம் தேதியன்று மதுரை மாநகர் வாரீர் என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

28-6-2005

3154. பேராசிரியர் தொடர்ந்த வழக்கும்; இடையில் பெங்களூர் தீர்ப்பும்!

உடன்பிறப்பே,

தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா மீது தனித்தனியாக தொடரப்பட்ட 67 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு, லண்டன் ஓட்டல் வாங்கிய வழக்கு ஆகிய இரண்டு வழக்குகளையும் சேர்த்து விசாரிக்க, பெங்களூர் தனி நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கின்றது. இந்த உத்தரவிலோ, சிறப்பு நீதிமன்றத்தின் விசாரணையிலோ கருத்து தெரிவிப்பது சரியல்ல என்றபோதிலும், ஒரு ரூபாய் சம்பளமே வாங்குகிறேன் என்று ஊருக்கும், உலகத்துக்கும் அறிவித்துவிட்டு, 1991 முதல் 1996 வரையிலான ஐந்தாண்டு கால ஆட்சியில் ஊழல் மகாராணியாக உருவெடுத்து 67 கோடி ரூபாய்க்கு மேல் ஜெயலலிதா சொத்து குவித்துக் கொண்டதற்கான வழக்கு, ஆதாரங்களுடன் தி.மு.க. ஆட்சியில் தொடரப்பட்டு, 2001 தேர்தலில் தி.மு.க. ஆட்சி மாறி மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, எப்படியெல்லாம் அந்த வழக்கை நீதி நெறிக்கும், சட்ட நடவடிக்கைகளுக்கும் புறம்பாக நடத்த வேண்டுமோ அப்படி நடத்தி, அந்த வழக்கையே திசை திருப்ப முனைந்தபோது, தி.மு.கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், அந்த வழக்கு வேறு மாநிலத்துக்கு மாற்றப்பட்டு நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை உச்சநீதிமன்றத்தில் வைத்தார். அந்தக் கோரிக்கையையொட்டி உச்சநீதிமன்றம் வழங்கிய கருத்துகளையும், அளித்த உத்தரவையும் உன் போன்றோரின் நினைவுக்கு மீண்டும் கொண்டு வருகிறேன்.

பொதுச் செயலாளர் தொடுத்த வழக்கிலே, உச்ச நீதி மன்ற நீதிபதிகள் எஸ்.என். வரியவா, எச்.கே. சேமா ஆகியோர் கொண்ட பெஞ்ச், 18-11-2003 அன்று வழங்கிய தீர்ப்பில் தெரிவித்த சில முக்கிய கருத்துகள் வருமாறு :-

"ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர், தனது வாதத்தில், மனுதாரரான (பேராசிரியர்) அரசியல் எதிரி என்ற முறையில் இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாகவும், அரசியல் காரணங்களுக்காகவே இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். இந்த வாதம் ஏற்புடையதல்ல. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு, அவைக்குள்ளும், அவைக்கு வெளியேயும் முக்கியமானதோர் இடம் உண்டு. ஆட்சியிலே இருப்பவர்களைக் கண்காணிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்குண்டு. ஆட்சியிலே உள்ள கட்சியின் தவறான செயல்முறைகளையும், நடவடிக்கைகளையும் எதிர்ப்பதுதான் அவர்களுடைய முக்கியமான ஆயுதமாகும். பொதுவாக, மக்களுடைய குறைகளை எதிரொலிக்கக் கூடியவர்களே இவர்கள்தான். அந்த நிலையில் எதிர்க்கட்சி என்ற முறையில் மனுதாரர் (பேராசிரியர்) உண்மையில் மாநிலத்தின் அரசு நிர்வாகத்திலும், நீதி நிர்வாகத்திலும் அக்கறை உள்ளவராகும். அப்படிப்பட்டவரிடமிருந்து தாக்கல் செய்யப்படுகின்ற மனு, அரசியல் காரணத்திற்காகப் போடப்பட்ட ஒன்று என்று கூறி, அலட்சியப்படுத்தக் கூடியதல்ல.

இந்த வழக்கில், மனுதாரர் (பேராசிரியர்) பல நியாயமானதும், ஏற்கத்தக்கதுமான காரணங்களை அதாவது, இதிலே நீதி மறுக்கத்தக்க வகையிலும், ஒருதலைப்பட்சமாகவும் வழங்கக் கூடிய நிலை ஏற்படலாம் என்று வலுவான சந்தேகங்களை எழுப்பியிருப்பதை எங்கள் கருத்தின் அடிப்படையில் ஏற்கிறோம்.

எஸ்.எஸ். ஜவகர், ஐ.ஏ.எஸ்., முன்னாள் துணைச் செயலாளர், ஜனவரி 2003இல் அரசு தரப்பு சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். இவரே 2000ஆம் ஆண்டில் அரசு தரப்பு சாட்சியாக சாட்சியம் அளித்திருக்கிறார். 2003இல் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தூண்டுதலின் பேரில், மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, 2000ஆம் ஆண்டு அவர் அளித்த முதல் சாட்சியம்

கட்டாயத்தின் பேரில் கூறப்பட்டது என்று சொல்லி யிருக்கிறார். இந்தச் சாட்சி அடித்த பல்டி குறித்து, (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது போலவே, என்.வி. பாலாஜி என்ற குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் ஆடிட்டர் 2000ஆம் ஆண்டில் அளித்த சாட்சியத்திற்கும், மீண்டும் திரும்ப அழைத்தபோது அளித்த சாட்சியத்திற்கும் இருந்த மாறுபாடுகள் குறித்தும் (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் கண்டு கொள்ளவே இல்லை.

இவர்களைப்போல, மேலும் பல சாட்சிகள் மீண்டும் சாட்சியம் என்ற பெயரால் அழைக்கப்பட்டபோது, அவர்கள் எல்லாம் தாங்கள் முதலில் அளித்த சாட்சியம் கட்டாயத்தின் பேரில் அளிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் பல்டி அடித்த சாட்சிகள் என்று (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் சேர்க்கவில்லை.

எந்தெந்த சாட்சிகள் இவ்வாறு மாறினார்கள் என்பதற்கு சில உதாரணங்களைத் தந்துள்ளோம். இதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் எந்த அளவிற்கு அரசு தரப்பினர் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

76 சாட்சியங்கள் இவ்வாறு திரும்ப அழைக்கப்பட்டவர்களாகும். இவர்களில் பெரும்பாலோர் முன்னரே குறுக்கு விசாரணை செய்யப்பட்டவர்களாகும். ஏன் இத்தனை பேர் மீண்டும் அழைக்கப்பட்டார்கள் என்று நீதிமன்றம் கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் (ஜெயலலிதாவின்) மூத்த வழக்கறிஞருக்கு முன்பு நேரம் இல்லாத நிலையிருந்ததால், தற்போது அவர்கள் எல்லாம் மறு விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டது. இதற்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை. இது ஒன்றே நேர்மையான விசாரணை நடக்கவில்லை என்பதை அறிவிப்பதாக உள்ளது. தீர்ப்பின் பாதை திருப்பி விடுவதைப் போலத் தோன்றுகின்றது.

மேலே விளக்கியிருக்கின்ற கருத்துகளையெல்லாம் பார்க்கும்போது, நீதியின்பால் மக்களுக்குள்ள நம்பிக்கை குறைகின்ற அளவிலே நிலைமைகள் உள்ளன. **ஏற்கனவே விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணையும் முடிவுற்ற சாட்சிகளைச் சாதாரண ஒரு காரணத்தைக் கூறி மீண்டும் திருப்பி அழைத்து விசாரணை நடத்தியிருக்கக் கூடாது. இந்தச்** செயல்கள் இரண்டாவது குற்றவாளி, (ஜெயலலிதா) மீண்டும் இந்த மாநிலத்தின் முதல் அமைச்சராகப் பதவியேற்ற பிறகு நடந்தது என்பதும், அவரது அரசால் புதிய அரசு வழக்கறிஞர் நியமிக்கப்பட்ட பிறகு, அவர் இதற்கெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்திருக்கிறார் என்பதும் நீதி எந்த அளவிற்கு வளைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான தெளிவினைத் தருகின்றது. (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர், பல்டியடித்த சாட்சிகள் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதே விசாரணை நேர்மையாக நடத்தப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது. அத்தகைய சாட்சிகள் மீது புதிய (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் எந்தக் குறுக்கீடும் நடத்தாமல் இருந்ததிலிருந்து, (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் குற்றவாளிகளோடு ஒன்றிப் போய்விட்டார் என்பதை எடுத்துக்காட்டி, ஒட்டுமொத்தமான மக்கள் மனதில் நேர்மையான நீதி கிடைக்காதோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நீதியின் பாதை திசை திரும்பிவிட்டது என்பதற்கான பலத்த அடையாளம் **தெரிகிறது.**

இந்த நிலையில் மனுதாரரின் (பொதுச் செயலாளர் பேராசிரியரின்) மனதிலே, இந்த வழக்கு பற்றிய சந்தேகம் ஏற்பட்டதில் தவறில்லை. அவருக்கு மட்டுமல்ல, மக்கள் மனதிலும் நீதி வழங்கப்படாமல் போய் விடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டதில் வியப்பில்லை."

இவ்வாறு கருத்துகளைத் தெரிவித்த உச்சநீதி மன்றம் முடிவாக தெரிவித்த ஆணை வருமாறு :-

"சென்னை சிறப்பு நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கு விசாரணையை கர்நாடக மாநிலம் பெங்களூரில் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும். அந்த நீதி மன்றத்தை, கர்நாடக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஒரு மாதத்தில் அமைக்க வேண்டும்.

வழக்கை நடத்த மூத்த வழக்கறிஞரை அரசு வழக்கறிஞராக நியமிக்க வேண்டும். வழக்குத் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தமிழக அரசு, பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆறு வாரத்தில் இப்பணிகள் முடிக்கப்பட வேண்டும். அதன்பிறகு அன்றாடம் விசாரணை நடை பெற வேண்டும். அரசு வழக்கறிஞருக்கான சம்பளத்தை கர்நாடக அரசு தர வேண்டும். அதை, தமிழக அரசு கர்நாடக அரசுக்குத் திரும்பச் செலுத்தவேண்டும். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விசாரணையின்போது சாட்சியம் அளிக்க நேரில் ஆஜராக வேண்டும். முதல்வராக இருந்தாலும், யாராக இருந்தாலும் நீதிமன்றத்தின் முன் அனைவரும் சமமே. சென்னையிலேயே இருந்து கொண்டு நேரில் வந்து சாட்சியம் அளிக்காமல், கேள்வி பதில் மூலம் ஜெயலலிதா சாட்சியம் அளித்ததற்கு (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் எந்த ஆட்சேபமும் எழுப்பாமல் இருந்தது ஆச்சரியமாக உள்ளது. இது கண்டிக்கத்தக்கது. இந்த வழக்கில் 76 சாட்சிகளில், 64 பேர் ஒன்றன்பின் ஒன்றாக பல்டியடித்த போது (அ.தி.மு.க.) அரசு வழக்கறிஞர் தனது கடமையைச் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது. ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்ற பிறகுதான் இந்நிலை ஏற்பட்டது.

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சாட்சிகளை அரசு வழக்கறிஞர் மீண்டும் விசாரிப்பதற்கு அனைத்து உரிமைகளும் அளிக்கப்படுகிறது. அந்த சாட்சிகள், முதலில் அளித்த சாட்சியத்திலிருந்து மாறுபட்டு சாட்சியம் அளித்து, பெங்களூரிலும் அதே நிலையைக் கடைப்பிடித்தால், பொய் சாட்சி சொன்ன குற்றத்துக்காக அவர்கள்மீது வழக்குத் தொடரவும்

அனுமதியளிக்கப்படுகிறது. சாட்சிகள் பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் சாட்சியம் அளிக்க அச்சம் தெரிவித்தால், கர்நாடக அரசு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரை, வழக்கு விசாரணை நேர்மையாக நடைபெற்றால் மட்டும் போதாது. அவ்வாறு நடைபெறுவதாக பொதுமக்கள் கருத வேண்டும். ஆனால், இந்த வழக்கைப் பொறுத்தவரை, விசாரணை நேர்மையான முறையில் நியாயமாக நடைபெறவில்லை. அதை அப்படியே விட்டு விட்டு, உச்ச நீதி மன்றம் வேடிக்கை பார்க்க முடியாது. எனவே, இந்த வழக்கை பெங்களூருக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவிடுகிறது."

உடன்பிறப்பே,

இதுதான் உச்சநீதிமன்றம் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு குறித்து வழங்கிய தீர்ப்பாகும். அதன் அடிப்படையில்தான் தற்போது அந்த வழக்கு பெங்களூரில் நடைபெறுகிறது. அந்த வழக்கில் இடையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையாக, அதாவது ஜெயலலிதா, வெளிநாட்டில் வாங்கிய ஓட்டல் குறித்த வழக்கையும், 65 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்கையும் தனித்தனியாக நடத்துவதா? அல்லது இரண்டு வழக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து நடத்துவதா? என்பது குறித்து மனு தாக்கல் செய்யப்பட்டு, அதன்மீது இரு தரப்பினரும் வாதங்களை நடத்தி, அதற்குப் பிறகுதான் தற்போது பெங்களூர் நீதிபதி தீர்ப்பளித்து, 29ஆம் தேதி முதல் தொடர்ந்து விசாரணை நடைபெறுமென்று அறிவித்திருக்கிறார்.

பெங்களூர் நீதி மன்றத்தில் நேற்று நீதிபதி வழங்கிய தீர்ப்பு, "தினத்தந்தி" நாளிதழில் வெளி வந்திருப்பதை அப்படியே உன் பார்வைக்கு வைக்கிறேன்.

"சென்னை ஐகோர்ட்டு 20-6-2005 அன்று வழங்கிய விளக்கத்தின்படி, இரண்டு வழக்கையும் தனித்தனியாக விசாரிக்கலாம் என்ற பழைய கருத்தை நான் கைவிடுகிறேன். இந்த வழக்கில் 259 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 2,341 தஸ்தாவேஜுகள் பதிவு

செய்யப்பட்டிருக்கின்றன என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. சொத்துச் சேர்ப்பு வழக்கில், அரசு தரப்பில் ஏராளமான சாட்சிகளை விசாரித்திருக்கிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் லண்டன் ஓட்டல் வழக்கில், குற்றச்சாட்டுக்கு முந்திய விசாரணை என்ற நிலையிலேயே வழக்கு இருக்கிறது. **எனவே இந்த நிலையில்,** இந்த வழக்குகளை சேர்த்து விசாரிக்கலாம் என்று உத்தரவிடலாம்.

ஏற்கனவே சொத்துக் குவிப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளை, அரசு தரப்பிலோ அல்லது எதிர் தரப்பிலோ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்றால் விசாரிக்கலாம். இரண்டு வழக்குகளிலும் சம்பந்தப்பட்டு இருக்கும் பணம் ஒரே அளவானதால், இரண்டு வழக்கையும் சேர்த்து விசாரிப்பது சரியானதாக இருக்கும். கூடுதல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்ய அரசு தரப்புக்கு வாய்ப்பு இருக்கிறது. புதிய சாட்சிகளை அவர்கள் ஆஜர் செய்யலாம். அவர்களை எதிர் தரப்பு, குறுக்கு விசாரணை செய்யலாம். லண்டன் வழக்கில் சாட்சிகள் விசாரணை, சொத்து சேர்ப்பு வழக்கில் சாட்சிகளை விசாரித்து முடிந்த பிறகுதான் தொடங்கும். இந்த கருத்துகளை மனதில் கொண்டு சொத்து சேர்ப்பு வழக்கையும், லண்டன் ஓட்டல் வழக்கையும் சேர்த்து ஒரே வழக்காக நடத்த அனுமதிக்கிறேன்"

உடன்பிறப்பே,

இந்த வழக்கு குறித்து தெளிவு பெறாத நிலையில், குழப்பமுடையவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு இந்த விளக்கங்களைத் தெளிவுபடுத்த வேண்டியது உன்னுடைய கடமை என்பதற்காகத்தான் இந்தத் தகவல்களைத் தந்துள்ளேன். இப்போது கிடைத்துள்ள இடைக் காலத் தீர்ப்புக்குதான் அ.தி.மு.க. வினர் நேற்றையதினம் பட்டாசுகளை வெடித்து, இனிப்புகளை வழங்கி, வாண வேடிக்கை நடத்தியிருக்கிறார்கள். பணம் பாதாளம் வரையில் பாயும் என்கிறபோது, பட்டாசு வரைக்கும் பாயாதா என்ன?

அன்புள்ள,

மு.க.

29-6-2005

3155. தன் நெஞ்சே தன்னைச் சுட்டுத் தடையாணை கோருகிறதா?

உடன்பிறப்பே,

அரசியல் கட்சிகள் ஒட்டு மொத்தமாக வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பங்களை தாக்கல் செய்யலாம் என்றும், ஆனால், அப்படி மொத்தமாக அளிக்கும் விண்ணப்பங்களில், போலி வாக்காளர் விண்ணப்பங்கள் இருக்குமேயானால், முக்கிய நிபந்தனையாக அந்த விண்ணப்பங்களை எந்த அரசியல் கட்சியின் நிர்வாகி தாக்கல் செய்தாரோ அவர்தான் முழுப் பொறுப்பாளியாவார் என்ற அடிப்படையில், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் ஆரம்பத்திலேயே அறிவுறுத்தியிருப்பதை ஏற்றுக்கொண்டுதான், அதாவது அந்த நிபந்தனைக்குச் சம்மதம் தெரிவித்துத்தான் அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் தேர்தலுக்கான வாக்காளர்களைச் சேர்த்தார்கள்.

அப்படி வாக்காளர்களை மொத்தமாக சேர்த்துக் கொடுத்த பட்டியலில்,

18 வயதுக்குக் குறைந்தவர்களை -
முகவரியே இல்லாதவர்களை -
தொகுதிக்கே தொடர்பில்லாதவர்களை -
வெளியூர்க்காரர்களை -
இன்னும் பிறக்காதவர்களை -
பிறந்திருந்தாலும் உயிரோடு
இல்லாதவர்களை-

இப்படி போலி வாக்காளர்கள் பெயர்களைச் சேர்த்து, அமைச்சர்களின் ஆணைக்கிணங்க - அதிகாரிகள் ஒத்துழைப்புடன், பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில், ஒரே நாளில் 13 இலட்சம் பேர் என்று - 165 தொகுதிகளில் மட்டும் - அதிக வாக்காளர்களின் மொத்தப் பட்டியலாக அளித்தவர்கள், ஆளுங்கட்சிக்காரர்களான அ.தி.மு.க.வினர்தான்! அப்படிப்

போலி வாக்காளர் மொத்தப் பட்டியல் கொடுத்தவர்கள் மீது, அவர்கள் அரசியல் கட்சி நிர்வாகிகளாயினும், அதிகாரிகளாயினும் நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல் ஆணையம் தெளிவாகவும் - திட்டவட்டமாகவும் அறிவித்துள்ள நிலையில் - தமிழ்நாட்டில் எந்தக் கட்சியினரும் அடையாத பதற்றத்தையும், அச்ச உணர்வையும், ஆளுங்கட்சியான அ.தி.மு.க. மட்டும் அடைந்து, அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்களைக் கொண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில்,

> **“சந்தேகத்திற்குரிய வாக்காளர் விண்ணப்பங்களை பரிசீலிக்கத் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றும், அதில் தவறு இருக்குமேயானால், அத்தகைய பெயர்ப் பட்டியலை மொத்தமாகக் கொடுத்த அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும், அப்படி நடவடிக்கை எடுப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும், அதிலே குறிப்பிட்ட தனிப்பட்ட வாக்காளர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.**

இது எப்படியிருக்கிறதென்றால், எனக்கு ஒரு வேடிக்கைக் கதைதான் நினைவுக்கு வருகிறது. இந்தக் கதை அரிஸ்டாட்டில் காலத்திலோ - பிளேட்டோ அல்லது சாக்ரடீஸ் காலத்திலோ நடந்ததல்ல - சரி! காலத்தை விடுவோம் - கதைக்கு வருவோம்!

திருவிழா நடந்த ஊர் ஒன்றில், காவல்துறை அதிகாரிகள் தங்கள் கடமையில் கவனமாக இருக்க வேண்டுமென்பதற்காக - முதல் கட்டமாக, விழா நடக்கும் எல்லாப் பகுதிகளிலும் “திருடர்கள் எச்சரிக்கை” என்ற அறிவிப்புப் பலகைகளை வண்ண வண்ணமாக எழுதி வைத்திருந்தனர். அவைகளைப் பார்த்த சில இளவெட்டுக்கள் கூட, “இதென்ன அறிவிப்பு? திருடர்களை எச்சரிக்கையாகத் திருடச் சொல்கிறார்களா? அல்லது திருடர்களிடம் பொது மக்களும், வியாபாரிகளும் எச்சரிக்கையாக இருந்து, தங்கள் பொருள்களைக் காப்பாற்றிக் கொள்ளச் சொல்கிறார்களா?” என்று கிண்டலும், கேலியும் செய்தார்கள்.

கூட்டத்தில் திடீரென ஒரு கூச்சல் - “அய்யோ என் கடையில் கம்மல், மூக்குத்தி, கழுத்துச் சங்கிலி எல்லாம் கொள்ளை!

கொள்ளை!" இப்படி ஒரு கடைக்காரரும், அந்தக் கடை சிப்பந்திகளும் கதறியழுது, கூச்சல் போட்டார்கள்!

காவல் துறை அதிகாரி, அந்த இடத்துக்கு உடனடியாக விரைந்தார் - விபரமறிந்தார் - அவரது ஆணையின்படி, போலீசார் தீவிரத் தேடலில் ஈடுபட்டு, திருவிழா முடிவதற்குள்ளாகவே, அவர்கள் சந்தேகப்பட்ட ஐந்து பேரைக் கொண்டு வந்து பெரிய அதிகாரியின் முன் நிறுத்தினார்கள். அந்த ஐவரும் மிகுந்த கோபத்துடன் அதிகாரியைப் பார்த்து;

"நாங்கள் யார் தெரியுமா? இந்தத் திரு விழாவை நடத்துகிற கோயில் தேவஸ்தானத்து அறக்கட்டளையின் தலைவரும், அறங்காவலருமாவோம். அறங்காவலர்களாகிய எங்கள் மீதே இப்படியொரு அவதூறா?"

என்று ஆர்ப்பரித்தார்கள். அப்போது அதிகாரியைப் பார்த்து தலைமைக் காவலர் சொன்னார் -

"அய்யா! நாங்கள் வேண்டுமென்று இவர்கள் மீது அவதூறு கூறவில்லை. அப்படியொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் நடந்தது என்னவென்றால், திருவிழா நகைக்கடையில் கம்மல், மூக்குத்தி, கழுத்துச் சங்கிலி காணாமல் போனதைக் கண்டுபிடிப்பதற்காக, திருவிழாவுக்கு வந்தவர்களில் அந்தக் கடையில் வந்து யார் யார் நகை வாங்கினார்களோ, அவர்களையெல்லாம் வரிசையாக நிற்கச் செய்தோம். பொருள்கள் காணாமற் போனது உண்மையாக இருப்பதால், அந்தப் பொருள்களைக் கண்டுபிடிக்க, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, அந்த வரிசையில் நின்ற எல்லோருடைய மடிகளையும் அவிழ்க்கச் சொன்னோம். இந்த ஐந்து பேரைத் தவிர மற்ற எல்லோரும் மடிகளை அவிழ்த்துக் காட்டிவிட்டார்கள். அதற்கு ஆட்சேபணையே தெரிவிக்கவில்லை. ஆனால் இவர்கள்தான், தங்களை அறங்காவலர்கள் என்று கூறிக் கொண்டு மடிகளை அவிழ்த்துக்காட்ட மறுக்கிறார்கள்."

இவ்வாறு தலைமைக் காவலர் சொன்னதும், காவல்துறை பெரிய அதிகாரி, அறங்காவலர் ஐவரையும் பார்த்து,

"ஏனய்யா - அத்தனை பேரும் வரிசையில் நின்றவர்கள் மடியை அவிழ்த்துக் காட்டிவிட்ட பிறகு, நீங்கள் மட்டும் மறுப்பதால், களவாடப்பட்ட இந்த கம்மல், மூக்குத்தி, சங்கிலியெல்லாம் உங்கள் மடியில் இருப்பதாகத்தானே அர்த்தம்!"

என்று கூறிக் கொண்டே அவர் கையினாலேயே ஒவ்வொரு அறங்காவலரின் மடியையும் பிடித்து மெல்ல இழுத்தார். கடையில் களவு போன அந்த நகைகள் அவர்கள் மடிகளில் இருந்து 'பொல பொல' வெனக் கீழே விழுந்தன.

அறங்காவலர்களை அரசுக் காவலர்கள், அழைத்துச் செல்ல வேண்டிய இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

"காணாமல் போன நகைகளைக் கண்டு பிடியுங்கள் - அதற்காக எங்கள் மடியைப் பிடித்துப் பார்க்காதீர்கள் - அப்படியே பார்த்தாலும் எங்கள் மீது நடவடிக்கை எடுக்காதீர்கள் - காரணம்; நாங்கள் அறங்காவலர்கள்! - நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அந்த நகைகள் மீது எடுங்கள்!"

என்று அந்த அறங்காவலர்கள் சொல்லியிருந்தால் அது எவ்வளவு வேடிக்கையான கதையாக இருக்குமோ, அத்தகைய கதையாகத்தான் இருக்கிறது இங்குள்ள அ.தி.மு.க. அமைச்சர்களின் கதை!

"விண்ணப்பதாரர்களான வாக்காளர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, அவர்களை வாக்காளர்களாகச் சேர்த்துப் போலிப் பட்டியல் கொடுத்த அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது" என்று நீதிமன்றத்தில் மனு செய்துள்ளதற்குப் பதிலாக, தேர்தல் ஆணையம், பின்வரும் விளக்கத்தை நீதிமன்றத்தில் அளித்திருக்கிறது. அந்த விளக்கம் ஏடுகளில் வெளி வந்துள்ளதை அப்படியே இங்கு தருகிறேன்.

தேர்தல் கமிஷன் பதில்.

இந்த வழக்கிற்குத் தேர்தல் கமிஷன் சார்பில், பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த பதில் மனுவில் கூறியிருப்பதாவது:-

"தமிழ்நாட்டில், ஒரே நாளில் மட்டும் வாக்காளர்களைச் சேர்க்க 12 லட்சத்து 70 ஆயிரம் விண்ணப்பங்கள்

ஒட்டுமொத்தமாகத் தாக்கல் செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து புகார்கள் வந்தன. இதனால் தேர்தல் கமிஷன் ஒரு குழுவை அனுப்பி ஆய்வு செய்தது. நிறைய விண்ணப்பங்களில் விண்ணப்பதாரரின் பிறந்த தேதியோ, விண்ணப்பதார்களின் கையெழுத்தோ இல்லை. 18 வயது நிரம்பாதவர்கள் கூட விண்ணப்பித்துள்ளனர். எனவே. போலி விண்ணப்பங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க அடிப்படை முகாந்திரம் உள்ளது. ஒட்டுமொத்தமாக விண்ணப்பங்கள் தாக்கல் செய்த அரசியல் கட்சிதான் போலி விண்ணப்பங்களுக்கு முழுப் பொறுப்பாகும். எனவே, எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது, வாக்காளர்மீதுதான் நடவடிக்கை என்று கூறும் வாதம் சரியல்ல. எனவே எந்தக் கட்சியாக இருந்தாலும், விண்ணப்பங்கள் சரியானதாக இல்லாவிட்டால், அக்கட்சிதான் பொறுப்பு. போலிப் பட்டியல் இருந்தால், அந்தக் கட்சிதான் பொறுப்பு. எனவே அக்கட்சியின் நிர்வாகிகள் மீது, நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு.”

இவ்வாறு தேர்தல் கமிஷன் பதில் அளித்தது.

உடன்பிறப்பே,

ஜனநாயகத்தின் அடி வேரையே அறுத்துவிடுவது போல, தேர்தலுக்கு முன்பே தேர்தலில் வாக்களிப்போர் பட்டியலில் தெகிடு தத்தம் செய்து விட முயன்று - முக்கால் கிணறு தாண்டிவிட்டவர்கள், இப்போது கிணற்றுச் சுவரில் மோதிக் கொண்டு - மூக்குடைபட்டு நிற்கிற காட்சியைக் கண்டு நாடே சிரிக்கிறது! - மூடி மறைக்க வெட்கங் கெட்டுப் போய் ஏதேதோ,திசை திருப்பப் பார்க்கிறார்கள்!

தேர்தல் ஆணையம் நியாயமாக - நேர்மையாக - ஜனநாயகம் காத்திட முற்படும் என்றே நாம் எதிர்பார்த்திருப்போம்!

அன்புள்ள,

மு.க.

30-6-2005

3156. வெள்ளி முளைக்கிறது; துள்ளி எழுக நீவிர்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலுக்கு, இன்னும் ஓராண்டுக் காலம் இருப்பதாக நீயும், நானும் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த ஓராண்டு இடைவெளி இருக்கிறதென்றாலே அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடவேண்டுமென்று அரசியல் அரங்கில் பல கட்சிகள், பணித் தொடக்கத்தில் ஈடுபட்டுள்ளன என்பதை, நாளேடுகள் சில வற்றில் செய்திகளாகவும், புலனாய்வு ஏடுகளில் வாரந்தோறும் யூகங்களாகவும் காணக்கூடிய அளவுக்குக் காற்று வீசத் தொடங்கியுள்ளது என்பதிலிருந்தே எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

பொதுத் தேர்தல் நிறைவுற்று, கடந்த முறை ஆட்சி அமைக்கப்பட்டது மே திங்களில்தான்! இப்போதும் அதே மே திங்களிலேயே பொதுத் தேர்தல் நிறைவுறக்கூடும்! எனக் கருதுவதற்கு சிறிது மாற்றமாக, கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும், அசாம், புதுவையிலும் மார்ச் மாதத்திற்குள்ளாக பொதுத் தேர்தல் நடைபெற வேண்டியுள்ள சூழ்நிலையில், தமிழகத் தேர்தலையும் அந்த மாநிலத் தேர்தல்களுடன் இரண்டு மாதங்கள் முன்கூட்டியே! அதாவது மார்ச் மாதத்திலேயே சேர்த்து நடத்திவிடத் தேர்தல் ஆணையம் முடிவெடுத்து அறிவிக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை மாற்றங்களை அறிந்து கொள்வதிலும், அதன் விளைவுகளை "ஆரூடம்" போலத் தெரிந்து கொள்வதிலும் காட்டப்படும் ஆர்வத்தைப் போலவே, பொதுத் தேர்தல் குறித்த ஆர்வமும் பொங்கி எழுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அந்த ஆர்வத்தை அடக்கிக் கொள்வதில் ஆற்றலைக் காட்டுவதோ, பொங்கி எழும் ஆர்வத்தைப் பூட்டி வைப்பதோ, "கால தாமதம்"

எனும் "கிரிமினல்" (?) குற்றப் பிரிவு வரிசையில் நம்மைக் கொண்டுபோய் விடுமே என்ற அச்ச உணர்வோடு, இப்போதே பணிகளை வகுத்துக் கொண்டு தேர்தல் களம் இறங்கிட வேண்டும் என்பதற்காகவே இக்கடிதம் எழுதுகிறேன்.

வாக்காளர் பட்டியலை ஆளுங்கட்சியினர் தமது கையில் எடுத்துக் கொண்டு, அதிகாரிகள் சிலரின் அல்லது பலரின் துணையோடு - ஒரே நாளில் 165 தொகுதிகளில் மட்டும் 13 லட்சம் பேர் வாக்காளர் விண்ணப்பதாரர் என்று ஒட்டுமொத்தக் கூத்தடித்த போது, கோவை, கழக மாநாடு நிறைவுற்ற அடுத்த நாளே கோத்தகிரியிலிருந்து நான் எடுத்த முயற்சியினாலும், அந்த முயற்சிக்குத் துணை நின்ற தோழமைக் கட்சிகளின் கூட்டுக் குரலின் ஒலியினாலும் விழிப்புற்றத் தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் ஆளுங்கட்சியினர் நடத்திய தில்லுமுல்லுகளை நேரடியாகவே ஆய்ந்தறிந்து, ஆவன செய்ய முன்வந்தமையினால், இந்த அளவாவது ஜனநாயகத்தின் அடிவேர் முழுமையும் வெட்டி எறியப்படாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இல்லையேல் 12 வயது 13 வயது பாப்பாக்கள், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று ஓட்டுச் சாவடிக்கும் வந்திருப்பார்களே! ஆயிரக்கணக்கில் - இலட்சக்கணக்கில்!

இப்படி, வாக்காளர் பட்டியலை வகைப்படுத்திடும் பணியே இன்னமும் முழுமையாக நிறைவுறாமல், நமது கூட்டணியின் செயல்வீரர்கள் ஆங்காங்கு செயலாற்று, வதையும் - அதற்கு ஒவ்வொரு பகுதியிலுமுள்ள நமது கூட்டணிக் கட்சிகளின் அமைப்புகளும், குறிப்பாக, தி.மு.க. அமைப்புகளின் நிர்வாகிகளும் எவ்வாறு இப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்ற விபரங்களையும் - அறிந்துகொள்வதற்காகவும், அயராது தொடர்வதற்காகவும்தான், 18-7-2005 முதல் 30-7-2005 முடிய காலையும், மாலையும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாவட்ட வாரியாகக் கழக அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடாகியிருக்கிறது.

இவையும், இவை தொடர்பான தளரா உழைப்பு நல்கும் பணிகளும்கூட பொதுத் தேர்தல் ஆயத்தப் பணிகளின் பட்டியலில் சேரக் கூடியவைதான்.

புலனாய்வு ஏடுகள், சாதனங்கள் காட்டுகின்ற புள்ளி விபரங்கள், கருத்துக் கணிப்புகள் நம்மை ஊக்கப்படுத்துகின்ற

அளவுக்கு, உபயோகப்படுத்திக்கொள்ளப்பட வேண்டியவைகளே தவிர, இதுதான் முடிவாக இருக்கும் என்று உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டியவை அல்ல. அதற்காக உதாசீனப்படுத்திடவும் தேவையில்லை என்பதை உணர்ந்தே, உடன்பிறப்புகளும், உண்மைச் செயல் வீரர்களும் உழைத்திட முனைந்திட வேண்டுமென்பதே என் வேண்டுகோளாகும்.

பொது மக்களிடத்திலே நாம் எடுத்து வைக்க வேண்டிய பொதுவான ஒரு கருத்து, அதாவது அவர்களுக்கு விளக்கிட வேண்டிய மிக முக்கியமான ஒன்று என்னவென்றால் - 2001இல் பொதுத் தேர்தல் முடிந்து ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு, சகல தரப்பாரிடமிருந்தும் சகட்டு மேனிக்கு அவர் பறித்த சலுகைகள், உடைத்தெறிந்த உரிமைகள், ஏவி விட்ட அடக்குமுறைகள் - அவற்றையும் நினைவில் பதித்துக்கொண்டு, இப்போது 2006ல் பொதுத் தேர்தலை சந்திக்க இருக்கும் சூழலில், பறிக்கப்பட்ட சலுகைகளையும், உரிமைகளையும் - பரிவுடன் திருப்பித் தருவதுபோல் "பாவலா" காட்டுகிறாரே! இதைச் சீர்தூக்கிப் பார்த்தாலே, இந்த வேதாளம் இனியும் "முருங்கை மரம்" ஏறாது என்பது என்ன நிச்சயம் என்பதை வஞ்சகமறியாத வாக்காளப் பெரு மக்கள் எண்ணிப் பார்த்திடச் செய்ய வேண்டுமே! அதற்கான புள்ளி விபரங்களும் - அடக்குமுறை நிகழ்வுகளின் பட்டியலும் - அவசரச் சட்டக் கூத்துகளும் ஆதாரபூர்வமாகவும், தேதி வாரியாகவும், பிரச்சாரக் குழுவினரின் கைகளில் மட்டுமல்லாமல், தேர்தல் பணியாற்றும் செயல்வீரர்கள் அனைவரின் கைகளிலும் இருந்திடல் வேண்டும்.

அவ்வப்போது நமது கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் எடுத்துரைக்கும் ஆதாரப்பூர்வமான தகவல்கள், ஏடுகள் வழங்கிடும் விபரங்கள், அவற்றையன்னியில் அடிப்படை தேவைகள்கூட நிறைவு செய்யப்படாத நிலையில், அன்றாடப் பிரச்சினைகளால் அல்லற்படும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வழிமுறைகள், அனைத்தும் மனப்பாடமாக அமைந்து, அவற்றை மனப்பூர்வமாக நிறைவேற்றிட உறுதி பூண்டு உழைக்கும் திண்மை - நிரம்ப வேண்டும் நமது அணியின் செயல்வீரர்கள் அனைவருக்கும்.

இப்போது நான் எதையும் குறிப்பிட்டு எழுத விரும்பவில்லை. காரணம், வருகிற 13-7-2005 அன்று மாலையில், நமது தோழமைக்

கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் - சுட்டிக்காட்டப்படும் பிரச்சினைகளின் வரிசையில் அவற்றில் பல, தீர்மானங்களாக இடம் பெறக் கூடும் என்பதால்.

ஆனால் குறிப்பாக, ஒன்றை மட்டும் கூறுவேன். இன்றுடன் சாலைப் பணியாளர்களின் தற்கொலைச் சாவு எண்ணிக்கை 66 என்று ஆகியிருக்கிறது - பத்தாயிரம் சாலைப் பணியாளர்கள் - 13 ஆயிரம் கிராம நலப் பணியாளர்கள் வேலை வாய்ப்பு வழங்கும் நல் நோக்கில் தி.மு.க. ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள். ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக அந்த ஏழைபாழைகள் கழுத்தில்தான் கத்தி வைக்கப்பட்டது ஜெயலலிதா ஆட்சியில்!

எனவே, பழிவாங்கும் போக்கு - பழி போடும் நச்சு நினைப்பு - ஓர் ஆட்சியின் செயல்முறையாகவும், சிந்தனையாகவும் இருக்குமேயானால், அந்த ஆட்சியை அகற்றுவது தவிர, வேறு அலுவல் உண்டோ? என்று ஆவேச உணர்வு தோன்ற வேண்டாமா?

"கோர்ட் உத்தரவை பின்பற்றுவது தவிர, வேறு வழியில்லை" என்று நுழைவுத் தேர்வுக்காக ஜெயலலிதா பேசும் பேச்சு, சாலைப் பணியாளர்கள் பிரச்சினையில் மட்டும் காற்றோடு போச்சே! அது ஏன்? என்ற கேள்வி எழவேண்டாமா?

தற்கொலை செய்து கொண்டு வீழ்ந்த 66 பிணங்களின் சார்பாக கேட்கிறேன்.

உடன்பிறப்பே! இந்த "கேட்கிறேன்" என்ற சொல், "கேட்கிறோம்" என்று மக்கள் குரலாக மாறும் நாள் தானே! இந்த மதோன்மத்தர்களின் ஆட்சியை - மமதையாளர்களின் ஆட்சியை மாற்றும் நாள்!

அந்நாள் விரைந்து வரக்கூடும் என அதோ, வெள்ளி முளைக்கிறது - துள்ளி எழுக நீவிர்! தொண்டு தொடர்ந்திட!

வாய்மைக்கு வழிவகுப்போம்!

தூய்மைக்கே ஆட்சி பீடம் அமைப்போம்!

அன்புள்ள

மு.க.

10-7-2005

3157. விஜயனுடன் பேசியது; விழிப்புற்று, விடியல் காணவே!

உடன்பிறப்பே,

இன்று வழக்கம்போல் விடியற்காலை எழுந்தவுடன் முதல் வேலையாக சுப்ரீம் ஸ்டார் தம்பி சரத்குமார் அவர்களுக்கு, அவரது சகோதரர் சுதர்சன் அவர்கள் திடீர் மறைவு குறித்து எனது ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்தி, ஆறுதலும் வழங்கிடும் மடல் ஒன்று எழுதி, அதனை ஒருவர் வாயிலாக அவருக்குக் கொடுத்தனுப்பினேன். தொலைபேசியிலும் இருவரும் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டோம்.

எதிரே மேஜையில் இருந்த வார ஏடுகள் விகடன், குங்குமம், குமுதம் ஆகியவற்றின்மீது பார்வை பதிந்தது. தேர்தல் கணிப்பு என்று அட்டையில் காணப்பட்ட அந்த வாசகம், குமுதம் இதழினை மீண்டும் புரட்டிப் பார்க்கத் தூண்டியது. வர இருக்கும் சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பு என்று, கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டுள்ள "குமுதம்" இதழில் எழுதப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் முக்கியமான பகுதியை இதோ உன் கவனத்துக்கும் கொண்டு வருகிறேன். அது வருமாறு :-

"கொல்லுமாங்குடி, பேரளம், பூந்தோட்டம், சன்னாநல்லூர், திருக்குவளை, திருவாரூர் என்று சென்ற இடத்திலெல்லாம், நம் கருத்துக் கணிப்புக்கு நல்ல வரவேற்பு. திருத்துறைப்பூண்டி அருகே இருக்கும் இராயநல்லூர் என்கிற சிறிய கிராமத்தில் டீக்கடை வைத்திருக்கும் அசோகன் (அருமையான 'டீ' போட்டுத் தந்தார்) தி.மு.க. கட்சிக்காரர். ஆனாலும் ஆதங்கத்துடன் பொங்கினார். "அ.தி.மு.க. காரங்க தேர்தல் வேலைகளை இப்பவே ஜரூரா ஆரம்பிச்சுட்டாங்க.... புது வாக்காளர் சேர்க்கிற ஒவ்வொரு கட்சிக்காரனுக்கும்

தனி அமௌண்ட்டு..... சைக்கிள் பரிசு, அது இதுன்னு இப்பவே பிச்சு ஒதர்றாங்க.... தி.மு.க.வுல பாருங்க, அடிமட்டத் தொண்டனுக்கு எந்தப் பாராட்டும், பரிசும் இல்ல. அட.... அதை விடுங்க! காசு, பணத்துக்கு ஆசைப் பட்டு வேலை செய்யறவன் இல்லை தி.மு.க.காரன். ஒரு சின்ன ஆறுதல் வார்த்தைகூடக் கிடையாது. பதவி எல்லாமே பரம்பரையாக இருக்கிறவனுக்குத்தான்..... தலைவர் இதையெல்லாம் கவனிச்சு சரி செய்யணும்ங்க... இல்லைன்னா தேர்தல் வரும்போது நிலைமையே மாறிடும்!" என்றார் படபடப்பாக. பொதுவாகவே, தி.மு.க. காரர்களிடம் இந்த மனநிலை இருப்பதைப் பார்க்க முடிந்தது."

இப்படி எழுதப்பட்டிருந்ததைப் படித்தவுடன், காலை ஆறு மணிக்கே நாகை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி விஜயன் எம்.பி., அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நல்ல வேளை! அவர் வீட்டில் இல்லை. விடியற்காலையிலேயே எழுந்து வெளியில் சென்றிருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். வெளியில் சென்றதற்காக அல்ல, விடியற்காலையில் எழுந்த தற்காக!

பின்னர் அவர் வீடு திரும்பியதும் உடனடியாகத் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டார். 'குமுதம் படித்தாயா?' என்று கேட்டேன். படித்தேன் என்றார். அதில் இராயநல்லூர் அசோகன் சொன்னதைப் படித்தாயா? என்று கேட்டேன். "அதை இன்னும் படிக்கவில்லை! கருத்துக் கணிப்பு புள்ளி விபரம் மட்டும் பார்த்தேன்" என்றார். "ஏனய்யா! எதையும் முழுமையாகப் படிக்க வேண்டாமா?" என்று நான் கேட்டதும், சற்று அதிர்ந்து போனார்!

தம்பி விஜயன், இராயநல்லூர் அசோகன் குறிப் பிட்டிருப்பதுபோல "பரம்பரை" காரணமாகக் கழகத்தில் பதவி பெற்றவரல்ல! மறைந்த கம்யூனிஸ்டு தலைவர் ஏ.கே. சுப்பையா அவர்களின் மகன் - அவரிடம் நான் சொன்னேன், "உடனடியாக அந்த அசோகனைச் சந்தித்து அவரது மனக்குறை பற்றிக் கலந்து பேசுக!" என்று!

இப்படியொரு கட்டுரைக் குறிப்பு வந்துள்ளபடியால், அதனையே நான் வாய்ப்பாகக் கொண்டு நமது கழக நிலையை

விளக்கிட விரும்புகிறேன். அ.தி.மு.க. போன்று நமது திராவிட முன்னேற்றக் கழகம், பணத்தை வாரி இறைக்கும் ஐஸ்வர்ய பலம் வாய்ந்த அமைப்பு அல்ல! அதற்காகத் தொண்டாற்றும் செயல்வீரர்களைப் பட்டினியால் துடிக்க விட்டு வேடிக்கை பார்க்கும் குரூர எண்ணம் கொண்ட இயக்கமும் அல்ல!

"ஒரு சிங்கிள் டீ குடித்து விட்டு, தி.மு.க. தொண்டன் தேர்தல் பணி ஆற்றுகிறான்" என்று சட்டப் பேரவையிலேயே முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் பாராட்டைப் பெற்றதுதான், இந்தத் தொண்டர் கூட்டம்! இந்தச் செயல்வீரர்களின் பாசறை!

ஆனால், அவன் தோள் கொடுத்துத் தூக்கிவிடப்பட்டவர்களில் - சிலர், பதவிகளில் அமர்ந்து கொண்டு அவனைக் கண்டால் பாராமுகமாக இருந்தபோது, அவன் நெஞ்சை அது வாள் கொண்டு அறுத்தது போல் ஆயிற்று என்பதையும் நானறிவேன் - எனவே இராயநல்லூர் அசோகன் போன்றார்க்கு விளக்கம் சொல்லவே விழைகிறேன்! அவர் போன்றார் மீது வெகுண்டு வீழ்ந்திட அல்ல!

"என் போன்றார்க்கு, பாராட்டும் பரிசும் இல்லை" என்று அவர் கூறியதாகக் கட்டுரை கூறுகிறது!

"என்னுயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பு" என்று என் நெஞ்சகத்தில் பதிவாகியிருக்கிற அந்தப் பாசமிகு சொற்களுக்கு இணையான பாராட்டு இருப்பதாக நான் இதுவரையில் கருதிடவில்லை. அப்படி நான் அழைப்பதற்கேற்ற உடன்பிறப்புகளை நான் பெற்றிருப்பதும், என் மார்பில் ஒளி விடும் ஈடற்ற பதக்கமென்றுதானே நான் எண்ணிக் கொண்டு, கடந்து வந்த 82 ஆண்டுகளுக்காக மகிழ்ந்து இன்னும் கடக்க வேண்டிய ஆண்டுகளோ, மாதங்களோ, நாட்களோ, அவற்றையும் இந்த அன்பு உடன்பிறப்புகளோடு இணைந்து பணியாற்றியே கடந்திட வேண்டும் என்ற தணியாத ஆசையுடன்தானே, என் வாழ்வை, ஏற்றுக் கொண்ட கொள்கைகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன்.

உடன்பிறப்புகளை, உழைக்கும் செயல் வீரர்களை மறக்கவில்லை என்பதற்கு அடையாளம் தானே, அண்மையில்கூட என் பிறந்த நாளை முன்னிட்டு, கழகத்தின் இளைஞர் அணி சார்பாக கழகக் கிளை, நகரம், ஒன்றியம் போன்ற ஒவ்வொரு அமைப்பின் செயலாளருக்கும், முரசொலி மலரும் - வேறு

சில அன்றாடம் பயன்படுத்தக் கூடிய எளிய பொருட்களும் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு - பரிசுத் தொகுப்பாக அனுப்பி வைக்கப்பட்டது. கிராமப்புறத்தில் பழமொழி உண்டே! ஏழைக்கேற்ற எள் உருண்டையென்று, அதுபோல!

எள் உருண்டை ஆயினும், இதயக் குருதி தோய்ந்தது! பெற்றுக் கொண்டவர்களோ, வியர்வை மழையில் நனைந்து இயக்கம் காப்பவர்கள் - இந்த இணைப்பு, இலட்சங்களுக்கும் கோடிகளுக்கும் இணையாகுமா என்று இலட்சியப் பிடிப்புள்ள என் உடன்பிறப்புகள் எண்ணிட மாட்டார் - எண்ணிடவும் கூடாது! என்னையே நான் தந்திருக்கும்போது அந்த எண்ணம் வருவதும் தீது!

கழகத்தில் உழைத்து மறைந்தோராயினும், நலிந்த நிலையில் இருப்போராயினும், அவர்களையோ, அவர்கள் குடும்பத்தினரையோ தி.மு.க. அறக்கட்டளையும், தி.மு.க.வும் கைவிட்டதே இல்லையே! நெருக்கடி காலத்தில் 'மிசா' கைதிகளாக இருந்த கழகக் கண்மணிகளின் குடும்பங்களுக்கு, தலைமைக் கழகத்தின் சார்பில், மாதாந்திர உதவித் தொகை வழங்கப்பட்டதை யாராவது மறுத்திட இயலுமோ? ஆண்டுதோறும் பாரதிதாசன் பாட்டுப் போட்டியில் பரிசு பெறும் மாணவர்கள், முப்பெரும் விழாவில் சிறப்புச் செய்யப்படும் பல்வேறு வித்தகர்கள் எத்தனை பேர்! விருதுகள் பெற்றோர் வரிசையை மறந்திடப் போமோ?

இதை இவ்வாறு வளர்த்தி எழுதுவது, வெறுங்கையால் முழம் போடச் சொல்வதற்காக அல்ல என்பதும், கழகம் காத்திடும் தளநாயகர்களுக்கும், களம் எதுவாயினும், அது அறப்போர்க் களமாயினும் - தேர்தல் களமாயினும் - வீறுகொண்டெழும் செயல் வீரர்களுக்கும் - நான் சொல்லாமலே தெரியும் - வாட்களின் பளபளப்பு காட்டி, பார் எமது வாட்களின் கூர்மையை! என்று பயமுறுத்தப் பார்க்கும் பகைக் கூட்டத்தை; அந்த வாட்களின் பளபளப்பை மிஞ்சக் கூடியதாக, உடைந்த கண்ணாடித் துண்டுகளில் சூரிய வெளிச்சத்தைப் பிரதிபலிக்க வைத்து, வாட்களுடன் வரும் பகைக் கூட்டத்தின் பார்வையைக் கூசிடச் செய்து, பயந்தோட விரட்டிடும் ஆற்றல் நமக்கு உண்டு என்பதை மெய்ப்பித்தவர்கள் நாம்!

எனவே கவலைப்பட தேவையில்லை! கழக உடன்பிறப்புகளும், களம் நிற்கும் செயல்வீரர்களும்! கண்ணாடித்

துண்டுகளாவது தருவீர்கள் அல்லவா? என்று கேட்டுத் தங்கள் கவலையையும் போக்கிக் கொண்டு, என் கவலையையும் போக்கிட வேண்டும்.

"குமுதம்" படித்தவுடன் இராயநல்லூர் அசோகனின் ஆதங்கத்துக்கு, ஆறுதல் கூறுவதை விட, அவரைப் போல அசோகன்கள் எவர் எவர் எனக் கண்டு, அவர்களுக்கும் நிலை விளக்கம் தந்திடுவீர் என்று கூறிட, நான் ஒருவன் மட்டும் காலை ஆறு மணிக்கு முன்னரே விழித்துக் கொண்டு தம்பி விஜயனுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் போதுமா?

எத்தனை அணிகள் கழகத்தில்? எத்தனை செயலாளர்கள், அமைப்பாளர்கள் அவற்றுக்கு?

சில முன்னோடிகள் மட்டுமே பணியினைப் பகிர்ந்து கொண்டு பாடுபடுகிறார்கள் என்றில்லாமல், எல்லா அணியினரும் பணிகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டாமா? பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் தம்பிகளுக்கே பத்திரிகையை எடுத்துக் கொடுத்து, பக்கத்தைப் புரட்டிக் காட்டி, "படி" என்று ஊட்டிவிடுகிற பரிதாப நிலை, என் போன்றோர்க்கு ஏற்படுவதால் தான், இராயநல்லூர் அசோகன்களின் குரலைக் "குமுதம்" எதிரொலிக்கிறது.

அந்த எதிரொலி - எதிர்காலத்தில் வெற்றி 'முரசொலி' கொட்டிட, கழகத் தளகர்த்தர்களின் கண்களைத் திறக்கட்டும்! கரங்களுக்கு வலு வூட்டட்டும்!

எனவே, விடிவதற்கு முன்பு நான் விஜயனுடன் தொடர்பு கொண்டு பேசியது, விழிப்புற்று, விடியல் காணவே!

அன்புள்ள

மு.க.

11-7-2005

3158. இரும்பனைய தோளும்; எஃகுபோல் உறுதியும்!

உடன்பிறப்பே,

“எல்லோருக்கும் சைக்கிள் கொடுப்போம் - புல்லட் கொடுப்போம் - கார் கூட ஆளுக்கொன்று கொடுப்போம். என்ன கொடுத்தாலும், கூட்டணியைக் கொஞ்சமாவது உடைக்காத வரையில் - நாம் மறுபடியும் மகுடம் சூடிக்கொண்டு மக்கள் வரிப் பணத்தைக் கொள்ளையடிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடும் போலிருக்கிறது என்று தானே உளவுத் துறையினர் உறுதியாக உரைக்கின்றீர் - என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. எப்பாடுபட்டாவது கூட்டணிக்குள் குழப்பம் ஏற்படுத்தியாக வேண்டும்”

“என்னம்மா செய்வது? நாங்களும் பகீரத முயற்சி செய்துதான் பார்க்கிறோம் - குடிலர்கள் யாரும் தோதாகக் கிடைக்கவில்லையே!”

“குடிலர்கள் கிடைக்காவிட்டால் என்ன? கும்ப கர்ணன் கிடைக்கவில்லையென்றதும், ஒரு விபீஷணன் கிடைக்கவில்லையா? அவனை வைத்து இராவணனை அவன் குலத்தோடு ஒழிக்கவில்லையா? அந்தச் சகோதரர்களை மோதவிட்டுத்தானே திராவிடர்களின் சாம்ராஜ்யத்தையே தீர்த்துக் கட்ட முடிந்தது!”

“அம்மா, சாதாரணமாகச் சொல்லி விடுகிறீர்கள் - அந்த முகாமில் எந்தச் சண்டையோ, சச்சரவோ, அவ்வளவு சாமான்யமாகக் கருதி, நாம் மூட்டிவிட முடியாது - அத்தனை சர்வ ஜாக்கிரதை யாகவும், நம்மை வீழ்த்தி வீட்டுக்கு அனுப்புவதில் கண்ணும் கருத்துமாகவும், கட்டுப்பாட்டுடனும் இருக்கிறார்கள். காரணம், கட்டுப்பாட்டுக்கான கடிவாளம், கழகத்திற்காக சர்வபரித் தியாகம் செய்யவும் தயாராயிருப்பவர்களின் கைகளில் அல்லவா இருக்கிறது!”

“உளவுத் துறை ஆட்களாகிய உங்களுக்கு அவர்களை உயர்த்திப் பேசுவதே, உத்தியோகப் பெருமையென்று

ஆகிவிட்டது. ஒப்புக்காகவாவது என் காது குளிர, மனம் குளிர, கருணாநிதி தலைமையிலேயுள்ள கட்சியின் கட்டுக்கோப்பு குலைந்துவிட்டது என்றோ, கூட்டணிக்குள் குழப்பம் என்றோ சொல்லியிருக்கிறீர்களா?"

"இல்லாததை எப்படியம்மா சொல்ல முடியும்? அம்மா! நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவர்கள், பகைவர்களையும், நண்பர்களாகக் கருதிப் பழகுகின்ற பெருந்தன்மையான பண்பைப் பெற்றிருக்கிறார்கள் - ஆனால் நாமோ, நண்பர்களையும், பகைவர்களாக ஆக்கிக்கொள்ளப் பல்லாண்டுகளாகப் பழகிவிட்டோம்"

"ஓ! எனக்கே பாடம் கற்பிக்கிறீர்களா? நீங்கள் என் பக்கமா? பகைவர்களின் பக்கமா?"

"உங்கள் பக்கம்தான் அம்மா - அதில் சந்தேகமே இல்லை. ஆனால், பகைவனின் பலத்தை உங்களிடம் சொல்லாமல் ஒளித்து விட்டால், அது உண்மையான உளவுத் துறைக்கு அழகல்ல!"

"அப்படியானால், எதிரிக்குத்தான் வெற்றி வாய்ப்பு என்று முடிவெடுத்துக் கொண்டு, எல்லாவற்றையும் வாயை மூடிக் கொண்டு மனதுக்குள் அவர்களை வாழ்த்திக் கொண்டிருங்கள்"

"என்னம்மா! அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? எங்களால் இயன்ற அளவுக்கு எதிர் முகாமை பலவீனப்படுத்த எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்."

"அப்படியென்ன கிழித்து விட்டீர்கள்? பத்திரிகைகளை யெல்லாம் பயமுறுத்தி, முடக்கி விட்டதாக மீசையை முறுக்கினீர்கள் - அந்தப் பத்திரிகைகளிலே ஒன்றுதான் "தேர்தல் கருத்துக் கணிப்பு" வெளியிட்டு, அந்த அணிக்குத்தான் வெற்றி வாய்ப்பு என்று எழுதுகிறது."

"இது என்ன எமர்ஜன்சி காலமா? எல்லாப் பத்திரிகைகளையும் சென்சார் செய்துதான் வெளியிட வேண்டும் என்று சட்டமா இயற்ற முடியும்?"

"சட்டமும் இல்லாமல், சப்தமும் இல்லாமல் - நானே எத்தனை பத்திரிகைகளை பணிய வைத்திருக்கிறேன் - நீங்கள் ஏன் அதைச் செய்திருக்கக் கூடாது?"

"அம்மா, அந்தப் பத்திரிகைகள் பணிந்து நடப்பதாக அர்த்தமில்லை - அவைகளுக்கு இயல்பாகவே உண்மையான திராவிட இயக்கத்தின்மீது பழைய கோபம் - அதை இப்போது, தங்களை ஆதரிப்பது போலக் காட்டிக்கொள்ள, எதிர் முகாம் செய்திகளை இருட்டடிப்பு செய்கிறார்கள்!"

"நீலகிரி தேயிலைத் தொழிலாளர்களுக்காக, அந்த மனிதர் கருணாநிதி அறிக்கை விட்டுத் தொலைத்த பிறகுதான், நான் நீலிக் கண்ணீர் வடிக்க முடிந்தது. நிலைமை முதலில் முற்றிப் போனதைச் சொன்னீர்களா? அதுபோகட்டும் - வக்கீல்கள் போராட்டத்தில் பிரதமருக்கும், மத்திய உள்துறை அமைச்சர், சட்ட அமைச்சர் ஆகியோருக்கும் கடிதங்களை எழுதி, பதிலையும் பெற்று, வக்கீல்களை நேரில் அழைத்து, கருணாநிதி அக்கறையோடு பேசி, பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் சந்திக்க அனுப்பியும் வைத்த பிறகுதான், உங்கள் உளவுத் துறைக்கு உறக்கம் கலைகிறது. நான் உடனே அந்த வக்கீல்களை அழைக்கிறேன், அழைக்கிறேன், அழைத்துக் கொண்டே இருக்கிறேன் - அவர்கள் அலட்சியப்படுத்திவிட்டு டெல்லிக்குப் போய்விடுகிறார்கள் - அங்கே என்னுடைய ஜென்ம விரோதி முரசொலி மாறனின் மகன் தயாநிதி மாறன், வக்கீல்களை அழைத்துக் கொண்டு பிரதமரிடம் போகிறான் என்றால், என்னால் வயிற்றெரிச்சலைத் தாங்கிக் கொள்ள முடிகிறதா?

எல்லாம் போகட்டும்! தினம் ஒரு அறிவிப்பு செய்கிறேனே! அதற்குக்கூட பலன் இருக்காதா?"

"அறிவிப்புகள் தெவிட்டிப் போச்சு அம்மா - தினம் ஒரு அறிவிப்பு என்பதால் இது தேர்தலுக்காக என்று மக்களுக்குப் புரிந்துவிட்டது. எந்த அறிவிப்பும் நம்பக் கூடியதாக இல்லையென்றும், ஏமாற்றுகின்ற செயல் என்றும் வெளிப்படையாகவே பேசுகிறார்கள் தாயே!"

"இந்த விளக்கெண்ணை விளக்கமெல்லாம் தேவையில்லை - ஒன்று சொல்வேன் - அதுவும் இன்று சொல்வேன் - என்ன செய்வீர்களோ, எவ்வளவு செலவழிப்பீர்களோ - யார் யாரை, அல்லது எதை எதைக் கையிலே போட்டுக் கொள்வீர்களோ - அப்படிக் களத்திலே இறங்கி காரியத்தில் வெற்றி பெறுங்கள் - கூட்டணிக்குள் பிளவு ஏற்பட கூடுதலான முயற்சி செய்யுங்கள்

- குடும்பங்களுக்குள்ளாவது குறைந்தபட்சம் குழப்பம் உருவாக்கிட "குள்ள நரி" தந்திரத்தில் ஈடுபடுங்கள் - சோர்வின்றி, செயலாற்றுங்கள் - சொன்னபடி நீங்கள் நடந்துகொண்டால், நானும் சொன்னபடி நீங்கள் விரும்புகிற பதவி உயர்வுகளை, பதவி நீட்டிப்பை, வாரி வாரி வழங்குவேன் - என் காலை மட்டும் வாரி விட்டு விடாதீர்கள்!"

★

உடன்பிறப்பே,

இந்த உரையாடல் எங்கே? எப்போது? யார் யாருக்கிடையே நடைபெற்றது - அல்லது நாள் தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இப்போது விளக்கமாக உனக்குத் தெரிவிக்காவிட்டாலும், ஒரு காலம் வரும், தானாகவே உனக்குத் தெரியத்தான் போகிறது!

சூதோ, சூழ்ச்சியோ,
வஞ்சகமோ, வக்கணையோ,
சதியோ, சாகசமோ -
இவை எந்த வடிவிலும் உன்னை நெருங்காமல்
பார்த்துக் கொள்!
நெருங்கினால், நெருப்பாகச் சுட்டெரித்துவிட்டு,
சுய நல சக்திகளைச் சாம்பலாக்கிவிட்டு,
இனமானம் காப்பாற்ற
இரும்பனைய தோள் உயர்த்து!
எஃகு போல் உறுதி போற்று!

அன்புள்ள,
மு.க.
13-7-2005

3159. அடக்கம் காத்திடுக; ஆடம்பரம் தவிர்த்திடுக!

உடன்பிறப்பே,

திருவண்ணாமலையில் கடந்த 12ஆம் தேதியன்று தி.மு. கழகச் செயல்வீரர்கள் கூட்டம், ஆகஸ்டு திங்கள் 27, 28 தேதிகளில், வேலூரில் நடைபெற இருக்கிற தி.மு.க. மண்டல மாநாட்டையொட்டிய பணிகள் குறித்து விவாதிப்பதற்காக, மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றிருக்கிறது.

தலைமைக் கழகப் பொருளாளர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி, தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன், மண்டல மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் தம்பி பி. சண்முகம், செயலாளர்கள் தம்பி எ.வ. வேலு, தம்பி செங்குட்டுவன், தம்பி எம். கோவிந்தசாமி, நிதிக் குழு தலைவர் தம்பி ஆர். காந்தி, உறுப்பினர்கள் தம்பி தி.அ. முகமது சகி, தம்பி கு. பிச்சாண்டி, தம்பி முல்லைவேந்தன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு, வேலூர் மாநாட்டை, இதுவரையில் நடைபெற்றுள்ள மண்டல மாநாடுகளை மிஞ்சும் வண்ணம் நடத்துவதற்கான கருத்துகளையும், ஆக்கபூர்வமான செயல்பாடுகளையும் எடுத்துரைத்துள்ளனர்.

தம்பி வீரபாண்டி ஆறுமுகம் தலைமை ஏற்றிடவும், தம்பி விழுப்புரம் பொன்முடி திறந்து வைத்திடவும், தங்கை சற்குண பாண்டியன் கொடியேற்றி வைத்திடவும், இத்துணைச் சிறப்புகளுடன் நடைபெற இருக்கிற அந்த மாநாடு; தம்பி பி.சண்முகம் தலைமையில் அமைந்துள்ள வரவேற்புக் குழுவின் பல்வேறு பொறுப்புக்களையேற்றுள்ள செயல்திறன் படைத்த கழக மாமணிகளைக் கொண்ட குழுக்களின் செயலாளர்கள், உறுப்பினர்கள் ஆற்றிடும் அரும்பணியின் வெற்றிச் சின்னமாக அமையும் என்பதில் அய்யம் சிறிதுமில்லை.

மாநாட்டின் வெற்றிக்காக மட்டுமல்லாமல், அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து நாம் பெற்றிட வேண்டிய வெற்றிகளுக்காக, நமது கழக உடன்பிறப்புகளும், நமது கூட்டணியின் செயல்வீரர்களும் ஒன்றுபட்டு எவ்வாறெல்லாம் உழைத்திட வேண்டும் என்பது பற்றியெல்லாம் அந்தச் செயல்வீரர்களின் கூட்டத்தில் பலரும் உரையாற்றியிருக்கிறார்கள்.

அவற்றில், நமது கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள், ஆற்றிய உரையை, 13-7-2005 அன்று வெளிவந்துள்ள முரசொலியில் நான் படித்துப் பார்த்தேன்.

நீண்ட நாட்களாகவே நான் நினைத்து, அறிக்கையாக வெளியிட வேண்டுமென்று கருதியிருந்ததும், பின்னர் இப்போது தேவையில்லை, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைத்திருந்ததும், வெளிப்படை அறிக்கையாகத் தராவிடினும், கழக அமைப்புகளின் நிர்வாகிகள் பலரிடம் வாய்ச் சொல்லாக மட்டுமே எடுத்துரைத்துக் கொண்டிருந்ததும், ஆனால், அதனைக் கழகத்தினர் காதில் போட்டுக் கொள்ளாதிருந்ததுமான ஒன்றைப் பற்றிப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள், அந்தச் செயல் வீரர்கள் கூட்டத்தில் விரிவாகப் பேசியிருக்கிறார்.

கழகச் சார்பாக நடைபெறும் நிகழ்ச்சிகள், விழாக்கள், குறிப்பாக மாநாடுகள் என்கிறபோது வழி நெடுகிலும் - ஊரை வளைத்து வளைத்தும் வைக்கப்படுகிற கண் கவர் "கட்அவுட்"கள் - அலங்காரத் தட்டிகள் - ஆடம்பரமான வரவேற்பு வளைவுகள் - வழி நடத்தும் தலைவர்களிலேயிருந்து வட்டக் கழகச் செயலாளர்கள் வரையில் என்று ஒட்டப்படும் "டிஜிடல்" படங்கள் - இவை நம் கண்ணைப் பறிக்கும் அதே நேரத்தில் மாற்றுக் கட்சிக்காரர்களின் கண்களை உறுத்தும் என்றால் கூடப் பரவாயில்லை! கட்சி சார்பற்ற மக்களின் மனத்திலுமல்லவா ஓர் எரிச்சலை ஏற்படுத்தி விடுகின்றன என்பதை மறந்து விடக் கூடாது. என்னைப் போலவே அதனையுணர்ந்துதான், நானும் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் இதுபற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போதெல்லாம் அருகில் இருந்து இந்தக் கருத்தை ஏற்று எதிரொலித்தவர் என்ற முறையில், வீராசாமி அவர்கள், திருவண்ணாமலை செயல்வீரர்கள் கூட்டத்தில் சற்று விரிவாகவே எடுத்துரைத்துள்ளார்.

"கோவையில் நடந்த மண்டல மாநாட்டில் தலைமை ஏற்கிற பொறுப்பை தலைவர் எனக்கு வழங்கிய காரணத்தால், அது தொடர்பாக முரசொலியில் உடன்பிறப்புகளுக்கு எழுதிய கடிதத்தில், தலைவர் கலைஞர் அவர்கள், "கழகப் பொருளாளர் அருளாளர் ஆர்க்காடு வீராசாமி தலைமையில் இம்மாநாடு நடைபெறுகிறது" என்று குறிப்பிட்டிருந்தார். தலைவர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய இந்த வாசகத்தை, எந்தக் காரணத்தைக் கொண்டும் கழகத் தோழர்கள் எந்த இடத்திலேயும் என்னைக் குறிப்பிடும் போது இனிமேல் அருளாளர் ஆர்க்காடு வீராசாமி என்று எழுதவும் கூடாது. விளம்பரம் செய்யவும் கூடாது. போஸ்டர்கள் அடிக்கவும் கூடாது என்று உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். பொது மக்கள் நம்மீது பெரும் பற்றும், பாசமும் வைத்திருக்கிறார்கள். அதை நாம் கெடுத்துக் கொள்ளக் கூடாது. திருவண்ணாமலை நகருக்குள் நான் நுழையும்போது, நம் நகர மன்றத் தலைவர் இளைஞர் ஸ்ரீதர் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களையும் கட்டப்பட்டுள்ள பேனர்களையும் பார்த்தேன். இத்தகைய விளம்பரங் களைப் பார்க்கும்போது, நகர மன்றத் தலைவர் பிறந்த நாளையே இவ்வளவு தடபுடலாக கொண்டாடு கிறார்களே, நடத்துகிறார்களே என்று பொதுமக்கள் நம்மை வெறுப்போடு பார்ப்பார்களே தவிர, ஒருபோதும் பாராட்ட மாட்டார்கள். எனவே, கழக முன்னணித் தோழர்கள் யாராக இருந்தாலும், இப்படிப்பட்ட ஆடம்பரமான விழாக்களை நடத்தக் கூடாது, நடத்தவும் வேண்டாம் என்று உங்கள் மீதுள்ள உரிமையின் காரணமாக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்."

இது பொருளாளரால் எடுத்துரைக்கப்பட்ட கருத்து. ஆம்! என் நெஞ்சில் புதைந்திருந்து, அடிக்கடி தலையை நீட்டிப் பார்த்து பிறகு பொறுமை காத்து, வெளிப்படுவதற்குச் சமயம் பார்த்துக் கிடப்பில் இருந்த கருத்து. இக்கருத்து, திருவண்ணாமலையில் கூடியிருந்த செயல்வீரர்களுக்கு மட்டுமல்ல! தி.மு.க. அமைப்பு அல்லது கழகச் சார்புடைய அமைப்புகளோ, அணிகளோ,

மன்றங்களோ, படிப்பகங்களோ எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கெங்கெல்லாம் பின்பற்றப்பட வேண்டிய கருத்து.

ஒரு பத்து சுவரொட்டியாவது அச்சடித்து விளம்பரம் செய்திருக்கக் கூடாதா என்று கேட்டு, பெருமூச்சு விட்ட அந்தக் காலத்திலிருந்து, "சுவரொட்டிகள் இங்கே! சுவர் எங்கே?" என்று கேட்கிற அளவுக்கு நீண்ட பெருஞ் சுவர்களே காணாமற் போய்விடுகிற நிலையில், இன்றைக்கு அத்தனை விதமான, வண்ண வண்ணச் சுவரொட்டிகள், "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்று புரட்சிக் கவி பாரதிதாசன் முதன் முதலாகப் பாரதியார் முன்னிலையில் பாடிய கவிதையை நினைவூட்டிக் கொண்டிருக்கிற வகையில் பெருமூச்சு விடத்தக்க முறையில் பெருகியிருக்கின்றன.

நமது கழகம் மட்டுமல்ல, ஒன்றிரண்டு கட்சிகளைத் தவிர, எல்லாக் கட்சிகளுமே இதில் பெரும் போட்டியிடுவதைக் காண முடிகிறது. அதில் நம் கழகமோ, ஜனநாயக இயக்கம் என்பதைத் தெரிவிக்கும் வண்ணம், அப்படித் தெரிவித்திட, இது ஒரே வழி தான் இருக்கிறது என்பதைப்போல, இருபத்தி ஐந்தாவது பிறந்த நாளைக் கூட, 'வெள்ளி விழா பிறந்த நாள்' என்று கொண்டாட முனைவது ஏற்கத் தக்கதா? என் உடன் பிறந்தாராலும் ஏற்க முடியாது என்கிறபோது, எக்கட்சியும் சாராத பொது மக்கள் ஏற்பரோ? ஏற்காவிடினும் எரிச்சல் கொள்ளாமலாவது இருப்பரோ? அது நம் கழக வளர்ச்சிக்குத் தடையாகுமெனில், அரும்பாடுபட்டுப் பெருந் தியாகம் செய்து இக்கழகம் வளர்த்ததற்கு இதுதான் பயனா என்ற வேதனை ஏற்படுகிறதல்லவா?

பிறகென்ன? மாநாடு - பொதுக் கூட்டம் - விழா என்றால், விளம்பர சுவரொட்டிகள் வேண்டாமென்கிறாயா? எனக் கேட்பது என் காதில் விழுகிறது!

அறவே, வேண்டாமென்று நான் கூறவில்லை, அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சாகி விடும் என்ற முதுமொழியை மறந்துவிடக் கூடாது என்றுதான் கூறுகிறேன்.

உழைத்துக் கொண்டிருக்கிற உடன்பிறப்புகளை உற்சாகப்படுத்த வேண்டாமா? அதற்குத்தான் ஒட்டுகிறேன் "படம் போட்டு போஸ்டர்" என்றால்; ஏற்கெனவே உழைத்து, உழைத்து அவனது தோளில் தூக்கி நம்மை உட்கார வைத்து இந்த இயக்கம்

வளர்த்தவனை, "போஸ்டர்" படங்களின் வாயிலாக மக்களுக்குக் காட்ட வேண்டாமோ?

எனவே, அந்த நன்றிக் கடனை முதலில் ஆற்றுவோம் - அதன்பிறகு இப்போது இருப்பவர்களைக் கவனிப்போம்.

இப்போதுகூட, இது தேர்தல் ஆண்டு என்பதை நினைவிற் கொண்டு, இந்த நேரத்தில் எந்த விஷயங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் அணுப்பிசகாமல் கொண்டு சேர்ப்போம்.

இனி நமது பிறந்த நாள் விழாக்களைக் கூட நாமும் கொண்டாடாமல் - நமது கழக அமைப்புகளின் சார்பிலும் கொண்டாட அனுமதிக்காமல், புதியதோர் விதி செய்வோம்! என்று நானும், நமது பொதுச் செயலாளர் பேராசிரியருங்கூட முடிவு செய்திருக்கிறோம் - நமக்கு அடுத்தடுத்த படிகளில் இருப்போருக்கு, இதுபோன்ற பிரச்சினைகளில் நாம் நடந்து வழிகாட்டினால்தான், அவர்களும் நம்மைப் போல நடப்பதற்கு வழிவகுத்துக் கொள்ள முடியும்.

சுவரொட்டி இல்லாமல், சுவரொட்டிகளில் தலைவர்களின் படங்கள் இல்லாமல், மாநாடாயின் அது பற்றிய விளம்பர சுவரொட்டியோ இல்லாமல் சோபிக்குமா என்று இளம் இதயங்கள் ஏக்கம் தொனித்திட என்னைக் கேட்கலாம்.

இப்போது ஐநூறு சுவரொட்டி ஒட்டுகிறீர்கள் என்றால், இனிமேல் ஆயிரம் சுவரொட்டிகளே கூட ஒட்டுங்கள்!

அந்த ஆயிரம் சுவரொட்டிகளிலும், யார் படமும் போட்டல்ல! படங்களுக்குப் பதிலாக வாசகங்கள் அமையட்டும்!

வண்ணமாய் எண்ணங்களை அச்சடித்து பொதுக் கூட்டங்களை மட்டுமல்ல, பொதுத் தேர்தல்களையே நடத்திய வரலாற்றுக்குரியவர்கள் அல்லவா நாம்?

"வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது" என நமது சுவரொட்டிகள் எச்சரித்தபோது, எள்ளி நகையாடியவர்கள், இன்று தெற்கும் வாழ்வதற்கு நமக்குத் தெம்பூட்டி, எழுதியும், பேசியும் வருவது எதனால்?

சுவரொட்டிகளில் நாம் இணைத்து ஒட்டிய நமது படங்களாலா? இல்லை! இல்லை!!

- சேலத்து இரும்பு
- சேது சமுத்திரத் திட்டம்
- நெய்வேலி நிலக்கரி

என்று 1962ஆம் ஆண்டு தேர்தலுக்கே தி.மு.க. எழுப்பிய கோரிக்கை முழக்கத்தையும்,

- சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே;
  முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே!
- நாட்டு வாட்டம் போக்கிட
  நோட்டு அடித்தால் போதாது.
- கூலி உயர்வு கேட்டான் அத்தான்!
  குண்டடி பட்டுச் செத்தான்!

அண்ணாவின் பொற்கரம் தீட்டிய இந்த வாசகங்களைத் தாங்கிய வண்ணச் சுவரொட்டிகள் அல்லவா, அந்தக் காலத்தில் நமது தேர்தல் பிரச்சாரத்துடன், மாநாட்டு விளம்பரத்துடன், பொதுக் கூட்ட அறிவிப்புகளுடன் சுவர்களில், தட்டிகளில், வரவேற்பு வளைவுகளில் நிமிர்ந்து நின்றன.

இப்போதும் என்ன? நம் பிறந்த நாள் விழாக்களில் காட்டும் உற்சாகத்தை, எழுச்சியை, பெரியார், அண்ணா, கழகம் பிறந்த நாளில் முப்பெரும் விழா எடுத்துக் காட்டுவதுபோல் - மறைந்துவிட்ட போதிலும் நம் மனத்தில் நிறைந்திருக்கிற, திராவிட இயக்கத்தின் தியாகத் திருவிளக்குகளின் பெயரை நினைவுபடுத்திட அந்தந்த மாவட்டங்களில், வட்டங் களில், நகர்களில், ஊர்களில் இயன்ற அளவுக்கு இன எழுச்சியூட்டும் விழாக்களை எடுப்போமே! நமக்குத்தான் விழா எடுத்துக் கொள்ள வேண்டுமென்றோ, நமது படங்கள்தான் வண்ணச் சுவரொட்டிகளாக விளங்க வேண்டுமென்றோ, நம்மைத்தான் முன்னிலைப்படுத்த வேண்டுமென்றோ நாம் நினைப்பானேன்? அது நச்சு நினைப்பு என்பதை உணர்த்திட,

வேலூரில் நடைபெற இருக்கும் மண்டல மாநாட்டிலேயே, பந்தலின் பல பகுதிகளில், அந்த மண்டலத்தைச் சேர்ந்த மாவட்டங்களில் மறைந்து விட்ட தியாக தளகர்த்தர்களின் படங்கள் அலங்கரிக்க வேண்டுமென்று, மாநாட்டு வரவேற்புக் குழுவினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

கழக மாநாடுகளில், கழக நிகழ்ச்சிகளில்

- அண்ணா வழியில் அயராதுழைப்போம்!
- ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!
- வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!
- மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!

என்று 1970ஆம் ஆண்டு திருச்சி மாநில மாநாட்டில் முழங்கிய ஐம்பெரும் முழக்கங்கள், அழகாக அச்சியற்றப் பெற்று தனித் தனியாக தட்டிகளிலும், ஐந்தும் இணைந்த தொகுப்பாகவும் எழுதியோ, ஒட்டியோ வைக்கலாம்.

"விவேகமெனும் வெள்ளி முளைத்து
சாதி மதப் பித்து எனும் சனி தொலைந்தால்தான்
சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்"

இப்படி சமுதாயத்துக்குத் தேவையான எத்தனையோ சிந்தனைகளை - அரசியல் அறிவுரைகளை - பகுத்தறிவு பொன்மொழிகளை - வண்ணச் சுவரொட்டிகளாக - எண்ணக் கருவூலங்களாக ஆக்கி மக்களுக்குத் தந்திட உனக்குத் தெரியாதா? தெரியும், நன்றாகத் தெரியும்!

முதலில் அதற்கானத் தெளிவு தேவை! தங்கள் பிரச்சினைகளையே மக்கள் மறந்து விடுவார்கள் - அந்தப் பிரச்சினை அவர்களைத் தாக்கினால்தான் விழித்தெழுவார்கள் - எனவே, மக்கள் பிரச்சினைகளை நினைவூட்டும் வாசகங்களை - சுவரொட்டிகள், சுவர் எழுத்துகள் வாயிலாக வெளிப்படுத்துக!

பொதுக் கூட்டங்கள் கூட, ஜூன் முடிந்து, ஜூலை முடிந்தும் கூட என் பிறந்த நாளைக் கொண்டாடுதல் தேவையா?

பொதுக் கூட்டங்கள் தேவை! நிரம்பத் தேவை! தேவை!

ஆனால், அந்தக் கூட்டங்களுக்கானத் தலைப்புகள், விவசாயப் பிரச்சினை பற்றி இருக்கட்டும் -

தொழிலாளியின் உரிமைக் குரல் பற்றி இருக்கட்டும் -

நெசவாளியின் நெருக்கடி பற்றி இருக்கட்டும் -

காவிரி நீரும் - தமிழன் கண்ணீரும் என்று இருக்கட்டும் -

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றிய பதினெட்டு தீர்மானங்கள் பற்றி இருக்கட்டும் -

தமிழகத்தில் காட்டு தர்பார் நடத்தும் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவது பற்றி இருக்கட்டும் -

இந்தக் குறிக்கோளை விடுத்து வேறெந்தக் குரலுக்கும், செவிசாய்த்தலாகாது! சிந்தையைச் செலுத்தலாகாது!

அன்புள்ள

மு.க.

17-7-2005

3160. கண்ணியமான காவல் துறை அதிகாரி; பராக்! பராக்!

உடன்பிறப்பே,

காவல் துறையிலேயே நேர்மையான அதிகாரிகளில் ஒருவர், கடமையைக் கண்ணெனக் கருதும் அதிகாரி, கண்ணியமான அதிகாரி, அவர் வருகிறார், திருவிழாவில் நடந்த திருட்டு, பகற் கொள்ளை, இவற்றில் ஈடுபட்டவர்களைப் பிடிப்பதற்கும் - அந்தக் கும்பல் களவாடிய பொருள்களை மீட்டுத் தருவதற்கும் - என்று செய்தி பரவியவுடன், பொருள்களைப் பறிகொடுத்தவர்களுக்கு ஏற்பட்ட பூரிப்பை விட, அதிகமான பூரிப்பும், உற்சாகமும் அந்த வட்டாரத்து மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டது. ஏனெனில் நடைபெற்றது, நாட்டையே உலுக்கிய சம்பவமாகும். கூட்டமாக வந்து கொள்ளையடித்த வழக்கு அது! அந்த வழக்கில் உளவறியவும், விசாரணை மேற்கொள்ளவும், குற்றம் புரிந்தவர்மீது தப்ப முடியாத அளவுக்கு, வழக்கு தொடரவும் - தொடரப்படும் வழக்கையும் திறம்பட நடத்திடவும் - சோர்வடையாமல், சோடை போகாமல், வெற்றி முகட்டை அடையவும் ஆற்றல் பெற்ற அதிகாரிகள் வருகிறார்கள் என்ற செய்தி பரவியதும், பொது மக்கள் நம்பிக்கையுடன் அந்தக் கொள்ளை வழக்கைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஒருநாள் நள்ளிரவு - திருவிழாவில் கொள்ளையடித்த அதே கொடிய கூட்டம், அந்த ஊர்த் தெருக்களில் “திபு திபு” எனப் புகுந்தது!

அய்யோ! மீண்டும் கொள்ளையா?
வீட்டைத் தாளிடு -
நாய்களை அவிழ்த்து விடு -
அரிவாள் கோடரிகளை எடுத்து வா!.....
செத்தாலும் சரி!

அந்தக் கொள்ளைக் கூட்டத்தை எதிர்த்து நிற்போம் - முறியடித்து விரட்டுவோம் -

இவ்வாறு முழங்கியபடி பல முண்டாக்கள் தட்டப்படும் சப்தம்!

ஆனால் நடந்தது என்ன? கைகளில் தீப்பந்தங்களுடனும், - குத்தீட்டிகளுடனும், படையெடுத்து வந்த கொள்ளைக் கூட்டத்தார் உரக்கக் கூவினர்!

"நாங்க சொல்றதைக் கேளுங்க - உங்க பொருளையெல்லாம் நாங்க கொள்ளை யடிச்சது உண்மைதான் - இப்ப நாங்க இந்த ஊருக்கு வந்திருப்பது ஏன் தெரியுமா? - நாங்க கொள்ளையடிச்ச பொருளையெல்லாம் திரும்ப உங்ககிட்டே ஒப்படைக்கத் தான்!"

இப்படி அந்தக் கூட்டத்தார் உரக்கச் சொல்லிக் கொண்டே, கிராமத்துத் தெருக்களில், தங்கச் சங்கிலிகள் என்றும், வைரத் தோடுகள் என்றும், வெள்ளித் தட்டுகள், வெள்ளிக் குடங்கள், செப்புப் பானைகள், தேக்கு மரக் கட்டில்கள், பித்தளைத் தவலைகள் என்றும், கயிற்றுக் கட்டில்கள், மண் வெட்டிகள், கடப்பாரைகள், கலப்பைகள், கூடைகள், முறங்கள் என்றும் களவாடிய பொருள்களைப் பரவலாகப் போட்டு விட்டு ஓடத் தொடங்கினார்கள்!

அந்தப் பொருள்களை கிராமத்து மக்கள் ஓடிச் சென்று, ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்தவாறு, "இது என்னுடையது" - "இது உங்கள் வீட்டுப் பொருள்!" - "அது, பக்கத்து வீட்டுச் சாமான்கள்" - "இதோ எங்களுக்குரியதை நாங்க எடுத்துக் கொள்கிறோம்" என்று கூறிக்கொண்டே "பறி கொடுத்தது பாதிக்குப் பாதியாவது திரும்பக் கிடைத்ததே" என்று ஒருவரையொருவர் வாழ்த்தி, மகிழ்ந்து, பாராட்டு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தக் கருத்தோவியத்தைச் சொல்லோவியமாக வகுப்பு ஆசிரியர்', மாணவர்களுக்கு வரைந்து காட்டி விட்டு, மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"அன்புள்ள மாணவர்களே! இந்தச் சொல்லோவியத்தில் மறைந்து கிடக்கிற ஒரு செய்தி, உங்களுக்குப் புரிகிறதா? நிகழ்ச்சி, உங்கள் மனக் கண்களுக்குத் தெரிகிறதா?"

ஆசிரியர் கேள்விக்கு மாணவர்களால் உடனடியாக விடை கூற முடியவில்லை.

"கொள்ளைக் கூட்டம், ஒரு கிராமத்து திருவிழாவில் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்தது. பொதுமக்களின் பண்ட பாத்திரங்கள், நகை நட்டுகள், ஏழைகளின் வீட்டு தட்டுமுட்டுச் சாமான்கள் உட்பட அனைத்தையும் கொள்ளையடித்துச் சென்று விட்டார்கள். இப்போது தங்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வாங்கித் தரக் கூடிய தகுதியும், நேர்மையும், திறமையும் படைத்த ஓர் அதிகாரியின் தலைமையில், தங்களை வளைத்து விட்டார்கள். அதனால், கொள்ளைக் கூட்டத்தார், தாங்கள் மக்களிடமிருந்து பறித்த பொருள்களைத் திருப்பிக் கொடுத்தால் மட்டுமே தப்பித்திட முடியும் - இல்லை யேல் தண்டனை மிகக் கடுமையாக இருக்கும் என்று அஞ்சி நடுங்கித்தான் இரவோடு இரவாக கிராமத்துக்குள் திரும்ப நுழைந்து, மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டு போனவைகளை, பெட்டி பெட்டியாகத் தூக்கிக் கொண்டு போனவைகளை, அதே மக்களிடம் திரும்பக் கொடுக்கிறார்கள்"

மேற்கண்டவாறு விளக்கத்தை ஒரே ஒரு மாணவன் மாத்திரம், ஆசிரியர் கூறிய கருத்தோவியத்திற்குப் பதிலாகச் சொன்னான். ஆசிரியர் அவனைத் தட்டிக் கொடுத்து, பாராட்டிவிட்டு - "தம்பி! நீ என் கேள்விக்கு அளித்த பதிலைத் தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் நீ பாதி வழிதான் வந்திருக்கிறாய் - "

என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

உடனே மாணவன், "அய்யா! நான் மீதி வழியும் வந்தால், அது அரசியலாகிவிடுமே!" என்றான்.

ஆசிரியர், அவனை அருகே அழைத்து, "நீ மிகவும் திறமைசாலி! மாணவர்கள் அரசியலில் நேரடியாகப் பங்கு பெற்று படிப்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்றுதான் அரசியல் அறிஞர்கள் கூறியுள்ளார்கள் - எனவே மாணவர்கள், அரசியலை அறிந்து வைத் திருப்பது தவறல்ல!" என்றார்.

உடனே, அந்த மாணவன், ஒரு துள்ளலுடன் "அப்படியானால் நான் இதோ மீதி வழியும் வருகிறேன் - ஆசிரியர் சொன்ன

கருத்தோவியத்தில், தங்கச் சங்கிலி, வைரத் தோடு, தவலை, குடம், தட்டு போன்ற சாமான்கள் பறிக்கப்பட்டு விட்டன என்பது, மக்களின் பல வகையான உரிமைகள் - அவர்கள் கடந்த ஆட்சியில் பெற்றிருந்த சலுகைகள் - அவைகளைத்தான் ஒரு கூட்டம் கொள்ளையடித்தது. இப்போது அவைகளைத் திரும்பக் கொண்டு வந்து தருகிறது அதே கூட்டம்!" என்றான்.

ஆசிரியர் விடவில்லை! மேலும் கேட்டார். " சரி தம்பி! மக்கள் பெற்றிருந்த உரிமைகள், சலுகைகளை அவர்களது திருட்டுப்போன பொருள்கள் என்று குறிப்பிடுகிறாய்? அவற்றை அவர்கள் திரும்ப ஒப்படைப்பது ஏன்?"

மாணவன் சொன்னான் - "நேர்மையான, திறமையான போலீஸ் அதிகாரி வருகிறார்! என்பதால் பயந்து கொண்டு ஒப்படைத்துவிட்டார்கள் அந்தக் கொள்ளையர்கள்"

ஆசிரியர் விடவில்லை! மீண்டும் கேட்கிறார்.

"சரி தம்பி! பறிகொடுத்த பொருள்கள், நகைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் இவற்றை மக்கள் பெற்றிருந்த சலுகைகள், உரிமைகள் என்று ஒப்பிடுகிறாய்! அப்படியானால், அந்தக் கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்கக் கூடிய நேர்மையான - திறமையான அந்தப் போலீஸ் அதிகாரியை எதற்கு ஒப்பிடுவாய்?"

"அய்யா! அப்பட்டமான 'அரசியல் பதில்' இருக்கிறது இதற்கு! நேர்மையான, திறமையான போலீஸ் அதிகாரியென்று குறிப்பிட்டிருப்பதும், அவர் வரப் போகிறார் என்பதும், அவர் வருகைக்குப் பயந்து தான் இந்தக் கொள்ளைக் கும்பல் திருந்திவிட்டதுபோல் நடிக்கிறது என்பதும் - இந்த ஆண்டு இறுதியில், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் வரப்போகிற தேர்தலைத்தான்! திறமை வாய்ந்த, நேர்மையான அதிகாரிக்கு தேர்தலை ஒப்பிடுகிறீர்கள் - வெறும் அதிகாரி என்று குறிப்பிடாமல், திறமையான, நேர்மையான அதிகாரி என்று தாங்கள் குறிப்பிடுவது தேர்தலைத்தான் - ஆம்! தேர்தலைத் தவிர வேறு ஒன்றுமில்லை - என்பதுதான் தெளிவான உண்மை!"

★

உடன்பிறப்பே,

2001ஆம் ஆண்டு, ஜெயலலிதா கட்சியினர் ஆட்சிக்கு வந்ததும் - தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட திட்டங்கள் - நிறைவேற்றிய சாதனைகள் - அளிக்கப்பட்ட சலுகைகள் - அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் - அனைத்தையும் நள்ளிரவுக் கொள்ளையர்போல பறித்துக் கொண்டதையும், இன்று கண்டிப்பும், கண்ணியமும், நேர்மையும், நியாய உணர்வும் கொண்ட அதிகாரியிடம் சிக்குவது போல, தேர்தல் எனும் ஜனநாயகப் பாதுகாப்பு அதிகாரியிடம் சிக்கிக் கொள்ள நேரிடுமே எனப் பயந்து மிரண்டு போய், திரட்டிய திரவியம் அனைத்தையும் கிராமத்துத் தெருவில் கொண்டு வந்து, திரும்பப் போட்டுவிடும் செயல் போலவே, "திரும்பக் கொடுக்கிறேன் - திரும்பக் கொடுக்கிறேன்" - என்று தினந்தோறும் அறிவிப்புகளுக்குமேல் அறிவிப்பு என்று அடுக்கடுக்காக அறிவித்துக் கொண்டிருக்கிறார்!

அன்புள்ள,

மு.க.

20-7-2005

3161. அன்றும் இன்றும் என்றும் கழகமே நம் குடும்பம்!

உடன்பிறப்பே,

கழக வளர்ச்சிக்கும், தேர்தலில் களம் காண்பதற்கும் என்றெல்லாம் நாம், என் பிறந்த நாட்களின்போதும் - மற்றும் மாநாட்டு நன்கொடை நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கும்போதும் - மாவட்டக் கழகங்கள் - மற்றும் இளைஞர் அணி, தொழிலாளர் அணி போன்றவை நிதி வழங்கும் போதும் திரட்டுகிற கழக நிதியைக் கட்சியில் நலிந்த நிலைக்கு ஆளாகியுள்ள உடன்பிறப்புகளின் கல்வி உதவி, நோய் சிகிச்சை போன்ற அவசர அவசியங்களுக்கு வழங்காதது போன்ற ஒரு தோற்றத்தை, சில நண்பர்களும், சில ஏடுகளும் - கழகத்திற்கு எதிரான ஒரு பிரச்சாரமாகவே செய்து வருகின்ற விஷமத்தனத்தை நீ நன்றாக அறிவாய்.

கொடியேற்றுவதென்றால், நூறு ரூபாய், கூட்டத்திற்கு அழைத்தால் ஆயிரம் ரூபாய் - ஐநூறு ரூபாய் என்று தி.மு. கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, நான் கலந்து கொள்கிற நிகழ்ச்சிகளில் கழகத்திற்கான நிதி திரட்டப்பட்டு வருவதும், அதனை அப்போதே நமது தலைவர் அண்ணா அவர்கள் பல நேரங்களில் பாராட்டி, என்னையும், கழகத்தினரையும் ஊக்குவித்ததும் எப்போதும் நினைவில் நிழலாடிக் கொண்டிருப்பவைதானே!

அண்ணா காலத்திலும் சரி, அண்ணா தொடங்கி, நம்மிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிற தி.மு.கழகம், தன்னை வளர்ப்பதற்கு உழைப்பினை நல்கிய உத்தமர்களின் குடும்பங்கள், நலிவுற்ற நிலைக்கு உள்ளானாலும், குடும்பப் பாதுகாப்புக்குத் தேவைப்பட்டாலும், அவர்கள் பிள்ளைகளின்

கல்விக்கானாலும், அத்தகையோர் ஏழ்மை நிலையிலே இருப்பின், அவர்களைக் கைவிட்டதில்லை.

பல இடங்களில் உள்ள கழகத்தின் சொத்துகளுக்குப் பாதுகாப்புக் குழு ஒன்று இருப்பது போல் - திரளும் நிதியினைத் தக்கவாறு பயன்படுத்திப் பெருக்கிடவும், தக்காருக்கு உதவிடவும், தி.மு.க. அறக்கட்டளையொன்றே அமைக்கப்பட்டு அது தலைமை அமைப்பான பொதுக்குழுவினால் வரையறுக்கப்பட்ட முறைப்படி இயங்கி வருகிறது. அறக்கட்டளையின் தலைவராக நானும், அறங்காவலர்களாகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின், தஞ்சை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கோ.சி. மணி, சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம், தம்பி கோவை மு. இராமநாதன் ஆகியோரும் பொறுப் பேற்றுள்ளோம்.

பொதுக்குழுவில் தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்ட கணக்குத் தணிக்கைக் குழுவும் தனது பணியை ஆற்றி; பொதுக்குழு, செயற்குழு கூட்டங்களில் கழகத்தின் கணக்கு விபர அறிக்கைகளை அவ்வப்போது தாக்கல் செய்து வருகிறது.

தி.மு.க. வில் நலிந்த நிலையில் இருப்போர், உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டோர், விபத்துக்கு ஆளானவர்கள், அடக்குமுறை காரணமாகவோ, மாற்றுக் கட்சியினர் நடத்திய அராஜகத்தினாலோ பாதிக்கப்பட்டோர் எனப் பல பிரிவினருக்கும், அஃதன்னியில், மாணவர்கள் கல்வியை ஊக்கப்படுத்தவும், தொழிலாளர்கள், குறிப்பாக, ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பரிசு தரவும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களை ஒப்புவிப்போரை உற்சாகப்படுத்தவும், பெரியார், அண்ணா, புரட்சிக் கவிஞர், கழகத் தலைவர் பெயர்களால் விருதுகளும், பொற்கிழிகளும் வழங்கவும், இவையன்னியில், 'முரசொலி' விருதுகள் என பெருநிதியை அறிவுசால் பெருமக்கட்குப் பொற்கிழியாக வழங்கவும் - அண்ணா அறிவாலயத்தில் கழக வரலாற்றுக் கருவூலத்தைத் தொடர்ந்து நடத்தவும் - வெற்றிச்செல்வி அன்பழகன் கண் மருத்துவமனையைச் சிறப்புற இயக்கவும் - பேராசிரியர் நூல் நிலையம் ஒன்றை மிகப் பெரும் நூல் நிலையம், படிப்பகம் என்று நடத்திடவும் - இத்தனை பணிகளும், இவை

தொடர்பான சமூகப் பணிகளும் கழகச் சார்பில் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

இதோ, உதவித் தொகை வழங்கும் கணக்கிலிருந்து ஒன்றைக் குறிப்பிடுகிறேன்.

1976ஆம் ஆண்டு, நெருக்கடி காலத்தில், மிசாவில் கைது செய்யப்பட்டோர் குடும்பங்களுக்கு, மாதந்தோறும் கழகச் சார்பில் தேவைப்பட்டோருக்கு நிதி உதவி வழங்கப் பெற்றது. அப்படி வழங்கப்பட்ட குடும்பங்களில் மிசாக் கைதியாக சிறையில் மறைந்த சாத்தூர் பாலகிருஷ்ணன் குடும்பத்துக்கு அப்போது மாதந்தோறும் அளித்து வந்த உதவி நிதி ரூபாய் இருநூறு, 1976 முதல் இன்று 2005ஆம் ஆண்டு வரை பண விடைத்தாள் மூலம் அனுப்பப் பெற்றது ரூபாய் 70,800 (எழுபதாயிரத்து எண்ணூறு ரூபாய்) - இது தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது.

தி.மு.க. அறக்கட்டளை சார்பில், வெற்றிச் செல்வி அன்பழகன் இலவசக் கண் மருத்துவமனையில் 1988 முதல் இதுவரையில் மருந்துகள், கருவிகள், பணி புரிவோர் ஊதியம் உட்பட ரூபாய் 44,95,525 (சுமார் 45 இலட்சம் ரூபாய்) செலவாகியிருக்கிறது. அந்த மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை உட்பட இந்தக் கால கட்டத்தில் 70,656 பேர் (சுமார் எழுபதாயிரம் பேர்) இலவசமாக பயன் பெற்றிருக்கிறார்கள்.

மேலும், இந்த உதவிகள் பற்றிய விபரங்களையும் இந்தக் கடிதத்தில் இணைத்திருக்கிறேன். அண்மையில் இரண்டு ஆண்டுகள் 2003-2004, 2004-2005க்கான விபரங்களையும், 1985 அறக் கட்டளை தொடக்க முதல் 2002 வரை 18 ஆண்டுகள் நிதி வழங்கிய விபரங்களையும் தொகுத்துள்ளேன்.

2003-2004ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதி விவரங்களைப் பொறுத்தவரையில், நான் எழுதிய "தொல்காப்பியப் பூங்கா" நூல் விற்பனை மூலம் கிடைத்த நிதியிலிருந்து ஏழையெளியோர்களுக்குக் கல்வி மற்றும் மருத்துவ உதவித் தொகையாக 523 பேருக்கு நிதி உதவி அளித்த வகையில் 25 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயும்,

2003ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 17 மாணவ, மாணவியர்க்கு ரொக்கப் பரிசாக ஐந்தாயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 85 ஆயிரம் ரூபாயும்,

ஈரான் பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட ஈரான் மக்களுக்கு உதவி நிதியாக, 30-12-2003 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

திருவரங்கம், திருமண மண்டப தீ விபத்தில் சிக்கி காயமடைந்த மணமகள் ஜெயஸ்ரீக்கு உதவி நிதியாக 30-1-2004 அன்று இரண்டு இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 2003-2004 ஆம் ஆண்டு மட்டும் 29 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் கழகத்தின் சார்பில் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் வெடி விபத்தில் இரு கைகளை இழந்த சென்னையைச் சேர்ந்த மாளவிகா என்ற மாணவிக்கு கல்வி நிதியாக 28-5-2004 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

கும்பகோணம் கிருஷ்ணா மற்றும் சரஸ்வதி மழலையர் பள்ளியில் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த மாணவ, மாணவியர் 93 பேர் மற்றும் தீக்காயமடைந்த 19 பேர் குடும்பங்களுக்கு உதவி நிதியாக தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 27-7-2004 அன்று 28 இலட்சம் ரூபாயும்,

தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி நிதியாக 28-12-2004 அன்று பிரதமர் நிவாரண நிதியாக திருமதி சோனியா காந்தி அம்மையார் மூலம் (ரூபாய் 1,00,00.000) ஒரு கோடி ரூபாயும்,

சுனாமியால் பாதிக்கப்பட்ட அந்தமான்-நிக்கோபார் தீவு மக்களின் துயர் துடைப்பு பணிகளுக்காக 23-1-2005 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

7 பேருக்கு மருத்துவச் செலவிற்காக ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாயும்,

4 பேருக்கு கல்வி உதவியாக ஒரு இலட்சத்து 27 ஆயிரம் ரூபாயும்,

4 பேருக்கு குடும்ப உதவி நிதியாக இருபதாயிரம் ரூபாயும்,

இராஜஸ்தான் இளைஞர் சங்க பெரு நகர அறக்கட்டளைக்கு 22 ஆயிரம் ரூபாயும்,

நான் கடந்த ஆண்டு திரைக்கதை வசனம் எழுதிய "கண்ணம்மா", "மண்ணின் மைந்தன்" ஆகிய இரண்டு

திரைப்படங்களுக்காக, எனக்கு வழங்கப்பட்ட ஊதியத் தொகையை சுனாமிக்கான முதலமைச்சர் நிவாரண நிதிக்காக, 21 இலட்சம் ரூபாயும்,

நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, கழக முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் சுனாமி நிவாரண நிதியாக வழங்கி, பிரதமர் நிதியில் சேர்க்கப்பட்ட வகையில் 43 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 1 கோடியே 97 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் 2004-2005இல் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

தி.மு.கழக அறக்கட்டளைச் சார்பில் 1985 முதல் 2002ஆம் ஆண்டு வரை 18 ஆண்டுகளில் நிதி உதவி பெற்றவர்களின் விவரம் வருமாறு :-

அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கும், மேற்படிப்பு படிக்க விரும்புவோருக்கும் உதவி நிதியாக, 222 பேருக்கு 9 இலட்சத்து 44 ஆயிரத்து 885 ரூபாயும்,

11 பேருக்கு மருத்துவச் செலவிற்காக, 50 ஆயிரத்து 300 ரூபாயும்,

தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக, ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 650 ரூபாயும்,

இலங்கையில் ராணுவத்தினர் கொடுமைகளுக்காளாகி வீடுகளை இழந்து உண்ண உணவின்றி வாடிய ஈழத் தமிழர்களுக்கு உதவி நிதியாக, 4-6-1987 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

சென்னை லிட்டில்பிளவர் கான்வென்ட் பள்ளிக்கு நன்கொடையாக, 20-7-1988 அன்று பத்தாயிரம் ரூபாயும்,

சீர்காழி கோவிந்தராஜன் நினைவு அறக் கட்டளைக்கு நன்கொடையாக, 25-3-1989 அன்று பத்தாயிரம் ரூபாயும்,

காட்டாங்கொளத்தூரில் உள்ள சிவானந்தா குருகுலத்திற்கு நிதி உதவியாக, 13-6-1988 அன்று ஐம்பதாயிரம் ரூபாயும்,

கியூபா நாட்டு மக்களுக்கு உதவிட, 28-7-1992 அன்று 25 ஆயிரம் ரூபாயும்,

சிவானந்தா குருகுலத்திற்கு நிதி உதவியாக, 7-6-1993 அன்று 70 ஆயிரம் ரூபாயும்,

மராட்டிய மாநில பூகம்ப நிதி உதவியாக, 3-10-1993 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

ஈழத்தில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் மருத்துவ உதவிகளுக்காக, 3-11-1995 அன்று 25 இலட்சம் ரூபாயும்,

காட்டாங்கொளத்தூர் சிவானந்தா சரஸ்வதி சேவா ஆஸ்ரமத்திற்கு நிதி உதவியாக, 6-6-1996 அன்று ஐந்து இலட்சம் ரூபாயும்,

"உதவும் கரங்கள்" சேவை நிறுவனத்திற்கு நிதி உதவியாக, 6-6-1996 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

சென்னை லிட்டில் பிளவர் கான்வென்டிற்கு நிதி உதவியாக, 6-6-1996 அன்று ஒரு இலட்சம் ரூபாயும்,

தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை யொட்டி, வெள்ள நிவாரண நிதியாக, 23-12-1996 அன்று ஐந்து இலட்சம் ரூபாயும்,

கார்கில் போரில் வீரமரணமடைந்த 11 பேர்களின் குடும்ப நிவாரண நிதியாக, தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் 1-6-1999 அன்று ஐந்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்,

அரசு அலுவலர் - ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்டு இறந்த இருவரின் குடும்பங்களுக்கு நிதி உதவியாக, 7-11-2002 அன்று ஒரு இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 58 இலட்சத்து 66 ஆயிரத்து 853 ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தி.மு.க. அறக்கட்டளை சார்பில் மட்டுமல்லாமல், தி.மு.க. தலைமைக் கழகச் சார்பில், 1985 முதல் 2005 வரை இருபதாண்டுகளில் ஒரு கோடியே 39 இலட்ச ரூபாய் நிதி வழங்கியதற்கான விவரத்தையும் இங்கே சுருக்கமாகத் தந்துள்ளேன். அது விவரம் வருமாறு :-

370 கழகத் தோழர்களின் குடும்ப நிதியாக, 1 கோடியே 6 இலட்சத்து 9 ஆயிரத்து 432 ரூபாயும்,

205 கழகத் தோழர்களின் மருத்துவ உதவி நிதியாக, 8 இலட்சத்து 97 ஆயிரத்து 983 ரூபாயும்,

358 கழகச் சொற்பொழிவாளர்களின் உதவி நிதியாக, 6 இலட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபாயும்,

34 பேருக்கு முப்பெரும் விழா விருது பெற்றவர்களுக்குப் பொற்கிழி வழங்கிய வகையில், 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும்,

தமிழ் ஈழ மக்களுக்கு நிதி உதவி மற்றும் குஜராத் பூகம்ப நிதி வழங்கிய வகையில், 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் அளிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைமைக் கழகம் மற்றும் தி.மு.கழக அறக்கட்டளை ஆகியவற்றின் சார்பில் மட்டுமல்லாமல், முரசொலி அறக்கட்டளை சார்பில் ஆண்டு தோறும் அறிவுசால் பெருமக்கள் 26 பேருக்கு பொற்கிழி வழங்கிய வகையில், 26 இலட்ச ரூபாயும்,

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்புவித்த 3608 மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக, 55 இலட்சத்து 30 ஆயிரத்து 250 ரூபாயும்,

நேர்மையாகவும், நாணயமாகவும் நடந்து கொள்ளும் ஆட்டோ ஓட்டுநர்களை பாராட்டும் வகையில், 203 பேருக்கு 7 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாயும்,

ஆக மொத்தம் 88 இலட்சத்து 48 ஆயிரத்து 250 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இப்போது பொறுப்பிலே இருக்கிற எங்களுக்குப் பிறகும், கழகப் பணிகளும், கழகத்தின் அரசியல், சமுதாயப் பணிகளும் தொடர்வதற்கு இந்த ஜனநாயக இயக்கத்தின் செயற்குழுவும், பொதுக்குழுவும் கட்டுப்பாட்டினை வைத்திருப் பதைப் போலவே, அறக்கட்டளை சார்பாக இந்த நலிந்தோர் நலத்திற்கான உதவிகளையும் தொடர்ந்து நிறைவேற்றிடக் கழகம் நற்பணியினைத் தொடர்ந்திட அதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அது போலவே, அறக்கட்டளையின் விருதுகள், தலைமைக் கழக விருதுகள் வழங்கப்படுவதும் தொடரும்.

அரசியல் விழிப்புணர்வுக்கும், சமுதாய விழிப்புணர்வுக்கும், பொருளாதார வளத்தைத் தமிழகத்தில் பெருக்குவதற்கும், தமிழ் மொழியின் உரிமைகள், தமிழ் இனத்தார் உணர்வுகள் இவற்றை நிலை நாட்டுவதற்கும் அண்ணா வகுத்தளித்த

வழியே உகந்த வழியெனக்கொண்டு, அதற்கு அய்யா தந்துள்ள துணிவை துணையாய்க் கொண்டு, தூய தொண்டாற்றும் உடன்பிறப்புகளையும், தொண்டாற்றிய உடன்பிறப்புகளின் குடும்பங்களையும் நமது கழகக் குடும்பமாகவே கருதுகிறோம் என்பதற்காகவே; இந்தக் கடிதமும் - கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பல விபரங்களும் என்பதை என் உயிரினும் மேலான உடன்பிறப்பே, உனக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

24-7-2005

3162. தீமைகள், தீப்பட்ட அரக்கு மாளிகையாகிட!

உடன்பிறப்பே,

நாள்தோறும் நானேதான் உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். இதோ ஒரு கடிதம். பெரம்பலூர் மாவட்டம், சோமண்டாபுதூர், ஒன்றியக் கழகத் துணைச்செயலாளர், அன்புத்தங்கை, பத்மாவதிஜெயராமன், பெரம்பலூர் மாவட்டக் கழகத்தின் கலந்துரையாடல் ஆய்வுக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில், கலைஞர் அரங்கில் நடைபெற்றபோது என்னிடம் நேரிலே அளிக்கப்பட்டது இந்தக் கடிதம். உடன்பிறப்புக்கு நான் கடிதம் எழுதினால் மட்டும் போதாதல்லவா! உடன்பிறப்புகளும் எனக்கு இப்படி உபயோகமாகக்கூடிய யோசனைகளைத் தெரிவித்து, என்னை மேலும் ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தும் வகையில் கடிதங்களை எழுத வேண்டுமல்லவா?

நான் முரசொலியில் எழுதும் கடிதத்தை, உடன்பிறப்புகள் எல்லோரும் படிக்கிறார்களோ இல்லையோ, எனக்குத் தெரியாது! ஆனால், உடன்பிறப்புகள் எழுதும் கடிதங்களை, நான் படிக்கத் தவறுவதில்லை. அக்கடிதங்களில் காணப்படும் செய்திகளையும், ஆலோசனைகளையும் என்றுமே நான் அலட்சியப்படுத்துவதுமில்லை.

முதலில் இப்போது அந்தத் தங்கை பத்மாவதியின் கடிதத்தைப் படிப்போம் :-

அன்புள்ள தலைவர் கலைஞர் அவர்களுக்கு,
வணக்கம். நமது இயக்கத்தின் கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக சிறப்புடன் தங்கள் தலைமையில், சீரிய முறையில் நடைபெறுவதற்கு எங்கள் ஒன்றியக் கழகத்தின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம். தங்களின் எழுச்சிமிகு அறிவுரை இயக்கத்தின் ஏற்றத்திற்கு உறுதுணையாக அமையும் என்பது உறுதி.

எங்கள் சோமண்டாபுதூர் கிளைக் கழகத்திற்கு, கழக ஏடான முரசொலி செய்தித்தாள் படிப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் திரு. ஆ. இராசா அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைமைக் கழகத்தால் இயக்கத்தின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருப்பதன் தொடர்ச்சியாக, ஒவ்வொரு கிளைக் கழகத்திலும், கருத்துரை கூட்டம் நடைபெற வேண்டும். இக்கூட்டத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தலைமை ஏற்கவேண்டும். அவருடன், தலைமைக் கழகத்திலிருந்து சிறப்பாக கருத்துரை வழங்கக்கூடிய பேச்சாளர்கள் இரண்டுபேர் கலந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஒன்றியத்திலுள்ள கிளைகளில் நடத்தப்பட்ட கூட்டங்களை 'மினிட்' புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும்.

தலைமைக் கழகத்தில் இருந்து வருகை தரும் சொற்பொழிவாளர்கள், தலைவர் கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களான - இலவச மின்சாரம், உழவர்சந்தை, விதவைகள் மறுமணத் திட்டம், இலவசத் திருமண உதவித் திட்டம், மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கிய திட்டம், சாலைப் பணியாளர்களுக்கும், மக்கள் நலப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பளித்த திட்டம், ஊர் தோறும் ஐந்து இலட்சம் செலவில் கிணறு வெட்டி குடிநீர் வழங்கிய திட்டம், பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை வழங்கியது, ரேஷன் கடைகள் கட்டித் தந்தது - இதுபோன்ற முக்கிய திட்டங்களை விளக்கிக் கூறிட வேண்டும்.

அதேபோல், தற்போது அம்மையார் ஆட்சியில் முதல் ஆண்டு தொடங்கி இன்றுவரை, அவருடைய மக்கள் விரோத ஆட்சியின் செயல்பாடுகளை விளக்கிக் கூறிட வேண்டும். இக்கருத்துரையின் நோக்கம், முதலில் நமது தோழர்கள் தெளிவு பெறவேண்டும். நாம் தரும் ஊக்கமான கருத்தானது, கழகத் தோழர்களை தேர்தல் களத்தில் பணியாற்றிட உந்து சக்தியாக இருக்

கும். கூட்டம் ஒரு அரங்கத்திலோ அல்லது வெட்ட வெளியிலோ நடத்தப்பட வேண்டும். ஏனெனில், இதில் ஆர்ப்பாட்டம், வெளிச்சம், டாம்பீகம் ஏதும் இருத்தலாகாது. இயல்பாக நடை பெறும் இக்கூட்டம் சிறப்பாக அமையும். நமது தோழர்கள் தெளிவுபெறுவதற் காக நடைபெறும் இக்கூட்டம் ஊரில் உள்ள பொதுமக்களும், நடுநிலையாளர்களும் கேட்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தும் என்பதுதான் இக்கிளைக் கழகங்களின் கூட்டத்தின் மைய நோக்கமாகும். எக்காரணத்தைக் கொண்டும் ஒன்றிய நிர்வாகிகளாக இருப்பவர்கள், சிறு கீறல் இல்லாமல் அனைத்துத் தோழர்களிடமும் பக்குவமாக நடந்துகொண்டு, அனைவரையும் அரவணைத்து இக்கூட்டங்களைச் சிறப்பாக நடத்திட வேண்டும். ஏதோ ஒரு சில காரணங்களால், உள்ளூர் பிரச்சினையால், ஒதுங்கி இருக்கும் கழகத் தோழர்களையும் அழைத்து வெற்றிகர மாக முனைப்புடன் இக்கூட்டத்தை நடத்திட வேண்டும் என தலைமைக் கழகம் அறிவுறுத்திட வேண்டும். தவறியும் எதிர்க்கட்சியினரை இழிமொழிகளால் விமர்சனம் செய்யக்கூடாது. நமது ஆக்கப் பணிகளை மக்கள் எப்போதும் கூர்மையாக கவனிப்பார்கள். எனவே, மக்கள் சக்தியை ஒன்றாகத் திரட்டி, நமது இலட்சியத்தில் வெற்றி பெறுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். இதற்கு முழு வடிவம் கொடுத்துச் சிறப்பிக்குமாறு தலைவர் கலைஞர் அவர்களை பணிவன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி, நன்றி, வணக்கம்.

தங்களின் உண்மையுள்ள,

பத்மாவதி ஜெயராமன்.

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் எனக்கு மட்டுமல்ல! எல்லா உடன்பிறப்புகளுக்கும், கழகப் பணியாற்றும் உணர்வை - அதுவும் கட்டுப்பாட்டுடன் ஆற்றிடும் உணர்வை - கண்ணியத்துடன் ஆற்றும் உணர்வை, கண்டிப்பாக ஏற்படுத்தும். அதிலும் குறிப்பாக, வண்ண வண்ணப் புடவை என்றும் - தங்க வளையல் - தோடு - மூக்குத்தி என்று மட்டுமே கவலைப்பட்டு, கோயில்குளம் எனத்

தீர்த்த யாத்திரைகளில் ஈடுபடத் துடிக்கும் மகளிர் மனத்தை மாற்றி - மாதர் குலம் மடமை நீக்கி - மாண்பு காத்திடும் பணியில், ஆடவர்க்கு நிகராக ஈடுபட வேண்டுமென்று முரசு கொட்டும் முன்னேற்றக் கழகத்தில், மூவலூர் மூதாட்டியார் வழியில், அறநெறியில் அவர் ஏற்ற எளிய வாழ்வு முறையை ஏற்று, அணி வகுத்து நிற்க முனையும் அருமைச் சகோதரிகளுக்கு ஓர் அறிவுப் பெட்டகமாகவும், அவர்தம் ஆற்றலை வளர்க்கும் அருமருந்தாகவும் அமைந்திருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இதே போல ஒரு சகோதரி, கடித வாயிலாக அல்ல, கலந்துரையாடும் ஆய்வரங்கத்திற்கே திருவாரூர் மாவட்டக் கழகச் சார்பிலே மகளிருடன் அணி வகுத்து நேரிலே வந்து, அரங்கநாயகி என்னும் பெயருடைய அந்தப் பெருமாட்டி, கழகம் வலிவும் பொலிவும் பெற , தான் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளை அடுக்கிக்காட்டி, ஆடவர்களாம் கழக உடன்பிறப்பு களும் அவ்வண்ணம் செயல்பட்டால், தன் முயற்சிக்குத் துணை நின்றால், எத்தனையோ அருஞ் செயல்களை ஆற்றி முடிக்கலாம் என்று விவரித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். மறைந்த வெற்றிச் செல்வி (அன்பழகன்) அவர்களின் மறு வடிவமாக அவரைக் கண்டேன்! ஆம் - அவ்வளவு அழுத்தமான கொள்கைப் பிடிப்பு! இலட்சியத் தாகம்! இந்த இயக்கம் தலை தாழாமல் நிலை பெற்றிருக்க வேண்டுமென்பதிலே அத்துணை ஆர்வம்! அக்கறை!

ஆய்வரங்கில், சகோதரிகள் பத்மாவதி என் கையில் தந்த கடிதமும், அரங்கநாயகி ஆற்றிய உரையும் ஓரிரு மகளிர் மட்டுமல்ல; அணி முழுதுமே இவ்வாறு இருந்தால், அரசியலில் தொத்தியுள்ள பிணி நீங்கும் - நமது சமுதாயத்தைப் பிடித்த மூட நம்பிக்கைப் பீடை அகலும் - பேயாட்சி உட்பட அனைத்துத் தீமைகளுமே தீப்பட்ட அரக்கு மாளிகையாகுமே! இல்லையா உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு.க.

3-8-2005

3163. மண்டல மாநாடு, மாநில மாநாட்டுக்கு ஒத்திகை!

உடன்பிறப்பே,

வேலூர் அண்ணா நகரில்.....
வி.எம். தேவராஜ் பந்தலில்,
முரசொலி மாறன் மேடையில்,
கமலநாதன் அரங்கில்,
சாரதி, சந்தானம் முன் முகப்பும்
சென்னகேசவன், வரதன் உள் முகப்பும் கொண்டு
நடைபெற இருக்கிற.....

"உம்கும்; ஆரம்பித்து விட்டாரய்யா, நம்பதலைவர் - வேலூருக்கு வா; என் விழி நிறைந்தவனே! தீரர் வழி வந்தவனே; வா! வா! என்று வேலூர் மண்டல மாநாட்டுக்கு அழைப்புக் கடிதம் எழுதிடுவார்!" என நீ சிரித்துக் கொண்டும் சிணுங்கிக் கொண்டும், மறவாமல் பக்கத்திலிருக்கும் உடன்பிறப்பிடம் பாச உணர்வு சிறிதும் மாறாமல் கூறுவது என் காதில் விழாது என்று மட்டும் கருதிக் கொள்ளாதே!

"எப்படி உனக்கு இந்தச் சேதியும் வந்துவிட்டது" என்று ஆச்சரியமாகக் கேட்கிறாயா? முந்தாநாள் சேலத்திலிருந்து உன் ஆருயிர் நண்பர் வந்து விட்டுப் போனாரே; அவர்தான் சொன்னார் - அவரும் அமர்ந்திருந்த அந்தப் பேருந்து நிலையத்தில்தான் நீ முரசொலியோ, தினகரனோ கையில் வைத்துக் கொண்டு - அந்த ஏட்டில் நான் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு வேலூர் மாநாடு பற்றி எழுதியிருந்த கடிதத்தைப் படித்து விட்டு, அதைக் கையிலே வைத்துக் கொண்டுதான்; நீ, மோகனப் புன்னகை புரிந்தவாறு இந்த அண்ணனைப் பற்றியும் முணுமுணுத்தாயாம் - அதற்காக நான் உன் மீது கோபம் கொள்வதற்கு முகாந்திரம் எதுவுமேயில்லை - உன்னைப் போன்றோர் நிலை எனக்குத் தெரியும் என்பதால்!

பையிலோ கையிலோ வளமாக இருந்தால் எந்தப் படத்துக்குப் போகலாம் குடும்பத்துடன் என்று யோசிக்க மாட்டாய்- வேலூர் மாநாட்டுக்கு எத்தனை பேர் போகலாம்? எந்த வாகனத்தில்? ரயிலா? பேருந்தா? காரா? வேனா? இப்படித்தான் யோசிப்பாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்குள்ளாக எத்தனை மண்டல மாநாடுகள் - **விழுப்புரத்தில்** 2003ஆம் ஆண்டு நடந்த மகத்தான தொடக்கமான நமது கழக மாநாட்டையொட்டி, ஒன்றையொன்று மிஞ்சுகிற அளவுக்கு **விருதுநகர், சேலம், திண்டுக்கல், தஞ்சை** எனக் **கோவை** மண்டல மாநாடு வரையில் ஆறு மாநாடுகள் எழில் குலுங்க, ஏற்றம் விளங்க நடைபெற்ற போதெல்லாம்- தலைவா; நீ இப்படித்தான் கடிதங்கள் எழுதி எங்களை அழைத்தாய் - இப்போதும் அழைக்கிறாய் என்று நீ மௌன மொழி பேசுவாய் என்பது எனக்குத் தெரியும் - அப்போது; உன் துணைமயில் அருகே நின்று கொண்டு "ஏனத்தான் நம் கழகத்தில் எல்லாக் கிளைகளிலும் சேர்த்து எழுபது லட்சம் பேர் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களையன்னியில் இளைஞர் அணியினர் லட்சக்கணக்கில் இருக்கின்றனர். இவர்கள் இத்தனை இலட்சம் பேருமா இந்த ஆறு மாநாடுகளுக்கும் போய் வந்தவர்கள் - கணக் கிட்டால் இருபது அல்லது இருபத்தி ஐந்து லட்சம் பேர் போய் வந்திருப்பார்கள் - எஞ்சியுள்ளவர்கள் இன்னும் அந்த மாநாடுகளுக்குப் போகாமல் இருப்பவர்கள் தானே; அவர்களில் சிலபல லட்சம் பேர் வேலூர் மாநாட்டுக்கு வருவதில் என்ன தயக்கம் இருக்கிறது?" என்று கேள்வி எழுப்பியதுதான் தாமதம்;

"ஓ! நீயும் நாலு மாநாடுகளுக்குப் போனவள்.....இப்போதும் "வருவதில் என்ன தயக்கமிருக்கிறது?" என்று கேட்டு, நீயும் இந்த மாநாட்டுக்கும் வருவதை உறுதிப்படுத்திக் கொள்கிறாயா?''

என நீ கேட்டுச் சிரிப்பதையும் அது கண்டு உன் துணை மயில் துவண்டு நாணுவதையும் நான் மனக்கண்ணால் பார்த்து ரசிக்கிறேன்.

'முகை' என்றாலே "கூட்டம்" என்று பொருள் கூறுகிறது தமிழ் அகராதி; அதனால்தான் வேலூர் மாவட்ட உடன்பிறப்புகள், பெருங்கூட்டம் வரும் என்று கணித்துப் 'பெருமுகை' எனும்

இடத்தை மாநாடு நடத்திடத் தேர்வு செய்திருக்கிறார்கள் போலும்! முகைக்கு 'குகை' எனும் மற்றொரு பொருளும் உண்டு.

"உன் மகன் எங்கே" என்று கேட்டவனிடம்;

"அந்தப் புலி எங்கேயோ ஓர் போர் முனைக்குப் போயிருக்கிறது; இதோ, புலியிருந்த குகை"

என்று ஒரு தாய் தனது வயிறைத் தொட்டுக் காட்டியதாகப் "புறநானூறு" கூறுமே; அது போல வேலூர் மாநாட்டுக்கு வரப்போகிற உன்னைப் பற்றி உன் அன்னை சொல்லுவார்; இதற்கே உன் அன்னைக்கு என்மேல் கோபம் வரக் கூடும்; தன் மகனை வரச்சொல்லி அழைத்து விட்டு, தன்னை வரக்கூடாது என்று சாடையாகக் கூறுகிறோமோ எனத் தவறாகக் கருதிக்கொள்ள நேரிடுமோ என்பதால்!

அழைத்து அழைத்து அண்ணனுக்கு அயர்வும், அலுப்பும் ஏற்பட்டிருக்கும் - அதனால் அவர் அழைப்பு விடுப்பதற்கு முன்பு நாமே விடுப்போமே என்று - மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருப்பவரும், அங்கு மாநாட்டுப் பணியாற்றுவோரை மேலும் ஊக்குவிப்பவருமான நமது முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன் "வேலூர் மாநகர் வரவேற்புக்குத் தயாராகிறது" என்று கடந்த மாதமே முரசொலியில் எழுத்தோவியமொன்றை இதய கீதமாகத் தீட்டியுள்ளார். அது வருமாறு :

"தி.மு.கழகம் வலிவுபெற வேலூரும் ஒரு காரணம் என்பதை கழக வரலாறு அறிந்தவர்கள் அறிவார்கள்.

1961ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர்;
விருதம்பட்டு பொதுக்குழு-மறந்துவிட முடியுமா?
வாழையடி வாழையாக வளர்ந்து வரும் இளம்
தலைமுறைக் கழகத்தினரும், நெஞ்சில் பதித்து வைத்து
இருக்க வேண்டிய பொதுக்குழு அல்லவா; அது!
உட்பகை எத்தகைய விஸ்வரூபம் எடுக்கும் என்பதையும்,
பாச உணர்வு அதை எப்படி வெற்றி கண்டது
என்பதையும் நிரூபித்துக்காட்டிய பொதுக்குழு தானே; அது!
விலைவாசிப் போராட்டத்தில் அண்ணா அவர்கள்
கோட்டை வாசலில் மறியல் செய்ததும்,
கோர்ட்டு வளாகத்தில் நின்று வாதம் புரிந்ததும்,
இந்த வேலூர் திருமண்ணில் தானே!

அவரது வாதத்தைக் கேட்ட பின்னும்,
“ஆறு மாதம், தண்டனை” என்று நீதிபதி தீர்ப்பு
உரைத்ததால் அண்ணா அவர்கள் சிறைக் கைதியாக
இருந்ததும் இந்த வேலூர் மத்திய சிறைச்சாலையில் தானே!
பண்பாடும்-கண்ணியமும், தியாகத்தை மதிக்கின்ற
தன்மையும் பட்டுப் போய்விடக் கூடாது என்பதில்
அழுத்தமான கொள்கை கொண்டவர் அறிஞர்
அண்ணா அவர்கள் என்பதை
ஊருக்கு உலகத்திற்கு ஒளியேற்றிக் காட்டிய
திருத்தலம் வேலூர் அல்லவா!
சுதந்திர நெருப்பின் சூடு, தணியாத காலம்;
அப்பொழுதுதான் பல்வேறு எதிர்ப்புக்களுக்கிடையில்
அண்ணா அவர்கள் வரலாற்று சிறப்புமிக்க வேலூர்
கோட்டை வெளி மைதானத்தில், நகரமன்ற
சார்பில் நிறுவப்பட்ட அண்ணல் காந்தியார்
சிலையை திறந்து வைத்தார்.
அன்று அண்ணா பேசியது! பேச்சா! அல்ல! அல்ல!
ஜனநாயகத் தத்துவத்திற்கோர் விளக்கம்!
தமிழ்ப் பண்பாட்டிற்கோர் எடுத்துக்காட்டு!
மனித நேயத்திற்கோர் மாண்பு உரை!
“மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு”
இந்த ஒரு வரி காந்தியடிகளுக்கு மட்டும் பெருமையை
சேர்க்கவில்லை. அண்ணாவுக்கும் பெருமையைச் சேர்த்த
வரியாகும்.
சுயமரியாதை இயக்கத்திற்கு மட்டுமல்ல,
சுதந்திர வேட்கைக்கும் முதல் வித்திட்ட பூமி
வேலூர்தான்.
விண்ணில் பறந்திட்ட அன்னியர் கொடியை
வெட்டி மண்ணில் வீழ்த்திவிட்டு,
சுதந்திரக் கொடியை முதன்முதலில்
பறக்கவிட்டது இந்த வேலூர் கோட்டை கொடி
பீடத்தில்தானே!
அந்த நிகழ்ச்சியை தானே முதல் சுதந்திரப் போர் - என்று
சிப்பாய் கலகம் தொடக்கம் என்று வீரகாவியம் தீட்டி
காட்டினர்;
வரலாற்று ஆசிரியர்!

சுதந்திரக் கொடி மட்டுமா முதன்முதலில் வேலூரில்
பறந்தது!
சுதந்திர தாகமும் - சுயமரியாதை வேகமும் கொண்ட
தீரன் திப்பு சுல்தானின் குடும்பத்தினரும்
கட்டபொம்மன் வாரிசுகளும் - ஈழத்து மண்ணில்
வாழ்ந்த சுதந்திர வேங்கை இலங்கைக் கண்டியாண்ட
வேந்தன் கண்ணுச்சாமியும் அவரது குடும்பத்தினரும்
வெள்ளையரால் கைது செய்யப்பட்டு, சிறையில்
இடப்பட்டு இருந்தாலும், சுதந்திர மூச்சுக்காகவே
இறுதி மூச்சையும் விட்ட அந்த தீரர்கள் "கல்லறை
நாயகர்களா"னதும் இந்த வேலூர் திருநகரில்தானே!
இப்படி எத்தனையோ வரலாறு சுவடுகள் படிந்த மண்!
வேலூர் மண்!
அந்த மண்ணில் தான் மாநாடு!
வேலூர்-ஆற்காடு நெடும்பாதையில்!
பாலாற்றங் கரையில்! பசும் தென்னஞ் சோலைகளுக்கு
அருகில்...
மரகதம் நிகர் மலை தொடர்களுக்கு எதிரில்...
நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில்....
எழும்பிக் கொண்டு இருக்கிறது மாநாட்டுப் பந்தல்"

இப்படிக் கற்கண்டுத் தமிழில் கழக உடன் பிறப்புகளைக் கவர்ந்திழுத்து தம்பி துரைமுருகன் என் பணியை ஓரளவு குறைத்திருக்கிறார் அல்லவா!

மாநாடு நடைபெற இருக்கிற இந்த மண்டலத்தில் உள்ள திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும்; இவை தவிர்த்த மற்ற மாவட்டங்களிலும் எனக்கு கழகத்தில் ஏதாவது ஒரு வகையில் உள்ள தொடர்பினைப் போலவே இந்த இயக்கத்தின் மறைந்த மாமணிகள் பலரை என் மனத்தில், என்றுமே மறையாத சித்திரங்களாகப் பதிய வைத்துக் கொண்டிருக்கிற அளவுக்கு நண்பர்களாகப் பெற்றிருந்த தூய்மையும் பாசமும் கொண்ட தொடர்பு இருந்திருக்கிறது. இன்னமும் அந்தத் தொடர்பும் நினைவாக மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டுதானிருக்கிறது.

கல்லக்குடி போராட்டத்தில் என் பக்கத்திலேயே தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்து என்னுடன்

சிறையிலிருந்த முல்லை சத்தி, அண்ணா படையின் அடலேறுத் தளபதிகள் ஆம்பூர் சம்பங்கி, இராமு என்ற இரட்டையர், திருவண்ணாமலை தர்மலிங்கம், முல்லை வடிவேல், முருகையன், பெரியவர் திருப்பத்தூர் சின்னராஜ், போளூரார், மாவீரர்கள் சண்முகம், சுந்தரம், வேலூர்வீரர் சாரதி, தீரர்கள் இருதேவராஜர்கள், திராவிடன் பதிப்பகம் கிருட்டிணன், கழகக் கண்மணிகள் கமலநாதன், சென்னகேசவன், புலவர் கோவிந்தனார், பாபு ஜெனார்த்தனம், ஆலங்காயம் தர்மலிங்கம், மேல்விஷாரம் சலீம், வி.எஸ். பாண்டியன், அரக்கோணம் எஸ்.ஜே. ராமசாமி, சஞ்சீவி, ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி, எ.க. துரைசாமி என எத்தனை பேர் என் காரிலேயே என்னுடன் கழகப் பணியாற்றிடும் கடமையில் இணைந்திருந்தனர், இன்று புதிய ரத்தம் பாய்ச்சப்பட்ட நிலையில்; பழைய நட்பும் பண்பாடும் போற்றி நிற்கும் அதே படையின் அடுத்த வரிசைத் தளபதிகளைக் காணுகிறேன் வேலூர் மண்டலத்தில்!

இந்தத் தன்மானச் சிங்கங்களோடு மட்டுமா; தம்பி துரைமுருகன் சுட்டிக்காட்டியுள்ள வேலூரின் தியாக வரலாற்றுச் சின்னங்களுடன் என் பெயரும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது அல்லவா?

தம்பி சுட்டிக் காட்டியுள்ள ஈழத்து மன்னன் கண்ணுசாமி என்ற கண்டி ராஜா வெள்ளையரால் சிறை பிடிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைபட்டு அங்கேயே மாண்டவர் என்பதால்; அவருக்கு வேலூரிலேயே 'முத்து மண்டபம்' எனும் நினைவிடம் அமைக்கும் பேறு எனக்குக் கிட்டியது; நான் ஆட்சியில் இருந்தபோதுதானே என்பதை எண்ணும் பொழுதும்; வேலூர் கோட்டையில் அன்னியக் கொடி மரத்தை வெட்டி எறிந்து முதல் சுதந்திரப் போரை வெள்ளையருக்கு எதிராகக் கொடியேற்றித் தொடங்கிய மண்ணும் தமிழகத்து வீரம் மணக்கும் வேலூர் மண் தானே எனப் புகழப்படும்; அந்த வரலாற்றுச் சின்னத்தை ஐம்பதாம் ஆண்டு சுதந்திர விழாவில் திறந்து வைக்கும் வாய்ப்பு ஆட்சியில் இருந்த எனக் குக் கிடைத்ததும்; மாநாடு நடக்க இருக்கும் இந்த மகத்தான நகரத்தில்தானே என எண்ணும்பொழுதும் நான் கொண்டிடும் பெருமிதத்திற்கு எல்லைதான் உண்டோ ? அந்தப் பெருமையை என் அன்பு உடன் பிறப்பாம் உன் போன்றோருடன் பகிர்ந்து

மகிழ்ந்திட வேலூரில் கிடைக்க இருக்கும் வாய்ப்பை இம்மடல் எழுதும்போதே எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சிங்கக் குட்டிகளாம் இருவர் மேல்மாயில் ஜெகநாதன், கல்லாவி ராஜேந்திரன் என செந்தமிழ் காத்திடவும், செந்தமிழர் உரிமை போற்றிடவும்; ஆதிக்க மொழிகளுக்கு இடம் தரோம் என்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து இன்னுயிரைத் தீக்குளித்து அர்ப்பணித்தார்களே அவர்கள் பெயரால் நமது இரு வண்ணக் கொடி மேடை அமைகிறது!

நமது கழகக் கொடியை வணங்குவது நமது தியாகிகளை வணங்குவது போலன்றோ?

தமிழகம் தந்திரக்காரர்களின் ஆட்சியில் சிக்கித் தவித்து, அந்தச் சிக்கலின் கடைசி முடிச்சு அவிழ்க்கப்படப்போகும் நேரத்தில் இந்த மாநாடு வேலூரில் நடைபெறுகிறது.

இதற்கு அடுத்த மாநாடு; பொதுத் தேர்தலுக்கான கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை அறிவிக்கிற தேர்தல் அறிக்கை வெளியிடும் மாநில மாநாடாகத்தான் திருச்சியில் இன்னும் சில மாதங்களுக்குப் பிறகு நடைபெற இருக்கிறது எனும்போதும், இந்த மாநாடு நடைபெறப் போகின்ற மாநில மாநாட்டுக்கு ஒத்திகை மாநாடாக அமைகிறது எனும்போதும், இந்த மாநாட்டின் முக்கியத்துவம் அதிகமாகிறது என்பதை மறந்துவிட முடியாது.

ஆட்சியாளர்களின் மாயை, தமிழ் மக்களை எங்கே இழுத்துச் சென்று சூழ்ச்சிப் பள்ளத்தாக்கில் தள்ளப் பார்க்கிறது என்பதற்கு இதோ ஓர் உதாரணம்.

> “பெரு மழை வரப்போகிறது, அதை எதிர்கொள்ளத் தயாராகி, எல்லா ஏற்பாடுகளும் தயார் செய்யுங்கள் என்று அம்மா முதலமைச்சர் முன்கூட்டியே பல நாட்களுக்கு முன்பே என்னை அழைத்துச் சொன்னார். அவர் சொன்னபடி மழை வந்துவிட்டது. அதனால் முதலமைச்சர் ஜெயலலிதா விஞ்ஞான அறிவுக் கண்ணோட்டமிக்கவர்”

என்று தலைமைச் செயலாளர் நாராயணன் சொன்னார் என்பதாகத் தமிழ் ஆங்கில ஏடுகள் புகழ் பாடுகின்றன.

மழை வரப்போவதை முன்கூட்டியே அறிந்து சொல்லுகிற விண் “ஞானி” (?) ஜெயலலிதா என்றால்;

பிறகு எதற்காக; காவிரியில் தண்ணீர் கேட்டு பிரதமரைச் சந்திக்க டெல்லிக்கு அவரே சென்றார்?

பிறகு எதற்காக; அ.தி.மு.க. வினரை மத்திய அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யச் சொன்னார்?

பிறகு எதற்காக; அ.தி.மு.க. வினரை அடையாள உண்ணாவிரதம் இருக்கச் சொன்னார்?

பிறகு எதற்காக; கர்நாடக முதல்வரை நேரில் சந்திக்க இரண்டு அமைச்சர்களை அனுப்பி வைத்தார்?

"பார்த்திப ஆண்டு வரும்போதெல்லாம் அதிக மழை பெய்யும்" என்ற அரிய கண்டுபிடிப்பையும் முதலமைச்சர் வெளியிட்டிருக்கிறார். அதுகுறித்து புள்ளி விவரங்களுடன் இதற்கு முன்பு பார்த்திப ஆண்டு வந்தபோதெல்லாம் அதற்கடுத்த ஆண்டுகளில் பெய்த மழையை விட எந்த அளவிற்கு மழை குறைவாகப் பெய்துள்ளது என்ற விவரத்தையும் ஆதாரபூர்வமாக பொருளாதார மேதை ஒருவர் திட்ட வட்டமாக எழுதி ஜெயலலிதா கூற்றை மறுத்திருக்கிறார். அந்த விவரம் இனியாவது அவர்களுக்குப் புரியுமா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில்; "நமோ நாராயணா" தான் என்றுள்ள நாதியற்ற நிலைமை நாட்டிலே இருக்கும் இதே நேரத்தில் வேலூர் மாநாட்டுக்கு தலைமை வகிப்பவர், திறப்பாளர், கொடி உயர்த்துவோர் மூவருமே இளமை முதல் அறிவு ஒளி பெற்று சுயமரியாதை உணர்வுடன் இயக்கத்தில் வளர்ந்தவர்கள் என்பதை அறிவாய்! நெருக்கடி காலத்திலுங்கூட; அந்த நெருப்பு வளையத்துக்குள் கழகமெனும் கற்பூர தீபத்தை அணையாமல் காத்திட்ட மாவட்ட தளகர்த்தர்களில் ஒருவரும் - மலை குலைந்தாலும் மனங்குலையா மாவீரரும் - நமது இயக்கப் பாசறையில் என் பாசமிகு இளவல்களில் சிறந்தோர் வரிசையில் சிரித்த முகத்துடன் பகையைப் பந்தாடுபவருமான சேலத்துச் சிங்கம் தம்பி வீரபாண்டி ஆறுமுகம்தான் மாநாட்டுத் தலைவர்.

திறப்பாளரோ திராவிடர் கழகத் தாக்கம் முழுமையாக ஊறிடப் பெற்றவரும் - பகுத்தறிவுச் சுடர் மணியென விளங்குபவரும் - தியாகம் புரியச் சளைக்காதவரும் - ஓய்வறியா உழைப்பாளித் தொண்டர்களில் ஒருவராகத் தன்னை ஆக்கிக் கொண்டு கடமை

தவறாது இயக்கம் ஏற்றம் பெறப் பாடு படுபவருமான தன்மான வேங்கை தம்பி பொன்முடி.

தங்கை சற்குண பாண்டியன்; இன்று கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் - அன்று பால பருவத்தில் பாவாடை கட்டிய சிறுமியாகப் பகுத்தறிவு முழக்கம் செய்த காலத்திலிருந்து சுயமரியாதைச் சுடர் - இன்றைக்கும் எத்தனை இடர் வரினும் எதிர் நின்று வீரம் காட்டிடும் - தி.மு. கழகத்தின் திருவிளக்கு - அவர் ஏற்றி வைக்கும் இருவண்ணக் கொடியின் ஒளி; திருவிளக்காக மட்டுமல்ல, கலங்கரை விளக்கமாக; கடல் கடந்து வாழும் தமிழர்களின் விழிகளுக்கும் வெளிச்சம் தரும்.

இத்தனை புகழ்மிக்க மண்டல மாநாட்டை முன் நின்று நடத்தும் வரவேற்புக் குழுத் தலைவர் அமைதியின் உறைவிடம், ஆற்றல் களஞ்சியம் தம்பி சண்முகத்துடன் இணைந்து நானும் உன்னை அழைக்கின்றேன். இடையில் நாட்கள் நிரம்ப இருக்கின்றன எனினும் இப்போதே பயணத்துக்குத் தயாராகுக என்று முன்னேற்பாடுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவே முன்கூட்டியே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

செயலாற்றும் செம்மல்கள், மாநாட்டுச் செயலாளர்களான தம்பிகள் எ.வ. வேலு, டி. செங்குட்டுவன், எம். கோவிந்தசாமி மற்றும் நிதிக் குழு தலைவர் தம்பி ஆர். காந்தி, நிதிக் குழு செயலாளர்கள் தம்பிகள் முகமது சகி, கு.பிச்சாண்டி, த. வேணுகோபால், முல்லைவேந்தன், சுகவனம் எனப் பணியாற்றும் உடன்பிறப்புகளில் பாராட்டுக்குரியோர் இன்னும் பலருண்டு! வரத் தயாராகிக்கொள்; வந்து வாழ்த்திடுவாய் அவர்களை!

அன்புள்ள,

மு.க.

06-08-2005

3164. சல்லடைக் கண்களாகும் சட்டம் ஒழுங்கு!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தில் கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும் - எதுவுமேயில்லாத சட்டம் அமைதி காத்திடும் நிலை இருப்பதாகக் கொக்கரிக்கிறார்களே; சில கொத்தடிமை விமர்சகர்கள்; அவர்கள் படித்துத் திருந்திட; கடந்த ஜூலை ஒரு மாதத்தில் மட்டும் தமிழகத்தில் நடைபெற்றுள்ள சட்டம் சீர்குலைந்த நிகழ்வுகளைப் பட்டியலிட்டுப் பார்க்கலாமா?

இதோ அந்தப் பட்டியல் :

1. 1-7-2005 - சென்னை காமராஜர் கடற்கரை சாலையில் - காலையில் நடைபயிற்சிக்காகச் சென்ற வணிகப் பிரமுகர் தனபால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.
2. அதே நாளில் வண்ணாரப்பேட்டையில் பட்டதாரி பெண் சண்முகப்பிரியா மர்மச் சாவு. போலீசுக்குப் பயந்து கணவன் தற்கொலை.
3. 2-7-2005 - சென்னை கொரட்டூர் காமராஜர் நகரில் நிகழ்ச்சிக்காக வந்தவர் ஒருவரிடம் 27 சவரன் நகை கொள்ளை.
4. 3-7-2005 - தூத்துக்குடியில் வாலிபர் ஒருவர் கொலை.
5. 5. 3-7-2005 - கும்பகோணம் அருகே மாணவன் கொலை
6. 3-7-2005 - சேலத்தில் கீரப்பாப்பம்பாடி கிராமத்தில் உள்ள கோவிலில் சாமி சிலைகள் கொள்ளை.

7. 4-7-2005 - மாங்காடு, கொளப்பாக்கம் அருகே துப்பாக்கியால் சுட்டு பொறியாளரிடம் நகை, பணம் பறிப்பு. முகமூடி கொள்ளையர் அட்டகாசம்.

8. 6-7-2005 - திண்டுக்கல் உதயம் காலனி பகுதியில் வங்கி அதிகாரி மனைவி அம்சல்யா பேகம் கழுத்தை அறுத்துக் கொலை.

9. 8-7-2005 - நெல்லை - ஆற்றில் குளிக்கச் சென்ற பெண்ணை மூவர் கொடூரமாக கற்பழித்தனர்.

10. 8-7-2005 - பள்ளிக்கரணையில் கல்லூரி ஆசிரியை மயக்க மருந்து கொடுத்து கற்பழிப்பு 11. 10-7-2005 - சென்னை தியாகராயநகரில் பொறியியல் கல்லூரி தாளாளரிடம் ஒன்றரை லட்சம் ரூபாய் திருட்டு.

12. 10-7-2005 - ஈரோடு, மூலனூர் அருகே மர்ம ஆசாமிகள் அம்மன் கோவிலில் உள்ளே புகுந்து நகை, பணம் கொள்ளை.

13. 10-7-2005 - ராமேஸ்வரத்தில் உள்ள ராமர் பாதம் கோவிலில் உண்டியலை உடைத்து பணத்தைக் கொள்ளை.

14. 10-7-2005 - திருநெல்வேலியில் புளியம் பட்டியில் மரம் வெட்டும் தகராறில் மூன்று பேர் படுகொலை.

15. 10-7-2005 - ஆதம்பாக்கத்தில் பட்டப் பகலில் அதிகாரி வீட்டில் மர்ம ஆசாமிகள் புகுந்து வைர, தங்க நகைகள் கொள்ளை.

16. 11-7-2005 - சென்னை பெரவள்ளூர் எஸ்.ஆர்.பி. நகரில் மத்திய அரசு அதிகாரி வீட்டில் எட்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகள், பணம் கொள்ளை.

17. 11-7-2005 - கோவையில் பெண் குத்திக் கொலை.

18. 12-7-2005 - சென்னை கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் சாலையில் பி.எஸ்.என்.எல். அதிகாரியிடம் ரூ. 12 லட்சம் கொள்ளை.

19. 13-7-2005 - திருப்போரூரில் கோவில் ஊழியர் மனைவி லதா கொடூரக் கொலை.

20. 14-7-2005 - திருவண்ணாமலை ஆரணி அருகே காரில் வங்கிக்கு பணம் எடுத்துச் சென்ற போது முகமூடிகள் டிரைவர் மூர்த்தியைச் சுட்டுக் கொலை செய்து விட்டு பத்து லட்சம் ரூபாயைக் கொள்ளை அடித்துச் சென்றனர்.

21. 14-7-2005 - மாமல்லபுரத்தில் ஒரே நாளில் இரண்டு கோவிலில் பணம் கொள்ளை.

22. 14-7-2005 - சென்னை - 3000 ரூபாய் லஞ்சம் பெற்ற பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரிமுத்து சஸ்பெண்ட்

23. 14-7-2005 - செங்கல்பட்டு அருகே டேங்கர் லாரியை வழி மடக்கி ஐந்து இலட்சம் ரூபாய் கொள்ளை.

24. 14-7-2005 - திருச்சி, லால்குடி அருகே தண்டவாளத்தில் மூட்டை, மூட்டையாக வெடி மருந்து.

25. 16-7-2005 - காவிரி நீர் கேட்டு போராடிய விவசாயிகள் மீது காவல் துறை தடியடி - கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மீது தாக்குதல்.

26. 16-7-2005 - லாரி டிரைவர் பன்னீர் செல்வம் தாம்பரம் அருகில் கடத்திக் கொலை.

27. 19-7-2005 - குன்றத்தூர் அருகே கோஷ்டி மோதல், கலவரம். 15 லாரி, வீடுகள் நொறுக்கப்பட்டன. போலீஸ் தடியடி.

28. 19-7-2005 - மதுராந்தகம் அருகே எலெக்ட்ரிக் கடைக்காரர் வீட்டில் 47 பவுன் நகை கொள்ளை.

29. 22-7-2005 - திருவேற்காடு நகராட்சி அலுவலகத்துக்குள் காவலாளி கோபி வெட்டிக் கொலை.

30. 23-7-2005 - திருநின்றவூரில் பட்டப் பகலில் நாராயணசாமி என்ற விவசாயி படுகொலை.

31. 25-7-2005 - சென்னையை அடுத்த கொரட்டூரில் மளிகைக் கடைக்காரர் தங்கமணி ஓட ஓட வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

32. 25-7-2005 - சென்னையில் தொழிலதிபர் மனைவியிடம் மந்திரவாதி அப்துல் ரகுமான் 25 இலட்சம் ரூபாய் மோசடி.

இவை; ஜூலை 31 நாட்களில் 32 வன்முறை நிகழ்வுகள் - சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டுப் போனதற்கான எடுத்துக்காட்டுகள். இதோ ஆகஸ்டு திங்கள் அதற்கொன்றும் இளைத்ததில்லை என்பதற்கு ஆரம்பமாகிறது பட்டியல்!

1-8-2005 - சென்னை ராயப்பேட்டை தெய்வ சிகாமணி தெருவில் நிதி நிறுவனத்தின் காவலாளி ராம் பிரதாப் சிங் என்பவர் கொலை. 20 இலட்சம் ரூபாய் கொள்ளை.

2-8-2005 - திருவொற்றியூரில் ராணி என்ற பெண்மணி கொலை, நகை கொள்ளை.

2-8-2005 - மாணவி சதாவிடம் குடிபோதையில் ஈவ் டீசிங் செய்த தலைமைக் காவலர் பேச்சி முத்து.

2-8-2005 - ஆவடி, கொரட்டூரில் பூட்டிக் கிடந்த வீட்டில் இளம் பெண் தமிழ்ச்செல்வி பிணம்.

2-8-2005 - காஞ்சிபுரம் அருகே தாமல் கிராமத்தைச் சேர்ந்த லாரி டிரைவர் ரமேஷ் படுகொலை.

3-8-2005 - இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெராயின் கடத்தல்.

3-8-2005 - காண்ட்ராக்ட் தகராறு காரணமாக தலைமைச் செயலகம் முன் தீக்குளிக்க இரண்டு அ.தி.மு.க. வினர் முயற்சி.

4-8-2005 - புதுவண்ணாரப்பேட்டையில் மீனவர்கள் சுனாமி உதவி கிடைக்கவில்லை என்பதற்காக மறியல். அவர்கள் மீது போலீஸ் தடியடி. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரை பெண்கள் முற்றுகை.

4-8-2005 - மதுரை ரெயில் நிலையம் அருகே சாட்சி சொல்வதற்காக வந்த விடுதலை சிறுத்தை இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர் தனுஷ்கோடி சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

4-8-2005 - பூவிருந்தவல்லியில் கல்லூரி மாணவி கற்பழித்துக் கொலை.

5-8-2005 - மாமல்லபுரம் விடுதியில் ஆண் படுகொலை.

6-8-2005 - பூவிருந்தவல்லி அருகே ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்ட அருணா கொலை.

7-8-2005 - சென்னை பேசின்பிரிட்ஜ் அருகில் பெண் தர்மகர்த்தா நாகபூஷணம் கோவில் வளாகத்தில் படுகொலை.

7-8-2005 - கராத்தே செல்வின் கூட்டாளி பாக்கியநாதன் கொலை.

இப்படி மாதந்தோறும் மனத்தைக் கலக்குமளவுக்குப் பெரும் பட்டியலுக்கும் - நாள்தோறும் ஒரு படுகொலைக்கும் பஞ்சமில்லை என்ற அளவில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சல்லடைக் கண்களாகத் துளைக்கப்படுவதற்கு பெயர்தான் அமைதியான மாநிலம் என்பதற்கான அடையாள முத்திரை போலும்! ஆனால் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள முதல் அமைச்சருக்கோ இதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. வரப்போகின்ற தேர்தலில் ஆளுங்கட்சிக்கு அனுசரணையாக யார் யார், எந்தெந்த அதிகாரிகள் நடந்து கொள்வார்கள் என்று தேடிப் பார்த்து அவர்களுக்கு பதவி உயர்வு அளித்து, முக்கியமான இடங்களில் அமர்த்துகின்ற அந்தப் பணியிலே தீவிரமாக ஈடுபட்டு ஆணைகளைப் - பிறப்பித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு நாறிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் நிதர்சனம்.

அன்புள்ள,

மு.க.

10-08-2005

3165. சுதந்திரப் பிதற்றல்! -

(எல்லோரும் பிதற்றுவது போல் சுதந்திர நாளில் நான் பிதற்றுவது பின்வருமாறு:-)

உடன்பிறப்பே,

சுதந்திரம்; ஒரு கானம்!
குயிலின் கானமாக
அமைந்திடின் குளிரும் நெஞ்சம்.
மயிலின் கானமாக
இருந்தால் மனம் கவர்வதில்லை!

சுதந்திரம்; மண்ணின்மைந்தர் மானம்;
மரணத்தை விலையாகக் கொடுத்து,
மகிழ்ச்சியுடன் வாங்கலாம்; நாம்
வாங்கியது அப்படித்தான்!

சுதந்திரம்; பரந்த வானம்;
வானத்தை நோக்கி வசை பாடலாம்,
வசீகரிக்கும் இசை முழங்கலாம்.
விண்வெளிக் கலம் விடலாம்;
மண்வாரி இறைக்கலாம் -
அவரவர் இயல்புக்குத் தக்க
ஆவன செய்யலாம்!

எல்லா நாடுகளிலும்
சுதந்திரம் கொண்டாடப்படுகிறது;
எல்லா நாடுகளிலும்
அந்நாளில் அது ஊனம்!
அங்கெல்லாம்;
பாதுகாப்பு அரண்கள்கூட,
பயந்து நடுங்குகின்றன;
பரிசோதனைகள் நடத்துகின்றன!
தீவிரவாதிகளின் குண்டுகள்
திடீரென வெடிக்குமோ என்று;
திகில் கொண்டு கிடக்கின்றன!
எனவே சுதந்திரம் அங்கெலாம் ஊனம் -
எங்கெங்கும் ஊனமாய்
இருப்பதுதான் சுதந்திரமென்றால்;
இடி இடியெனச் சிரிக்குமே -
வாய்விட்டு வானம்!

கணக்குத் தீர்த்த நாள்
ஆகஸ்டு பதினைந் தென்று
அக மகிழ்ந்தார் அண்ணா!
அடுத்து வந்த ஆகஸ்டு பதினைந்துகளைக்
கணக்குப் பார்க்கும்நாள் என்று
கண்ணியத்தின் காவலர் அண்ணா
விதைத்தார் விவேகமுடன்;
விடுதலைக்குப் பொருள் விளக்கத்தை!
விரிவுரை தேவையில்லை இதற்கு;

விரிகடலாகட்டும் ஆள்வோர் நெஞ்சம்!

இல்லாதார் வீட்டுக்கும்
பொல்லாதார் பண மேட்டுக்கும்
இடையே இருக்கின்ற
பள்ளத்தைத் தூர்ப்போம்!
உள்ளத்தால் உடைமை பொதுவென
உரிமை முரசம் ஆர்ப்போம்!

உலகில் இந்தப் பொதுவிதி;
உதிக்கின்ற நாளே;
உறுதியாய் நிலைக்கின்ற
உண்மைச் சுதந்திர நாளாம்!

அன்புள்ள
மு.க
16-8-2005

3166. வெற்றி முழக்கமிட;
வேலூர் அழைக்கிறது!

உடன்பிறப்பே,

வேலூர் மாநாடு, களை கட்டிவிட்டது. பழச்சுளைகளெனச் செய்திகளோடு, நேற்று (20-8-2005) தம்பி துரைமுருகன், தம்பி எ.வ. வேலு, தம்பி முகம்மது சகி ஆகியோருடன் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரும், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளருமான தம்பி பி. சண்முகம், சென்னைக்கு வந்து மாநாட்டுக்கான அழைப்பிதழ்களை எனக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், பொருளாளர் மற்றும் மு.க. ஸ்டாலின், பரிதி இளம்வழுதி, சற்குணப் பாண்டியன் ஆகியோருக்கும் அளித்தனர். அந்த அழைப்பு நிகழ்ச்சிகூட ஓர் அரசியல்கட்சி மாநாட்டுக்கான அழைப்பு போலின்றி, நமது குடும்பத்தில் நடைபெற இருக்கிற ஓர் இனிய நிகழ்ச்சிக்கான - முறையான, மன்னிக்கவும்! உறவு முறையான உள்ளன்பு கொண்ட நிகழ்ச்சிக்குரிய பாசமிகு அழைப்பாகவே இருந்தது.

அவர்களிடம் நான் முதலில் கேட்டது, மாநாட்டுக்கு வருகின்ற கழக உடன்பிறப்புகளுக்கும், பொது மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் முழுமை பெற்று விட்டதா என்பதுதான்.

"முதன்மைச் செயலாளர் துரைமுருகனைப் பார்த்தாலே தெரியவில்லையா? முகமெல்லாம் எப்படிக் கறுத்துப் போயிருக்கிறது பாருங்கள் - அவ்வளவு வேலை அவருக்கு! அப்படி அலைகிறார் பாவம்!" என்று அவரோடு சேர்ந்து அலையும் திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் எ.வ. வேலு, ஆதங்கத்துடன் சொன்னார்!

தர்மபுரி மாவட்டம், கிருட்டிணகிரி மாவட்டம் இரண்டும் வாக்களித்தபடி மாநாட்டு நிதி வழங்கிவிட்டனவா என்று கேட்டேன் - கழக நிதியில் தானே எனக்கு எப்போதும் கவனம்!

அதனால்தானே அந்த விஷயத்தில் கண்டிப்பாக இருக்கக் கூடிய தம்பி காந்தியை மாநாட்டு நிதிக் குழுத் தலைவராகவும் - மற்றும் தம்பிகள் முகமது சகி, பிச்சாண்டி எம்.எல்.ஏ., வேணுகோபால் எம்.பி., முல்லை வேந்தன், சுகவனம் எம்.பி., ஆகிய ஐவரையும் நிதிக் குழுச் செயலாளர்களாகவும் பொறுப்பேற்கக் கேட்டுக் கொண்டேன்!

அந்தப் பணியை அக்குழுவினர் அயர்வின்றி, அலைந்து திரிந்து, அற்புதமாக ஆற்றி வருகின்றனர் என்று வேலூர் மாநாட்டை வெற்றிகர மாநாடாக ஆக்கிட வேண்டுமென்று துடியாய்த் துடித்துத் தொண்டாற்றுகிற துரைமுருகனும், தோளோடு தோள் நின்று பணிபுரியும் ஒவ்வொரு குழுவின் தலைவர்களான முறையே, அலுவலகப் பொறுப்புக் குழுவுக்கு தம்பி முகமது சாதிக், தீர்மானக் குழுவுக்கு தம்பி பெ.சு. திருவேங்கடம், பந்தல் குழுவுக்கு தம்பி ஆர். சிவானந்தம், மேடைக் குழுவுக்கு தம்பி ஆர்.பி. ஏழுமலை, உபசரிப்புக் குழுவுக்கு தம்பி ராதா கோவிந்தன், பிரச்சாரக் குழுவுக்கு தம்பி மனோகரன், அலங்காரக் குழுவுக்கு தம்பி அ.மா. இராமலிங்கம், விளம்பரக் குழுவுக்கு தம்பி ஆசிரியர் கோவிந்தன், தொண்டர் அணிக்கு தம்பி உமாபதி, மகளிர் அணிக்கு திருமதி காஞ்சனா கமலநாதன், மகளிர் தொண்டர் அணிக்கு திருமதி சரோஜா வெங்கடேசன் ஆகியோரும் அந்தக் குழுக்களின் உறுப்பினர்களுடன் இணைந்து குறையேதும் காண முடியாத அளவுக்கு நிறை பணியாற்றி வருகின்றனர்.

நமது கழகத்தின் மத்திய அமைச்சர்கள் தம்பி டி.ஆர். பாலு, தம்பி ஆ. இராசா ஆகியோர் மாநாட்டுப் பந்தலைப் பார்வையிடச் சென்றவர்கள், திரும்பி வந்து தித்திக்கும் செய்தியாக, திரும்பத் திரும்ப என்னிடம் சொன்னார்கள், தி.மு.க. நடத்திய மாநாடுகளில் இது மிக மிகச் சிறப்பு வாய்ந்தது என்று!

நமது பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அங்கு சென்று பார்த்து விட்டு - அங்குலம் அங்குலமாகப் பந்தலின் பெருமையை விவரித்து அக மகிழ்ந்தார்.

துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் மாநாட்டுப் பணிகளைக் காணவும், பணியாற்றும் பாசமிகு நண்பர்களை ஊக்கப்படுத்தவும் சென்று திரும்பியதை, ஏதோ குறை காண்பதற்காகச் சென்றார் என்று, எரிச்சல் ஏடுகள் சில,

நஞ்சு கக்கி எழுதின எனினும், அதுவும் வேலூர் மாநாட்டுக்கு ஒரு விளம்பரமாகவே ஆயிற்று!

பாதகங்களையும் சாதகமாக்கிக் கொள்வது தானே நமது பழக்கம்! பெரியாரிடம் பெற்ற பயிற்சி! 'குடியரசு' அலுவலகத்தில் 1945ஆம் ஆண்டு வாக்கில் பணியாற்றிய போது, எங்கள் குழுவில் இருந்த நண்பர்கள் அதிகாலையில் அய்யாவை அவரது இல்லத்தில் சந்திக்கும்போது, அன்று வந்த பத்திரிகை ஒன்றில், பெரியாரைப் பற்றி விஷமத்தனமான வேடிக்கைக் கார்ட்டூன் போடப்பட்டிருப்பதை அவரிடம் கவலையுடன் அல்லது கோபத்துடன் காட்டுவோம். அதைப் பார்த்து விட்டு அய்யா பெரியார் என்ன சொல்லுவார் தெரியுமா?

"போடட்டும்ப்பா! இதாவது போடுறானே! இருட்டடிப்பு செஞ்சே நம்பளை ஒழிக்கலாம்னு பாத்தானுங்க! இப்ப நம்பளை கார்ட்டூன் போடற அளவுக்கு நாம் வளர்ந்திருக்கோம்னு சந்தோஷப்படணுமே தவிர, கோபப்பட்டுப் பயனில்லை"

இந்தப் பயிற்சிதான் அவரிடம் நாம் பெற்று, அந்தப் பயிற்சியை மேலும் அண்ணா அவர்களிடத்திலே பண்படுத்திக் கொண்டவர்கள் அல்லவா நாம்!

செடிகொடிகளின் வேரிலே கொட்டப்படுகிற எரு, உரங்கள் இருக்கிறதே! அது வாயில் போட்டு சுவைக்கக் கூடியதா? இல்லையே! ஆனால், வேரில் கொட்டப்படும் அந்த எருவிலும், உரத்திலும் செடி கொடி வளர்வதைப்போல, நாமும் எதிர்தரப்பாரின் ஏசல் மொழிகளை, வசைவுகளை எருவாக ஆக்கிக் கொண்டு எழுச்சி பெற்று, நாளும் வளர்ந்து கொண்டு தானிருக்கிறோம். மேலும் வளர்வோம்! அதை நமக்கு உறுதிப்படுத்துவதாகவே அமையப் போகிறது வேலூர் மாநாடு!

சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலை நோக்கி நாடு, தனது கண்களை அகலத் திறந்து கொண்டு ஆவலை உள்ளத்தில் தேக்கியிருக்கும் நேரத்தில் நமது மாநாடு வேலூரில்!

ஆம்! வீரத்திரு மகளிரும், வெற்றித் திரு மாவீரர்களும் திரளுகிற மாநாடு!

சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால், உடன்பிறப்புக் களின் "மகா சமுத்திரம்" என வர்ணிக்கப்பட இருக்கிற மாநாடாக விளங்கும், வேலூர் மாநாடு.

மாநாட்டின் முதல் நாளன்று, சனிக்கிழமை காலையில் பத்மஸ்ரீ அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேல் குழுவினரின் நாதஸ்வர, தவில் இசையுடன் நிகழ்ச்சி தொடங்குகிறது.

தொடர்ந்து நம்முடைய இசை முரசு நாகூர் அனிபா அவர்கள் - நான் மட்டுமல்ல, அண்ணாவும் அழைக்கின்றார் என்று முரசொலி எழுப்ப இருக்கின்றார்.

தங்கை சற்குணப்பாண்டியன், கழகத்தின் இருவண்ணக் கொடியினை ஏற்றி வைக்கிறார்.

வரவேற்புக் குழுத் தலைவர், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பி. சண்முகம் வரவேற்புரை யாற்றி, மாநாட்டுத் தலைவரை முன் மொழிகிறார். மாநாட்டுத் திறப்பாளர் முனைவர் தம்பி பொன்முடி தனது உரையை அடுத்து ஆற்றுகிறார். அடுத்து, மாநாட்டுச் செயலாளர்களான எ.வ. வேலு, டி. செங்குட்டுவன், எம். கோவிந்தசாமி ஆகியோர் மாநாட்டுத் தலைவரை வழி மொழிகிறார்கள். பின்னர், முதல் நாள் காலை நிகழ்ச்சியின் முடிவாக மாநாட்டுத் தலைவர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் உரையாற்றுகிறார்.

இடைவேளைக்குப் பின், புதுக்கோட்டை ஆக்காட்டி ஆறுமுகம் இசை நிகழ்ச்சியுடன் மதிய நிகழ்ச்சி தொடங்குகிறது. மாநாட்டுத் தீர்மானங்கள், சொற்பொழிவாளர்களின் உரைகளைத் தொடர்ந்து, அன்று இறுதியாக, நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்களின் உரை விரிவுரையாக, விளக்க உரையாக அமையவுள்ளது.

இரண்டாம் நாள் காலையில் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, சொற்பொழிவாளர்களின் உரைகளைத் தொடர்ந்து, துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் உரையாற்றவுள்ளார். மாலையில் கழகப் பொருளாளர் நண்பர் ஆர்க்காடு வீராசாமி, முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன் உரைகளைத் தொடர்ந்து நமது தோழமைக் கட்சித் தலைவர்களான

திரு. ஜி.கே. வாசன், மருத்துவர் திரு. ச. இராமதாஸ், தம்பி வைகோ, தோழர் திரு என். வரதராஜன், தோழர் திரு. தா. பாண்டியன், பேராசிரியர் திரு. கே.எம். காதர் மொகிதீன் ஆகியோரும் மற்றும் ஆர்.எம். வீரப்பன், எம்.எச். ஜவாஹிருல்லாஹ், இராஜ கண்ணப்பன்,

டாக்டர் ந. சேதுராமன், திருப்பூர் அல்தாப், கு. செல்லமுத்து, எஸ்றா சற்குணம், பி.வி. கதிரவன், பூவை ஜெகன்மூர்த்தி ஆகியோரும் உரையாற்றிய பிறகு, இறுதியாக, நான் உரையாற்ற விருக்கிறேன்.

இரண்டு நாட்களிலும் எழுச்சிமிகு தலைப்புகளில் எண்ணச் சுரங்கமென கருத்துகளைக் குவிக்க இருக்கும் கழகச் சொற்பொழிவாளர்களின் பட்டியலும் - அவர்கள் பேசும் தலைப்புகளும் இதோ!

27-8-2005 சனிக்கிழமை காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை, தம்பிகள் திருச்சி என்.செல்வேந்திரன் இந்தியா அளவில் சுயமரியாதை திருமணம் என்ற தலைப்பிலும், செ.குப்புசாமி, தி.மு.க.வும் தொழிற்சங்க வரலாறும் என்ற தலைப்பிலும், வி.பி.இராஜன், சாவை நோக்கிச் செல்லும் சாலைப் பணியாளர்கள் என்ற தலைப்பிலும், திருமதி காஞ்சனா கமலநாதன், ஜெ. அறிவிக்கும் காகிதப் பூ திட்டங்கள் என்ற தலைப்பிலும், போலீஸ் வெ.கண்ணன், ஜெ. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு படும்பாடு என்ற தலைப்பிலும், தங்கம் தென்னரசு, நெசவாளர் துயர் துடைப்பில் கழகம் என்ற தலைப்பிலும், கந்திலி கரிகாலன், கடல் கடந்த தமிழர்கள் என்ற தலைப்பிலும், நடிகர் ஜெயமணி, கலை உலகில் அண்ணாவும் கலைஞரும் என்ற தலைப்பிலும் உரையாற்றவிருக்கின்றனர்.

அன்று மாலை 4.30 மணி முதல் 8.30 மணி வரை, தம்பிகள் பரிதி இளம்வழுதி, சர்வாதிகாரத்தால் சரிந்த சாம்ராஜ்யங்கள் என்ற தலைப்பிலும், மாண்புமிகு தயாநிதி மாறன், மத்திய அரசின் திட்டங்களும் அ.தி.மு.க. அரசின் அணுகுமுறையும் என்ற தலைப்பிலும், மாண்புமிகு ஆ.இராசா, இந்திய நதிகள் இணைப்பு என்ற தலைப்பிலும்,

மாண்புமிகு எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ஜெ. ஆட்சியும் - தமிழக பொருளாதார வீழ்ச்சியும் என்ற தலைப்பிலும், மாண்புமிகு க.வேங்கடபதி, நாடாளு மன்றத்தில் நாம் என்ற தலைப்பிலும், மாண்புமிகு எஸ்.இரகுபதி, ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் என்ற தலைப்பிலும், மாண்புமிகு சுப்புலட்சுமி ஜெகதீசன் திராவிட இயக்கமும் மகளிர் முன்னேற்றமும் என்ற தலைப்பிலும்,

ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, பாசிசப் பாதையில் ஜெயலலிதா அரசு என்ற தலைப்பிலும், திருச்சி என்.சிவா, மத்திய கூட்டாட்சியில் தமிழகம் பெற்ற நன்மைகள் என்ற தலைப்பிலும், வ. முல்லைவேந்தன் "உன்னை விற்காதே" என்றுரைத்த புரட்சிக் கவிஞர் என்ற தலைப்பிலும், இள. புகழேந்தி, அ.தி.மு.க.வினரின் ஊழல் வழக்குகளும் நீதிமன்றத் தீர்ப்புகளும் என்ற தலைப்பிலும், கே.பி. இராமலிங்கம், விவசாயிகளின் தோழன் தி.மு.க. என்ற தலைப்பிலும், மு.தென்னவன், வர்ணாஸ்ரமத்தால் வந்த கேடு என்ற தலைப்பிலும், கவிச்சுடர் கவிதைப் பித்தன், கலைஞர் எழுத்தில் - பேச்சில் - சமுதாயப் புரட்சி என்ற தலைப்பிலும், புதுக்கோட்டை விஜயா, நாடும் ஏடும் என்ற தலைப்பிலும், திருமதி நூர்ஜகான் பேகம், கழக ஆட்சியில் சமூக நலப் பணிகள் என்ற தலைப்பிலும், கோவி. செழியன், இளைஞர் எழுச்சியே இனத்தின் மறுமலர்ச்சி என்ற தலைப்பிலும், கோவை மணியன், பகுத்தறிவு மணம் கெடுக்கும் மூட நம்பிக்கை முடைநாற்றம் என்ற தலைப்பிலும், குழந்தை தமிழரசன், உலகை குலுக்கிய புரட்சிகள் என்ற தலைப்பிலும், செல்வ பொன்னிவளவன், அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்ற தலைப்பிலும் உரையாற்றவிருக்கின்றனர்.

28-8-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4.00 மணி வரை, தம்பிகள் கோ.சி.மணி, காவிரியும் கழகமும் என்ற தலைப்பிலும், மாண்புமிகு டிஆர்.பாலு நாடு போற்றும் சேது சமுத்திரத் திட்டம் என்ற தலைப்பிலும், கோவை மு.இராமநாதன், சமூக நீதிக் கொள்கையில் தடைக் கற்கள் என்ற தலைப்பிலும், ச. விடுதலை விரும்பி, தமிழக பொருளாதார வளர்ச்சிக்கு தி.மு.க.வின் பங்களிப்பு என்ற தலைப்பிலும், அ.இரகுமான்கான், கழக ஆட்சியில் தொழில் பெருக்கம் என்ற தலைப்பிலும், கம்பம் பெ.செல்வேந்திரன், பெரியாரும் - அண்ணாவும் என்ற தலைப்பிலும்,

இரா.வெற்றிகொண்டான், திராவிட இயக்கச் சிந்தனை ஓட்டம் என்ற தலைப்பிலும், கவிஞர் நிர்மலா சுரேஷ், தமிழ் இலக்கிய வளர்ச்சியில் திராவிட இயக்கத்தின் பங்கு என்ற தலைப்பிலும், திருமதி ஜோன்ஸ் ரூசோ சிறுபான்மை சமூகங்களின் காவல் அரண் தி.மு.க. என்ற தலைப்பிலும், சாவல்பூண்டி சுந்தரேசன், உடன்பிறப்புகளின் பாசறை தி.மு.க. என்ற தலைப்பிலும், கரூர்

கணேசன் கழகம் கண்ட களங்களும்; பெற்ற வெற்றிகளும் என்ற தலைப்பிலும், தாமரை பாரதி, ஜனநாயகப் பேரியக்கம் தி.மு.க. என்ற தலைப்பிலும், மன்னை சோம. இளங்கோவன், வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

அதுமட்டுமா? நமது கழகக் கலைஞர்கள் சுப்ரீம் ஸ்டார் தம்பி சரத்குமார் எம்.பி., தம்பிகள் நெப்போலியன் எம்.எல்.ஏ., வாகை சந்திரசேகர், தியாகு, குமரிமுத்து ஆகியோரும் மாநாட்டில் முழங்கிட இருக்கின்றனர்.

அதைத்தான் கடித ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். வேலூர் மாநாடு, களை கட்டிவிட்டது என்று!

இப்போது, களையில்லாக் கழனி நமது கழகம்! ஒன்றிரண்டு இருந்த களையும் அகற்றப்பட, களை போக்கும் மருந்தின் முதல் துளி ஊற்றப்பட்டது இந்த வேலூரில்தான்.

அந்த வேலூர்தான் அழைக்கிறது! வீரமிகு உடன்பிறப்புக்காள் வருக! வருக என்று! வருக - வருக! என் மனத்துக்கு இதம் தருக! என இனிய உடன்பிறப்புகளே! உங்களை நானும் அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-8-2005

3167. வெண்ணெய் திரளும் வேளை, தாழி உடையாமல் தடுக்க!

உடன்பிறப்பே,

நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரிய ஜனநாயக நாடாகத் திகழும் இந்தியாவில், நாடாளுமன்றத் தேர்தலிலோ- அல்லது சட்டமன்றத் தேர்தலிலோ போட்டியிடுவதற்கெனத் தொகுதிகள் ஏற்கனவே வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தொகுதிகள், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் மறுசீரமைக்கப்பட்டு, சில மாற்றங்களுடன் இறுதியாக அறிவிக்கப்பட்டு, அவற்றில் கட்சிகளின் சார்பில் அல்லது சுயேச்சைகளாகப் போட்டியிடுவோரிடையே தேர்தல் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

தேர்தலில், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களும், மற்றும் மலைவாழ் பழங்குடி மக்களும்- நிச்சயமாகவும், உறுதியாகவும் குறிப்பிட்ட பதவிப் பொறுப்புகளில் அமர்ந்திட, இரு பக்கமும் அவர்கள் மட்டுமே போட்டியிடக்கூடிய தொகுதிகள் (ரிசர்வ் சீட்) என்ற பெயரில் முன்பே அறிவிக்கப்பட்டு, அவை பல்லாண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டுமிருக்கின்றன. அதனால் அந்த மக்கள் அத்தகைய தனித்தொகுதி வாய்ப்புகள் வாயிலாகப் பதவிப் பொறுப்புகளுக்கு வந்து கொண்டிருக்க முடிகிறது.

இப்போது உள்ளாட்சி மன்றங்களிலும்- அரசு வேலை வாய்ப்புகளிலும் - பெண்களுக்கென்று குறிப்பிட்ட சதவிகித இடங்கள், தமிழ்நாட்டில் தி.மு.கழக ஆட்சியில் அளிக்கப்பட்டு, அந்த இடங்களில் பெண்கள் மட்டுமே போட்டியிட்டுத் தேர்வு பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதுபோல, அத்தகைய வாய்ப்பு அவர்களுக்கு அகில இந்திய அளவில் சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகியவற்றிலும் இருந்திடல் வேண்டுமென ஒரு கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

பல ஆண்டுகாலமாக இருந்து வரும் அக்கோரிக்கை நிறைவேறக்கூடிய நல்ல சூழல் உருவாகி, நடைமுறைக்கு வரப் போகிறது என்று நாடே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்போது, வெண்ணெய் திரளும் வேளையில் தாழி உடைந்து விடுகிற கதையாகவே இந்த மகளிர் மசோதா ஆகி வருகிறது.

வரவேற்கத்தக்க இந்தச் சட்ட முன்வடிவு, இப்படித் தடைப்படுவதற்கு, பெண்கள் உரிமையைச் சாத்திர சம்பிரதாயங்களின்படி, வெளிப்படையாக வெகுண்டெழுந்து வெறுத்துத் தடுத்திடும் பத்தாம் பசலித்தனமான எதிர்ப்பு காரணமாக இல்லை, என்றாலும் - பெண்களுக்கென வழங்கப்படும் அந்த இடஒதுக்கீட்டிலும்- தொகுதி ஒதுக்கீடு என்று மட்டுமல்லாமல், அந்த ஒதுக்கீட்டு வாய்ப்பைப் பெறுகிற மகளிர், "பிற்படுத்தப்பட்டோர்"-"முன்னேறிய சமூகத்தினர்" என்றும் பாகு படுத்தப்பட்டு தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே ஒரு சில முக்கிய கட்சிகளின் கருத்தாக இருக்கிறது.

இப்போது உள்ளாட்சி மன்ற மகளிர் இட ஒதுக்கீடுகளில், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு மட்டுமே பெண்கள் தொகுதியிலும், அந்தத் தனித் தொகுதி முறை பின்பற்றப்படுகிறது. அவைகளைத் தவிர்த்து மற்ற தொகுதிகளில் அந்த முறை கிடையாது.

தாழ்த்தப்பட்ட மகளிருக்கு இருப்பது போலவே பிற்படுத்தப்பட்ட மகளிருக்கும் தொகுதிகள் தனியாகப் பிரித்து ஒதுக்கப்படுகிற வாய்ப்பு ஏற்படுமேயானால், அதை வேண்டாம் என்று நாம் எதிர்க்கப்போவதுமில்லை. எதிர்க்கின்ற எண்ணம் சிறிதும் கொண்டவர்களுமல்ல! ஏனெனில், 1916 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே சமூக நீதிக்காக போர்க்கொடி தூக்கிய ஒரு மாபெரும் இயக்கத்தின் வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்பதை யாரும் மறந்துவிடவும் முடியாது! மறுத்திடவும் இயலாது!

அதேபோல, எப்படி உள்ளாட்சி மன்றங்களில் மகளிர் இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டதோ, அப்படிச் சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தலுக்கும் மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்கிவிட்டு, அடுத்தக் கட்டமாக மகளிருக்குள்ளாகவே பிற்படுத்தப்பட்ட மகளிர்க்கென்று பிரித்து இடஒதுக்கீட்டை வரையறை செய்யலாம் என்பதுதான் நமது கருத்தே தவிர, அறவே பிற்படுத்தப்பட்ட மகளிர் சமூகத்தை விட்டுவிடலாம் என்ற எண்ணம் எள் முனையளவும் கிடையாது.

கிளை கிளையாகப் பிரச்சினைகளைக் கிளப்பிக் கொண்டு, முதலுக்கே மோசம் வந்து விடக்கூடாது, அதாவது, மகளிர் இடஒதுக்கீடே இல்லாமற் போய்விடக் கூடாதே என்ற மனக்கவலையோடு தான் இந்தக் கருத்து முன் வைக்கப்படுகிறதே தவிர, வேறல்ல!

இந்த ஜனநாயக நாட்டில் நடைபெறுகிற - பாராளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுகிற ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி, பிற்பட்டோர் அல்லது முன்னேறியோர் என்ற அடிப்படையில் தொகுதி ஒதுக்கீடு எப்போதுமே இருந்திட வில்லை. ஏற்கனவே இருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கான ரிசர்வ் தொகுதிகளுக்கு எந்த இழப்புமின்றி, இப்போது, பெண்ணுரிமை பெருக்கிடும் நல்லெண்ணத்துடன் பொதுப்பட்டியலிலிருந்து குறிப்பிட்ட சதவிகிதம் பெண்களுக்குத் தொகுதி ஒதுக்கலாம் என்ற நிலையில்; பிற்படுத்தப்பட்ட சமூக மகளிர் - முன்னேறிய சமூக மகளிர் ஒதுக்கீடுகள் என்று புதிதாகக் கொண்டுவருவது முரண்பாடுகளாகவும், சிக்கலாகவும் அமைந்து விடுமல்லவா என்பதையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

அதனால்தான் முதலில் மகளிர் இட ஒதுக்கீடு எவ்வளவு என்பதை, இப்போதுள்ள இட ஒதுக்கீடுக்கான தகுதி அடிப்படையில் தாழ்த்தப்பட்டோருக்குப்போக எஞ்சியுள்ளதில், மொத்தத்தில் பெண்களுக்கு எத்தனை சதவிகிதம் என்று நிர்ணயிப்பதே நல்லது!

அப்படி முடிவெடுப்பதால் இப்போது மகளிர் முக்கிய கோரிக்கை முதற்கட்டமாக நிறைவேறுவதுடன், பிற்படுத்தப்பட்ட சமூக மகளிர்க்கு என்ற உள் ஒதுக்கீடு அடுத்த கட்டமாக நிறைவேற்றப்படுவதற்கும் வழி வகுக்கப்படுவது உறுதியான ஒன்று என்ற நம்பிக்கையுடன், இந்தச் சட்டத்தை நிறைவேற்றிட அனைத்துக் கட்சியினரும் அரசுக்குத் துணை நிற்கலாம்.

இந்த மகளிர் இட ஒதுக்கீட்டுக்குள் பிற்படுத்தப்பட்ட சமூக மகளிர்க்கும் உள் இடஒதுக்கீட்டுக்கான வழி இப்போதே வகுக்கப்படுமேயானாலும், அதையும் மனமார வரவேற்கத் தயாராகவே இருக்கிறோம்.

அன்புள்ள,

மு.க.

23-8-2005

3168. வியூகம் வகுப்போம்; விரைந்து வருக; வேலூர்!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு முதன்மை தேர்தல் ஆணையர் நரேஷ் குப்தா அவர்கள், அண்மையில் வெளியிட்டுள்ள தகவலின்படி; இதுவரை ஆய்வு செய்யப்பட்ட 193 சட்டமன்றத் தொகுதிகளில் 19,40,000 (பத்தொன்பது இலட்சத்து நாற்பதினாயிரம்) மனுக்கள், வாக்காளர்கள் தங்கள் பெயர்களைச் சேர்ப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டதாகவும், அவற்றில் பனிரெண்டு இலட்சத்து தொண்ணூற்றி நாலாயிரம் (12,94,000) பேர்களுக்கான மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதாவது தோராயமாக, 13 லட்சம் பேர்களின் வாக்காளர் மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி லட்சக்கணக்கான அளவில் நிராகரிக்கப் பட்டுள்ள வாக்காளர்கள் பெயர்கள் எந்தெந்த வகையில், எத்தகைய காரணங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன என்ற புள்ளி விபரத்தையும் கூடுமான வரையில் தெரிந்து கொள்ள முடிந்திருக்கிறது. அந்த விபரம் பின்வருமாறு :-

1) தவறான முகவரி - முகவரி கொடுக்காதவர்கள் - வெளிநாட்டில் இருப்போர் .. 4,56,000

2) மாறுபட்ட கையொப்பமிட்டோர் .. 3,72,000

3) பதினெட்டு வயதுக்குக் கீழ் உள்ளவர்கள், வயதுச் சான்று இல்லாதவர்கள் .. 3,27,000

4) கையொப்பமில்லாத மனுக்கள் .. 72,000

5) ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ளவர் .. 49,000

6) சிறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டவர் .. 18,000

மொத்தம் பனிரெண்டு லட்சத்து தொண்ணூற்று நாலாயிரம் பேர், வாக்காளர் அல்ல என்று நிராகரிக்கப்பட்டுள்ளதாக

- விபரமான தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கணக்குடன் ஒப்பிடும் நிலையில் அதிகாரபூர்வமாக, தமிழ்நாடு முதன்மைத் தேர்தல் ஆணையத்தின் கணக்குப்படி, 13 லட்சம் பேர் என்பது சற்று ஏறத்தாழ இருக்கலாம்.

ஆக, நமக்கு முதலில் கிடைத்த தகவல் - அதன் அடிப்படையில் தலைமைத் தேர்தல் ஆணையத்துக்குத் தெரிவித்தவாறு, 13 லட்சம் போலி வாக்காளர்களின் பெயர்கள் என்பது வெறும் புகாரல்ல - அடிப்படை ஆதாரமற்றதல்ல - ஆதாரத்துடன் கூடிய உண்மையான புகார்தான் என்பது தெளிவாகியுள்ளது.

நிராகரிக்கப்பட்டவை போக ஆணையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்காளர்களின் விபரமடங்கிய இறுதிப் பட்டியல், 15-9-2005 அன்று வெளியிடப்படலாம் என்று தெரியவருகிறது. எத்தனை லட்சம் போலி வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட, மொத்தமாகவே அதிகாரிகள் உதவியுடன், அ.தி.மு.க. அமைச்சர்களின் அதிகாரமும் பயன்படுத்தப்பட்டு மாபெரும் ஜனநாயகத் துரோக மோசடி நடை பெற்றிருப்பதையும் - சட்ட மன்றப் பொதுத் தேர்தல் முடிவையே, தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளத் திட்டமிட்டு அ.தி.மு.க. வினர் அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்பதையும் நமது எதிர்க்கட்சிக் கூட்டணியினர், தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு உரிய நேரத்தில் எடுத்துரைத்து விழிப்பு ஏற்படுத்தியதன் காரணமாக, தலைமைத் தேர்தல் ஆணையம் தமிழகத் தேர்தல் ஆணையத்தினைத் தொடர்புகொண்டு விசாரித் தறியப் பணித்ததுடன், தலைமைத் தேர்தல் ஆணையத்துப் பிரதிநிதிகள் சிலரையும் இதற்கான விசாரணையை நடத்திட முதலில் விழுப்புரத்திற்கும், தொடர்ந்து இதர மாவட்டங்களுக்கும் அனுப்பி வைத்தது.

அந்தப் பிரதிநிதிகள், சல்லடை போட்டுச் சலித் தெடுத்துத்தான் தவறு நடத்தப்பட்டதற்கான சான்றுகளைக் கண்டுபிடித்துக் காட்ட வேண்டிய தேவையோ, சிரமமோ இல்லாமல், எங்கெங்கு சென்று ஆய்வு நடத்தினார்களோ அங்கெல்லாம் "கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா?" என்ற முதுமொழியை நினைவூட்டுவதுபோல, மக்களாட்சித் தத்துவத்தை மண்ணுக்குள்ளே புதைக்கும் சதி - ஜனநாயகத்தின்

வேர்களையே வெட்டியெறிவதற்கொப்ப வாக்காளர் பட்டியலில் நடத்தப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினர்.

வாக்காளர் பட்டியலில் சதி மற்றும் மோசடி செய்வதென்பது, கிரிமினல் குற்றமாகுமென்றும், அந்தக் குற்றத்தை யார் செய்திருந்தாலும் தேர்தல் ஆணையம் சட்டபூர்வமான நடவடிக்கைகளைத் தயவுதாட்சண்யமின்றி அவர்கள் மீது எடுக்கும் என்றும் - தலைமை மற்றும் தமிழகத் தேர்தல் ஆணையங்களின் மூலமாக உறுதி தெரிவித்துப் பறைசாற்றப்பட்டது.

அடடா! அந்த முழக்கம், நாட்டின் மூலை முடுக்கெல்லாம், சந்து பொந்துகளில் எல்லாம், சகலமானவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், வாக்காளர் சேர்ப்பு என்ற பெயரால், "மொத்த வாக்காளர் விண்ணப்பம்" எனும் மோசடியை அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்களாக இருக்கும் அமைச்சர்களேகூடச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீதும் தேர்தல் ஆணையம் சட்டப் பூர்வ நடவடிக்கை எடுத்தே தீரும் என்று ஓங்கி ஓங்கி முழங்கியது.

இப்படியொரு நிலை வரக் கூடும் எனப் பயந்து பன்னீர்செல்வம் எனும் அமைச்சர் பெருமகன், அலறியடித்துக் கொண்டு ஓடினார் நீதிமன்றத்துக்கு!

அங்கே அவர் சார்பில் என்ன கூறப்பட்டது? "வாக்காளர் பட்டியலில் மோசடி என்றால், அதற்கு அந்த வாக்காளர்கள் விண்ணப்பங்களை மொத்தமாகக் கொடுத்த அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது. அதற்குப் பதிலாக அந்த மோசடிக்கு உடந்தையாக இருந்த வாக்காளர் மீதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் - அதற்கேற்ப நான் கோரும் தடையாணைக்கு அனுமதி தர வேண்டும்!"

இந்தக் கருத்தமைந்த மனுதான் மந்திரியார் சார்பில், "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்ற பழைய கதை பாணியில் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நீதி மன்றம், தேர்தல் ஆணையம், "தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்திட" தடை ஏதும் விதிக்கவில்லை.

இந்த நிலையில், தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா 18-8-2005 அன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது, தமிழகத்தில் 13 லட்சம் போலி வாக்காளர்களை

நீக்கி தேர்தல் கமிஷன், அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்திருக்கிறார்..மேலும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் ஈடுபட்ட எந்த அரசு அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். தொடர்ந்து, போலி வாக்காளர்களைச் சேர்த்த அரசியல் கட்சியினர் மீது என்ன நடவடிக்கை என்று கேட்டதற்கும் பதிலளிக்க மறுத்திருக்கிறார்.

இத்தகைய சூழ்நிலை உருவாகியிருக்கும்போது, ஜனநாயகத்திற்கு பாலூட்டி பரிவு காட்டி தோள் மீதும், மார் மீதும், மடி மீதும் போட்டு வளர்த்த தாயாம் தலைமைத் தேர்தல் ஆணையம், அந்த ஜனநாயகச் செல்வன் அல்லது செல்வியைத் துடிக்கத் துடிக்க அ.தி.மு.க. எனும் ஆளுங்கட்சியானது கழுத்தை நெரித்துக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டதைக் கண்டும் காணாததுபோல் நடந்து கொண்டால், தமிழ்நாட்டு மக்களுக்கு அந்தத் தாயின் மீது எப்படி நம்பிக்கை வர முடியும்?

தேர்தல் ஆணையம், தமிழகத்தில் இருப்பதோ அல்லது தலைமை ஆணையமாக டெல்லியில் இருப்பதோ, இரண்டுமே சுதந்திரமானவை என்றாலுங்கூட, அந்த ஆணையங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை அமல்படுத்த வேண்டிய பொறுப்பும் அதிகாரமும் மாநில அரசுக்கு இருப்பதால், ஒரு வேளை மாநில அரசு; சட்டப்படியான நடவடிக்கைகளுக்குச் செவி சாய்க்காது என்றால் - அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைத் தேர்தல் ஆணையத்துக்கே விட்டு விடுவதா?

ஆனால், அரசு, ஆணையம் என்பனவற்றைவிட அதிக அதிகார வலிவு கொண்ட மக்கள் ஆணையம் என ஒன்றிருப்பதை மறந்து விடலாகாது! அந்த ஆணையத்துக்கு அநீதியை எதிர்க்கும் அறப்போர்க் குணம் உண்டு என்பதையும், எடுத்துக் காட்டும் வாய்ப்பு எதிர்க்கட்சிகளின் அணிக்கு உண்டு என்பதையும்; அதைத் தவற விட மாட்டோம் என்பதையும் அச்சுறுத்தலாக அல்ல! திட்டவட்டமான அடக்கமான எச்சரிக்கையாக விடுக்கிறோம். விவரங்களை வேலூர் மாநாட்டில் விவாதிப்போம்! வியூகம் வகுப்போம்! வா, உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு.க.

27-8-2005

3169. மாநகர் சென்னையில் மகளிர் பேரணி! அழைக்கின்றேன் வாரீர்! அணி அணியாக!

உடன்பிறப்பே,

“எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண்”

என்றுரைத்த பாரதியாரும்,

“ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும் ஆமைநிலை தான் ஆடவர்க்கும் உண்டு”

என்றுரைத்த பாரதிதாசனாரும்,

உச்சி மீது உயர்த்தி வைத்து மகளிர் பற்றி இயற்றிய மாக்கவிதைகளின் உணர்வுகள், ஒரு துளியும் பட்டுப் போகாமல் பாதுகாத்துப் பாவையர் பங்கு மனித சமுதாயத்தில் உரிய முறையில் பகுத்திடப்பட வேண்டுமென அந்நாள் தொட்டு இந்நாள் வரையில் உரிமைக் குரல் எழுப்பும் இந்த இயக்கத்தின் தொடக்க கால வரலாற்றிலேயே, இன்றைக்கு எழுபத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது, 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாடு, தந்தை பெரியார் முன்னிலையில், சௌந்தர பாண்டியனார் தலைமையில் நடைபெற்ற போதே பெண்களுக்குச் சொத்துரிமையில் சம பங்கு வேண்டும் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தான் 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பணி யாற்றிய காலத்தில் சட்டமாக நிறைவேற்றினோம் என்பதை இந்த நாடு நன்கறியும்.

அந்தச் சட்டம் இன்றைக்கு அகில இந்திய அளவில் மத்திய அரசு சட்டமாகவே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது, நமது உள்ளத்திற்கு எத்துணை மகிழ்ச்சி அளிக்கிறது தெரியுமா!

அந்தச் சட்டம் தமிழகத்தில் நிறைவேறியதற்குப் பிறகும், அதற்கு முன்பும் தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கால கட்டத்தில்தான் -

மகளிர் குல மாணிக்கங்களாக வாழ்ந்து, சிறந்து, மறைந்த பெருமாட்டிகளின் பெயர்கள் நிலைத்திடத்தக்க வண்ணம் பின்வரும் மகளிர் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

- மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் பெயரில் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்துக்காக மட்டும் தி.மு.க. ஆட்சியில் ஏறத்தாழ மூன்று லட்சம் மகளிருக்கு சுமார் 300 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம் -
- அன்னை தெரசா - ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் -
- அஞ்சுகம் அம்மையார் நினைவு - கலப்புத் திருமண உதவித் திட்டம் -
- ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் படிப்புத் திட்டம் -
- ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகளிர் திருமண உதவித் திட்டம் -
- சத்தியவாணி முத்து நினைவு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் -
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் -
- சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகத் திட்டம் -
- சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் -
- இவற்றையன்னியில், 1989 ஆம் ஆண்டு, கிராமப்புற ஏழை எளிய பெண்களைச் சமூகப் பொருளாதார

நிலைகளில் உயர்த்திடும் நோக்கில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் - தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்காக - என்னால், தர்மபுரியில் தொடங்கி வைக்கப்பட்டு 50 ஆயிரம் குழுக்களாக வளர்ந்த பங்காரு அம்மையார் நினைவு மகளிர் சுய உதவிக் குழு திட்டம் - தி.மு. கழக ஆட்சியில் 1997-98இல் 14 மாவட்டங்களிலும், 1998-99இல் 7 மாவட்டங்களிலும், 1999-2000இல் 7 மாவட்டங்களிலும் என சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, அத்திட்டத்தின் மூலம் 8 இலட்சத்து 6 ஆயிரத்து 969 மகளிர், 45,719 சுய உதவிக் குழுக்களிலே உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள்.

இத்தனை மகளிர் நலத் திட்டங்களுடன், இன்னும் பல ஆக்க பூர்வமான தொழில் வளர்ச்சித் திட்டங்களையும், நிதியாதாரத் திட்டங்களையும் மகளிர்க்காக நடைமுறைப்படுத்திய ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி என்பதையும் - மாநில ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட மாநகராட்சி, மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பதவிப் பொறுப்புகளில் - பெண்களுக்குக் கட்டாயம் 33 சதவீதம் என ஒதுக்கீடு செய்தும், அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவீதம் என ஒதுக்கீடு செய்தும் அதனை நடைமுறைப்படுத்திய ஆட்சி தி.மு.க. ஆட்சி என்பதையும் - மகளிர்க்குச் சம வாய்ப்பும், சுதந்திரமும் அளிக்க வேண்டும் என்பது தி.மு.க. எனும் விரிந்து பரந்த ஆலமரம் போன்ற இந்த இயக்கத்தின் ஆணிவேர்க் கொள்கை என்பதையும் அந்தச் சுயமரியாதை உணர்வின் சூடு தணியாமல் தான் இன்றைக்கும் பெண்ணுரிமைப் போரில் திண்ணமாய் வெற்றி பெறுவோம் என்ற எண்ணமுடன் ஈடுபட்டிருக்கிறோம்.

மத்தியில் அமைந்திடும் அரசுகள் மகளிர் இட ஒதுக்கீடு, மக்களவை தொடங்கி, மாநில சட்டப் பேரவைகள் வரையில் வருவதற்கான சட்டமியற்ற முனைவதும், அந்த முயற்சி முடிவு பெறாமலே முறிந்து போவதும் கடந்த கால நிகழ்வுகளாக அமைந்து விட்ட நிலையில், இன்றைக்கு வழி காட்டும் வாய்ப்பு பெற்றுள்ள காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களின் ஆக்கபூர்வமான ஆதரவையும், அதற்கு ஊக்கமளிக்கும் முற்போக்குக் கூட்டணியிலுள்ள கட்சிகளின் பக்க பலத்தையும்,

இடதுசாரித் தலைவர்களின் துணையையும் கொண்டு - ஏற்கனவே வாஜ்பய் ஆட்சியின்போது, இந்த மகளிர் மசோதா சட்டமாவதற்கு ஆதரவு தருவதற்கு முன் வந்த பிரதானக் கட்சிகளில் ஒன்றான காங்கிரஸ் கட்சியின் தலைமையில், அமைந்துள்ள அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி தான் இப்போது டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில், இந்த மகளிர் சட்ட முன் வடிவைக் கொண்டு வருகிறது என்பதை நினைவில் நிறுத்தி, இதிலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற விருப்பு வெறுப்புக்கு இதயத்தில் இடம் தராமல், அரசியல்வாதி ஆத்திகராக இருப்பின், அர்த்தநாரீஸ்வரர் ஆணும் பெண்ணும் இணைந்த உருவமாக இருப்பதின் தத்துவத்தின் பிரதிபலிப்பாகச் சரி பாதி விகிதம் ஏற்காவிடினும், தொடக்க முயற்சி தோற்க வில்லையென்ற ஆறுதலுடன், 33 விழுக்காடு அளவாவது மகளிர்க்கு இட ஒதுக்கீடு உரிமை வழங்கும் சட்ட முன் வடிவை சட்டமாக்குவதற்குச் சம்மதம் தர வேண்டும் என்பது என் வேண்டுகோளாகும்.

இந்த வேண்டுகோளைத்தான் வேலூர் தி.மு.க. மண்டல மாநாட்டில் முக்கிய தீர்மானங்களில் ஒன்றாக நிறைவேற்றியதுடன், அதனை வலியுறுத்தி அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக, எழுச்சியுற்ற பெண்களின் நாடாகவும் இந்நாடு பொலிவதற்கு எழுத்தாலும், பேச்சாலும் இடையறாது குரல் கொடுத்த - அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று, சென்னை மாநகரில் மகத்தான மகளிர் பேரணியொன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்.

மாநில முழுவதுமிருந்து மகளிர் மகா சமுத்திரங்களின் சங்கமம் எனத் தலைநகர் சென்னையில் கூடிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

செப்டம்பர் 17 அன்று, நெல்லையில் கழகத்தின் முப்பெருவிழா - அண்ணா, பெரியார், கழகம் பிறந்த நாள் விழாக்களாக முப்பெரும் விழா இருப்பதால், நெல்லை, மதுரை, குமரி, தூத்துக்குடி, ராமனாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் உடன்பிறப்புகள் அந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், அந்த மாவட்டங்கள் தவிர்த்து, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, கோவை, நீலகிரி, கரூர்,

பெரம்பலூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை, நாகை, திருவாரூர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், புதுவை ஆகிய பகுதிகளிலிருந்து அணி அணியாக சென்னையில், செப்டம்பர் 15 - மகளிர் இட ஒதுக்கீடு கோரும் பேரணியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கோரிக்கையின் முக்கியத்துவம் கருதி, இந்தப் பேரணியைத் தலைமைக் கழகமே முன்னின்று, குறிப்பாக நானே முன்னின்று நடத்துகிறேன்.

எனவே மகளிர் உடன்பிறப்புகள், தங்களின் உரிமைப் போராட்டத்தின் மற்றொரு கட்ட வெற்றிப் படிக்கட்டில் அடியெடுத்து வைக்கும் நாளாக அந்நாளைக் கருதி,

சென்னையில்,

செப்டம்பர் 15 காலையில்

குழுமிட வேண்டுகிறேன்.

காலை 10 மணி அளவில் பேரணி தொடங்கும்.

மற்ற விபரங்கள் அடுத்தடுத்து அறிவிக்கப்படும்.

மாநகர் சென்னையில் மகளிர் பேரணி!

அழைக்கின்றேன் வாரீர்! அணி அணியாக!

அன்புள்ள,

மு.க.

31-8-2005

3170. பெரியாரின் மாணவன் அண்ணாவினால் முழுமனிதன் ஆனவன்!

உடன்பிறப்பே,

கோரிக்கைகள் வைக்கப்படும்பொழுது, பொதுவாக இருசாரார்தான் நம் கண்ணுக்குத் தென்படுவார்கள். அதாவது, கோரிக்கை வைப்போர் - வைத்த கோரிக்கையை ஏற்று வழங்குவோர் என இந்த இரு தரப்பினரும் அமர்ந்து விவாதித்து, அந்தக் கோரிக்கை பற்றிய ஓர் ஒப்பந்தத்துக்கு வருவார்கள்.

அதற்கு இரு தரப்பினரோ மூன்று தரப்பினரோ அமர்ந்து பேசுகிற நிலையும் - விடாப்பிடியாக இல்லாமல் விட்டுக் கொடுக்கிற நிலையும் - இறுதியில் ஓர் உடன்பாட்டுக்கு வருவதும் மரியாதை மற்றும் தோழமை உணர்வுகளை மதித்து நடக்கும் செயலாகக் கருதப்படும்.

இதற்கு மாறாக, கோரிக்கை வைப்போரை ஏதோ திருவோடு ஏந்தி நிற்கும் இரவலரைப் போலவும் - அதனை நிறைவேற்றும் பொறுப்பில் இருப்பவரை வானத்தில் தோன்றி வரம் கொடுத்து விட்டு மறையும் தேவதையைப் போலவும் கற்பனை செய்து கொள்வது, ஜனநாயக முறையாகாது. கடைந்தெடுத்த எதேச்சாதி கார முறையேயாகும்.

மாநில அரசைப் பொறுத்தவரையில், போக்குவரத்துத் தொழிலாளர் பிரச்சினையில், குந்திப் பேசி கோரிக்கைகளைப் பற்றி விவாதித்து, நியாயமான வகையில் முடிவெடுப்பதைத் தனது கௌரவத்துக்கு இழுக்கு எனக்கருதி, போட்டதை எடுத்துக் கொள் அல்லது முடிந்தால் போராடிப் பெற்றுக் கொள் என நாலாண்டு காலமாகவே "தொடுவதே தீட்டு" எனத் தீண்டாமைக் கொடுமையைத் தொழிலாளர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் பிரச்சினையில் கறாராகக் கடைப்பிடித்து வருகிறது, ஒரு பொது இலக்கணமாகவே!

இது மாநில அரசு நிலவரம் - கடைப்பிடிக்கும் போக்கு! அதற்குக் கட்டுப்படாவிட்டாலோ வீண்பழி சுமத்தும் விதண்டா வாதம்!

இதற்கு முற்றிலும் மாறாக, மத்திய அரசு மகளிர் இடஒதுக்கீடு எனும் நீண்ட காலக் கோரிக்கையை எப்படியும் நிறைவேற்றுவது என்ற நெஞ்சார்ந்த நினைவுடன், தானே முன்வந்து அனைத்துக் கட்சிகளையும் தனித்தனியாகவும், பொதுவாகவும் அழைத்து வைத்துப் பேசியுங்கூட, இன்னும் இறுதி முடிவு எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது.

காரணம் என்ன? விவசாயி, தொழிலாளி, ஆசிரியர், மாணவர் பிரச்சினை என்றால், அவர்கள் கோரிக்கை ஒருமித்த குரலிலேதான் பெரும்பாலும் ஒலிக்கிறது. இந்த மகளிர் இட ஒதுக்கீடு கோரிக்கை என்றாலே, முதலில் எல்லாக் கட்சிகளும் ஒருமித்த குரல் எழுப்புவது என்பது இயலாத ஒன்றாக இருக்கிறது. இட ஒதுக்கீடே மகளிர்க்குத் தேவையில்லை என்ற முற்போக்கு(?)வாதிகளும் இருக்கிறார்கள். நிறைவேற்றுமாறு தலையசைப்போரிலும், நிபந்தனை விதித்துத் தம்மையறியாமலே தடுத்திடுவோரும் இருக்கிறார்கள். “எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வரட்டும்! மகளிர்க்கு சட்ட ரீதியாக இட ஒதுக்கீடு உரிமை வழங்கக் கதவு திறந்தது என்றால் போதும்!” என நினைப்போரும் இருக்கிறார்கள். அப்படி நினைப்பவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எனும் உள் ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பானவர்கள் என்று எவரும் எண்ணிடத் தேவையில்லை. அவர்களின் சமூக நீதிக்கான இலட்சியப் பயணத்தைத் திரும்பிப் பார்ப்போருக்கு அந்தத் தவறான எண்ணம் எழவே எழாது!

இப்போது இருக்கின்ற முக்கியமான பிரச்சினையே மகளிர்க்கு இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற வேண்டுமேயானால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்குகள் தேவை - அந்தத் தேவையை நிறைவு செய்யத்தான் மத்திய அரசினர் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கிடவும், மசோதா சட்டமாகிட மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்கினைப் பெற்றிடவும், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுகின்றனர்.

இதற்கிடையிலேதான், தண்ணீரில் இறங்கி நீச்சல் பழகிக் கொள்வதா? நீச்சல் பழகிக் கொண்ட பிறகு நீரில் இறங்குவதா?

என்ற கேள்வியும் பிறந்திருக்கிறது. இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு இன்றைய நாடாளுமன்ற - சட்டமன்றங்களுக்கானத் தேர்தல் முறைகளைச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

இப்போது இந்த மன்றங்களில் பொதுத் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற ஆண் பெண் உறுப்பினர்களும் இருக்கிறார்கள். தனித் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற ஆண் பெண் உறுப்பினர்களும் இருக்கிறார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட பெரு மக்களுக்கான தனித் தொகுதிகளில் இப்போது அச்சமுதாயத்து ஆண்களும் நிற்கலாம் - பெண்களும் நிற்கலாம். பெண்களுக்கான இட ஒதுக்கீடு வந்து விட்டால், அச்சமுதாயப் பெண்கள் மட்டுமே நிற்கக் கூடிய இடங்களும் நிர்ணயிக்கப்படும். அவர்கள் தனித் தொகுதி, பொதுத் தொகுதி எந்தவொரு தொகுதியிலும் போட்டியிட உரிமை உடையவர்கள்!

அதேபோல தனித் தொகுதிகள் அல்லாத மற்ற தொகுதிகளில் ஆண்கள், பெண்கள் வேட்பாளர்களாக நிற்கிறார்கள். பெண்களுக்கான இட ஒதுக்கீடு வந்துவிட்டால் பெண்கள் மட்டுமே அந்த தொகுதிகளில் மாத்திரமல்லாது, பொதுத் தொகுதி களிலும் கூட நிற்கமுடியும்.

இப்போதுள்ள நிலைமை, நாடாளுமன்ற - சட்ட மன்றத் தேர்தல்களில் ஆடவர்களே அதிக இடங்களை ஆக்ரமித்துக் கொள்வதோடு, முற்போக்கான சிந்தனையுடைய கட்சிகளில்கூட, பெண்கள் கணிசமான இடங்களைப் பெற முடிவதில்லை என்பது தெளிவானதும், உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதுமான உண்மையாகும். அதனால்தான், மகளிருக்குச் சட்டரீதியான இட ஒதுக்கீடு, பொதுத் தொகுதியானாலும், தனித் தொகுதியானாலும் அவற்றில் கட்டாயம் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

அப்படி வழங்கப்பட சட்டம் கொண்டு வரும்போது, அதிலும் உள் ஒதுக்கீடு செய்து, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்துப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை, புறக்கணிக்கப்படக் கூடியதல்ல!

ஆனால் அந்தக் கோரிக்கையே, மூலக் கோரிக்கையான மகளிர் இட ஒதுக்கீடு கோரிக்கைக்கு ஒரு முட்டுச் சந்தாக ஆகிவிடக்

கூடாதே என்பதுதான் கழகத்தில் உள்ள நம்போன்றார்க்குள்ள கவலையாகும்!

அந்தக் கவலையும் தலை காட்டாமல் செய்து, காரியம் வெற்றிகரமாக நிறைவேறினால், நம்மை விட மகிழ்ச்சி அடைவோர் யாருமிருக்க முடியாது!

அதே சமயம், ஒன்றை மறந்துவிடக் கூடாது!

"இப்போது பெரும்பான்மையாக ஆண்கள் இடம்பெறும் நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற இட ஒதுக்கீடு எதுவுமில்லை. எங்களுக்கென இட ஒதுக்கீடு கேட்கும்போதுதான் இந்தப் பிரச்சினையை எழுப்பி, எங்களைப் பின்னுக்குத் தள்ள வேண்டுமா?"

என்று பெண்டிர் பகுதியிலிருந்து எழும் எரிமலை வினாக்களுக்கு, என்ன விடையளித்துச் சமாளிக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்த்திடல் வேண்டுமல்லவா?

இந்தியாவுக்குச் சுதந்திரத்தை முதலில் பெற்றோம் - பின்னர் மொழிவாரி மாநிலங்கள் என வகுத்தமைத்தோம் என்றால், இந்தியச் சுதந்திரமும், மகளிர் உரிமையும் ஒன்றல்ல என்று கூட வாதிடக்கூடும்!

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை, மண்ணடிமையை விடப் பெண்ணடிமை கொடுமை என்று குறிப்பிடுவதை மறக்க முடியுமா?

இன்னும் கூட வலிவாக வாதிட முடியும்! இந்தியச் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோதே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான உரிமைக் குரலும் ஒலித்து, அதனை உச்சநீதிமன்றம் மறுத்த போது, சமூகநீதி கண்டிட, இட ஒதுக்கீட்டுக்கானப் போராட்டத்தை தி.க., தி.மு.க., சார்பில் முறையே பெரியாரும், அண்ணாவும் நடத்தி, பெருந்தலைவர் காமராசரின் முறையீட்டினால், ஆசிய ஜோதி இந்தியப் பிரதமர் பண்டித நேரு, 1951ல் அதற்கான முதல் திருத்தமே அரசியல் சட்டத்தில் கொண்டு வந்தார் என்பது வரலாற்றுச் சான்றாக

இருப்பது, வருங் காலத்தில் மேலும் மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கானச் சமூக நீதியை உறுதிப்படுத்திட உதவும் பெருவாய்ப்பல்லவா!

நாட்டு விடுதலைக்குப் பிறகு கிடைத்த நல்வாய்ப்பாம், இதனையொட்டித் தானே சமூகநீதிக் காவலர் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் காலத்தில், நமது கோரிக்கை ஏற்கப்பட்டு, மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறைக்கு வருமென அறிவிக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை இன்னும் முழுமையாக நிறைவேற வேண்டுமென இன்றுள்ள மனித நேயமிக்க மன்மோகன் சிங் அவர்களின் அரசையும் வலியுறுத்தி வருகிறோம்.

நம்பிக்கை நட்சத்திரங்களாக ஒளிவிடும் இந்தச் சமூக நீதிச் சாதனைகளை, படிப்படியாக வாதாடிப் போராடி நம்மால் நிறைவேற்ற முடியும் என்ற திடமனத்துடன்,

முதலில்

நிச்சயதார்த்த நிகழ்ச்சியை நடத்துவோம்-

அதையொட்டித் திருமணம் -

அதன்பிறகு தேனிலவு -

பின்னர் இல்லறம் -

இனிய மழலைகள் எனத்

தொடரட்டும் வாழ்க்கை!

இந்த வரிசையை மாற்றி, இல்லை - இல்லை முதலில் தேனிலவுதான் என்றால், திருமணமே நின்று விடுமே என்ற பயந்தான் எனக்கு - மற்றபடி, அன்று 'குடியரசு' துணை ஆசிரியனாக தொடங்கி, இன்றும் "விடுதலை"யை விடாமல் படிக்கும் எனக்கு "உள் ஒதுக்கீடு" பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் முள்ளின் முனையளவும்கூடக் கிடையாது! நான் பெரியாரின் மாணவன்! அண்ணாவினால் முழு மனிதன் ஆனவன்!

அன்புள்ள,

மு.க.

1-9-2005

3171. செப்டம்பர் 15 சென்னை; 17 நெல்லை!

உடன்பிறப்பே,

“பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு தொகுதிகளை அரசியல் கட்சிகள் ஒதுக்கிட முன்வர வேண்டும்” என்ற கருத்தினை தலைமைத் தேர்தல் ஆணையத்தின் முன்னாள் தலைவர் திரு. டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் - இதே கருத்தினை நாடாளுமன்ற தி.மு.க. முன்னாள் உறுப்பினர் நண்பர் இரா. செழியன் அவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள்.

இருவருமே இந்தக் கருத்தினை வெளிப்படுத்திய இடம்; திருவல்லிக்கேணி ‘கல்சுரல் அகாதமி கஸ்தூரி சீனிவாசன் நூலகம்’ சார்பில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற விழா நிகழ்ச்சி அரங்கிலாகும்.

மேலெழுந்த வாரியாக இந்தக் கருத்தைப் படிக்கும் போதும் சரி; அல்லது கேட்கும் போதும் சரி;

“ஆமாம்; இது நல்ல வழியாகவும் சுலபமான வழியாகவும் இருக்கிறதே - இந்த வழியை பா.ஜ.க. போன்ற அரசியல் கட்சிகளும் கூடத் தெரிவித்துள்ளனவே; எனவே இந்த அரிய கருத்தை அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு - நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் அக்கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தும்போது அந்த வேட்பாளர்களில் மூன்றில் ஒரு பங்கினரை மகளிர் வேட்பாளர்களாகவே நிறுத்தி விடலாமே; சட்டம் இயற்ற வேண்டும் என்றும் - அதற்கு சகல கட்சிகளின் சம்மதமும் பெறவேண்டும் என்றும் உள்ள சங்கடமெல்லாம் இல்லாமல்; ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்கள் வேட்பாளர்களில் மூன்றில் ஒரு பங்கினரை பெண் வேட்பாளர்களாக நிறுத்தி விட்டால் பிரச்சினையே இல்லாமல் போய்விடுமே என்று நிம்மதி பெருமூச்சு விடலாம் போலிருக்கிறதே” என்றுதான் எடுத்த எடுப்பில் எல்லோருக்கும் தோன்றும்.

ஆனால் நடைமுறையையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமல்லவா?

உதாரணமாக ஒரு மாநிலத்தில் சட்டமன்றத்துக்கு 120 தொகுதிகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்; பின்னக் கணக்கு; விகிதாச்சாரக் கணக்கு சரியாக இருக்க வேண்டுமென்பதற்காக 120 என்ற எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறேன்.

120 தொகுதிகளிலும் மூன்று முக்கிய அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிட முனைவதாக வைத்துக் கொள்வோம்.

"அ" என்ற கட்சி 120ல் மூன்றில் ஒரு பங்கான 40 தொகுதிகளில் பெண்களை நிறுத்த வேண்டும்.

"ஆ" என்ற கட்சி அவ்வாறே 40 தொகுதிகளில் பெண்களை நிறுத்த வேண்டும்.

"இ" என்ற மூன்றாவது கட்சியும் 40 தொகுதிகளில் பெண்களை நிறுத்த வேண்டும்.

தயவுசெய்து ஒன்றை மறந்து விடக்கூடாது - இந்த 40 தொகுதிகளுமே பொதுத் தொகுதி என்ற பட்டியலில் தான் இருக்குமே தவிர, பெண்களுக்காக அவர்கள் மட்டுமே போட்டியிடக் கூடிய பெண்களுக்கான ரிசர்வ் தொகுதிகளாக சட்டப்படி பிரிக்கப்பட்டிருக்க மாட்டா. அந்த உரிமை; அதாவது ஒரு அரசியல் கட்சியின் பெண் வேட்பாளர் இன்னொரு அரசியல் கட்சியின் பெண் வேட்பாளரை எதிர்த்துத்தான் போட்டியிட வேண்டும்; இருவரில் யார் வென்றாலும்; அந்தத் தொகுதியில் பெண் பிரதிநிதித்துவமே வரும் என்பதற்காகத்தான் மகளிர் இட ஒதுக்கீடு சட்டமாக வேண்டும் எனக் கோரிக்கை வைக்கிறோம் - அப்படி சட்டமில்லாமலே அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் அந்த குறிப்பிட்ட சட்டப்படி பிரிக்கப் படாத 40 தொகுதிகளில் பெண் வேட்பாளர்களை நிறுத்தினால்; யாராவது ஒரு சுயேச்சை கூட; "இது பொதுத் தொகுதி தானே ஆண் வேட்பாளர் நிற்பதற்கு சட்டப்படி தடை கிடையாதே!" என்று கூறிவிட்டு; அந்தப் பெண் வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடக் கூடுமல்லவா? பண பலத்தால் அந்த ஆண் சுயேச்சை வென்று விடலாமல்லவா?

அல்லது ஒவ்வொரு அரசியல் கட்சியும் எண்ணிக்கை 40 என்று பெண்கள் தொகுதி ஒதுக்கினாலும்; அந்த 40ம்

எந்தெந்த தொகுதிகள் பெண்களுக்கு மட்டும் என்று முன்னரே நிர்ணயிக்கப்பட்டிருந்தால்தானே; எல்லா அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களாகப் பெண்கள் மட்டுமே நிற்க முடியும்!

மேலும் ஒரு எளிய உதாரணமாக; சென்னையில் சைதாப்பேட்டையில் "அ" கட்சியின் சார்பில் ஒரு பெண் வேட்பாளரை நிறுத்துவதாக வைத்துக் கொள்வோம்; அங்கே "ஆ" அல்லது "இ" கட்சியின் சார்பிலும் பெண்ணை நிறுத்தினால்தானே பெண்களுக்குள்ளே போட்டியென்று ஆகி; எந்தக் கட்சி அங்கே வெற்றி பெற்றாலும் ஒரு பெண் பிரதிநிதி சட்ட மன்றத்துக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இரண்டு அரசியல் கட்சிகள், பெண் வேட்பாளர்களை நிறுத்தி; ஒரு கட்சி அப்படியொரு பெண் வேட்பாளரை நிறுத்தாமல் இருந்து விட்டாலோ - அல்லது ஒரு சுயேச்சை வேட்பாளர் ஆனாக இருந்துவிட்டாலோ; அவர்களை அந்தத் தொகுதியில் போட்டியிடக் கூடாது என்று தடுக்கவோ - மீறிப் போட்டியிட்டால் செல்லாது என்று அறிவிக்கவோ, சட்டம் இருந்தால் மட்டும் தானே அது முடியக்கூடிய செயலாக இருக்கும்.

சட்டம் இல்லையேல் - 120 இடங்களில் "அ" கட்சி சார்பில் பெண்கள் போட்டியிடுகிற 40 தொகுதிகளிலும் "ஆ", "இ" கட்சிகளின் சார்பில் பெண்களே போட்டியிடுவார்கள் என்பது என்ன நிச்சயம்?

எனவே சைதாப்பேட்டையில் ஒரு கட்சி தன்னுடைய மூன்றில் ஒரு பங்கு "கோட்டா"வுக்காக "அ" கட்சியின் பெண் வேட்பாளரும் - சைதையின் பக்கத்துத் தொகுதியான ஆலந்தூரிலே "ஆ" கட்சியின் "கோட்டா" வாக பெண் வேட்பாளரும் - மறுபக்கம் தியாகராய நகரில் "இ" கட்சியின் "கோட்டா"வாக பெண் வேட்பாளரும் நிறுத்தப்பட்டால் மகளிர் தொகுதிகள் சேர்ந்தாற்போல ஒரே பக்கம் அமைந்து விடக்கூடுமே; அதைத் தவிர்ப்பது எப்படி?

மூன்று கட்சிகளுமே 120ல் மூன்றில் ஒரு பங்காக 40 தொகுதிகளை மகளிருக்காக அவரவர் வசதி வாய்ப்புக்கு ஏற்ப அவரவர் விருப்பப்படி; சட்டமோ விதிமுறை நெறிகளோ இல்லாமல் தொகுதிகளை பகிர்ந்து அளித்துவிட்டால்; மகளிர் தொகுதிகள் மொத்தமுள்ள 120 தொகுதிகளில் 60 தொகுதிகளையும் தாண்டக் கூடுமல்லவா?

இதையெல்லாம் சிந்திக்கும்போதுதான்; திருவல்லிக்கேணி "கல்ச்சுரல் அகாதமி"யில் கருத்துரை வழங்கிய கற்றறிந்த இரு நண்பர்களும் சுட்டிக் காட்டிய மகளிர் இட ஒதுக்கீடு என்பது அரசியல் கட்சிகளின் விருப்பத்துக்கு நடைமுறைப் படுத்தப்படுவது கூடாது என்பதல்ல; இயலாத காரியம் என்பதை உணர்த்திட வேண்டித்தான் இந்த விளக்கக் கடிதத்தை உனக்கு விடுத்துள்ளேன்.

எப்படியோ; மகளிர் இட ஒதுக்கீடு; தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் மாநகராட்சிகள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலும், அரசுப் பணிகளிலும் நடைமுறைக்கு வந்துள்ளதோ அதே போல நாடாளுமன்ற - சட்டமன்றங்களிலும் அந்த ஒதுக்கீடு சட்டபூர்வ உரிமையாக ஆக்கப்பட அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தந்திட வேண்டும்.

அந்த ஆதரவைத் திரட்டவே; அண்ணா பிறந்த நாளாம் செப்டம்பர் 15 அன்று காலையில் சென்னையில் தி.மு.க. தலைமைக் கழகமே முன்னின்று நடத்துகிற மாபெரும் மகளிர் இட ஒதுக்கீட்டுக் கோரிக்கைப் பேரணி நடைபெற இருக்கிறது.

செப்டம்பர் 15 காலை சென்னையில் மகளிர் பேரணி; மாலை பொதுக்கூட்டம் - செப்டம்பர் 17 நெல்லையில் கழக முப்பெரும் விழா ஆகியவற்றை முன்னிட்டு வரும் செப்டம்பர் 5ஆம் நாள் சென்னையில் கழக மாவட்டச் செயலாளர்களின் கூட்டம் நடைபெற இருக்கிறது.

அந்தக் கூட்டத்தில் சென்னை - நெல்லை நிகழ்ச்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டு விபரங்கள் பின்னர் வெளியிடப்பட இருக்கின்றன.

சென்னையில் செப்டம்பர் 15ஆம் நாளும் - நெல்லையில் செப்டம்பர் 17ஆம் நாளும்!

சந்திப்போம்; உடன்பிறப்பே -

இப்போதுதானே வேலூரில் சந்தித்தோம் என்கிறாயா?

காலை - சிற்றுண்டி

பிற்பகல் - உணவு

மாலை - சிற்றுண்டி

இரவு - உணவு

இப்படி எத்தனை முறை அருந்துவது என அலுத்துக் கொள்கிறோமா?

எப்படி அருந்த வேண்டும் என்பதற்கும் அய்யன் வள்ளுவனின் குறள் வழிகாட்டியிருக்கிறதே!

“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு”

இந்தக் குறள் இன்றைய சூழ்நிலையில் இட ஒதுக்கீடு கொள்கைக்கும் பொருந்துமன்றோ!

அன்புள்ள,

மு.க.

02-09-2005

3172. தமிழகமும், தலைநகர் டெல்லியும்!

உடன்பிறப்பே,

அண்மையில் புதிய தலைமுறை அரசியல் தலைவர்களை 'இந்தியா டுடே' கௌரவிக்கும் விழா என்ற பெயரில் தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் இளந்தலைவர்கள் 15 பேரை; விருது வழங்குவதற்காக அழைத்து, விருந்தும் வைத்து அவர்களை ஒருவரோடு ஒருவர் கட்சி அரசியல் காழ்ப்புகளை மறந்து கலகலப்பாக மனம் விட்டு நட்பு முறையில் பேசிடக் கூடிய வாய்ப்பினையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

கட்சிகளின் அரசியல் வேறு; அதற்கும் அப்பாற்பட்ட பண்பாடு, பழக்க வழக்கம், நட்புரிமை அடிப்படையில் கடைப்பிடிக்கும் தோழமை வேறு என்ற நிலையில் மற்ற மாநிலங்களில், ஏன்; தலைநகர் டெல்லியிலே கூட பல்வேறு கட்சியினரும் பண்புடன் நடந்து கொள்வதைப் போன்ற முறை தமிழ்நாட்டிலும் ஏற்பட வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அப்படியொரு நிகழ்ச்சிக்கு அந்த இதழாளர்கள் ஏற்பாடு செய்திருந்தபோதிலும்; அவர்களின் அந்த ஆசை முழுமை பெற முடியாமல் ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வினர் இருவர் அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தும் வரவில்லை. மாற்றார் வீட்டு வாழ்வு சாவு நிகழ்வுகளுக்குக்கூட வந்து விசாரிக்கும் வழக்கத்தை மூளியாக்கியவர்களாயிற்றே; கழகக் கண்மணி முரசொலி மாறன் மறைந்து உடல் கோபாலபுரத்தில் வைக்கப்பட்டிருந்தபோதே, பக்கத்தில் போயஸ் தோட்டத்தில் பட்டாசு வெடித்துக் குதியாட்டம் போட்டவர்களாயிற்றே - அவர்களுக்கு 'இந்தியா டுடே' உருவாக்கிடக் கருதிய இங்கிதம் பற்றி என்ன கவலை! அது போகட்டும்; நான் எழுத நினைத்தது அதைப் பற்றியல்ல; "இந்தியா டுடே" 15 பேருக்கு அழைப்பு விடுத்து நடத்திய அந்த விழாவில் அந்தப் பத்திரிகை ஆசிரியர் நண்பர் பிரபு சாவ்லா அவர்கள் எழுப்பிய ஐய வினா ஒன்றைப் பற்றியதேயாகும்.

"ஏன் தமிழகத்திலேயிருந்து இன்னொரு காமராஜர் உருவாகி வரவில்லை?"

திரு. சாவ்லா, இந்த ஐய வினாவைத் தொடர்ந்து; அந்த விருதும், விருந்தும் வழங்கிய விழாவில் பின்வரும் ஆதங்கமொன்றையும் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் கூறியது வருமாறு :

"ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்த தயாநிதி மாறனை மட்டுமே தில்லியின் முக்கிய பிரமுகர்களிடையே அதிகம் பார்க்க முடிகிறது. இந்தி தெரியாத - ஆங்கிலம் அதிகம் தெரியாத - படிக்காத காமராஜர் தில்லியை வெற்றி கொண்டார். ஆனால் எமர்ஜென்சியை தீரமாக எதிர்த்துப் போரிட்ட மு. கருணாநிதி, காங்கிரஸ் பேரியக்கத்தின் சக்தி வாய்ந்த தலைவர்களுள் ஒருவராக இருந்த ஜி.கே. மூப்பனார் போன்றவர்கள்கூட தங்கள் எல்லைகளைத் தமிழகத்துடன் சுருக்கிக் கொண்டார்கள்'

அவரது இந்த உரை; "இந்தியா டுடே" தமிழ்ப் பதிப்பில் வெளியாகியிருக்கிறது.

நண்பர் சாவ்லாவின் அந்த உரையில்; மறைந்த மூப்பனார் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது தவறானது என்பதற்கு; திரு. மூப்பனார் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக, மாநிலங்களவை உறுப்பினராக டெல்லியிலேயே தனி வீட்டில் வாழ்ந்து கொண்டு - அங்கேதான் பெரும்பாலும் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டார் என்பதே தக்க எடுத்துக்காட்டாகும். தமிழ் மாநிலக் காங்கிரஸ் என்று மாநில அளவில் ஒரு கட்சியை அவர் தொடங்கி நடத்தியபோதுகூட புது டெல்லி அரசியலை அவர் புறக்கணித்து விடவில்லை என்பதற்கு எனக்குத் தெரிந்தே பல சான்றுகள் உண்டு.

அதேபோல என்னைப் பொறுத்தவரையில் என் தலைமையிலான தி.மு.கழகம், மாநில அளவில் உள்ள கட்சியானாலும், அதன் மகத்தான பணியும் - கருத்தும் - முக்கியமான நேரங்களில் செயல்பாடும் - தலை நகர் டெல்லி வரையில் தேவைப்பட்டு அந்தத் தேவை நிறைவு செய்யப்பட்டதற்கு நிரம்ப ஆதாரங்கள் உண்டு.

1969ல் பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர் நான் முதலமைச்சர் பொறுப்பினையேற்று டெல்லியில் பிரதமர் இந்திரா காந்தி, துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் முன்னிலையில் மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் கலந்து கொண்ட தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில்; சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காக நான் எழுப்பிய போர்க்குரல், ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தையே ஏற்றுக்கொள்ள முடியாது என்கிற அளவுக்குப் போய்; அதன் விளைவாக அந்தச் சேலம் திட்டத்துக்கான ஒப்புதலை வழங்கிய இந்திரா அம்மையார்; அவரே சேலம் வந்து திட்டத்துக்கு அடிக்கல் நாட்டுகிற அளவுக்கு வெற்றியினை ஈட்டித் தந்தது.

டெல்லியில் நடந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டில் தான் - வங்கிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதன் முதலாக நான் எழுப்பி; அதனைத் துணைப் பிரதமர் மொரார்ஜி அவர்கள் கடுமையாக மறுத்துரைத்து; அதன் பின்னர் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 14 வங்கிகளை தேசிய மய மாக்கி அறிவித்ததும் - அதற்காக அவரை சென்னைக்கு அழைத்து பெரியதோர் விழா எடுத்து 14 மதிப்புமிகு பொருட்களை அவருக்குப் பரிசாக வழங்கி - பேரறிஞர் அண்ணா படத்தை சட்டப் பேரவையிலும், இராஜாஜி மண்டபத்திலும் அம்மையார் அவர்களைக் கொண்டே திறந்து வைக்கச் செய்ததும் சிறப்புமிகு நிகழ்ச்சிகளாகும்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தலைமைக்குக் கேள்விக் குறி எழுந்தபோது; அவரது ஆட்சிக்கே நிலையற்ற தன்மை தோன்றிய போது - தி.மு.க. வின் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவு வழங்கி, ஆட்சியை நிலை நிறுத்தியதும் - காங்கிரஸ் இரண்டாகப் பிளந்து; ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் யார் என்று வினாக்குறி விசுவரூபம் எடுத்தபோது; டெல்லியில் தமிழ்நாடு அரசு விருந்தினர் மாளிகையில்தான் விஷயாலோசனைக் கூட்டங்கள் என் முன்னிலையில் நடைபெற்றன என்பதும் - கிருஷ்ண மேனன் - ஜோதிபாசு - மதுலிமாயி - பட்நாய்க் - பிலுமோடி - நாத்பாய் போன்றோர் எல்லாம் அந்தக் கட்டிடத்தில்தான் கலந்து பேசினோம் என்பதும் வரலாறு! இந்திரா காந்தி அம்மையாரின் விருப்பத்தின்படி திரு. வி.வி. கிரி அவர்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவும் - சிண்டிகேட் காங்கிரசின் வேட்பாளர்

திரு. சஞ்சீவ ரெட்டியார் வெற்றி வாய்ப்பை இழக்கவும் காரணமாக இருந்தது கழகம் என்பதை சரித்திரம் இன்றைக்கும் பறைசாற்றும்.

பின்னர் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட போது; நானும், திரு. இரா. செழியனும், திரு. கே. ராஜா ராமும் டெல்லி சென்று 15-12-1976 அன்று செழியன் வீட்டில் என் தலைமையில் நடந்த கூட்டத்தில் வாஜ்பய், அசோக்மேத்தா, திக் விஜய் நாராயண் சிங், கிருஷ்ணகாந்த், பேராசிரியர் ஷெர்சிங், பிலுமோடி, பிஜு பட்நாய்க், எச்.எம். படேல், என்.ஜி. கோரே போன்ற முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டு விவாதித்து; லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணன் கருத்தை ஏற்று, அதைத் தொடர்ந்து உருவானதுதான் "ஜனதா கட்சி" என்பதாகும்.

அதன் பின்னர் "ஜனதா கட்சி" இந்தியாவை ஆளுங்கட்சியாகி, அதே வேகத்தில் அக்கட்சி கரைந்து போனதும்; பிறகு 1980ல் நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. போட்டியிட்ட 16 இடங்களிலும், இந்திரா காங்கிரஸ் 24 இடங்களில் போட்டியிட்டு 22 இடங்களிலும் வெற்றி பெற்று; இந்திரா காந்தி அம்மையார் பிரதமராகப் பதவியேற்ற விழாவுக்கு நான் சென்று கலந்து கொள்கிற அளவுக்கு முக்கியத்துவம் பெற்றதும் - டெல்லியில் மத்திய மண்டபத்தில் நடைபெற்ற அந்த விழாவில் இந்திரா காந்தி அம்மையார் எனக்கும், சென்னா ரெட்டி அவர்களுக்கும் நன்றி கூறிப் பேசியதும் வரலாற்றுச் சான்றுகளாகும்!

மீண்டும் பிரதமர் பொறுப்பேற்ற இந்திரா காந்தி அவர்கள் தி.மு.கழகத்துடன் நன்றி மனப்பான்மை மாறாமல் நடந்துகொண்டபோதிலும் - இடையிலிருந்தோரின், குள்ள நரி சேட்டைகளால் அந்த நட்புக்குக் குந்தகம் ஏற்பட்டு; தொகுதி உடன்பாட்டில் அரசியல் உறவில் தொய்வு தோன்றியதும் - அதன் பிறகுகூட அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலில் என் வேண்டு கோள் ஏற்கப்பட்டு கியானி ஜெயில்சிங் அவர்கள் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வென்றார் என்பதும் டெல்லிக்கும் எனக்கு மிருந்த நெருக்கமான தொடர்புக்கு மற்றுமோர் சான்றேயாகும்.

அதன் பின்னர் இந்திய அரசியலில்; வானத்தில் மேகங்களின் வடிவங்கள் வண்ணங்கள் மாறுவது போல் பல நிகழ்ச்சிகள் மாறி மாறி நடைபெற்ற போதெல்லாம்; நமது வேண்டுகோளையேற்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்திட

அறிவித்தவரும், காவேரி நடுவர் மன்றம் அமைந்திட காரணமாக இருந்தவருமான திரு. வி.பி.சிங் அவர்களைப் பிரதமராகப் பொறுப் பேற்கச் செய்த முயற்சிகளின் பின்னணியில் என்றாலும் - திரு. தேவகவுடா அவர்களைப் பிரதமராக்கிய நிகழ்வின் பின்னணியில் என்றாலும் - திரு ஐ.கே. குஜ்ரால் அவர்களைப் பிரதமராக்கிய நிகழ்வின் பின்னணியில் என்றாலும் - அவற்றில் எல்லாம் முன்னணியில் நின்றவர்கள் திரு. மூப்பனாரும் நானும் என்பதை வரலாறு மூடி மறைத்து விடாது.

எனவே தமிழகத்தை மட்டுமல்ல; தமிழ் மாநிலத்தையும் இணைத்துக் கொண்டிருக்கிற இந்திய நாட்டு அரசியலில் தேவையான பங்களிப்பைத் தி.மு. கழகம் தொடர்ந்து வழங்கிக் கொண்டுதானிருக்கிறது.

அத்தகைய முக்கியமான நேரங்களில் இடது சாரிக் கட்சிகளின் அரிய ஆலோசனைகளையும், அக்கட்சிகளின் ஆக்கபூர்வமான ஆதரவையும் குறிப்பாக பெரியவர் சுர்ஜித், பூபேஷ் குப்தா, பி. ராமமூர்த்தி, திரு. பரதன் ஆகியோரின் கருத் துரைகளையும் கேட்டிடத் தவறியதே இல்லை. டெல்லியில் எல்லா தலைவர்களையும் கலந்து பேசியே அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தே கழகம் முடிவுகளை மேற்கொண்டு வருகிறது.

1998இல் முக்கியமான குறைந்த பட்சத் திட்டங்கள் அடங்கிய செயல் திட்டத்தை (அஜெண்டா) நடைமுறைப்படுத்துவது என்ற நிபந்தனையுடன் மதச் சார்பற்ற அரசு நடத்துவதாக செயல் திட்டத்தில் அளித்த உறுதிமொழிக்கு மாறாக வாஜ்பய் அரசு நடந்து கொண்டு அதன் காரணமாக அதிலிருந்து நாம் விடுபட்ட வரையிலான காலகட்டத்தில் டெல்லி அரசியலில் நம் பங்கு கணிசமான அளவு இருந்தது.

பின்னர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலும் தி.மு.க. இடம் பெற்றதென்றால் - திருமதி சோனியா காந்தி அம்மையாரின் கருத்துக்கேற்ப டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் மத்தியில் கூட்டணி அரசு அமைந்தது என்றால் - அதில் நமது பெரும் பங்குப் பணி எத்தகையது என்பதை அனைவரும் அறிவர். மத்தியில் இந்த அரசு அமைந்த பிறகும், நெருங்கிய நேர்மையான நீதி நியாயங்களை மதிக்கிற நேசமும் தொடர்பும் கொண்டுள்ள காரணத்தால் தான் சென்வாட் வரிரத்து என்று தொடங்கி முறையே

தமிழ், செம்மொழி என அறிவிப்பு, சேது சமுத்திரத் திட்டம், பொடா சட்டம் ரத்து, கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம், 1 இலட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரத் நிர்மாண் திட்டம், செல்போன் கட்டணம் குறைப்பு, முதன்முறையாக தொலைத் தொடர்பு சாதனங்களும், தொலைபேசிகளும் இந்தியாவிலேயே தயாரிக்கும் திட்டம், போக்குவரத்து வாகன சோதனை மையம், பார்வை இழப்பைத் தடுக்க 445 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தேசிய திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம், ஆண்டு ஒன்றுக்கு நூறு நாட்கள் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், செய்தி தொடர்புகளில் கணினி வழி அற்புதங்கள், நான்கு வழி, ஆறு வழிச் சாலைகள் போன்றவை உருவாகிட ஆலோசனை கூறும் மன்றங்களின் கலந்துரையாடலில் தமிழகக் கட்சிகளான தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கு பெறுவதின் பயனுமாகும் என்பதையும் - கடந்த மே மாதம் டெல்லியில் நடைபெற்ற செயல் திட்ட ஆய்வு நிகழ்விலும் நானும் சென்று கலந்து கொண்டேன் என்பதையும் நினைவூட்ட வேண்டுமா என்ன?

இப்போது கூட பெட்ரோல், டீசல் விலை உயர்வோடு - சமையல் எரிவாயும், மண்ணெண்ணெயும் சேர்க்கப்படாமல் விடப்பட்டதற்கு டெல்லிக்குச் சென்று சொல்லாவிட்டாலும்; இங்கிருந்தும் எழுப்பிய குரலின் விளைவும் ஒரு காரணம் என்பதை "இந்தியா டுடே" ஆசிரியர்க்கு அறிவிக்க விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் நினைப்பது; சூரியன் ஆகாயத்திலும் - தாமரை தடாகத்திலும் இருந்தால்தான் மிதமான வெப்பமும், தாமரையில் மலர்ச்சியும் காண முடியும். இரண்டும் நெருங்கி அருகருகே சென்று விட்டால்; மலர்ச்சி இருக்காது மாறாகக் கருகிவிடும்!

மாநிலக் கட்சிகளும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறவன் நான்.

டெல்லியிலேயே செங்கோட்டை அருகிலோ; பாராளுமன்றப் பகுதியிலோ; உலவிக் கொண்டிருக்காவிட்டால் என்ன; உரத்த குரல் கொடுத்து "மகளிர் இட ஒதுக்கீடு உரிமை"யைக் கேட்காமலா இருந்து விடுகிறோம் - இல்லை; அக்கோரிக்கையை விட்டு

விடத்தான் போகிறோமா? மத்தியில் தமிழும் ஆட்சி மொழியாக வேண்டுமென்பதை மறந்து விடுவோமா?

இதோ; நமது அண்ணா பிறந்த நாள் செப்டம்பர் 15 அன்று சென்னையில் நாம் கூட்டுகிற மகத்தான பேரணி; மகளிர் பேரணியும் சென்றிடுவது;

நமது மற்றொரு கோரிக்கையும் வென்றிடத் தானே!

எனவே; உடன்பிறப்பே! நாம் தமிழகத்திலிருந்து குரல் கொடுத்தாலும்; தலைநகர் டெல்லியிலிருந்து குரல் கொடுத்தாலும் - நமது குரல் நமக்காக அல்ல; நாட்டுக்காக ஒலிக்கிற குரலாக இருப்பதால்; அது அலட்சியப்படுத்தப்படுகிற குரலாக ஆகி விடாது!

ஆகஸ்டு 15 - அனைத்து முதல் அமைச்சர்களும் தேசியக் கொடியேற்றுகிற உரிமையைப் பெற்றுத் தந்த குரல் அல்லவா அது!

“உறவுக்குக் கை கொடுப்போம்;

உரிமைக்குக் குரல் கொடுப்போம்”

இது தமிழகத்தில் ஒலித்தாலே; தலைநகர் டெல்லியிலும் ஒலிப்பதாகவே அர்த்தம்!

இவற்றில் பலவற்றை டெல்லிக்குச் சென்றும், செல்லாமல் தமிழகத்தில் இருந்தும் - சாதிக்க முடிந்தது என்பதை சுட்டிக் காட்டுவது;

நானும் காமராஜர் போலத்தான் என்று தலை கனத்துப் போன கர்வத்தினால் அல்ல; அல்லது நானும் காமராஜர்தான் என்று காட்டிக் கொள்ள முனையும் ஆணவம் பிடித்தும் அல்ல; அகில இந்திய தலைவராக இருந்து அவர் சாதித்தவை சரித்திரம் புகழும் சாதனைகள்!

அவரைப் பின்பற்றி மக்களின் தரித்திரம் களைய அண்ணாவின் தம்பியாகிய நான் ஆற்றிடும் பணிகள் தலைநகர் சென்றும்; தமிழகத்தில் இருந்தும்; பயன் விளைவிக்கத் தொடர்ந்து எல்லோரும் பாடுபடலாம் அல்லவா!

அதற்குத்தான்,

இதோ;

பாவையர் பட்டாளம் நடத்தும் மகத்தான பேரணி மாபெரும் பேரணி -

மகளிர் இட ஒதுக்கீடு கோரும் பேரணி -

சென்னை மன்றோ சிலையிலிருந்து

செப்டம்பர் 15ஆம் நாள்

மாலை 3.30 மணிக்கு

இங்கே தமிழகத் தலைநகரம்

தலைமைத் தலைநகராம்

டெல்லிக்குத் தருகிறது கோரிக்கை மனு!

மாவட்டந்தோறுமிருந்து மகளிர் சேனை கிளம்பட்டும் -

மாதர் குரல் இங்கிருந்தே டெல்லிக்குக் கேட்கட்டும் -!

குலக் கொடிகாள்; கழகக் கொடிகளுடன் வாரீர்!

அன்புச் சோதரிகாள்; அணி வகுத்து வாரீர்!

அண்ணன்; வாழ்த்திடக் காத்திருப்பேன் -

மகளிர் இனமே;

மாக்கடலை வென்றிடும் வகையில் வருக! வெல்க!

அன்புள்ள,

மு.க.

09-09-2005

3173. மணிகளுக்கிடையே ஒரு மாமணி!

உடன்பிறப்பே,

"அடேடே; நம்ம மணிக்கு பவள விழாவாமே; நேற்று பார்த்ததுபோல இருக்கிறது; நேற்று முற்றாத நிலையொத்த அந்தப் பருவத்திலேயே நானும் மணியும் நாடு, மொழி, பயணம் என்று தாடி வழிந்த பெரியாரின் தலைமையை ஏற்றுத் தன்மான இயக்கத்தை வளர்ப்பதற்கும், எதிர்ப்புகளைத் தாங்குவதற்கும் ஏற்றிடுவீர் நம் இலட்சியக் கொடியென்று பட்டிதொட்டி, சிற்றூர், பேரூர் என்று சிறகடித்துப் பறப்பதற்கும் எங்களை நாங்களே செயல்வீரர்களாகத் தயாரித்துக் கொண்ட அந்தக் காலம் - "மேக்கிரிமங்கலத்துப் போக்கிரி" எங்கேயப்பா; அவனை விட்டுப் பிரிந்து நீ மட்டும் வந்திருக்கிறாய்; அதனால் ஒருவேளை மழை வந்தாலும் வருமே" என்று மேகம் நிகர் அண்ணா; பொங்கும் பாச உணர்வுடன் கேலியாகக் கேட்ட காலமெல்லாம்; அம்மவோ - எவ்வளவு பசுமையாக இன்னமும் வண்ணப்படமாக எண்ணத்தில் பதிந்திருக்கிறது!

தம்பீ; ஒரு நாள் சென்னையில்; பழைய தேவராச முதலியார் இல்லத்தில் விடிய விடிய நாமிருவரும் அண்ணாவுடன் பேசிக் கொண்டிருக்கிறோம்; அண்ணா ஒரு சோபாவில் சாய்ந்தவாறு - நீயும் நானும் அவர் கால் பக்கமாகத் தரையில் அமர்ந்தவாறு - அப்படியென்ன விடிய விடியப் பேச்சு - அப்பொழுதுதானே விபீஷணர்கள் சிலர், அண்ணாவையும், கழகத்தையும் அடியோடு வீழ்த்துவதற்குக் கலகக் கொடி தூக்கிச் சலசலப்புக் காட்டிய காலம் - அப்போது நம் கன்னங்களில் வழிந்த கண்ணீரை; அண்ணா; தன் கண்ணீர்த் துளிகளை விட்டு விரட்டினாரே; நினைவிருக்கிறதா உனக்கு - நாம் வடிப்பது கண்ணீரல்ல தம்பிகளே! "எதையும் தாங்கும் - இதயம் இது என்ற உறுதியைக் கல்லில் எழுதிடும் குருதிப்புனல்" என்பதுபோல நம்மிருவரையும் தழுவிக் கொண்டாரே; அதன்பிறகு உனக்கு 75-ம் எனக்கு 82-ம் வயது

ஆகிவிட்ட காரணத்தால் இந்த இடைவெளியில் மறந்து விடக் கூடிய நிகழ்ச்சியா அது? தூய இயக்கத்தைக் காத்திட; துரோகத்தைச் சாய்த்திட அண்ணாவின் முன்னே நாமிருவரும் சூளுரை மேற் கொண்ட அந்த அதிகாலை நேரம்; அதற்கு மேல் ஒரு நொடி கூட அடியெடுத்து மேற்கொண்டும் அகலாமல் நகராமல் அப்படியே தொடர்ந்து கொண்டிருக்கிறது பார்த்தாயா?

வேதனைகளிலும், வேடிக்கைகள் எத்தனை எத்தனை - ஒன்றை நினைவுபடுத்துகிறேனே; ஓராண்டுக்கு மேலாக மிசா கைதியாக நமது முன்னோடித் தளகர்த்தர்களைப் போலவே நீயும் சிறையில் கிடக்கிறாய் - நான் மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை தஞ்சை நிகழ்ச்சிக்காக ஆடுதுறை வழியாகச் சென்றிட கார்ப்பயணம் ஏற்பாடு - தொலைபேசியில் உன் துணைவியாருக்கு ஆம்; என் சகோதரிக்குச் சொல்லுகிறேன் - "காரில் தஞ்சாவூர் போகிறேனம்மா - வழியில் சாப்பிடுவதற்கு ஆடுதுறையில் சிற்றுண்டி தயார் செய்து வை" - என்று!

அதன்படி அன்றிரவே 11 மணி அளவில் நானும் என்னுடன் நண்பர்கள் மூவருமாக ஆடுதுறை வந்தடைகிறோம் - வீட்டு முகப்புத் தாழ்வாரத்தில் எங்களுக்கு வரவேற்பு - பருகுவதற்குப் பால் - படுப்பதற்குப் பாய் தலையணைகள் - சிற்றுண்டி என்ன ஆயிற்று என்று கூச்சத்தின் காரணமாகக் கேட்காமலே பயணக் களைப்பில் உறங்கிவிடுகிறோம் - விடியற் காலை எழுந்து; சகோதரியிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே தஞ்சை நிகழ்ச்சிக்குப் பசியைத் தாங்கிக் கொண்டு பயணப்பட்டு விடுகிறோம்.

பின்னர்தான் தெரிகிறது; நான் தொலைபேசியில் சிற்றுண்டியென்று சொன்னதால்; மறுநாள் காலை 'டிபன்' என்று நினைத்துக் கொண்டு அவற்றைத் தயாரிக்கும் வேலையில் அந்த வீடு முழுதும் இரவெல்லாம் அடுக்களையில் ஈடுபட்டிருந்த செய்தி - இது ஒரு நல்ல நகைச்சுவைதானே! அந்தச் சகோதரிக்கு தற்போது உடல் சிறிது நலிவு எனினும் உன் பவள விழா மகிழ்ச்சியில் என்னைப் பட்டினி போட்ட அந்த நகைச்சுவை நிகழ்ச்சியின் நினைவும் இணையட்டுமே!

தம்பீ; நீ ஒரு மணி மட்டுமா? உன்னைப் போல எத்தனை எத்தனை மணிகள் சேர்க்கப்பட்ட ஆரமப்பா இந்த இயக்கம்! அந்த

மணிகளுக்கிடையே சில மாமணிகள்; அதில் ஒரு மாமணிக்கு இன்று பவள விழா - பவள விழாவிலும் பருவக் காளையெனக் காட்சி தரும் - செயல் மணி நீ! செயலாற்றும் மணிகளுக்கு வழிகாட்டும் மணி நீ!

செந்தமிழ்க்கொரு தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ என்று; இந்தி ஆதிக்கம் நுழைந்திட அனுமதியோம் என ஆர்த்தெழுந்து பெரியாரும், அண்ணாவும், அழகிரி அண்ணனும், புரட்சிக் கவிஞரும், முத்தமிழ்க் காவலரும், மூவலூர் மூதாட்டியும் போர்க்கொடி தூக்கிய காலந் தொட்டு; விழிக்கு இமை போல நம் மொழிக்குப் பாதுகாப்பு அரண் கழகம்தானென்று அழித்தெழுத முடியாத சித்திரமாய் இன்று நிலைபெற்று விட்ட இயக்கத்தை நிலை பெறச் செய்யக் காரணமாக இருந்தவர்களில் - இருப்பவர்களில் நீயும் ஒருவனன்றோ - அந்த இரும்பு இதயம் என்றும் போற்றத்தக்க தன்றோ! வருங்காலத் தலைமுறையினர் வாழ்த்தத்தக்கதன்றோ!

நாடு மொழி இனம் காக்க
இரும்பானவனே;

நட்பு காத்திடக்
கரும்பானவனே -

துரும்பாகட்டும் துரோகங்களும்;
எதிர்ப்புகளும்!

தூய்மைத் தொண்டு நாம்
தொடர்ந்திடுவோம்

வாள் ஏந்தி வந்தாலும் பகை
தோள் இணைந்து தூளாக்குவோம்

வாழ்க வாழ்க என்றென்றும்
வற்றாத அருவியாம் உன் புன்னகை!

அன்புள்ள,

மு.க.

14-09-2005



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022